# உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குனர்களுக்கான பயிற்சி நெறி

ஒன்பது பயிலரங்குகளின் தொடர்களைக் கொண்ட நெறியாளருக்கான வழிகாட்டியானது, உள்ளூர் சமூகங்கள் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தைப் பற்றி அறியவும், மதிப்பிடவும் மற்றும் மேம்படுத்தவும் உதவுகின்றன.



FORB Learning Platform

‘சிந்தனைச் சுதந்திரம், மனசாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையினுள் ஒருவர் தனது மதத்தை அல்லது நம்பிக்கையை மாற்றுவதற்கான சுதந்திரமும், போதனை, பயில்நெறி, வழிபாடு, அனுட்டானம் என்பன மூலம் தனது மதத்தை அல்லது நம்பிக்கையைத் தனியாகவும், குழுவாகக் கூடியும், பகிரங்கமாகவும் தனிப்பட்ட முறையிலும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரமும் அடங்கும்.’

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்,
உறுப்புரை 18



# உள்ளடக்கங்கள்

## நெறியாளருக்கான வழிகாட்டி


நன்றிகளும் அங்கீகரிப்புக்களும் ..... 5
ஏன் எங்களுக்கு உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்கள் தேவை? ..... 6
உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியின் பின்னணியில் யார் உள்ளனர்? 7
எமது பங்காளர்களிடமிருந்தான செய்தி ..... 8

**பகுதி A** *இந்த வளங்களை எவ்வாறு பயன்படுத்துவது*

மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியினை அறிமுகம் செய்தல் ..... 11
இந்த வளங்களை எவ்வாறு பயன்படுத்துவது ..... 13
ஒவ்வொரு அமர்விற்காகவும் எவ்வாறு தயாராவது ..... 15
நெறியாள்கைக்கான ஆலோசனைக் குறிப்புக்கள் ..... 17
தந்திரமான கேள்விகளுக்கு பதிலளித்தல் ..... 21
பின்னூட்டம் மற்றும் அனுமதிகள் ..... 29

**பகுதி B** *பாட நெறி*

*அமர்வு 1* *மனிதத் தேவைகள் – மனித உரிமைகள் – மனிதப் பொறுப்புக்கள்*

அமர்வு பற்றிய கண்ணோட்டம் ..... 32
விரிவான அமர்வுத் திட்டம் ..... 35
மாற்றமுண்டாக்குநர்களின் கதைகள் உள்ளடங்களான முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதி . 41

*அமர்வு 2* *சிந்தனை சுதந்திரம், மனசாட்சி, மதம் மற்றும் நம்பிக்கைக்கான அறிமுகப்படுத்தல்*

அமர்வு பற்றிய கண்ணோட்டம் ..... 46
விரிவான அமர்வுத் திட்டம் ..... 49
புல்லாங்குழல் மற்றும் தாளவாத்தியத்தின் பாடல்கள்
- மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான கதை ..... 56
முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதி ..... 60
மாற்றமுண்டாக்குநர்களின் கதை: பீட்டரின் கதை, பாகிஸ்தான் ..... 64

*அமர்வு 3* *எமது பலவிதமான அடையாளங்கள்*

அமர்வு பற்றிய கண்ணோட்டம் ..... 65
விரிவான அமர்வுத் திட்டம் ..... 68
எகிப்தின் சமே மற்றும் ஹனாவின் கதை உள்ளடங்களான முன்வைப்பின்
எழுத்துப்பிரதி ..... 75

*அமர்வு 4* *மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்தி மீறல்கள்*

அமர்வு பற்றிய கண்ணோட்டம் ..... 78
விரிவான அமர்வுத் திட்டம் ..... 80
முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதி ..... 85
இரண்டு நிமிட குறு நாடக காட்சிகள்: நெறியாளர்களுக்கான சிறு குறிப்பு பதிப்புகள் ..... 92
மாற்றமுண்டாக்குநர்களின் கதை:பாஸ்டர் ஜேம்ஸ்மற்றும் இமாம் அஷாவாவின்
கதை, நைஜீரியா ..... 95

*அமர்வு 5* *எமது சமுதாயத்தில் மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரம்*

அமர்வு பற்றிய கண்ணோட்டம் ..... 96
விரிவான அமர்வுத் திட்டம் ..... 99
முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதி ..... 107
மாற்றமுண்டாக்குநர்களின் கதை: எமினாவின் கதை, பொஸ்னியா,ஹேர்ஸ்கோவினா ... 109

*அமர்வு 6* — ***கதைகளினால் ஈர்க்கப்படல் – உத்திகளினால் வலுப்பெறல்***
அமர்வு பற்றிய கண்ணோட்டம் ........ 111
விரிவான அமர்வுத் திட்டம் ........ 114
முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதி ........ 121
இந்தியா, டென்மார்க் மற்றும் கிர்கிஸ்தானின் மாற்றமுண்டாக்குநர்களின் கதைகள் ........ 124

*அமர்வு 7* — ***உத்திகள் பற்றிப் பேசுதல்***
அமர்வு பற்றிய கண்ணோட்டம் ........ 126
விரிவான அமர்வுத் திட்டம் ........ 128

*அமர்வு 8* — ***மாற்றத்திற்கான எமது பயணம்***
அமர்வு பற்றிய கண்ணோட்டம் ........ 132
விரிவான அமர்வுத் திட்டம் ........ 135
முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதி ........ 140

*அமர்வு 9* — ***மாற்றத்திற்கான எமது பயணம் (தொடர்ச்சி)***
அமர்வு பற்றிய கண்ணோட்டம் ........ 144
விரிவான அமர்வுத் திட்டம் ........ 146

*பகுதி C* — ***மேற்கோள் குறிப்புக்கள்***
மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய பிரதான மனித உரிமை உடன்பாடுகள் ........ 151
கற்றுக் கொண்டே இருங்கள்: மேலதிக துணை வளங்கள் மற்றும் இணையவழி பயிற்சி நெறிகளுக்கான ஆலோசனைக் குறிப்புகள் ........ 153
கற்றுக் கொண்டே இருங்கள்: மேலதிக துணை வளங்கள் மற்றும் இணையவழி பயிற்சி நெறிகளுக்கான ஆலோசனைக் குறிப்புகள் ........ 155
பயிற்சிகளின் அட்டவணை ........ 159

*இந்த அமர்வுக்கான துணைவளங்களை இங்கே காணலாம்.*

வலது பக்கத்தில் வழங்கப்பட்டுள்ள இணைப்பில் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான அனைத்தையும் காணலாம், கீழ்வருபவை உள்ளடங்கலாக:

- ஒவ்வொரு அமர்வுக்குமான பவர் பொய்ன்ட் விளக்கப் படங்கள்
- உங்கள் சூழல் மற்றும் பங்குபற்றுவோருக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கவும் திருத்தவும் இயலுமானமுறையில் வேர்டில் உள்ள விளக்கக்காட்சிகளுக்கான எழுத்துப் பிரதிகள்
- கையேடுகள்
- பயிற்சிகளில் பயன்படுத்தக் விளையாட்டு அட்டைகள் மற்றும் சுவரொட்டிகள்

www.forb-learning.org/ta/corses/changemakers/course-materials

பிற மொழி பதிப்புகளை இங்கே கண்டறியவும

*பிற மொழி பதிப்புகள்*

இந்த நெறியாளர்களுக்கான வழிகாட்டி மற்றும் அனைத்து துணை வளங்களும் பல மொழிகளில் கிடைக்கின்றன. உள்ளூர் மட்ட. மாற்றமுண்டாக்குனர்களுக்கான பயிற்சி உங்கள் மொழியில் உள்ளதா என்பதை இங்கே அறிந்துகொள்க.

www.forb-learning.org/ta/courses/changemakers/languages

பிற மொழி பதிப்புகளை இங்கே கண்டறியவும

# நன்றிகளும் அங்கீகரிப்புக்களும்


வள விருத்தி செயன்முறைக்கும் அதன் பரிசோதனை செயன்முறைக்கும் ஆழமான ஆதரவினை அளித்திருந்த, உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியினைத் தயாரிப்பதற்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களுக்கு ***குறிப்பான நன்றிகளைத்*** தெரிவிக்கின்றோம்.

- Galina Kolodzinskaia, சர்வமத பேரவை, கிர்கிஸ்தான்
- Hala Farid Faris, எகிப்து
- Hammam Haddad, Taqarob, சிவில் சமூக அபிவிருத்தி, ஜோர்தான்
- Hidaya Maulidi Dude, ஸனிபர் மதநல்லிணக்க நிலையம், தன்சானியா
- Irfan Engineer, சமூக மற்றும் மத சார்பின்மை கற்கைக்கான நிலையம், இந்தியா
- Rev. Jimmy M.I. Sormin, திருச்சபைகளின் ஒன்றியம், இந்தோனேசியா
- Melisa Nguyen, வியட்னாம் மதம் அல்லது நம்பிக்கைக்கான வட்டமேசை
- Mike Gabriel, இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் (NCEASL)
- Tehmina Kazi, சுயாதீன FORB ஆலோசகர் மற்றும் பயிற்றுவிப்பாளர், ஐக்கிய இராச்சியம்
- Rev. Ukoha, Hgwobia, கிழக்கு நைஜீரிய பகுதிக் குழு, ஆபிரிக்காவில் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் உறவுகளுக்கான நிகழ்ச்சித்திட்டம் (PROCMURA)

தங்களது பங்களிப்புக்கள் மற்றும் கருத்துக்களை வழங்கியமைக்காக கீழ்வரும் நபர்களுக்கும் ***நன்றிகளைத்*** தெரிவித்துக் கொள்கின்றோம்: Lisa Winther, Kristine Tveit and Alexander Borello Krosby (Stefanus Alliance International), Kristina Patring and Niklas Eklöv (SMC Faith in Development), Tabitha Schrøder-Knudsen, Ida Schmidt and Filip Buff-Pedersen (CKU), Lan Yu Tan, Gry Zierau and Sidsel-Marie Winther Prague (Fabo) and Chian Yew Lim and Michael Weiner (UN OHCHR).

தங்களுடைய மாற்றமுண்டாக்குநர் கதைகளை எம்மோடு பகிர்ந்துக் கொண்ட ஒவ்வொருவருக்கும் ***விசேட நன்றிகள்*** !

FORB (ம.அ. ந. சு.) கற்றல் தளமானது, உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குனருக்கான பயிற்சி நெறியினை தமிழில் மொழிபெயர்த்து மற்றும் அதனை சரிபார்த்ததற்காக கிரிஜா சிவகுமார் மற்றும் பிரிசில்லா பாலச்சந்திரன் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

இந்த வளங்களின் ஆங்கில மூலமானது நோர்வே வெளியுறவு அமைச்சகத்தின் (NMFA) மற்றும் ஸ்வீடனின் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிதி உதவியுடன் (Sida) தயாரிக்கப்பட்டது. இதன் தமிழ் பதிப்பானது, அமெரிக்க மக்களின் தாராளமான ஆதரவின் காரணமாக ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் (USAID) மூலம் சாத்தியமானது. இதன் உள்ளடக்கமானது முழுமையாக இதனை உருவாக்கியோரின் பொறுப்பாகும். இதில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் விளக்கங்களை NMFA, Sida மற்றும் USAID ஆகிய அமைப்புக்களும் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை, மேலும் USAID அல்லது ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் கருத்துக்களை இவை பிரதிபலிக்க வேண்டிய அவசியமில்லை.


NORWEGIAN MINISTRY OF FOREIGN AFFAIRS

Sida

USAID FROM THE AMERICAN PEOPLE

Search for Common Ground

Freedom House

# ஏன் எங்களுக்கு உள்ளூர் மாற்றமுண்டாக்குநர்கள் தேவை?

உலகெங்கிலுமுள்ள அனைத்து மதங்கள் அல்லது நம்பிக்கைகளையும் சார்ந்த மக்கள், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குள்ள மனித உரிமையின் மீறல்களினால் பாதிக்கப்படுகின்றனர் என்பதுடன் பல இடங்களில் இத்தகைய மீறல்கள் மோசமான நிலைமையினை அடைந்துள்ளன. பிரச்சினைகளின் தன்மை, பாரதூரம் மற்றும் அளவு என்பன உயரிய அளவில் வேறுபடுகின்றபோதிலும், பாரபட்சம், வெறுப்புப் பேச்சு, வெறுப்புக் குற்றங்கள் மற்றும் வன்முறை என்பன உலகளாவியரீதியில் பொதுவானவையாகக் காணப்படுகின்றமையானது.

அமைதியானமுறையில் நம்பிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான மற்றும் வெளிப்படுத்துவதற்கான உரிமை மீதான சட்ட அல்லது நடைமுறையிலுள்ள அரசாங்கத்தின் மட்டுப்பாடுகள் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றன, இது, சிவில் சமூகங்களுக்கான இடைவெளியினைக் குறைத்தல் மற்றும் வெளிப்படுத்தலுக்கான சுதந்திரத்தின் மீது மட்டுப்பாடுகளை விதித்தல் என்பனவற்றுடன் தொடர்புறுகின்றது. பல பின்னணிகளில், வெறுப்பு மற்றும் சட்ட மட்டுப்பாடுகள் தொடர்பாக நடைமுறையில் காணப்படுகின்ற போக்குகள் கொவிட் நோய்த்தொற்று நிலைமையினால் அதிகரித்துள்ளது.

ம.அ.ந.சு இன் மீறல்கள் ஆண்கள் மற்றும் பெண்களை வேறுபட்டரீதியில் பாதிக்கின்றன. குறிப்பாக பெண்கள் மதம் சார்ந்த தனிப்பட்ட சட்டங்களினூடாக பாரபட்சத்திற்கும் பால்நிலை சார்ந்த வன்முறைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் வேறுபட்ட மற்றும் பல மீறல்கள், உடனடியான தனிப்பட்ட வேதனைகளுக்கும், சமூக சீர்குலைவுக்கும் காரணமாய் அமைகின்றன. மாற்றத்திற்கான அவசரத் தேவையொன்று உள்ளது என்பதுடன் இம்மாற்றமானது மேலிருந்து கீழாகவும் அதேபோல கீழிருந்து மேலாகவும் வரவேண்டியுள்ளது.

சமத்துவம், சமாதானம் மற்றும் நீதி ஆகிய பண்புகளைக்கொண்ட சமூகங்கள், சட்டவாக்கங்களை திருத்துவதற்கான மற்றும் சட்டவாக்கங்களின் நடைமுறைப்படுத்துகை மற்றும் அமுல்படுத்தலில் பாரபட்சமின்மையினை உறுதிப்படுத்துவதற்கான சட்டவாக்குநர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளின் தீர்மானம்மிக்க முயற்சிகளின்றி சாத்தியமாகாது. மேலிருந்து வருகின்ற இத்தீர்மானம்மிக்க முயற்சியானது, கீழிருந்து வருகின்ற மாற்றத்திற்கான ஆதரவு மற்றும் அழுத்தமின்றி நிறைவேறாது. மேலும், நபர்கள் நாளாந்தம் அனுபவிக்கின்ற மீறல்களுள் பல மீறல்கள், சமுதாயத்தின் ஏனைய உறுப்பினர்களாலேயே புரியப்படுகின்றன. - வேலைதளங்கள் பாடசாலை மற்றும் வீடுகளில். கீழிருந்தும் மாற்றங்கள் உருவாக வேண்டும்.

தங்களுடைய சமுதாயங்களில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்கு எதிரான மீறல்கள் குறித்து பலர் கவலை கொண்டாலும் எவ்வாறு மாற்றங்களை உருவாக்குவது என்று அறியாதுள்ளனர். மாற்றங்களை நோக்கிய நடைமுறை செயற்பாடுகளை முன்னெடுக்க அறிவு மற்றும் திறமை என்பன தேவை என்பதை உணர்கின்றனர். உள்ளூர் மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியானது இத்தகைய வலுவூட்டலுக்கு பங்களிப்பு செய்யவதற்கே எத்தனிக்கின்றது அறிவு மற்றும் நடத்தைப் பாங்கு என்பவற்றில் மட்டும் கவனம் செலுத்தாது, மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வு மற்றும் உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை ஆகியன தொடர்பான செயற்பாடுகளுக்கான உத்திகளிலும் கவனம் செலுத்துகிறது.

உங்களுடைய சூழலில் மாற்றத்தினை ஏற்படுத்த பங்களிப்பு செய்வதற்கு நீங்கள் விரும்புவீர்கள் என்றும் நீங்கள் அதனை செய்வதற்கு உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறி உங்களுக்கு உதவுமென்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

Katherine Cash
மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினைக் கற்றுக்கொள்வதற்கான தளம்

# உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியின் பின்னணியில் யார் உள்ளனர்?

உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியானது, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினைக் (ம.அ.ந.சு)கற்றுக்கொள்வதற்கான தளத்தினூடாக சுதந்திரம் காணப்பட வேண்டுமென்ற அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ள பல நபர்கள் மற்றும் அமைப்புக்களின் ஆதரவுடன், உருவாக்கப்பட்டுள்ளது.

தனிநபர்கள், சமுதாயங்கள் மற்றும் தீர்மானமெடுப்பவர்கள், ம.அ.ந.சு பற்றிக் கற்றுக் கொள்வதற்கும், அவற்றை பிரதிபலிப்பதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்கும் உதவி செய்யும் பொருட்டு, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினைக் கற்றுக்கொள்வதற்கான தளமானது, கற்றலுக்கான துணை வளங்கள், பயிற்சி நெறிகள் மற்றும் வலையமைப்பாக்கத்திற்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது. இது, உலகெங்கிலுமுள்ள பல்வேறுபட்ட மத அல்லது நம்பிக்கையினைக் கொண்டுள்ள சமுதாயங்கள், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான அமைப்புக்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் போன்ற பரந்தளவான அமைப்புக்களுடனான கலந்துரையாடல் மற்றும் அவற்றின் ஒத்துழைப்புடன் Nordic Ecumenical Network on Freedom of Religion or Belief (NORFORB) இனால் செய்யப்படுகின்ற ஒரு செயற்திட்டமாகும்.

ம.அ. ந. சு. இனைக் கற்றுக்கொள்வதற்கான தளத்தினால் வழங்கப்படுகின்ற ஏனைய துணை வளங்கள் மற்றும் பயிற்சி நெறிகள் என்பன, ம.அ. ந.சு. என்றால் என்ன மற்றும் அவை எப்போது மட்டுப்படுத்தப்படலாம் என்பதனைக் குறிக்கின்ற 8 திரைப்படங்களின் தொகுதியொன்று (தமிழில் பார்க்க முடியும்) இயங்கலையில் சாத்தியமாக்கப்படுகின்ற, பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கின்ற ம.அ.ந.சு. பற்றிய பயிற்சி நெறிகள் ம. அ. ந. சு. மற்றும் பால்நிலை தொடர்பான இயங்கலை பயிற்சி நெறி (விண்ணப்பிக்கின்றதன் பேரில் வழங்கப்படும்) மற்றும் ம. அ. ந. சு. இனை நெறியாளர்களுக்கான பயிற்சிகளை உள்ளடக்கியுள்ள ஆவணத்தொகுதியொன்று என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

***எங்கள் இணையதளத்தில் மேலும் அறிக:***
forb-learning.org/ta/

### *பாடநெறி எவ்வாறு உருவாக்கப்பட்டது*

ஆப்பிரிக்கா, ஆசியா, மேனா (MENA) பகுதி மற்றும் ஐரோப்பாவில் உள்ள பத்து நாடுகளில் உள்ள சிவில் சமூக அமைப்புகள் மற்றும் மத சமூகங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட ஒரு குறிப்புக் குழுவுடன் இணைந்து,மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திர கற்றல் தளத்தின் ஊழியர்களால் 2020-2021 இல் உள்ளூர் மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறி உருவாக்கப்பட்டது. இந்தக் குறிப்புக் குழுவில் கிறிஸ்தவ, முஸ்லீம், பௌத்த மற்றும் மதம் சாராத பின்னணியைச் சேர்ந்தவர்கள் அடங்குவர்.

எந்தவொரு போதுமான பாதுகாப்பான சூழலிலும் அடிமட்டத்தில் பொருத்தமான, அணுகக்கூடிய மற்றும் வழங்கக்கூடிய பாடத்திட்டத்தை உருவாக்குவதே எங்கள் நோக்கமாக இருந்தது. எந்தவொரு பார்வையாளர்களுக்கும் (கல்வி நிலையைப் பொருட்படுத்தாமல்) எந்தவொரு திறமையான நெறியாளரும் (மனித உரிமைகளைப் பற்றி அவர்களுக்கு எவ்வளவு தெரியும் என்பதைப் பொருட்படுத்தாமல்) அந்த சூழலிற்கு ஏற்றாற்போல் ஒரு பாடத்திட்டத்தை உருவாக்குவது இதன் பொருள்.

எனவே நாங்கள் மூன்று விடயங்களில் கவனம் செலுத்தினோம்:

- மக்கள் இருக்கும் இடத்தில் தொடங்கும் ஒரு வழிமுறையாக - கோட்பாடு மற்றும் உரை அடிப்படையிலான அணுகுமுறைகளைக் காட்டிலும் கருத்துகளை அறிமுகப்படுத்த மற்றும் ஆராய்வதற்கான ஊடகங்களாக பகிர்தல், கதைசொல்லல், அனுபவ கற்றல் மற்றும் காட்சி தொடர்பு ஆகியவற்றைப் பயன்படுத்துதல்.
- உள்ளூர் சமூகத்தில் மக்கள் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நடைமுறை வழிகள்.
- பாடத்திட்டத்தை முடிந்தவரை எளிதாக நடத்துதல் - நெறியாளருக்கு தேவையான அனைத்தையும் உருவாக்குதல்.

இந்தியா, ஜோர்டான், நைஜீரியா மற்றும் தான்சானியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த குறிப்புக் குழு உறுப்பினர்கள், மேம்பாடு மற்றும் வடிவமைப்பிற்குப் பிறகு, உள்ளூர் சமூகங்களைச் சேர்ந்த 12-25 பேர் கொண்ட குழுக்களுடன் பாடத்தை சோதித்தனர். பங்கேற்பாளர்களுல் டாக்ஸி ஓட்டுநர்கள், கடை வைத்திருப்பவர்கள், தையல்காரர்கள், ஆசிரியர்கள், சமூக சேவையாளர்கள், குரான் பள்ளி ஆசிரியர்கள், தேவாலய உறுப்பினர்கள், இளைஞர் குழு தலைவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் அடங்குவர். பங்கேற்பாளர்கள் மற்றும் நெறியாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பின்னூட்டமானது பெருமளவில் மிகவும் நேர்மறையானதாக காணப்பட்டதுடன் அவர்களின் உள்ளீட்டின் அடிப்படையில் பாடத்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன. பங்கேற்பாளர்கள் மற்றும் நெறியாளர்களின் கருத்துகளின் அடிப்படையில் பாடத்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன. எவ்வாறாயினும், கருத்து மிகவும் நேர்மறையானதாக இருந்தது, இரண்டு நிறுவனங்கள் தங்கள் சொந்த நிதியில் பாடத்தின் புதிய சுற்றுகளை திட்டமிடுவதில் ஈடுபட்டுள்ளன.

Nordic Ecumenical Network on Freedom of Religion or Belief
NORFORB

FORB Learning Platform

# எமது பங்காளர்களிடமிருந்தான செய்தி

***வேர்ல்ட் கவுன்சில் ஒப் சர்ச்செஸ்*** (World Council of Churches) ***எனும் திருச்சபைகளின் உலக மன்றத்தின் முன்னுரை***

1948 இன், மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனத்தினைத் தொடர்ந்து சிந்தனை, மனசாட்சி மற்றும் மத சுதந்திரத்திற்கான நமது தவிர்க்க முடியாத உரிமையை பிரகடனப்படுத்தியதிலிருந்து, நாடுகள் இந்த உரிமையில் உள்ள கருத்துக்களைப் புரிந்துகொள்ளவும் விளக்கவும் முயலத் தொடங்கியுள்ளன. உலகெங்கிலும் ஏராளமான சட்டங்கள், தரநிலைகள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டு, சர்ச்சைக்குள்ளாகி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன, இருந்த போதும் துரதிஷ்டவசமாக பெரும்பாலும் மக்களால் முழுமையாக இந்த உரிமையை அனுபவிப்பது இன்னமும் இயலாதுள்ளது. ஆனால் அனைத்து சட்டங்கள், கட்டமைப்புகள் மற்றும் பிரகடனங்கள் அவற்றின் கொள்கைகளை ஒரு தேசத்தின் சாதாரண மக்கள் அறிந்து அவற்றைப் புரிந்து கொண்டாலன்றி அவற்றில் எந்த மதிப்பும் இல்லை. அனைத்து மனித உரிமைகளின் ஊக்குவிப்பும் பாதுகாப்பும் வீட்டில், குடும்பங்களுக்குள், அண்டை வீட்டாருடன் மற்றும் சமூகங்களின் இடையேயே தொடங்குகிறது.

இவ் உள்ளூர்மட்ட மாற்றமுண்டாக்குனர் பயிற்ச்சி நெறியானது அவ்வாறான மனித உரிமைகள் மற்றும் சட்டத் திட்டங்களைப் பற்றி சிறிதளவு அல்லது எவ்வித முன் அறிவும் இல்லாத சமூகங்களை இலக்காகக் கொண்டுள்ளது, அவர்களின் மனப்பான்மைகளை சவாலுக்குறப்படுத்தி அவற்றை மாற்றுவதற்கு ஏற்ற விதமாக வித்தியாசமான, கதை சொல்லல் மற்றும் காட்சி முறைகள் போன்றவற்றை கொண்டு இப் பயிற்சி நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் எண்ணப்பாட்டின் முகவர்களாக பயிற்சியாளர்கள் மாறுவதற்கு இவ் உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குனர்களுக்கான இந்தப் பயிற்சி நெறி சக்தி அளிக்கும். விசுவாசம் அல்லது நம்பிக்கையைப் பொருட்படுத்தாமல் அனைத்து மக்களுக்கும் பொருந்தக்கூடிய மதம் அல்லது நம்பிக்கையின் சுதந்திரத்தின் கொள்கையைப் புரிந்துகொள்வதையும் ஏற்றுக்கொள்வதையும் ஊக்குவிக்க நாங்கள் முயல்வதால், திருச்சபைகளின் உலக மன்றத்தின் அங்கத்துவ திருச்சபைகள் மற்றும் எமது பிற பங்காளிகளாக இருக்கும் அமைப்புக்களுக்கு இந்த பாடநெறி ஒரு மதிப்புமிக்க கருவியாக இருக்கும்.

> “வேறுபாடுகள் பிரிக்கவோ, அந்நியப்படுத்தும் நோக்கமோ கொண்டவை அல்ல. ஒருவருக்கொருவர் நமது தேவையை உணர்ந்து கொள்வதற்காகவே நாம் துல்லியமாக வித்தியாசமாக இருக்கிறோம்”.
> பேராயர் டெஸ்மண்ட் டுட்டு

***ஜெனிபர் பில்பொட்***, நிசென் நிகழ்ச்சி நிர்வாகி - மனித உரிமைகள் மற்றும் ஆயுதக் குறைப்பு – திருச்சபைகளின் உலக மன்றம்
(World Council of Churches)

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை (FORB) களமட்ட அளவில் ஊக்குவித்தல் என்பது தெற்காசிய பிராந்தியத்தில் FORB இற்கான கௌரவத்தினைப் பாதுகாப்பதற்கான ஒரு முக்கிய அம்சமாகும். அதைச் செய்ய விரும்பும் எவருக்கும் உளூர் மட்ட மாற்றமுண்டாக்குனர் பயிற்சிநெறியானது மிகப்பெரிய உதவியை வழங்குகிறது. SAFFORB வலையமைப்பானது வளங்களைப் பயன்படுத்துவதனை உத்தேசிப்பதோடு பிராந்தியத்தில் உள்ள கல்வி, சமாதானத்தை கட்டியெழுப்புபவர்கள் மற்றும் மதங்களுக்கு இடையே உள்ள பலதரப்பட்ட பாத்திரங்களைக் கொண்டோரும் அவ்வாறே செய்வார்கள் என்று நம்புகிறது, இதனால் மனப்பான்மையை மாற்றுவதற்கான பணிகளை முடுக்கிவிடலாம் என்பதோடு மாற்றத்திற்கான நடவடிக்கை எடுக்க சமூகங்களுக்கு அதிகாரம் அளிக்க முடியும்.

***சாமுவேல் ஜெயகுமார்***, ஒருங்கிணைப்பாளர்
மதம் மற்றும் நம்பிக்கை சுதந்திரத்திற்கான தெற்காசிய ஒன்றியம் (SAFFORB)

சமூகம் மற்றும் மதச்சார்பின்மை பற்றிய ஆய்வு மையம் உள்ளூர்மட்ட மாற்றமுண்டாக்குனர்களுக்கான பயிற்சிநெறியினை பலமுறை பயன்படுத்தியுள்ளது. பாடநெறி மிகவும் ஊடாடல் மிக்கதாக உள்ளது மற்றும் பங்கேற்பாளர்கள் அச்செயல்பாடுகளை மகிழ்ச்சியாக ஈடுபடுகின்றனர். இச்செயல்பாடுகளுள் விளையாட்டுக்கள், பாத்திரமேற்று நடித்தல் மற்றும் கதைசொல்லல் ஆகியவை அடங்கும். செயல்பாட்டின் மூலம், அவர்கள் தம்மை திறந்து கொள்கிறார்கள், தங்கள் தடைகளை இழக்கிறார்கள் மற்றும் மதம் அல்லது நம்பிக்கைகளின் சுதந்திரம் தொடர்பாக அவர்களும் சமூகங்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கின்றனர். பங்கேற்பாளர்கள் பல்வேறு மத, இன மற்றும் பாலின பின்னணியில் இருந்து பங்கேற்றிருந்தால், அவர்கள் ஒருவர் மற்றவரிடமிருந்து கற்றுக்கொள்கிறார்கள் மேலும் மற்றவர்களின் மன எண்ணப்போக்கையும் புரிந்துகொள்கிறார்கள். இப்பாடநெறி மகிழ்ச்சியான கற்றலை உறுதி செய்கிறது. சில பங்கேற்பாளர்கள் தங்கள் சுற்றுப்புறத்தில் பல்வேறு மதங்களின் அமைதியான சகவாழ்வை உறுதி செய்வதற்காக தாம் மாற்றங்களை உருவாக்குபவர்களாகவே மாறியுள்ளனர்.

***இர்பான் என்ஜினியர்***, இயக்குனர்
சமூகம் மற்றும் மதச்சார்பின்மை பற்றிய ஆய்வு மையம், இந்தியா
(Center for Study of Society and Secularism)

50 ஆண்டுகள் பழமையான உலகளாவிய மதங்களுக்கு இடையிலான இயக்கமாகிய - அமைதிக்கான மதங்கள் - உலகின் மூத்த நம்பிக்கைத் தலைவர்களின் குழுவாக, ஒரு புதிய மூலோபாய திசையை பட்டியலிடும் நோக்கோடு, 2019 டிசம்பரில் ஒன்றுகூடியது. சிந்தனை சுதந்திரம், மனசாட்சி மற்றும் நம்பிக்கை ஆகியவற்றில் அடிமட்ட அளவில் உட்பட முன்னேற்றம் காண்பதே அவர்களின் முக்கிய கடமைகளில் ஒன்றாக காணப்பட்டது. எந்தவொரு நம்பிக்கையையும் கடைப்பிடிக்கும் சுதந்திரம் என்பது அனைத்து நிறுவனங்களையும், நாமும், நாகரிகம், மனித உரிமைகள் மற்றும் ஒட்டுமொத்த ஜனநாயகத்திற்கும் பொறுப்புக்கூற வேண்டிய ஒரு வழிமுறையின் ஒரு அங்கம் என்பததே அவர்களின் புரிதலாக காணப்பட்டது. மையத்தில் உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறையுடன், தேவையான உரையாடல்கள் மற்றும் அமைதியைக் கட்டியெழுப்பும் வழிமுறைகளை நிறைவேற்றுவதற்கான எந்தவொரு முயற்சிக்கும் இந்த ஆதாரங்கள் மதிப்புமிக்கவை.

***அஸ்ஸா கரம்***, பொதுச் செயலாளர், அமைதிக்கான மதங்கள்.( (Religion for piece)

இலங்கையில் மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான கல்வியறிவைக் கட்டியெழுப்புவதற்கான எங்களின் பணிகளில் உள்ளூர்மட்ட மாற்றமுண்டாக்குனர்களுக்கான பாடநெறி எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. நாங்கள் இதுவரை இளைய சமாதான தூதுவர்கள், பள்ளிக் குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான பற்றிய அறிவை மேம்படுத்துவதற்கு இப் பயிற்சியளிக்கும் பாடத்திட்டத்தின் தொகுதிகளைப் பயன்படுத்தியுள்ளோம். சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய உள்ளூர் மொழிகளில் வழங்கப்படும் மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான கல்வி அவற்றைப்பற்றிய எவ்வித முன் அனுபவமும் இல்லாத பார்வையாளர்களுக்காக ஆக்கப்பூர்வமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறியாகும், நாடு முழுவதும் உள்ள அடிமட்ட சமூகங்களுக்கு அறிவை எளிதாக எடுத்துச் செல்ல எங்களுக்கு இது உதவியுள்ளது. எங்களின் சூழல்களில் மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை மேம்படுத்துவதற்குப் பணிபுரியும் நிறுவனங்களாக எங்கள் பணியை எளிதாக்கும், இதுபோன்ற பெறுமதிமிக்க வளங்களை அணுகுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இப் பாடத்திட்டத்தை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம்!

***மைக் கேப்ரியல்***, இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியம், (NCEASL) இலங்கை

# பகுதி A

## இந்த வளங்களை எவ்வாறு பயன்படுத்துவது?

# மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியினை அறிமுகம் செய்தல்

உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியானது 2-மணித்தியால அளவிலான 9 பயிலமர்வுகளை உள்ளடக்கியத் தொகுதியொன்றாகும். இது வயது வந்தவர்கள் மற்றும் இளம் சமுதாயத்தினர் தங்களுடைய சமுதாயங்களில் அனைவருக்குமுள்ள மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்கு (ம.அ.ந.சு) மதிப்பளிப்பதற்கும் மற்றும் அதனை மேம்படுத்துவதற்கும் கற்றுக் கொள்வதனை இயலுமானதாக்குகின்றது. இந் நெறியாளருக்கான வழிகாட்டி மற்றும்.

இதனோடிணைந்துள்ள அனைத்து துணை வளங்களும் நீங்கள் பயன்படுத்துவதற்காக உங்களுக்கு இலவசமாகக் கிடைக்குமென்பதுடன், நீங்கள் அவற்றை உங்களுடைய சூழமைவிற்கு பொருந்தக்கூடிய வகையில் மாற்றியமைத்துக் கொள்ள முடியும். இவ் இணைப்பில் இதனை வெவ்வேறு மொழியில் பெற்றுக்கொள்ளாம்.

*துணை வளங்களை இங்கே கண்டறியவும்.*

***பயிற்சி நெறியின் இலக்குகள் யாவை?***

இப்பயிற்சி நெறி நான்கு பிரதான இலக்குகளைக் கொண்டுள்ளது:

- சமுதாயங்களுக்குள் மற்றும் சமுதாயங்களுக்கிடையில் காணப்படுகின்ற பன்முகத்தன்மையினை அங்கீகரிப்பதற்கும் மற்றும் பாராட்டுவதற்கும் உதவி செய்தல்
- மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய உரிமை உள்ளடங்கலாக எங்களுடைய மனித உரிமைகளை புரிந்துகொள்வதற்கும் பாராட்டுவதற்கும் உதவி செய்தல்
- எங்களுடைய சமுதாயங்களில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பில் காணப்படுகின்ற பிரச்சினைகளை அடையாளம் காணுதல்
- அத்தகைய பிரச்சினைகளை ஒன்றாக எதிர்வுகொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டுபிடித்தல்.

***யாருக்காக இப்பயிற்சி நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது?***

உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியானது கள மட்டங்களிலுள்ள மக்களுக்காக - தங்களுடைய சமுதாயத்தில் மற்றும் சமூகத்தில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பில் காணப்படுகின்ற பிரச்சினைகளை அடையாளம் காணுவதில் கரிசனைக் கொண்டுள்ள மற்றும் வித்தியாசமொன்றை ஏற்படுத்துவதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க விரும்புகின்ற நபர்களுக்காக - வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியானது பங்குபற்றுநர்களிடமிருந்து முன் அறிவு, அனுபவம் அல்லது மனித உரிமைகளை ஏற்றுக் கொள்ளல் என எதனையும் எதிர்பார்க்கவில்லை. தேவைப்படுத்தப்படுவது யாதெனில், திறந்த மனப்பாங்கு, அமைதியான சகவாழ்வு மற்றும் சமத்துவத்தினால் வகைப்படுத்தப்படுகின்ற சமுதாயங்களைக் கட்டியெழுப்புவதற்கு உதவி செய்வதற்கான ஆர்வம், மற்றும் ஊடாடலுடன் கூடிய பரஸ்பர கற்றல் மற்றும் சிந்தனை செயன்முறையில் ஈடுபடுவதற்கான விருப்பம் என்பனவே ஆகும்.

இது 12-24 நபர்களை உள்ளடக்கிய குழுக்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது, எனினும், இதனைவிட பெரிய அல்லது சிறிய குழுக்களும் இதனைப் பயன்படுத்த முடியும்.

இப்பயிற்சி நெறியானது, குறிப்பாக, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆசிய சூழமைவுகளில் வாழ்கின்ற நபர்களைக் கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளபோதிலும், இவ் உள்ளடக்கங்கள் எந்தவொரு சூழமைவிலும் பயன்மிக்கதாய் அமையுமென நாம் நம்புகின்றோம்.

"பாடத்திட்டத்தின் சிறந்த விடயம் என்னவென்றால், அது மிகவும் ஈடுபாட்டுடனும் மற்றும் மக்களின் கருத்துகளிற்கு பொருத்தமானதுமாக இருப்பதுமன்றி நடாத்துவதற்கு எளிமையானதும் மற்றும் நிறைய வினோதங்கள் நிறைந்ததுமாய் இருந்தது. இது ஒரு அற்புதமான அனுபவம்!"
**HIDAYA DUDE,** நெறியாளர், தன்சானியா

"பாடநெறி புத்தாக்கமானது - அமர்வுகள் நடைபெறும்போது மனப்பாங்குகள் மாறுவதை என்னால் காண முடிந்தது. விரைவில் மீண்டும் நடாத்தப்போகிறோம் போகிறோம்."
**IRFAN ENGINEER,** நெறியாளர், இந்தியா

"இந்தப் பாடநெறி பங்கேற்பாளர்களின் முழு அளவிலான மனித உரிமை மீறல்களுக்கு அவர்கள் பதிலளிக்கக்கூடிய பல்வேறு வழிகளின் கண்களைத் திறந்தது. இது செயல் திட்டமிடலில் அவர்களின் திறமைகளை கூர்மைப்படுத்த உதவியது. இதன் விளைவாக அவர்கள் தங்கள் சமூகங்களில் மிகவும் பயனுள்ள மாற்றங்களை உருவாக்குபவர்களாக இருப்பார்கள்."
**HAMMAM HADDAD,** நெறியாளர், ஜோர்தான்

*யார் இப்பயிற்சி நெறியினை நெறிப்படுத்தலாம்?*

உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியானது - குழுப் பயிற்சிகள், விளையாட்டுக்கள், கதைகள், கலந்துரையாடல்கள் மற்றும் பாத்திரமேற்று நடிக்கின்ற பயிற்சிகள், அதேபோல முன்வைப்புக்கள் உள்ளடங்கலாக - ஊடாடுகை மிக்கதாக அமைந்துள்ளது. வயது வந்தவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான ஊடாடுகை மிக்க கற்றல் செயன்முறைகளை வழிநடத்துவதில் சிறிதளவான அனுபவத்தினைக் கொண்டுள்ள எந்தவொரு நபரும் இதனை வழிநடத்த முடியும். நெறியாளருக்கான வழிகாட்டிகள் மற்றும் அதனோடிணைந்துள்ள துணை வளங்கள் என்பன ஒவ்வொரு அமர்வினையும் எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பான விரிவான வழிகாட்டுதலைக் கொண்டுள்ளது.

இப்பயிற்சி நெறியினை நெறிப்படுத்துவதற்கு நீங்கள் மனித உரிமைகள், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பில் அனுபவம் மிக்கவராக அல்லது அது தொடர்பான அறிவுள்ளவராக இருக்க வேண்டிய அவசியமில்லை. குறித்த விடயங்கள் தொடர்பாக, முன்வைப்புக்களுக்கான எழுத்துப்பிரதிகள் மற்றும் பவர்பொயின்ட்கள் உள்ளடங்கலாக உங்களுக்கு தேவையான அனைத்து தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன. நெறியாளருக்கான வகிபாகம் நிபுணரொருவராக இருப்பதல்ல, மாறாக பரஸ்பரக் கற்றல் செயன்முறையொன்றினூடாக பங்குபற்றுநர்களை வழிநடத்துதலே ஆகும்.

நெறியாளருக்கு அதிகமாகத் தேவைப்படுகின்ற விடயம் யாதெனில், சூழமைவிற்கு கூர்திறன் உள்ளவராய் இருக்கின்ற பண்பே ஆகும் - சில விடயங்கள் அதிகளவில் உணர்வுபூர்வமானதாய் உள்ளபோது அல்லது அவற்றைக் கலந்துரையாடுவதில் ஆபத்து நிறைந்துள்ளபோது அதனை தீர்மானிப்பதற்கான இயலுமை மற்றும் அதற்கமைய செயன்முறையினை மாற்றியமைத்துக் கொள்வதற்கான இயலுமை, அதேபோல, உணர்ச்சிமிக்க நிலைகள் அல்லது பதட்ட நிலைகள் தோன்றுகின்றபோது, குழுக்களின் மாறுபட்ட நிலைகளைக் கையாள்வதற்கான இயலுமை.

***ஆலோசனைக்*** குறிப்பு! உங்களுடைய நெறியாளருக்கான திறன்களை விருத்தி செய்துக்கொள்வதற்கு உதவக்கூடிய ஆலோசனைக் குறிப்புகள் பக்கம் 17 – 20 வரை தரப்பட்டுள்ளன என்பதுடன் பக்கம் 15 இல் ஒவ்வொரு அமர்விற்கும் நீங்கள் எவ்வாறு தயாராகலாம் என்பது தொடர்பான வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

## *இப்பயிற்சி நெறியினால் கற்பிக்கப்படுகின்ற தலைப்புக்கள் யாவை மற்றும் இது எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது?*

இப்பயிற்சி நெறியானது, நேருக்கு நேர் நடத்தப்படுகின்ற ஒவ்வொன்றும் இரண்டு மணித்தியாலங்களைக் கொண்டுள்ள ஒன்பது அமர்வுகளை உள்ளடக்கியுள்ளது. இது 2 பகுதிகளாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

பயிற்சி நெறியின் 1 ஆம் பகுதி (அமர்வுகள் 1-5), அறிவு மற்றும் நடத்தைப் பாங்குகளை விருத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. ஆகவே, எங்களுடைய மூளை மற்றும் இதயம் என்பன மாற்றமுண்டாக்குநர்களாக ஆவதற்கு தயாராகிவிடும். பங்குபற்றுநர்கள் மனித உரிமைகள் மற்றும் மதம் அல்லது நம்பிக்கை தொடர்பான அவர்களுடைய நடத்தைகளை ஆராய்வதற்கு மற்றும் தங்களுடைய சொந்த அடையாளங்களிலிருந்து வேறுபடுகின்ற அடையாளங்களைக் கொண்டுள்ள மக்கள் தொடர்பான தங்களுடைய நடத்தைகள் தொடர்பில் சிந்திப்பதற்கு கற்றுக் கொள்கின்றனர். அத்துடன் பங்குபற்றுநர்கள் சூழைமைவு பகுப்பாய்விற்கானத் திறன்களையும் பெற்றுக் கொள்கின்றனர்.

பயிற்சி நெறியின் 2 ஆம் பகுதியில் (அமர்வுகள் 6-9), பங்குபற்றுநர்கள், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் மற்றும் ஏனைய உரிமைகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படக்கூடிய பல்வேறு உத்திகளைப் (அல்லது முறைகளை) பற்றி கற்றுக்கொள்வார்கள் என்பதுடன் அவர்கள் அடையாளப்படுத்துகின்ற மதம் அல்லது நம்பிக்கைக்கானசுதந்திரத்துடன் தொடர்புடையபிரச்சினையொன்றுக்கானசெயற்திட்டத்தினை ஆக்குகின்ற செயன்முறையொன்றினூடாக அவர்கள் வழிநடத்தப்படுவார்கள். இவ் அமர்வுகள் திறன்கள் மற்றும் செயல் என்பன மீது கவனம் செலுத்துகின்றன.

மேலதிக விபரங்களுக்கு பயிற்சி நெறியின் உள்ளடக்கங்களை பாருங்கள்.

“பயிற்சி செயன்முறைகள் உற்சாகமாக இருந்தன, கதைகள் ஆச்சரியமாக இருந்தன, பங்கேற்பாளர்கள் பேசுவதற்க்கு ஆர்வமாக இருந்தனர் அடி மட்டத்தில் இருந்து நடுத்தர அளவிலான மனித உரிமைகள் பற்றிய அறிவு உள்ளவர்கள் வரை, பிரச்சினைகளில் ஆர்வமுள்ள எவருக்கும் இந்த பாடநெறி நன்றாக அமையும் என்று நான் நினைக்கிறேன். நெறியாளராக இருந்த எனக்கு இது ஒரு மெய்சிலிர்க்க வைக்கும் அனுபவமாக இருந்தது.”
**UKOHA NGWOBIA**, நெறியாளர், நைஜீரியா

“பாடநெறி தனித்துவமானது - இது பல விவாதங்களைத் தூண்டியது! குழு உண்மையில் வேறுபட்டது - முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பஹாய் மற்றும் ட்ரூஸ். பரஸ்பர தளத்தைக் கண்டுபிடிப்பது எப்போதும் எளிதானது அல்ல, ஆனால் விவாதங்கள் நன்றாகவே நடந்தன.”
**HAMMAM HADDAD**, நெறியாளர், ஜோர்தான்

## வளங்களை எவ்வாறு பயன்படுத்துவது

உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியானது ஒன்பது அமர்வுகளைக் கொண்டுள்ள, 18-20 மணித்தியாளங்களைக் கொண்ட கற்றல் செயன்முறையொன்றாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ் அமர்வுகள், தொகுதிகளாக, 3 நாட்களுக்கும் மேலாக - உதாரணமாக, இரண்டு வார இறுதிகளில் அல்லது நீண்ட காலப்பகுதியொன்றுக்கு - உதாரணமாக ஒரு வாரத்திற்கு ஒரு அமர்வென்றரீதியில் நடத்தப்படலாம்.

பயிற்சி நெறியினை நெறிப்படுத்துவதை இயலுமானளவு இலகுபடுத்தும் பொருட்டு, நீங்கள் அமர்வினை நடத்துவதற்கு தேவையான அனைத்து வளங்களையும் நாம் உங்களுக்கு தருகிறோம்.

ஒவ்வொரு அமர்விற்கும், தயார்நிலையிலுள்ள அமர்வுத்திட்டமொன்றும், முன்வைப்புகளுக்காக முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட எழுத்துப்பிரதிகள் மற்றும் முன்வைப்புக்கான பவர்பொயின்ட்கள், கையேடுகள் மற்றும் அட்டைகள் மற்றும் சுவரொட்டிகள் போன்ற விளையாட்டிற்கான துணை வளங்கள் உள்ளடங்கலாக துணை ஆவணங்களும் காணப்படும்.

இத்தகைய பெரும்பாலான துணை வளங்கள் நீங்கள் தரவிறக்கம் செய்து, செம்மைப்படுத்தி உங்களுடைய சூழமைவு மற்றும் உங்களின் குழுக்களின் தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ளும் பொருட்டு றுழசன வடிவிலேயே கிடைக்கக்கூடியதாக இருக்கும். நீங்கள் விரும்பினால், பவர்பொயின்ட் ஸ்லைடுகளில் மற்றும் கையேடுகளில் உள்ள உரைகளை மொழிபெயர்த்துக் கொள்ள முடியும்.

*துணை வளங்களை இங்கே கண்டறியவும்.*

***ஆலோசனைக் குறிப்பு!*** அனைத்து பயிற்சி நெறிகளும் பல மொழிகளில் கிடைக்கும்! இவ்வழிகாட்டி மற்றும் ஆவணங்களின் ஏனைய மொழி வடிவங்களை இங்கே பார்க்கலாம்.

**ஆபாயம் மற்றும் பாதுகாப்புக்கான அவதானங்கள**

சில சூழ்நிலைகளில் ம.அ.ந.சு அல்லது மனித உரிமை தொடர்பாக வெளிப்படையாக உரையாடுவதில் ஆபாயம் மற்றும் பாதுகாப்பு சிக்கல்கள் காணப்படலாம். இந்த பாடத்திட்டத்தை நடத்துவது உங்களை அல்லது உங்கள் பங்கேற்பாளர்களை ஆபத்தில் ஆழ்த்துமா அல்லது மோதல்கள் மற்றும் பாதிப்புகளை அதிகரிக்குமா என்பதை கவனமாக சிந்தித்துப் பாருங்கள். எதை, யாருடன், எங்கே, எப்படி கலந்துரையாட முடியும்? உங்கள் பாதுகாப்பை எவ்வாறு உறுதிப்படுத்தலாம், உதாரணமாக உள்ளூர் தலைவர்களின் ஆதரவைப் பெறுவதன் மூலம்? மக்களிடம் ஆலோசனையை கேட்டு, முதலில் "பாதுகாப்பான" பார்வையாளர்களுடன் இப் பயிற்சி நெறியினை முயற்சிக்கவும். அவ்வாறு பாதுகாப்பாக இருந்தால் மட்டுமே இப்பயிற்சி நெறியினை நடைமுறைப்படுத்தவும்.

### *இப்பயிற்சி நெறியினை நடத்துவதற்கு எனக்கு தேவைப்படுகின்ற தொழிநுட்பம் மற்றும் ஆவணங்கள் யாவை?*

*வளங்கள்*

- இவ் வளங்களை மிக இலகுவாகப் பயன்படுத்துவதற்கு, நீங்கள் அச்சுப்பொறி/புகைப்பட நகல் கருவிக்கான அணுகுதலைக் கொண்டிருக்க வேண்டும். இது சாத்தியமில்லையாயின், நகர்வு விளக்கப்படத் தாள்கள் (flip charts) மற்றும் பேனைகளைக் கொண்டு, அல்லது ஒரு குச்சியைக் கொண்டு மண்ணிலேனும் எழுதுங்கள்.
- பவர்பொயின்ட் முன்வைப்புகளைக் காண்பிக்கும்பொருட்டு கணினியொன்று மற்றும் ஒளியுருப்படிவக்கருவியொன்றிற்கான (projector) அணுகுதலைக் கொண்டிருத்தல் நன்மையளிக்கும், ஆனால் அது அத்தியாவசியமானதல்ல.
- நகர்வு விளக்கப்படத் தாள்கள், பேனைகள் மற்றும் குறிப்பெழுதும் தாள்கள், மென் பந்து மற்றும் நூற் பந்து போன்ற சில அன்றாடப் பொருட்களை நீங்கள் வழங்க வேண்டியிருக்கும். தேவைப்படுகின்ற துணை வளங்களின் பட்டியலொன்று ஒவ்வொரு அமர்வுத் திட்டத்திலும் குறிப்பிடப்பட்டிருக்குமென்பதுடன் பக்கம் 15 (அமர்விற்கு எவ்வாறு தயாராவது) இலும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

### நான் செயற்பாடுகளைத் தெரிவு செய்ய மற்றும் இணைக்க முடியுமா? நான் ஒன்பது அமர்வுகளையும் நடத்த வேண்டுமா?

மத நல்லிணக்கக் கலந்துரையாடல் செயன்முறையில் சேர்த்துக் கொள்வதற்கான அல்லது நீங்கள் ஏற்கனவே ஈடுபட்டுள்ள விடயங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான புதிய கருத்துக்களை கண்டறிவதற்கு நீங்கள் விரும்பலாம். நீங்கள் தாராளமாக, இப்பயிற்சி நெறியிலிருந்து செயற்பாடுகளைத் தெரிவு செய்து மற்றும் அவற்றை இணைத்து உங்களுடைய சுய வடிவமைப்பிலான கற்றல் செயன்முறைகளுக்குள் உள்ளடக்கிக் கொள்ளலாம்.

இப்பயிற்சி நெறியின் ஒன்பது அமர்வுகளும் தர்க்கரீதியான படிமுறைவரிசையொன்றினை ஆக்குகின்றன. எவ்வாறெனினும், இம்முழு பயிற்சி நெறியினையும் நடத்துவதற்கு நீங்கள் விரும்பவில்லையாயின், பகுதி 1 இற்கு (அமர்வு 5) பின்னர் நீங்கள் நிறுத்திக் கொள்ளலாம். எவ்வாறெனினும், இதனால் ஏற்படக்கூடிய பாதகம் யாதெனில், பங்குபற்றுநர்கள் மனித உரிமைகள் தொடர்பானப் பிரச்சினைகளைக் கற்றுக் கொண்ட பின்னர், அவை தொடர்பில் எதனையும் செய்வதற்கான எவ்விதக் கருவித் தொகுதிகளுமின்றி ஒரு சோர்வு நிலையினை அடைவார்கள்.

பகுதி 1 இலுள்ள அமர்வுகளின் தொடர்ச்சித்தன்மையினைப் பாதிக்காது, அமர்வு 3 இனை மாத்திரம் (எமது அடையாளங்கள் பல) நீக்குதலும் சாத்தியமாகும். எவ்வாறெனினும், அமர்வு 3 ஆனது, வேறுபடுகின்ற நிலையான உள எண்ணங்கள் மற்றும் பொதுவானத் தன்மைகளின் அடிப்படையில், 'ஏனையோர்' தொடர்பான எமது நடத்தைப் பாங்குகள் மற்றும் ஏனையோரின் சூழ்நிலை பற்றிய விழிப்புணர்வு போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துகின்றது. உங்களுடைய பங்குபற்றுநர்கள் 'ஏனையோர்' தொடர்பான சாதகமான நடத்தைப் பாங்குகளைக் கொண்டுள்ளனர் என்ற உறுதி உங்களுக்கு காணப்படாதவிடத்து, இதனைத் தவிர்க்க வேண்டாம்.

உங்களிடம், ஏற்கனவே மனித உரிமைகள் தொடர்பான புரிதலையுடைய மற்றும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினால் பாதுகாக்கப்படுகின்ற உரிமைகளை அறிந்துள்ள மற்றும் அவற்றைப் போற்றுகின்ற குழுவொன்று காணப்படுமாயின், அமர்வு 5 இலிருந்து ஆரம்பிக்கின்றவகையில் செயன்முறையினை மாற்றியமைத்துக் கொள்ளுதல் சாத்தியமானதாகும்.

"ஆவணங்கள் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் மிகவும் எளிதானது - நடத்துனர் மற்றும் கற்பவர்களிற்கு இலகுவானதாகவும் அழகாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனது பங்கேற்பாளர்களில் ஒருவரான, உள்ளூர் இளைஞர் தலைவர், தனது இளைஞர் குழுவுடன் சேர்ந்து பாடத்திட்டத்தை நடத்த விரும்புகிறார் - இது பாடத்தை நடத்துவது எவ்வளவு அணுகக்கூடியது மற்றும் எளிதானது என்பதைப் பற்றி கூறுகிறது."
**HIDAYA DUDE**, நெறியாளர், தன்சானியா

"உங்களுக்கு தேவையான அனைத்தையும் இவ்வளங்களில் காணலாம் - அவை பயன்படுத்த எளிதானவை. ஆனால் ஒரு உதவிக்குறிப்பாக ஒரு இணை-நடத்துனரை வைத்திருப்பது நல்லது. அப்படி இருக்கும்போது உங்களில் ஒருவர் கற்றல் செயல்முறையின் மூலம் குழுவை வழிநடத்துவதில் கவனம் செலுத்தலாம், மற்றவர் தொழில்நுட்பத்தைக் கையாளலாம் அல்லது கூடுதல் ஆதரவு தேவைப்படும் தனிப்பட்ட பங்கேற்பாளர்களுக்கு உதவலாம்."
**IRFAN ENGINEER**, நெறியாளர், இந்தியா

# ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயாராவது?

அமர்வுகளை எவ்வாறு நடத்த வேண்டுமென்பதனை அமர்வுத் திட்டங்கள் விரிவாகக் குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு அமர்விற்கும் தயாராவதற்காக பின்வரும் படிமுறைகளை பின்பற்றுங்கள்:

### 1. அமர்விற்கான உடனிணைக்கப்பட்டுள்ள துணை வளங்களைக் கண்டறியுங்கள்.

ஒவ்வொரு அமர்வுத் திட்டத்திலும், அவ் அமர்விற்குரிய துணை வளங்களைக்கு உங்களை இட்டுச் செல்கின்ற நேரடி இணைப்பொன்றினை நீங்கள் பார்க்க முடியும். அக்கோப்புறையில் பின்வருவன காணப்படும்:

- அமர்விற்கான பவர்பொயின்ட்
- ஏதேனும் முன்வைப்புக்கள் அல்லது கதைகளுக்கான எழுத்துப்பிரதி, மற்றும்
- பயிற்சிகளில் பயன்படுத்துவதற்கான அச்சுப்பிரதி செய்யப்படக்கூடிய துணை வளங்கள் உதாரணமாக: அட்டைகள், சுவரொட்டிகள் மற்றும் கையேடுகள்.

*துணை வளங்களை இங்கே கண்டறியவும்.*

### 2. வாசியுங்கள், சிந்தியுங்கள், மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்!

*அமர்*வுத் திட்டத்தினைக் கவனமாக வாசியுங்கள்.

*சிந்தியுங்கள்* - இவ் அமர்விலுள்ள பயிற்சிகள் எவ்வாறு என்னுடைய குழுவில் செயற்படும்? நான் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய அல்லது மாற்ற வேண்டிய ஏதேனும் உள்ளதா?

*அதற்கமைய* அமர்வுத் திட்டம், பயிற்சியினை மற்றும் பவர்பொயின்டினை (பயன்படுத்துவீர்களாயின்) மாற்றியமைத்துக.

**ஆலோசனைக் குறிப்பு!** மொழிபெயர்த்துக் கொள்ளுங்கள் - பவர்பொயின்ட் மற்றும் கையேடுகளிலுள்ள ஆங்கில உரைகளை நீங்கள் உங்களுடைய பங்குபற்றுநர்களின் மொழிக்கு மாற்றிக் கொள்ள விரும்பலாம்.

### 3. முன்வைப்புக்களை தயார் செய்தல் மற்றும் பயிற்சி செய்து பார்த்தல்!

இவ் அமர்வுகளுள் ஏழு அமர்வுகள் முன்வைப்புக்களை உள்ளடக்கியுள்ளன. இம்முன்வைப்புக்களுக்கான எழுத்துப்பிரதிகள் மற்றும் பவர்பொயின்ட் என்பன உங்களுக்காக வழங்கப்பட்டுள்ளன. (மனித உரிமைகள் மற்றும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் பற்றி உங்களுக்கு இருக்கும் அறிவின்மீது உங்களுக்கு திட நம்பிக்கை இருக்குமாயின், நீங்கள் உங்களுக்கான சொந்த முன்வைப்புக்களைத் தயாரித்துக் கொள்ள முடியும் - ஆனால், நீங்கள் எழுத்துப்பிரதிகளிலுள்ள பிரதான கருத்துக்களை உள்ளடக்கியுள்ளீர்கள் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்)

முன்வைப்புக்களை செய்வதற்கு கீழ்வருமாறு தயாராகிக் கொள்ளுங்கள்:

***எழுத்துப்பிரதியினை வாசித்து செம்மைப்படுத்திக் கொள்ளுங்கள்***
எழுத்துப்பிரதியினை சில தடவைகள் வாசித்து அதன் உள்ளடக்கங்கள் பற்றி சிந்தியுங்கள். அதில் நீங்கள் செம்மைப்படுத்துவதற்கு, மாற்றியமைத்துக் கொள்வதற்கு அல்லது சேர்த்துக்கொள்வதற்கு ஏதேனும் உள்ளதா - உதாரணமாக, உங்களுடைய நாட்டிலிருந்து ஏதேனும் தகவல்கள் அல்லது உதாரணங்களை சேர்க்க வேண்டியுள்ளதா? உங்களது மாற்றங்களை செய்யுங்கள். (துணை வளங்களைக்குள் மாற்றங்களை செய்யக்கூடிய முறையிலான Word வடிவத்திலான எழுத்துப்பிரதிகள் காணப்படுகின்றன.)

***பவர்பொயின்ட்டினை செம்மைப்படுத்தல்/ நகர்வு விளக்கப்படத் தாள்களைத் தயாரித்துக் கொள்ளல்***
எழுத்துப்பிரதியில் செய்யப்பட்ட மாற்றங்களுக்கு அமைய பவர்பொயின்டினை செம்மைப்படுத்திக் கொள்க. நீங்கள் பவர்பொயின்டினைப் பயன்படுத்தவில்லையாயின், பிரதான ஸ்லைடுகளிலுள்ள கருத்துக்களைக் கொண்டு நகர்வு விளக்கப்படத் தாளொன்றினைத் தயாரித்துக் கொள்ளலாம்.

***உங்களுடைய முன்வைப்பினை செய்து பார்க்க பயிற்சி செய்தல்***
அவசியமாகின்ற தொழிநுட்பத்தினை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு மற்றும் பவர்பொயின்ட் ஸ்லைடுகள் அல்லது நகர்வு விளக்கப்படத் தாள்களுடன் உங்களுடைய முன்வைப்பினை செய்வதற்கு பயிற்சி செய்து பார்க்க.

***பங்குபற்றுநர்கள் எவ்வாறான பதிலளிப்புக்களை செய்வார்கள் என சிந்தித்தல்***
பங்குபற்றுநர்கள் எத்தகைய வினாக்கள் அல்லது பிரதிகிரியைகளைக் கொண்டிருப்பார்கள்? நீங்கள் அவற்றுக்கு எவ்வாறு பதிலளிப்பீர்கள்? இதற்கு நீங்கள் தயாராவதற்காக, பக்கம் 21 இலுள்ள 'தந்திரமான கேள்விகளுக்கு பதிலளித்தல்' எனும் பகுதியினை வாசியுங்கள். பங்குபற்றுநர்களுடைய கேள்விகளுக்கு பதிலளிக்கின்றபோது, 'எனக்கு தெரியாது' என்றும் பதிலளிக்கலாம் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்! நீங்கள் நிபுணரொருவராக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படவில்லை - நீங்களும் கேள்விகளைக் கொண்டிருக்க முடியும்.

***மேலதிக விருப்பத்தெரிவு: உங்களுடைய நம்பிக்கையினைக் கட்டியெழுப்புதல்***
உங்களை நம்பிக்கையுள்ளவர்களாக மற்றும் தயாராயுள்ளவர்களாக ஆக்குவதற்கு உதவி செய்யக்கூடிய குறுந்திரைப்படங்கள் மற்றும் வாசிப்புக்களுக்கான தொடுப்புக்கள் சில அமர்வுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 4. உங்களுடைய கருவித் தொகுதியினைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள்!

அமர்வினை நடத்துவதற்கு உங்களுக்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் தயார்படுத்தி மற்றும் ஒன்றுசேர்த்து வைத்துக் கொள்ளுங்கள்.சகல அமர்விலும் பயன்படுத்தக் கூடிய நியம வளங்களின் பட்டியலொன்று கீழேதரப்பட்டுள்ளது. ஒவ்வொரு அமர்வுத்திட்டத்திலுமுள்ள 'தயாராகுங்கள்' என்ற பகுதியில இவ்அமர்வுக்கு தேவையான மேலதிக வளங்களைக் காணலாம். உதாரணமாக கையேடுகள்,அல்லது விளையாட்டிற்கான பொருட்கள் - இரசப்பானை அல்லது நூறப்பந்து போன்றவை.

*நியம வளங்களின் கருவித் தொகுப்பு*

அனைத்து அமர்வுகளின்போதும் கீழ்வரும் நியம ஆவணங்கள் உங்களுக்கு தேவைப்படும்:

- நகர்வு விளக்கப்படத் தாள்கள் மற்றும் நகர்வு விளக்கப்படத் தாளுக்கான பேனைகள்
- சாதாரண பேனைகள் மற்றும் தாள்
- குறிப்பெழுதும் தாள்கள்
- பசைப்பட்டை அல்லது சுவரொட்டிகள், நகர்வு விளக்கப்படத் தாள்களை ஒட்டுவதற்கான வேறு முறைகள்
- கணினியொன்று பவர்பொயின்ட் ஸ்லைடுகளைக் காண்பிப்பதற்கான ஒளியுருப்படிவக்கருவியொன்று (விருப்பமாயின்)

### 5. அறையினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்!

ஒவ்வொரு அமர்வுத் திட்டத்திலுமுள்ள 'தயாராகுங்கள்' என்ற பகுதியில், அறையினை எவ்வாறு ஒழுங்கமைத்துக் கொள்வது (உதாரணமாக, கதிரைகளை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது, சுவரில் ஒட்ட வேண்டியன யாவை) என்பது தொடர்பான அறிவுறுத்தல்களைப் பார்ப்பீர்கள்.

*குறிப்பு*

அமர்வுகள் நிலையான இரண்டு மணி நேர அமர்வுக்கு திட்டமிடப்பட்டவை. சோதனைச் செயல்பாட்டின் அனுபவத்தின்படி, சில குழுக்கள் இரண்டு மணிநேரம் போதுமானது எனவும் மற்றவர்கள் விவாதத்திற்கு அதிக நேரத்தை அனுமதிக்க அமர்வுகள் நீண்டதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பதை காட்டுகிறது. தேவைப்பட்டால் விவாதங்களைத் தொடர உங்கள் திட்டத்தில் சில 'நெகிழ்வு நேரத்தினை" திட்டமிடலாம்.

"பாடநெறிக்கு தயாராவதற்கு நேரம் எடுக்கும். கவனத்தில் எடுத்து கொள்வதற்கு அநேக ஆவணங்கள் உள்ளன, எனவே தயாராகிரவேளையில் இலகுவாக பாடநெறியை கையாளலாம். அனைத்தும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இரண்டாவது முறையாக நீங்கள் பாடத்திட்டத்தை நடத்தினால், அதை தயார் செய்ய அதிக நேரம் எடுக்காது."
**HAMMAM HADDAD,** நெறியாளர், ஜோர்தான்

"முதலில் நீங்கள் நெறியாளர்களுக்கான வழிகாட்டியை முழுவதுமாகப் படிக்க வேண்டும், பின்னர் ஒவ்வொரு அமர்வையும் தயாரிப்பதற்கு நேரத்தை செலவிட வேண்டும். ஒவ்வொரு அமர்வையும் கற்பனை செய்து மற்றும் ஒவ்வொரு பயிற்சியும் எவ்வாறு செயல்படும் என்பதைப் பற்றி சிந்திப்பது நல்லது. ஒரு அமர்வு எவ்வாறு செயல்படும் என்று உங்களுக்குத் தெரியாவிட்டால், உங்கள் இணை-நெறியாளருடன் ஒரு முன்னோடி அமர்வை செய்வது நல்லது."
**UKOHA NGWOBIA,** நெறியாளர், நைஜீரியா

# நெறியாள்கைக்கான ஆலோசனைக் குறிப்புக்கள்

## *நெறியாள்கை என்றால் என்ன?*

***வரைவிலக்கணம்:***
நெறியாள்கை: செயலொன்றை அல்லது செயன்முறையொன்றை இலகுவானதாக்கல் அல்லது சாத்தியமானதாக்கல்.
நெறியாளரொருவர் கற்றல் செயன்முறை, நடத்தைகளை ஆராய்கின்ற செயன்முறை மற்றும் புதிய திறன்களைப் பெற்றுக்கொள்கின்ற செயன்முறையினை இலகுவானதாக்குவதற்கு பங்குபற்றுநர்களுக்கு உதவி செய்வார்.

***நெறியாளரொருவர்:***

- பங்குபற்றுநர்கள் எழுச்சியூட்டுகின்ற முறையில் ஒருவரோடொருவர் ஊடாடுவதற்கு மற்றும் வேடிக்கையான, முக்கியமான விடயங்களில் ஈடுபடுவதற்கு ஏற்ற வகையில் பங்குபற்றுகை முறைகளை பயன்படுத்துவார்.
- கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பளிக்கப்படுகின்ற நம்பிக்கைமிக்க, வெளிப்படையான மற்றும் பரஸ்பரக் கற்றலுக்கான சூழலொன்றினை உருவாக்குவார். உதாரணமாக தமது குழுவினர் தள விதிமுறைகளை உருவாக்க உதவுவார்.
- ஒவ்வொருவரும் உள்வாங்கப்பட்டுள்ளதாக உணரவும் ஒவ்வொருவருக்கும் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதனை உறுதிப்படுத்தியும் குழுவிலுள்ள அதிகார சமனிலையின்மைகளை அடையாளம் காண்பார் மற்றும் கையாளுவார்
- கற்றலுக்கானக் கட்டமைப்பொன்றினை வழங்கி செயன்முறையினூடாகப் பங்குபற்றுநர்களை வழிநடத்தல்.
- 'சரியான பராமரிப்பு'இடம்பெறுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல் - அமர்வினைத் தயார்படுத்தல், கூட்டத்திற்கான இடத்தினை ஒழுங்கமைத்தல், மற்றும் பங்குபற்றுநர்களை அவதானித்தல் போன்றன.

இவ்விடயங்களை நீங்கள் செய்வதற்கு உங்களுக்கு உதவி செய்யும் பொருட்டு இவ்வழிகாட்டியின் வளங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை விரிவான அமர்வுத் திட்டங்கள், அதிகளவான பங்குபற்றுகை செயற்பாடுகள், கற்றல் செயன்முறைகளுக்கான தெளிவானக் கட்டமைப்பொன்று மற்றும் அமர்வுகளுக்கு எவ்வாறு தயார்படுத்துவது என்பது தொடர்பான தெளிவான வழிகாட்டல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

***நெறியாளரொருவர்:***

- ஆசிரியரோ அல்லது விரிவுரையாளரோ அல்ல - பங்குபற்றுகையுடன் கூடிய கற்றல் செயன்முறைகளில் நெறியாளரொருவர் பங்குபற்றுநர்களுக்கு சகபாடியொருவர் ஆவார் என்பதுடன் ஒவ்வொருவரும் பங்களிப்பு செய்கின்ற கற்றல் செயன்முறையினை வழிநடத்துபவர் ஆவார்.
- கண்டிப்பாக நிபுணரொருவராக இருக்க வேண்டியதில்லை - நெறியாளரொருவர் ஒவ்வொரு அமர்வினையும் தயார் செய்கின்றபோதும், சில பங்குபற்றுநர்கள் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக நெறியாளரை விட அதிகளவில் அறிந்திருக்கலாம்! ஒவ்வொருவருடைய அறிவும் பயன்படுத்தப்படும்.
- கவனத்தை ஈர்க்கின்ற மையமாக இருக்க மாட்டார் - சிறந்த நெறியாளரொருவர் ஏனைய பங்குபற்றுநர்களை விட குறைவாக பேசி, அவர்களை கலந்துரையாடலுக்குள் உள்ளீர்ப்பார்.

ம.அ.ந.சு. தொடர்பான மனித உரிமைகள் கல்வியினை சாத்தியப்படுத்தல் ***தொடர்பாக மேலும் விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கு நீங்கள் ஆர்வமாக உள்ளீர்களா?*** இயங்கலையில் செய்யப்படுகின்ற எமது ம.அ. ந.சு. தொடர்பான பயிற்றுநர்களுக்கான பயிற்சியில் இணைந்துக் கொள்வதற்காக விண்ணப்பியுங்கள். பாரதூரமான மீறல்கள் இடம்பெறுகின்ற சூழமைவுகளில், ம. அ. ந. சு. தொடர்பான மனித உரிமைகள் கல்வியினை வழங்குவதில் வினைத்திறனாக ஈடுபட்டுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

***ம. அ. ந.சு பயிற்றுனர் பாடநெறி***
எமது இணையவழி பயிற்றுநருக்கான பயிற்சி பாடநெறி பற்றி *இங்கே* வாசிக்கவும்

## நெறியாள்கைக்கான பொதுவான ஆலோசனைக் குறிப்புக்கள்

***உங்களது அமர்வுகளை சிறப்பாகத் தயார்படுத்தி நெகிழ்வுத்தன்மையுடன் இருங்கள்!***
நீங்கள் எவ்வளவு சிறப்பாகத் தயாராகியுள்ளீர்களோ அவ்வளவு நம்பிக்கையுடன் இருப்பீர்கள். உங்களுடைய குழுக்களுக்கான செயற்பாடுகளை முன்கூட்டியே பொருந்தச்செய்து, அமர்வுகளின்போது நெகிழ்வுத் தன்மையுடன் இருங்கள், ஏனெனில், அவர்கள் தொடர்பாக எதில் அதிகளவான அல்லது குறைவான நேரத்தை செலவழிக்க வேண்டியுள்ளது என்பதனை நீங்கள் அவதானிக்க வேண்டும்.

***திறந்த மனதுடன் இருக்கத்தக்க அரங்கொன்றினை வழங்குங்கள்***
ஏனையோருடைய கருத்துக்களைக் கேட்பதற்கு மற்றும் அவை தொடர்பாக நாங்கள் கைக்கொள்வதற்கு விரும்பாத நிலைப்பாடுகளை கைக்கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றோம் என்ற உணர்வின்றி அவை தொடர்பாக சிந்திப்பதற்கு மற்றும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புள்ள செயன்முறைகளில் நடத்தைகள் நிலைமாற்றமடைகின்றன. உங்களுடைய அபிப்பிராயங்களுடன் உடன்படாதிருப்பதற்கு மற்றும் உங்களுடைய அபிப்பிராயங்களிலிருந்து வேறுபடுகின்ற நிலைப்பாடுகளைக் கொண்டிருப்பதற்கு பங்குபற்றுநர்களை அனுமதியுங்கள். வெற்றியாளர்கள் மற்றும் தோல்வியாளர்களை ஸ்தாபிப்பதனை குறிக்கோளாகக் கொண்டுள்ள வாதங்களை தவிருங்கள்.

***சிக்கலான கேள்விகளுக்கு எளிமையான பதில்களை அளிப்பதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்***
உரிமை மீறல்களுக்கான காரணிகள் பொதுவாக சிக்கலானவையாக இருப்பதுடன், அவை கலாசார நியமங்கள் மற்றும் அதிகாரக் கட்டமைப்புக்கள் போன்ற பல காரணிகளைக் கொண்டிருக்கும். அதிகளவில் எளிமையாக்கப்படுகின்ற பதில்கள் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், விசேடமாக உரிமைகளை மறுப்பதற்கான பொறுப்பினை, உதாரணமாக: மத அடையாளம் போன்ற ஒன்று அல்லது இரண்டு காரணிகளுக்குள் மட்டுப்படுத்துவது தொடர்பில் அவதானமாயிருங்கள். அவர்களுடைய அனுபவங்களுக்கு பங்களிப்பு செய்துள்ள வேறுபட்டக் காரணிகளை பகுப்பாய்வு செய்யும்பொருட்டு பங்குபற்றுநர்களை உற்சாகப்படுத்துங்கள்.

***மொழியினை துல்லியமாகப் பிரயோகிப்பதற்கு முயற்சியுங்கள் மற்றும் நிலையான உள எண்ணங்களை வரவேற்காதிருங்கள்***
பொதுமைப்படுத்துவதற்கான பங்குபற்றுநர்களின் எண்ணப்பாங்கை எதிருங்கள் - உதாரணமாக "முஸ்லிம்கள் அனைவரும்...", "இந்துக்கள் என்ன நினைக்கிறார்களென்றால்..." அல்லது "பெண்கள் எதை செய்வதில்லையென்றால்...". என்றவாறு பொதுமைப்படுத்துவதிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கு பங்குபற்றுநர்களுக்கு உதவி செய்தல். குழுவொன்றிலுள்ள பல உறுப்பினர்கள் பொதுவான அனுபவங்கள் அல்லது நம்பிக்கைகளைப் பகிர்ந்துக் கொள்கின்றபோதிலும், பொதுமைப்படுத்தல்கள் தேர்ச்சிக்குப்படுத்தப்பட வேண்டும் (உதாரணமாக: "சில நேரங்களில்", "பெரும்பாலான சந்தர்ப்பங்களில்") என்பதனை பங்குபற்றுநர்களுக்கு நினைவூட்டுதல்.

***வலிகளை ஒப்பிடுவதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்***
யார் அதிகமான வலியினை அனுபவித்துள்ளனர் என்பதன் மீதான ஒப்பீடொன்றினை, போட்டியொன்றினை அல்லது வாதமொன்றினை செய்வதற்கு பதிலாக தனிநபர்கள் மற்றும் குழுக்களுக்கிடையில் ஒருமைப்பாடு மற்றும் பரிவு என்பவற்றை ஊக்குவித்தல்.

***"எனக்கு தெரியாது"என சொல்ல தயங்க வேண்டாம்***
நெறியாளரொருவரும் கற்றுக் கொள்பவரே என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்! ஒரு கேள்விக்கு உங்களால் பதிலளிக்க முடியாதபோது, வேறு யாரேனும் பதிலளிக்க முடியுமா என கேளுங்கள். அனைத்து கேள்விகளுக்குமான பதில்களை, விசேடமாக குறிப்பிட்ட கேள்வி அபிப்பிராயமொன்றினை உள்ளடக்குகின்றபோது (உதாரணமாக, "வெறுப்புப் பேச்சினைக் கையாளக்கூடிய சிறந்த வழி யாது?"), நீங்களே பதில் சொல்ல முயற்சிக்கின்ற அவாவினை தவிர்த்திடுங்கள். மாறாக, அவர்கள் எவ்வாறு பதிலளிப்பார்கள் என குழுவிடம் கேட்டு வேறுபட்ட அபிப்பிராயங்களுக்கு வழி சமைத்துக் கொடுங்கள்.

***குழுவாக செயற்படுவதோடு பதிவொன்றினையும் பேணுங்கள்***
நெறியாளரொருவர் அனுபவத்திலிருந்தும் ஒருவர் மற்றவரிடமிருந்தும் கற்றுக் கொள்கின்றார்கள். 2-3 நெறியாளர்களாக பயிற்சி நெறியினை திட்டமிட்டு, நடைமுறைபடுத்தி மதிப்பீடு செய்யும் குழுவாக இயங்குங்கள். திட்டம் மாற்றியமைக்கப்படுகின்ற விதம் மற்றும் திட்டத்தில் செய்யப்படுகின்ற மாற்றங்கள், புதிய கருத்துக்கள், குறிப்பான வெற்றிகள் மற்றும் சிக்கல்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு அமர்விலும் என்ன நடந்தது என்பதனை குறித்துக் கொள்ளுங்கள். இது எதிர்காலத்தில் பயிலமர்வுகளை திட்டமிட்டுக் கொள்வதற்கு உதவி செய்யும்.

## நெறியாளர்கள் எதிர்கொள்கின்ற பொதுவான சவால்கள்

***நெறியாள்வதிலுள்ள சவால்கள்: அதிகார இயங்காற்றல்கள்***
சமூகத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள முறையான அதிகார சமநிலையின்மைகள் காணப்படுகின்றன - ஆண் மற்றும் பெண்களுக்கிடையில் வகுப்பு, இன அல்லது மதக் குழுக்களுக்கிடையில் வயது வந்தவர்கள் மற்றும் சிறுவர்கள்/இளைஞர்களுக்கிடையில் உடல் இயலுமை உடைய நபர்கள் மற்றும் இயலாமைகளையுடைய நபர்களுக்கிடையில் கல்வி கற்ற மற்றும் கல்வியறிவற்ற மக்களுக்கிடையில், இவ் அதிகார சமநிலையின்மைகள் காணப்படும். இது பங்குபற்றுநர்கள் எவ்வாறு ஏனையோருடன் மற்றும் நெறியாளருடன் தொடர்பு கொள்கின்றனர் என்பதனையும் பாதிக்கும். மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான பயிற்சிகளில் மதத் தலைவர்களின் பங்குபற்றுகையானது குழு இயங்காற்றல்களில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதுடன் சுதேசிய கலாசார நியமங்களுக்கமைய (உதாரணமாக: இறையியல்) பெண்கள் அபிப்பிராயங்களைக் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதில்லை போன்ற பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்களிலும் செல்வாக்கு செலுத்துகின்றது. அதிகார இயங்காற்றல்கள் பெரும்பாலும் மறைக்கப்பட்டனவாகவே காணப்படுமென்பதுடன் கற்றலுக்கு சாதகமான ஒரு இடத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு, நெறியாளர்கள் அவற்றைக் கண்காணித்தலும் முகாமை செய்தலும் வேண்டும்.

அதிகார இயங்காற்றல்களை முகாமை செய்வதற்கான சில ஆலோசனைக் குறிப்புக்கள் இங்கு வழங்கப்பட்டுள்ளன:

- விழிப்புடன் இருங்கள்! பங்குபற்றுநர்கள் எவ்வளவு தூரம் ஆதிக்கம் செலுத்துபவர்களாக அல்லது அமைதியாக உள்ளனர், அவர்கள் எங்கு அமர்ந்திருக்கிறார்கள், அவர்களது உடலமைப்பு நிலை மற்றும் அவர்கள் ஏனைய ஒவ்வொருவருடனும் மற்றும் உங்களுடனும் எவ்வாறு தொடர்பு கொள்கின்றனர் என்பது தொடர்பாக விழிப்புடன் இருங்கள்.
- எதிர்மறையான அதிகார இயங்காற்றல்களை நுட்பமாக சவாலுக்குப்படுத்துவதற்கும் மாற்றியமைப்பதற்கும் நெறியாளரென்ற ரீதியில் உங்களது சுய அதிகாரத்தினைப் பயன்படுத்துங்கள், உதாரணமாக, கள விதிகளை மேற்கோள் காட்டுவதனூடாக அல்லது நீங்கள் அனைத்து பங்குபற்றுநர்களினதும் அபிப்பிராயங்கள் மற்றும் கருத்துக்களை வரவேற்கிறீர்கள் என்பதனை அடிக்கோடிட்டுக் காட்டுவதனூடாக.

- பங்குபற்றுநர்கள் அங்குமிங்கும் நகர்ந்து ஈடுபாட்டுடன் செயற்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு பங்குபற்றுகை செயற்பாடுகளையும் சிறிய குழுக்களையும் பயன்படுத்துங்கள். ஒரே நபர்கள் எப்போதும் ஒன்றாக செயற்படவில்லை என்பதனை உறுதிப்படுத்த முயற்சியுங்கள்.
- பேசுவதற்காக ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுத்தல் மற்றும் ஒவ்வொருவருடைய கருத்துக்களும் கேட்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல் தொடர்பாக திட்டவட்டமாக செயற்பட்டு கலந்துரையாடல்களை வழிநடத்துங்கள்.
- பேசுவதற்கு வெட்கப்படுகின்ற பங்குபற்றுநர்கள், விசேடமாக அவர்கள் எதையேனும் சொல்வதற்கு தயாரான நிலையிலிருப்பதுபோல தெரிந்தால் (உதாரணமாக, கை தற்காலிகமாக உயர்த்தப்பட்டிருத்தல் அல்லது தலையாட்டப்படல்), அவர்கள் பேசுவதனை ஊக்கப்படுத்துங்கள். உங்களுடைய சொந்த உடல் மொழிநடையினைப் பயன்படுத்தல், உதாரணமாக அவர்களுக்கு அருகே செல்லல் அல்லது கண் சாடைகளினூடாக அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- தாராளமாகப் பாராட்டுங்கள், ஆனால் ஒருவருக்கு மாத்திரம் சார்பாக செயற்படுவதனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்காத நபர்களுக்கு பொறுப்புக்களை வழங்குதல் – உதாரணமாக குழு வேலை தொடர்பாக அறிக்கையிடுவதற்காக அவர்களை நியமித்தல்.
- ஏனையோரை அவமதிக்கின்ற, மேன்மைநிலை அல்லது அகந்தையினை வெளிப்படுத்துகின்ற அல்லது ஊறு விளைவிக்கத்தக்க, கொடூரமான அல்லது பாரபட்சம்மிக்க கருத்துக்கள், விசேடமாக அவை பங்குபற்றுநர்களை நேரடியாக அல்லது மறைமுகமாக இலக்கு வைக்கின்றபோது, சவாலுக்குப்படுத்தப்படாது விடப்படுவதனை அனுமதிக்க வேண்டாம். கள விதிகளை மேற்கோள் காட்டுங்கள் அல்லது “குற்றமிழைத்த” பங்குபற்றுநர் (கள்) அதனை ஏன் சொன்னார்கள் அல்லது என்ன செய்தார்கள் என்பதனை விளக்குமாறு கேட்டல் மற்றும் அச்சந்தர்ப்பம் தொடர்பில் தங்களுடைய கருத்துக்களை கூறுமாறு ஏனைய பங்குபற்றுநர்களுக்கு அழைப்பு விடுத்தல்.
- சூழ்நிலைக்கமைய (சில சந்தர்ப்பங்களில் கட்டாயமாக) மொத்தக் குழுவில் பகிர்ந்துக் கொள்வதற்கு முன்னர், பெண் பிள்ளைகள் மற்றும் பெண்கள் மற்றும் ஆண் பிள்ளைகள் மற்றும் ஆண்கள் தனித்தனியாகக் கதைத்துக் கொள்தல் இலகுவாய் இருக்கும். இது வேறுபட்ட வயது, மதங்கள் அல்லது கலாசாரக் குழுக்களுக்கும் ஏற்பாகும்.

***நெறியாள்வதிலுள்ள சவால்கள்: உணர்வுபூர்வமான விடயங்கள்***

மனித உரிமைகள் எங்களுடைய விழுமியங்கள், உணர்வுகள் மற்றும் கருத்துக்கள் என்பவற்றில் தலையீடு செய்கின்றது என்பதுடன் அது உலகம் தொடர்பான எமது பார்வை மற்றும் முன்கூட்டியக் கருத்துக்களை சவாலுக்குப்படுத்தக் கூடியது. சில பங்குபற்றுநர்கள் விடயப்பொருள் அவர்களது விழுமியங்கள், நம்பிக்கைகள் மற்றும் வழக்காறுகளுடன் முரண்படுவதாக அல்லது அவற்றுக்கு அச்சுறுத்தல் விடுப்பதாக உணரலாம் என்பதுடன் மனித உரிமை மீறல்களை அனுபவித்துள்ள பங்குபற்றுநர்களின் பதில்களில் அவ் உளவியல் அதிர்ச்சிகள் செல்வாக்கு செலுத்தலாம்.

பங்குபற்றுநர்கள் எரிச்சல்படுவார்களாயின், வெளியேற்றம் செய்வார்களாயின், கலந்துரையாடல்களை சீர்குலையச் செய்வார்களாயின் அல்லது முரட்டுத்தனமுள்ளவர்களாய் செயற்படுவார்களாயின், இது அவர்கள் உணர்வுபூர்வமான விடயங்களினால் அச்சுறுத்தப்படுத்தப்பட்டுள்ளதாக உணர்கின்றனர் என்பதன் வெளிப்பாடு ஆகும்.

நெறியாள்பவரென்றரீதியில், உங்களுடைய வகிபாகம் யாதெனில், உங்களுக்கும் அதேபோல ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பான சூழலொன்றினை பேணிக் கொள்வதனூடாக - பரஸ்பரக் கற்றலுக்கான விமர்சனக் கண்ணோட்டமற்ற அரங்கொன்றினை வழங்குவதனூடாக கலந்துரையாடலை மனித உரிமைகள்/மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடையதாக பேணுவதனூடாக - கலந்துரையாடல் மற்றும் குழு இயங்காற்றலை முகாமை செய்வதாகும்.

உணர்வுபூர்வமான தலைப்புக்கள் மற்றும் பதட்ட நிலைகளைக் கையாள்வதற்கான சில பொதுவான ஆலோசனைக் குறிப்புக்கள் இங்கே தரப்பட்டுள்ளன:

- அமர்வு பற்றி முன்கூட்டியே சிந்தியுங்கள், உணர்வுபூர்வமான விடயங்களை அடையாளங் காணுங்கள் மற்றும் தோன்றக்கூடிய அத்தகைய சூழ்நிலைகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக சிந்தியுங்கள்.
- முரண்பாடான கலந்துரையாடல்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக செயன்முறையினை விரைவாக முடிப்பதற்கு அவசரப்பட வேண்டாம். பங்குபற்றுநர்கள் பொருத்தமற்ற கேள்விகளைக் கேட்பதனையும் அனுமதியுங்கள்.
- நீங்களும் வாதங்களில் மூழ்கி விட வேண்டாம். நீங்கள் நெறியாளர் ஒருவரேயன்றி விவாதப் பங்காளர் ஒருவர் அல்ல.
- மனித உரிமைகள் கல்வியானது, நாங்கள் உடன்படாத விடயங்களைக் கலந்துரையாடுவதற்கான திறன்களைக் கட்டியெழுப்புவதனை உள்ளடக்கியுள்ளது என்பதனை நினைவிற் கொள்ளுங்கள். குழு அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் உடன்பட்டுக் கொள்ள வேண்டியதில்லை!
- களத்தினை தயார் செய்யுங்கள் – கள விதிகளை ஆக்குவதற்கும் பரிவு மற்றும் நம்பிக்கையினை விருத்தி செய்கின்ற செயற்பாடுகளைச் செய்வதற்கு நேரத்தினை செலவிடுங்கள்.

- பங்குபற்றுநர்கள் பேசுவதனை மற்றும் பங்குபற்றுவதனைத் தூண்டுவதற்கு, உங்களுடைய சொந்த அனுபவங்களிலிருந்து பெறப்பட்ட தனிப்பட்ட பங்களிப்புக்களை பயன்படுத்துங்கள்.
- பதட்டநிலைகள் தோன்றுகின்றபோது களவிதிகளை மேற்கோள் காட்டுங்கள் மற்றும் வேறுபட்டக் கருத்துக்களுக்கு செவிமடுத்தலின் மற்றும் மதிப்பளித்தலின் முக்கியத்துவத்தினைப் பங்குபற்றுநர்களுக்கு நினைவூட்டுங்கள்.
- மனித உரிமைகளுக்கான ஆட்சேபனைகளை அங்கீகரித்தல். முரண்பாடான விழுமியங்கள் மற்றும் கருத்துக்களை புரிந்துகொள்வதனூடாகவும் அவற்றினூடாக பணியாற்றுவதனூடாகவும் நாம் அனைவரும் நன்மையடைய முடியும் என்பதனை விளக்குங்கள்.
- எதிர்ப்புக்களை வரவேற்கவும்! அவ்விடயம் தொடர்பான சிந்தனைகள், பதில்வினைகள் அல்லது கரிசனைகளை பகிரந்து கொள்ளுமாறு குழு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்வதனூடாக, அதனைக் கலந்துரையாடலை சாத்தியமாக்குவதற்கான கருவியொன்றாகப் பயன்படுத்தவும். நிலைமாற்றக் கற்றல் இடம்பெறுவதற்கு, எதிர்மறையான நடத்தைகள் குழு அமைப்புக்களில் வெளிப்படையாகப் பேசப்பட வேண்டும்.
- பதட்ட நிலைகளை அடையாளம் கண்டு கையாளுங்கள். செயன்முறையினை இடைநிறுத்துங்கள், நீங்கள் இவ் அறையில் பதட்டத்தை உணரக்கூடியதாயுள்ளது என சொல்லுங்கள், வேறுபட்ட அபிப்பிராயங்களை அடையாளப்படுத்துமாறு பங்குபற்றுநர்களிடம் சொல்லுங்கள் மற்றும் உடன்படாதிருக்கின்றமையினை ஏற்க முடியுமா என கேளுங்கள். இத்தலைப்பினை எவ்வாறு கையாள வேண்டும் என குழுவின் அபிப்பிராயத்தினைக் கேளுங்கள். அவர்கள் குறித்த விடயத்தினை சிறிய குழுக்களில், தனியான அமர்வொன்றில் கலந்துரையாட அல்லது அவர்கள் கலந்துரையாடலை நிறுத்த விரும்பலாம். உங்களுக்குள்ள ஏதேனும் தனிப்பட்ட ஒதுக்கீடுகளை வெளிப்படுத்துங்கள். உதாரணமாக, குழுவிலுள்ள ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் நன்கு அறிந்து பரஸ்பர நம்பிக்கை மற்றும் புரிதல் ஸ்தாபிக்கப்படுகின்ற வரையில் குறித்த தலைப்பினை பிற்போடலாமென நீங்கள் பரிந்துரைக்கலாம்.
- உடன்பாடின்மைகள் அமர்வினை தடம் மாறச் செய்யுமாயின் அல்லது உறவுநிலைகளை சேதப்படுத்துமாயின், அப்போது கலந்துரையாடலை 'ஆறப்போட்டுவிட்டு,' இணக்கம் கட்டியெழுப்பப்படக்கூடிய விடயங்கள் மீது அவதானம் செலுத்துங்கள். இப்பயிற்சி நெறி ஒரு விவாத அரங்கல்ல.
- அதிகமாக எதிர்பார்க்க வேண்டாம்! உடன்படாதுள்ள விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடலைக் கட்டியெழுப்புவதற்காக கனிவாக செயற்படுங்கள். நபர்கள், ஆழமாக வேரூன்றியுள்ள நிலையான உள எண்ணங்கள் மற்றும் நியமங்கள் தொடர்பான தங்களது மனநிலையினை உடனடியாகவும் பகிரங்கமாகவும் மாற்றிக்கொள்தல் மிக அரிதாகும். எவ்வாறெனினும், மாற்றுக் கருத்துக்களை சிந்தித்தல் மற்றும் பரிவான உறவுநிலைகளைக் கட்டியெழுப்பிக் கொள்ளல் என்பன பங்குபற்றுநர்கள் தங்களுடைய கருத்துக்களை ஒரு காலத்தில் மீள்பரிசீலனை செய்வதற்கு உதவும்.

***நெறியாள்தல்: சிக்கலான தனிநபர்கள்***

சில நேரங்களில் ஒரு தனிநபர், வேண்டுமென்றோ அல்லது தற்செயலாகவோ, குழுவின் ஒருமைப்பாடு மற்றும் வினைத்திறன் தன்மைக்கு இடையூறு விளைவிக்கலாம், உதாரணமாக, கலந்துரையாடல்களில் ஆதிக்கம் செலுத்தல் அல்லது அவர்களுடைய தொலைபேசியில் கவனம் செலுத்துவதனூடாக. தீர்வுகள் நபருக்கு நபர் மற்றும் சூழ்நிலைக்கு சூழ்நிலை வேறுபடும், எனினும், கீழ்வரும் உபாயங்கள் உதவியாக அமையும்:

- பங்குபற்றுநரொருவர் நீண்ட நேரம் கதைத்திருக்கின்றபோது, உபாயம் மற்றும் நகைச்சுவையினைப் பயன்படுத்துங்கள். உதாரணமாக, அவர்கள் கருத்துக்களை சொல்கின்றபோது விரைவாக இடைமறித்து, "இது நல்ல கருத்து, நன்றி! ஏனையோர் இதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?" என கருத்துக்களை கேளுங்கள் அல்லது உங்களுடைய கடிகாரத்தை சுட்டிக்காட்டி சிரியுங்கள்.
- ஆதிக்கம் செலுத்துகின்ற பங்குபற்றுநரொருவருக்கு பணியொன்றினை வழங்குங்கள், உதாரணமாக, குழுவின் கருத்துக்களை நகர்வு விளக்கப்படத் தாளில் எழுதுகின்ற பணி. இது ஏனையோர் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான அவர்களது தேவையினை சிதறச் செய்யும்.
- குழு இயங்காற்றல்கள் சரியாக இல்லாதபோது அதனை அடையாம் கண்டு நபர்களுக்கு கள விதிகளை நினைவுபடுத்திக் கொளள்ளுங்கள். இடையூறு செய்யலாகாது, அனைத்து கலந்துரையாடல்களும் இரகசியமானவை, தொலைபேசி பாவிக்கக்கூடாது மற்றும் ஒவ்வொருவருடைய கருத்திற்கும் மதிப்பளிக்கப்பட வேண்டும் போன்ற விடயங்கள் கள விதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். கள விதிகளை நடைமுறைப்படுத்தல் ஒவ்வொருவரினதும் பொறுப்பு என்பதனை வலியுறுத்துங்கள் மற்றும் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு குழு அழுத்தத்தினை அனுமதியுங்கள்.
- அவசியமாயின், அதிகமாக ஆதிக்கம் செலுத்துகின்ற அல்லது மரியாதையின்றி நடந்து கொள்கின்ற பங்குபற்றுநருடன் தனியாக பேசுங்கள், உதாரணமாக இடைவேளையொன்றின்போது. நீங்கள் அவர்களது பங்குபற்றுகையினை மதிக்கின்றீர்கள் என்று கூறுங்கள், சவால்களை குறிப்பிடுங்கள், தீர்வுகளைக் கேளுங்கள் மற்றும் கற்றல் சூழலினை மேம்படுத்த உதவி செய்யக்கூடிய வழிவகைகளைக் கலந்துரையாடுங்கள்.
- இறுதி வழிமுறையாக அப்பங்குபற்றுநரை குழுவிலிருந்து வெளியேறுமாறு சொல்லலாம். அவர்கள் குழுவில் ஏற்படுத்துகின்ற தீங்கான உணர்வுகள் அத்தகையதொரு படிமுறையினால் ஏற்படக்கூடிய தீங்கான உணர்வுகளை விஞ்சி நிற்க வேண்டும்.

***ஆதாரம்***

'நெறியாள்கைக்கான ஆலோசனைக் குறிப்புக்கள்'பகுதியானது மனித உரிமை வளங்களின் மையத்தால் வெளியிடப்பட்ட *நன்சி பிளவர்ஸ் இன் மனித உரிமை கற்கை* கையேட்டினை தழுவி அவர்களின் அனுமதியுடன் பயன்படுத்தப் படுகின்றது.

# தந்திரமான கேள்விகளுக்கு பதிலளித்தல்

நீங்கள் உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சியினை நடத்துவதனால், நீங்கள் பங்குபற்றுநர்களிடமிருந்து மனித உரிமைகள் பற்றிய தந்திரமான கேள்விகளை எதிர்கொள்ள வேண்டியேற்படும். நீங்கள் எதிர்கொள்ள வேண்டியேற்படுகின்ற சில சாத்தியமான கேள்விகள் மற்றும் ஆட்சேபனைகளையும் அவற்றுக்கு பதிலளிப்பதற்கான சில ஆலோசனைகளையும் நாம் இங்கு தொகுத்திருக்கின்றோம். ஒவ்வொரு கேட்போர் குழாமும் சூழமைவும் வேறுபட்டு காணப்படும், ஆகவே, இங்கு உள்ள அனைத்து ஆட்சேபனைகளும் பதில்களும் உங்களுக்கு பொருத்தமானதாக அமையாது. இருந்தபோதிலும், நீங்கள் சிக்கலான கலந்துரையாடல்களுக்கு தயாராவதற்கு இத்தொகுப்பு உதவுமென நாம் நம்புகின்றோம்.

நீங்கள் ஆட்சேபனைகளுக்கு பதிலளிக்கின்றபோது, அவ் ஆட்சேபிப்பில் காணப்படுகின்ற ஏதேனும் உண்மையினையும், அது பிரதிபலிக்கின்ற தனிப்பட்ட அனுபவங்களையும் சரியென ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதனை நினைவிற் கொள்ளுங்கள். ‘உங்களுக்கு தெரியாது மற்றும் இப்பயிற்சி நெறி இதற்கான பதிலை நாம் ஒன்றாகத் தேடியறிவதற்கு உதவி செய்யும்’ என கூறி பதிலளிக்க முடியுமென்பதனையும் நினைவிற் கொள்ளுங்கள்! நடத்தைப் பாங்கு மாற்றமடைகின்ற செயன்முறை பொதுவாக மெதுவானதும் கிரமமானதுமாகும். அபிப்பிராயங்களின் உடனடி மாற்றத்தினை எதிர்பார்ப்பதற்கு பதிலாக, மாற்றத்திற்கான விதைகளை மெதுவாக விதைத்து, அவற்றுக்கு நீருற்றுவதனை இலக்காகக் கொள்ளுங்கள்.

ம.அ.ந.சு எவற்றுடன் தொடர்புறுகின்றது மற்றும் அது எப்போது மட்டுப்படுத்தப்படலாம் போன்ற நிகழ்வுசார் கேள்விகள் தொடர்பில், தயவு செய்து குறிப்பிட்ட தலைப்பு தொடர்பான எமது *குறுந்திரைப்படத்* தொகுதியினைப் பாருங்கள்.

பல தந்திரமான கேள்விகள் ம.அ.ந. சு.இற்கான குறிப்பிட்ட ஒரு பிரச்சினையை எவ்வாறு கையாள்வது மற்றும் எவ்வாறு மாற்றத்தினை ஏற்படுத்துவது என்பனவற்றுடன் தொடர்புறுகின்றன. அத்தகைய கேள்விகளுக்கு பதில்களைக் கண்டடைவதற்கு குழுக்களுக்கு உதவும்பொருட்டு, தயவுசெய்து 6-9 வரையான அமர்வுகளின் துணை வளங்களை (இவை உத்திகள் மற்றும் செயற்பாட்டுத்திட்டமிடலை மையப்படுத்துகின்றன) பயன்படுத்துங்கள்.

ம.அ.ந.சு இன் உண்மைக் கேள்விகளுக்குப் பதிலளிக்க *இந்தப் திரைப்படங்களை* பாருங்கள்.

***ஆபாயம் மற்றும் பாதுகாப்புக்கான அவதானங்கள்***

மனித உரிமைகளுக்கான உறுதியான ஆட்சேபனைகள், குறிப்பாக மதம்சார் ஆட்சேபனைகள் அபாயத்தினை எச்சரிக்கின்ற ஒரு அடையாளமாக இருக்கலாம். சிக்கலான சூழமைவுகளில், உரிமைகள் மற்றும் மீறல்கள் பற்றிய வெளிப்படையான கலந்துரையாடல், குழுக்களில் ஏற்கனவே காணப்படுகின்ற குழப்பங்கள் உயிர்ப்படைவதற்கு வழிவகுக்கும் அல்லது உங்களது அல்லது உங்களின் பங்குபற்றுநர்களின் பாதுகாப்பிற்கு ஆபத்தினை ஏற்படுத்தும். கலந்துரையாடல்கள் அபாயத்திற்கு வழிநடத்துகின்ற திசையில் திரும்புமாயின், குறிப்பிட்ட தலைப்பின் உணர்வுபூர்வத்தன்மையினை அடையாளங்கண்டு கலந்துரையாடலை நிறுத்துங்கள். கலந்துரையாடலினை பரஸ்பர உடன்பாடு காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக மாற்றுங்கள். அத்துடன் குழுவில் உறவுநிலை மற்றும் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புகின்ற பயிற்சிகளுக்காக சிறிது நேரத்தினை செலவிடுங்கள்.

***குறிப்பு***

***சவாலுக்குட்படுத்துவதா அல்லது செவிமடுப்பதா?***

சில கருத்துக்களுக்கு பதிலளிக்கின்ற போது, ‘உங்களுடைய நடத்தை சரியில்லை’ அல்லது ‘நீங்கள் அதனை தவறாக விளங்கிக் கொண்டீர்கள்’ என கூறி நபர்களை சவாலுக்குட்படுத்துவதற்கு தூண்டப்படலாம். ஆனால், சில கலந்துரையாடல்களை நிறுத்துவதும் கள விதிகள் தொடர்பாக நபர்களுக்கு ஞாபகப்படுத்துவதும் உண்மையில் அவசியமானதாய் அமையும், குறிப்பாக குழுவிலுள்ள ஏனையவர்கள் தாக்கப்பட்டதாக அல்லது இழிவுபடுத்தப்பட்டதாக உணர்கின்றபோது இது அவசியமானதாய் அமையும். எவ்வாறெனினும், எண்ணங்களை மாற்றுவதற்கு பெரும்பாலும் செவிமடுத்தல் மற்றும் பாராட்டிற்குரிய நியாயப்படுத்தல்கள் - ஆட்சேபிப்பினைத் தெரிவித்தவருக்கும் நெறியாளருக்குமிடையிலான பொதுவான காரணியொன்றினை, அது சிறிதாக இருப்பினும், கண்டறிய முயற்சிக்கின்ற உணர்திறன்மிக்க கலந்துரையாடலொன்று - என்பன மிக அவசியமானவையாகும். விசேடமாக, ஆட்சேபிப்புக்களைக் கொண்டுள்ள நபர் கலந்துரையாடல்களில் ஆதிக்கம் செலுத்துகின்றபோது அல்லது குழுவிற்குள் எதிர்மறையான சூழலொன்று உருவாக்கும்போது, இடைவேளையில் அல்லது அமர்வின் பின்னர் அவருடனான தனிநபர் கலந்துரையாடல் பயனுள்ள அணுகுமுறையாக அமையும்.

## *கருப்பொருள் – பெரும்பான்மையினர் எதிர் சிறுபான்மையினர்*

***ஆட்சேபனை:*** பெரும்பான்மையினர் அதிக உரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்! ஜனநாயகத்தில் அவர்களுக்கு தீர்மானமெடுப்பதற்கான உரிமை உண்டு.
***ஆட்சேபனை:*** சிறுபான்மையினர் இங்கு, எமது நாட்டில் வாழ வேண்டுமாக இருப்பின் அவர்கள் எமது நம்பிக்கைகள் மற்றும் வாழ்க்கை முறையினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

***சாத்தியமான பதில்கள்:***

- ஜனநாயகத்தில் அதிக வாக்குகளைப் பெற்றுக் கொள்கின்ற அரசியல் கட்சி ஆட்சி அமைப்பதற்கு அழைக்கப்படுகின்றது. ஆனால், ஜனநாயகமொன்று நிலையானதாக மற்றும் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டுமாயின், அவ் அரசாங்கம் ஒவ்வொருவரினதும் நலன்களைப் பாதுகாக்க வேண்டும். அனைத்து பிரஜைகளுக்குமான சம உரிமைகளின்றி, ஜனநாயகம் பெரும்பான்மையினரின் கொடுங்கோலாட்சியாகிவிடும் – அதாவது இரண்டு ஓநாய்களும் ஒரு ஆடும் இரவு உணவுக்கு என்ன உண்பது தொடர்பாக வாக்களிப்பது போலாகும்!
- எமது அரசாங்கம் சிறுபான்மையினரின் உரிமைகளை மறுக்கமுடியுமாயின் மற்றும் சிறுபான்மையினர் பெரும்பான்மையினரின் நம்பிக்கைகள் மற்றும் வாழ்க்கைமுறையினை ஏற்றுக்கொண்டால் - ஏனைய நாடுகளில் சிறுபான்மையினராக வாழ்கின்ற எமது மதத்தினைச் சேர்ந்த நபர்களுக்கு என்ன நடக்கும்? அவர்களுடைய அரசாங்கங்களும் இதனையே செய்து அவர்களுடைய உரிமைகளை மறுத்தால் பரவாயில்லையா?
- ஜனநாயகம் என்பது மனித உரிமைகளில் சார்ந்திருக்கின்றது. பேச்சு மற்றும் தகவலுக்கான சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான மற்றும் ஒருங்குசேர்வதற்கான சுதந்திரம், ஊடக சுதந்திரம் மற்றும் வாக்களிப்பதற்கான முழுமையான உரிமை என்பனவின்றி சுதந்திரமான மற்றும் நீதியானத் தேர்தல்கள் சாத்தியப்படாது. இத்தகைய உரிமைகளின்றி பிரஜைகள் அரசியல் கட்சிகளை உருவாக்க முடியாது, யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்பது தொடர்பான கற்றுணர்ந்த அபிப்பிராயமொன்றினை உருவாக்க முடியாது அல்லது பாதுகாப்பாக வாக்களிக்க முடியாது.
- கலாசாரங்கள் மற்றும் பாரம்பரியங்களின் பன்மைத்தன்மையானது சமூகத்தினை பல வழிகளில் வளப்படுத்துகின்றது, உதாரணமாக கலைகள் மற்றம் உணவினூடாக.

***ஆட்சேபனை:*** மனித உரிமைகள் சிறுபான்மையினருக்கு மாத்திரமே முக்கியமானவை.

***சாத்தியமான பதில்கள்:***

- அனைத்து வகையான சிறுபான்மை சமுதாயங்களைச் சேர்ந்த நபர்களுக்கும் மனித உரிமைகள் முக்கியமானவை ஆகும், உதாரணமாக பாரபட்சம். போன்ற உயரிய ஆபத்துக்களை அவர்கள் பெரும்பாலும் எதிர்கொள்கின்றனர். இருந்தபோதிலும், மனித உரிமைகள் அனைவருக்குமானவை. மனித உரிமைகள் ஒவ்வொருவரையும் அதிகார துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பதற்கும் ஒவ்வொருவரினதும் நலனை மேம்படுத்துவதற்கும் முயற்சிக்கின்றன. எந்தவொரு நபரும் காரணமின்றி கைது செய்யப்படவோ அல்லது சித்திரவதைக்குப்படவோ அல்லது பாரபட்சப்படுத்தப்படவோ விரும்பமாட்டார்கள் என்பதுடன் எந்தவொரு நபரும் தன்னுடைய பிள்ளைகளின் கல்வி மறுக்கப்படுவதனை விரும்ப மாட்டார்கள். நாங்கள் பெரும்பான்மையைச் சேர்ந்தவராய் இருப்பினும்சரி, சிறுபான்மையைச் சேர்ந்தவராய் இருப்பினும்சரி, நாங்கள் அனைவரும் இத்தகைய விடயங்களிலிருந்து நாம் பாதுகாக்கப்படக்கூடிய - உரிமையினால் எங்களது மனித கௌரவம் பாதுகாக்கப்படக்கூடிய சமூகங்களில் வாழ்வதற்கே விரும்புவோம்.
- எங்களுக்கு பல அடையாளங்கள் உள்ளன. நான் மத அல்லது இன பெரும்பான்மையினைத்தின் பகுதியொன்றாக இருக்கலாம், ஆனால் நான் வேறொருவகையான சிறுபான்மைக்கு சொந்தமாயும் இருக்கலாம் - உதாரணமாக, இயலாமையொன்றினைக் கொண்டிருப்பதனூடாக.

## *கருப்பொருள் – மேலைத்தேய விழுமியங்கள் மற்றும் சூழ்ச்சி*

***ஆட்சேபனை:*** மேலைத்தேய சக்திகள் தாம் மனித உரிமைகளுக்கான நியமங்களை மதிக்காதபோதிலும், ஏனைய நாடுகளின் எழும்புதலை வீழ்த்துவதற்காக மற்றும் ஊறுபடுத்துவதற்காக மனித உரிமைகளைப் பயன்படுத்துகின்றன. மனித உரிமைகள் வெறுமனே அரசியல் அதிகார விளையாட்டுக்களுக்கான கருவியொன்றே ஆகும்.

***சாத்தியமான பதில்கள்:***

- எவ்வளவு நல்ல கருவியாக இருப்பினும் அதனை முறைகேடாகப் பயன்படுத்த முடியும். மனித உரிமைகள் சிலநேரங்களில் அரசியல் அதிகார விளையாட்டுக்களில் பயன்படுத்தப்படுகின்றன. எந்தவொரு நாடும் மனித உரிமைகள் தொடர்பாக முழுநிறைவானப் பதிவுகளை கொண்டிருக்கவில்லை என்பதும் உண்மை (சில நாடுகள் ஏனையவற்றை விட சிறப்பான பதிவுகளைக் கொண்டுள்ள போதிலும்). சில அரசாங்கங்கள் உரிமைகளை மீறுவதாக ஏனைய அரசாங்கங்களை குற்றம் சாட்டிக்கொண்டே, வெளிப்படையான மனித உரிமை மீறல்களைப் புரியும். ஆனால், இது மனித உரிமைகளுக்கான சொந்தக்காரர்களாகிய எமக்கு - மனித உரிமைகள் முக்கியமானவையல்ல என்பதனை அர்த்தப்படுத்தாது. அவை எங்களது சுதந்திரம், பாதுகாப்பு மற்றும் நலன் தொடர்பானவை.
- சமுதாயத்தில் பல மனித உரிமை துஷ்பிரயோகங்கள் நிகழ்கின்றன – உதாரணமாக பாரபட்சம் மற்றும் வெறுப்புக் குற்றங்கள் வாயிலாக. அரசாங்கங்கள் செய்யத் தவறுகின்றபோதும், நாங்கள் பிரஜைகளாக எங்களுடைய சமுதாயங்களில் மனித உரிமைகளை நடைமுறையில் சாத்தியமாக்க பங்களிப்பு செய்ய முடியும். நாங்கள் ஒவ்வொருவரினதும் உரிமைகளுக்காக ஒன்றிணைந்து நிற்க முடியுமென்பதுடன் உரிமைகளை மதிப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளமையினை சவாலுக்குப்படுத்தவும் முடியும். நாங்கள் இதனை செய்கின்றபோது, மனித உரிமை மீறல்களைத் தொடர்ச்சியாக புரிவது அரசாங்கங்களுக்கு (மேலைத்தேய அல்லது வேறு) கடினமானதாக அமையும். அரசாங்கங்கள் அரசியல் விளையாட்டுக்கள் விளையாடுகின்றனவா என்பது இங்கு கேள்வியல்ல, மாறாக, எங்களுக்காகவும் எங்களுடைய சமுதாயங்களுக்காகவும் மனித உரிமைகளை நடைமுறை சாத்தியமாக்க நாம் என்ன செய்ய முடியும் என்பதே கேள்வியாகும்.

***ஆட்சேபனை:*** மனித உரிமைகள் அந்நியமானவை, மேலைத்தேய விழுமியங்கள் மற்றும் ஏகாதிபத்தியம்.

***சாத்தியமான பதில்கள்:***

- உலகின் பல பகுதிகளிலுள்ள வேறுபட்ட மதங்கள் மற்றும் நம்பிக்கைகளைச் சேர்ந்த பிரதிநிதிகளினாலேயே அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் ஆக்கப்பட்டது. அப்பிரதிநிதிகள் மனித உரிமைகள் என்பன மனித கௌரவம் மற்றும் எங்களுடைய நாளாந்த வாழ்க்கையில் நாம் கொண்டிருக்கக்கூடிய தேவைகள் பற்றியதாகும் என்பதனை வலியுறுத்தியிருந்தனர். பெரும்பாலும் உலகிலுள்ள அனைத்து நாடுகளும் மனித உரிமைகளை மதிப்பதற்கு, பாதுகாப்பதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு உடன்பட்டுக் கையொப்பமிட்டுள்ளன.
- மனித உரிமைகள் என்பன நாங்கள் எமது பாடசாலைகளில், பண்ணைகளில், தொழிலிடங்களில், வீடுகளில் மற்றும் அயலிடங்களில் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் மற்றும் ஏனையோரை எவ்வாறு நடத்த வேண்டும் என்பது பற்றியதாகும். எம்முடைய வாழ்க்கை மீது அதிகாரம் கொண்டுள்ள நபர்களினால் - வீட்டு உரிமையாளர்கள், தொழிற்தருநர்கள், ஆசிரியர்கள் அல்லது குடும்ப அங்கத்தவர்களினால்-செய்யப்படுகின்ற துஷ்பிரயோகத்திலிருந்தும், அதிகாரிகளினால் செய்யப்படுகின்ற துஷ்பிரயோகத்திலிருந்தும் அவை எம்மை பாதுகாக்கின்றன. அது எம் அனைவருக்கும் மிக அவசியமானதாகும்.
- அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் உருவாக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பார்த்து இக்கேள்விகளைக் கேளுங்கள். அவற்றுள் எவையேனும் நாம் மனிதத் தேவைகளாகக் கருதுகின்ற விடயங்களுடன் தொடர்புறுகின்றனவா? 'அந்நியமானவை' என நீங்கள் கருதுகின்ற குறிப்பான உரிமைகள் யாவை? எமக்கு அவசியமல்லாத ஏதாவது உரிமைகள் காணப்படுகின்றனவா?

***ஆட்சேபனை:*** மனித உரிமைகள் தனிநபர் சார்ந்தவை ஆகும். எமது கலாசாரத்தில், தனிநபர் உரிமைகளை விட கூட்டான கடமைகள் மற்றும் உறவு நிலைகள் மிக முக்கியமானவையாகும். தங்களுடைய பொறுப்புக்களை பொருட்படுத்தாமல் ஒவ்வொருவரும் தங்களுடைய உரிமைகளைக் கோரினால், எமது சமூகத்தின் கட்டமைப்பு உடைந்துவிடும்.

***சாத்தியமான பதில்கள்:***

- மனித உரிமைகள் தனிநபர் உரிமைகள் என்ற புள்ளியிலிருந்து தான் ஆரம்பமாகின்றன என்பது உண்மை. தனிநபர்களுக்கு உரிமைகள் காணப்பட வேண்டியது முக்கியமானதாகும் - ஏனெனில், தனிநபரென்றரீதியில் நாம் துஷ்பிரயோகங்களினால் இலகுவில் பாதிக்கப்படக்கூடியவர்களாக உள்ளோம், உதாரணமாக, ஒழுக்கக்கேடான அதிகாரிகளினால் மற்றும் துஷ்பிரயோகம் செய்கின்ற குடும்ப உறுப்பினர்களினால். அது நடைபெறும்போது, நாம் நீதி மற்றும் உதவிக்கான அணுகுதலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- மனித உரிமைகள் தனிநபரிலிருந்து ஆரம்பிக்கப்படினும்கூட, பல மனித உரிமைகள் நாம் ஒன்றாக செய்கின்ற விடயங்களைப் பாதுகாக்கின்றன. உதாரணமாக, எங்களுக்கு குடும்பமொன்றினை அமைத்துக் கொள்வதற்கான உரிமை உண்டு, எமக்கிருக்கின்ற ஒன்று கூடுவதற்கான உரிமை குழுக்களாக சந்திப்பதற்கான உரிமையினை எமக்கு தருகிறது, மற்றும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரமானது, விசுவாசிகளின் சமுதாயமொன்றிற்கு உரியவராயிருப்பதற்கான உரிமையினையும், மத சமுதாயங்களை உருவாக்குவதற்கான உரிமையினையும், ஒன்றாக வழிபடுவதற்கான உரிமையினையும் பாதுகாக்கின்றது. சுதேசிய மக்கள் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற சில குழு உரிமைகளும் காணப்படுகின்றன.
- மனித உரிமைகள் பொறுப்புக்களையும் உள்ளடக்குகின்றன. ஒவ்வொரு நபரும் ஏனைய நபர்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்வதற்கான மற்றும் அவற்றுக்கு மதிப்பளிப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளனர் - நபர்களை ஒழுங்காக நடத்துவதற்கும், எந்தவொரு நபரும் அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கு உட்படாத சமூகமொன்றினை உருவாக்குவதற்காக செயற்படுவதற்குமான பொறுப்பு. ஒவ்வொரு நபரும் அப்பொறுப்பினை ஏற்றுக் கொள்கின்றபோது, சமூகக் கட்டமைப்பு மிக உறுதியானதாகக் காணப்படும்.

## கருப்பொருள் – உபயோகமற்ற கருவி மற்றும் பொருந்தாத தன்மை

***ஆட்சேபனை***: அரசுகள் மனித உரிமைகளை மீண்டும் மீண்டும் மீறுகின்றன என்பதுடன் யாரும் அவற்றைத் தடுப்பதில்லை. அவை மக்களைப் பாதுகாக்கத் தவறுகின்றன. ஆனால், என்ன பயன்? அவை தாளில் எழுதப்பட்டுள்ள வெறும் சொற்களே.
***ஆட்சேபனை***: மனித உரிமைகள் மேலைத்தேயங்களில் உள்ளவர்களுக்கு அல்லது நகரங்களில் உள்ளவர்களுக்கு ஏற்றதாய் இருக்கலாம் - ஆனால் அவை கிராமத்து வாழ்க்கையில் எவ்விதத் தாக்கத்தினையும் செலுத்துவதில்லை.

***சாத்தியமான பதில்கள்:***

- மனித உரிமைகளை மீறுகின்ற அரசாங்கங்களைத் தடுத்து நிறுத்துவதற்கான சர்வதேச பொலிஸ் இல்லை. பெரும்பாலும், சர்வதேச சமுதாயம் பாரதூரமான மனித உரிமை மீறல்களை நிறுத்தத் தவறுகின்றன. அத்துடன், அரசாங்கங்கள் மனித உரிமைகளை வலுப்படுத்த சட்டங்கள் மற்றும் கொள்கைகளை இயற்றும்போது, அவை கள மட்டங்களில் சிறிதளவானத் தாக்கத்தினையே கொண்டுள்ளன. இருந்தபோதிலும், மனித உரிமைகள் பயனற்றவை அல்ல.
- மனித உரிமைகளை வெளியிலிருந்து அடைந்து கொள்ள முடியாது. மனித உரிமைகளை சாதாரண மக்களுக்கான நடைமுறை சாத்தியமான விடயமாக மாற்றுதலென்பது எங்களது சமுதாயங்களில் மற்றும் நாடுகளில் நாம் செய்ய வேண்டிய ஒரு செயன்முறையாகும். பெரும்பாலும், இச்செயன்முறை வலிமிகுந்ததாய், மெதுவானதாய் இருக்கும் குறிப்பாக – அதிகாரத்திலுள்ள நபர்கள் மாற்றத்தை விரும்பாதபோது இதற்கு பொறுமை, துணிவு மற்றும் சிறப்பான உபாயங்கள் அவசியம். மாற்றத்திற்கான பயணமானது பெரும்பாலும் அளவில் சிறிதான படிகளினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. பல விடயங்களை குறுகிய காலத்தில் அடைந்து கொள்ளுதல் யதார்த்தமல்லாததாக இருக்கும், ஆனால் இந்த பயணம் பெறுமதி வாய்ந்தது.
- நல்ல சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகள் என்பன சர்வதேச, தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களில் முக்கியமானவை, ஆனால் அடுத்த படிமுறையும் மிக முக்கியமானது அவை செயற்படுகின்ற நிறுவனங்களைக் கட்டியெழுப்புதலே ஆகும். அதாவது, விதிகளுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ள அனைவருக்கும் அவ்விதிகள் நன்கு தெரிந்து மற்றும் அவர்களால் அவை பின்பற்றப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல். கிராமிய மட்டத்திலிருந்து உச்ச நீதிமன்றம் வரையில் அனைத்து மட்டங்களிலும் விழிப்புணர்வு, திறன்கள் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான முறைமை என்பவற்றினைக் கட்டியெழுப்புதலை இது உள்ளடக்குகின்றது.
- சமுதாயத்தில் பல உரிமை துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன. மனித உரிமைகளை அடைந்து கொள்ளுதலானது, கள மட்டங்களிலுள்ள சாதாரண மக்கள் மத்தியில் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வினைக் கட்டியெழுப்பல் மற்றும் நடத்தைப்பாங்குகள், விழுமியங்கள் மற்றும் நடத்தைகளை நிலைமாற்றம் செய்தல் என்பனவற்றில் தங்கியுள்ளது.
- பல சாதனைகள் செய்யப்பட்டுள்ளன! அடிமைத்தனத்தினை ஒழிப்பதற்கான, அனைவருக்குமான வாக்குரிமையினைப் பெற்றுக்கொள்வதற்கான, பெண்களை வீட்டு வன்முறையிலிருந்து பாதுகாப்பதற்கான மற்றும் ஓரங்கட்டப்பட்டுள்ள இடங்களிலுள்ள குடும்பங்கள் சுகாதார பராமரிப்பு மற்றும் மின்சாரத்தினைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான சட்டங்களை இயற்றுவதற்கான பிரச்சாரங்கள் இவை மனித உரிமைகள் எவ்வாறு உலகெங்கிலுமுள்ள சாதாரண மக்களின் வாழ்க்கையினை சிறப்பாக்கியுள்ளது என்பதற்கான சில உதாரணங்களே ஆகும். கடந்த தலைமுறையினரின் போராட்டங்களினால் எமக்கு எத்தனை உரிமைகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்பதனை மறத்தல் இலகுவானதாகும்.

## கருப்பொருள் – மனித உரிமைகளுக்கான மதம்சார் ஆட்சேபனைகள்

*குறிப்பு*

மதம்சார் ஆட்சேபனைகள் சிக்கலான மற்றும் உணர்திறன்மிக்க விடயங்களுடன் தொடர்புற்றிருக்கும் என்பதுடன் மதப் பொருட்கோடல்கள் மற்றும் நியாயப்படுத்தல்கள் சூழமைவிற்கேற்ப பாரியளவில் வேறுபடும். கீழே பரிந்துரைக்கப்பட்டுள்ள பதில்கள் அடிப்படையான பொது ஆலோசனையினை வழங்குகின்றது என்பதுடன் அவை குறிப்பிட்ட மத போதனைகள் பற்றிய கலந்துரையாடல்களை உள்ளடக்கவில்லை.

உங்களுடைய குழுவில் இத்தகைய பிரச்சினைகளைக் கையாள்வது கடினமானதாக இருக்குமென நீங்கள் எதிர்பார்ப்பீர்களாயின், அமர்வினை நடத்துவதற்கு உங்களுக்கு உதவி செய்யும்பொருட்டு, ஆட்சேபனைகளைக் கொண்டிருக்கக்கூடிய நபர்களின் மதத்தினைச் சேர்ந்த வளவாளர் ஒருவரை அழையுங்கள். நீங்கள் அணுகக்கூடிய, மனித உரிமைகளுக்காகப் பணியாற்றுகின்ற மத அமைப்புக்கள் அல்லது தலைவர்கள் உங்களது சூழமைவில் இருக்கின்றனரா?

அபாயநேர்வினை மதிப்பிடுவதற்கு, வினாக்கள்/ஆட்சேபனைகளை எழுப்புகின்ற நபரின் நோக்கத்தினை கவனித்து பார்ப்பதும் முக்கியமானதாகும் - அவர்கள் தங்களது மதத்திற்கு உண்மையாக இருந்து கொண்டு மனித உரிமைகளுக்காக செயற்படமுடியுமா என அறிந்து கொள்கின்ற நேர்மையான ஆர்வத்துடன் கேட்கின்றனரா அல்லது முனைப்பாக கருத்துவேறுபாட்டினை ஏற்படுத்துவதற்காக கேட்கின்றனரா?

உங்களுக்கு தெரியாது எனவும், இப்பயிற்சி நெறி முழுவதிலும் நாங்கள் பேசப்போகின்ற விடயங்கள் அவர்களுடைய மதத்துடன் எவ்வாறு தொடர்புறுகின்றன என தொடர்ந்து சிந்திக்குமாறும் பங்குபற்றுநர்களுக்கு சொல்வதில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

**ம.அ.ந.சு மற்றும் இறையியல்**
பல மதங்களுக்கான ஆதாரங்களை <u>இங்கே</u> காணலாம்.

***ஆட்சேபனை***: மனித உரிமைகள் மனிதனால் உருவாக்கப்பட்டவை. நாங்கள் இறை விருப்பத்தினையும் சட்டத்தினையும் பின்பற்றுகின்றோம். எங்களுக்கு தேவையான அனைத்து பதில்களையும் எங்களுடைய மதம் வழங்குகின்றது எங்களுக்கு மனித உரிமைகள் தேவையில்லை!

***சாத்தியமான பதில்கள்:***

- மனித உரிமைகள் மனிதனால் உருவாக்கப்பட்டவையே. இருந்தபோதிலும், ஒவ்வொரு மத பாரம்பரியத்திலும், மனித உரிமைகளின் உள்ளடக்கங்கள், மனித கௌரவம், நீதி மற்றும் பொறுப்பு தொடர்பான தங்கள் மதங்களின் பிரதான போதனைகளை பிரதிபலிக்கின்றன என நம்புகின்ற பல அறிஞர்கள், தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இருக்கின்றனர். அநேகமாக, நாங்கள் மனித உரிமைகள் பற்றி ஒன்றிணைந்து ஆராயப் போகின்றமையினால், நாங்கள் எங்களுடைய மத பாரம்பரியங்களுடன் ஒத்திருக்கின்ற மனித உரிமைகளின் பொதுவான அடிப்படைக் கூறுகளை அறிந்து கொள்ள முடியும்.

- மனித உரிமைகள் மத போதனைகளுக்கான வேறுபட்ட பணியொன்றினை ஆற்றுகின்றன. பல்வேறு மதங்களைச் சேர்ந்த மற்றும் மத சார்பில்லாத மக்கள் அருகருகே வாழ்கின்ற உலகொன்றில், நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து கட்டியெழுப்ப விரும்புகின்ற சமூகமொன்று பற்றிக் கதைப்பதற்கான பொதுவான அடிப்படையொன்றினை மனித உரிமைகள் எமக்கு தருகின்றது. அத்துடன், அவை அரசாங்கங்கள், மனித கௌரவம் மற்றும் நீதி என்பனவற்றை மதிக்கின்றன என்பதனை உறுதிப்படுத்தும்பொருட்டு அவற்றை பொறுப்புகூறச் செய்வதற்காக நாங்கள் பயன்படுத்தத்தக்க சட்டக் கட்டமைப்பொன்றினையும் வழங்குகின்றன.

- பல மதங்கள் மற்றும் நம்பிக்கைகளின் பிரதிநிதிகள் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தினை ஆக்குவதில் ஈடுபட்டிருந்தனர் என்பதுடன் அவ்வரைபுகள் ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பினர்களினாலும் தீவிரமாக விவாதிக்கப்பட்டன. இவ்விவாதங்களுள் சில, முன்மொழியப்பட்டுள்ள உரிமைகள் எவ்வாறு மத மற்றும் மனிதாபிமான விழுமியங்களுடன் தொடர்புறுகின்றன என்பது தொடர்பாக அமைந்திருந்தன. உண்மையில் உலகளாவியதாக உள்ள - மதம் அல்லது சித்தாந்தங்களைப் பொருட்படுத்தாது அனைவரும் இணங்கக்கூடிய உரிமைகளை வரையறுக்கின்ற பிரகடனமொன்றினை - ஆக்குவதே இலக்காக அமைந்திருந்தது.

***ஆட்சேபனை***: என்னால் மனித உரிமைகள் மற்றும்/அல்லது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்காக செயற்பட முடியாது, ஏனெனில், அவை என்னுடைய மதத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

நபர்கள் உடன்படாத குறிப்பிட்ட உரிமைகள் அல்லது உரிமைகளை அமுல்படுத்துகின்ற வழிமுறைகள் பற்றிய கலந்துரையாடல்களினால் அமர்வுகள் இலகுவாக தடம் புரளலாம். ஆட்சேபிக்கின்றவர் கரிசனை கொண்டுள்ள குறிப்பான உரிமைகள் யாவை என கேளுங்கள். குறிப்பிட்ட அவ்வுரிமை தொடர்பான உடன்பாட்டினைப் பெற்றுக் கொள்கின்றமையானது, பயிற்சி நெறி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பிரதானமானதாக இல்லாதபோது, உடன்பாடு காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக மீளக்கவனம் செலுத்துங்கள் மற்றும் இணக்கத்திற்கான பகுதியினை படிப்படியாக அதிகரித்துக் கொள்ளுங்கள்.

***சாத்தியமான பதில்கள்:***

- ஆட்சேபிப்பவரின் மத பாரம்பரியங்களின் விழுமியங்களைப் பிரதிபலிக்கின்ற மனித உரிமைகள்/மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் அம்சங்கள் உள்ளனவா என கேளுங்கள். அத்துடன், கையாளப்பட வேண்டுமென அவர்கள் விரும்புகின்ற மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் ஏதேனும் உள்ளனவா எனவும் கேளுங்கள். பயிற்சி நெறியின் நோக்கம், நாம் அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் உடன்பட்டுக் கொள்ள வேண்டும் என்பதல்ல, மாறாக,

நாம் எங்களுடைய சமுதாயங்களிலுள்ள பிரச்சினைகளைக் கையாள்வதற்கான உறுதியான மாற்றமுண்டாக்குநர்களாக உருவாவதே ஆகும்.

- குறிப்பிட்ட உரிமைகளின் மீறல்கள் தனிநபர்கள், குழுக்கள் மற்றும் சமூகத்தில் கொண்டிருக்கக்கூடிய திட்டவட்டமான தாக்கம் குறித்த உதாரணங்களை வழங்குவதற்கு முயற்சியுங்கள். உருவாக்கப்படுகின்ற ஊறு எவ்வாறு எங்களுடைய மதங்களில் காணப்படுகின்ற மனித கௌரவம் மற்றும் அன்பு தொடர்பான கருத்துக்களுடன் தொடர்புறுகின்றன?
- அநேகமாக, சட்டங்களினூடாக உரிமைகளை மட்டுப்படுத்துகின்றமையானது ஒழுக்கநெறிகள் மற்றும் ஒழுக்கங்களை மேம்படுத்துவதற்கான சிறந்த முறையானதாக இல்லை?
- குழு ஆட்சேபிக்கின்ற உரிமை தொடர்பாக அவர்களுடைய மதம் (மதங்கள்) என்ன சொல்கின்றன மற்றும் அதனைப் பிரயோகிக்கின்ற நபர்களுக்கு என்ன நடக்கும் என்பதனை குழுவிடம் கேளுங்கள். ஒரேயொரு பொருத்தமான பகுதி அல்லது விளக்கம்தான் இருக்கின்றதா? அவ் உரிமையினை எவ்வழியிலேனும் ஆதரிக்கின்ற ஏதேனும் பிரதிகள், விழுமியங்கள் அல்லது விளக்கங்கள் உள்ளனவா? போதனைகள் காலத்தினடிப்படையில் மாற்றமடைந்துள்ளனவா?
- ஒரே வகையான மத பெரும்பான்மையினரைக் கொண்டுள்ள நாடுகள் மனித உரிமைகள் மற்றும் ம. அ. ந. சு இனை மிகவும் வேறுபட்ட முறையில் கையாளுகின்றன. மனித உரிமைகள் தொடர்பாக சட்டமாக்குவதற்கு, ஒரேயொரு முஸ்லிம், பௌத்த அல்லது கிறிஸ்தவ வழிமுறை இல்லை.

***ஆலோசனைக் குறிப்பு!*** இத்தகைய கலந்துரையாடல்களை நடத்திச் செல்வதற்கு உதவி செய்யுமாறு மனித உரிமைகளுக்கான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ள மதத் தலைவர் அல்லது இறையியல் நிபுணரைக் கோருங்கள்!

***வினா***: ஏனைய மதங்களுக்கான சம உரிமைகளை நான் ஏற்றுக் கொள்ளாமையானது, அனைத்து மதங்களும் சமமான அளவில் உண்மையானது என்பதாக நான் சிந்திக்கின்றேன் என்பதனை கூறவில்லையா? அனைவருக்குமான மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்காக நான் செயற்பட வேண்டுமென்பதற்காக என்னுடைய மதம் மட்டும்தான் உண்மையான ஒரே மதமென்ற என்னுடைய சிந்தனையினை நான் விட்டுக்கொடுக்க வேண்டுமா?
***ஆட்சேபனை***: எங்களுடைய மதம் உயர்வானதாக இருக்கின்றபோது, நாம் ஏன் சம உரிமைகளை வழங்க வேண்டும்?

***சாத்தியமான பதில்கள்:***

- மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரமானது உங்களுடைய மதமொன்றே உண்மையான வழியாகும் என்பதனை நம்புவதற்கான உங்களது உரிமையினைப் பாதுகாக்கின்றது. அத்துடன், அது ஏனையோர் தங்களுடைய மதமொன்றே உண்மையான வழியாகும் என்பதனை நம்புவதற்கான அவர்களது உரிமையினையும் பாதுகாக்கின்றது. மத உண்மைகள் தொடர்பான கேள்விகள் மீதான தீர்மானங்களை நிறைவேற்றுகின்ற இடமாக மனித உரிமைகள் அல்லது சர்வதேச சட்டம் அமைவதில்லை. மனித உரிமைகள் மனித கௌரவம் பற்றிய நெறிகளின் அடிப்படையில் மக்களை மையப்படுத்துகின்றன. அவை, நாங்கள் ஏனைய ஒவ்வொருவரையும் எவ்வாறு மரியாதையுடனும் கௌரவத்துடனும் நடத்த வேண்டுமென்பதற்கான குறைந்தபட்ச நியமங்களை தாபிப்பதனூடாக, எங்களுடைய அனைத்து வேறுபாடுகளுடனும் நாம் அருகருகே வாழக்கூடிய ஒரு பாதுகாப்பான இடத்தினை உருவாக்குகின்றன.
- பல மதங்கள் மனித கௌரவத்தின் முக்கியத்துவத்தினை வலியுறுத்திக்காட்டுவதுடன், 'நாங்கள் எவ்வாறு நடத்தப்பட விரும்புகின்றோமோ அதேபோல நாம் ஏனையோரை நடத்த வேண்டும்' என்ற பொன் விதியின் ஏதோ ஒரு வடிவத்தினை தம்மில் உள்ளடக்கியுள்ளன. தங்களுடைய மதங்களில் இப்பொன் விதி காணப்படுகின்றதா என்றும், இதனுடன் தொடர்புடைய போதனைகளைப் பகிர்ந்து கொள்ளுமாறும் பங்குபற்றுநர்களிடம் கேளுங்கள். நபர்களுக்கு சம உரிமைகள் காணப்படாவிடின், இப்பொன் விதிக்கமைய வாழ்தல் சாத்தியமானதா என பங்குபற்றுநர்களிடம் கேளுங்கள்?
- மனித உரிமைகளின் குறைந்தபட்ச நியமங்களுக்கு அமைவாக நபர்களை சமமாக நடத்துகின்றமையானது நாம் அவர்களின் நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்வதாக அமையாது. நாம் பாரபட்சம், வன்முறை அல்லது உரிமைகளை மறுத்தல் ஆகிய எதனையும் செய்யாது, ஏனைய நபர்களின் நம்பிக்கைகளுடன் அடிப்படையில் உடன்படாதிருக்க முடியும். மதத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமைக்கான மட்டுப்பாடுகள், குறிப்பிட்ட அந்நடைமுறை ஏனைய நபர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள், பொது சுகாதாரம் என்பனவற்றுக்கு அச்சுறுத்தலாக அமைகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே அனுமதிக்கப்படுகின்றன.
- எமக்கு வேண்டுமென நினைக்கின்ற, ஆனால், ஏனையோருக்கு மறுக்கப்பட வேண்டுமென நாம் நினைக்கின்ற ஏதாவது உரிமைகள் உண்டா? நாங்கள் ஏனைய நபர்களின் உரிமைகளை மறுப்போமாயின், எங்களுடைய உரிமைகளை மறுப்பதில் எவ்வித பிரச்சினையும் இல்லை என அரசாங்கம் நினைக்கின்ற ஒரு தருணம் வராதென நாம் எவ்வாறு உறுதி கொள்ள முடியும்? அனைவருக்கும் உரிமைகள் இல்லாதவரையில், யாருக்கும் உரிமைகள் இருக்காது. மாறாக, எம்மிடம் காணப்படுவது அரசாங்கம் எமக்கு தற்காலிகமாக வழங்கியுள்ள சட்ட சிறப்புரிமைகள் ஆகும். இவை அரசின் நோக்கங்களுக்கு ஏற்பானதாக உள்ளபோது அவை நீக்கப்பட முடியும்.

- ஏனைய நாடுகளில் சிறுபான்மையினராக வாழ்கின்ற எமது மதங்களைச் சேர்ந்த நபர்களைப் பாதுகாப்பதும் மனித உரிமைகளே. எமது நாட்டிலுள்ள பெரும்பான்மையினர் அல்லது அரசு யாருக்கு உரிமைகள் இருக்க வேண்டும் மற்றும் யாருக்கு இருக்கக்கூடாது என்பதனைத் தீர்மானிக்க முடியும் என நாம் கூறுவோமாயின், அப்போது நாங்கள் எங்களுடைய மதங்களைச் சேர்ந்த நபர்களின் உரிமைகளை ஏனைய அரசுகள்/பெரும்பான்மையினர் மறுப்பதில் எமக்கு எவ்வித பிரச்சினைகளும் இல்லை என சொல்வதாக அமையும்.

## கருப்பொருள்: சுதந்திரமும் கட்டுப்பாடும்

***வினா***: குறிப்பிட்ட நபர்கள் எங்களுடைய கலாசாரத்திற்கு பொருந்தாத வழிகளில் தங்களுடைய மதங்களை நடைமுறைப்படுத்துகின்றனர். அம்மதத்தின் அனைத்து நபர்களும் அவ்வழியில் நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை, ஆகவே, அது அத்தியாவசியமானதல்ல என்பது வெளிப்படையானதாகும். அது அத்தியாவசியமானதல்ல எனின், நாங்கள் அதனைத் தடுக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
***வினா***: மத அதிகாரிகள் குறிப்பிட்ட மதமொன்று குறிப்பிட்ட ஒரு வழிமுறையில்தான் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென கூறுகின்றபோது, நாங்கள் ஏன் அதனை வித்தியாசமாகச் செய்வதற்கு நபர்களுக்கு அனுமதியளிக்க வேண்டும்?

***சாத்தியமான பதில்கள்:***

- நபர்கள் குறிப்பிட்ட நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதற்கு, அவர்கள் அந்நடைமுறைகள் தங்களுடைய மதத்திற்கு இன்றியமையாதன என நிரூபிக்க தேவையில்லை. நாங்கள் சுதந்திரமானவர்களாக இருக்க வேண்டும். எங்களுடைய மதத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான எமது சுதந்திரத்தினை மட்டுப்படுத்த வேண்டுமாயின், முன்மொழியப்பட்டுள்ள மட்டுப்பாடானது அவசியமானது என, உதாரணமாக, பொது சுகாதாரம் அல்லது ஏனைய நபர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அவசியமானதென அரசு நிரூபிக்க வேண்டும். சுதந்திரத்தினை அவசியமற்ற மட்டுப்பாடுகளினால் பதிலீடு செய்கின்றமையானது, வெறுப்பு மற்றும் சமூகக் குழப்பங்களுக்கு வழிவகுக்கும், அரசிற்கு மிகையான மற்றும் எதேச்சாதிகாரமான அதிகாரத்தினை வழங்கும் மற்றும் சமூகத்தினை ஜனநாயகத்திலிருந்து சர்வாதிகாரம் நோக்கி நகர்த்தும்.
- நீங்கள் வேறொரு நாட்டிற்கு செல்ல வேண்டியதாயிற்று என கற்பனை செய்துக் கொள்ளுங்கள். நீங்கள் இங்கு மதத்தினை நடைமுறைப்படுத்திய வழிகளில் உங்களது மதத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமையினை அச்சமூகம் மறுத்தால் அல்லது உங்களுடைய மனசாட்சிக்கு எதிரானதொரு முறையில் அம்மத நடைமுறையினை பின்பற்றச் சொன்னால் நீங்கள் எவ்வாறு உணர்வீர்கள்?
- மதங்கள் மகத்தான அளவில் உள்ளார்ந்தரீதியாக வேறுபட்டவை. எந்தவொரு குறிப்பிட்ட மதத்திலும் விடயங்களைச் செய்வதற்கு வேறுபட்ட வழிமுறைகள் காணப்படுகின்றன என்பதுடன் மிக அரிதாகவே அனைத்து விசுவாசிகளினாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு மத அதிகாரம் காணப்படும். அதிகரித்துவருகின்ற நகர்திறன்மிக்க உலகில், விடயங்களைச் செய்வதற்கான வேறுபட்ட வழிமுறைகளைக் கொண்டுள்ள நபர்கள் அருகருகே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

## கருப்பொருள்: குற்றம் மற்றும் நல்லிணக்கம்

***வினா***: குற்றம் சுமத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான உரிமையொன்று உள்ளதா?
***ஆட்சேபனை***: சிறுபான்மையினர்/சுதந்திர சிந்தனையாளர்கள் தங்களது மதங்களைப் பற்றி சுதந்திரமாகப் பேசுவதற்கு அல்லது அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதிப்போமாயின், அது எங்களுடைய விழுமியங்கள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டினை அழித்துவிடும்.
***ஆட்சேபனை***: எந்தவொரு நபரும் ஏனைய நபர்களின் மத உணர்வுகளை புண்படுத்தக்கூடாது. நாம் மத நிந்தனை மற்றும் ஏனைய புண்படுத்துகின்ற பேச்சு அல்லது நடத்தையினை தடை செய்ய வேண்டும். இதுவே நாம் நல்லிணக்கத்தினைப் பேணக்கூடிய மற்றும் புனிதத்தன்மையினைப் பாதுகாக்கக்கூடிய வழிமுறையாகும்.
***ஆட்சேபனை***: எங்களுடைய மதம் எதிர்மறையான வழிகளில் சித்தரிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் - அது பாரபட்சத்திற்கு வழிவகுக்கும்.

***சாத்தியமான பதில்கள்:***

- சர்வதேச சட்டத்திற்கமைய, குறிப்பிட்ட நடைமுறை ஏனையவர்களுடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை ஊறுபடுத்தாத வரையில், ஒவ்வொருவரும் தங்களுடைய நம்பிக்கைகளை சுதந்திரமாக நம்புவதற்கு, நடைமுறைப்படுத்துவதற்கு மற்றும் வெளிப்படுத்துவதற்கான உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும். சர்வதேச சட்டம் நாங்கள் உடன்படாத விடயங்களைப் பார்ப்பதிலிருந்து மற்றும் கேட்பதிலிருந்து அல்லது நாங்கள் மதிக்கின்ற விடயங்கள் விமர்சிக்கப்படுவதிலிருந்து எம்மைப் பாதுகாக்கவில்லை. எம்முடைய உணர்வுகள் புண்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பினைப் பெறுவதற்கான மனித உரிமையொன்று இல்லை.
- சமூக நல்லிணக்கத்தினைப் பாதுகாக்கும்பொருட்டு, புண்படுத்துகின்ற பேச்சு மற்றும் நடத்தைகளைத் தடை செய்கின்றமையானது தர்க்கரீதியில் மற்றும்

ஒழுக்கரீதியில் சரியானதாகப் பார்க்கப்படலாம். எவ்வாறெனினும், எது புண்படுத்தத்தக்கது என வரையறுத்தல் சாத்தியமற்றதாகும் - சில நபர்கள் தங்களுடைய சொந்த அபிப்பிராயங்கள் தவிர்ந்த வேறு அபிப்பிராயங்கள் இருப்பதனாலேயே புண்படுத்தப்படுகின்றனர். சர்வதேச சட்டத்திற்கமைய, வெறுப்பு மற்றும் வன்முறையினைத் தூண்டுகின்ற வெறுப்புப் பேச்சே தடை செய்யப்பட வேண்டும். இறை நிந்தனை மற்றும் மத எதிர்ப்பு சட்டங்கள் மற்றும் 'சமூக நல்லிணைக்கத்தினைப் பாதுகாத்தல்' என்பன பொதுவாக இதனைவிட மிகப் பரந்ததாக உள்ளன. இவை:

– எது சட்டமுரணானதாகக் கருதப்படுகின்றது என்பதனை அறிந்துகொள்வதனை கடினமாக்குகின்றவகையில் தெளிவற்று காணப்படுகின்றன.
– பெரும்பான்மையினரின் கண்ணோட்டத்திலிருந்து குற்றத்தினை வரையறுத்தல் (நடைமுறையில் அல்லது கருத்தேற்பில்).
– துஷ்பிரயோகம் மற்றும் தவறான குற்றச்சாட்டுதல்களுக்கு உட்படக்கூடியதாய் உள்ளன– நீங்கள் எதனையும் சொல்லவில்லை என்பதனை நிரூபிப்பது கடினமானதாகும்.
– பெரும்பான்மையினருக்கு பிடிக்காத நடைமுறைகளை அமைதியானமுறையில் வெளிப்படுத்துகின்ற நபர்களையும் நாம் தண்டிக்க வேண்டும் என்ற கருத்தினை ஆதரிப்பதனூடாக வன்முறையினை ஊக்குவிக்கினறது.
– நபர்கள் தங்களுடைய நம்பிக்கைகளை அமைதியானமுறையில் வெளிப்படுத்துகின்றபோது, சமூகக் குழப்பங்களுக்கு பொறுப்பானவர்களாகக் கருதப்படுகின்றனர். அவ் அமைதியான வெளிப்பாட்டிற்கான எதிர்வினையாக வெறுப்பு மற்றும் வன்முறையின் மூலம் எதிர்த்தவர்களே பொறுப்பினை ஏற்க வேண்டும்.

- புனிதத்தன்மையினை பாதுகாக்கும்பொருட்டு, மதங்கள் மற்றும் மத அமைப்புக்களுக்கான கேலி மற்றும் விமர்சனங்களைத் தடை செய்தல் சரியானதென தோன்றலாம். எவ்வாறெனினும், மத அமைப்புக்களை உறுதியானவையாக மற்றும் மிகவும் நம்பிக்கைக்குரியதாக ஆக்குவதில் வெளியக மற்றும் உள்ளக விமர்சனங்கள் முக்கிய வகிபங்காற்றுகின்றன. மத நிறுவனங்கள் நபர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளன என்பதுடன் அந்நபர்கள் சிலவேளைகளில் விடயங்களைத் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். பிரச்சினைகள் பற்றி பயமின்றிக் கதைக்கும்போது மாத்திரமே அவற்றைக் கையாள்வது சாத்தியமாகின்றது. மத நிறுவனங்களில் இடம்பெறுகின்ற சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக அண்மைய வருடங்களில் எழுப்பப்பட்ட அவதூறுகள் இச்சுதந்திரத்திற்கான முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றன.
- 'நல்லிணக்கம்' என்பது சிறுபான்மையினர் மற்றும் சுதந்திர சிந்தனையாளர்கள் தங்களுடைய நம்பிக்கைகள் மற்றும் அடையாளங்கள் தொடர்பாக அமைதியைப் பேணுகின்ற போலி பாசாங்கொன்றின் மீது கட்டியெழுப்பப்படின், அது பெரும்பான்மையினரால் மட்டும் அனுபவிக்கப்படுகின்ற நல்லிணக்கமாகாதா? பெரும்பான்மையினர் மாத்திரம் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு இருப்பதாக உணர்கின்றபோது, எங்களால் நீண்ட காலத்திற்கு நிலையான, அமைதியான சமூகமொன்றினைக் கொண்டிருக்க முடியுமா?
- புண்படுத்தப்படுவதாக உணர்வதிலிருந்து பாதுகாப்பதற்கான மனித உரிமையொன்று இல்லை. உண்மையில், விமர்சனம் மற்றும் வேறுபட்ட,முரணான அபிப்பிராயங்களுக்கான சகிப்புத்தன்மை என்பன ஆரோக்கியமான சமூகமொன்றிற்கு பிரதானமானவையாகும். எவ்வாறெனினும், அரசு, ஊடகம் மற்றும்/அல்லது பெரும்பான்மை சமுதாயங்கள், சிறுபான்மை மதங்கள் தொடர்பான திட்டமிடப்பட்ட நேர்மறையான மற்றும் முரண்பாடான கருத்துக்களை சித்தரிக்கின்றபோது, அது அம்மதத்தினை பின்பற்றுபவர்களுக்கெதிரான பாரபட்சம் மற்றும் வன்முறைக்கு வழிவகுக்கின்றது. வெறுப்பு பேச்சாக அல்லது வன்முறைக்கான தூண்டுதலாக அமையாத தனிநபர் அறிக்கைகள் தொடர்பிலும் இதுவே நிகழ்கிறது. மனித உரிமைகளுக்கான மதிப்பு மற்றும் சமூகத்தின் ஸ்திரத்தன்மை என்பன அரசு மற்றும் ஊடகம் நெறிமுறையுடனும் பக்கச்சார்பற்றும் நடந்து கொள்வதில் தங்கியுள்ளது. அரசியலில், ஊடகங்களில் மற்றும் பொது கலந்துரையாடல்களில் நெறிமுறைகளை மேம்படுத்துவதற்காக செயலாற்றல் மற்றும் வெறுப்புப் பேச்சு மற்றும் வன்முறைக்கான தூண்டலிற்கு உடனடியாக பதிலிறுத்தல் என்பன மிகவும் இன்றியமையாதன ஆகும்.

# பின்னூட்டல்கள் மற்றும் அனுமதிகள்

***உங்களுடைய மாற்றமுண்டாக்குநர்களின் கதைகளை எங்களுக்கு சொல்லுங்கள் மற்றும் உங்களுடைய பின்னூட்டல்கள் மற்றும் ஆலோசனைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!***

நீங்கள் இவ் வளங்களை எவ்வாறு பயன்படுத்துகின்றீர்கள் மற்றும் இவ் வளங்கள் மாற்றத்திற்கான செயல்களை முன்னெடுப்பதற்கு மக்களுக்கு பங்களிப்பு செய்கின்றதாயின் அது எவ்வாறு செய்யப்படுகின்றது என்பது தொடர்பாக அறிந்துகொள்ள நாம் விரும்புகின்றோம்! எது சிறப்பாக செயற்படுகின்றது மற்றும் நாங்கள் மேம்படுத்திக்கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை? உங்களுடைய பின்னூட்டல்களை எங்களோடு இங்கே

பகிர்ந்துக் கொள்ளுங்கள்: www.forb-learning.org/changemakers-your-experiences

உங்கள் ***கதைகளையும் பின்னூட்டல்களையும்*** இங்கு பகிர்க.

***இவ்வளங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் நான் யாரிடமாவது அனுமதி கேட்க வேண்டுமா அல்லது யாருக்காவது அறிவிக்க வேண்டுமா?***

இல்லை. இவ் நெறியாளருக்கான வழிகாட்டியின் மற்றும் இதனோடிணைந்துள்ள அனைத்து துணைவளங்களினதும் உள்ளடக்கங்கள் எந்தவொரு நபருக்கும் இலவசமாகக் கிடைக்கக்கூடியதாக இருக்கும். அனைவருக்குமான மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை மேம்படுத்துவதற்காக மற்றும் ஏனையோருக்கு கற்றுக் கொடுப்பதற்காக இவற்றை யாரும் மாற்றியமைத்துக் கொள்ளலாம் அல்லது பயன்படுத்திக் கொள்ளலாம்.

இத்தகைய வளங்களைப் பயன்படுத்துகின்றபோது தயவு செய்து மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினைக் கற்றுக்கொள்வதற்கான தளம் பற்றி சொல்லி அத்துணை வளங்கள் அத்தளத்தினால் ஆக்கப்பட்டன என்பதனை சுட்டிக்காட்டுங்கள். www.forb-learning.org/ta/ இத்தளத்தினூடாக அவர்கள் மேலதிகத் தகவல்கள், கற்றல் ஆவணங்கள் மற்றும் இயங்கலை பயிற்சி நெறிகளைப் பார்க்க முடியும்.

***இவ்வழிகாட்டியிலுள்ள குறிப்பான பயிற்சிகளை வேறு வெளியீடுகளில் உள்ளடக்குவதற்கு நான் அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமா?***

இல்லை. நீங்கள் இவ்வழிகாட்டியிலுள்ள பயிற்சிகளை அல்லது அப்பயிற்சிகளைத் தழுவி ஆக்கப்பட்ட அல்லது மொழிபெயர்க்கப்பட்ட பயிற்சிகளை வெளியீடுகளில் உள்ளடக்கலாம். அனுமதியில்லாது விளக்க கதைகளை பயன்படுத்த இயலாது. தயவுசெய்து, அவை மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினைக் கற்றுக்கொள்வதற்கான தளத்தினால் ஆக்கப்பட்டவை என்பதனை கூறி மூலத் துணை வளங்களுக்கானத் தொடுப்பினை பின்வருமாறு இணையுங்கள்.

மூலம்: உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறி, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினைக் கற்றுக்கொள்வதற்கான தளம் www.forb-learning.org/ta/changemakers

உங்களுடைய வெளியீடுகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு நாங்கள் விரும்புகின்றோம்! தகவல்களைப் பகிர்ந்துக் கொள்வதற்கு தயவு செய்து பின்னூட்டல் படிவத்தினைப் பயன்படுத்துங்கள். https://www.forb-learning.org/changemakers-your-experiences

***நெறியாளர்களுக்கான வழிகாட்டி மற்றும் அதனோடிணைந்துள்ள துணை வளங்களை நான் எனது மொழியில் மொழிபெயர்த்து வெளியிடலாமா?***

ம.அ.ந.சு தொடர்பான கற்றல் துணை வளங்கள் ஆங்கிலம் பேசாத மக்களுக்கும் கிடைக்கக்கூடியதாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தினை நாங்கள் அறிந்துள்ளோம். நீங்கள் அதனை சுதந்திரமாக மொழிபெயர்த்து அதன் உள்ளடக்கங்களின் பகுதிகளைப் பயன்படுத்தலாம். நீங்கள் நெறியாளருக்கான பயிற்சி நெறி முழுவதையும், வழிகாட்டியினையும் மொழிபெயர்க்க விரும்பினால், கீழுள்ள மின்னஞ்சல் முகவரியினூடாக எம்மைத் தொடர்பு கொள்ளவும். info@forb-learning.org

***பதிப்புரிமை***

இவ்வெளியீடானது Creative Commons Copyright: CC-BY-SA இன் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ளது. அதாவது ம.அ. ந.சு இன் கற்றல் தளத்திற்கு அதன் கௌரவத்தினை வழங்கும் வரை அதன் உள்ளடக்கங்களை சுதந்திரமாக பயன்படுத்தவும் சூழலுக்கு ஏற்ப தழுவி அமைக்கவும் முடியும். அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டவற்றினை எம்மோடும் இப்பதிப்புரிமையின் கீழ் பயன்படுத்தும் ஏனையோரோடும் பகிருங்கள்.

விளக்கப்படங்கள், நெறியாளருக்கான வழிகாட்டி மற்றும் 'புல்லாங்குழல் மற்றும் தாளவாத்தியத்தின் பாடல்கள்' என்ற கதை என்பனவற்றின் விளக்கப்படங்கள் Creative commons licence: CC-BY-NC-ND இன் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ளது. முன் அனுமதியின்றி வெளியீடு செய்யவோ மாற்றப்படவோ முடியாதிருக்கும். தயவாக எம்மைத் தொடர்பு கொள்க.

இதற்கான பதிப்புரிமையினை ம.அ.ந.சு இனைக் கற்றுக்கொள்வதற்கான தளத்தின் பின்னாலுள்ள NORFORB வலையமைப்பு சார்பில் SMC Faith in Development, 2021 கொண்டுள்ளது.

# பகுதி B

## பாட நெறி

# அமர்வுகள் 1-5

## பகுதி 1: எமக்குத் தேவையானவற்றைத் தயார்ப்படுத்திக் கொள்ளல்

உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியானது, பங்குபற்றுநர்கள் தங்களுடைய சமுதாயங்களில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் (ம. அ. ந. சு.) தொடர்பில் மாற்றத்தினை ஏற்படுத்துபவர்களாக மாறுவதற்கு அவர்களைத் தயார்படுத்துகின்றது. மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்கான மாற்றத்தினை ஏற்படுத்துகின்ற செயன்முறையானது நீண்ட பயணமொன்றாகும் என்பதுடன் அது சில நேரங்களில் கடினமானதுமாகும். அது தயாராய் இருப்பதற்கு உதவி செய்கின்றது!

பயிற்சி நெறியின் பகுதி 1 ஆனது, 'எங்களை நாங்கள் தயார்படுத்திக் கொள்வதனை' மையப்படுத்துகின்றது – அறிவு மற்றும் நடத்தைப் பாங்குகளை விருத்தி செய்வது தொடர்பாக. ஆகவே, எங்களுடைய மூளை மற்றும் இதயங்கள் மாற்றத்தை நோக்கியதொரு பயணத்திற்கு தயாராகிவிடும். பொதுவாக மனித உரிமைகள் தொடர்பாக, அதிலும் குறிப்பாக ம.அ.ந.சு. தொடர்பாக தாம் கொண்டுள்ள நடத்தைப் பாங்குகள் பற்றி அறிந்து கொள்வதற்கான மற்றும் ஆராய்வதற்கான வாய்ப்பினையும் மற்றும் அவர்களுடைய சொந்த அடையாளங்களிலிருந்து வேறுபட்டுள்ள அடையாளங்களைக் கொண்டுள்ள மக்கள் தொடர்பாக அவர்களுடைய நடத்தைப் பாங்குகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதனை சிந்திப்பதற்கான வாய்ப்பினையும் இது வழங்குகின்றது. இது சூழமைவுகளைப் பகுப்பாய்வு செய்கின்ற திறன்களையும் வழங்குகின்றது.

அமர்வு 1-5 வரையான ஒவ்வொரு அமர்வும் அதற்கு முன்னைய அமர்வில் கற்றுக்கொண்டவை மற்றும் பிரதிபலிப்புக்களைக் கட்டியெழுப்புகின்ற செயன்முறையொன்றினை வடிவமைக்கின்றன.

- அமர்வு 1- மனித உரிமைகளைப் பொதுவாக அறிமுகப்படுத்துகின்றது.
- அமர்வு 2- மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினைக் குறிப்பாக அறிமுகப்படுத்துகின்றது.
- அமர்வு 3- எங்களுடைய அடையாளங்கள் மற்றும் சிறப்புரிமைகள் மற்றும் பாதக நிலைகளுடன் தொடர்புடைய விடயங்களை ஆராய்வதனை மையப்படுத்துகின்றது.
- அமர்வு 4- ம.அ.ந. சு இன் மீறல்களை ஆராய்வதுடன், அம்மீறல்களை அடையாளப்படுத்துகின்ற பயிற்சிகளைப் பங்குபற்றுநர்கள் செய்வதனை இயலுமானதாக்குகின்றது,
- அமர்வு 5- பங்குபற்றுநர்கள் தங்களது சமுதாயங்களிலுள்ள ம.அ.ந.சு.உடன் தொடர்புடைய பிரச்சினைகளை அடையாளங்கண்டு, தங்களுடைய சொந்த சூழமைவிற்கான ம.அ.ந.சு பகுப்பாய்வினை விருத்தி செய்வதனை இயலுமானதாக்குகின்றது.

இவ் அமர்வுகளிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற கற்றல் மற்றும் பிரதிபலிப்புக்கள் என்பன இப்பயிற்சி நெறியின் 2 ஆம் பகுதிக்கான முக்கிய அடித்தளத்தினை வழங்குகின்றது. 2 ஆம் பகுதியானது, எமது சமுதாயங்களில் மாற்றத்தினை நோக்கிய பயணங்களைத் திட்டமிடுதல் தொடர்பிலும் மனித உரிமைகளை மற்றும் செயற்திட்டமிடலை மேம்படுத்துவதற்கு நாம் பயன்படுத்தக்கூடிய உத்திகள் தொடர்பிலும் அவதானம் செலுத்துகின்றது. பகுதி 2 இலுள்ள அனைத்து அமர்வுகளிலும், அமர்வு 5 இல் விருத்தி செய்யப்படுகின்ற சூழமைவுப் பகுப்பாய்வு, மேற்கோள்காட்டப்படுகின்ற ஆவணமாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

# அமர்வு 1

## மனிதத் தேவைகள் – மனித உரிமைகள் – மனிதப் பொறுப்புக்கள்

### அமர்வு பற்றிய கண்ணோட்டம்

பல சூழமைவுகளில், நபர்கள், மனித உரிமைகளை தங்களுடைய நாளாந்த வாழ்க்கையிலிருந்து வெகு தொலைவிலுள்ள ஒன்றாகவும், சுதேசிய கலாசாரங்களுடன் தொடர்புறாததாகவும் அல்லது மேலைத்தேய புதிய காலணித்துவத்தின் நிகழ்ச்சி நிரலொன்றாகவுமே பார்க்கின்றனர். துரதிஷ்டவசமாக, மனித உரிமைகள் தொடர்பான இத்தகைய எதிர்மறையான கருத்துப்பதிவுகளினால், நபர்கள் தங்களுடைய சமுதாயங்களில் தங்களின் வாழ்க்கையினை சிறப்பாக மாற்றிக்கொள்ளும்பொருட்டு பயன்படுத்தக்கூடிய ஒரு பயன்மிக்க கருவியினைப் பயன்படுத்தத் தவறுகின்றனர். சர்வதேச மற்றும் தேசிய சட்டங்களுக்கமைய தமக்கும் மற்றும் ஏனையோருக்கும் இருக்க வேண்டிய உரிமைகள் பற்றி மக்களுக்கு தெரியாதிருப்பின், அது மனித உரிமை மீறல்கள் சவாலுக்குப்படுத்தப்படாது தொடர்ச்சியாக இடம்பெறுவதனை இலகுவாக்கும்.

**ஆலோசனைக் குறிப்பு!** இங்கே அமர்வு பற்றிய கண்ணோட்டத்தில் நீங்கள் அமர்வின் கற்றல் குறிக்கோள்கள், உள்ளடக்கங்கள் மற்றும் நேர விபரங்களையும் தேவையான வளங்கள் மற்றும் தயார்ப்படுத்தல்களின் பட்டியலொன்றினையும் பார்க்கலாம்.

இவ் அமர்வு இரு பகுதிகளைக் கொண்டுள்ளது:

***பகுதி 1: அறிமுகங்கள்***
இது பயிற்சி நெறியின் கட்டமைப்பு மற்றும் இலக்குகள் தொடர்பான அறிமுகமொன்றினை உள்ளடக்குவதுடன் பங்குபற்றுநர்கள் ஒருவரையொருவர் தெரிந்து கொள்ள ஆரம்பிப்பதற்கு வாய்ப்பளிக்கின்றது. அத்துடன் இது கள விதிகள் தொடர்பானதொரு கலந்துரையாடலினையும் உள்ளடக்குகின்றது. இது விசேடமாக, நம்பிக்கை தொடர்பான பிரச்சினைகளுள்ள குழுக்களில் அல்லது தலைப்பு உணர்வுபூர்வமானதாக இருக்கின்ற சந்தர்ப்பங்களில் முக்கியமானதாக அமையும்.

***பகுதி 2: மனிதத் தேவைகள் – மனித உரிமைகள் – மனிதப் பொறுப்புக்கள்***
பங்குபற்றுநர்கள் தங்களுடைய வாழ்க்கையில் மற்றும் சமுதாயங்களில் உணர்கின்ற அவர்களுடைய தேவைகளுடன் உரிமைகளைத் தொடர்புபடுத்துவதனூடாக, மனித உரிமைகள் தொடர்பான அவர்களின் அறிவு மற்றும் மதிப்புயர்வினைக் கட்டியெழுப்புவதனை இப்பகுதி இலக்காகக் கொண்டுள்ளது. தொடர்ந்து வருகின்ற அனைத்து அமர்வுகளுக்குமான முக்கிய அடிப்படையினை இது உருவாக்குகின்றது.

### *கற்றல் குறிக்கோள்கள்*

இவ் அமர்வானது, மனித உரிமைகள் தொடர்பில் பங்குபற்றுநர்களுடைய அறிவு மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக அவர்களுக்குள்ள சாதகமான நடத்தைப் பாங்குகள் என்பனவற்றை விருத்தி செய்வதனை மையப்படுத்துகின்றது.

**ஆலோசனைக் குறிப்பு!** மனித உரிமைகள் தொடர்பான தந்திரமான கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு உங்களுக்கு உதவக்கூடிய வழிகாட்டல்களை நீங்கள் 21-28 ஆகிய பக்கங்களில் காணலாம்.

இவ் அமர்வின் இறுதியில் பங்குபற்றுநர்கள்:

- குறைந்தது, அவர்களுடைய நாளாந்த வாழ்க்கைக்கு இன்றியமையாத மனித உரிமைகள் 6 இனைப் பட்டியலிடுவார்கள் மற்றும் அவர்களுடைய சமுதாயத்தில் மீறப்படுகின்ற ஒரு உரிமையையேனும் பெயரிடக்கூடியவர்களாக இருப்பார்கள்.
- மனித உரிமைகள் முக்கியமானவை மற்றும் அவை நாளாந்த வாழ்க்கையுடன் இணைந்துள்ளவை என்பதனையும் மனித உரிமைகள் மதிப்பளிக்கப்படுகின்ற மற்றும் பாதுகாக்கப்படுகின்ற சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு ஒவ்வொருவரும் வகிபங்காற்ற முடியுமென்பதனை வெளிப்படுத்துவார்கள்.

***குறிப்பு***

பங்குபற்றுநர்களின் அறிவு, நடத்தைப் பாங்குகள் மற்றும் திறன்கள் தொடர்பாக எப்பகுதிகளில் நீங்கள் முன்னேற்றத்தினை அவதானிக்கலாம் என்பதனைக் குறிப்பிட்டுக்காட்டி, அச்செயன்முறை எவ்வளவு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை மதிப்பிடுவதற்கு நெறியாளர்களுக்கு உதவுவதே கற்றல் குறிக்கோள்களின் நோக்கமாகும். அவை பங்குபற்றுநர்களுக்கான தகவலாக அமைவதற்கு உத்தேசிக்கப்படவில்லை - அவர்கள் 'அடைந்து கொள்ளவேண்டும்' என எதிர்பார்க்கப்படுகின்ற விடயங்களின் பட்டியலாகும்.

எந்தவொரு அமர்வினதும் கற்றல் குறிக்கோள்களை அடைந்துக் கொள்கின்ற நடைமுறை சாத்தியமானது பங்குபற்றுநர்களின் ஆரம்ப எண்ணக்கருத்துக்களில் தங்கியுள்ளது - உதாரணமாக, மனித உரிமைகள் தொடர்பாக அவர்கள் ஏற்கனவே கொண்டுள்ள நடத்தைப் பாங்குகள். குறிக்கோள்களை நோக்கிய முன்னேற்றமானது ஒரே அமர்வில் நிறைவேறுவதற்கு மாறாக அது பயிற்சி நெறிக் காலப்பகுதியின் போது படிப்படியாகவே நிறைவேற்றப்படும்.

## அமர்வின் உள்ளடக்கங்கள் மற்றும் நேர விபரங்கள்

| | |
|---|---|
| ***வரவேற்பு மற்றும் அறிமுகங்கள்***<br>வரவேற்பு, பங்குபற்றுநர்களின் அறிமுகங்கள், பயிற்சி நெறி பற்றியதொரு முன்வைப்பு மற்றும் கள விதிகள் தொடர்பான பயிற்சியொன்று. | 30 நிமி |
| ***'வாழ்க்கை எனும் இரசம்' முழுக்குழு பயிற்சி***<br>இரசப் பானையினுள் உள்ள சேர்க்கைப் பதார்த்தங்களின் படங்களைப் பயன்படுத்தி, மனிதத் தேவைகளை ஆராய்தல். | 35 நிமி |
| ***நடந்தும் கதைத்தும் பயிற்சி: மனித உரிமைகள் காட்சியகம்***<br>பங்குபற்றுநர்கள் மனிதத் தேவைகள் மற்றும் மனித உரிமைகளுக்கிடையில் தொடர்புகளை உருவாக்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு உதவுதல். | 25 நிமி |
| ***முன்வைப்பு: மனிதத் தேவைகள் – மனித உரிமைகள் – மனிதப் பொறுப்புக்கள்***<br>உரிமைகளை நடைமுறை சாத்தியமாக்குவதற்கான பிரதான ஒப்பந்தங்கள், அரசுகளின் கடமைகள் மற்றும் சாதாரண மக்களின் வகிபாகம் என்பவற்றை முன்னிலைப்படுத்திக்காட்டி மனித உரிமைகளுக்கான அறிமுகமொன்றினை வழங்குதல். | 15 நிமி |
| ***நிறைவு செய்கிற கலந்துரையாடல்***<br>கற்றுக் கொண்ட விடயங்கள் தொடர்பாக சிந்திப்பதற்கான வாய்ப்பொன்றினை பங்குபற்றுநர்களுக்கு வழங்குதல் மற்றும் அமர்வினை முடிவுறுத்தல். | 15 நிமி |
| ***மொத்த நேரம்*** | ***2 மணி நேரம்*** |

## தயாராகுங்கள்

பக்கம் 15 இலுள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயாராவது' என்பதன்கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக அமர்விற்காக தயாராகுங்கள். நினைவிற் கொள்ளுங்கள் - உங்களுடைய குழுவைப் பற்றி உங்களுக்கு தெரியும். ஆகவே, உங்களுடைய குழுவின் தேவைகளுக்கு ஏற்றவகையில் அமர்வின் ஏதேனும் கூறுகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு உங்களால் முடியும்.

***இவ் அமர்விற்கான வளங்கள்***

பக்கம் 16 இல் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு அமர்விற்குமான நியம வளங்களுக்கு மேலதிகமாக, அமர்வினை நடத்துவதற்கு உங்களுக்கு கீழ்வரும் வளங்கள் தேவைப்படலாம்:

- சிறிய கூடையொன்று.
- சிறிய காகிதத் துண்டுகள்.
- 'வாழ்க்கை எனும் இரசம்' என எழுதி ஒட்டப்பட்ட இரசம் வைக்கின்ற பானை (உங்களுடைய கலாசாரத்திற்கு பொருத்தமான பாணியில்).
- மனிதத் தேவைகள் அட்டைகளின் ஒரு அச்சுப் பிரதி - முன்கூட்டியே வெட்டப்பட்டுள்ளவை.
- மனித உரிமைகள் சுவரொட்டிகளின் ஒரு அச்சுப் பிரதி.
- 'உங்கள் சிந்தனைகளுக்கு ஒரு நாணயம்' என்ற மேலதிகப் பயிற்சியினை செய்வீர்களாயின், ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் 10 கற்கள், அல்லது நாணயங்கள் அல்லது காகிதத் துண்டுகள் உங்களுக்கு தேவைப்படும்.

இந்த அமர்வுக்கான ***துணைவளங்களை*** *இங்கே* காணலாம்.

***மேலதிக விருப்பத்தெரிவு: உங்களுடைய நம்பிக்கையினை கட்டியெழுப்புங்கள்!***

உங்களை தயார் செய்தலின் ஒரு பகுதியாகவும், மனித உரிமைகள் பற்றி மேலும் கற்றுக்கொள்ளவும் *இக்குறுந் திரைப்படங்களைப் பாருங்கள்*. இது உங்களுடைய நம்பிக்கையையும் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கான உங்களுடைய இயலுமையினை கட்டியெழுப்பவும் உதவுகிறது ஆனால், கவலைப்பட வேண்டாம், நெறியாளரென்றரீதியில், உங்களுடைய வகிபாகம் நிபுணரொருவராக இருப்பதல்ல, ஆனால், பரஸ்பரக் கற்றல் செயன்முறையினை வழிநடத்துகின்ற ஒரு நபராக இருப்பதே ஆகும்.

***திரைப்படங்கள்***

***அறையினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்***

இவ் அமர்விற்காக, முன் பக்கத்தைப் பாரத்த வண்ணமாகக் கதிரைகளை அரை வட்ட வடிவில் வைத்து ஆரம்பித்தல் சிறந்த யோசனையாகும். குழு அங்குமிங்கும் இலகுவாக போய் வரக்கூடியதாக இருக்க வேண்டும். மேசைகள் இடப்படாத பெரிய அறை மிகப் பொருத்தமானதாக இருக்கும்!




‘வாழ்க்கை எனும் இரசம்’

“வாழ்க்கை எனும் இரசம்” மற்றும் “மனித உரிமைகள் காட்சியகம்” எனும் பயிற்சிகள் கண்களைத் திறந்தன. சில பங்கேற்பாளர்கள் மனித உரிமைகள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் ஏதோவொன்றைக் குறிக்கின்றன என்பதை முதன்முறையாக உணர்ந்தனர். அவர்கள் தாங்கள் அறிந்திராத, தமக்கிருக்கும் மனித உரிமைகளை கண்டுகொண்டார்கள்”.

**UKOHA NGWOBIA**, நெறியாளர், நைஜீரியா

# விரிவான அமர்வுத் திட்டம்

## *பகுதி 1: அறிமுகங்கள்* 30 நிமி

இதுவே முதல் அமர்வு என்பதனால், கள விதிகளை அமைத்து மற்றும் பயிற்சி நெறியின் இலக்குகள் மற்றும் கட்டமைப்பினை அறிமுகப்படுத்தி, குழு தங்களுக்குள் ஒரு பிணைப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கான நேரத்தினை வழங்குதல் முக்கியமானதாகும்.

*குறிப்பு*

உங்களுடைய குழுவில் உள்ளோர் ஒருவரை ஒருவர் நன்கு அறிவார்களாயின், நீங்கள் இக்காலப் பகுதியினை சிறிது சுருக்கலாம். உங்களுடைய குழுவில் குறிப்பிடத்தக்க 'நம்பிக்கை' தொடர்பானப் பிரச்சினைகள் காணப்படுமாயின், உறவுகளைக் கட்டியெழுப்புவதற்காக நீங்கள் சற்று அதிகமான நேரத்தைச் செலவிடலாம். அப்படியாயின் ஆரம்பம் சிறப்பாக முதல் அமர்வினை சற்று நீளமாக நடாத்த முயலுங்கள் இதில் அதிகளவான நேரத்தினை செலவழிக்க வேண்டியுள்ள குழுக்களுக்காக மேலதிக செயற்பாடொன்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### 1. *வரவேற்பு* 3 நிமி

உங்களுடைய குழுவிற்கு பொருத்தமான முறையில் ஒவ்வொருவரையும் வரவேற்றுக் கொள்ளுங்கள், உதாரணமாக, அவர்களின் வருகையினைப் பாராட்டி சில வார்த்தைகளைப் பேசுதல், பாடலொன்றின் வரியினைப் பாடுதல் அல்லது மதத் துதியொன்றைச் செய்தல்.

### 2. *ஆரம்ப பயிற்சி: வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்* 12 நிமி

*முழுக்குழுப் பயிற்சி*

***நோக்கம்***

இப்பயிற்சியானது தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதற்கு பங்குபற்றுநர்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்குவதுடன் அவர்கள் வருகை தந்திருப்பதற்கான அவர்களுடைய நோக்கங்களை நீங்கள் அறிந்துகொள்ளவும் உதவும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது***

வட்டத்தின்வழியே சென்று ஒவ்வொரு நபரையும் கீழ்வரும் வாக்கியத்தினைப் பூர்த்தி செய்யுமாறு கூறுங்கள். (ஒரு பங்குபற்றுநருக்கு ஒரு வாக்கியம் - நீளமான பதில் அல்ல!) "என்னுடைய பெயர்........நான் இந்த பயிற்சி நெறிக்கு வந்ததற்கான காரணம்................"

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது***

பதில்களிலிருந்து தோன்றிய ஏதேனும் பொதுவான கருத்துக்களை மிகச் சுருக்கமாக குறிப்பிடுங்கள். தகவல்களைப் பகிர்ந்துக் கொண்டமைக்காக பங்குபற்றுநர்களுக்கு நன்றி கூறுங்கள் மற்றும் பயிற்சி நெறி தொடர்பான அவர்களது சில எதிர்பார்ப்புக்களேனும் பூர்த்திசெய்யபடுமென கூறுங்கள். அத்துடன் தற்போது நீங்கள் பயிற்சி நெறியின் இலக்குகள் மற்றும் கட்டமைப்பு பற்றி கூறுவீர்கள் என்றும் கூறுங்கள்.

***ஆலோசனைக் குறிப்பு!*** பகுதி 1: அறிமுகங்கள், முழுவதிலும் நேரத்தை முகாமை செய்வதில் அக்கறை கொள்ளுங்கள். பகுதி 2 இற்குரிய நேரத்தினை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

### 3. *பயிற்சி நெறியினை அறிமுகம் செய்க* 5 நிமி

*குறும்பேச்சு*

***நோக்கம்***

இச்சிறிய முன்வைப்பானது, பயிற்சி நெறியின் இலக்குகள், முறையியல், தலைப்புக்கள் மற்றும் நடைமுறைத்தன்மைகள் குறித்த ஒரு கண்ணோட்டத்தினை பங்குபற்றுநர்களுக்கு வழங்குவதனை இலக்காகக் கொண்டுள்ளது.

***என்ன சொல்ல வேண்டும்***

3-6 வரையான பவர்பொயின்ட் ஸ்லைடுகளிலுள்ள உள்ளடக்கம் அல்லது நகர்வு விளக்கப்படத் தாள்களில் எழுதப்பட்டுள்ள அதே விடயங்களை வாசித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பயன்படுத்துவதற்கான 'வளவாளருக்கான குறிப்புக்கள்' பவர்பொயின்ட் முன்வைப்பில் உள்ளன (நீங்கள் நகர்வு விளக்கப்படத் தாள்களைப் பயன்படுத்துகின்றபோதும் இவற்றைப் பயன்படுத்தமுடியும்).

*குறிப்பு*

உங்களுடைய குழுவில் மனித உரிமைகள் மிகவும் சர்ச்சைக்குரிய விடயமாகக் காணப்படின், இப்பயிற்சி நெறியின் குறிக்கோள்களை உள்ளூர் மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க, பொருத்தமான கருத்தேற்புக்களுக்கமைய மாற்றியமைத்துக் கொள்வதற்கு நீங்கள் விரும்பலாம்.

## 4. கள விதிகளுக்கான பயிற்சி: கூடையை கைமாற்றுவோம் 10 நிமி



முழுக்குழுப் பயிற்சி

**நோக்கம்**

நாங்கள் ஒருவருடனொருவர் எவ்வாறு பேச வேண்டுமென்ற பொதுவான எதிர்பார்ப்புக்களைத் தங்களிடத்தே கொண்டுள்ள பங்குபற்றுநர்களுக்கான ஒரு பாதுகாப்பானத் தளத்தினை உருவாக்குவதற்கு கள விதிகள் இன்றியமையாதன ஆகும்.

*வளங்கள்*

- ஒரு கூடை
- சிறிய காகிதத்துண்டுகள் மற்றும்
- பேனைகள்

***பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்தல்***

கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:

இப்பயிற்சி நெறியின்போது நாம் ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பு மற்றும் மரியாதையளிக்கப்படுவதாக உணரச் செய்தல் வேண்டும் – பேசுவதற்கான வாய்ப்பினை வழங்குதல் மற்றும் சம அடிப்படையில் அவர்களும் தங்களது சிந்தனைகள், அபிப்பிராயங்கள் மற்றும் அனுபவங்களைப் பகிரந்துக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குதல். அத்தகையதொரு சூழலை உருவாக்குவதற்கு, நாமனைவரும் உடன்படக்கூடிய மற்றும் ஒவ்வொருவரையும் உடன்படச்செய்யக்கூடிய சில கள விதிகளைக் கொண்டிருத்தல் பயன்மிக்கதாய் அமையும். இக்கள விதிகள் நடைமுறை சார்ந்தனவாக இருக்கலாம் (அதாவது நேரத்திற்கு வருதல் அல்லது தொலைபேசிகளை ஒலியெழுப்பாத நிலையில் வைத்தல்), அல்லது நாம் ஏனைய ஒவ்வொருவருடனும் தொடர்புறுகின்ற பாங்கு தொடர்பானதாக இருக்கலாம் (அதாவது, ஏனையோர் பேசுகின்றபோது மரியாதையுடன் செவிமடுத்தல் அல்லது பேசுவதற்கான வாய்ப்பினை ஒவ்வொருவருக்கும் வழங்கல்).

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது***

வட்டத்தின் நடுவே கூடையொன்றினை வையுங்கள். ஒவ்வொருவருக்கும் சிறிய காகிதத் துண்டொன்றினையும் பேனையொன்றினையும் வழங்குங்கள். குழு கொண்டிருக்க வேண்டுமென ஒவ்வொருவரும் கருதுகின்ற இரண்டு கள விதிகளை எழுதுமாறும், பின் அத்தாளை கூடைக்குள் போடுமாறும் கூறுங்கள். கூடையிலுள்ள அனைத்து அபிப்பிராயங்களையும் வாசித்து அவற்றை நகர்வு விளக்கப்படத் தாளில் எழுதுங்கள்.

கீழுள்ள ஏதேனும் கோட்பாடுகள் எழுதப்பட்டிருக்காவிடின், அவற்றை சேர்த்துக் கொள்ளுங்கள்:

- முனைப்பாகக் கேட்டல் - ஏனையவர்கள் பேசுகின்றபோது அவர்களுக்கு மதிப்பளித்தல்.
- பொதுமைப்படுத்துவதற்கு மாறாக உங்களது சொந்த அனுபவத்திலிருந்து பேசுங்கள் (“அவர்கள்,” “நாங்கள்,” மற்றும் “நீங்கள்,” என்பதற்கு பதிலாக “நான்” என்று சொல்லுங்கள்).
- கேள்விகளைக் கேட்பதனூடாக ஒருவரை ஒருவர் மரியாதையுடன் சவாலுக்குப்படுத்த அஞ்ச வேண்டாம், ஆனால் தனிப்பட்டத் தாக்குதல்களைச் செய்வதனைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் - அபிப்பிராயங்களில் கவனம் செலுத்துங்கள்.

அனைவரும் கள விதிகளுக்கு உடன்படுகின்றார்களா என கேளுங்கள்.

## 5. கீழுள்ள ஏதேனும் கோட்பாடுகள் எழுதப்பட்டிருக்காவிடின், அவற்றை சேர்த்துக் கொள்ளுங்கள்: 15 நிமி



குழுப்பயிற்சி

உங்களுடைய குழுவிற்கு ஒருவரை ஒருவர் தெரிந்துக் கொள்வதற்கு மேலதிக நேரம் தேவைப்படின், நீங்கள் அமர்விற்கு மேலதிக 15 நிமிடங்களை சேர்த்துக்கொண்டு இப்பயிற்சியினை உட்சேர்க்கலாம்.

**நோக்கம்**

பங்குபற்றுநர்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்வதற்கு உதவும் மற்றும் நாங்கள் அனைவரும் பொதுவாகக் கொண்டுள்ள பல விடயங்களை எடுத்துக்காட்டும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது***

- 4-6 பங்குபற்றுநர்களைக் கொண்ட குழுக்களாகப் பிரித்துக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொருவருக்கும் 10 சிறிய நாணயங்கள்/கற்கள்/காகிதக்கற்றைகள் அதுபோன்ற வேறேதேனுமொன்றைக் கொடுங்கள்.
- முதலாவது நபர் வட்டத்தினூடாக சென்று அவருக்கு பிடித்த எதையாவது ஒன்றை (உதாரணமாக, வாசித்தல்) சொல்வார். அவ்விடயம் பிடித்த ஏனைய ஒவ்வொருவரும் தங்களிடமிருக்கும் நாணயமொன்றினை வட்டத்தின் நடுவே போட வேண்டும்.
- பின்னர், இரண்டாவது நபர் அவருக்கு பிடித்த எதையாவது ஒன்றை சொல்வார். அவ்விடயம் பிடித்த ஏனைய ஒவ்வொருவரும் தங்களிடமிருக்கும் மற்றுமொரு நாணயத்தினை வட்டத்தின் நடுவே போட வேண்டும்.
- ஒரு நபரிடமுள்ள நாணயங்கள் அனைத்தும் தீர்ந்துபோகிற வரையில் தொடர்ச்சியாக செய்யவும்.

## *பகுதி 2: மனித உரிமைகளை அறிமுகப்படுத்தல்*

### 1. *முழுக்குழு பயிற்சி: வாழ்க்கை எனும் இரசம்* 35 நிமிடி

*முழுக்குழுப் பயிற்சி*

***விபரம்***

வாழ்க்கை எனும் இரசம் என்ற பயிற்சியானது, நாமனைவரும் (மற்றும் அனைத்து மனித உயிர்களும்) கொண்டிருக்கக்கூடிய தேவைகளை ஆராய்வதற்கு பங்குபற்றுநர்களுக்கு உதவி செய்வதற்காக, ஒரு இரசப் பானையில் சேர்க்கப்பட வேண்டிய பதார்த்தங்களின் படங்களைப் பயன்படுத்தி செய்யப்படுகின்ற ஒரு பயிற்சியாகும். முன் தயாரிக்கப்பட்ட அட்டைகள் மற்றும் தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களைப் பயன்படுத்தி, பங்குபற்றுநர்கள் தங்களுடைய வாழ்க்கை கௌரவம்மிக்கதாக அமைய ‘இரசத்தினுள்’ சேர்க்கப்பட வேண்டிய பதார்த்தங்களைத் தெரிவு செய்வார்கள்.

***நோக்கம்***

இப்பயிற்சியினைத் தொடர்ந்து, இப்பயிற்சியில் அடையாளப்படுத்தப்பட்ட தேவைகளை அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள உரிமைகளுடன் தொடர்புறுத்துகின்ற ‘மனித உரிமைகள் காட்சியகம்’ பயிற்சி செய்யப்படவுள்ளது. இவ்விரண்டு பயிற்சிகளும் சோடியொன்றினை உருவாக்குகின்றமையினால் இவை ஒன்றாக செய்யப்பட வேண்டும். இவ்விரண்டு பயிற்சிகளும் ஒன்றிணைந்து, மனித உரிமைகள் எவ்வாறு தங்களது நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புறுகின்றன மற்றும் ‘அந்நியமானதாக’ அல்லது ‘வேறுபட்டதாக’ இல்லாமல், அவர்களாலேயே அடையாளப்படுத்தப்பட்ட அவர்களது தேவைகளை அவை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதனை பங்குபற்றுநர்கள் அறிந்து கொள்வதற்கு உதவும்.

***வளங்களும் முன்னாயத்தமும்***

உங்களுக்கு பின்வருவன தேவைப்படும்:

- இரசம் வைக்கின்ற பாரம்பரிய பானையொன்று அல்லது பெரிய பானையொன்று, அதன் மேற்புறத்தில் “வாழ்க்கை எனும் இரசம்” என எழுதி ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.
- அச்சுப்பிரதி செய்யப்பட்டு வெட்டப்பட்டுள்ள ‘மனிதத் தேவைகள்’ குறிப்பிடப்பட்டுள்ள அட்டைகள். தேவையாயின், அட்டைகளை அச்சுப்பிரதி செய்யமுன்னர் அவற்றிலுள்ளவற்றை உங்களுடைய குழுவின் மொழிக்கு மொழிபெயர்த்துக் கொள்ளுங்கள்.
- சில பேனைகள்.

***ஆலோசனைக் குறிப்பு!*** இவ் ***இணைப்பில்*** அனைத்து பயிற்சி நெறிகளும் பல மொழிகளில் கிடைக்கும் என்பதை நினைவில் கொள்க.

***பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 4 நிமிடி

அறையின் நடுவே இரசப் பானையினை வையுங்கள். அப்பானையினைச் சுற்றி மனிதத் தேவைகள் குறிப்பிடப்பட்டுள்ள அட்டைகளையும் பேனைகளையும் தரையில் பரப்புங்கள். அவ்வட்டைகளைச் சுற்றி வட்டமாக நிற்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:

- வாழ்க்கை என்பது ஒரு இரசப் பானை போன்றது – பல சேர்க்கைப் பதார்த்தங்களைக் கொண்டிருக்கும் - இரசத்தைப் போலவே வாழ்க்கையும் சுவை மிக்கதாக அமைய வேண்டுமாயின் அதற்கு வேறுபட்ட பல சேர்க்கைகள் தேவைப்படும்.
- வாழ்க்கையில் சில சேர்க்கைகள் அதாவது (கலாசாரரீதியாக பெறுமதிமிக்க விடயமொன்றை குறிப்பிடுங்கள்) போன்றன வாழ்க்கையினை மிக்க சுவை மிக்கதாக்கும். ஆனால், எமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்ற வேறு சேர்க்கைப் பதார்த்தங்களும் உண்டு (அதாவது வீடு, உணவு சுத்தமான நீர், அல்லது சுகாதார பராமரிப்பு) போன்றன. அவை இல்லாவிடின், வாழ்க்கை கஷ்டமானதாகி விடுமென்பதுடன் நாங்கள் உடல்ரீதியாக, உளரீதியாக, சமூகரீதியாக அல்லது ஆன்மீகரீதியாக துன்பமடைவோம். நாங்கள் எங்கள் கௌரவத்தை இழந்து விடுவோம்.
- இப்பயிற்சியில், எங்களுடைய வாழ்க்கைக்கான அத்தியாவசியமான சேர்க்கை பதார்த்தங்கள் யாவை என்பது பற்றி நாம் சிந்திக்கப் போகின்றோம். நாங்கள் வாழ்க்கையாகிய இரசத்தினை, மிக குறிப்பாக கௌரவம்மிக்க வாழ்க்கையாகிய இரசத்தை சமைக்கப் போகின்றோம்!
- இரசப் பானையைச் சுற்றி போடப்பட்டுள்ள ஒவ்வொரு அட்டையிலும் கௌரவமான வாழ்க்கைக்கு அவசியமான ஏதோ ஒன்று எழுதப்பட்டிருக்கின்றது. அவற்றுள் ஒன்றும் எழுதப்படாத அட்டைகளுமுள்ளன, ஆகவே அவற்றுள் கௌரவமான வாழ்க்கைக்கு அவசியமானவை தொடர்பான எமது அபிப்பிராயங்களை எழுத அல்லது வரைய முடியும்.

***ஆலோசனைக் குறிப்பு!*** நேரத்தை முகாமை செய்வது தொடர்பில் இங்கு கண்டிப்புடன் செயற்படுங்கள் - பின்னரான கலந்துரையாடலுக்காக நீங்கள் நேரத்தை சேமித்துக் கொள்ள வேண்டும்!

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 30 நிமிடி

- அட்டைகளைப் பார்த்து அவற்றுள் எவை அவர்களுக்கு மிகவும் அவசியமானவை என சிந்திப்பதற்கு குழுக்களுக்கு 2 நிமிடங்கள் இருப்பதாக கூறுங்கள்.
- பின்னர், வட்டத்தைச் சுற்றி சென்று, ஒவ்வொரு நபரையும் கௌரவமான வாழ்க்கைக்கு அவசியமானதென அவர் கருதுகின்ற ஒரு அட்டையை எடுத்து, அது ஏன் அவசியமென அவர் கருதுகின்றார் என்பதனை ஒரேயொரு வாக்கியத்தில் கூறி, அதனை சமைக்கின்ற பானைக்குள் போடுமாறு கூறுங்கள்.

- அவர்களுக்கு அவசியமான அட்டைகள் எதுவும் எஞ்சவில்லை என நபர்கள் உணர்கின்றவரையில் வட்டத்தைச் சுற்றி நடவுங்கள். அவர்கள் ஒரு வெற்று அட்டையினை எடுத்து - அது என்னவென்று கூறிவிட்டு அதனைப் பானைக்குள் போடலாம். இந்நேரத்தில் ஒருவருடைய தெரிவு தொடர்பாக ஏனையோர் எவ்விதக் கருத்துக்களையும் சொல்லக்கூடாது.
- நபர்கள் சேர்க்க வேண்டுமென்று நினைக்கின்ற அனைத்து அட்டைகளையும் பானைக்குள் போட்டபின்னர், நாங்கள் எமது 'வாழ்க்கையாகிய இரசத்தினை' செய்துவிட்டோம் என கூறுங்கள். கீழ்வரும் வினாக்களை கலந்துரையாடுங்கள்:
  - நாங்கள் சேர்த்த ஏதேனும் சேர்க்கைகள் கௌரவமான வாழ்க்கைக்கு அவசியமற்றதாக இருந்ததா?
  - ஏதேனும் சேர்க்கைகளை (அட்டைகளை) நாங்கள் உட்சேர்க்காது தரையிலேயே வைத்து விட்டோமா - ஏன்?
  - 'அத்தியாவசியமான சேர்க்கைகள்' எமது வாழ்க்கையில் இல்லாதபோது அது எம்மில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது? கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
  - இவ் உலகத்தின் வேறு பகுதியிலுள்ள குழுவொன்று இப்பயிற்சியினை செய்திருந்தால், அவர்களுக்கு வேறுபட்டத் தேவைகள் இருந்திருக்குமென்று நீங்கள் நினைக்கின்றீர்களா அல்லது சில மனிதத் தேவைகள் உலகளாவியன – ஆகவே அவை அனைத்து மனித உயிர்களும் பகிரந்து கொள்கின்ற அடிப்படைத் தேவைகளென நினைக்கின்றீர்களா?

*இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது* 1 நிமி
உலகெங்கிலுமுள்ள மனித உயிர்கள் பல விடயங்களை பொதுவானவையாகக் கொண்டிருக்கும் - ஏனெனில் நாங்கள் அனைவரும் மனிதர்கள் என்பதுடன் ஒரேமாதரியானத் தேவைகளையே பகிர்ந்து கொள்கிறோம் என கூறி கலந்துரையாடலை நிறைவு செய்யுங்கள்.

## 2. நடந்தும் கதைத்தும் பயிற்சி: மனித உரிமைகள் காட்சியகம் 25 நிமி

முழுக்குழுப் பயிற்சி

*விவரணம்*
பங்குபற்றுநர்கள் அறையைச் சுற்றி நடந்து முன்னைய பயிற்சியில் பயன்படுத்தப்பட்ட மனிதத் தேவைகளைக் குறிப்பிடுகின்ற அட்டைகளை, அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் வழங்கப்பட்டுள்ள மனித உரிமைகளை எடுத்துக்காட்டுகின்ற மனித உரிமைகளைக் குறிப்பிடுகின்ற சுவரொட்டிகளுடன் இணைப்பர்.

*நோக்கம்*
முன்னர் செய்த பயிற்சியுடன் இணைந்து, இப்பயிற்சியானது, மனித உரிமைகள் எவ்வாறு தங்களது நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புறுகின்றன மற்றும் 'அந்நியமானதாக' அல்லது 'வேறுபட்டதாக' இல்லாமல், அவர்களாலேயே அடையாளப்படுத்தப்பட்ட அவர்களது தேவைகளை அவை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதனை பங்குபற்றுநர்கள் அறிந்து கொள்வதற்கு உதவும்.

*வளங்களும் முன்னாயத்தமும்*
- மனித உரிமைகள் காட்சியகத்திற்கான 30 சுவரொட்டிகளை அச்சுப்பிரதி செய்துக் கொள்ளுங்கள். அறையின் சுவர்களில் இச்சுவரொட்டிகளை ஒட்டுக. அவசியமாயின், முதலில் அவற்றை உங்களுடைய குழுவின் மொழயில் மொழிபெயர்த்துக் கொள்ளுங்கள்.
- அச்சுவரொட்டிகளை வாசித்து, அவற்றுள் சொல்லப்பட்டுள்ள ஏதேனும் உரிமைகள் உங்களுடைய சூழமைவில் மீறப்படுகின்றனவா என்பது குறித்து சிந்தியுங்கள். இதனை முன்கூட்டியே சிந்தித்தலானது கலந்துரையாடலை வழிநடத்துவதற்கு உங்களுக்கு உதவும்.

*பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது* 1 நிமி
முன்னைய பயிற்சியின்போது பயன்படுத்தப்பட்ட "மனிதத் தேவைகளைக் குறிப்பிடுகின்ற அட்டைகள்" அனைத்தையும் எடுத்து பங்குபற்றுநர்களிடம் கையளியுங்கள்.

மனித உரிமைகள் பற்றி கேள்விபட்டுள்ளனரா என பங்குபற்றுநர்களிடம் வினவுங்கள். சுவரிலுள்ள சுவடிராட்டிகள், பெரும்பாலும் அனைத்து அரசாங்கங்களினாலும் கையொப்பமிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சர்வதேச மனித உரிமைகள் உடன்பாடுகளுக்கமைய உலகிலுள்ள ஒவ்வொரு ஆண், பெண் மற்றும் பிள்ளைக்குமான மனித உரிமைகளை அறிமுகப்படுத்துகின்றதென பங்குபற்றுநர்களுக்கு கூறுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 23 நிமி

- ***காட்சியகத்தை பார்வையிடல்*** (15 நிமி)
  அறையினை சுற்றி நடவுங்கள். ஒவ்வொரு சுவரொட்டிக்கு அருகில் வரும்போதும், அச்சுவரொட்டியில் எழுதியுள்ளதனை வாசியுங்கள், பின்னர், அம் மனித உரிமையுடன் தொடர்புறுகின்ற 'மனிதத் தேவைகளைக் குறிப்பிடுகின்ற அட்டையொன்றினை' யாராவது வைத்திருக்கிறார்களா என கேளுங்கள். யாராவது ஆம் என பதிலளிப்பின் அத்தேவையினை கூறும்படி கூறுங்கள். (தொடர்புறுகின்ற சுவரொட்டிகள் மற்றும் தேவைகளைக் குறிப்பிடுகின்ற அட்டைகள் ஒரேமாதிரியான குறியீட்டு அடையாளத்தைக் கொண்டிருக்கும், ஆகவே, இது இலகுவானதாய் இருக்கும்!) கலந்துரையாடலெதுவுமின்றி உடனடியாக அடுத்த சுவரொட்டியினை நோக்கி செல்லுங்கள்- ஒரு நிமிடத்தில் நீங்கள் 2 சுவரொட்டிகளை இணைக்க வேண்டும்!
  குறிப்பிட்டதொரு சுவரொட்டிக்கு எந்தவொரு அட்டையினையும் யாரும் விதந்துரைக்காவிடின், கவலைப்பட வேண்டாம், தொடர்ந்து சுவரொட்டிகளைச் சுற்றிச் செல்லுங்கள், நிறைவு பெறுகின்ற இடத்திற்கு வந்ததும் இதுவரை குறிப்பிடப்படாது எஞ்சியுள்ள அட்டைகளை சுவரொட்டிகளுடன் இணைக்கவும் (குறியீட்டு அடையாளங்களை வழிகாட்டியாகப் பயன்படுத்தி).
- ***கலந்துரையாடல் வினாக்கள்*** (8 நிமி)
  நீங்கள் அனைத்து சுவரொட்டிகளையும் வாசித்து அவற்றை, தேவைகளைக் குறிப்பிடுகின்ற அட்டைகளுடன் இணைத்த பின்னர் கீழ்வருவனவற்றைக் கலந்துரையாடுங்கள்:
  – உங்களுடைய வாழ்க்கையில் கௌரவத்தினைக் கொண்டிருப்பதற்கு அவசியமானத் தேவைகளை இவ் உரிமைகள் பிரதிபலிக்கின்றனவா - வேறு சொற்களில் கூறுவோமாயின், இவை எமது வாழ்க்கைக்கு அவசியமானவையா?
  – எமது நாடு/சமுதாயத்தில் மதிப்பளிக்கப்படுகின்ற மற்றும் பாதுகாக்கப்படுகின்ற உரிமைகள் யாவை மற்றும் மதிப்பளிக்கப்படாத மற்றும் பாதுகாக்கப்படாத உரிமைகள் யாவை? இதை கடினமாககுழுவினர் கருதினால் கலந்துரையாடலின் போது, சட்டத்தின்வாயிலாக அல்லது நடைமுறையில் மறுக்கப்படுகின்ற உங்களுக்கு தெரிந்த மனித உரிமைகளை குறிப்பிடுங்கள்.

> ***ஆலோசனைக் குறிப்பு!*** உங்களால் நீளமானதொரு அமர்வினை நடத்த முடியுமாயின், இப்பயிற்சிக்கான கலந்துரையாடல் நேரமொன்றினையும் உட்சேர்த்துக்கொள்ள முடியும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது*** 1 நிமி

இதுவரையில் நாங்கள் செய்த பயிற்சிகள் எங்களுக்கு இருக்கின்ற தேவைகள், மற்றும் காணப்படுகின்ற மனித உரிமைகள் மற்றும் எங்களுடைய தேவைகள் அம்மனித உரிமைகளுடன் எவ்வாறு தொடர்புறுகின்றன என்பதனை ஆராய்வதற்கு எமக்கு உதவின என கூறுவதனூடாக கலந்துரையாடலை நிறைவு செய்யுங்கள். இப்பயிற்சிகளிலிருந்து வெளிப்படுகின்ற செய்தியினை 'மனித உரிமைகள், எங்களுடைய மனிதத் தேவைகள் மற்றும் நாங்கள் வாழ விரும்புகின்ற சமூகம் என்பனவற்றுடன் மிக நெருக்கமாக தொடர்புறுகின்றன' என தொகுக்க முடியும். நாங்கள் இப்போது முன்வைப்பு ஒன்றினூடாக மனித உரிமைகள் பற்றி சற்று மேலதிகமாக கற்கப் போகின்றோம்.

ஒவ்வொருவரையும் தங்களுடைய அட்டைகளை மீண்டும் இரசப் பானைக்குள் போட சொல்லுங்கள். அடுத்த அமர்வின்போது, உங்களுக்கு பானையும் அட்டைகளும் தேவைப்படும்!

## 3. முன்வைப்பு: மனிதத் தேவைகள் – மனித உரிமைகள் – மனிதப் பொறுப்புக்கள் 15 நிமி


*முன்வைப்பு*

***விவரணம் மற்றும் நோக்கம்***

இம்முன்வைப்பானது, மனிதத் தேவைகள், மனித உரிமைகள் மற்றும் மனிதப் பொறுப்புக்கள் என்பவற்றின் கண்ணோட்டத்தினூடாக மனித உரிமைகளுக்கான அடிப்படையினை பங்குபற்றுநர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றது. இது பிரதான சர்வதேச உடன்பாடுகள், அரசுகளின் பொறுப்புக்கள் மற்றும் சமூக உறுப்பினர்களின் ஒழுக்கக் கடப்பாடுகள் என்பனவற்றை அறிமுகப்படுத்துகின்றது. இது பயிற்சி நெறியின் ஏனைய பகுதிகளுக்கான இன்றியமையாத அடிப்படையினை வழங்குகின்றது.

***வளங்கள்***

- இவ்வழிகாட்டியின் பக்கம் 41 இல் முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதியினைப் பார்க்கலாம்.
- எழுத்துப்பிரதியானது அமர்விற்கான பவர்பொயின்டின் 7-28 வரையான ஸ்லைடுகளை ஒத்து அமைந்திருக்கும் என்பதுடன் அது இவ் ஸ்லைடுகளுக்கான வளவாளர் குறிப்புக்களுள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- அமர்விற்கான துணை வளங்களில் மாற்றங்களை செய்வதற்கேற்றவகையில், எழுத்துப்பிரதியின் Word வடிவம் இணைக்கப்பட்டுள்ளது.

*முன்னாயத்தம்*
பக்கம் 15 இல் வழங்கப்பட்டுள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயார்படுத்துவது' என்பதிலுள்ள வழிகாட்டல்களுக்கமைய தயாராகுங்கள்.

எழுத்துப்பிரதி மற்றும் பவர்பொயின்ட் ஸ்லைடுகளை (அல்லது ஸ்லைடுகளின் பிரதான கருத்துக்களைக் கொண்டு நகர்வு விளக்கப்படத்தாள்களை ஆக்கிக் கொள்ளுங்கள்) வாசித்து உங்களுக்கேற்றவகையில் மாற்றியமைத்துக் கொள்ளுங்கள். பக்கம் 21-28 இல் உள்ள தந்திரமான கேள்வி பகுதியினை வாசித்து பங்குபற்றுவோரிடமிருநது எதிர்பார்க்கும் ஆட்சேபனைகளில் ஏதேனும் கூடுதலாக. சேர்க்கவேண்டுமா என சிந்தியுங்கள் மற்றும் ஸ்லைடுகள்/நகர்வு விளக்கப்படத் தாள்களுடன் முன்வைப்பினை செய்வதற்கு பயிற்சி செய்து பாருங்கள்.

*ஆலோசனைக் குறிப்பு!* உங்களுடைய முன்வைப்பினை முடிவு செய்கின்றவரையில், வினாக்கள்/கருத்துக்களை பதிவு செய்து வத்திருக்குமாறு நபர்களிடம் கூறுங்கள்.

## 4. *நிறைவு செய்கின்ற கலந்துரையாடல்* 15 நிமி

*நோக்கம்*
இக்கலந்துரையாடலானது, முன்வைப்பில் பங்குபற்றுநர்கள் கேட்டவை குறித்து சிந்திப்பதற்கான ஒரு வாய்ப்பினை பங்குபற்றுநர்களுக்கு வழங்குகின்றது என்பதுடன் அமர்வினை முடிவுறுத்துகின்றது.

*முழுக்குழு கலந்துரையாடல்*

*கலந்துரையாடலை எவ்வாறு நடத்துவது*
செய்யப்பட்ட முன்வைப்பு தொடர்பான கருத்துக்கள் மற்றும் வினாக்களை கூறச் சொல்லுங்கள். அத்துடன் கீழ்வரும் வினாக்களைக் கேளுங்கள்:

- சமத்துவம், கௌரவம் மற்றும் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள பொறுப்புக்கள் போன்ற கோட்பாடுகளிலிருந்து மனித உரிமைகள் ஆரம்பிக்கின்றன. எங்களுடைய கலாசாரங்கள், பாரம்பரியங்கள் மற்றும் மொழிகளிலுள்ள எவ்வெவ் கருத்தேற்புக்கள், கதைகள் அல்லது பழமொழிகள் இவ் அபிப்பிராயங்களைப் பிரதிபலிக்கின்றன?
- எமது சமுதாயங்களில் மனித உரிமைகள் நடைமுறையில் காணப்பட வேண்டுமென நாம் விரும்புகின்றோமா? Zaliha மற்றும் Magdalena இனைப்போல நாமும் அது நிறைவேறுவதற்கு பங்களிப்பு செய்ய முடியுமா?

*ஆலோசனைக் குறிப்பு!* பக்கம் 21-28 இல் தந்திரமான கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கான ஆலோசனைகளை காணலாம்.

அடுத்த அமர்வில், சிந்தனைக்கான சுதந்திரம், மனசாட்சிக்கான சுதந்திரம், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பாகவுள்ள மனித உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்துவோம் என கூறுவதனூடாக கலந்துரையாடலை நிறைவு செய்யுங்கள். இப்பயிற்சி நெறி முழுவதிலும், எங்களால் எமது சமுதாயத்தில் மாற்றமொன்றினை ஏற்படுத்த முடியுமா மற்றும் முடியுமாயின் எவ்வாறு என்பது தொடர்பாக தொடர்ந்து சிந்திப்போம்.

*ஆலோசனைக் குறிப்பு!* இவ்அமர்விற்கு பின்னர் மனித உரிமைகளைக் குறிப்பிடுகின்ற அட்டைகளை வீச வேண்டாம் – அடுத்த அமர்வுகளில் உங்களுக்கு அவை தேவைப்படும்!

*மூலம்*
கூடையினை கைமாற்றுதல்: மனித உரிமைகளில் புதிய உத்திகள் (இணைப்பு)

உங்கள் சிந்தனைகளுக்கான ஒரு நாணயம்: "Me too" எனும் பயிற்சியில் குழு அறிமுக நெறியாள்கையின் போது சரவதேச லயன்ஸ் கழகத்தினால் தழுவியமைக்கப்பட்டது.
https://temp.lionsclubs.org/EN/pdfs/icebreakers.pdf

# விளக்கப்பட எழுத்துப்பிரதி

## மனிதத் தேவைகள்- மனித உரிமைகள்- மனிதப் பொறுப்புக்கள்

*அமர்வு 1 இற்கான விளக்கப்பட எழுத்துப்பிரதியானது 7-28 வரையான பவர் பொயின்ட் ஸ்லைடுகளினால் விளக்கமளிக்கபபட்டுள்ளது.*

**அறிமுகம்: மனித உரிமைகள்**



நாங்கள் யாராயிருப்பினும், எந்த மதம், இனம், பால்நிலை அல்லது வயது மட்டத்தினை சேர்ந்தோராயிருப்பினும், மற்றும் எங்கு வசிப்பினும்- நாங்கள் அனைவரும் பகிர்ந்துக் கொள்கின்ற அடிப்படைத் தேவைகள் உண்டு. எந்தவொரு காரணமுமின்றி கைது செய்யப்படுவதற்கு, சித்திரவதைப்படுவதற்கு அல்லது பாரபட்சத்திற்கு உட்படுவதற்கு யாரும் விரும்பமாட்டார்கள் என்பதுடன் எந்தவொரு நபரும் தமது பிள்ளைகளைப் பட்டினிபோடுவதற்கு விரும்ப மாட்டார்கள். இவ்விடயங்களிலிருந்து நாம் பாதுகாக்கப்பட்டிருக்கின்ற சமூகங்களில் வாழ்வதற்குதான் நாம் அனைவரும் விரும்புவோம்.



மனித உயிர்கள் ஒரேமாதிரியான அடிப்படையான, உலகளாயவியத் தேவைகளைப் பகிர்ந்துக் கொள்கின்றனர். இந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிடின், எங்களுடைய உடல், உணர்வு மற்றும் ஆன்மீக நலன் பாதிப்புறும்.

**மனித உரிமைகள்**



எல்லா இடங்களிலுமுள்ள அனைவருக்கும் இந்தத் தேவைகள் இருப்பதனையும், இத்தகையத் தேவைகளுக்கு மதிப்பளிப்பதற்கான மற்றும் அவை பூர்த்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக தம்மால் இயன்ற அனைத்தையும் செய்வதற்கான பொறுப்பு- உண்மையில் ஒரு கடமை அரசாங்கங்களுக்கு இருப்பதனையும் உலகிலுள்ள அரசாங்கங்கள் அங்கீகரித்துள்ளன.



இதனை நடைமுறைப்படுத்த உதவி செய்யும்பொருட்டு, உலகிலுள்ள அரசாங்கங்கள் இவ் உரிமைகளுக்கு மதிப்பளித்து, பாதுகாத்து மற்றும் மேம்படுத்துவதற்காக உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பில் உடன்பட்டுள்ளன - ஒவ்வொரு நபருக்கும் காணப்படுகின்ற உரிமைகள் தொடர்பில் மற்றும் ஒவ்வொரு அரசாங்கமும் கொண்டிருக்கின்ற கடைமைகள் தொடர்பில்.அவ் உரிமைகளை மதிக்க பாதுகாக்க மற்றும் ஊக்குவிக்க



மிக முக்கியமான 3 மனித உரிமைகள் உடன்பாடுகளாவன:

- அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், சுவரொட்டிகளைப் பயன்படுத்துகின்றபோது நாம் இவற்றைப் பார்த்தோம், மற்றும் எங்களுடைய உரிமைகளை மிக ஆழமாக விளக்குகின்ற இன்னும் இரண்டு விரிவான உடன்படிக்கைகள்
- குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (ICCPR) மற்றும்
- பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (ICESCR)

இவ்விரண்டு சமவாயங்களையும் ஏற்றுக் கொண்டுள்ள நாடுகள் தொடர்பில் இவை சட்டரீதியாக பிணைக்கும் தன்மை வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன.



பெரும்பாலான நாடுகள் இவ் உடன்பாடுகளுக்கான தமது அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தியுள்ளன- இவ்வரைபடங்களில் பச்சை நிறத்தில் உள்ள அனைத்து நாடுகளும்! இந்நாடுகளின் அரசாங்கங்கள் சர்வதேச சட்டத்தின்கீழ் 3 விடயங்களைச் செய்வதற்கான சட்டக் கடப்பாடு தமக்கு காணப்படுவதாக ஏற்றுக்கொண்டுள்ளன:




- அவர்கள் ஆக்குகின்ற சட்டங்கள் மற்றும் அதிகாரிகள் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளில் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல். உதாரணமாக, பாரபட்சமான சட்டங்கள் காணப்படக்கூடாது என்பதுடன் எந்தவொரு நபரும் சித்திரவதை செய்யப்படக்கூடாது.
- அரசினால் அல்லது வேறு யாரேனுமொருவரால் தங்களுடைய உரிமைகள் மீறப்படுகின்றபோது நீதியினை நாடுவதற்கு ஒவ்வொருவருக்கும் முடியும் என்பதனை உறுதிப்படுத்துவதனூடாக மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.
- மற்றும் ஒவ்வொரு நபரும் தங்களுடைய உரிமைகளுக்கான அணுகுதலைக் கொண்டுள்ளனர் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு தம்மால் இயன்ற அனைத்தையும் செய்வதனூடாக, மனித உரிமைகளை மேம்படுத்தல். உதாரணமாக, ஒவ்வொரு நபரும் சுகாதார பராமரிப்பு மற்றும் கல்விக்கான அணுகுதலைக் கொண்டுள்ளனர் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு தம்மால் இயன்ற அனைத்தையும் செய்தல். அனைத்து அரசாங்கங்களும் ஒரேமாதிரியான வளங்களைக் கொண்டிருப்பதில்லை என்பது சந்தேகத்திற்கிடமற்ற விடயம், ஆகவே, இத்தகைய சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை நடைமுறைப்படுத்தல் கிரமமாக நிகழக்கூடியதொரு செயன்முறையாகும்.



ஒவ்வொரு மனிதனும் இத்தகைய உரிமைகளை சமமாகக் கொண்டுள்ளான் என்பதனை அரசாங்கங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் முதலாவது உறுப்புரையானது, ''மனிதப் பிறவியினர் சகலரும் சுதந்தரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள்'' என கூறுகின்றது.



துரதிஷ்டவசமாக, அதிகமான அரசாங்கங்கள் இத்தகைய அர்ப்பணிப்புக்களை நடைமுறைப்படுத்துவதில்லை- பல நபர்களுடைய உரிமைகள் மீறப்பட்டுள்ளன. பெண்கள், பெண் பிள்ளைகள், சிறுபான்மையினர், இயலாமைகளையுடைய நபர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் என்போர் உரிமை மீறல்களுக்கு இலகுவில் உட்படக்கூடியவர்களாயிருக்கின்றனர். உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் இடம்பெறுகின்ற பால்நிலை அடிப்படையிலான வன்முறை இதற்கான பொதுவானதொரு உதாரணமாகும்.

## மனித உரிமைகள் பற்றிய விமர்சனம்



அரசாங்கங்கள் உரிமைகளை மீறுகின்றபோது அல்லது மக்களை உரிமை மீறல்களிலிருந்து பாதுகாக்கத் தவறுகின்றபோது, அரசாங்கத்தினைத் தண்டிப்பதற்காக வரக்கூடிய உலகளாவிய பொலிஸ் படையொன்று இல்லை. ஆகவே, மனித உரிமைகளைப் பின்பற்றும்படி அரசாங்கங்களை கட்டாயப்படுத்தக்கூடிய சர்வதேச பொலிஸ் படையொன்று இல்லையெனில்- மனித உரிமைகள் வலுவற்றதாகிவிடாதா- மாற்றத்திற்கான வினைத்திறனான கருவியொன்றாக இல்லாமல் காகிதத்திலிருக்கின்ற வார்த்தைகளாகிவிடாதா?



இதில் கொஞ்சம் உண்மை இருக்கின்றது- சில அரசாங்களில் செல்வாக்கு செலுத்துதல் மிகக் கடினம். ஆனால் அதிகளவான நாடுகளில், மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச மற்றும் உள்நாட்டு விமர்சனங்கள் சாதகமான மாற்றத்திற்கு வழிவகுத்துள்ளன. சர்வதேச பொலிஸ் படையொன்றின்றி மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு பல வழிகள் காணப்படுகின்றன.



மக்கள் மனித உரிமைகள் தொடர்பில் விமர்சிப்பதற்கு வேறு சில காரணங்களும் காணப்படுகின்றன. சில வேளைகளில் உங்களுக்கும் இந்த சிந்தனைகள் இருந்திருக்கலாம்?

- பெரும்பாலும் மனித உரிமைகள் உங்களுக்கு மிக நுட்பமான விடயமொன்றாகத் தெரியலாம்- அது நீங்கள் ஈடுபடக்கூடிய விடயமொன்றாக இல்லாமல், மாறாக, சட்டத்தரணிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கான விடயமாக உங்களுக்கு தெரியலாம்.
- அல்லது பெரும்பாலும், மனித உரிமைகள் உங்கள் நாளாந்த வாழ்க்கையிலிருந்து வெகு தொலைவிலிருப்பதாக- நகர்ப்புறங்களிலுள்ள உயர்குடிகள் கவலைப்பட வேண்டியதொரு விடயமாக அது உங்களுக்கு தெரியலாம்.
- அல்லது சிலவேளைகளில், மனித உரிமைகள் உலகளாவிய அரசியல் விளையாட்டின் ஒரு ஆயுதம்போல தோன்றலாம். அரசாங்கங்கள் தாங்களும் மனித உரிமைகளை மீறிக் கொண்டே தமது எதிரிகளை விமர்சிப்பதற்காக நேர்மையற்றமுறையில் பயன்படுத்துகின்ற ஒரு விடயமாக மனித உரிமைகள் காணப்படலாம்.

ஆம், மனித உரிமைகள் சட்டத்தைப் பற்றியது, அரசியல்வாதிகள் சட்டத்தை ஆக்குகின்றனர் மற்றும் சட்டத்தரணிகள் நீதிமன்றங்களினூடாக மனித உரிமைகளுக்காக வாதிடுகின்றனர். அத்துடன், ஆம், இப்பதமானது சிலவேளைகளில் அரசியல் காரணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது மற்றும் முறைகேடாகப் பாவிக்கப்படுகின்றது. ஆனால், மனித உரிமைகள் என்பன அதற்கும் அப்பாலுள்ள விடயமொன்றாகும்.

## மனித உரிமைகளும் நாங்களும்



நாங்கள் காண்கின்றதற்கமைய, மனித உரிமைகள் என்பன உண்மையில் எமது நாளாந்த வாழ்க்கையில் நாம் கொண்டிருக்கின்ற தேவைகள் பற்றியதாகும். எங்களுடைய பாடசாலைகள், பண்ணைகள், தொழில் நிலையங்கள், வீடுகள் மற்றும் அயலிடங்களில் இடம்பெறுகின்ற விடயங்கள் தொடர்பானதாகும். நாம் ஏனையோரை எவ்வாறு நடத்துகின்றோம் மற்றும் நாம் எவ்வாறு நடத்தப்படுகின்றோம் என்பது பற்றியது. எமது வாழ்க்கையில் அதிகாரத்தினைக் கொண்டுள்ள நபர்களால்- வீட்டு உரிமையாளர்கள், தொழிற்தருனர்கள், ஆசிரியர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்களால் மற்றும் பொலிஸ், நீதிமன்றங்கள், இராணுவம் மற்றும் அரசாங்கத்தினால்- நாம் துஷ்பிரயோகத்திற்குள்ளாகாமல் எம்மைப் பாதுகாத்துக் கொள்வது பற்றியதாகும்.

பெரும்பாலும், மனித உரிமைகள் என்பது நாம் வாழ விரும்புகின்ற மற்றும் நாம் கட்டியெழுப்ப நினைக்கின்ற சமூகம் பற்றியதாகும் என இதனை நாங்கள் சுருங்கக் கூறலாம்.

எங்களுடைய சமுதாயங்களில் மனித உரிமைகள் நடைமுறையில் காணப்படவேண்டுமாயின், அது தொடர்பில் நாம் அனைவரும் ஆற்றவேண்டிய ஒரு வகிபாகமுண்டு. சாதாரண மக்கள் ஏனைய மக்களின் உரிமைகளை மதிக்காமலிருப்பதனாலேயே அதிகமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன- உதாரணமாக சில நபர்களை அவர்கள் சமமற்றவர்கள் என்றரீதியில் நாம் நடத்துகின்றோம். நபர்கள் ஏனையோருக்காக முன் வருவதில்லை மற்றும் இவ்விடயங்களை மாற்ற முயற்சிப்பதில்லை என்பதனால் தான் அரசாங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களால் தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்களை செய்யக்கூடியதாக உள்ளது. ஏனெனில், நாங்கள் பெரும்பாலும் அமைதியாகவே இருக்கிறோம்.

---



நாங்கள் அரசாங்கங்கள் அல்ல- நாங்கள் சர்வதேச மனித உரிமைகள் உடன்பாடுகளில் கையொப்பமிடவில்லை. மனித உரிமைகள் பின்பற்றப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கான சட்டக் கடப்பாடு எமக்கு இல்லை. ஆனால், நாங்கள் பகுத்தறிவு, நியாயம் மற்றும் மனசாட்சியுள்ள மனிதப் பிறவிகள் என்பதுடன் எங்களுக்கு மற்றையவர் தொடர்பில் ஒழுக்கக் கடப்பாடொன்று உள்ளது. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் கூறுவது போல.

> “மனிதப் பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவேப் பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும் உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும் மனசாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள், அவர்கள் ஒருவருடனொருவர் சகோதர உணர்வுப்பாங்கில் நடந்து கொள்ளல் வேண்டும்.’’

> ‘‘...சமூகத்தின் ஒவ்வொரு தனிமனிதனும், ஒவ்வொரு அலகும் (.......) இவ் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கான மதிப்பினை மேம்படுத்துவதற்காக கற்பித்தல் மற்றும் கல்வியினூடாக போராடுதல் வேண்டும்.’’

ஏனைய நபர்களுடைய வாழ்க்கையில் நல்ல அல்லது கெட்ட விடயங்களைச் செய்வதற்கான அதிகாரம் நம்மிடத்தில் காணப்படுகின்றபோது, மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான ஒழுக்கக் கடப்பாடு எமக்கு காணப்படுகின்றது. எம்மால் அனைத்தையும் செய்ய முடியாது- சில சந்தர்ப்பங்களில் நாம் செய்யக்கூடிய எதனையும் பற்றி சிந்தித்தலே கடினமானதாக இருக்கும்- ஆனால்அநீதி இழைக்கப்படுவதனை நாம் காண்கின்றபோது, மற்றும் உதவி செய்வதற்காக எதையாகிலும் எம்மால் **செய்யக்கூடியதாக** உள்ளபோது, அதனை முயற்சி செய்து பார்ப்பதற்கான ஒழுக்கக் கடப்பாடு எமக்கு உண்டு.

செய்தல் ஒரு நல்ல அயலவராக இருப்பதே நாம் செய்யக்கூடிய மிக எளிமையான விடயமொன்றாக இருக்கலாம்.

## மாற்றமுண்டாக்குநரின் கதைகள்



Shafaq Hassan என்பவர் தென் லண்டனில் உள்ள ஒரு பிரித்தானிய முஸ்லிம் பெண் ஆவார். அண்மைய வருடங்களில் பிரித்தானியாவில் வெறுப்புக் குற்றம் அதிகளவில் அதிகரித்திருந்தது. முஸ்லிம்கள் குறிப்பாக Shafaq போன்ற தலை மறைப்புக்களை அணிகின்ற முஸ்லிம் பெண்கள் இயங்கலையிலும் மற்றும் தெருக்களிலும் பெரும்பாலும் இலக்கு வைக்கப்பட்டனர். இத்தகைய சூழமைவில், வேறுபட்ட மத சமுதாயங்களைச் சேர்ந்த மக்களுக்கிடையிலான நாளாந்த நட்பு மற்றும் தாராள மனப்பான்மை செயற்பாடுகள் உயரிய விடயங்களாகக் கருதப்படக்கூடியவை.

நோன்பு பண்டிகையினைக் கொண்டாடுவதற்காக தனக்கும் தனது 14 வயது மகனான Ayaan இற்கும், எதிர்பாராதவிதமாக தங்களது முஸ்லிமல்லாத அயலவரொருவர் பரிசில்களை கொடுத்த போது மனிதாபிமானம் மீதான தனது நம்பிக்கை மீளக் கட்டியெழுப்பப்பட்டதாக Shafaq கூறுகின்றார்.



அந்தப் பரிசுகளை புகைப்படமெடுத்து டுவிட்டரில் பதிவிட்ட Shafaq பின்வருமாறு எழுதியிருந்தார்:

“முஸ்லிமல்லாத எங்களது அயலவரொருவர் ஒரு மாத காலமாக நோன்பிருந்த எனது 14 வயது மகனுக்கு அல்ஜீரயன் பேரிச்சம்பழங்களையும், பிரார்த்தனை பாயொன்றையும் வழங்கி எங்களை ஆச்சரியப்படுத்தியுள்ளார். அவர் 20 வருடங்களுக்கும் மேலாக எங்களது அயலவராக உள்ளார், ஆனால் நோன்பு பரிசுகளினூடாக எங்களை முழுமையாக ஆச்சரித்திற்குள்ளாக்கியுள்ளார்.”

“Ayaan நோன்பிருந்ததனை அவர் கவனித்தார் என்பதனை நான் உணரவில்லை. எனது மகன் மிகவும் விசேடமாக உணர்ந்தார். அவர்கள் நட்புமிக்க அயலவர்கள், எனது அம்மா செய்கின்ற பிரியாணிக்கு அவர்கள் தீவிர இரசிகர்கள், ஆகவே நாங்கள் எப்போதும் பிரியாணி அனுப்புவோம். நாங்கள் வேறுபட்ட சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் எங்களுடைய அயலவர், Ayaan மற்றும் அவனது மத நம்பிக்கைகளை எண்ணிப்பார்த்து அவற்றை ஊக்கப்படுத்துகின்ற விதமாகச் செயற்பட்டமை என் மனதை நெகிழ்வடையச் செய்கின்றது.”

---



Zaliha மற்றும் Magdalena ஆகியோரும் மிக வேறுபட்ட சூழமைவில் வித்தியாசமொன்றினை உருவாக்குகின்றனர். Zaliha பற்றுமிக்க முஸ்லிம் ஒருவர் என்பதுடன் பாட்டியொருவரும் ஆவார். இவர் Zanzibar இலுள்ள Pemba தீவினைச் சேர்ந்தவர். இங்குள்ள ஒரு உள்ளூர் குர்-ஆன் பாடசாலையில் அவர் கற்பிக்கின்றார்.

---



Zaliha பின்வருமாறு கூறுகின்றார்,

“எங்களுடைய சமுதாயங்களிலுள்ள பதட்டநிலையினை குறித்து நான் கவலையடைகின்றேன். எங்களுடைய இளம் சமுதாயத்தினருக்கு எங்களுடைய அரசியல் தலைவர்களில் நம்பிக்கை இல்லை மற்றும் அவர்களுக்கான வாய்ப்புக்களும் இல்லை.”

---



“இங்கு சுற்றுலாத் துறையில் பணி புரிவதற்காக தலைநகரங்களிலிருந்து வருகின்ற அநேகமானோர் கிறிஸ்தவர்கள். எனக்கு தெரிந்த பல முஸ்லிம்கள் அவர்களுடைய தொழில்களை எடுத்துக் கொள்வதற்காக கிறிஸ்தவர்களை குற்றம் சொல்கின்றனர். அரசியல் மற்றும் மத பதட்டநிலைகள் காணப்படும் பல வருடங்களுக்கூடாக நான் வாழ்ந்திருக்கின்றேன். தேவாலயங்கள் எரிக்கப்படுவதை, வெறுப்புப்பேச்சினை உள்ளடக்கிய துண்டு பிரசுரங்கள் பகிரப்படுவதனை, தேவாலயத்திற்கு போகின்ற வழிகளில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுத்தப்படுவதனை நான் பார்த்திருக்கிறேன். எம்முடைய இளைஞர்கள் மிதவாதமுடையவர்களாய் மாறுவதனை நான் பார்க்கிறேன், அது என்னை கவலையடையச் செய்கின்றது. அதனால்தான், நான் பெண்களின் மத நல்லிணக்கக் குழுவில் இணைந்தேன்.”

---



“எமது தீவகத்தில் மத வன்முறையினைத் தடுப்பதற்கு உதவ வேண்டுமென நான் விரும்புகின்றேன். குர்-ஆன் பாடசாலையில், எமது மதத்தின் அடிப்படை பகுதியாக சகிப்புத்தன்மை மற்றும் அன்பு உள்ளதென்பதை நான் சிறுவர்களுக்கு கற்று கொடுக்கிறேன். எதிர்காலம் எமது பிள்ளைகளில் தங்கியுள்ளது என்பதுடன் அவர்களுக்கு சரியான வழியினைக் காண்பிக்க வேண்டியது எமது பொறுப்பாகும்.”



Zanzibar இற்கு வந்த கிறிஸ்தவ தலைநகர வதிவிடவாளரான Magdalena உம் மத நல்லிணக்க பணியில் ஈடுபட்டுள்ளார். அவர் ஆடை அணிகின்ற விதம் மற்றும் அவரது மதம் காரணமாக அவரும் பாரபட்சத்தினை எதிர்கொண்டுள்ளார், ஆனால் அவர் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கிடையிலான பிரிவினை சரிசெய்ய வேண்டுமென உறுதி பூண்டுள்ளார். அவர் சமுதாயங்களுக்கு சென்று மத நல்லிணக்கத்திலுள்ள சவால்கள் மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பாகப் பேசுகின்ற உங்கோயா பிராந்தியத்தின் பெண்கள் சபையில் இணைந்தார்.

> ‘‘இஸ்லாமைப் பற்றி மேலதிகமாகக் கற்றுக் கொள்வதற்காகவும் முஸ்லிம்கள் எவ்வாறு வாழ்கின்றனர் என்பதனை புரிந்துக்கொள்வதற்காகவும் நான் அக்குழுவில் இணைந்தேன்’’ என அவர் விளக்குகின்றார்.
> ‘‘நாங்களனைவரும் பெண்கள், அத்துடன் அந்த காரணத்தினால் நாங்கள் அனைவரும் பாரபட்சத்திற்கு முகங்கொடுக்கின்றோம்- நாங்கள் ஒன்றாக இணைந்திருக்க வேண்டுமென்பதுடன் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கவும் வேண்டும்.’’

---



Shafaq இன் அயலவர், Zaliha மற்றும் Magdalena மற்றும் இதுபோல எண்ணிலடங்காத நபர்கள் காணப்படுகின்றனர். எம்மைப் போன்ற சாதாரண மக்கள் தங்களுடைய சமுதாயங்களில் மனித உரிமைகளை நடைமுறையில் கொண்டுவருவதற்காக தம்முடைய சொந்த மற்றும் சிறிய வழிகளில் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்- இவர்களே உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்கள்!

நாங்கள் யாராயிருப்பினும், மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எதையேனுமொன்றை செய்ய முடியும்!

**Sources**

Faith Matters www.faith-matters.org
https://www.faith-matters.org/family-surprised-by-presents-from-non-muslim-neighbour-to-celebrate-eid/

Zanzibar Inter-faith Centre (ZANZIC)
https://www.facebook.com/ZanzicMeansPeace/
https://english.danmission.dk/project/zanzibar-peacebuilding-through-interfaith-dialogue/

# அமர்வு 2

## அமர்வு 2: சிந்தனை சுதந்திரம், மனசாட்சி, மதம் மற்றும் நம்பி-க்கைக்கான அறிமுகப்படுத்தல்

### அமர்வு பற்றிய கண்ணோட்டம்

***ம. அ. ந. சு. = எண்ணம், மனசாட்சி மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம்***

இலகுதன்மைக்காக, சிந்தனைக்கான சுதந்திரம், மனசாட்சிக்கான சுதந்திரம், மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரம் என்பது பெரும்பாலும் 'மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம்' அல்லது ம. அ. ந. சு. என்ற சுருக்கப்பெயரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் இந்த வழிகாட்டியில் இப் பெயரையும் சுருக்கப்பெயரையும் பயன்படுத்துவோம் - ஆனால் சிந்தனை மற்றும் மனசாட்சி என்பனவும் பாதுகாக்கப்பட்டுள்ளன என்பதை மறந்துவிடாதீர்கள்!

பெரும்பாலும் எல்லா இடங்களிலும் சிந்தனைக்கான, மனசாட்சிக்கான, மதம் மற்றும் நம்பிக்கைக்குரிய சுதந்திரத்திற்கான மனித உரிமை சர்ச்சைக்குரியதாகவே இருக்கிறது. அதிகமானோர், தங்களது சொந்த நம்பிக்கைகளை மற்றும் ஏனைய நபர்கள் எவ்வாறு சிந்திக்க வேண்டும் மற்றும் நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிய அவர்களுடைய அபிப்பிராயங்களை சாதாரணமானதாகவும், சரியானவையாகவும் மற்றும் உண்மையாகவும் பார்க்கிறார்கள். நாம் வேறுபட்ட நம்பிக்கைகள் மற்றும் அபிப்பிராயங்களைக் கொண்டவர்களுடன் ஒரு சமூகமானத் தனிப்பட்ட உறவை கொண்டிராதவரையில், இம் "மற்றவர்களை" ஏதோ ஒரு வழியில் தாழ்ந்தவர்களாகப் பார்த்தல், அல்லது 'எமது' விழுமியங்கள் அல்லது கலாசாரத்திற்கான அச்சுறுத்தலாக அல்லது தேசிய ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தலாகப் பார்த்தல் மிக இலகுவானதாக அமையும். இது ஆழமான மத நம்பிக்கைகளைக் கொண்டுள்ள சமூகங்கள் மற்றும் மத நம்பிக்கைகளற்ற சமூகங்கள் ஆகிய இரண்டிலும் நடக்கலாம்.

மனித கலாசாரத்தின் ஏனைய அம்சங்களைப் போலவே, மதம் மற்றும் நம்பிக்கை என்பன நன்மையான, அதேவேளை தீமையான விளைவுகளையும் கொண்டிருக்கலாம். சிலநேரங்களில், நம்பிக்கைகள், நடைமுறைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புற்றுள்ள தலைவர்கள் மற்றும் அமைப்புக்கள் சமூகத்தில் குறிப்பிடத்தக்க பிரச்சினைகளை உருவாக்கும். ஆனால் பெரும்பாலும், மதம் மற்றும் நம்பிக்கை என்பன, நம்பிக்கைகளைக் கொண்டுள்ள நபர்களை வலுப்படுத்துகின்ற மற்றும் பரந்தளவான சமுதாயத்திற்கு நன்மையளிக்கின்ற வழிகளிலேயே வெளிப்படுத்தப்படுகின்றன.

ஆகவே, சிந்தனை, மனசாட்சி, மதம் மற்றும் நம்பிக்கைப் பற்றி சொல்வதற்கு சர்வதேச மனித உரிமைகளிடம் என்ன இருக்கின்றது? எமக்கு என்னென்ன உரிமைகள் இருக்கின்றன மற்றும் அரசு எப்போது மத அல்லது நம்பிக்கைக்கான நடைமுறைகளை மட்டுப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது?

இந்த அமர்வானது, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய உரிமை பற்றியும் அதனை எப்போது மற்றும் எவ்வாறு மட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பது பற்றியும் அறிமுகப்படுத்துகின்றது. இது, இவ் உரிமை பற்றி கற்றுக்கொள்ளவும் மற்றும் அது எவ்வாறு பங்குபற்றுநர்களுடைய விழுமியங்கள், நாளாந்த வாழ்க்கை மற்றும் சமூகத்துடன் தொடர்புறுகின்றது என்பது பற்றி சிந்திக்கவும் பங்குபற்றுநர்களுக்கு ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.

### *கற்றல் குறிக்கோள்கள்*

இந்த அமர்வானது, சிந்தனைக்கான சுதந்திரம், மனசாட்சிக்கான சுதந்திரம், மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய மனித உரிமை பற்றிய பங்குபற்றுநர்களின் அறிவு மற்றும் அவ்வுரிமையின் பெறுமதி பற்றிய அவர்களின் மதிப்பீட்டினை விருத்தி செய்வதில் கவனம் செலுத்துகின்றது.

இந்த அமர்வின் இறுதியில் பங்குபற்றுநர்கள் அனைவரும் பின்வருவனவற்றை செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள்:

- ம. அ. ந. சு. இன் மையப்பொருளை விளக்க: பாரபட்சம், பலாத்காரம் அல்லது வன்முறையின்றி, உங்களுடைய மதம் அல்லது நம்பிக்கையினைக் கொண்டிருக்கவும்,
- அவர்களுடைய நாளாந்த வாழ்க்கையில் ம. அ. ந. சு. எவ்வாறு தொடர்புபடுகின்றது என்று விளக்குவார், மற்றும்
- எளிய முறையில் இவ் உரிமைக்கான மட்டுப்பாடுகள் தொடர்பில் விளக்குவார்: அதாவது, எச் சந்தர்ப்பத்திலும், ம. அ. ந. சு. மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படுத்துவதற்கான காரணமொன்றாகப் பயன்படுத்தப்பட முடியாது.

## அமர்வின் உள்ளடக்கங்கள் மற்றும் நேரவிபரங்கள்

| | |
|---|---|
| ***ஆரம்பப் பயிற்சி: அனைவரும் சொல்லுங்கள்!***<br>முன்னைய அமர்வில் என்ன கற்றுக்கொண்டார்கள் என்பதை எல்லா பங்குபற்றுநர்களுக்கும் ஞாபகப்படுத்துங்கள். | 10 நிமி |
| ***கதை மற்றும் கலந்துரையாடல் பயிற்சி: முன்னொரு காலத்தில்***<br>கதை கூறலானது, பங்குபற்றுநர்கள் ம. அ. ந. சு. இனால் பாதுகாக்கப்படுகின்ற விடயங்களைப் பெறுமதி மிக்கதாகக் கருதுகிறார்களா என்பது தொடர்பாக சிந்திப்பதற்கு அவர்களுக்கு உதவும். | 45 நிமி |
| ***முன்வைப்பு: மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தை அறிமுகம் செய்தல்***<br>இந்த கற்கையின் பிரதான முன்வைப்பானது ம. அ. ந. சு. இனால் எவை பாதுகாக்கப்படுகின்றன மற்றும் அந்த உரிமை எப்போது மட்டுப்படுத்தப்படலாம் என்பதனை அறிமுகப்படுத்துகின்றது. | 15 நிமி |
| ***முழுக்குழுக் கலந்துரையாடல்: மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம்***<br>முன்கூறப்பட்ட உள்ளீடுகளின் உள்ளடக்கங்கள் பற்றிய ஒரு கலந்துரையாடல். | 10 நிமி |
| ***சிந்தித்தல் மற்றும் கலந்துரையாடல் பயிற்சி: எனது நாளில் ம. அ. ந. சு.***<br>பங்குபற்றுநர்கள் ம. அ. ந. சு. இற்குரிய அவர்களது உரிமையை அவர்களுடைய நாளாந்த வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை இனங்காண்பதற்கு உதவுதல். | 35 நிமி |
| ***நிறைவு செய்கின்ற கருத்துக்கள் மற்றும் மாற்றமுண்டாக்குநரின் கதை***<br>பங்குபற்றுநர்களை ஊக்குவிப்பதற்காக இந்த பயிற்சி நெறி முழுவதும் கதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | 5 நிமி |
| ***மொத்த நேரம்*** | ***2 மணி நேரம்*** |

## தயாராகுங்கள்

பக்கம் 15 இலுள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயாராவது' என்பதன்கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக அமர்விற்காக தயாராகுங்கள். நினைவிற் கொள்ளுங்கள் - உங்களுடைய குழுவைப் பற்றி உங்களுக்கு தெரியும். ஆகவே, உங்களுடைய குழுவின் தேவைகளுக்கு ஏற்றவகையில் அமர்வின் ஏதேனும் கூறுகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு மற்றும் மாற்றுவதற்கு உங்களால் முடியும்.

***இவ் அமர்விற்கான வளங்கள்***

பக்கம் 16 இல் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு அமர்விற்குமான நியம துணை வளங்களுக்கு மேலதிகமாக, அமர்வினை நடத்துவதற்கு உங்களுக்கு கீழ்வரும் துணை வளங்கள் தேவைப்படலாம்:

- ஒரு மென் பந்து.
- முன்னைய அமர்வில் பயன்படுத்தப்பட்ட இரசம் வைக்கும் பானை மற்றும் மனித தேவைகளைக் குறிக்கின்ற அட்டைகள்.
- 'முன்னொரு காலத்தில்' என்ற பயிற்சிக்கான குழுக் கலந்துரையாடல் வினாக்கள் எழுதப்பட்டுள்ள கையேடுகள் அல்லது நகர்வு விளக்கப்படத் தாள்கள்.
- 'எனது நாளில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம்' என்ற பயிற்சிக்கான குழுக் கலந்துரையாடல் வினாக்கள் எழுதப்பட்டுள்ள கையேடுகள் அல்லது நகர்வு விளக்கப்படத் தாள்கள்.
- நீங்கள் பவர் பொயின்ட்/திரைப்படத்தினைப் பயன்படுத்த உத்தேசிக்கவில்லையாயின், நீங்கள் பின்வருவனவற்றை தயார்ப்படுத்த விரும்பலாம்:
  - முன்னொரு காலத்தில்: கதையைக் கூறுகின்ற பவர் பொயின்ட் ஸ்லைடுகளின் அச்சுப் பிரதி.
  - பவர் பொயின்ட் ஸ்லைடுகளில் உள்ள முக்கிய உள்ளடக்கங்கள் அடங்கிய நகர்வு விளக்கப்படத் தாள்கள்.
  - எனது நாளில் ம. அ. ந. சு: அமர்விற்கான பவர் பொயின்டில் உள்ள 47-59 வரையான ஸ்லைடுகளின் அச்சுப் பிரதி.

இந்த அமர்வுக்கான ***துணைவளங்களை*** *இங்கே* காணலாம்.

***மேலதிக விருப்பத் தெரிவு – உங்களுடைய நம்பிக்கையைக் கட்டியெழுப்புங்கள்***

உங்கள், தயாராகுதலின் ஒரு பகுதியாக மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் பற்றி மேலும் கற்றுக்கொள்ள *இக்குறுந் திரைப்படங்களைப்* ஏன் பார்க்கக்கூடாது? இது உங்களுடைய நம்பிக்கை மற்றும் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கான உங்களுடைய இயலுமையினைக் கட்டியெழுப்ப உதவும். அங்கே அப்பட்டியலில் ஒவ்வொன்றும் 5-10 நிமிடங்களுக்குப்பட்ட எட்டு குறுந்திரைப்படங்கள் இருக்கின்றன. உங்களுக்கு எல்லா குறுந்திரைப்படங்களையும் பார்ப்பதற்கு நேரம் இல்லையெனினும், நீங்கள் குறுந்திரைப்படம் 2 (கொண்டிருப்பதற்கும் அல்லது தெரிவு செய்வதற்குமான உரிமை) 3 (பயிற்சி செயவ-தற்கான உரிமை) மற்றும் சற்று நீளமான குறுந்திரைப்படம் 8 (உரிமைக்கான மட்டுப்பாடுகள்) தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.

***திரைப்படங்கள்***

***அறையினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்***

இவ் அமர்விற்காக, முன் பக்கத்தைப் பாரத்த வண்ணமாக மற்றும் நடுவிலே பெரிய இடம் இருக்கத்தக்கதாக கதிரைகளை அரை வட்ட வடிவில் வைத்து ஆரம்பித்தல் சிறந்த யோசனையாகும். குழு அங்குமிங்கும் இலகுவாக போய் வரக்கூடியதாக இருக்க வேண்டும். மேசைகள் இடப்படாத பெரிய அறை மிகப் பொருத்தமானதாக இருக்கும்!



'முன்னொரு காலத்தில்'

"முன்னொரு காலத்தில் என்னும் பயிற்சி பல ஆழமான கலந்துரையாடல்களுக்கு வழிவகுத்தது. இது பங்குபற்றுனர்களின் மனக்கண்களை திறந்தது. பாலின விதிமுறைகள் முதல் தற்போதைய நிலையை உடைப்பது சரியா என்பது வரை அவர்கள் தங்கள் சொந்த சமூகங்களைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினர்."
HAMMAM HADDAD, நெறியாளர், ஜோர்தான்

## விரிவான அமர்வுத் திட்டம்

### 1. ஆரம்பப் பயிற்சி: அனைவரும் சொல்லுங்கள்! 10 நிமி

முழுக்குழுப் பயிற்சி

**விவரணம்**
பங்குபற்றுநர்கள் கையிலுள்ள பந்தை வீசுவதற்குமுன் முன்னைய அமர்வில் கற்றவற்றில் அவர்களுக்கு நினைவிருக்கின்ற விடயங்களை கூறி, பந்தை ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் வீசுவார்கள்.

**இப்பயிற்சியின் நோக்கம்**
இந்தப் பயிற்சியானது மகிழ்ச்சியானதாக அமைவதுடன், இவ் அமர்விற்கான ஊடாடல் மிக்க ஒரு ஆரம்பத்தினையும் வழங்குகின்றது. இது, முன்னைய அமர்வில் அவர்கள் என்ன கற்றுக்கொண்டார்கள், என்ன உணர்ந்தார்கள், என்ன நினைத்தார்கள் என்பதை குழுக்கள் ஞாபகப்படுத்திக்கொள்வதற்கும், அவர்களுக்கு நினைவிருக்கின்ற விடயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துக்கொள்வதற்கும் உதவுவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன் இது குழுக்களில் எவரேனும் புதிய உறுப்பினர்கள் இணைந்திருப்பின், அவர்கள் விடயங்களை உள்வாங்கிக்கொள்ளவும் உதவும்.

**வளங்கள்**

- ஒரு மென்பந்து.
- 'மனிதத் தேவைகளைக் குறிக்கின்ற அட்டைகளால்' நிரப்பப்பட்டுள்ள இரசம் வைக்கின்ற பானை (முன்னைய அமர்வில் பயன்படுத்தப்பட்டது).

**பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது**
வட்டத்தின் நடுவில் 'மனிதத் தேவைகள் அட்டைகள்' இடப்பட்டுள்ள இரசம் வைக்கின்றப் பானையை வையுங்கள். மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய மூன்று அட்டைகள் குவியலில் மேலே இருப்பதை உறுதிச் செய்யுங்கள். அப்போது, இந்த விளையாட்டின் முடிவில் அவற்றை நீங்கள் இலகுவில் அணுகக்கூடியதாக இருக்கும்.

அனைவரையும் இந்த அமர்விற்கு வரவேற்றுக் கொள்ளுங்கள். அத்துடன், முன்னைய அமர்வு தொடர்பாக விரைவான ஒரு மீளாய்வுடன் இவ் அமர்வினை ஆரம்பிக்கப் போகிறோம் என விளக்குங்கள். குழுக்களை போதுமானளவு இடைவெளி விட்டு, இரசப் பானையினைச் சுற்றி வட்டமாக நிற்கச் சொல்லுங்கள்.

அவர்கள் பந்தை எழுமாறாக மற்றவர்களுக்கு வீச போகிறார்கள் என்பதை விளக்குங்கள். பந்தைப் பெற்றுக்கொள்ளும் நபர் இறுதி அமர்விலிருந்து அவருக்கு ஞாபகத்திலுள்ள ஒரு விடயத்தை ஒரு வாக்கியத்தில் கூற வேண்டும். அது ஒரு கதையாக இருக்கலாம், அவர்கள் கற்ற விடயமொன்றாக இருக்கலாம் அல்லது அவர்களுக்கிருந்த ஒரு உணர்வாகவோ அல்லது எண்ணமாகவோ இருக்கலாம். அவ்வாறு பகிர்ந்துக்கொண்டப் பின்னர், அவர்கள் அந்த பந்தை எழுமாறாக மற்றைய பங்குபற்றுநரொருவருக்கு வீச வேண்டும். விடயங்களைப் பகிர்ந்துக்கொள்ள அனை-வருக்கும் வாய்ப்பளிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். முன்னைய அமர்வில் பங்குகொள்ளாத ஒரு பங்குபற்றுநர் பந்தைப் பிடிக்கும்போது, 'அனைவரும் சொல்லுங்கள்' என்று சத்தமாகக் கூறிவிட்டு பந்தை வீசுவார்.

**இப்பயிற்சியை எவ்வாறு நடத்துவது**
முன்னைய அமர்விலிருந்து நீங்கள் நினைவுபடுத்தக்கூடிய ஒரு விடயத்தை கூறி, பின்னர் பந்தினை மற்றொரு பங்குபற்றுநருக்கு வீசுவதனூடாக இப்பயிற்சியினை ஆரம்பியுங்கள். பங்குபற்றுநர்களின் பங்களிப்பிற்கு பதிலிறுக்கின்றபோது, 'நன்றிகள்' மற்றும் 'மிக்க நன்று' போன்ற உற்சாகப்படுத்தும் சொற்களைக் கூறுங்கள்! ஒவ்வொரு நபரும் பந்தை ஒரு தடவைப் பிடிக்கின்றவரையில் இப்பயிற்சியினைத் தொடர்ந்து செய்யுங்கள்.

**இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது**
குழுக்கள் எந்தளவிற்கு ஞாபகம் வைத்துள்ளார்கள் என்பது தொடர்பாகக் குழுக்களை பாராட்டுவதுடன் அவர்கள் ஏதேனும் முக்கிய விடயங்களை ஞாபகப்படுத்தத் தவறியிருப்பின் அவற்றை மிகவும் சுருக்கமாக கூறுங்கள். பின்னர் நடுவில் உள்ள இரசப் பானைக்கு அருகில் சென்று மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய மூன்று அட்டைகளை வெளியே எடுங்கள். அவ் அட்டைகளை உயர்த்திப்பிடித்து, நாம் இந்த அமர்வில் சிந்தனைக்கான, மனசாட்சிக்கான மற்றும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய உரிமை தொடர்பில் ஆராய்வோம் என அனைவருக்கும் கூறுங்கள்.

## 2. *கதை மற்றும் கலந்துரையாடல் பயிற்சி: முன்னொரு காலத்தில்* 45 நிமி

***கதை***

***விவரணம்***

இப் பயிற்சியானது 'புல்லாங்குழல் மற்றும் தாளவாத்தியத்தின் பாடல்கள்' எனும் கதையை அடிப்படையாகக் கொண்டது. இதில் நான்கு பகுதிகள் இருக்கின்றன: கதைகூறல் - முழுக்குழுக் கலந்துரையாடல் - குழுக்கலந்துரையாடல் - பின்னூட்டல்/முடிவு.

***நோக்கம்***

இந்தப் பயிற்சியானது, ம. அ. ந. சு. பாதுகாக்கின்ற விடயங்களுக்கு குழுக்கள் பெறுமதியளிக்கின்றார்களா என்பது பற்றியும், ஆம் எனில், இந்த விடயங்களுக்கு அவர்களுடைய பாரம்பரியங்கள் மற்றும் கலாசாரங்களில் எவ்வாறு பெறுமதியளிக்கப்பட்டுள்ளன என்பது பற்றியும் சிந்திப்பதற்கு குழுக்களிற்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டது. இந்தக் கதை மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய ஏழு முக்கியச் சொற்களை எடுத்துக்காட்டுகின்றது: சிந்தித்தல், நம்புதல், உரியவராயிருத்தல்,பயிலுதல், கேள்வி கேட்டல், மாற்றுதல் மற்றும் மறுத்தல்.

***வளங்கள்***

- கதையின் எழுத்துப்பிரதி ( பக்கம் 56 அல்லது இந்த இணைப்பைப் பாருங்கள்).
- கதையினை விளக்குகின்ற அமர்விற்கான பவர்பொயின்டின் 3-23 வரையான ஸ்லைடுகள் அல்லது இந்த ஸ்லைடுகளின் அச்சுப்பிரதி (தேவையேற்படுமிடத்து, இவை இல்லாமலும் இப் பயிற்சியினை செய்ய முடியும்).
- முன்னொரு காலத்தில் குழு வேலைக்கான வினாக்களைக் கொண்ட கையேடு (3-4 பங்குபற்றுநர்களுக்கு ஒன்று வீதம்) அல்லது குழு வேலைக்கான வினாக்கள் ஏற்கனவே எழுதப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாள்.

***கதை, சுவரொட்டிகள் மற்றும் கையேடுகளை*** ***இங்கே*** கண்டறியவும்.

***முன்னாயத்தம்***

கதையை வாசிப்பதற்கு அல்லது அதனை உங்களது சொந்த சொற்களினால் திரும்பச் சொல்வதற்கு பயிற்சி செய்யுங்கள். அதனூடாக, நீங்கள் வசீகரமான கதைகூறுநராக முடியுமென்பதுடன், எந்த பவர்பொயின்ட் ஸ்லைடினை அல்லது சுவரொட்டியினை எப்போது காண்பிக்க வேண்டும் என்பது தொடர்பான குழப்பமின்றி நம்பிக்கையுடன் செயற்பட முடியும்.

நீங்கள் சுவரொட்டிகளைப் பயன்படுத்துகிறீர்களாயின், அவற்றை முன்கூட்டியே ஒழுங்குமுறைக்கேற்ப சுவரில் பொருத்திவைப்பது குறித்து கவனத்திற்கொள்ளுங்கள். இது பொருத்தமான சந்தர்ப்பத்தில் சரியான சுவரொட்டியினை சுட்டிக்காட்டுவதை இலகுபடுத்தும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 35 நிமி

- ***கதை கூறுதல்*** (15 நிமி)
  நீங்கள் ஒரு கதைப்பகுதியை வாசிக்கப்போகிறீர்கள் என்றும் அந்தக் கதையானது பின்னர் முழுக்குழுவிலும் சிறிய குழுக்களிலும் கலந்துரையாடப்படும் என்றும் கூறுங்கள்.
  கதையைக் கூறி பவர்பொயினட் ஸ்லைடுகள்/சுவரொட்டிகளைக் காண்பியுங்கள். அதிக உணர்வுகளுடன் கதையை வாசிக்க முயற்சி செய்யுங்கள்!

- ***விரைவான முழுக்குழு கலந்துரையாடல்*** (5 நிமி)
  பின்வரும் வினாக்களுக்கு பதிலளிப்பதற்காக பங்குபற்றுநர்களை கையுயர்த்துமாறு கூறுங்கள் - ஒவ்வொரு வினாவிற்கும் பதில்களாக ஒன்று அல்லது இரண்டு பதில்களை மட்டும் செவிமடுத்துக்கொள்ளுங்கள்.
  – இந்தக் கதையில் வெளிப்படும் செய்திகள் அல்லது ஒழுக்கங்கள் யாதென நீங்கள் நினைக்கிறீர்கள்?
  – இக்கதையிலுள்ள கதாப்பாத்திரங்களின் நடத்தை தொடர்பாக நீங்கள் பாராட்டக்கூடிய ஏதாவது இருந்ததா?

***ஆலோசனைக் குறிப்பு!*** சிறிய குழுக் கலந்துரையாடலுக்கு போதுமான நேரமுள்ளது என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு நேர முகாமைத்துவம் தொடர்பில் கவனமாக இருங்கள்.

(புல்லாங்குழலும் மேள வாத்தயமும் எனும் கதையுடன் தம்மை தொடர்பு படுத்திக்கொள்ளபசங்குபற்றுவோர் சிறமப்படுவாராயின் அது அக்கிராமத்தினரின் நம்பிக்கை மற்றும் சமய வழக்கம் என்பதை விளக்குங்கள்.)

- ***சிறிய குழுக் கலந்துரையாடல்*** (15 நிமி)
  பங்குபற்றுநர்களை 3-4 குழுக்களாகப் பிரித்துக் கொள்ளுங்கள், ஒவ்வொரு குழுவிற்கும் குழு வேலைக்கான வினாக்களின் நகலொன்றினை வழங்குங்கள்.
  ஏழு பிரதான சொற்கள் காணப்படுகின்ற பவர்பொயின்டின் 24 ஆவது ஸ்லைடினை அல்லது அவை எழுதப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாளினைக் காட்டுங்கள். இவ் அனைத்து சொற்களும் கதையுடன் ஏதோ ஒரு விதத்தில் தொடர்புறுகின்றன என்பதனை விளக்குங்கள்.
  (பிரதான சொற்கள்: சிந்தித்தல், நம்புதல், உரியவராயிருத்தல், பயிற்சிசெய்தல், கேள்வி கேட்டல், மாற்றுதல் மற்றும் மறுத்தல்.)

- கீழ்வரும் வினாக்களைக் கலந்துரையாடுமாறு குழுக்களுக்கு சொல்லுங்கள்:

– இச் சொற்கள் கதையில் நடந்தவற்றுடன் எவ்வாறு தொடர்புறுகின்றன மற்றும் கதாபாத்திரங்கள் தொடர்பில் நீங்கள் பாராட்டுகின்ற விடயங்களுடன் அல்லது உங்களுக்கு பிடிக்காத விடயங்களுடன் எவ்வாறு தொடர்புறுகின்றன?
– உங்களுடைய கலாசார அல்லது மத பாரம்பரியங்களில் சிந்திக்கின்ற, நம்புகின்ற, உரியவராயிருக்கின்ற, பயிற்சிசெய்கின்ற, கேள்வி கேட்கின்ற, மாற்றுகின்ற மற்றும் மறுக்கின்ற மக்கள் தொடர்பான சாதகமான விடயங்களைக் கூறுகின்ற கதைகள் உள்ளனவா என உங்களால் சிந்திக்க முடியுமா?
– மக்கள் அனைவரும் இந்த விடயங்களைச் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளபோது சமூகம் நன்மையடைந்ததா அல்லது இது சமூகத்திற்கு ஒரு அச்சுறுத்தலா அல்லது இரண்டுமா?
– இத்தகைய விடயங்களைச் செய்யும் மக்களின்றி சாதகமான மாற்றம் சாத்தியமானதா?

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது*** 10 நிமி
தங்களுடைய கலந்துரையாடலில் ஊக்கமளிப்பதாக, முக்கியமானதாக அல்லது கடினமானதாக அவர்கள் உணர்ந்த ஒரு விடயத்தினைப் பகிர்ந்து கொள்ளுமாறு ஒவ்வொரு குழுவிற்கும் சொல்லுங்கள்.

கீழ்வரும் வரிகளுடன் சேர்த்து எதையேனும் சொல்வதனூடாக நிறைவு செய்யுங்கள்:

- நாம் இக்கதையின் வாயிலாக, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய மனித உரிமையுடன் தொடர்புற்றுள்ள விழுமியங்கள் மற்றும் உரிமைகளைப் பற்றி சிந்திப்பதற்கு ஆரம்பித்துள்ளோம்.

- இந்த விழுமியங்கள் மற்றும் உரிமைகள் எளிமையானவையோ அல்லது முரண்பாடுகளற்றவையோ அல்ல. அவை எம்மை சிறிது வருத்தப்படச் செய்துள்ளது. உதாரணமாக, நீங்கள் பின்வருமாறு சிந்திக்கலாம்:
  – மக்கள் தங்களுக்காக சிந்திப்பதற்கும் தங்களுடைய வாழ்க்கையினை எவ்வாறு வாழ வேண்டுமென தெரிவு செய்வதற்குமான சுதந்திரத்தினைக் கொண்டிருப்பின், எமது கலாசாரம், பாரம்பரியங்கள் மற்றும் நம்பிக்கைகள் அச்சுறுத்தலுக்கு உட்படாதா?
  – இச் சுதந்திரங்களை மக்கள் நன்மைக்காகவே பயன்படுத்துவார்கள் என்பதற்கு எம்மிடம் என்ன உத்தரவாதம் உண்டு? கெட்ட அபிப்பிராயங்கள் அல்லது கெட்ட எண்ணங்களையுடைய மக்கள் இருக்கிறார்கள். அனைவரும் Ziana போல தங்களுடைய நண்பர்களின் வாழ்க்கை சிறப்பானதாக அமைய வேண்டுமென விரும்பமாட்டார்கள். சிலநேரங்களில் மக்கள் ஏனைய நபர்களை ஊறுபடுத்துகின்ற அவர்களுடைய செயல்களை நியாயப்படுத்துவதற்கு தங்களுடைய நம்பிக்கைகளைப் பயன்படுத்துகின்றனர் - Ono இனை துன்புறுத்திய மற்றும் 'அனைவரையும் வரவேற்கின்றோம்' என்ற அடையாளங்களை நீக்குவதற்காக குழுவொன்றினை ஏற்பாடு செய்த தேநீர் கடை உரிமையாளரைப் போன்றோர்.

- இவை நாங்கள் தொடர்ச்சியாக ஆராயப்போகின்ற மிக முக்கியமான வினாக்களாகும்! மறுபுறம், மக்கள் சிந்திப்பதற்கும் மற்றும் நம்புவதற்கும் மற்றும் அவர்கள் தீமையானதெனக் கருதுகின்ற விடயங்கள் தொடர்பாக - சந்தையில் இடம்பெற்ற பாரபட்சத்தினைப் போன்ற விடயங்கள் - கேள்வி கேட்பதற்கும் அனுமதிக்கப்படாதவரையில் சாதகமான மாற்றம் ஏற்படாது.

- ஆகவே, மக்களுக்கு எவ்வெவ் உரிமைகள் காணப்பட வேண்டும் மற்றும் எப்போது அரசாங்கத்தினால் அவ் உரிமைகளை மட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்? நாங்கள் இப்போது இது பற்றி சொல்வதற்கு சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் என்ன இருக்கின்றது எனக் கற்கப் போகின்றோம்.

## 3. முன்வைப்பு: மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை அறிமுகப்படுத்தல் 15 நிமி


முன்வைப்பு

***விவரணம் மற்றும் நோக்கம்***
இம் முன்வைப்பானது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் மற்றும் அது எப்போது மட்டுப்படுத்தப்படலாம் என்பது பற்றி அறிமுகம் செய்கின்றது. இது இப்பயிற்சி நெறிக்கான பிரதான அறிவு உள்ளீட்டினை வழங்குகின்றது.

**வளங்கள்**

- இவ்வழிகாட்டியின் பக்கம் 60 இல் முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதியினைப் பார்க்கலாம்.
- எழுத்துப்பிரதியானது அமர்விற்கான பவர்பொயின்டின் 25-46 வரையான ஸ்லைடுகளை ஒத்து அமைந்திருக்கும் என்பதுடன் அது இவ் ஸ்லைடுகளுக்கான வளவாளர் குறிப்புக்களுள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- அமர்விற்கான துணை வளங்களில் மாற்றங்களை செய்வதற்கேற்றவகையில், எழுத்துப்பிரதியின் Word வடிவம் இணைக்கப்பட்டுள்ளது.

*முன்னாயத்தம்*
பக்கம் 15 இல் வழங்கப்பட்டுள்ள ‘ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயார்படுத்துவது’ என்பதிலுள்ள வழிகாட்டல்களுக்கமைய தயாராகுங்கள். எழுத்துப்பிரதி மற்றும் பவர்பொயின்ட் ஸ்லைடுகளை (அல்லது ஸ்லைடுகளின் பிரதான கருத்துக்களைக் கொண்டு நகர்வு விளக்கப்படத் தாள்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்) வாசித்து உங்களுக்கேற்றவகையில் மாற்றியமைத்துக் கொள்ளுங்கள் மற்றும் ஸ்லைடுகள்/நகர்வு விளக்கப்படத் தாள்களுடன் நி-கழ்த்துகையினை செய்வதற்கு பயிற்சி செய்து பாருங்கள்.

***ஆலோசனைக் குறிப்பு!*** உங்களுடைய முன்வைப்பு முடிவு செய்யப்படுகின்றவரையில், வினாக்கள் /கருத்துக்களை பதிவு செய்து வைத்திருக்குமாறு நபர்களிடம் கூறுங்கள்.

*குறிப்பு*

உங்களுடைய நாட்டில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பில் காணப்படுகின்ற மிக முக்கியமான சட்டங்கள் மற்றும் அவை எவ்வாறு சர்வதேச நியமங்களுடன் தொடர்புறுகின்றன என்பது தொடர்பானத் தகவல்களை சேர்ப்பதற்காக நீங்கள் இம் முன்வைப்பில் இன்னும் சில நிமிடங்களை சேர்க்க விரும்பலாம். இத்தகவல்களை நீங்கள் கண்டறிவதற்கு உதவுகின்ற ஆலோசனைகள் மற்றும் தொடுப்புக்களை நெறியாளருக்கான வழிகாட்டி
பக்கம் 153-154 வரை காணலாம்.
நபர்களால் நீண்ட நேரத்திற்கு அவதானம் செலுத்த முடியாது என்பதனால் அதிக நேரம் பேச வேண்டாம்! தேவையாயின் உற்சாகப்படுத்துகின்ற செயற்பாடொன்றினை நிகழ்த்துகையின் பின் செய்யுங்கள். இதனைச் செய்வதற்காக ஏனைய செயற்பாடுகளிலிருந்து நேரத்தை ஒதுக்கி கொள்ளுங்கள் (உதாரணமாக ஆரம்பப் பயிற்சியினை நீக்குதல்) அல்லது நீளமான அமர்வொன்றினை ஏற்பாடு செய்யுங்கள்.

## 4. *முழுக்குழு கலந்துரையாடல்: மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம்* 10 நிமி



*முழுக்குழு கலந்துரையால்*

*விவரணம் மற்றும் நோக்கம்*
முன்செய்யப்பட்ட முன்வைப்பு தொடர்பான கலந்துரையாடலானது, பங்குபற்றுநர்கள் கற்றுக் கொள்வதனை சாத்தியப்படுத்தும்.

*இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*
உள்ளீடு தொடர்பான பொதுவான கருத்துக்கள் மற்றும் வினாக்களை கூறும்படி சொல்லுங்கள். பின்னர், கீழ்வரும் வரிகளை உள்ளடக்கிய கேள்விகளைக் கேளுங்கள்:

- முன்வைக்கப்பட்ட உரிமைகளுள் எவை உங்களுக்கு முக்கியமானவை?
- நீங்கள் ஏற்றுக் கொள்வதற்கு சிரமப்பட்ட அல்லது குழப்பமடைந்த ஏதேனும் காணப்பட்டதா?

***ஆலோசனைக் குறிப்பு!*** மனித உரிமைகள் தொடர்பான தந்திரமான கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு உங்களுக்கு உதவக்கூடிய வழிகாட்டல்களை நீங்கள் 21-28 ஆகிய பக்கங்களில் காணலாம்.

10 நிமிடங்களுக்கு பின்னர், முழுக்குழுக் கலந்துரையாடலினை நிறைவு செய்யுங்கள். தற்போது குழுக்கள் பயிற்சியொன்றினூடாகக் கலந்துரையாடலினைத் தொடரப் போகின்றன மற்றும் விடயங்களை ஆராயப் போகின்றன என விளக்குங்கள்.

***நினைவிற் கொள்ளுங்கள்:*** நீங்கள் நெறியாளரே தவிர நிபுணர் அல்ல! உங்களால் பதிலளிக்கக்கூடிய கேள்வியொன்றினை பங்குபற்றுநரொருவர் கேட்கின்றபோது அதற்கு பதிலளியுங்கள், ஆனால் பதில்களைத் தெரிந்து வைத்திருக்க வேண்டுமென்ற அழுத்தத்தினை நீங்கள் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை! இது பரஸ்பர தேடுகைச் செயன்முறையொன்று என்றும் உங்களுடைய வகிபாகம் கலந்துரையாடலை சாத்தியப்படுத்துவதேயொழிய நிபுணராக இருப்பதல்ல என்பதனையும் அழுத்திக் கூறுங்கள்.

## 5. *முழுமையான பயிற்சி: எனது நாளில் ம. அ. ந. சு.* 30 நிமி



*முழுக்குழுப் பயிற்சி*

*விவரணம்*
‘சிந்தித்தல்-சோடியாதல் - பகிர்தல்’ பயிற்சி - இதில் நபர்கள் தங்களுடைய நாளாந்த வாழ்க்கையில் அவர்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள், நம்புகிறார்கள், உரியவராகின்றார்கள், பயிற்சி செய்கிறார்கள், கேள்வி கேட்கிறார்கள், சவாலுக்குட்படுத்துகின்றார்கள் மற்றும் மறுக்கின்றார்கள் என்பது தொடர்பாக சிந்திப்பார்கள்.

*நோக்கம்*
இப்பயிற்சியானது, நாங்கள் எங்களுடைய நாளாந்த வாழ்க்கையில் எங்களுடைய சிந்தனைக்கான, மனசாட்சிக்கான, மற்றும் மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரத்தினைப் பயன்படுத்துகின்றோம் என்பதனை உணர நபர்களுக்கு உதவி செய்வதனை இலக்காகக் கொண்டுள்ளது. இவ் உரிமையானது கருத்துருவில் மட்டுமல்லாது, நடைமுறையிலும் எமக்கு முக்கியமானது என்பதனை எடுத்துக்காட்டுவதற்கு இப்பயிற்சி உதவுகின்றது.

*வளங்களும் முன்னாயத்தமும்*

- அமர்விற்கான பவர்பொயின்டின் 48-60 வரையான ஸ்லைடுகள் அல்லது இவ் ஸ்லைடுகளின் அச்சுப் பிரதிகளை அமர்விற்கு முன்னரே சுவரில் ஒட்டி வைத்திருத்தல்.
- 3-4 பங்குபற்றுநர்களுக்கு குழு வேலைக்கான வினாக்களின் ஒரு பிரதி அல்லது குழு வேலைக்கான வினாக்கள் ஏற்கனவே எழுதப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாள்(கள்).

***பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 4 நிமி

ஒவ்வொருவரையும் சோடிகளாகப் பிரிய சொல்லுங்கள். கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:

நாங்கள் தற்போது எங்களுடைய நாளாந்த வாழ்க்கையில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் என்றால் என்ன என்பது குறித்து சிந்திக்கப் போகிறோம். முதலாவதாக, ஒவ்வொரு நபரும் அமைதியாக சிந்திப்பார். பின்னர், எங்களுடைய சிந்தனைகளை ஒன்றாகக் கலந்துரையாட முன்பதாக அவற்றை எங்களுடைய சோடியுடன் பகிர்ந்து கொள்வோம்.

கீழ்வரும் பிரதியினை வாசியுங்கள் (அல்லது அதனையொத்த வேறெதனையும் சொல்லுங்கள்). நீங்கள் வாசிக்கின்றபோது 47-59 வரையான ஸ்லைடுகளை அல்லது இவ் ஸ்லைடுகளின் அச்சுப் பிரதிகளை சுட்டிக்காட்டுங்கள்.

"உங்கள் வாழ்க்கையில் வழக்கமான ஒரு நாள் பற்றி சிந்தியுங்கள். நீங்கள் உங்களுடைய சிந்தனைகளையும் நம்பிக்கைகளையும் வினாக்களையும் மற்றும் மதமொன்றிற்கு உரியவராயுள்ள அல்லது உரியவரல்லாதுள்ள உங்களது உணர்வு மற்றும் அடையாளம் என்பவற்றை எப்போது மற்றும் எவ்வாறு வெளிப்படுத்துவீர்கள்? அது

- நீங்கள் உண்ணும் உணவில் அல்லது உண்ணாதவற்றில் கூட இருக்கலாம்,
- நீங்கள் அணியும் ஆடைகளில் அல்லது அணியாதனவற்றில் இருக்கலாம்,
- பிரார்த்தனைகளில் அல்லது சடங்குகளில் அல்லது வாழ்க்கையின் முக்கிய தருணங்களது கொண்டாட்டங்களில் இருக்கலாம்,
- நீங்கள் வாசிக்கின்றவற்றில் இருக்கலாம்,
- நீங்கள் உங்கள் குடும்பம், நண்பர்கள் அல்லது உங்களுடன் பணியாற்றுபவர்களுடன் மேற்கொள்கின்ற கலந்துரையாடல்களில் அல்லது நீங்கள் உங்கள் குழந்தைகளை எவ்வாறு வளர்க்கிறீர்கள் என்பதில் இருக்கலாம்.
- நீங்கள் சமுதாயத்திற்கு எவ்வாறு சேவையாற்றுகின்றீர்கள் அல்லது உங்களுடைய சமூகத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக எத்தகைய ஈடுபாட்டினைக் கொண்டுள்ளீர்கள் என்பதில் இருக்கலாம்."

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 30 நிமி

***சிந்தியுங்கள்!*** (5 நிமி)

ஒவ்வொருவரையும் வழக்கமான நாளொன்று தொடர்பாக அமைதியாக சிந்திப்பதற்காக 5 நிமிடங்களை செலவிடுமாறு கேட்டுக் கொள்ளுங்கள். சாதாரண நாளொன்றின்போது, அவர்கள் எவ்வாறு தங்களது சிந்தனைகளையும், நம்பிக்கைகளையும் வினாக்களையும், மற்றும் மதமொன்றிற்கு உரியவராயுள்ள அல்லது உரியவரல்லாதுள்ள உணர்வினை எப்போது மற்றும் எவ்வாறு வெளிப்படுத்துகின்றனர்?

***சோடியாதல்*** (10 நிமி)

தமது சிந்தனைகளை தங்களது சோடியுடன் பகிர்ந்து கொள்ளுமாறு பங்குபற்றுநர்களுக்கு கூறுங்கள். அத்துடன், கீழ்வருவனவற்றுள் அவர்கள் கலந்துரையாடுவதற்கு வசதியாயுள்ள வினாக்கள் தொடர்பாக கலந்துரையாடுமாறு கூறுங்கள்:

- உங்களுடைய அபிப்பிராயத்தை நீங்கள் பகிர்ந்தபோது அல்லது ஏதேனும் விடயத்தைப் பற்றி வினவியபோது உங்களுக்கு ஏற்பட்ட/நடந்த அனுபவத்தினை/கதையினைப் பகிர்ந்துக்கொள்ளுங்கள். என்ன நடந்தது மற்றும் அது எவ்வாறு உணரப்பட்டது?
- உங்களுடைய அபிப்பிராயத்தை பகிர்ந்துக்கொள்ள முடியாதபோது, நீங்கள் தவறென உணர்ந்த ஒருவிடயம் தொடர்பாக கேள்வியெழுப்ப முடியாதபோது மற்றும் உங்களுடைய அடையாளத்தை வெளிப்படுத்த முடியாதபோது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தினைப் பகிர்ந்துக்கொள்ளுங்கள். உங்களால் அந்தத் தருணம் எவ்வாறு உணரப்பட்டது?
- உங்களுடைய அடையாளத்தையும் அபிப்பிராயங்களையும் உங்களுடைய நாளாந்த வாழ்க்கையில் வெளிப்படுத்தக்கூடியதாக இருப்பது உங்களுக்கு முக்கியமானதா? நீங்கள் தவறானது என கருதும் அபிப்பிராயங்களையும் நடைமுறைகளையும் கேள்விக்குட்படுத்தக்கூடியதாக இருப்பது முக்கியமானதா?
- உங்களது சொந்த நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொள்ளாது, மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் மற்றும் நம்புகிறார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டு வாழ உங்களைக் கட்டாயப்படுத்தினால் நீங்கள் எவ்வாறு உணருவீர்கள்?

***பகிர்ந்துக் கொள்ளுங்கள்*** (15 நிமி)

நபர்களை மீண்டும் முழுக்குழுவிற்கு வருமாறு கூறுங்கள். எங்களுடைய சோடிகளுடன் சேர்ந்து நாம் சிந்தித்த கேள்விகள் அனைத்தும் கீழ்வரும் கேள்விகளுடன் தொடர்புடையவை:

- சிந்தனைக்கான, மனசாட்சிக்கான மற்றும் மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரத்தினால் பாதுகாக்கப்பட்டுள்ள உரிமைகள் எங்களுக்கு முக்கியமானவையா?
- எமக்கு அவை இல்லாதபோது, அது எவ்வாறு உணரப்படுகின்றது?

***ஆலோசனைக் குறிப்பு!***
இக்கலந்துரையாடல் ஆரம்பிக்கப்படுவதற்கு தாமதமாகினால், உங்களுடைய சொந்த வாழ்க்கையில் உள்ள மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் பற்றிய சில பிரதிபலிப்புக்களைப் பகிர்ந்துக் கொள்வதற்கு ஆயத்தமாயிருங்கள்.

தங்களுடைய சோடியுடன் செய்துள்ள கலந்துரையாடல்களை அடிப்படையாகக் கொண்டு, யாராவது இது தொடர்பான சிந்தனைகள், உணர்வுகள் அல்லது அனுபவங்களைப் பகிர்ந்துக் கொள்ள விரும்புகின்றனரா என கேளுங்கள். அனைத்து பகிர்தல்களும் தன்னார்வமாக செய்யப்பட வேண்டும்! சிறிது நேரத்தின் பின்னர், எங்களுடைய பகிரப்பட்டுள்ள மனிதத் தன்மையானது, சிந்தித்தல் - நம்புதல் - உரியவராயிருத்தல் - பயிற்சி செய்தல் - கேள்வியெழுப்பல் - மாற்றுதல் மற்றும் மறுத்தலுக்கான உரிமைகள் தொடர்பாக அனைவருக்கும் ஒரே-மாதிரியான மனிதத் தேவைகளே உள்ளன என்பதை குறிக்கின்றதா? இவ் உரிமைகள் எந்தவொரு மதம் அல்லது நம்பிக்கையினைச் சேர்ந்த மக்களுக்கும் இன்றியமையாதனவா?

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது*** 1 நிமி
ஒவ்வொருவருடையதும் சிந்தனைகளுக்காகவும், கலந்துரையாடலில் அவர்களுடைய ஈடுபாட்டிற்காகவும் நன்றிகூறி இப்பயிற்சியினை நிறைவு செய்யுங்கள்.

## *6. நிறைவு செய்கின்ற கருத்துக்கள் மற்றும் மாற்றமுண்டாக்குநரின் கதை* 5 நிமி

குறும்பேச்சு

***விவரணம்***
தன்னுடைய மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்காக போராடிய ஒரு சாதாரண நபரின் கதையொன்றினைப் பயன்படுத்தி, அதனை மாற்றத்தினை ஏற்படுத்தலுடன் தொடர்புபடுத்தி சொல்லப்படுகின்ற இச்சிறிய கதை இவ் அமர்வினை முடிவுக்கு கொண்டுவரும் என்பதுடன், அது அடுத்த அமர்வுகளில் பங்குபற்றுநர்கள் எதனை எதிர்பார்க்கமுடியுமென்பதனையும் கூறும்.

***என்ன சொல்ல வேண்டும்***
கீழ்வரும் விடயங்களை சொல்லுங்கள். சாத்தியமாயின், பீட்டரின் கதையினை எடுத்துக் காட்டுகின்ற அமர்விற்கான பவர்பொயின்டின் 61-63 வரையான ஸ்லைடுகளைப் பயன்படுத்துங்கள்.

- இன்று நாங்கள் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய உரிமை பற்றி ஆராய்ந்தோம். அத்துடன் சர்வதேச சட்டத்திற்கமைய நாமும் மற்றும் ஏனைய அனைவரும் கொண்டிருக்கின்ற உரிமைகள் பற்றியும் கற்றோம்.
- இது ஒரு சிறிது சிக்கலான மனித உரிமையொன்றாகும் என்பதுடன் இதில் எங்களால் புரிந்து கொள்ளமுடியாத அல்லது நாங்கள் ஏற்றுக்கொள்ளாத விடயங்கள் காணப்படலாம். ஆனால், நாங்கள் புரிந்துக் கொள்ளக்கூடிய மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்களும் உண்டென எனக்கு நிச்சயமாக தெரியும். இதுவே, மாற்றமுண்டாக்குநர்கள் ஆரம்பிப்பதற்கான சிறந்த இடமாகும்!
- எங்களைப் போன்ற சாதாரண மக்கள் எமது சமுதாயத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக வித்தியாசமொன்றினை ஏற்படுத்த முடியும்.
- பக்கம் 64 இலுள்ள பீட்டரின் கதையை வாசியுங்கள், (அமர்விற்கான தரவிறக்கம் செய்யப்படக்கூடிய துணை வளங்களிலும் கிடைக்கக்கூடியதாக இருக்கும்).
- எங்களது அடுத்த அமர்வில், நாம் சிறப்புரிமை மற்றும் பாதகநிலை மற்றும் அடையாளம் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதில் நேரத்தை செலவழிக்கப் போகிறோம். அத்துடன், இனிவருகின்ற அமர்வுகளில் நாங்கள் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய உரிமையின் மீறல்கள் பற்றியும் நாம் மாற்றமொன்றினை ஏற்படுத்தக்கூடிய வழிமுறைகள் பற்றியும் கற்கப் போகின்றோம்.



‘புல்லாங்குழல் மற்றும் தாளவாத்தியத்தின் பாடல்கள்’

“பங்கேற்பாளர்கள் கதை-கூறுவதனை விரும்பினர் - இது அமர்வின் சிறந்த பகுதியாகும். கதாபாத்திரங்கள், விளக்கப்படங்கள், கருப்பொருள்கள் - போன்றவை அவர்களுடன் பேசியது.”
**HIDAYA DUDE**, நெறியாளர், தன்சானியா

# புல்லாங்குழல மற்றும தாளவாத்தியத்தின் பாடல்கள்

Katherine Cash மற்றும் Sidsel-Marie Winther Prag ஆகியோரின் ஆக்கம்
Toby Newsome இன் விளக்கம்

*முன்னொரு காலத்தில் எனும் பயிற்சிக்கான அடிப்படையினை இக்கதை உருவாக்குவதோடு அமர்வு 2 இன் 3-23 வரையான பவர் பொயின்ட் ஸ்லைடுகளில் விளக்கப்பட்டுள்ளது.*




**புல்லாங்குழல் மற்றும் தாளவாத்தியத்தின் பாடல்கள்**

---



முன்னொரு காலத்தில், இரண்டு கிராமங்கள் இருந்தன.

---



காட்டிலுள்ள கிராமத்தில் வசித்த மக்கள் மேள வாத்தியம் மற்றும் நடனத்திற்கு பேர் போனவர்களாய் இருந்தார்கள். ஒரு பிள்ளை நேராக நிமிர்ந்து அமர ஆரம்பிக்கின்ற அத்தருணத்திலேயே, அவர்களுக்கு மேளம் வழங்கப்பட்டது. அமைதியான மழையினை போல சத்தமெழுப்புகின்ற சிறிய மேளங்களும் இருந்தன, இரண்டு பேர் தூக்கிச் செல்லக் கூடிய இடி போன்ற சத்தமெழுப்புகின்ற மேளங்களும் இருந்தன. மேளம் இசைத்தல் வாழ்க்கையுடன் இணைந்திருந்தது- கொண்டாட்டங்கள், துயர் நிகழ்வுகள் மற்றும் அவற்றுக்கிடையிலான அனைத்திலும் மேளம் இசைத்தல் இணைந்திருந்தது - அத்துடன் காட்டின் மெய்ப்பொருளுடன் சேர்ந்து, மேள இசையே அவர்களது வாழ்க்கையினை ஒற்றுமையாக வைத்திருப்பதாக மக்கள் நம்பினார்கள்.

---



அதன்கீழிருந்த பள்ளத்தாக்கிலிருந்த கிராமத்தில் வசித்த மக்கள் மேளம் வாசிப்பவர்களை புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் மேள இசையினை விரும்பத்தகாத இரைச்சலாக பார்த்ததுடன் அவ் இடிமுழக்கம் போன்ற சத்தத்தினைப் பார்த்து இழிவாக சிரித்தார்கள். இக்கிராமத்தில் ஒரு ஆண் பிள்ளை பிறக்கின்றபோது, அப்பிள்ளையின் தந்தை மரத்தண்டுகளினால் அல்லது எலும்புகளினால் புல்லாங்குழலொன்றினை செய்வார். அதனை அப்பிள்ளை தன் வாழ்நாள் முடிவு வரையில் கயிறினால் கட்டி கழுத்தில் தொங்கப் போட்டுக் கொள்ள வேண்டும். அவர்களுடைய பாரம்பரிய இசையில் தேர்ச்சி பெறுவதற்கு பல வருடங்கள் எடுத்தன என்பதுடன் சொர்க்கத்திலுள்ள கடவுள் வசீகரிக்கப்பட்டு வயல்வெளிகளுக்கு மழை மற்றும் சூரிய வெளிச்சத்தைத் தருமளவிற்கு புல்லாங்குழலை இனிமையாக இசைக்கக்கூடிய ஆண்களின் திறமைகளுக்கு கௌரவமளிக்கப்பட்டது.

---



மேள கிராமத்திலுள்ள கிராமத்தவர்கள் தங்களுடைய வணிகப் பொருட்களை விற்பதற்காக புல்லாங்குழல் கிராமத்திலுள்ள வாராந்த சந்தைக்கு சென்றபோதும், இரு கிராமத்திலுள்ள மக்களும் ஒன்றாகக் கலக்கவில்லை. சந்தை இடத்தில் மேளமிசைத்தல் தடை செய்யப்பட்டிருந்தது. புல்லாங்குழல் கிராமத்தின் கடை உரிமையாளர்கள் பலர் மேளம் இசைப்பவர்களுக்கு விற்பனை செய்ய மறுத்தனர் என்பதுடன் மேளம் இசைப்பவர்கள் புல்லாங்குழல் கிராமத்தவர்களை வெறுத்தனர்.

---



புல்லாங்குழல் கிராமத்தில் வீட்டிற்கு ஒரே பிள்ளையான, Ziana என்ற பெயரினைக் கொண்ட ஒரு இளம் பெண் பிள்ளை இருந்தாள். அவளுடைய ஆர்வம் மற்றும் இரக்க குணம் காரணமாக அனைவரும் அவளை நேசித்தனர். அவளுக்கு 10 வயதாக இருக்கும்போது, அவளது தந்தை சுகவீனமுற்றார். ஒரு நாள், அவர் அவளைத் தனக்கருகில் அழைத்து, ''என்னுடைய அன்புக்குரிய மகளே, நான் நீண்ட நாள் வாழ மாட்டேன். என்னுடைய புல்லாங்குழலை எடுத்து அதை நீ அணிந்துகொள், அப்போது நாமிருவரும் எப்போதும் ஒன்றாக இருக்கலாம்'' என கூறினார். Ziana சங்கடமடைந்தாள் வழக்கங்களின் படி பெண்கள் புல்லாங்குழல் அணிவதில்லை, ஆனால் உடனேயே அவள் ''நான் ஏன் வாசிப்பதற்கு அனுமதிக்கப்படக்கூடாது?'' எனத் தன்னைத் தானேக் கேட்டுக் கொண்டாள். அன்று இரவு அவளது தந்தை இறந்தார் Ziana புல்லாங்குழலை எடுத்து அதனைத் தன் கழுத்தைச் சுற்றி மாட்டிக்கொண்டாள்.



Ziana வளர்ந்ததும், அவள் காய்கறிகளை வளர்ப்பதற்கும் அவற்றை அவர்களின் சந்தைக் கடையில் விற்பதற்கும் தன் தாய்க்கு உதவி செய்யும் பொருட்டு கடுமையாக உழைத்தாள். அவள் புத்திசாலியாகவும் இரக்கம்மிக்கவளாகவும் இருந்தபோதிலும், அவள் புல்லாங்குழல் அணிந்திருந்தமையினால் பெரும்பாலும் அவளது கிராமத்திலுள்ள மக்கள் அவளை கிண்டல் செய்தனர். சிலநேரங்களில், அதனைக் கழட்டுவதற்கு அவளை இணங்க வைக்க முயற்சித்தனர், ஆனால் அவள் மறுத்துவிட்டாள். Ziana இற்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், அவள் காட்டிற்கு சென்று தன் தந்தையின் புல்லாங்குழலை வாசித்தாள்.



அதுபோன்ற ஒரு நாளில், Ziana இற்கு மங்கலான் மேள ஓசை கேட்டது. ஆர்வம்மிகுதியால், அவள் மேள ஓசையினைத் தொடர்ந்து காட்டினூடாக திறந்தவெளிக்கு சென்றாள், அங்கே ஒரு இளைஞன் தவில் இசைத்து பாடிக் கொண்டிருக்க, அவனது தங்கை மரமொன்றிலிருந்து பழங்களைப் பறித்துக் கொண்டிருந்தாள். Ziana சந்தையிலிருந்து அவர்களை அடையாளம் கண்டிருந்தாள்- அவர்கள் Ono மற்றும் Iris என அழைக்கப்படுகின்ற சகோதரர்கள்.

மரங்களுக்கு பின்னால் ஒளிந்து கொண்டு, Ziana புல்லாங்குழல் இசைக்கத் தொடங்கினாள். புல்லாங்குழலின் இசை மற்றும் மேளத்தின் தாளம் என்பன ஒன்றுடனொன்று இணைந்து அழகான சங்கீதமாக உருவெடுத்தது.

பாடல் முடிந்ததும் Ziana கவனமாக திறந்தவெளிக்குள் அடியெடுத்து வைத்தாள். Ono மற்றும் Iris ஆகிய இருவரும் புல்லாங்குழலுடன் ஒரு பெண் பிள்ளையைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தனர், ஆனால் அவர்களைப் போலவே அவளும் தனது வாத்தியத்தை புல்லாங்குழல் கிராமத்தில் இசைப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை என உணர்ந்து சிரித்தனர். Iris, Ziana இற்கு சில பழங்களைக் கொடுத்தாள். மூவரும் மாலை நேரம் வரும்வரையில் கதைத்துக் கொண்டும் இசை மீட்டிக்கொண்டும் இருந்தனர்.



அடுத்த சந்தை நாளன்று, Ziana தன்னுடைய புதிய நண்பர்களை தேநீர்க்கடைக்கு முன்பாகக் கண்டாள். கடை உரிமையாளர் அவர்களை ஏசிக் கொண்டு இருந்தார், "அப்பால் செல்லுங்கள், மேளம் இசைக்கும் அழுக்குகளே!" Ono கோபமாக இருந்தான், ஆனால் Iris அவனை இழுத்துக் கொண்டு வந்துவிட்டாள். Ono இற்காக தேநீர் கலக்கிய கடை உரிமையாளரின் மகன் வெட்கித் தலைகுனிந்தவனாகக் காணப்பட்டான்.



இதற்கு முன் Ziana "மேளம் இசைப்பவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்" என்ற அடையாளங்கள் குறித்து எப்போதுமே சிந்தித்ததில்லை. அவளோ அவளது தாயோ இதுவரையில் மேளம் இசைப்பவர்களின் கடைகளிலிருந்து எதுவுமே வாங்கவில்லை என்பதனை உணர்ந்து மனதிற்கு பாரமாக உணர்ந்தாள்.

அன்று இரவு Ziana தன் தாயுடன் பேசி, ஏன் அவர்கள் மேளம் இசைப்பவர்களின் கடைகளுக்கு சென்றதில்லை எனக் கேட்டாள். "உனக்கு தெரிந்ததனை மட்டும் வைத்து கொண்டு பேசாதிருப்பது நல்லது" என தாய் பதிலளித்தாள். ஆனால், Ziana இனால் புரிந்து கொள்ள முடியவில்லை, ஏன் அனைவரும் எல்லா இடங்களிலும் வரவேற்கப்படக்கூடாது எனக் கேட்டுக் கொண்டே இருந்தாள். Ono மற்றும் Iris ஆகியவர்கள் அவர்கள் கடையில் விற்கின்ற சுவைமிக்க பழங்களை நினைத்து அவள் நாவூறினாள். இறுதியாக, Ziana இன் தாயார் அடுத்த சந்தை நாளன்று அவர்களின் பழங்கள் சிலவற்றை வாங்குவதற்கு உடன்பட்டாள்.



அதேவேளை, தேநீர்க்கடை உரிமையாளரின் வீட்டில், உரிமையாளரின் மகனான Brone தன் தந்தை மேளம் வாசிப்பவர்களை நடத்தியவிதம் தொடர்பாகக் கேள்வி கேட்டமையினால் தகராறொன்று ஏற்பட்டிருந்தது. கடை உரிமையாளர் அக்கிராமத்திலிருந்த மிக கௌரவமான புல்லாங்குழல் இசைப்பவர்களில் ஒருவராக இருந்ததுடன் பெருமைக்குரிய நபராகவும் இருந்தார். அவரது தந்தை மற்றும் பாட்டன் திறமைமிக்க சங்கீதவான்களாக இருந்தார்கள், ஆனால் அவரது மகன் பெருத்த ஏமாற்றமாகவே இருந்தான். எவ்வளவு கடுமையாக முயற்சித்தபோதும், அவனால் அடிப்படை மெல்லிசையில்கூட தேர்ச்சி பெற முடியவில்லை. பல வருடங்களாக பலவந்தமான பயிற்சி மற்றும் வேதனைமிக்க விமர்சனங்களை அனுபவித்த பின்னர், அவனுக்கு புல்லாங்குழல் மீதிருந்த மதிப்பு இல்லாமல் போனது. அவனுக்கு தூரத்திலிருந்து வருகின்ற மேளத்தின் தாளம் பிடித்து போனது, அவன் வேறொரு வாழ்க்கையினைப் பற்றி கனவு கண்டான்.



காலம் செல்ல செல்ல, Ziana, Iris மற்றும் Ono ஆகியோர் காடுகளில் சந்தித்து ஒன்றாக விளையாடினர். அவர்களும் அனைவரும் வரவேற்கப்படக்கூடிய, மேளம் மற்றும் புல்லாங்குழல்கள் வெளிப்படையாக வாசிக்கப்படக்கூடிய மற்றும் சந்தையில் அவர்களது அழகான சங்கீதத்தினை வாசித்து காட்டக்கூடிய ஒரு காலத்தினைக் குறித்து கனவு கண்டார்கள்.

---



ஒவ்வொரு வாரமும், Ono மற்றும் Iris ஆகியோர் , Ziana மற்றும் அவளது தாயாரை சந்திப்பதற்காக காய்கறி கடைக்கு வந்தனர், அத்துடன் Ziana இன் தாயார் அவர்களிடமிருந்து பழங்கள் மற்றும் கடலைகளை வாங்கினார். ஒரு நாள், Ziana இன் தாயார் தனது இடைப்பட்டியில் கட்டப்பட்டிருக்கும் தவிலை ஆர்வத்துடன் பார்ப்பதனை Ono கவனித்தான்.

"இது சிரிக்கின்ற மேளமாகும்" Ono கூறினான். "இதன் சத்தம் சந்தோசத்தைக் குறிக்கும் என்பதுடன் நான் இதனை வாசிக்கின்றபோது சிறுவர்கள் நடனமாடுவார்கள்" என்றும் கூறினான். Ziana இன் தாயார் ஆர்வமடைந்தாள்.

ஏனைய மேளம் வாசிப்பவர்கள் சுற்றிலும் சேரத் தொடங்கினர். Ziana மற்றும் அவளது தாயார் அவர்களுடைய மேளங்கள் பற்றியும் கேட்டனர். அன்று, Ziana இன் தாயார் காய்கறிகளை விரைவாக விற்று முடித்துவிட்டார். அயல் கடைக்காரர்கள் மேளம் வாசிப்பவர்களை அவர்களின் சந்தைப்பகுதிக்கு வரவேற்றமைக்காக அவளுடன் சங்கடப்பட்டனர், ஆனால் ஒவ்வொருவரும் ஏனைய ஒவ்வொருவரிடமும் பொருட்களை வாங்கமுடியுமானால் அனைவரும் பொருளாதாரரீதியாக நன்மை அடைவார்கள் என அவள் நியாயம் கூறினாள்.

---



அவர்களின் கடைக்கு பக்கத்தில், ஒரு வயோதிபர் மசாலா தூள் வகைகளை விற்று வந்தார், ஆனால் வியாபாரம் மந்தமாக இருந்தது. வியாபாரத்தைப் பெருக்குவதற்காக "அனைவரையும் வரவேற்கிறோம்" என ஒரு பதாகை வைக்குமாறு Ono ஆலோசனை கூறினான். அத்துடன், மேளம் மற்றும் புல்லாங்குழலின் படங்களைக் கொண்டு அழகிய படமொன்றினையும் வரைந்து கொடுத்தான்.

வயோதிபருடைய விற்பனை அதிகரித்ததுடன் ஏனைய கடை உரிமையாளர்களும் மெதுமெதுவாக இதற்கு இணங்கிக் கொண்டனர். "அனைவரையும் வரவேற்கிறோம்" என்ற அடையாளம் மேளம் வாசிப்பவர்கள் மற்றும் புல்லாங்குழல் இசைப்பவர்களின் கடைகளில் ஒரேமாதிரியாக தோன்ற ஆரம்பித்தது.

---



ஆனால், அனைத்தும் நன்றாக நடக்கவில்லை. Brone இன் தந்தை மேளம் வாசிப்பவர்கள் அவரது சந்தைப் பகுதிக்கு வருவதனால் அதிர்ச்சியடைந்தார். அவர்கள் வருவதனைப் பாரம்பரிய முறைகளுக்கான அச்சுறுத்தலாக அவர் பார்த்தார். அந்த அடையாளங்களைக் கிழித்தெறிந்து மேளம் வாசிப்பவர்களை துன்புறுத்துவதற்காக அவரைப் போன்றே சிந்தித்தவர்களை ஒன்று திரட்டினார். சந்தைப் பகுதியில் குழப்பம் ஏற்பட்டதுடன் சந்தை சபை இது குறித்து கவலையடைந்தது.

---



Brone தன்னுடைய தந்தையின் திட்டத்தில் பங்கெடுக்க மறுத்தான். பதிலாக, அவனும் மசாலா தூள் விற்ற அவ்வயோதிபரும் சந்தை சபையிடம் பேசி சந்தைப்பகுதியில் அனைவருக்குமான ஒரு இசை நிகழ்ச்சியினை தலைமைதாங்கி நடத்துவதற்கு சபையினை இணங்க வைத்தார்கள். ஒருவேளை, Brone இன் தந்தை மற்றும் ஏனையோர், மேளம் வாசிப்பவர்களின் கதைகளை மற்றும் அவர்களது பாடல்களைக் கேட்டால் அவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடும்.

---



இசை நிகழ்ச்சி பற்றிய செய்தி பரவியதுடன் மக்கள் வெகு தொலைவிலிருந்தெல்லாம் வந்தனர். கடை உரிமையாளர்கள் வழக்கமான நாளை விட அதிகமாக விற்பனை செய்தனர்.

இறுதியாக, இசை நிகழ்ச்சிக்கான நேரம் வந்தது. வயதான மசாலா தூள் வியாபாரியின் மகள் நல்ல அறுவடைக்காக சொர்க்கத்திலுள்ள கடவுள்களுக்கு நன்றி தெரிவித்து பாடலொன்றினை பாடிய அதேவேளை, வியாபாரி தன்னுடைய மரப்பலகையிலாலான புல்லாங்குழலில் அழகான நாதமொன்றினை மீட்டினார். அவருடைய இள வயதில் அவர் பல வருடங்களாக கஷ்டப்பட்டதனால் அவருக்கு இந்த பாடல்மீது அதிக ஈர்ப்பு இருப்பதாக அவர் விளக்கினார்.

கூட்டத்திலுள்ள சில மேளம் வாசிப்பவர்களின் புன்னகையினையும் தலையசைப்பினையும் கவனித்தமையினால் Brone இன் தந்தை முகஞ் சுழித்தார்.



வயோதிபர் Ono மற்றும் Iris இனை மேடைக்கு அழைத்தார். அவர்கள் அவர்களுடைய மேளம் பற்றிய கதைகளைக் கூறினார்கள் என்பதுடன் காட்டு நீரோட்டத்திற்கு மதிப்பளிப்பதற்கான களியாட்ட மெல்லிசைகளையும், அவர்களுடைய கனி மரங்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக புயலுக்கு நன்றி கூறுவதற்கான இடிபோன்ற பாடல்களையும் இசைத்தனர். முதற்தடவையாக, மேளங்கள் மேளம் வாசிப்பவர்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதனை புல்லாங்குழல் கிராமத்தவர்கள் உணர ஆரம்பித்தார்கள். Brone இன் தந்தை பயங்கரமாக சினமடைந்தார்.

---



இறுதியாக, Ziana மேடையில் Ono மற்றும் Iris உடன் இணைந்து கொண்டாள். அவள் தனது தந்தையை நினைத்து கொண்டாள், அவருடைய புல்லாங்குழலை அவளது உதடுகளில் வைத்து, மூவரும் ஒன்றாக வாசிக்க ஆரம்பித்தனர். அதிர்ச்சியான அமைதியொன்று நிலவியது. இதற்கு முன்னர், புல்லாங்குழல் மற்றும் மேளம் ஒன்றாக இசைக்கப்பட்டோ அல்லது ஒரு பெண் பிள்ளை புல்லாங்குழல் வாசித்தோ யாரும் கேட்டதில்லை.

Ono இன் மேளத்திலிருந்து வந்த நடனமாடுவதற்கான தாளங்கள் வானை அடைந்த அதேநேரம், சூரியன் மற்றும் மழைக்காக நன்றிகூறி இசைத்த Ziana இன் புல்லாங்குழலிலிருந்து வந்த மெல்லிசையும் வானில் மிதந்தது.

பாடல் முடிந்தது, கூட்டம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டது. சிலர் தயக்கத்துடன் கை தட்டிய அதேவேளை, ஏனையோர் வேறு எங்கோ பார்த்தனர். Brone இன் தந்தை Ziana இனைப் பார்த்து வெடித்தார். ‘‘துரோகி’’ எனக் கத்தி விட்டு அவர் கொந்தளித்தார்.

Brone தன் தந்தையைப் பார்த்ததால் அவனது முகம் கவலையடைந்தது. அவன் தன் தலையை குலுக்கிவிட்டு, அவனுடைய கழுத்திலிருந்த புல்லாங்குழலை எடுத்து அவனது தந்தையின் கடையில் போட்டுவிட்டு அக்கிராமத்தை விட்டு நிரந்தரமாக போய்விட்டான்.

---



இசைநிகழ்ச்சிக்கு பின்னர் இரு கிராமங்களிலும் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. அனைவருக்கும் அனைத்து சந்தைக் கடைகளிலும் பொருட்கள் விற்பனை செய்யப்பட வேண்டுமா? புல்லாங்குழல் இசைப்பதற்கு பெண் பிள்ளைகளுக்கு அனுமதியளிக்க வேண்டுமா? புல்லாங்குழல் மற்றும் மேளம் ஒன்றாக இசைக்கப்பட வேண்டுமா? பல மாதங்களுக்கு பின்னரும், கிராமத்தவர்களால் உடன்பட முடியவில்லை.

மேளம் வாசிப்பவர்களின் அனுபவங்களைக் கேட்ட மற்றும் அனைத்து நபர்களினதும் நேர்மையினைப் பார்த்த சந்தை சபை ஆணை பிறப்பித்தது.

‘‘அனைத்து நபர்களும் சந்தைப் பகுதியில் சிறப்பாக நடத்தப்படுவார்கள்!’’

மேளம் வாசிப்பதற்கு காணப்பட்ட தடை நீக்கப்பட்டதுடன் எஞ்சியிருந்த ‘‘மேளம் வாசிப்பவர்களுக்கு அனுமதியில்லை’’ என்ற அடையாளங்கள் நீக்கப்பட்டன. ஆனால், சங்கீத வாத்தியங்களை இசைப்பது தொடர்பாக முடிவெடுக்க சபை மறுத்தது. பதிலாக, ஒவ்வொரு நபரினதும் உள்ளார்ந்த நம்பிக்கைக்கு மதிப்பளிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் அதனைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்தினைக் கொண்டிருப்பார்கள்.

---



சந்தையிலுள்ள அனைத்து கடைகளிலும் மேளம் வாசிப்பவர்களுக்கான வரவேற்பை அவர்கள் உணருவதற்கு பல வருடங்கள் எடுத்தன. ஆனால், Ziana, Ono மற்றும் Iris ஆகியோர் அவர்களுடைய விரல்கள் செயலிழக்கும்வரையிலும், தலை நரைக்கும்வரையிலும் ஒவ்வொரு வாரமும் ஒன்றாக இணைந்து புல்லாங்குழல் மற்றும் மேளத்தினால் ஆன பாடல்களை இசைத்து வந்தனர்.

# முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதி

## சிந்தனைக்கான, மனசாட்சிக்கான, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை அறிமுகப்படுத்தல்

*அமர்வு 2 இற்கான இவ்எழுத்துப்பிரதியானது 25-46 வரையான பவர்பொயினட் ஸ்லைடுகளின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.*

குறிப்பு: இம் முன்வைப்பானது, 'புல்லாங்குழல் மற்றும் மேளத்தில் ஆன பாடல்கள்' என்ற கதைகூறலை குறிப்பிடுகின்றது. நீங்கள் இக்கதைகூறலை உங்கள் குழுவில் பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கவில்லையாயின், நீங்கள் இவ் எழுத்துப்பிரதியினை அதற்கேற்றவாறு மாற்றியமைக்க வேண்டும். நீங்கள் கதையினை நெறியாளருக்கான வழிகாட்டியின் பக்கம் 55 இலும் துணை வளங்களிலும் காணலாம்.

**அறிமுகம்**




ஆகவே, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் யாரை அல்லது எதனைப் பாதுகாக்கின்றது?

இதற்கான தர்க்கரீதியான பதிலாக மதங்கள் மற்றும் நம்பிக்கைகள் அமையுமென நீங்கள் நினைக்கலாம். ஆனால், உண்மையில், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரமானது மதங்களை அல்லது ஏனைய நம்பிக்கைகளை பாதுகாப்பதில்லை. அது கடவுளையோ அல்லது புனிதத்தன்மையினையோ பாதுகாப்பதில்லை. ஏனைய அனைத்து மனித உரிமைகளையும் போல, அது மக்களை பாதுகாக்கின்றது.

இவ் உரிமையின் முழு பெயரினை சொல்வதாக இருந்தால், அது சிந்தனைக்கான, மனசாட்சிக்கான , மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் ஆகும்- இது ஒவ்வொரு மனிதனதும்- அவர் யாராக இருப்பினும், எத்தகைய நம்பிக்கைகளைக் கொண்டிருப்பினும், எந்த மதத்தினைச் சேர்ந்தவராய் இருப்பினும்- உரிமைகளைப் பாதுகாக்கின்றது.




மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரமானது, அனைத்து மனிதர்களும் கீழ்வரும் அடிப்படைத் தேவைகளைக் கொண்டுள்ளனர் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டமைந்தது ஆகும்:

- எது நல்லது மற்றும் எது உண்மையானது என அவர்களுக்காக சிந்திக்கவும் தீர்மானமெடுக்கவும் அனுமதிக்கப்படல்
- பகிரப்பட்ட நம்பிக்கைகள், நடைமுறைகள் மற்றும் அடையாளங்களைக் கொண்டுள்ள குழுக்களுக்கு உரியவராதல்
- அபிப்பிராயங்கள் மற்றும் நடைமுறைகளைக் கேள்விக் கேட்பதற்கும், அவர்களின் நம்பிக்கை தொடர்பாக அவர்களின் மனங்களை மாற்றிக் கொள்வதற்கும் மற்றும் அவர்களுடைய மனசாட்சியினை மீறுகின்ற விடயங்களை செய்ய மறுப்பதற்கும் இயலுமானதாக இருத்தல்.

சிந்திப்பதற்கு, நம்புவதற்கு, உரியவராயிருப்பதற்கு, பயிற்சி செய்வதற்கு கேள்வியெழுப்புவதற்கு, தங்களுடைய மனங்களை மாற்றிக் கொள்வதற்கு மற்றும் மறுப்பதற்கு.

**எங்களுக்கு இருக்கின்ற உரிமைகள் யாவை?**




சமவாயங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது பற்றி நாம் பார்ப்போம்:

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் (ICCPR) உறுப்புரை 18 இனால் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் பாதுகாக்கப்பட்டுள்ளது. இது சட்டரீதியாகப் பிணைக்கின்ற சமவாயமென்பதுடன் 173 நாடுகள் இச் சர்வதேச சட்டங்களை பின்பற்றுவதற்கு உடன்பட்டுள்ளன. (உங்களுடைய நாடு ICCPR இனை ஏற்றுக் கொண்டுள்ளமை குறித்து பங்குபற்றுநர்களுக்கு சொல்லுங்கள்.)



உறுப்புரை 18 இன் முதல் வாக்கியம் பின்வருமாறு கூறுகின்றது:

"ஒவ்வொருவரும் சிந்தனைச் சுதந்திரம், மனசாட்சிக்கான சுதந்திரம் மற்றும் மதச்சுதந்திரம் ஆகியவற்றுக்கான உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்."




ஒவ்வொருவருக்கும் தங்களுக்காக **சிந்திப்பதற்கான** உரிமை உண்டு- தான் ஒரு பெண் பிள்ளையாக இருந்தபோதிலும், புல்லாங்குழல் அணிவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென நினைத்த இக்கதையில் வரும் Ziana இனைப் போன்று.




எங்களுடைய மனசாட்சிக்கு செவிமடுக்கும் உரிமை எங்களுக்கு உண்டு- தன்னுடைய தந்தையின் செயல்கள் தவறானவை என கருதியமையால் தந்தைக்கு உதவி செய்வதனை மறுத்த Brone இனைப் போல.




மேலும் எங்களுக்கு, மத அல்லது மதம்சாராத நம்பிக்கைகளைக் கொண்டிருப்பதற்கான மற்றும் மத அல்லது நம்பிக்கைக்கான அடையாளமொன்றினைக் கொண்டிருப்பதற்கான- மதம் அல்லது நம்பிக்கையொன்றினை நம்புவதற்கான மற்றும் அதற்கு உரியவராயிருப்பதற்கான உரிமை உண்டு. புல்லாங்குழல் மற்றும் மேள கிராமத்தவர்களைபோல, எங்களுள் பலருக்கு உள்ளார்ந்த நம்பிக்கைகள் உள்ளன. எங்களுடைய நம்பிக்கைகள் மற்றும் அவற்றை நாம் பகிர்ந்து கொள்கின்ற சமுதாய உறுப்பினர்கள் எங்களுக்கு மிகப் பெரிய விடயமாக இருக்கும்.




ஆனால், நாங்கள் எந்த சமூகத்தில் வாழ்கின்றபோதிலும் அல்லது எங்களுடைய நம்பிக்கைகள் எந்தளவிற்கு உண்மையானதாக மற்றும் சரியானதாக இருந்தபோதிலும், ஏதேனும் காரணங்களுக்காக தங்களுடைய நம்பிக்கைகளை அல்லது சமுதாயத்தில் நம்பிக்கையினை இழக்கின்ற நபர்களும் இருப்பார்கள்- தனது புல்லாங்குழலை எடுத்து வைத்துவிட்டு தனது சமுதாயத்தினை விட்டு வெளியேறிய Brone இனைப் போல.




சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில், மதம் அல்லது நம்பிக்கையினைக் கொண்டிருப்பதற்கான உங்களது உரிமையுடன் சேர்ந்து, உங்களுடைய மதம் அல்லது நம்பிக்கையினைவிட்டு நீங்குவதற்கான மற்றும் அதனை மாற்றுவதற்கான உரிமையும் பாதுகாக்கப்பட்டுள்ளது.




சிந்திப்பதற்கான, நம்புவதற்கான, கேள்வியெழுப்புவதற்கான மற்றும் எங்களது நம்பிக்கைகளை மாற்றுவதற்கான உரிமைகள் பெரும்பாலும் உள்ளார்ந்த சுதந்திரங்கள் என அழைக்கப்படுகின்றன. அவை எங்களுடைய மனதில் மற்றும் எங்களுடைய ஆன்மாவில் என்ன நடக்கின்றது என்பன பற்றியவையாகும், இவை எமது அடையாளம்- நாங்கள் யாரென்ற எங்களது உணர்வுடன் தொடர்புபடுகின்றன.

இக்காரணத்திற்காக, அவை மீறமுடியாத உரிமைகளாக உள்ளன. சர்வதேச சட்டத்தின்கீழ், எந்தவொரு நபரும் அல்லது அரசாங்கமும் எப்போதும் இவ் உரிமைகளை மட்டுப்படுத்துவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

ஆனால், சந்தேகத்திற்கிடமற்றவகையில், மதம் மற்றும் நம்பிக்கை என்பன எங்களது மனங்கள் மற்றும் ஆன்மாக்களில் என்ன நடக்கின்றது என்பதற்கும் அப்பாற்பட்ட விடயங்களைப் பற்றியதாகும்.




அது நாங்கள் என்ன செய்கிறோம் என்பது பற்றியதாகும்- எங்களுடைய நம்பிக்கைகளை சொற்களில் மற்றும் செயல்களில் நாம் எவ்வாறு வெளிப்படுத்துகிறோம் என்பது பற்றியதாகும். எங்களுடைய கதையில், கிராமத்தவர்களின் வாழ்க்கை, அவர்களுடைய நம்பிக்கைகள் மற்றும் அவர்கள் உரியவர்களாயுள்ளவற்றினை வெளிப்படுத்துகின்ற நடைமுறைகள் நிறைந்ததாகக் காணப்பட்டது.

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் இவ் உரிமைகளையும் பாதுகாக்கின்றது. நாங்கள் மீண்டும் சமவாயத்தினைப் பார்ப்போம்.




உறுப்புரை 18 ஆனது பின்வருமாறு கூறுகின்றது:

> "இவ் உரிமையானது,..... தனித்தோ பிறருடன் கூட்டாகவோ, பகிரங்கமான இடங்களிலோ அன்றேல் தனிப்பட்ட இடங்களிலோ தனது சமயத்தை அல்லது நம்பிக்கையை வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், வழக்கத்திலும், கற்பித்தலிலும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தினை உள்ளடக்கும்."

எங்களுக்கு தனிப்பட்டரீதியில் பிரார்த்தனை செய்வதற்கான உரிமை மற்றும் கூட்டுப் பிரார்த்தனை மற்றும் பாரம்பரியங்களினூடாக சமுதாயத்தின் அங்கமொன்றென்றரீதியில் எங்களது மதம் அல்லது நம்பிக்கையினை வெளிப்படுத்துவதற்கான உரிமை என்பன காணப்படுகின்றன. அத்துடன், சமுதாயத்திற்கும் உரிமைகள் காணப்படுகின்றன- அதன் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமைகள் அல்ல, ஆனால் அரசுடன் தொடர்புடைய உரிமைகள். உதாரணமாக, மத மற்றும் நம்பிக்கைக்கான சமுதாயங்கள் தாங்கள் விரும்புகின்றபட்சத்தில், சட்ட அடையாளமொன்றினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளன என்பதனை அரசு உறுதிப்படுத்த வேண்டும், ஆகவே, அவை வங்கிக் கணக்குகளை வைத்திருக்கவும், நபர்களை பணிக்கமர்த்தவும், மற்றும் கட்டிடங்களை சொந்தங்கொள்ளவும், முடியும்.

தனிநபர்களும் குழுக்களும் மதம் அல்லது நம்பிக்கையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு வேறுபட்ட வழிகள் காணப்படுகின்றன என்பதுடன் ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் பாதுகாக்கப்பட்டுள்ள பல செயற்பாடுகளை உதாரணங்களாக் குறிப்பிட்டுள்ளனர். உதாரணமாக, எமக்கு கீழ்வருவனவற்றுக்கான உரிமைகள் உண்டு:



- வழிபாட்டிற்கு கூட்டாக வருவதற்கான, பண்டிகைகளைக் கொண்டாடுவதற்கான மற்றும் ஓய்வு நாட்களைக் கொண்டிருப்பதற்கான உரிமை.
- மத ஆடைகளை அணிவதற்கான மற்றும் விசேட உணவு முறைகளைப் பின்பற்றுவதற்கான உரிமை.
- வழிபாட்டிடங்கள், மயானங்களைக் கொண்டிருப்பதற்கான மற்றும் மத அடையாளங்களைக் காட்சிப்படுத்துவதற்கான உரிமை.
- சமூகத்தில் வகிபாகமொன்றினை வகிப்பதற்கான உரிமை, உதாரணமாக தொண்டு நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கான உரிமை
- மதம் அல்லது நம்பிக்கை பற்றி பேசுவதற்கான மற்றும் அவற்றைக் கற்பிப்பதற்கான மற்றும் தலைவர்களை பயிற்றுவிப்பதற்கான அல்லது நியமிப்பதற்கான உரிமை. இத்தருணத்தில், ''சிறப்பு -இவ் உரிமைகளை என்னுடைய சமுதாயத்தில் எனக்கு தேவையான உரிமைகள் என நீங்கள் எண்ணக்கூடும்! அல்லது நீங்கள் கவலையடையக்கூடும்!

**தன்னார்வக்கொள்கை மற்றும் சமத்துவம்- ஏனையோருக்கு ஊறு விளைவிக்க வேண்டாம்!**



தங்களுடைய மதம் அல்லது நம்பிக்கையினைப் பயன்படுத்தி ஏனையோர்மீதான வெறுப்பு அல்லது வன்முறையினை ஊக்குவிக்கின்ற, ஏனையோரை பாரபட்சப்படுத்துகின்ற அல்லது தங்களுடைய குழுவினுள் ஏனையோரை அடக்குகின்ற மற்றும் கட்டுப்படுத்துகின்ற நபர்கள் அல்லது குழுக்கள் பற்றி என்ன சொல்லலாம்?

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரமென்பது, ஏனைய நபர்களுக்கு என்ன தாக்கம் ஏற்பட்டாலும், இத்தகைய நபர்கள் அல்லது குழுக்கள் இதனை செய்வதற்கான சுதந்திரத்தினைக் கொண்டுள்ளனர் என்பதனைக் குறிக்கின்றதா?

இல்லை என்பது நன்றிக்குரிய விடயம்!

---




மனித உரிமைகள் சமவாயங்கள் எம்முடைய உரிமைகள் மற்றும் எம்முடைய உரிமைகளுக்கான மட்டுப்பாடுகள் ஆகிய இரண்டையும் கூறுகின்றன. அல்லது வேறு வகையில் கூறுவதாயின், எங்களுடைய உரிமைகளை நாங்கள் பிரயோகிக்கின்றபோது எங்களுக்குள்ள பொறுப்புக்கள் எவையென கூறுகின்றன.

இப்பொறுப்புக்களையெல்லாம் நாம் தொகுத்து கூறுவோமாயின், எந்தவொரு நபரும் தனது உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை ஏனைய நபர்களுக்கு ஊறு விளைவிக்கின்ற வழிகளில் பயன்படுத்தக்கூடாது என கூறலாம். மனித உரிமைகள் சமவாயங்களுக்கமைய, இது ஒவ்வொரு நபரினதும் ஒழுக்கக் கடப்பாடாகும். அத்துடன் ஒவ்வொருடையதும் உரிமைகளை மதிப்பதற்கும் மற்றும் ஒவ்வொருவரையும் ஊறிலிருந்து பாதுகாப்பதற்குமான சட்டக் கடப்பாடொன்று அரசாங்கத்திற்கு இருக்கின்றது. நாங்கள் **எவ்வாறு** ஊறிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என நாங்கள் மிகக் குறிப்பாகப் பார்ப்போம்.

---




முதலாவதாக: பலவந்தப்படுத்தலின்மை!
மதம் அல்லது நம்பிக்கையுடன் தொடர்புறுகின்ற விடயங்களில் பலவந்தப்படுத்தல் அனுமதிக்கப்படுவதில்லை. நம்புதல் மற்றும் உரியவராயிருத்தல் என்பன தன்னார்வமாக இடம்பெற வேண்டியன. எந்தவொரு நபரையும் நம்பச் சொல்லி அல்லது நம்பாதிருக்கச் சொல்லி, நடைமுறைப்படுத்தச் சொல்லி அல்லது நடைமுறைப்படுத்த வேண்டாமென சொல்லி, மதமொன்றிற்கு உரியவராயிருக்கும்படி அல்லது மதமொன்றிற்கு உரியவராயிருக்க வேண்டாமென பலவந்தப்படுத்துவதற்காக அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் அல்லது வன்முறையினைப் பயன்படுத்துவதற்கு அதிகாரிகள், மத சமுதாயங்கள் மற்றும் குடும்பங்கள் அனுமதிக்கப்படவில்லை.

---




இரண்டாவதாக: பாரபட்சமின்மை!
சமவாயத்தின் உறுப்புரை 2 ஆனது, எவ்வகையான பாரபட்சத்தினையும் - அது மதம், இனம், பால்நிலை அல்லது மொழி என எதன் அடிப்படையில் செய்யப்படினும்- தடை செய்கின்றது. மனித உரிமைகள் ஒப்பந்தங்களுக்கு கையொப்பமிட்டுள்ள அரசுகள் ஒவ்வொருவரையும் சமமாக நடத்துவதற்கும் சமூகத்திலுள்ள பாரபட்சத்தினை ஒழிப்பதற்கும்- எமது கதையில் சந்தை சபை செய்தது போல- உடன்பட்டுள்ளன.

---




மூன்றாவதாக: உரிமைகளை அழிக்க முடியாது!
உறுப்புரை 5 ஆனது, அரசாங்கம், குழுக்கள் அல்லது நபர்கள், எந்தவொரு மனித உரிமையையும், அவ் உரிமை ஏனைய மனித உரிமைகளை அழிப்பதற்கான வழிகளில் செயற்படுவதற்கான உரிமையினை அவர்களுக்கு வழங்குவதாக பொருட்கோடல் செய்யக்கூடாது என கூறுகின்றது.

அத்துடன் உறுப்புரை 20 ஆனது, பாரபட்சம், விரோதம் அல்லது வன்முறைக்கான தூண்டலினூடாக மத வெறுப்பினை ஆதரித்து வாதாடலைத் தடை செய்கின்றது.

அரசாங்கமொன்று அல்லது நபரொருவர் குறிப்பிட்ட விடயமொன்றை செய்ய வேண்டுமென்று தனது மதம் தேவைப்படுத்துவதாக நினைக்கின்றபோதிலும், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் அவர்களுக்கு ஏனைய நபர்களின் உரிமைகளை அடக்குவதற்கான உரிமையினை வழங்குகின்றது என யாரும் வாதிட முடியாது. ஆகவே, மேளம் வாசிப்பவர்களை துன்புறுத்துவது சரியென Brone இன் தந்தைக்கு கற்பிக்கப்பட்டிருந்தாலும் அவர்களைத் துன்புறுத்துவதற்கான உரிமை அவருக்கு இல்லை.


வன்முறையினை தூண்டுவதற்கு அல்லது மக்களுக்கு ஊறு விளைவிக்கின்ற மத நடைமுறைகளை நியாயப்படுத்துவதற்கு மதம் பயன்படுத்தப்பட்டுள்ள ஏராளமான உதாரணங்கள் குறித்து உங்களால் சிந்திக்க முடியுமென எனக்கு நிச்சயமாக தெரியும். நபர்கள் தங்களது மதத்தை அல்லது நம்பிக்கையினை அமைதியானமுறையில் நடைமுறைப்படுத்துவதிலிருந்து நியாயமற்ற முறையில் தடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் குறித்தும் உங்களால் சிந்திக்கக்கூடியதாக இருக்கும்.

## மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்கான மட்டுப்பாடுகள்




ஆகவே, விதிகள் யாவை? மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் யாவை?

இவ் விதிகளை நாங்கள் விரைவாகப் பார்ப்போம். முதலாவதாக, சிந்தனை செய்வதற்கும் நம்புவதற் குமான உரிமை (உள்ளார்ந்த சுதந்திரம்) ஒருபோதும் மட்டுப்படுத்த முடியாதது. இரண்டாவதாக, கீழ்வரும் நான்கு விதிகள் பின்பற்றப்படுகின்றபோது **மாத்திரமே** மதம் அல்லது நம்பிக்கையின் நடைமுறைப்படுத்தல் மட்டுப்படுத்தப்படலாம்.




1. மட்டுப்பாடினைக் குறிக்கின்ற **சட்டமொன்று** இருத்தல் வேண்டும். வேறு சொற்களில் கூறுவோமாயின், பொலிஸார் விரும்பியவற்றை அவர்களால் வெறுமனே செய்ய முடியாது.
2. மட்டுப்பாடானது அது தீர்க்க எண்ணுகின்ற பிரச்சினைக்கு **விகிதசமனானதாக** அமைய வேண்டும். உதாரணமாக, மத சமுதாயமொன்றின் ஒலிபெருக்கியின் சத்தம் மிக அதிகமெனில், அதனைக் குறைக்குமாறு அல்லது தண்டப் பணம் செலுத்துமாறு குறிப்பிட்ட மத சமுதாயத்திற்கு கட்டளையிடலாம். ஆனால், அவர்கள் சந்திப்பதனை முற்றாக தடை செய்தலானது விகிதசமனானதாக அமையாது.
3. அனைத்து மட்டுப்பாடுகளும் **பாரபட்சமற்றவையாகக்** காணப்படுதல் வேண்டும்- அவை அனைவருக்கும் ஏற்பாக வேண்டும்.
4. குறிப்பிட்ட மட்டுப்பானது கீழ்வருவனவற்றுள் ஏதோ ஒன்றினைப் **பாதுகாப்பதற்கு அவசியமானதாக** இருக்க வேண்டும்: பொது பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொது சுகாதாரம், பொது ஒழுக்கங்கள் அல்லது ஏனைய நபர்களின் உரிமைகள் அல்லது சுதந்திரங்கள்.


'அவசியமானதாக' என்ற சொல் மிக முக்கியமானதாகும். இவ் இலக்குகளை அடைந்துக் கொள்வதற்கு குறித்த மட்டுப்பாடு விரும்பத்தக்கது என அரசாங்கம் அல்லது பெரும்பான்மையான மக்கள் கருதினால் மாத்திரம் போதாது. மட்டுப்பாடு உண்மையில் அவசியமானதாக இருக்க வேண்டும். வேறு சொற்களில் கூறுவோமாயின், நடைமுறைகளினால் உருவாக்கப்பட்ட அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிமைகளை மட்டுப்படுத்துவதனைத்தவிர வேறு எவ்வழியும் இல்லாதிருக்க வேண்டும். உரிமைகளை மட்டுப்படுத்தலென்பது இறுதியான வழிவகையாக இருக்க வேண்டும்.




உதாரணமாக- வழிபாட்டிடமொன்றில் அதிகளவான எண்ணிக்கையான நபர்களை நிறைத்தல் ஆபத்தானதாக இருக்கலாம். ஆகவே, பொது பாதுகாப்பு என்ற அடிப்படையில் வழிபாட்டிடமொன்றில் ஒன்றுசேரக்கூடிய நபர்களின் எண்ணிக்கையினை மட்டுப்படுத்தல் அதிகாரிகளுக்கு அவசியமானதாக இருக்கலாம்.

கொரோனா வைரஸ் தொற்றின்போது வழிபாட்டிற்காக ஒன்று கூடுதல் தொடர்பில் விதிக்கப்பட்ட பொது சுகாதார மட்டுப்பாடுகள் மிகப் பொதுவானவையாகும்- சிலநேரங்களில் இத்தகைய மட்டுப்பாடுகள் அவசியமானதாக, விகிதசமனானதாக மற்றும் பாரபட்சமற்றவையாகக் காணப்பட்டன. சிலநேரங்களில், அவை உயரியளவில் பாரபட்சம்மிக்கவையாகவும் விகிதசமனற்றவையாகவும் காணப்பட்டன.

ஏனையோருடைய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்கான மட்டுப்பாடொன்றாக பெண் பிறப்புறுப்பு சிதைவிற்கானத் தடைகளைக் குறிப்பிடலாம்- இவ்விடயத்தில் பெண் பிள்ளைகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இது கலாசார அல்லது மத நடைமுறையொன்றாகப் பார்க்கப்படுகின்றபோதிலும், அது பெண் பிள்ளைகளின் ஆரோக்கியத்தினைப் பாதிக்கின்றது என்பதுடன் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினைக் காரணம்காட்டி அதனை நியாயப்படுத்த முடியாது.




இவ்விதிகள் உண்மையில் முக்கியமானவையாகும். அவை இன்றி, அரசாங்கங்கள் அவற்றுக்கு பிடிக்காத எந்தவொரு மற்றும் அனைத்து குழுக்கள் மற்றும் நடைமுறைகளையும் மட்டுப்படுத்தமுடியும். மட்டுப்பாடுகள் இறுதி வழிமுறையாகவேக் காணப்பட வேண்டும், அது அரச கட்டுப்பாட்டிற்கான கருவியொன்றல்ல. அடுத்த அமர்வில், உலகெங்கிலும் நடைபெறுகின்ற மத அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் வேறுபட்ட வகையான மீறல்கள் தொடர்பில் நாங்கள் மிக ஆழமாகப் பார்க்கப் போகின்றோம்.

# மாற்றமுண்டாக்குநர்களின் கதை

***கீழ்வரும் கதையானது அமர்வு 2 இன் நிறைவு செய்கின்ற கருத்துக்களின் ஒரு பகுதியாக வாசிக்கப்படுகின்றது. இது அமர்வின் பவர் பொயின்ட் இன் 61–63 வரையான ஸ்லைடுகளின் மூலம் விளக்கப்பட்டுள்ளது.***

## பீட்டரினுடைய கதை, பாகிஸ்தான்

பாக்கிஸ்தான், லாகூர் எனும் நகரத்தில் முஸ்லிம்கள் அதிகமாக ஆதிக்கம் செலுத்தும் Kot Lakhpat எனும் இடத்தில் கிறிஸ்தவ சமுதாயத்தில் மாற்றமொன்றை ஏற்படுத்த உதவிய ஒரு இளம் நபரே பீட்டர் ஆவார். ஒவ்வொரு நாளும் காலைப்பொழுதில் உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசையொன்றில் போதகர் ஒருவர் செய்யும் பிரார்த்தனையை பார்ப்பதோடுதான் பீட்டர் தனது நாளை ஆரம்பிப்பார். "எனக்கு வேதங்களை வாசிக்கவோ அல்லது வேதாகம குழு படிப்பில் பங்கெடுக்கவோ அதிக நேரம் கிடையாது. ஆனால், இந்த பிரார்த்தனைக் கூட்டத்தைப் பார்ப்பதானது எனது நாளை ஆரம்பிப்பதற்கான ஒரு பிரமாதமான வழியாகும்" என்று அவர் கூறுகிறார்.

ஒருநாள் காலை அந்த கிறிஸ்தவ தொலைகாட்சி அலைவரிசை வேலைசெய்யாமல் நின்றுவிட்டது. முதலில் பீட்டர் அங்கே ஒரு தொழிநுட்பக்கோளாறு என்று நினைத்தார். ஒருவாரம் கடந்த பின்னும் அந்த அலைவரிசை வேலை செய்யாமலிருந்ததனால், பீட்டரும் ஒவ்வொரு நாளும் அந்த நிகழ்ச்சியைப் பார்வையிடும் அந்த பிரதேச மக்கள் சிலரும் தொலைகாட்சி நிகழ்ச்சி செய்த போதகரை அணுகினார்கள். அப்போது குறிப்பிட்ட அலைவரிசை வேறு இடங்களில் நன்றாக வேலைசெய்கிறது என்று அவர் கூறினார்.

இதனை ஆராய்ந்து பார்க்கையில், அந்நிகழ்ச்சி கிறிஸ்தவ சுவிசேஷ நிகழ்ச்சியொன்று என அங்குள்ள உள்ளூர் மௌலவி ஒருவர் எண்ணியதால், அந்தப் பிரதேசத்திலே உள்ள பள்ளிவாசலின் இமாம் (தொழுகையை வழிநடத்துபவர்) அலைவரிசை கம்பி தொழிநுட்பவியலாளரினூடாக (கேபிள் அலைவரிசை பொருத்துனரினூடாக) அவ் அலைவரிசை துண்டிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்துள்ளார் என்பதை அவர்கள் கண்டறிந்துக்கொண்டார்கள்.

"நாம் எவ்வளவு அதிர்ச்சிக்குள்ளாகியிருப்போமென்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியும். நாம் எமது அயல் முஸ்லிம்களுடன் மிகவும் நெருக்கமாக வாழ்கின்றோம் என்பதுடன் எமக்கு அவர்களுடன் எந்தப் பிரச்சினையுமில்லை" பீட்டர் சொன்னார்.

இந்த சூழ்நிலை எவ்வளவு உணர்வு பூர்வமானது என்பது அக் குழுவிற்குத் தெரியும். அதன் காரணமாக ஆலோசனைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்கள் கிறஸ்தவ மத ஒற்றுமைக்கான தேசிய அமைப்பொன்றை தொடர்புகொண்டார்கள். இவ் ஆலோசனையைப் பின்பற்றி, முதலாவதாக அவர்கள் கம்பி தொழிநுட்பவியலாளனை சந்தித்தார்கள். அவருக்கு கம்பியினைத் தொடர்புபடுத்தி அவ் அலைவரிசையினை மீண்டும் ஒளிபரப்பச் செய்வதில் ஆட்சேபனை எதுவும் இருக்கவில்லை, ஆனால் இமாமுக்கு எதிராக என்னால் செயற்பட முடியாது என்று அவர் கூறினார். அப்போது குறிப்பிட்ட மௌலவியுடன் கலந்துரையாடலொன்றை செய்ய வேண்டுமென குழு தீர்மானமெடுத்தது.

குழுவினுடைய பிரதிநிதிகள் சுமார் மூன்று மணிநேரத்திற்குமேல் அலைவரிசையை ஒளிபரப்புச் செய்ய அனுமதிக்குமாறு வேண்டி அவரை சமரசப்படுத்த முயன்றும் அது வெற்றியளிக்கவில்லை. அடுத்தநாள், மௌலவியிடம், பாகிஸ்தானின் அரசியலமைப்பினால் ஒவ்வொரு பிரஜைக்கும் வழங்கப்பட்டிருக்கும் மனித உரிமைகள், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்கான உரிமைகள் பற்றி எடுத்துக்கூறி மீண்டும் முயற்சி செய்தார்கள். ஒருநாள் முழுவதும் நியாயங்களை எடுத்துக்கூறியபின், மௌலவி அலைவரிசையை ஒளிபரப்புச்செய்ய ஒத்துக்கொண்டார். ஆனால் முஸ்லிம்களின் பிரார்த்தனை நேரங்களின்போது அவர்களது பிரார்த்தனைகளை இடையூறு செய்யாதவண்ணம் சத்தத்தைக் குறைத்து வைத்து பார்வையிடுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

"நாம் மிகுந்த மகிழ்ச்சியடைந்தோம்!" "சிலருக்கு இது ஒரு சாதாரண தொலைக்காட்சி ஒளிபரப்பாக இருந்தபோதிலும், கிறிஸ்தவர்களென்றரீதியில் இது எமது வாழ்க்கையில் மிக முக்கியமான பகுதியாகும்".

கதை

*மூலம்*
The Ecumenical Commission for Human Development (ECHD),
பாகிஸ்தான். பீட்டரினுடைய பெயர் பாதுகாப்புக் காரணங்களுக்காக மாற்றப்பட்டுள்ளது.

# அமர்வு 3

## எமது பலவிதமான அடையாளங்கள்

### அமர்வு பற்றிய கண்ணோட்டம்

இவ் அமர்வானது எமது அடையாளங்களை உருவாக்குகின்ற பல கூறுகளையும், அக்கூறுகள் சமூகத்தின் சிறப்புரிமை மற்றும் பாதக நிலையுடன் எவ்வாறு தொடர்புறுகின்றன என்பது தொடர்பாகவும் ஆராய்கின்றது. இது, சில நபர்கள் எதிர்கொள்கின்ற வேறுபட்ட பாதக நிலைகள் அவர்களுடைய அடையாளத்தின் வேறுபட்ட அம்சங்களுடன் தொடர்புறுவதனை வலியுறுத்திக்காட்டுகின்றது – உதாரணமாக, மத அல்லது வேறு சிறுபான்மை அந்தஸ்த்து மற்றும் பால்நிலை, வயது அல்லது வகுப்பு காரணமான அடையாளம்.

பல சமூகங்களில் மத அடையாளமானது பிரதான ‘பிரிக்கும்’ கருவியாகப் பார்க்கப்படுகின்றது, ஆனால், நாங்கள் வேறு பல பொதுவான அடையாளங்கள் மற்றும் வாழ்க்கை அனுபவங்களையும் கொண்டுள்ளோம். இவ் அமர்விலுள்ள பயிற்சி இதனை எடுத்துக் காட்டுகின்றது.

அறிவினை அடிப்படையாகக் கொண்டுள்ள உள்ளீடுகளிலிருந்து இடைவேளையொன்றினை வழங்குகின்ற ஊடாடுகைமிக்க அமர்வாக இது அமைந்துள்ளது. பங்குபற்றுநர்கள் சிந்திப்பதற்கும் ஒருவரிலிருந்தொருவர் கற்றுக்கொள்வதற்கும் உதவிசெய்கின்ற பல்வேறுபட்ட பயிற்சிகளைப் பயன்படுத்துகின்ற அனுபவக் கற்றலினை இது மையப்படுத்துகின்றது.

### *கற்றல் குறிக்கோள்கள்*

இவ் அமர்வானது ‘ஏனையோர்’ தொடர்பான நல்ல நடத்தைப் பாங்குகளை விருத்தி செய்வதனையும், சிறப்புரிமை மற்றும் பாதகநிலையினை அடையாளங்காணுவதற்கான இயலுமையினை விருத்தி செய்வதனையும் மையப்படுத்துகின்றது.

இவ் அமர்வின் இறுதியில் பங்குபற்றுநர்கள் கீழ்வருவனவற்றை செய்யக்கூடியவர்களாயிருப்பார்கள்:

- மத அடையாளம் என்பது அவர்களது அடையாளத்தின் ஒரு பகுதியொன்று மாத்திரமே என்றும் மத பரிவுகளுக்கு அப்பால் பொதுவான வேறு அடையாளங்கள் மற்றும் வாழ்க்கை அனுபவங்களை அவர்கள் கொண்டுள்ளனர் என்றும் அடையாளம் காணக்கூடியவர்களாய் இருப்பார்கள்
- எங்களது அடையாளத்தின் வேறுபட்ட அம்சங்கள் சிறப்புரிமைக்கு அல்லது பாதகநிலைக்கு வழிவகுக்குமென்றும், இதன் விளைவாக சில நபர்கள் பல பாதகநிலைகள் அல்லது பல சிறப்புரிமைகளை எதிர்கொள்கின்றனரென்றும் அடையாளம் காணக்கூடியவர்களாய் இருப்பார்கள்
- தங்களது அடையாளத்தின் அம்சமொன்றின் காரணமாக பாதகநிலைக்கு உட்பட்டுள்ள நபர்களுடனான ஒருமைப்பாட்டினையும், மாற்றமொன்று நடைபெறுவதற்கு நபர்கள் பிளவுகளுக்கு அப்பால் ஒன்றுசேர வேண்டிய தேவை உள்ளமையினையும் வெளிப்படுத்துவார்கள்.

*குறிப்பு*

இக்கற்றல் குறிக்கோள்களினை அடைந்து கொள்வதன் நடைமுறை சாத்தியமானது பங்குபற்றுநர்களின் ஆரம்பப் புள்ளிகளில் தங்கியுள்ளது - உதாரணமாக, வேறு குழுக்கள் தொடர்பான உறுதியான எதிர்மறை நடத்தைப் பாங்குகள் காணப்படுதல். கற்றல் குறிக்கோள்களின் நோக்கமானது, செயற்பாடொன்றினை முன்னெடுப்பதற்கான பங்குபற்றுநர்களின் அறிவு, நடத்தைப் பாங்குகள் மற்றும் திறன்கள் தொடர்பில் நெறியாளர்கள் முன்னேற்றத்தினை பார்க்கக்கூடிய பகுதிகளை குறிப்பிடுகின்றது. ஒரே அமர்வில் அடைந்துகொள்வதனைக் காட்டிலும், முன்னேற்றமானது பயிற்சி நெறி முழுவதிலும் கிரமமாக இடம்பெறலாம்.

## அமர்வின் உள்ளடக்கங்கள் மற்றும் நேரவிபரங்கள்

| | |
|---|---|
| **வரவேற்பு** | 2 நிமி |
| ***ஆரம்பப் பயிற்சி: பானைக்கான அதிஷ்டம்***<br>சமத்துவமின்மை மற்றும் ஒருமைப்பாடு பற்றிய விடயங்கள் தொடர்பாக சிந்திப்பதற்கு பங்குபற்றுநர்களுக்கு உதவுதல். | 15 நிமி |
| ***முழுக் குழு பயிற்சி: முன்னோக்கிய ஒரு அடி***<br>பங்குபற்றுநர்களின் சூழமைவுகளில் பாரபட்சம் மற்றும் ஏனைய உரிமை மீறல்களினால் யார் பாதிக்கப்படுகின்றார்கள் என்பது பற்றி சிந்திப்பதற்கு பங்குபற்றுநர்களுக்கு உதவுதல். | 45 நிமி |
| ***உற்சாகப்படுத்துவதற்கான செயற்பாடு: அனைவரும் கதிரைகளை இடம் மாற்றிக் கொள்ளுங்கள்***<br>கூற்றுக்களுடன் உடன்படுகின்ற நபர்கள் கதிரைகளை இடம் மாற்றுகின்ற ஒரு உடற்சார் பயிற்சி. | 10 நிமி |
| ***முழுக் குழு பயிற்சி: எமது சமூக அடையாளங்கள்***<br>பங்குபற்றுநர்களின் அடையாளங்களின் பல அம்சங்கள் மற்றும் வேறு மதங்களைச் சேர்ந்த நபர்களுடன் அவர்கள் பகிர்ந்து கொள்கின்ற பொதுவான பல அடையாளங்கள் தொடர்பாக சிந்திப்பதற்கு அவர்களுக்கு உதவுதல். | 40 நிமி |
| ***நிறைவு செய்கின்ற கருத்துக்கள: அடையாளங்கள் மற்றும் நிலையான உள எண்ணங்கள்***<br>இக்கருத்துக்கள் மேற்செய்யப்பட்ட பயிற்சிகளின் மூலம் வெளிப்பட்ட செய்திகளை ஒன்றிணைக்கின்றது. | 8 நிமி |
| **மொத்த நேரம்** | **2 மணி நேரம்** |

## தயாராகுங்கள்

பக்கம் 15 இலுள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயாராவது' என்பதன்கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக அமர்விற்காக தயாராகுங்கள். நினைவிற் கொள்ளுங்கள் - உங்களுடைய குழுவைப் பற்றி உங்களுக்கு தெரியும். ஆகவே, உங்களுடைய குழுவின் தேவைகளுக்கு ஏற்றவகையில் அமர்வின் ஏதேனும் கூறுகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு மற்றும் மாற்றுவதற்கு உங்களால் முடியும்.

***இவ் அமர்விற்கான வளங்கள்***

பக்கம் 16 இல் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு அமர்விற்குமான நியம துணை வளங்களுக்கு மேலதிகமாக, அமர்வினை நடத்துவதற்கு உங்களுக்கு கீழ்வரும் துணை வளங்கள் தேவைப்படலாம்:

- வெளியிடமொன்று அல்லது பங்குபற்றுநர்கள் அனைவரும் ஒருவருக்கடுத்து ஒருவராக அறையின் ஒரு பக்கத்தில் வரிசையாக நின்று 10 அடிகள் முன்வைத்து அறையின் மற்றைய பக்கத்தினை நோக்கி போகக்கூடிய அளவு பெரிய அறையொன்று.
- 'பானைக்கான அதிஷ்டம்' பயிற்சிக்கான கையேடுகள்.
- எட்டு பங்குபற்றுநர்களுக்கு ஒரு கத்தரிக்கோல் (உதாரணமாக, 17-24 வரையான நபர்களுள்ள குழுக்களுக்கு 3 கத்தரிக்கோல்கள்).
- அச்சுப்பிரதி செய்யப்பட்டு வெட்டப்பட்டுள்ள கதாபாத்திர அட்டைகள் (முன்னோக்கி ஒரு அடி பயிற்சிக்கானது).
- வாசிப்பதற்கான கூற்றுக்களின் பட்டியல்கள் (முன்னோக்கி ஒரு அடி பயிற்சிக்கானது).
- வாசிப்பதற்கான கூற்றுக்களின் பட்டியல்கள் (அனைவரும் கதிரைகளை இடம் மாற்றிக் கொள்ளுங்கள் பயிற்சிக்கானது).

இந்த அமர்வுக்கான ***துணைவளங்களை*** <u>*இங்கே*</u> காணலாம்.

***அறையினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்***

இது, அதிகளவான இடம் மற்றும் இலகுவில் நகர்த்தக்கூடிய கதிரைகள் - உதாரணமாக, சுவர்களை நோக்கித்தள்ளக்கூடியதான - என்பனவற்றைத் தேவைப்படுத்துகின்ற துடிப்பான அமர்வொன்றாகும். மேசைகள் காணப்படின் அவை இவ் அமர்விற்கு இடையூறாகக் காணப்படும். கதிரைகளை அப்பால் எடுத்துவைத்துவிட்டு அமர்வினை ஆரம்பியுங்கள், ஆகவே, பங்குபற்றுநர்கள் அறையினை சுற்றி சுதந்திரமாக நடமாட முடியும்.



‘முன்னோக்கிய ஒரு அடி’

“முன்னோக்கி ஒரு அடி” ஒரு முழுமையான பயிற்சியாக இருந்தது. மக்கள் எவ்வாறு பின்தங்கியிருக்கிறார்கள் மற்றும் முத்திரையிடுதல் மற்றும் களங்கப்படுத்துதல் மக்களின் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை இது உண்மையில் காட்டியது. இதற்குப் பின்னர் விவாதத்திற்கு எங்களுக்கு நிறைய நேரம் தேவைப்பட்டது.”
**HAMMAM HADDAD**, நெறியாளர், ஜோர்தான

“முன்னோக்கி ஒரு அடி” பயிற்சி பங்கேற்பாளர்களுக்கு அவர்கள் சமமான புத்திசாலிகள், திறமையானவர்கள் மற்றும் கடின உழைப்பாளிகளாக இருந்தாலும் கூட, சிலர் ஏன் பின்தங்கியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. அனைவரும் சமமாக பிறந்தாலும், சமூகம் எவ்வாறு சிறப்புரிமை பெற்ற குழுக்கள் மற்றும் பாலினத்திற்கு பயனளிக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதற்கான உறுதியான எடுத்துக்காட்டு வளர்ந்து வரும் இடைவெளியாகும்.”
**IRFAN ENGINEER**, நெறியாளர், இந்தியா

# விரிவான அமர்வுத் திட்டம்

## 1. வரவேற்பு 2 நிமி

குறும் பேச்சு

***என்ன சொல்ல வேண்டும்***

ஒவ்வொருவரையும் அமர்விற்கு வரவேற்றுக் கொள்ளுங்கள் மற்றும் கீழ்வரும் விடயங்களை விளக்குங்கள்:

இன்றைய அமர்வின் கருப்பொருள் ‘எமது பல அடையாளங்கள்’ என்பதாகும். இவ் அமர்வின் நோக்கமானது, எங்களுடைய சமுதாயங்களின் வேறுபட்ட பகுதிகளுக்கிடையில் காணப்படும் பிளவுகளை பற்றி பார்ப்பதனை மாத்திரமல்லாமல், மாறாக எமது பொதுத்தன்மைகள் குறித்து ஆராய்வதனையும் மையப்படுத்துகின்றது. அதிகளவான கலந்துரையாடல்கள் மற்றும் பகிர்தல்களுடன் இவ் அமர்வு ஊடாடுகை மிக்கதாக அமையும்.

## 2. ஆரம்ப பயிற்சி: பானைக்கான அதிஷ்டம் 15 நிமி

முழுக் குழுப்பயிற்சி

***விவரணம்***

படமொன்றினை வெட்டுவதற்கு அல்லது கிழிப்பதற்கு பங்குபற்றுநர்களுக்கு 1 நிமிடமே உள்ளது, ஆனால் சில பங்குபற்றுநர்களிடம் மாத்திரமே கத்தரிக்கோல் உண்டு.

***நோக்கம்***

இப்பயிற்சியானது, அமர்விற்கான வேடிக்கையான மற்றும் ஊடாடுகை மிக்க ஆரம்பமொன்றினை வழங்குவதுடன், நபர்கள் வாழ்க்கையில் கொண்டுள்ள வேறுபட்ட ஆரம்பப் புள்ளிகள் மற்றும் ஒருமைப்பாட்டின் பயன்கள் பற்றி நபர்கள் சிந்திப்பதற்கு உதவுகின்றது. (அமர்வு 1 இற்கான ஞாபகப்படுத்தலொன்றாக, மனித உரிமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக இரசப் பானையொன்றின் படம் பயன்படுத்தப்பட்டுள்ளது.)

***வளங்கள்***

- ஒரு பங்குபற்றுநருக்கு ஒன்று என்றரீதியில் இரசப் பானை கையேட்டின் பிரதியொன்று.
- ஒவ்வொரு 8 பங்குபற்றுநர்களுக்கும் ஒரு கத்தரிக்கோல்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 3 நிமி

ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் இரசப் பானை கையேட்டின் பிரதியொன்றினை வழங்குங்கள் (உங்களிடம் புகைப்பட நகலெடுக்கும் கருவிக்கான அணுகுதல் இல்லையெனில் அதனை வரைந்து எடுத்துக் கொள்ளுங்கள்). சில நபர்களுக்கு மாத்திரம் கத்தரிக்கோலொன்றினை வழங்குங்கள் (உதாரணமாக, எட்டு பேரில் ஒருவருக்கு). பயிற்சியின் நோக்கத்தினை விளக்காது, பங்குபற்றுநர்கள் என்ன செய்ய வேண்டுமென்பதனை மாத்திரம் விளக்குங்கள், உதாரணமாக பின்வருமாறு விளக்குங்கள்:

> “நான் ‘ஆரம்பிக்க!’ என்ற சொல்லைக் கூறியதும், நீங்கள் தாளிலுள்ள இரசப் பானையினை 1 நிமிடத்திற்குள் ஏதேனுமொரு சாத்தியமான வழிமுறையில் தனியாக எடுக்க வேண்டும். உங்களுடைய கற்பனையாற்றலைப் பயன்படுத்துங்கள் மற்றும் வழியொன்றினைக் கண்டுபிடிப்பதற்கு ஆக்கபூர்வமாக செயற்படுங்கள். உங்களில் ஒரு சிலருக்கே கத்தரிக்கோலொன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான அதிஷ்டம் உள்ளது.”

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 11 நிமி

‘ஆரம்பிக்க’ என கூறிவிட்டு, 1 நிமிடத்தில் சமிக்ஞை செய்வதற்கேற்ப கடிகாரத்தினை பொருத்தி வைத்துக் கொள்ளுங்கள். அச்சமிக்ஞை வந்ததும் அனைவரையும் நிறுத்த சொல்லுங்கள். பின்னர், அவர்களுடைய இரசப் பானைகளை மேலே தூக்கிப் பிடிக்க சொல்லுங்கள், ஆகவே ஒவ்வொருவரும் அதனை எவ்வாறு செய்துள்ளனர் என அனைவரும் பார்க்க முடியும்.

ஒவ்வொருவரினதும் முயற்சிக்காக அவர்களைப் பாராட்டுங்கள், பின்னர் அவர்களிடம் கீழ்வருவனவற்றைக் கேளுங்கள்:

- நீங்கள் எவ்வாறு இப்பணியினை செய்தீர்கள்?
- கத்தரிக்கோல் இல்லாமையினை நீங்கள் எவ்வாறு உணர்ந்தீர்கள்?
- கத்தரிக்கோலை வைத்திருந்தவரென்றரீதியில் நீங்கள் எவ்வாறு உணர்ந்தீர்கள்?
- கத்தரிக்கோலை கடன் வாங்குவது பற்றி யாராவது யோசித்தீர்களா? ஏன் அவ்வாறு யோசித்தீர்கள்/யோசிக்கவில்லை?

***கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:***

- உலகெங்கிலுமுள்ள மற்றும் எமது சமுதாயங்களிலுள்ள நபர்கள் வாழ்க்கையில் மிகவும் வேறுபட்ட ஆரம்பப் புள்ளிகளுடன் பிறந்திருக்கின்றார்கள் என்பதனை இப்பயிற்சி எடுத்துக் காட்டுகின்றது. எங்களுடைய வாழ்க்கை எவ்வாறு அமையும் என்பதனை அநேக காரணிகள் தீர்மானிக்கின்றன - குறிப்பாக எமது பெற்றோர்களின் சமூக மற்றும் பொருளாதார அந்தஸ்து. சில நபர்கள் வேறுபட்ட வகையிலான சிறப்புரிமைகளுடன் - 'கத்தரிக்கோல்' போன்ற - பிறக்கின்ற அதிஷ்டத்தினைக் கொண்டுள்ளனர். பல நபர்கள் அவ்வாறான அதிஷ்டத்தினைக் கொண்டிருப்பதில்லை.
- சிலநேரங்களில் சிறப்புரிமைகளின்றி பிறந்த நபர்கள், கத்தரிக்கோலொன்றினைக் கடன் வாங்குவதற்கு முயற்சிக்காமல் அல்லது விடயங்களை மாற்றுவதற்கு முயற்சிக்காமல், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வகிபாகம் மற்றும் இடம் என்பவற்றினை ஏற்றுக்கொள்ள வேண்டுமென நினைக்கின்றனர். அத்துடன் சிறப்புரிமையினைப் பெற்றுள்ள நபர்கள் ஏனையோரும் 'கத்தரிக்கோலுக்கான' அணுகுதலைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதிக்க வேண்டுமென எப்போதும் நினைப்பதில்லை.
- மனித உரிமைகள் என்பன கௌரவமான வாழ்க்கை பற்றியதாகும். மனித உரிமைகள் பற்றி நன்கு அறிந்திருப்பது வித்தியாசமாக சிந்திப்பதற்கு எமக்கு உதவி செய்யும். 'எங்களிடம் கத்தரிக்கோல் இல்லை' என்ற ஒரு விடயத்தினால் நாங்கள் அநீதிகளை ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை மற்றும் தோல்வி பெற வேண்டியதுமில்லை. 'கத்தரிக்கோல் வேண்டுமென எம்மால் கேட்க முடியும்! மனித உரிமைகளாவன சிறப்புரிமைகளற்ற நபர்களின் உரிமைகளுக்காக போராடுவதற்காக சிறப்புரிமையுடைய நபர்களுக்கு உத்வேகமளிப்பதற்கும் உதவமுடியும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது*** 1 நிமி

இவ் அமர்வின் மிகுதி நேரத்தில்,எமது சமூகத்தில யாருக்கு சிறப்புரிமையளிக்கப்பட்டுள்ளது மற்றும் யார் அநீதியினை எதிர்கொள்கின்றனர் என்பது தொடர்பாக சிந்திக்கப் போகின்றோம் என கூறி நிறைவு செய்யுங்கள.

***குறிப்பு***

நீங்கள் நீளமான அமர்வொன்றினை நடத்துகின்றீர்களாயின், இப்பயிற்சியினை இன்னும் சற்று நீளமானதாக்க முடியும். முடிப்பதற்கு முன்னர், இப்பயிற்சியினை செய்வதற்கு குழுவிற்கு இரண்டாம் வாய்ப்பினை வழங்குங்கள். இம்முறை அவர்கள் பயிற்சியினை செய்வதற்காக ஒரு நிமிடத்தினை செலவழிக்கும் முன்னர், எவ்வாறு ஒத்துழைப்புடன் செயற்படுவது என்பது தொடர்பாக கலந்துரையாட ஒரு நிமிடத்தினை எடுத்துக் கொள்ளலாம். ஒத்துழைப்புடன் செயற்பட்டமை தொடர்பில் அவர்கள் எவ்வாறு உணர்ந்தார்கள் என கேளுங்கள். ஒன்றிணைந்து செயற்படுவதற்கு நாம் தயாராய் உள்ளபோது, எம்முடைய சமூகத்திற்கான மற்றும் எமக்கான இரண்டாம் வாய்ப்புக்களை எம்மால் உருவாக்கிக் கொள்ள முடியுமென்ற கருத்தினைக் கூறுங்கள். நீங்கள் இதனை செய்ய எண்ணியுள்ளீர்களாயின், கையேடுகளின் எண்ணிக்கையின் இரு மடங்கினை அச்சுப்பிரதி செய்ய வேண்டுமென்பதனை நினைவிற்கொள்ளுங்கள்!

## 3. *முழுக்குழு பயிற்சி: முன்னோக்கிய ஒரு அடி* 45 நிமி



*முழுக்குழுப் பயிற்சி*

***விவரணம்***

இவ் எளிமையான 'பாத்திரமேற்று நடித்தல' பயிற்சியில், பங்குபற்றுநர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கதாபாத்திரங்களாகத் தம்மைக் கருதி, நெறியாளரர் வாசிக்கின்ற கூற்றுடன் அவர்களுடைய கதாபாத்திரம் உடன்படுமாயின் ஒரு அடி முன்னோக்கி வைக்க வேண்டும். பங்குபற்றுநர்களுக்கிடையிலான பௌதீக இடைவெளி அகலமாகின்றபோது, சமூகத்தில் வேறுபட்டக் குழுக்கள் எதிர்கொள்கின்ற சாதகங்கள் மற்றும் பாதகங்கள் வெளிப்படையாகத் தெரியும்.

***நோக்கம்***

- பங்குபற்றுநர்கள் அவர்களை வேறு பின்னணிகளிலுள்ள நபர்களாக எண்ணிப் பார்ப்பதனூடாக, மனித உரிமைகள்/மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் அனைத்து மதங்களையும் சேர்ந்த மற்றும் மத சார்பற்ற அனைத்து நபர்களுக்கும் காணப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தினை உணர்ந்துக் கொள்வதற்கு அவர்களுக்கு உதவுதல்.
- வேறு மதங்கள் அல்லது நம்பிக்கைகளைச் சேர்ந்த நபர்கள் நாளாந்த வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய விழிப்புணர்வினை அதிகரித்தல்.
- மதம்/நம்பிக்கை மற்றும் பால்நிலை மற்றும் வகுப்பு போன்ற வேறு அடையாளங்கள் எவ்வாறு ஊடறுக்கின்றன என்பதனையும், அதனால் சில நபர்கள் பல பாதகநிலைகளை எதிர்கொள்கின்றமையினையும் எடுத்துக்காட்டுதல்.

*வளங்கள்*

- ஒரு பக்கத்தில் பங்குபற்றுநர்கள் ஒவ்வொருவரும் அருகருகே ஒரு வரிசையில் சுவர் பக்கமாக நின்றுகொண்டு மறு பக்கத்தினை நோக்கி 15 சிறிய அடிகளை முன்னோக்கி வைக்கக்கூடிய இடவசதியுள்ள வெளியொன்று/ அறையொன்று.
- வழங்குவதற்காக பிரதி செய்யப்பட்டுள்ள கதாபாத்திரங்களின் அட்டைகள்.
- வாசிப்பதற்கான கூற்றுக்களின் பட்டியல்.

*முன்னாயத்தம்*

கீழ்வரும் முறையில் கதாபாத்திர அட்டைகளையும் கூற்றுக்களையும் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.

- தொடக்கப்புள்ளியாக தரப்படுத்தப்பட்ட கதாபாத்திரஅட்டைகள் மற்றும் கூற்றுக்களை. தெரிவு செய்து கொள்ளுங்கள். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பிராந்திய சூழமைவுகளுக்கான தரப்படுத்தப்பட்ட கதாபாத்திரங்கள் மற்றும் கூற்றுக்களின். தொகுப்பொன்று இவ் அமர்விற்கு துணையாக இருக்கும். உங்களுடைய புவியியல் மற்றும் கலாசார சூழமைவுக்கு மிகப் பொருத்தமானத் தொகுதியினைத் தெரிவு செய்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பிராந்தியத்திற்கான ***கதாபாத்திரங்கள் மற்றும் கூற்றுக்களை*** *இங்கே* கண்டறியவும்.

பின்னர்:

- நீங்கள் எந்த கதாபாத்திரத்தினை பயன்படுத்த போகின்றீர்கள் என்பதனை தெரிவு செயயுங்கள். மாற்றங்களை செய்யக்கூடிய மற்றும் அச்சுப்பிரதி செய்யக்கூடிய வகையில், முப்பது கதாபாத்திர அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு பங்குபற்றுநருக்கு ஒரு கதாபாத்திர அட்டை உங்களுக்கு தேவைப்படும். உயர் பொருத்தப்பாட்டுத்தன்மை மற்றும் கதாபாத்திரங்களின் பன்மைத்தன்மை என்பனவற்றின் அடிப்படையில் எந்த அட்டைகளைப் பயன்படுத்தவேண்டுமெனத் தெரிவு செய்துக் கொள்ளுங்கள். இக்கதாபாத்திரங்களை எவ்வாறு தெரிவு செய்வது மற்றும் மாற்றியமைப்பது என்பது தொடர்பான முழுமையான வழிகாட்டலினை இவ் ஆவணங்களில் காணலாம்.

- நீங்கள் பயன்படுத்தப்போகின்ற கூற்றுக்களைத் தெரிவு செய்யுங்கள். வாசிப்பதற்காக உங்களுக்கு 12-15 கூற்றுக்கள் தேவைப்படும். உங்களுடைய நாட்டின் சூழமைவிற்கு பொருத்தமான கூற்றுக்களை தரப்படுத்தப்பட்ட பட்டியலிலிருந்து தெரிவு செய்துக் கொள்ளுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 8 நிமி

- எங்களுடைய சமுதாயங்களில் யார் சாதகநிலைகளைக் கொண்டுள்ளனர் மற்றும் யார் பாதகநிலைகளைக் கொண்டுள்ளனர் மற்றும் அவை எவ்வாறு அவர்களுடைய வாழ்க்கையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன என்பது தொடர்பில் நாம் இப்போது பார்க்கப் போகின்றோம் என்பதனை விளக்குங்கள்.

- குழுவானது முழுக்குழுவாக சேர்ந்து எளிமையான பாத்திரமேற்று நடிக்கின்ற பயிற்சியொன்றினை செய்ய போகின்றது என விளக்குங்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு கதாபாத்திரம் வழங்கப்படும். அவர்கள் அறையின் ஒரு பக்கத்திற்கு பின்புறத்தைக் காட்டியவாறு வரிசையாக நிற்கப் போகின்றார்கள். நீங்கள் வாசிக்கப்போகின்ற கூற்றுடன் அவர்களது கதாபாத்திரம் உடன்படுமென அவர்கள் நினைத்தால், அவர்கள் செய்ய வேண்டிய ஒரே விடயம், முன்னோக்கி ஒரு அடியெடுத்து வைத்தலாகும்.

- தங்களுடைய கதாபாத்திரங்களை இரகசியமாக வைத்திருக்குமாறு கூறி, எழுமாறாக பங்குபற்றுநர்களுக்கு கதாபாத்திரங்களை பகிர்ந்தளியுங்கள். ஆணொருவர் பெண்ணின் கதாபாத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதில் அல்லது பெண்ணொருவர் ஆணின் கதாபாத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதில் எவ்வித சிக்கலுமிராது.

- கீழ்வரும் வினாக்கள் தொடர்பாக சிந்திக்குமாறு பங்குபற்றுநர்களைக் கேட்டுக் கொள்வதனூடாக, பங்குபற்றுநர்கள் தங்களுடைய கதாபாத்திரங்களை உள்வாங்கிக் கொள்வதற்கு உதவிசெய்யும்பொருட்டு சில நிமிடங்களை செலவழியுங்கள். உங்களுடைய அட்டையிலுள்ள கதாபாத்திரம் நீங்களென கற்பனை செய்துக் கொள்ளுங்கள்:
  – உங்களுடைய சிறுபராயம் எப்படியிருந்தது?
  – உங்களுடைய நாளாந்த வாழ்க்கை எவ்வாறு இருக்கும் – உங்களுடைய வழக்கமான நாளொன்றில் நீங்கள் என்ன செய்வீர்கள், யாருடன் பழகுவீர்கள், உங்களுடைய வருமானம் மற்றும் வாழ்க்கைமுறை என்ன?
  – நீங்கள் பயப்படுகின்ற விடயங்கள் என்ன மற்றும் நீங்கள் எதிர்பார்க்கின்ற விடயங்கள் என்ன?

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 35 நிமி

- ***பாத்திரமேற்று நடித்தல்*** (15 நிமி)

  பங்குபற்றுநர்களை அறையின் ஒரு பக்கத்தில் ஒரு நேரான வரிசையில் அடுத்தடுத்து நிற்குமாறு கூறுங்கள். நீங்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கூற்றுக்களை வாசிப்பீர்கள் என கூறுங்கள். அவர்கள் தங்களுடைய வகிபாகம்/ கதாபாத்திரம் அக்கூற்றுடன் உடன்படுமென நினைத்தால், அவர்கள் முன்னோக்கி ஒரு அடியெடுத்து வைக்க வேண்டும். அவர்களுடைய கதாபாத்திரம் உடன்படாவிடின் அவர்கள் நின்ற இடத்திலேயே நிற்க வேண்டும்.

  இவ்விளையாட்டினால் எதிர்பாரக்கப்படுவது, முன்னோக்கி அடிகளை வைக்கின்றமை அல்ல, மாறாக, உங்களுடைய கதாபாத்திரத்தின் வாழ்க்கையின் நடைமுறை சாத்தியத்தினை இயலுமானளவு பிரதிபலிப்பதற்கு நீங்கள் உண்மையாக இருக்க வேண்டும். பயிற்சியின்போது பங்குபற்றுநர்கள் ஒருவருடனொருவர் பேசிக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஒரு சமயத்தில் ஒன்று என்றரீதியில், கூற்றுக்களை உரத்து வாசியுங்கள்.

  தங்களுடைய கதாபாத்திரம் முன்னோக்கி நகர முடியுமா என்பது தொடர்பில் சிந்திக்கப் பங்குபற்றுநர்களுக்கு அனுமதியளிப்பதற்காக, ஒவ்வொரு கூற்றின் பின்னரும் சிறிது இடைவெளி விடுங்கள். நீங்கள் அனைத்துக் கூற்றுக்களையும் வாசித்தபின்னர், பங்குபற்றுநர்கள் தாங்கள் யாரென்று சொல்லாமல், அறையில் அவர்கள் எந்த இடத்தில் இருக்கின்றார்கள் என்பதனை மற்றையவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதற்காக ஒரு நிமிடம் வழங்குங்கள்.

- ***முழுக்குழுக் கலந்துரையாடல்*** (20 நிமி)

  கீழ்வருவன போன்ற திறந்த வினாக்களை பங்குபற்றுநர்களிடம் கேளுங்கள். (ஒவ்வொருவரும் தங்களுடைய கதாபாத்திரத்தினைக் கூறிய பின்னர், இறுதி இரண்டு வினாக்களுக்கான நேரம் உங்களுக்கு இருக்கிறது என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளும் பொருட்டு, ஒவ்வொரு வினாவிற்கும் ஒன்று அல்லது இரண்டு பதில்களை மட்டும் கேளுங்கள்.)

  – பயிற்சியின்போது என்ன நடந்தது?
  – முன்னோக்கி அடியெடுத்து வைத்தபோது அல்லது அடியெடுத்து வைக்கமுடியாதபோது நீங்கள் எவ்வாறு உணர்ந்தீர்கள்?
  – நபர்களுக்கிடையில் காணப்படுகின்ற அதிகரிக்கின்ற இடைவெளியினைப் பார்க்கின்றபோது எவ்வாறு உணர்ந்தீர்கள்?
  – உங்களுடைய வகிபாகத்தினை ஆற்றுவது - அந்நபராக உங்களை எண்ணிக்கொள்ளுதல் இலகுவானதாக இருந்ததா அல்லது கடினமானதாக இருந்ததா?
  – மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் உள்ளடங்கலாக உங்களுடைய கதாபாத்திரத்தின் அடிப்படை மனித உரிமைகள் புறக்கணிக்கப்படுவதாக நீங்கள் உணர்ந்தீர்களா? எப்போது?

  ஒவ்வொருவரையும் அவர்களது கதாபாத்திரம் என்ன என்பதனை சொல்லுமாறு கூறுங்கள்.

  – அறையில் இருந்த எம்முடைய நிலைகள் எவ்வழியிலேனும் எமது சமூகத்திலுள்ள சமத்துவமின்மையின் யதார்த்தங்களை பிரதிபலித்துக் காட்டுகின்றனவா? யார் புறக்கணிக்கப்பட்டார்கள் - பெண்கள், சிறுபான்மையினர், வறிய நபர்கள்?
  – இவை அந்நபர்களின் வாழ்க்கையில் என்ன விளைவுகளைக் கொண்டிருக்கும்?

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது*** 2 நிமி

மனித உரிமைகள் சமவாயங்கள் நாங்கள் உரிமைகளிலும் கௌரவத்திலும் சமமானவர்களாய் பிறந்துள்ளதாக கூறுகின்றன - அதாவது நாங்கள் ஒரே புள்ளியிலேயே ஆரம்பிக்கின்றோம் என கூறி நிறைவு செய்யுங்கள். ஆனால், எங்களுடைய சமத்துவத்திற்கான மறுப்புக்கள், உதாரணமாக, எங்களது மத அல்லது நம்பிக்கைக்கான அடையாளம், எங்களுடைய சமூக அந்தஸ்த்து அல்லது எங்களது ஆண், பெண் பாலினம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்ட மறுப்புக்கள் நாங்கள் பிறந்த தருணத்திலிருந்து எம்முடைய வாழ்க்கையில் பாரியத் தாக்கத்தினைக் கொண்டுள்ளன. பல நபர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள்.

## 4. *உற்சாகப்படுத்துவதற்கான செயற்பாடு: அனைவரும் கதிரைகளை இடம் மாற்றிக் கொள்ளுங்கள்* 10 நிமி



முழுக்குழுப் பயிற்சி

***விவரணம்***

நெறியாளரால் வாசிக்கப்படுகின்ற கூற்றுக்களுடன் உடன்படுகின்ற பங்குபற்றுநர்கள் கதிரைகளை இடம்மாற்றிக் கொள்வார்கள்.

***இப்பயிற்சியின் நோக்கம்***

பிரிவுகளுக்கு மத்தியில் எங்களிடம் பொதுத் தன்மைகளும் இருக்கின்றன என்பதனைப் பார்க்கின்ற அதேவேளை, எங்களுடைய உற்சாகத்தின் அளவினை அதிகரித்துக் கொள்ளல்.

*முன்னாயத்தம்*
கீழுள்ள பட்டியலினை மாற்றியமைத்துக் கொள்வதன்மூலம், உங்களுடைய குழுவிற்கு பொருத்தமான வகையில் வாசிப்பதற்கான கூற்றுக்களின் பட்டியலொன்றினைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.

*பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*
ஒவ்வொருவரையும் வட்டமாக அமர்ந்து கொள்ள சொல்லுங்கள். நாங்கள் ஆழமான கலந்துரையாடலொன்றுக்கு செல்வதற்கு முன்னர், விரைவான மற்றும் வேடிக்கையான பயிற்சியொன்றினை செய்யப்போவதாக கூறுங்கள். நீங்கள் ஒரு கூற்றினை வாசிக்கப்போகின்றீர்கள் என்றும் அதனுடன் உடன்பட்டுக் கொள்கின்ற அனைவரும் கதிரைகளை இடம் மாற்ற வேண்டுமென்றும் கூறுங்கள்.

*இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*
கூற்றுக்களை வாசியுங்கள்:

- சாப்பிட விருப்பமான அனைவரும் (அனைத்து சமுதாயங்களிலும் பிரசித்தமாக உள்ள உள்ளூர் உணவு) கதிரைகளை இடம் மாற்றுங்கள்.
- விருப்பமான அனைவரும் (அனைத்து சமுதாயங்களிலும் பிரபல்யமாக உள்ள ஒரு இசையமைப்பாளர்) கதிரைகளை இடம் மாற்றுங்கள்.
- விருப்பமான அனைவரும் (அனைத்து சமுதாயங்களிலும் பிரபல்யமாக உள்ள உள்ளூர் விளையாட்டு அணி) கதிரைகளை இடம் மாற்றுங்கள்.
- பார்க்கின்ற அனைவரும் (அனைத்து சமுதாயங்களிலும் பிரபல்யமாக உள்ள தொலைக்காட்சி நிகழ்ச்சி) கதிரைகளை இடம் மாற்றுங்கள்.
- சூரியோதயத்தினை இரசித்துப் பார்க்கின்ற அனைவரும் கதிரைகளை இடம் மாற்றுங்கள்.
- மழை பெய்கின்றபோது சந்தோசப்படுகின்ற அனைவரும் கதிரைகளை இடம் மாற்றுங்கள்.
- ஏனைய ஒவ்வொருவரையும் ஏற்றுக்கொள்கின்ற அமைதியான சமுதாயமொன்றில் வாழ விரும்புகின்ற அனைவரும் கதிரைகளை இடம் மாற்றுங்கள்.

*இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது*
பங்குபற்றியமைக்காக அனைவருக்கும் நன்றி கூறுங்கள். சில பொதுவான கனவுகள் உள்ளடங்கலாக எம் அனைவருக்குமிடையில் பல பொதுவான விடயங்கள் உள்ளதாக தெரிகின்றது என கூறி நிறைவு செய்யுங்கள்.

## 5. *கலந்துரையாடல் பயிற்சி – எங்களது சமூக அடையாளங்கள்* 40 நிமி

முழுக்குழு கலந்துரையாடல்

*இப்பயிற்சியின் நோக்கம்*
ஏனைய மத/நம்பிக்கைகளை உடைய நபர்களிடம் காணப்படுகின்ற பொதுத்தன்மைகளைப் பார்ப்பதற்கும், அடையாளங்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றத் தன்மையுடன் தொடர்புறுகின்றன என்பது பற்றி சிந்திப்பதற்கும் பங்குபற்றுநர்களுக்கு உதவுதல்.

*தேவையான வளங்கள்*

- 10 'அடையாளங்களை' பட்டியல்படுத்தும் நகர்வு விளக்கப்படத் தாள்கள்
- அமர்விற்கான பவர்பொயின்ட் இன் ஸ்லைட் 3 அல்லது அவற்றின். உள்ளடக்கங்களை கொண்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாள்கள்.

*முன்னாயத்தம்*

- ***10 அடையாளங்களைத் தெரிவு செய்து அவற்றைப் பட்டியலிட்டு ஒரு நகர்வு விளக்கப்படத் தாளினைத் தயாரித்துக் கொள்ளுங்கள்***
  கீழ்வரும் பட்டியலானது நாங்கள் கொண்டிருக்கக்கூடிய 15 'அடையாளங்களை' உள்ளடக்கியுள்ளது. உங்களுடைய குழு சிந்திப்பதற்கு மிகவும் பொருத்தமானவை மற்றும் முக்கியமானவை என்ற அடிப்படையில், உங்களுடைய பங்குபற்றுநர்கள் கலந்துரையாடுவதற்காக இவற்றிலிருந்து 10 இனைத் தெரிவு செய்யுங்கள். கலந்துரையாடலினை பிரகாசிக்கச் செய்வதற்காக மற்றும் கலந்துரையாடல் வினாக்கள் மிகவும் உணர்வுபூர்வமானதாக உள்ளன என பங்குபற்றுநர்கள் கருதினால் அவர்கள் பேசக்கூடிய 'பாதுகாப்பான' மாற்றுவிடயங்களைக் கொண்டிருப்பதற்காக, உங்களுடைய தெரிவில் விளையாட்டு மற்றும் இசை போன்ற 'பொழுதுபோக்கிற்கான' அடையாளங்களை உள்ளடக்குவதனை உறுதி செய்து கொள்ளுங்கள். இச்செயன்முறையினை தடம்புரளச் செய்யக்கூடிய, சூடான விவாதங்களுக்கு வழிவகுக்கக்கூடிய ஏதேனும் அடையாளங்களை உள்ளடக்க வேண்டாம் - பிரச்சினையினை வாதிப்பது இப்பயிற்சியின் நோக்கமல்ல.

***அடையாளங்கள்***

– மதம் அல்லது நம்பிக்கை
– பால்நிலை
– நாங்கள் ஆதரவளிக்கின்ற உதைப்பந்தாட்ட அல்லது வேறு விளையாட்டுக் கழகம்
– குலம்/இனம்
– தேசியம்
– இசை இரசனை
– குடும்ப சூழ்நிலை
– கல்வி மட்டம்
– பொழுதுபோக்கு
– வகுப்பு/பொருளாதார அந்தஸ்த்து
– சாதி
– வயது
– முதல் மொழி
– பாலியல் நோக்குநிலை
– இயலுமை/இயலாமை

- ***உங்களது காட்சி சாதனங்களைத் தயார்ப்படுத்தல்***
  நீங்கள் தெரிவு செய்த 10 அடையாளங்களையும் நகர்வு விளக்கப்படத் தாளொன்றில் எழுதுங்கள். நீங்கள் பவர்பொயின்டினை பயன்படுத்தவில்லையாயின், பவர்பொயின்ட் ஸ்லைட் 3 இலுள்ள கலந்துரையாடல் வினாக்களை உள்ளடக்கிய மற்றுமொரு நகர்வு விளக்கப்படத் தாளினை தயாரித்துக் கொள்ளுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 4 நிமி

- நபர்களை சோடிகளாக இணைந்து ஏனைய சோடிகளிடமிருந்து சற்று விலகி இருக்கச் சொல்லுங்கள். அவர்கள் அமர்ந்திருக்க முடியுமாயின் அது உதவியாய் அமையும், ஆனால் இது இன்றியமையாதது அல்ல.
- கீழ்வருவனவற்றை விளக்குவதனூடாக இப்பயிற்சியினை அறிமுகப்படுத்துங்கள்: பெரும்பாலும், எங்களைப் பிரிக்கின்ற விடயங்கள் தொடர்பிலேயே நாம் கவனம் செலுத்துகின்றோம். உதாரணமாக, நாங்கள் மதத்தைப் பற்றி சிந்திக்கின்றபோது, நாங்கள் உடனடியாக 'அவர்களைப்' பற்றி - ஏனைய மதங்களைச் சேர்ந்த நபர்களைப் பற்றி மற்றும் 'எங்களைப்' பற்றி - என்னுடைய நம்பிக்கைகள் மற்றும் பாரம்பரியங்களை உடைய நபர்களைப் பற்றி சிந்திக்க முற்படுகிறோம். மத அடையாளங்கள் மிக உறுதியானவையாக இருக்க முடியும். ஆனால், நாங்கள் யாரென்பதனை ஆக்குகின்ற பல அடையாளங்களை நாம் ஒவ்வொருவரும் கொண்டுள்ளோம் - உதாரணமாக (உள்ளூர் மொழி) பேசுபவர், (மாகாணத்தில்) வசிப்பவர் அல்லது (உள்ளூர் உதைப்பந்தாட்ட கழகத்தின்) தீவிர இரசிகர்! நாங்கள் இப்போது எங்களுடைய வேறுபட்ட அடையாளங்கள் மற்றும் அவை எவ்வாறு ஏனைய நபர்களின் அடையாளங்களுடன் தொடர்புறுகின்றன என்பது பற்றி சிந்திக்க உதவுகின்ற ஒரு பயிற்சியொன்றினை செய்யப் போகிறோம்.
  10 அடையாளங்களையும் மற்றும் நகர்வு விளக்கப்படத்தாள் பவர்பொயின்ட் ஸ்லைட் 3 இலுள்ள கலந்துரையாடல் வினாக்களையும் வாசியுங்கள்.

***கலந்துரையாடல் வினாக்கள்:***

– நீங்கள் உங்களை எவ்வாறு உணர்கின்றீர்கள் என்பதில் உறுதியான விளைவினைக் கொண்டுள்ள உங்களது அடையாளத்தின் பகுதிகள் யாவை?
– உங்களை ஏனையோர் எவ்வாறு உணர்கின்றார்கள் என்பதில் உயரியத் தாக்கத்தினைக் கொண்டுள்ள உங்களது அடையாளத்தின் பகுதிகள் யாவை?
– உங்களது அடையாளத்தின் எப்பகுதியினால், நீங்கள் பெரும்பாலும் பாதகநிலைகளை அல்லது சிறப்புரிமைகளைப் பெற்றுக்கொள்வதாக உணர்கின்றீர்கள்?

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 35 நிமி

- ***சிந்திக்கவும்*** (5 நிமி)
  பங்குபற்றுநர்களது அடையாளங்கள் தொடர்பிலும் திரையில் தெரிகின்ற வினாக்கள் தொடர்பில் அவர்கள் எவ்வாறு பதிலளிப்பார்கள் என்பது பற்றியும் தனித்தனியாக சிந்திப்பதற்கு 5 நிமிடங்களை செலவழிக்குமாறு பங்குபற்றுநர்களிடம் கூறுங்கள்.
- ***சோடியாதல்*** (10 நிமி)
  இவ்வினாக்களை 10 நிமிடங்களுக்கு சோடியாகக் கலந்துரையாடுமாறு நபர்களுக்கு கூறுங்கள். தனிப்பட்ட விடயங்களாகக் கருதப்படுகின்ற எதனையும் யாரும் சொல்லத் தேவையில்லை என்றும், அவர்கள் பகிர்வதற்கு விரும்புகின்ற விடயங்களை மாத்திரம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறுங்கள்.
- ***பகிர்தல்*** (20 நிமி)
  இவ்வினாக்களை 10 நிமிடங்களுக்கு சோடியாகக் கலந்துரையாடுமாறு நபர்களுக்கு கூறுங்கள். தனிப்பட்ட விடயங்களாகக் கருதப்படுகின்ற எதனையும் யாரும் சொல்லத் தேவையில்லை என்றும், அவர்கள் பகிர்வதற்கு விரும்புகின்ற விடயங்களை மாத்திரம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது*** 1 நிமி

விடயங்களைப் பகிர்ந்துக் கொண்டமைக்காக அனைவருக்கும் நன்றி கூறுங்கள். அத்துடன், இப்பயிற்சி பங்குபற்றுநர்களின் அடையாளங்களின் பல்வேறுபட்ட பக்கங்களைப் புரிந்து கொள்வதற்கு அவர்களுக்கு உதவியிருக்குமென நீங்கள் நம்புவதாகவும் கூறுங்கள்!

## 6. நிறைவு செய்கின்ற கருத்துக்கள் – அடையாளங்கள் மற்றும் நிலையான உள எண்ணங்கள்   8 நிமி

முன்வைப்பு

***விவரணம்***

இவ் அமர்விற்கான நிறைவு செய்கின்ற கருத்துக்கள் ஒரு சிறிய முன்வைப்பு வடிவில் காணப்படுகின்றது. இது இவ் அமர்வின் பயிற்சிகளினூடாக நாம் கற்ற பல விடயங்களை ஒன்றிணைக்கின்ற சில கருப்பொருள்களையும் கதையொன்றினையும் உள்ளடக்கியுள்ளது.

***நோக்கம்***

இவ் அமர்வின் பிரதான செய்திகளை வலியுறுத்துதல்: ஒவ்வொருவருக்கும் பல அடையாளங்கள் உண்டு என்பதுடன் அவர்களுடைய அடையாளங்களின் அடிப்படையில் அவர்கள் சாதக மற்றும் பாதக நிலைகளை எதிர்கொள்ள முடியும், மற்றும் ‘மற்றையவர்’ என்பவரை, அவரைப் பற்றிய அனைத்தையும் வரையறுக்கின்ற தனியான ஒரு அடையாளத்தினைக் கொண்டுள்ளவராக பார்க்காமலிருத்தல் மிக முக்கியமாகும்.

***வளங்கள்***

- இவ்வழிகாட்டியின் பக்கம் 75 இல் முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதியினைப் பார்க்கலாம்.
- எழுத்துப்பிரதியானது அமர்விற்கான பவர்பொயின்டின் 4 முதலான ஸ்லைடுகளை ஒத்து அமைந்திருக்கும் என்பதுடன் அது இவ் ஸ்லைடுகளுக்கான வளவாளர் குறிப்புக்களுள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- அமர்விற்கான துணை வளங்களில் மாற்றங்களை செய்வதற்கேற்றவகையில், எழுத்துப்பிரதியின் Word வடிவம் இணைக்கப்பட்டுள்ளது.

***முன்னாயத்தம்***

எழுத்துப்பிரதி மற்றும் பவர்பொயின்ட் ஸ்லைடுகளை வாசியுங்கள், நீங்கள் விரும்பினால் அவற்றை பொருத்தமான முறையில் மாற்றியமைத்துக் கொள்ளுங்கள் (அல்லது ஸ்லைடுகளிலுள்ள பிரதான கருத்துக்களுக்கான நகர்வு விளக்கப்படத் தாள்களை தயாரித்துக் கொள்ளுங்கள்). ஸ்லைடுகள்/நகர்வு வரைபடத்தாள்களுடன் முன்வைப்பினை செய்வதற்கு பயிற்சி செய்து பாருங்கள்.

***மூலம்***

பானைக்கான அதிஷ்டம்: Star exercise: George Lakey, Facilitating Group Learning இலிருந்து தழுவிக்கொள்ளப்பட்டது, ப.109

முன்னோக்கி ஒரு அடி: Education For Peace இல் கிடைக்கக்கூடியதாக உள்ள EU commission’s Compass இன் கைநூல் மற்றும் பயிற்சி ஆவணங்களிலிருந்து தழுவிக் கொள்ளப்பட்டது
http://www.educationforpeace.com/english/forb.php

எமது சமூக அடையாளங்கள்: University of Michigan, The Social Identity Wheel உள்வாங்குகைமிக்க கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து தழுவிக் கொள்ளப்பட்டது
https://sites.lsa.umich.edu/inclusive-teaching/social-identity-wheel/)

# முன்வைப்புக்கான எழுத்துப்பிரதி

## அடையாளங்கள் மற்றும் நிலையான உள எண்ணங்கள்

*அமர்வு – 3இன் நிறைவு கருத்துக்கான எழுத்துப்பிரதி அமர்வின் 4-13 வரையான பவர்பொயின்ட் ஸ்லைடுகளில் விளக்கப்பட்டுள்ளன.*




இந்த அமர்வில், நாம் எம்மையும் மற்றும் ஏனையோரையும் பார்க்கின்ற கண்ணோட்டம் மற்றும் நாம் ஏனையோரை நடத்துகின்ற விதம் என்பவற்றில் எவ்வாறு எமது வேறுபட்ட அடையாளங்கள் தாக்கம் செலுத்துகின்றன என்பது குறித்துப் பார்த்தோம். அத்துடன், நாங்கள் ஒவ்வொருவரும் கொண்டிருக்கின்ற வேறுபட்ட பல அடையாளங்கள் பற்றியும், இவ் அடையாளங்கள் எவ்வாறு மத எல்லைகளுக்கு அப்பால் பொதுத்தன்மையினவாக பகிரந்துக்கொள்ளப்படுகின்றன என்பது பற்றியும் பார்த்தோம். இந்துப் பெண்கள், முஸ்லிம் பெண்கள் மற்றும் நாத்திகப் பெண்கள் சமூகத்தில் ஒரேமாதிரியான பாதகநிலைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்கின்றனர், அதேபோல இயலாமைகளைக் கொண்டுள்ள பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்கள் அல்லது எந்தவொரு நம்பிக்கையினையும் சேர்ந்த கல்வியறிவற்ற நபர்கள் சமூகத்தில் ஒரேமாதிரியான பாதகநிலைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்கின்றனர். எங்களிடம் பொதுத் தன்மைகளும் அதேபோல வேறுபாடுகளும் காணப்படுகின்றன.


---




பெரும்பாலும், மத அடையாளங்கள் எம்மிடையே பிரிவினைகளை உருவாக்க பயன்படுத்தப்படுகின்றன. இது நாங்கள் வேறு சமுதாயங்களிலுள்ள நபர்கள் யூதர், முஸ்லிம், பௌத்தம் போன்ற தனியொரு அடையாளத்தினை மாத்திரம் கொண்டிருப்பதாகவும், அவ் அடையாளத்தினையுடைய அனைவரும் ஒரே விடயங்களை சிந்திக்கின்றனர், உணர்கின்றனர் மற்றும் செய்கின்றனர் என்றரீதியிலும் பார்ப்பதற்கு வழிவகுக்கின்றது. நபர்கள், ஏனைய ஒவ்வொருவரையும் நிலையான உள எண்ணங்களைக் கொண்டு அடையாளப்படுத்துகின்றமை பொதுவானதாக உள்ளது.

குறிப்பிட்ட மத அல்லது நம்பிக்கைக்கான அடையாளத்தினைக் கொண்டுள்ள நபர்கள் வேறுபட்ட வயது, பால்நிலை, வகுப்பு, தேசியம் அல்லது அரசியல் கண்ணோட்டத்தினைக் கொண்டுள்ளபோதிலும் மற்றும் அவர்கள் தங்களது நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளை அனுட்டிப்பினும் அல்லது அனுட்டிக்காவிடினும்கூட, நாம், பெரும்பாலும், அறிந்தோ அல்லது அறியாமலோ அவர்களை ஒரே மாதிரியானவர்களாகவே எண்ணுகின்றோம்.

---




பொதுவாக, நாம் ஏனைய நபர்களை அவர்களது மதத்தினால் வரையறுக்கப்பட்டுள்ளோராகவே பார்க்கிறோம்- அவர்களைப் பற்றிய ஏனைய அனைத்து விடயங்களும் மதத்தினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது என ஊகிக்கிறோம். ஆகவே, ஒரு குழுவினைச் சேர்ந்த நபரொருவர் ஏதேனும் தவறினைச் செய்கின்றபோது, அதற்கான காரணம் அவரின் மதம் கேடான விடயங்களை புகுத்துகின்றமை அல்லது அம்மதம் ஒழுக்கக்கேடாக இருக்கின்றமையே ஆகும்.

---




வேறுபட்ட சமுதாயங்களுக்கிடையில் உள்ள நபர்கள் ஒருவருடனொருவர் உறவுகளைப் பேணாதுள்ளபோது, ‘ஏனையோர்’ என்போர் ‘நம்மிலிருந்து’ முற்றிலும் வேறுபட்டவர்கள்- ‘அவர்கள்’ ‘நம்மை’ விட வேறுபட்ட ஈடுபாடுகள், தேவைகள், விழுமியங்கள் மற்றும் உணர்வுகளைக் கொண்டுள்ளனர் என எண்ணுவது மிக இலகுவானதாக அமைகின்றது. அந்த அடிப்படையில் அவர்களிடம் நாம் கற்றுக்கொள்ளக்கூடிய எவ்வித அறிவு அல்லது ஞானமும் இல்லை என நாம் நினைக்கக்கூடும் அல்லது அவர்களை கலாசாரரீதியாக அல்லது ஒழுக்கரீதியாக தாழ்வானவர்களாகப் பார்க்கக்கூடும்.



பதிலாக, சமூகத்தில் உள்ள ஏனைய குழுக்களைச் சேர்ந்த நபர்களை நாம், வேறுபட்ட அடையாளங்கள் மற்றும் வாழ்க்கை அனுபவங்களைக் (இவற்றுள் பெரும்பாலானவற்றை நாமும் கொண்டிருப்போம்) கொண்ட முழுமையான நபர்களாகப் பார்க்கின்றபோது, பெரும்பாலும், நாம் புதிய வழிகளில் ஒவ்வொருவரையும் மதிப்பதற்கு, புரிந்துக்கொள்வதற்கு மற்றும் அங்கீகரித்துக்கொள்வதற்கு முடியும். அத்துடன் எல்லைகளைக் கடந்து சென்று உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கான வழிகளைக் கண்டறிய முடியும்.

சில அடையாளங்கள் சமூகத்தில் பாதகநிலைக்கு இட்டுச் செல்வதுடன், சில எமக்கு சிறப்புரிமைகளை அளிக்கின்றன. எமது சிறப்புரிமைகள் எவையென நாம் அடையாளம் காண்பதானது, நாம் எப்போது ஏனைய நபர்களுக்கு பாதகநிலைகளை ஏற்படுத்துகின்ற பிரச்சினையொன்றின் அங்கமாக இருக்கின்றோம் என்பதனை அடையாளம் காண உதவி செய்யும். அத்துடன், எங்களது வேறுபட்ட அடையாளங்களை நாம் அறிந்து கொள்கின்றமையானது, நாம் எதிர்கொள்கின்ற பாதகநிலைகள் மற்றும் பாரபட்சத்திற்கு எதிராக போராடுவதற்கான மற்றும் பாரபட்சத்தினை எதிர்கொள்கின்ற ஏனையோருடன் ஒன்றிணைந்து நிற்பதற்கான வாய்ப்புக்கள் மற்றும் சாத்தியப்பாடுகளைக் காணுவதற்கு எமக்கு உதவும்.

**மாற்றமுண்டாக்குநர்களின் கதை**



Sameh எனும் கிறிஸ்தவ இளைஞனும் Hanaa எனும் முஸ்லிம் இளம் பெண்ணும் எகிப்திலுள்ள குவானா எனும் நிர்வாகப் பிரிவிற்கு உட்பட்ட ஹிஜானா எனும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார். அவர்கள் கிராமத்தில் காணப்பட்ட கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சமுதாயங்களுக்கிடையிலானத் தடைகளை உடைப்பதற்காக ஒன்றிணைந்து வேலை செய்கிறார்கள்.

> ''வேறுபட்ட மதங்களைச் சேர்ந்த சிறுவர்களுடன் ஒன்றாக அமர்வதற்கு அல்லது தொடர்புகொள்ள மறுக்கின்றதை நான் பார்த்திருக்கிறேன்'' என Hanaa கூறுகின்றார்.

> ''இதை ஒன்றிணைந்து கையாள்வது இலகுவானதாக இருக்கும் என நான் உணர்ந்தேன். அத்துடன், அவர்களது கண்ணோட்டங்களை மாற்றுவதற்கு ஒன்றிணைந்து முயற்சி செய்தோம். இந்த பிரதேசத்திலுள்ள சிறுவர்கள் மாற்றத்திற்கான விதைகளாக இருக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்பினோம்'' என Sameh கூறுகின்றார்.

---



சிறுவர்கள் காற்பந்து விளையாட விரும்பினார்கள், ஆனால், காற்பந்து விளையாடுவதற்கு ஏற்ற ஒரேயொரு சிறந்த இடமாக கத்தோலிக்கத் திருச்சபைக்கு வெளியே சதுர வடிவில் இருந்த ஒரு இடமே காணப்பட்டது என்பதனை அவர்கள் உணர்ந்துக்கொண்டார்கள். அவர்கள் இருவரும் உள்ளூர் மதகுரு ஒருவரான வண. பாதிரியார் Francis இனை அணுகினார்கள். அவர் அதிகமாக ஒத்துழைப்பு செய்ததுடன், செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்கும் உதவினார்.

> ''உண்மையில், Sameh மற்றும் Hanaa இக்கிராமத்தில் செய்கின்ற விடயங்கள் எமக்குத் தேவை. அத்துடன், இது அனைத்து கிராமங்களுக்கும் பரப்பப்படுமென நாம் நம்புகின்றோம்'' என அவர் கூறுகிறார்.

---



ஆரம்பத்தில் முஸ்லிம் சிறுவர்கள் அங்கு போக விரும்பவில்லை. ஆனால், இறுதியாக எல்லோரும் அவளது வழிகாட்டலைப் பின்பற்ற தொடங்கினார்கள்.

> ''மெதுவாக ஆனால் நிச்சயமாக, நான் பிள்ளைகளை ஒன்றாக்க முயற்சி செய்தேன்,'' என்று அவள் கூறுகின்றாள். ''ஆரம்பத்தில் அவர்கள் மறுத்தார்கள், ஆனால் படிப்படியாக, அவர்கள் தாமாகவே புதிய கலப்புக் குழுக்களை உருவாக்க ஆரம்பித்தார்கள்.''

Sameh மற்றும் Hanaa ஆகியோர் குழுக்களின் செயற்பாடுகளை பார்ப்பதற்காக சிறுவர்களின் பெற்றோர்களை அழைத்தார்கள். பிள்ளைகள் ஒன்றிணைந்து ஊடாடுகின்றமையினை பார்ப்பதற்கான சாதகமான துலங்கலை முதலில் வெளிப்படுத்தியவர்கள் தாய்மார்களே ஆவார்.

> ''நாம் மாற வேண்டும் என்பதுடன் மாற்றமானது ஒரு அபிப்பிராயத்தில் நாம் நம்பிக்கை வைப்பதனூடாகவே ஆரம்பமாகின்றது'' என Sameh கூறுகின்றார். அத்துடன், ''நாம் இருவரும்தான் நடைமுறை உதாரணங்கள். நாம் இருவரும் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களாயினும் நாம் ஒன்றிணைந்து செயற்படுகிறோம். நாங்கள் ஒருவரையொருவர் முழுமையாக்குவதுடன் நாம் ஒரே குறிக்கோளினைப் பகிர்ந்துக் கொள்கிறோம். எங்களுடைய குறிக்கோள் சிறுவர்களே!''

## முடிவு

இறுதியாகப் பார்க்கின்றபோது, எமது வாழ்க்கை எனப்படுகின்ற இரசம் வளம் மிக்கதாயும் சுவையானதாயும் இருக்க வேண்டுமென்றே நாம் விரும்புகின்றோம்! நாங்கள் ஒரே மனிதக் குடும்பத்தினைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் ஒரேமாதிரியான அடிப்படைத் தேவைகள் மற்றும் உரிமைகளைப் பகிர்ந்துக் கொள்கிறோம். நாங்கள் ஒவ்வொருவரினதும் உரிமைகளுக்காக ஒன்றிணைந்து பணியாற்றுகின்றபோது, நாங்கள் வினைத்திறன் மிக்கவர்களாக இருப்போம்.

எமது அடுத்த இரண்டு அமர்வுகளில், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல்கள் பற்றிக் கற்றுக் கொள்ளப்போவதுடன், இந்த மீறல்கள் எமது சமுதாயத்தில் எவ்வாறு இருக்கின்றன என்பதனை விவரணையாக்கம் செய்ய முயற்சிப்போம். அவ் அறிவானது, நாம் மாற்றமுண்டாக்குநர்களாக வருவதற்கான அடுத்த படிமுறைகளை முன்னெடுப்பதற்கு எமக்கு உதவும் என நம்பப்படுகின்றது.

***மூலம்***

மாற்றமுண்டாக்குநர்களின் கதை மூலம்: Taadudiya, www.taadudiya.com

Sameh மற்றும் Hanaa ஆகியோர் அரபு மொழியிலே தங்களுடையக் கதையை கூறுகின்ற ஒரு வலையொளி திரைபடத்தினை நீங்கள் ஆங்கில மொழியிலான வசனவரிகளுடன் இத்தொடுப்பில் காணலாம்: What is your story? Egypt (English Subtitles) - YouTube

துரதிஷ்டவசமாக 2019 இல் வாகன விபத்தொன்றில் Hanaa காலமானர்

# அமர்வு 4

## மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திர மீறல்கள்

### அமர்வு பற்றிய கண்ணோட்டம்

இவ் அமர்வானது, பங்குபற்றுநர்களுக்கு, ம. அ. ந. சு இன் வேறுபட்ட வகையிலான மீறல்கள் பற்றியும் உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்ற அனைத்து மதங்களையும் சேர்ந்த மக்கள் அல்லது மத சார்பற்றவர்கள் அம்மீறல்களினால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றார்கள் என்பது பற்றியும் அறிமுகப்படுத்துகின்றது. அத்துடன், இவ் அமர்வு, பங்குபற்றுநர்கள் எதிர்கொள்ளக்கூடிய ம.அ.ந.சு இன் வழக்கமான மீறல்களை அடையாளப்படுத்துவதற்கான பங்குபற்றுநர்களின் இயலுமையினையும் பலப்படுத்துகின்றது.

இவ் அமர்வானது, மீறல்கள் பற்றிய 20-நிமிட முன்வைப்பு ஒன்றுடன் ஆரம்பமாகின்றது. இம் முன்வைப்பின் சில பகுதிகள் உங்களுடைய சூழமைவில் சர்ச்சைக்குரியதாக இருக்கலாம். உங்களுடைய பங்குபற்றுநர்களுடன் ஆக்கபூர்வமாகக் கலந்துரையாடுவதற்கு பாதுகாப்பான மற்றும் சாத்தியமான உள்ளடக்கங்கள் யாவை என்பது தொடர்பான உங்களுடைய மதிப்பீட்டின் அடிப்படையில் நீங்கள் இம்முன்வைப்பினை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

இம்முன்வைப்பிற்கு பின்னர், அனைத்து பங்குபற்றுநர்களையும் ஈடுபடுத்துகின்ற 75-நிமிடங்களிலான நாடகப் பயிற்சியொன்றுடன் இவ் அமர்வு ஊடாடல் மிக்கதாக அமையும். இது நைஜீரியாவில் உள்ள இரண்டு மாற்றமுண்டாக்குநர்களின் கதைகளுடன் நிறைவுபெறும்.

### *கற்றல் குறிக்கோள்கள்*

இவ் அமர்வானது, ம.அ.ந.சு இன் வேறுபட்ட வகையிலான மீறல்கள் மற்றும் சர்வதேசரீதியில் ம.அ.ந.சு இன் நிலைப்பாடு தொடர்பான அறிவினைக் கட்டியெழுப்புவதனையும், மீறல்களை அடையாளப்படுத்துகின்ற திறன்களை பலப்படுத்துவதனையும் மையமாகக் கொண்டுள்ளது.

இவ் அமர்வின் இறுதியில், பங்குபற்றுநர்கள் பின்வருவனவற்றைச் செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள்:

- ம.அ.ந.சு இன் வேறுபட்ட வகையிலான மீறல்கள் பற்றி விபரிப்பார்கள்
- திட்டவட்டமான சந்தர்ப்பங்களில் இடம்பெறக்கூடிய ம.அ.ந.சு இன் எடுத்துக்காட்டான மீறல்களை அடையாளம் காணுவார்கள்.
- அனைத்து மதங்களையும் சேர்ந்த நபர்கள் மற்றும் மத சார்பற்ற நபர்கள் என அனைவரும் ம.அ.ந.சு இன் மீறல்களினால் பாதிக்கப்படுகின்றனர் என்பதனை ஏற்றுக்கொள்வார்கள் மற்றும் அவர்களுடைய வேதனைகளை புரிந்து கொள்வார்கள்.

### *மொத்த உள்ளடக்கங்கள் மற்றும் நேரவிபரங்கள்*

| | |
|---|---|
| ***வரவேற்பு மற்றும் அறிமுகம்***<br>ம.அ.ந.சு என்றால் என்ன என்பதனை நபர்களுக்கு நினைவுபடுத்துங்கள். அத்துடன், அமர்வினை அறிமுகப்படுத்துங்கள். | 5 நிமி |
| ***முன்வைப்பு: ம.அ.ந.சு இன் மீறல்களை புரிந்து கொள்ளல்***<br>உலகில் பல்வேறு பகுதிகளில் இடம்பெறுகின்ற உதாரணங்களை சுட்டிக்காட்டி மீறல்களின் வேறுபட்ட வகைகளைப் பற்றிய அறிவினை வழங்குவதற்கான ஒரு உரையாடல். | 20 நிமி |
| ***முழுக்குழுக் கலந்துரையாடல்***<br>உள்ளீடுகள் பற்றி சிந்திப்பதற்கான மற்றும் அவற்றைக் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு. | 10 நிமி |
| ***நாடகப் பயிற்சி: ம.அ.ந.சு தொடர்பான 2 நிமிட குறு நாடகங்கள்***<br>மகிழ்வான மற்றும் ஊடாடல் மிக்க முறையில், ம.அ.ந.சு.இன் மீறல்களை அடையாளப்படுத்துவதற்கு பயிற்சி செய்வதற்கான வாய்ப்பினை பங்குபற்றுநர்களுக்கு வழங்குகின்றது. | 80 நிமி |
| ***நிறைவு செய்யும் கருத்தும் மாற்றமுண்டாக்குநர்களின் கதையும்***<br>அமர்வினை ஒன்றாகப் பிணைக்கின்றது. | 5 நிமி |
| ***மொத்த நேரம்*** | ***2 மணி நேரம்*** |

## தயாராகுங்கள்

பக்கம் 15 இலுள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயாராவது' என்பதன்கீழ், வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக அமர்விற்காக தயாராகுங்கள். நினைவிற் கொள்ளுங்கள் - உங்களுடைய குழுவைப் பற்றி உங்களுக்கு தெரியும். ஆகவே, உங்களுடைய குழுவின் தேவைகளுக்கு ஏற்றவகையில் அமர்வின் ஏதேனும் கூறுகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு மற்றும் மாற்றுவதற்கு உங்களால் முடியும்.

*இவ் அமர்விற்கான வளங்கள்*

பக்கம் 16 இல் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு அமர்விற்குமான நியம துணை வளங்களுக்கு மேலதிகமாக, அமர்வினை நடத்துவதற்கு உங்களுக்கு கீழ்வரும் துணை வளங்கள் தேவைப்படலாம்:

- அண்ணளவாக ஆறு பங்குபற்றுநர்களைக் கொண்டுள்ள ஒவ்வொரு குழுவும் தங்களுடைய குறிப்பிட்ட சூழ்நிலைக்காட்சிக்கான இரண்டு பிரதிகளைக் கொண்டிருக்கக்கூடிய வகையில், 'குறு-நாடக சூழ்நிலைக்காட்சிகளின்' போதுமான பிரதிகள்.

இந்த அமர்வுக்கான ***துணைவளங்களை*** *இங்கே* காணலாம்.

***மேலதிக விருப்பத் தெரிவு – உங்களுடைய நம்பிக்கையைக் கட்டியெழுப்புங்கள்!***

உங்கள் தயார்ப்படுத்தலின் ஒரு அங்கமாக மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல்கள் பற்றி மேலும் கற்றுக்கொள்ள *இக்குறுந் திரைப்படத்தினைப்* பார்த்தால் என்ன?



***திரைப்படங்கள்***

***அறையினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்***

இவ் அமர்விற்காக, முன் பக்கத்தைப் பாரத்த வண்ணமாக கதிரைகளை அரை வட்ட வடிவில் வைத்து ஆரம்பித்தல் சிறந்த யோசனையாகும். பெரிய அறையொன்றினை (அல்லது மேலதிக அறைகளை) கொண்டிருப்பது நன்று, ஆகவே, குழுக்கள் ஒன்றிலிருந்து ஒன்று விலகியிருந்து தங்களுடைய நாடகத்தினைப் பயிற்சி செய்து பார்க்க முடியும்.



'முன்வைப்பு'

# விரிவான அமர்வுத் திட்டம்

## 1. *வரவேற்பு மற்றும் அறிமுகம்* 5 நிமி

*குறும்பேச்சு*

***விவரணம் மற்றும் நோக்கம்***

இச்சுருக்கமான அறிமுகமானது, பங்குபற்றுநர்கள் பயிற்சி நெறியின் செயன்முறையினைத் தாங்களாகவே புரிந்து கொள்வதற்கு உதவ முடியும். அமர்வு 2 இல் ம. அ. ந. சு. பற்றி பங்குபற்றுநர்கள் என்ன கற்றுக் கொண்டார்கள் என்பதனை ஞாபகப்படுத்துவதோடு, அமர்வு 4 மற்றும் 5 இன் மையப் பொருளாக உரிமை மீறல்கள் அமையுமென அறிமுகப்படுத்துவதனையும் இலக்காகக் கொண்டுள்ளது.

*வளங்கள்*

- அமர்வு 1 இலிருந்து கள விதிகள் எழுதப்பட்ட நகர்வு விளக்கப்படத் தாள்.
- அமர்வு 4 இற்கான பவரபொயின்ட் , 3 வது ஸ்லைடு, அல்லது ***சிந்தனை செய்தல் – நம்புதல் – உரியவராயிருத்தல் – பயிற்சி செய்தல் – கேள்வியெழுப்புதல் – மாற்றுதல் – மறுத்தல்*** ஆகிய வார்த்தைகள் அடங்கிய நகர்வு விளக்கப்படத் தாளில்கள்.

***என்ன சொல்ல வேண்டும்***

அனைவரையும் அமர்விற்கு வரவேற்று கீழ்வரும் கருத்துக்களை உங்களுடைய குழுவிற்கு ஏற்ப மாற்றியமைத்து கூறுங்கள்.

- அமர்வு 2 இல் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் என்றால் என்ன என நாங்கள் பார்த்தோம். ம. அ. ந. சு. இனை விபரிப்பதற்கு நாம் பயன்படுத்திய பிரதான சொற்கள் எவையென உங்களுக்கு நினைவிருக்கின்றதா? (உங்களுடைய குழு, சிந்தித்தல் - நம்புதல் - உரியவராயிருத்தல் - நடைமுறைப்படுத்தல் - கேள்வியெழுப்பல் - மாற்றுதல் - மறுத்தல் போன்ற பிரதான சொற்களை கூறுகிறார்களா என பாருங்கள். பின்னர் ஸ்லைட் 3 இனைக் காட்டி அதனை வாசியுங்கள்.)

- அத்துடன் ம. அ. ந. சு எப்போது மட்டுப்படுத்தப்படலாம் என்றும் நாங்கள் கற்றோம். சிந்திப்பதற்கான, நம்புவதற்கான மற்றும் நம்பிக்கைகள் பற்றிய உங்களுடைய எண்ணங்களை மாற்றிக் கொள்வதற்கான உள்ளார்ந்த சுதந்திரங்களை மட்டுப்படுத்த முடியாது என்றும், ஆனால், நாங்கள் செய்கின்றவை - அதாவது எங்களது மத அல்லது நம்பிக்கைக்கான நடைமுறைகள் ஏனைய நபர்களை குறிப்பான வழிகளில் ஊறுபடுத்துகின்றபோது அவற்றை மட்டுத்தலாம் என்றும் நாம் கற்றோம். அத்துடன், பாரபட்சம், பலவந்தப்படுத்தல் மற்றும் வன்முறைக்கான தூண்டுதல் என்பன அனுமதிக்கப்பட மாட்டாது என்பதனையும் கற்றோம்.

- அடுத்த இரண்டு அமர்வுகளும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல்களை மையப்படுத்துகின்றன. இவ் அமர்வில், நாங்கள் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல்களின் வகைகள் குறித்தும் அது தொடர்பான உலகளாவிய உதாரணங்களையும் பார்க்கப் போகின்றோம். அனைத்து வகையான இடங்களிலுமுள்ள அனைத்து மதங்கள் மற்றும் நம்பிக்கைகளையும் சார்ந்த நபர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என்பதனை நாம் புரிந்துக் கொள்வதற்கு இது உதவும். அடுத்த அமர்வில், நாங்கள் எங்களுடைய சமுதாயத்தில் இடம்பெறுகின்ற மீறல்களை குறிப்பிட்டு காட்ட முயற்சிப்போம்.

- இவ் அமர்வில் நாங்கள் கேட்கின்ற கதைகள் துன்பம் நிறைந்த எங்களுடைய தனிப்பட்ட அனுபவங்களை ஞாபகப்படுத்தலாம் என்ற காரணத்தினாலும், இதில் எழுப்பப்படுகின்ற சில விடயங்கள் சமூகத்தில் எவை அனுமதிக்கப்பட வேண்டும் மற்றும் எவை அனுமதிக்கப்படக்கூடாது என்ற எங்களது அபிப்பிராயங்களை சவாலுக்குட்படுத்தக் கூடுமென்ற காரணத்தினாலும் - இவ் அமர்வுகள் சிக்கல் மிக்கனவாக இருக்கலாம். குழுவில் நாங்கள் உடன்படாத விடயங்கள் இருக்கலாம். ஆகவே, இவ் அமர்வில், எங்களுடைய கள விதிகளை நினைவிற்கொண்டு, நாங்கள் ஏனைய ஒவ்வொருவர் தொடர்பிலும் கவனம் செலுத்தி அவர்கள் சொல்வதனைக் கேட்போம்! (இக் கள விதிகள் யாவை என்பது தொடர்பில் பங்குபற்றுநர்களுக்கு நினைவுபடுத்துவதற்காக அவை எழுதப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாளினைப் பயன்படுத்துங்கள்.)

- மீறல்கள் தொடர்பானக் கதைகளைக் கேட்டலானது எம்மை நிலைகுலையச் செய்யலாம் அல்லது எதிர்பார்ப்புக்களற்றவர்களாக ஆக்கலாம். ஆனால், பிரச்சினைகள் தொடர்பாக எதையாவது செய்வதற்கு மற்றும் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு, எம்மால் அப்பிரச்சினைகளை அடையாளம் காணவும் புரிந்து கொள்ளவும் கூடியதாக இருத்தல் வேண்டும்.

## 2. முன்வைப்பு: ம. அ. ந. சு. இன் மீறல்களை புரிந்து கொள்ளல் 20 நிமி

முன்வைப்பு

***விவரணம் மற்றும் நோக்கம்***

இம்முன்வைப்பானது ம. அ. ந. சு. இன் மீறல்களின் வேறுபட்ட வகைகள் மற்றும் உலகளாவியரீதியில் ம. அ. ந. சு. இன் நிலைப்பாடு என்பன பற்றிய பங்குபற்றுநர்களின் அறிவினை விருத்தி செய்வதனை இலக்காகக் கொண்டுள்ளது. இவ் அமர்வில் எஞ்சிய பகுதிகளைக் கற்பதற்கும் மற்றும் அடுத்த அமர்வில் பங்குபற்றுநர்கள் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் சூழமைவினை பகுப்பாய்வு செய்கின்ற திறன்களை வளர்த்துக் கொள்வதற்குமான அடிப்படையாக, இவ் அறிவு அமையும்.

***வளங்கள்***

- இவ்வழிகாட்டியின் பக்கம் 85 இல் முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதியினைப் பார்க்கலாம்.
- எழுத்துப்பிரதியானது அமர்விற்கான பவர்பொயின்டின் 4-39 வரையான ஸ்லைடுகளை ஒத்து அமைந்திருக்கும் என்பதுடன் அது இவ் ஸ்லைடுகளுக்கான வளவாளர் குறிப்புக்களுள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- அமர்விற்கான துணை வளங்களில் மாற்றங்களை செய்வதற்கேற்றவகையில், எழுத்துப்பிரதியின் Word வடிவம் இணைக்கப்பட்டுள்ளது.

***ஆலோசனைக் குறிப்பு!***
உங்களுடைய முன்வைப்பினை நிறைவு செய்யும் வரை, வினாக்கள்/கருத்துக்களை பதிவு செய்து வைத்திருக்குமாறு நபர்களிடம் கூறுங்கள்.

***முன்னாயத்தம்***

பக்கம் 15 இல் வழங்கப்பட்டுள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயார்படுத்துவது' என்பதிலுள்ள வழிகாட்டல்களுக்கமைய தயாராகுங்கள். எழுத்துப்பிரதி மற்றும் பவர்பொயின்ட் ஸ்லைடுகளை (அல்லது ஸ்லைடுகளின் பிரதான கருத்துக்களைக் கொண்டு நகர்வு விளக்கப்படத்தாள்களை ஆக்கிக் கொள்ளுங்கள்) வாசித்து உங்களுக்கேற்றவகையில் மாற்றியமைத்துக் கொள்ளுங்கள் மற்றும் ஸ்லைடுகள்/நகர்வு வரைபடத்தாள்களுடன் முன்வைப்பினை செய்வதற்கு பயிற்சி செய்து பாருங்கள்.

***குறிப்பு***

இந்த விளக்கக்காட்சி நீண்டது மற்றும் பல உதாரணங்களை களை உள்ளடக்கியும் உள்ளது. உங்கள் குழுவிற்கு மிகவும் பொருத்தமற்றதாகத் தோன்றும் உதாரணங்களை நீங்கள் குறைக்க விரும்பலாம். சில உதாரணங்களை உங்கள் சொந்த சூழலில் இருந்த கதைகளுடன் மாற்றீடு செய்யவும் நீங்கள் விரும்பலாம். எழுத்து பிரதியின் முக்கிய செய்திகள் தடித்த எழுத்துக்களால் காண்பிக்கப்பட்டுள்ளது. உங்கள் உரையில் இவற்றை உள்ளடக்குங்கள்!

## 3. முழுக்குழுக் கலந்துரையாடல் 10 நிமி

முழுக்குழு கலந்துரையாடல்

***விவரணம் மற்றும் நோக்கம்***

முன்செய்யப்பட்ட முன்வைப்பு தொடர்பான கலந்துரையாடலானது, பங்குபற்றுநர்கள் முன்வைப்பிலிருந்து கற்றுக் கொள்வதனை சாத்தியப்படுத்தும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது?***

உள்ளீடு தொடர்பான பொதுவான கருத்துக்கள் மற்றும் வினாக்களை கூறும்படி சொல்லுங்கள். பின்னர், கீழ்வரும் வரிகளை உள்ளடக்கிய கேள்விகளைக் கேளுங்கள்:

- நாங்கள் கேட்டவற்றில் நீங்கள் அறிந்திராத ஏதாவது விடயம் அல்லது உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திய ஏதாவது விடயம் காணப்பட்டதா?
- இம்முன்வைப்பிலுள்ள எந்தக் கதைகள் உங்களை அதிகமாக ஈர்த்தன?
- எமது சூழமைவில் மிக பிரச்சினைக்குரியது என நீங்கள் கருதுகின்ற மீறல் வகைகள் யாவை?

15 நிமிடங்களுக்கு பின்னர், முழுக்குழு கலந்துரையாடலினை நிறைவு செய்யுங்கள். தற்போது குழுக்கள் பயிற்சியொன்றினூடாகக் கலந்துரையாடலினைத் தொடரப் போகின்றன மற்றும் விடயங்களை ஆராயப் போகின்றன என விளக்குங்கள்.

***குறிப்பு***

பயனற்றவகையிலான 'விரிவுரையொன்றினை' நடத்த ஆரமப்பிக்கின்ற அல்லது 'எதிர்மறையான உணர்வுகளை அதிகரிக்கச் செய்கின்ற' எந்தவொரு நபரையும் இடையூறு செய்து நிறுத்துங்கள். அவர்களுடைய கருத்துக்களுக்காக நன்றி கூறுங்கள், விசேடமாக, அவர்கள் தங்களது மன உளைச்சல் அல்லது பாதிக்கப்பட்டத்தன்மையிலிருந்து இவ்விடயங்களை கூறுகின்றபோது அவர்களுடைய உணர்வுகளை சரியென ஏற்றுக் கொள்ளுங்கள். அவசியமாயின், கள விதிகள் தொடர்பாக நினைவுபடுத்துங்கள். கலந்துரையாடலை நபர்கள் பாதுகாப்பாக உணரக்கூடிய ஒரு சூழலுக்கு மீண்டும் கொண்டு வர முயற்சி செய்யுங்கள் - உதாரணமாக, நபர்கள் உடன்படக்கூடிய முக்கியமான விடயங்களை மையப்படுத்துகின்ற கேள்வியொன்றைக் கேட்பதனூடாக.

## 4. நாடகப் பயிற்சி: ம. அ. ந. சு. தொடர்பான இரண்டு நிமிட குறு நாடகங்கள் 80நிமி

*குழுப்பயிற்சி*

***விவரணம்***

இப்பயிற்சியில்,குழுக்கள், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள எளிமையான சூழ்நிலைக்காட்சிகள் தொடர்பில் 2-நிமிட குறு நாடகங்களை உருவாக்கி அவற்றை பயிற்சி செய்து பார்க்கும். இச் சூழ்நிலைக்காட்சிகள் ம.அ.ந.சு. இன் மீறல்கள் வேறுபட்ட வழிகளில் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டுகின்றன. பின்னர், இக்குறு நாடகங்கள் முழுக்குழு முன்னிலையில் செய்யப்பட்டு கலந்துரையாடப்படும். பங்குபற்றுநர்கள் அச்சூழ்நிலைக்காட்சிகளிலுள்ள ம.அ.ந.சு. இன் மீறல்களை அடையாளப்படுத்துவார்கள்.

***நோக்கம்***

இப்பயிற்சியானது, முன்வைப்பின் கருத்துருக்களாகக் கற்றுக்கொண்டவற்றை, ம.அ.ந.சு. இன் மீறல்களை அடையாளப்படுத்துகின்ற நடைமுறைத் திறன்களாக நிலைமாற்றுவதனையும், பங்குபற்றுநர்களின் சூழமைவில் உள்ள மீறல்கள் தொடர்பாக அவர்களை சிந்திக்கச் செய்வதனையும் இலக்காகக் கொண்டுள்ளது.

***வளங்களும் முன்னாயத்தமும்***

- நீங்கள் எத்தனைக் குழுக்களைக் கொண்டிருக்கப் போகிறீர்கள் என தீர்மானியுங்கள்: பெரும்பாலான சூழ்நிலைக்காட்சிகளுக்கு குறைந்தபட்சம் ஆறு கதாபாத்திரங்கள் தேவைப்படுகின்றமையினால், 6-10 வரையான நபர்களைக் கொண்டுள்ள 2-3 வரையானக் குழுக்கள் பொருத்தமானதாக அமையும். இப்பயிற்சிக்கான நேரமானது அதிகபட்சமாக (30 வரையான பங்குபற்றுநர்களை உள்ளடக்கிய) மூன்று குழுக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. உங்களால் அமர்வின் நேரத்தை அதிகரிக்கமுடியாதவிடத்து, மேலதிக குழுக்களை சேர்க்க வேண்டாம்!
- சூழ்நிலைக்காட்சிகளின் பொருத்தப்பாடு மற்றும் உங்களுடைய குழுக்களிலுள்ள நபர்களின் எண்ணிக்கை என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு, நீங்கள் பயன்படுத்த விரும்புகின்ற 5 நாடக சூழ்நிலைக்காட்சிகளைத் தெரிவு செய்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவும் வேறுபட்ட சூழ்நிலைக்காட்சியொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வழிகாட்டியின் பக்கம் 92-94 இலும் அமர்விற்கான துணை வளங்களுக்குரிய தொடுப்பிலும் நீங்கள் இச்சூழ்நிலைக்காட்சிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
- நீங்கள் தெரிவு செய்த ஒவ்வொரு சூழ்நிலைக்காட்சியினதும் இரண்டு பிரதிகளை அச்சுப்பிரதி செய்து, குறிப்பிட்ட குழுக்களுக்கு வழங்குங்கள்.
- அமர்வின் பவர் பொயின்ட் இன் ஸ்லைடு 40 அல்லது பாரபட்சம், அரசாங்கக் கட்டுப்பாடுகள், அரசாங்கத் தோல்விகள், வன்முறை போன்ற வார்த்தைகளைக் கொண்ட நகர்வு விளக்கப்பட தாள்கள்.

***நாடகத்திற்கான காட்சி*** கையேட்டை இங்கே காணவும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 5 நிமி

கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:

- நாங்கள் எதிர்கொள்ளக்கூடிய மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல்களை அடையாளப்படுத்துவதற்கு எமக்கு உதவி செய்யக்கூடிய, நாடகத்தினை அடிப்படையாகக் கொண்ட பயிற்சியொன்றினை நாம் இப்போது செய்யப் போகின்றோம்.
- நாங்கள் குழுக்களாக பிரியப் போகிறோம். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு சூழ்நிலைக்காட்சி தரப்படும் - சில கதாபாத்திரங்களுக்கிடையில் இடம்பெறுகின்ற எளிமையான தொடர் நிகழ்வுகள். அதனை 2 நிமிடங்களுக்குள் நடித்துக் காட்டுவதே உங்களுடைய பணியாகும்!
- உங்களுடைய நாடகத்தை தயாரித்து, பயிற்சி செய்வதற்கு உங்களுக்கு 15 நிமிடங்கள் வழங்கப்படும். அந்நேரம் குறைவானது, ஆகவே விரைவாக உங்களுக்கான வகிபாகங்களைப் பிரித்துக் கொள்ளுங்கள். பின்னர் உடனடியாக நடைமுறைப்படுத்துங்கள்!
- 15 நிமிடங்களுக்கு பிறகு, ஏனைய குழுக்களுக்கு முன்னிலையில் நீங்கள் உங்கள் நாடகத்தினை செய்து காட்ட வேண்டும்.
- நீங்கள் கதைக்கு மேலதிக தகவல்களை சேர்க்க விரும்பினால், சேர்க்கலாம் - ஆனால் நாடகம் 2 நிமிடத்திற்கு மேலதிகமாக செய்யப்படக்கூடாது.
- கவலைப்பட வேண்டாம்! நாங்கள் இயல்பான செயற்திறனையே பார்க்கவுள்ளோம் - மெருகூட்டப்பட்ட நடிப்பை அல்ல. நீங்கள் கதையினை வெளிக்கொண்டு வந்தாலே, உங்களுடைய செயற்திறன் வெற்றி பெற்றதாகக் கருதப்படும்!

குழுக்களாக பிரியுங்கள், சூழ்நிலைக்காட்சிகளை வழங்குங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 75 நிமி

- ***நாடகங்களைப் பயிற்சி செய்தல்*** (15 நிமி)
  பயிற்சியினை ஆரம்பிக்குமாறு குழுக்களுக்கு சொல்லுங்கள்! அவர்கள் ஆரம்பிப்பதை இலகுபடுத்தும் பொருட்டு குழுக்களுக்கிடையில் நகருங்கள்.

***குறிப்பு***

இப்பயிற்சியில் நேர முகாமைத்துவம் மிக முக்கியமானது! பயிற்சி செய்வதற்கான நேரம் 15 நிமிடங்களைத் தாண்டுவதற்கு அனுமதிக்க வேண்டாம், ஏனெனில், இது மிக முக்கியமான பகுதிகளான செய்துகாட்டல்/கலந்துரையாடல் போன்றவற்றுக்கான நேரத்தினைக் குறைக்கும். செய்துகாட்டல்/கலந்துரையாடலின் போதும் நேரத்தினை முகாமைத்துவம் செய்வது முக்கியமானதாகும், அப்போதுதான் முதலாவதாக செய்கின்ற குழு கடைசியாக செய்கின்ற குழுக்களின் நேரத்தினை எடுத்துக் கொள்ளாமல் தங்களுடைய நாடகங்களை தமக்குரிய நேரத்திலேயே செய்து முடிப்பார்கள்.

- ***செய்துகாட்டல் மற்றும் கலந்துரையாடல்*** (50 நிமி)
  ***ஒவ்வொரு குழுவும் முன்வைப்பதற்கு 15 நிமிடங்கள் மற்றும் நெகிழ்விற்காக 5 நிமிடம்.***
  ஒவ்வொரு குழுவும் தங்களுடைய 2-நிமிட நாடகத்தினை இரண்டு தடவைகள் செய்து காட்டுவார்கள். முதலாவது தடவை எவ்வித இடையூறுமின்றி செய்வார்கள். இரண்டாவது தடவை அவர்கள் செய்கின்றபோது, பார்வையாளர்கள் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறலொன்று இடம்பெறுவதனைக் கண்டால் 'நிறுத்தவும்!' என சொல்ல வேண்டும். அப்போது, நாடகம் அவ்வாறே நிறுத்தப்பட வேண்டும் (கதாபாத்திரங்கள் அந்தந்த இடங்களிலேயே நிற்க வேண்டும்). 'நிறுத்தவும்!' என சொன்ன நபர்/நபர்களிடம் பவர் பொய்ண்ட் இன் 40 வது ஸ்லைடினை காண்பித்து கீழ்வரும் கேள்விகளுக்கு சுருக்கமாக பதிலளிக்குமாறு கூறுங்கள்:
  – மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் என்ன வகையான மீறலாக உள்ளது?மற்றும் அதனை யார் நிகழ்த்தியது? (உதாரணமாக: பாரபட்சத்தினூடாக செய்யப்படுகின்ற சமூக விரோதங்கள் அல்லது மக்களை பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் தவறுகை) மற்றும் குறித்த மீறலினை புரிந்தது யார் (உதாரணமாக, அரச அல்லது அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள்)?

  அடுத்த நபர் 'நிறுத்தவும்!' என சொல்கின்ற வரையில் நாடகத்தினைத் தொடரவும் மற்றும் அவ்வாறு சொன்னபின்னர் அதே கேள்விகளைக் கேட்கவும். ஒவ்வொரு நாடகத்திலும் 3 மீறல்கள் உள்ளன. பக்கம் 92-94 இலுள்ள நெறியாளருக்கான நாடக சூழ்நிலைக்காட்சிகளின் வடிவத்தில் இம்மீறல்கள் யாவையென நீங்கள் பார்க்கலாம்.

  குழு இரண்டு தடவைகள் செய்துகாட்டிய பின்னர் நேரம் காணப்படின், கீழ்வரும் வினாக்களைப் பயன்படுத்தி ஒரு விரிவான கலந்துரையாடலை ஆரம்பியுங்கள்:
  – அ) இச்சூழ்நிலைக்காட்சியில் எது வேறுபட வேண்டும்? எந்நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் தங்கள் செயல்களை மாற்றிக் கொள்ள வேண்டும் அல்லது என்ன சட்டங்கள் அல்லது விதிகள் மாற்றப்பட வேண்டும்?
  – ஆ) விடயங்களை மாற்றுவதற்கு நல்ல முறையில் தலையீடு செய்யக்கூடியவர் யார்? சமுதாய உறுப்பினரொருவர், செயற்பாட்டாளர், அமைப்பொன்று அல்லது தீர்மானமெடுப்பவர் அத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்த முடியுமா?

  ஒவ்வொரு குழுவும் செய்துக் காட்டுவதற்கு மற்றும் கலந்துரையாடல் செயன்முறைக்கு 15 நிமிடங்களை அனுமதியுங்கள் - நேர முகாமைத்துவம் தொடர்பாக நெகிழ்வின்றி செயற்படுங்கள்! (உங்களுக்கு இரண்டு குழுக்கள் மாத்திரம் காணப்படுமாயின் இந்நேரத்தினை அதிகரித்துக் கொள்ளலாம்.) நடுவில் நிறுத்தச் சொல்வதற்காக குழுக்களிடம் மன்னிப்பு கேளுங்கள், ஆனால் செய்துக்காட்டுவதற்கு ஒவ்வொருவருக்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்பதனை விளக்குங்கள்.

- ***முழுக்குழுவில் பகிர்கின்ற நேரம்*** (10 நிமி)
  அனைத்து குழுக்களும் செய்துகாட்டி அவர்களுடைய சூழ்நிலைக்காட்சிகள் தொடர்பாக கலந்துரையாடிய பின்னர், அவர்கள் செய்து காட்டியமைக்காக அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறுங்கள். பின்னர் கீழ்வரும் வினாக்களை அடிப்படையாகக் கொண்டு, விரிவானக் கலந்துரையாடலொன்றினை ஆரம்பியுங்கள்:
  – சிலசமயங்களில், எங்களுடைய சமுதாயங்களில் இடம்பெறுகின்ற மீறல்கள் நாங்கள் இந்நாடகங்களில் பார்த்த மீறல்களை ஒத்தனவாக உள்ளனவா?
  – இவை நபர்கள் மீதும் ஒட்டு மொத்த சமூகத்தின்மீதும் கொண்டிருக்கின்ற தாக்கங்கள் யாவை?

  தங்களுடைய கதைகள் அல்லது அனுபவங்களைப் பகிர்ந்துக் கொள்வதற்கு பங்குபற்றுநர்கள் விரும்பினால், அவற்றை பகிரந்துகொள்ளுமாறு அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

## 5. நிறைவு செய்கின்ற கருத்துக்கள் மற்றும் மாற்றமுண்டாக்குநரின் கதைகள் 5 நிமி

குறும்பேச்சு

***விவரணம் மற்றும் நோக்கம்***

நிறைவு செய்வதற்கான கருத்துக்கள் மாற்றம் சாத்தியமானது என மக்கள் நம்புவதற்கு அவர்களுக்கு உத்வேகமளிப்பதனை இலக்காகக் கொண்டுள்ளது.

*வளங்கள்*

அமர்வு 4 இற்கான பவர்பொயின்ட் இன் 41-44 வரையான ஸ்லைடுகள் அல்லது அவற்றின் அச்சுப்பிரதி.

***என்ன சொல்ல வேண்டும்***

- எங்களுடைய சமுதாயத்தில் நபர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பான கதைகளைப் பகிர்ந்துகொள்கின்றபோது, நாம் இலகுவாக நம்பிக்கையினை இழக்க முடியும். ஆனால், தீவிரமான வெறுப்பு மற்றும் வன்முறை இடம்பெறுகின்ற சூழ்நிலைகளில்கூட மாற்றம் சாத்தியமானது - நம்பிக்கையளிக்கக்கூடிய ஒரு கதையுடன் நாம் இதனை நிறைவு செய்வோம்.
- பக்கம் 95 இலுள்ள போதகர் James மற்றும் இமாம் Ashafa இன் கதையினை வாசிக்கவும், (அமர்விற்கான தரவிறக்கம் செய்யக்கூடிய துணை வளங்களிலும் இருக்கும்).
- மாற்றத்தினை ஏற்படுத்துவது மிக மெதுவான, ஆனால் தவிர்க்கமுடியாத மிக முக்கியமான செயன்முறையொன்றாகும். அச்செயன்முறை, நாம் எங்களுக்குரிய மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் பற்றிய நிலைப்பாடு தொடர்பாக மட்டுமல்லாது, எமது நாட்டில் மற்றும் சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவருக்குமான மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் பற்றிய நிலைப்பாடு தொடர்பாக அறிந்து கொள்வதுடன் ஆரம்பமாகின்றது.

# முன்வைப்புக்கான எழுத்துப்பிரதி

## மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல்களைப் புரிந்து கொள்ளுதல்


*அமர்வு 4 இற்கான முன்வைப்புக்கான எழுத்துப்பிரதி அமர்வின் பவர்பொயின்ட் இன் 4-39 வரையான ஸ்லைடுகளில் விளக்கப்பட்டுள்ளது.*

குறிப்பு :இம்முன்வைப்பு சற்று நீளமானது (20 நிமிடங்களுக்கு குறைந்ததே) என்பதுடன் பல உதாரணங்களை உள்ளடக்கியுள்ளது. உங்களுடைய குழுவிற்கு மிகப் பொருத்தமல்லாதிருக்கின்ற சில உதாரணங்களை நீக்குவதற்கு நீங்கள் விரும்பலாம். சில உதாரணங்களை உங்களுடைய சூழமைவில் இடம்பெறுகின்ற கதைகளைக் கொண்டு பதிலீடு செய்வதற்கு நீங்கள் விரும்பலாம். '...இன் கதைகள்' என்ற பிரிவுகளின் பிரதான செய்திகள் தடித்த எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளன. நீங்கள் பேசும்போது தயவுசெய்து இவ்விடயங்களை சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களுடைய பங்குபற்றுநர்கள் உள்ளடக்கங்களினை நன்கு அறிந்துகொள்வதற்கு உதவி செய்வதற்காக, பவர்பொயின்டினை, அல்லது முக்கியமான பவர்பொயின்டின் அச்சுப்பிரதிகளை அல்லது அவற்றையொத்த நகர்வு விளக்கப்படத் தாள்களை பயன்படுத்துங்கள.

**அறிமுகம்**



அனைத்து வகையான நாடுகளிலுமுள்ள அனைத்து வகையான நபர்களும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் இன்மையினால் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். பாதிக்கப்படுபவர்கள் யார், மீறல்களின் தீவிரத்தன்மை மற்றும் மீறல்களைப் புரிபவர்கள் யார் போன்ற விடயங்களே வேறுபடுகின்றன.




இம்முன்வைப்பில், பாரபட்சம், உரிமைகளின் மட்டுப்பாடுகள் மற்றும் வன்முறை தொடர்பான உண்மையான வாழ்க்கைச் சம்பவங்களை கேட்கப்போகின்றோம்.



இம்மீறல்கள் அரசினாலும் மற்றும் சமுதாயத்திலுள்ள நபர்களினாலும் புரியப்பட்டுள்ளன. இதனை நாங்கள் பெரும்பாலும், அரசாங்க மீறல்கள் மற்றும் சமூக விரோதங்கள் என குறிப்பிடுவோம் ஆனால், மீறல்கள் குடும்பங்களிலும் மத சமுதாயங்களினுள்ளும் கூட இடம்பெறலாம்.



நான்காவது வகையான மீறலொன்றும் உள்ளது- சமுதாயத்திலுள்ள மீறல்களிலிருந்து நபர்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் தவறுதல். அரசின் ஆள்புல எல்லைக்குள் இருக்கின்ற ஒவ்வொரு நபரையும் பாரபட்சம், உரிமைகளுக்கான நியாயமற்ற மட்டுப்பாடுகள் மற்றும் வன்முறையிலிருந்து பாதுகாக்கின்ற கடமை அரசுக்கு உண்டு. பல அரசுகள் இதனை செய்யத் தவறுகின்றன.



பாரபட்சம், உரிமைகள் மீதான மட்டுப்பாடுகள் மற்றும் வன்முறை என்பன பொதுவாக ஒன்றுடனொன்று தொடர்புறுவனவாகவும் ஒன்றையொன்று தழுவிக் கொள்வனவாகவும் அமைந்துள்ளன. உதாரணமாக, மட்டுப்பாடொன்று பாரபட்சமானதாக இருக்கலாம் என்பதுடன் அது வன்முறைக்கு பங்களிப்பு செய்யலாம். அத்துடன் அரசாங்க மீறல்கள் மற்றும் சமூக விரோதங்கள் நச்சு வட்டமொன்றினை உருவாக்கி ஒன்றுக்கொன்று பங்களிப்பு செய்கின்றன.

சிறுபான்மையினருக்கெதிரான பாரபட்சமான அரசாங்க சட்டவாக்கம் சமூகத்தில் சகிப்புத்தன்மையின்மையினை தோற்றுவிக்கின்து, இது சமுதாயத்தில் பாரபட்சம், துன்புறுத்தல் மற்றும் வன்முறைக்கு வழிவகுக்கின்றது. இவை தொடர்பில் அதிகாரிகள் பாராமுகமாய் இருக்கின்ற சூழ்நிலையில் இதிலிருந்து தப்பலாம் என மக்கள் நினைக்கின்றபோது பாரபட்சம், துன்புறுத்தல் மற்றும் வன்முறை என்பன மிக மோசமானதாகின்றது.

சில உண்மையான வாழ்க்கைச் சம்பவங்களைப் பயன்படுத்தி உலகின் வேறுபட்ட பகுதிகளில் பாரபட்சம், மட்டுப்பாடுகள் மற்றும் வன்முறை எவ்வாறு காணப்படுகின்றன என்பது பற்றி பார்ப்போம்! அநேகமாக அவற்றுள் சில நீங்கள் அனுபவித்துள்ள விடயங்களுடன் தொடர்புபடலாம்.

## பாரபட்சத்தினை எடுத்துக்காட்டுகின்ற கதைகள்



**பாரபட்சம் மிகப் பொதுவானது என்பதுடன் இது வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளையும் பாதிக்கின்றது.**
அருட்திருகுமார் இலங்கையின் கிராமமொன்றின் ஒரு போதகர் ஆவார். அவருடைய குடும்பம் அவரது கிராமத்திலிருந்த பௌத்த பெரும்பான்மை சமுதாயத்தினால் பாரபட்சத்தினை எதிர்கொண்டிருந்தது. ஆசிரியர்கள் மற்றும் சகபாடிகள் அவரின் பிள்ளைகளை துன்புறுத்தினர் என்பதுடன் அவரின் வீடு சட்டவிரோத வழிபாட்டுத் தலமொன்று என்ற அடிப்படையில் அக்குடும்பத்திற்கான மின்சார மற்றும் நீர் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டன.[1]

---



**சில அரசாங்கங்கள் பொது நிதியின் ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டுகின்றது** - உதாரணமாக, சிறுபான்மை பகுதிகளில் உட்கட்டமைப்பு, சுகாதாரம் அல்லது கல்விக்காக மிகக் குறைந்த அளவில் முதலீடு செய்தல். இது வகுப்புவாத குழப்பங்கள் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையின்மைக்கான நீண்ட கால அபாயங்களை உருவாக்கும்.

**நிறுவனங்கள் தொழிற்படுகின்ற வழிமுறையினூடாகவும் பாரபட்சம் ஏற்படுத்தப்படலாம்.** உதாரணமாக, மத செயற்பாடுகளில் பலவந்தமாகப் பங்குபெறச் செய்தல் அல்லது தங்களுடைய சமுதாயத்தினை இழிவாகப் பேசுகின்ற பாடநூல்கள் என்பவற்றினூடாக பாடசாலை சிறுவர்கள் பாரபட்சத்தினை எதிர்கொள்ள முடியும். அரிதான சில சந்தர்ப்பங்களில், சில குழுக்களுக்கு கல்வி மறுக்கப்படுகின்றது- ஈரானில் Baha'is சமுதாயத்தினர் பல்கலைக்கழகங்களுக்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.[2]

## மட்டுப்படுத்தல் மற்றும் பாரபட்சத்தினை எடுத்துக்காட்டுகின்ற கதைகள்



**பல வகையான சட்டங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகவோ பாரபட்சத்திற்கு வழிவகுக்கின்ற மட்டுப்பாடுகளை உருவாக்குகின்றன. நடுநிலையானதாகத் தோன்றக்கூடிய திட்டமிடல் ஒழுங்குவிதிகள், மத வழிபாட்டிடங்களைக் கட்டுவதிலிருந்து சிறுபான்மையினரைத் தடுக்கின்ற பொதுவான தடையொன்றாக உள்ளது.**
ரஷ்யாவில் பல்வேறுபட்ட சிறுபான்மையினர் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்- உதாரணமாக, அனுமதி வழங்கப்படுவதில்லை, கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் அல்லது தகர்ப்பட்டவுடன் நகரசபை குத்தகைகள் முடிவுறுத்தப்படல்.[3]

---



**மத சமுதாயங்களின் பதிவினை ஆளுகை செய்கின்ற சட்டங்களும் மட்டுப்பாடுகளையுடையனவாக மற்றும் பாரபட்சமானவையாக இருக்கலாம்.**
அல்ஜீரியன் அரசாங்கமானது மதம் அல்லது வேறுவகையான அனைத்து குழுக்களும் தங்களது செயற்பாடுகளை செய்ய ஆரம்பிப்பதற்கு முன்னர் சங்கமொன்றாகப் பதிவு செய்ய வேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றது. அஹமதி என்ற சிறியதொரு சமுதாயத்திற்கு பதிவு அளிக்கப்படவில்லை. 2020 ஆம் ஆண்டின் முடிவில், இச் சமுதாய உறுப்பினர்களுக்கு எதிராக, அதிகாரமளிக்கப்படாத இடங்களில் பிரார்த்தனைகளை நடத்துதல் போன்ற குற்றங்கள் தொடர்பாக 220 சட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.[4]

---



**சில அரசாங்கங்கள் பெரும்பான்மை சமுதாயங்களின் மத நடைமுறைகளையும் மட்டுப்படுத்துகின்றன.** 2020 இல், துர்க்மெனிஸ்தான் இன் லெபப் பிராந்தியத்திலுள்ள அதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் தாதிகள் போன்ற அரச ஊழியர்கள் வெள்ளிக்கிழமை பிரார்த்தனைகளில் கலந்து கொள்ளக்கூடாது எனக் கட்டளையிட்டதோடு, அவ்வாறு அவர்கள் அந்நாட்களில் பள்ளிவாசல்களில் காணப்பட்டால் அவர்களை பணி நீக்கம் செய்வதாகவும் அச்சுறுத்தினர்.[5]

---



மட்டுப்பாடுகளை உருவாக்கக்கூடிய இன்னும் இரண்டு வகையான சட்டங்கள் பற்றி நாம் சிந்திப்போம்: குடும்ப சட்டம் மற்றும் இறை நிந்தனை அல்லது மத எதிர்ப்பு சட்டங்கள்.

**குடும்ப சட்டம்**
**திருமணம், விவாகரத்து, வழியுரிமை மற்றும் பிள்ளையின் பாதுகாவல் போன்ற**

[1] Local sources/உள்ளூர் தரவுகள்
[2] The Guardian, https://www.theguardian.com/world/2013/feb/27/bahai-student-expelled-iranian-university
[3] Forum 18, https://www.forum18.org/archive.php?article_id=2508
[4] US State Dept., https://www.state.gov/reports/2020-report-on-international-religious-freedom/algeria/
[5] Forum 18, https://www.forum18.org/archive.php?article_id=2555

**விடயங்களை ஆளுகை செய்கின்ற மதசார்பற்ற மற்றும் மத சட்டங்கள் உரிமைகளை மட்டுப்படுத்துவதுடன் பாரபட்சப்படுத்துகின்றன.**



இந்தியாவிலுள்ள, மதசார்பற்ற விசேட திருமண சட்டமானது வேறுபட்ட மதங்களிலிருந்து திருமணம் செய்யவிருக்கின்ற திருமண ஜோடிகள் தங்கள் திருமணத்திற்கு 30 நாட்களுக்கு முன்னர் நீதவான் ஒருவருக்கு அறிவித்தல் வழங்க வேண்டும் எனத் தேவைப்படுத்துகின்றது. நீதவான் அவ்விண்ணப்பம் தொடர்பாக விசாரணை செய்து அத்திருமண ஜோடிகளின் குடும்பங்களுக்கு அறிவித்தலொன்றினை அனுப்புவார். இது பல திருமண ஜோடிகளை கௌரவத்தினை அடிப்படையாகக் கொண்ட வன்முறையினை எதிர்கொள்கின்ற அபாயத்திற்கு இட்டுச் செல்கின்றது.[6]




Revathi Massosai ஒரு மலேசியர். அவள் முஸ்லிம் பெற்றோருக்கு பிறந்தபோதிலும், தனது இந்து பாட்டியினால் இந்துவொருவராகவே வளர்க்கப்பட்டார். Revathi இந்து ஒருவரைத் திருமணம் செய்ததுடன் இஸ்லாமிற்கு மீண்டும் வர மறுத்தமையினால், மத நீதிமன்றமொன்று அவரை ஆறு மாத காலப்பகுதிக்கு இஸ்லாம் மீள்-கல்வி நிலையத்திற்கு அனுப்பியது.[7]



**சிலநேரங்களில் மதசார்புள்ள குடும்பச் சட்டம் மற்றும் மத எதிர்ப்பு சட்டங்கள் இலகுவில் பாதிக்கப்படத்தக்க சிறுபான்மையினரை குற்றவியல் தாக்குதல்களுக்கும் ஆளாக்குகின்றன.**

ஒவ்வொரு வருடமும், பாகிஸ்தானில் நூற்றுக்கணக்கான இந்து மற்றும் கிறிஸ்தவ பெண் பிள்ளைகள் கடத்தல், பலவந்தமான மதமாற்றம் மற்றும் திருமணத்தினை அனுபவிக்கின்றனர். இது, Maira Shahbaz 14 வயது பிள்ளையாக இருக்கும்போது அவளுக்கு நடந்தது. அவளது பெற்றோர்கள் அவளைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்காக நீதிமன்றத்திற்கு சென்றனர். ஆனால், இஸ்லாம் மதத்தினை விட்டு நீங்குதல் பாகிஸ்தானில் தடை செய்யப்பட்டுள்ளதாலும் கிறிஸ்தவ பெற்றோர்கள் முஸ்லிம் பிள்ளையொன்றுக்கான பாதுகாவலைக் கொண்டிருக்க முடியாது என்பதாலும், மேல் நீதிமன்றமானது அவளைக் கடத்தியவரிடமே அவள் மீள செல்ல வேண்டுமென்று தீர்ப்பளித்தது. இரண்டு வாரங்கள் கழித்து Maira தப்பித்துவிட்டாள். தற்போது அவள் ஒளிந்து வாழ்கின்றாள் என்பதுடன் தன்னுடைய திருமணத்தினை வலிதற்றதாக்கவும், அவளுடைய சட்ட அந்தஸ்த்தினை மீண்டும் கிறிஸ்தவர் என்ற நிலைக்கு கொண்டு வருவதற்கும் போராடி வருகின்றாள்.[8]



**இறை நிந்தனை மற்றும் மத எதிர்ப்பு சட்டங்கள்**

**இறை நிந்தனை மற்றும் மத எதிர்ப்பு தொடர்பான சட்டங்கள் (உங்களுடைய மதத்தினை விட்டு விலகுதல்) நல்லிணக்கத்தினைப் பேணுதலைக் காரணமாக சுட்டிக்காட்டி நியாயப்படுத்தப்படுகின்றன. எவ்வாறெனினும், இச்சட்டங்கள் எதிரான விளைவொன்றினைக் கொண்டிருக்க முடியும். சில நாடுகளில், தனிப்பட்ட பழிவாங்கல்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற பொய்யான குற்றச்சுமத்தல்களுடன், இச்சட்டங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இச்சட்டங்கள் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை - குறிப்பாக, அரசு அல்லது பெரும்பான்மை சமுதாயம் விரும்பாத மக்களின் நம்பிக்கைகளை - விட்டுக்கொடுக்கின்ற வகையில் பேச்சு மற்றும் நடத்தை முறைகளை மட்டுப்படுத்துகின்றன.**

அஹமதி சமுதாயத்தினர், மொஹம்மட் இற்கு பின்னர் நபி மீது நம்பிக்கை கொண்டவர்கள், நாத்திகர்கள் மற்றும் அரசு அல்லது மத அதிகாரமுடைய நபர்களை விமர்சிப்பவர்கள் ஆகியோர் பெரும்பாலும் ஆபத்திற்கு உட்படக்கூடியவர்களாக உள்ளார்கள், ஆனால் எந்தவொரு நபரும் பாதிக்கப்பட்டவராக முடியும்.



2020 இல், வட நைஜீரியாவிலுள்ள மத நீதிமன்றமொன்று, நபியொருவரை அவமதித்ததாக குற்றம் சாட்டப்பட்ட 12 வயதான முஸ்லிம் ஆண் பிள்ளையொருவருக்கு 10 வருட சிறைதண்டனை அளித்தது. 2021 இல் மதசார்பற்ற மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அவரது தண்டனை மாற்றப்பட்டது, ஆனால் பழிவாங்குவதற்கானத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற ஆபத்து

[6] The Leaflet, https://www.theleaflet.in/india-needs-to-overhaul-laws-on-interfaith-marriage-and-religious-conversion/

[7] Forum Asia, https://www.forum-asia.org/?p=7086

[8] UK Parliament, https://edm.parliament.uk/early-day-motion/57474/maira-shahbaz-and-child-abduction-forced-conversion-and-marriage-in-pakistan

அவரது குடும்பம் அப்பகுதியில் வாழ்வதனை பாதுகாப்பற்றதாக்கியது.[9]




**சர்வதேச சட்டத்திற்கு அமைய, வன்முறையினைத் தூண்டுகின்ற பேச்சுக்களே தடை செய்யப்பட வேண்டியனவாகும். வன்முறையினை நிறுத்துவதற்கு பதிலாக, இறை நிந்தனை மற்றும் மத எதிர்ப்பு சட்டங்கள், பெரும்பான்மை மக்களுக்கு பிடிக்காத நம்பிக்கைகளை அமைதியான முறையில் வெளிப்படுத்துகின்ற நபர்களும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை ஆதரிப்பதனூடாக வன்முறையினை ஊக்குவிக்கின்றன.**



**அரச கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு_மட்டுப்பாடுகளை உருவாக்குகின்ற மற்றுமொரு அரச செயற்பாடு யாதெனில், மத சமுதாயங்களின் செயற்பாடுகள் மற்றும் நிதி தொடர்பான அரசாங்கத்தின் மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு ஆகும்.** உதாரணமாக, இலங்கையிலுள்ள சில தேவாலயங்கள் அரச அதிகாரிகளால் கண்காணிக்கப்படுவதாக அறிக்கையிட்டுள்ளன.[10] **இது சிவில் சமூக அமைப்புக்கள் செயற்படுவதற்கு காணப்படுகின்ற பரப்பினை குறைக்கின்ற பரவலான போக்கின் பகுதியொன்றாகும்.**

மேற்கு சீனாவினைப் போல வேறு எந்தவொரு இடத்திலும் மேற்பார்வை மிகத் தீவிரமாக செயற்படுத்தப்படவில்லை. இங்கு, பாதுகாப்பு கமராக்கள் சிறுபான்மை சமுதாய உறுப்பினர்களை அடையாளங் கண்டு அவர்கள் இருக்கின்ற இடம் தொடர்பாக பொலிஸிற்கு அறிவிக்கக்கூடிய வகையில் முகத்தினை அடையாளங் காண்கின்ற தொழிநுட்பம் விருத்தி செய்யப்பட்டுள்ளது.[11]



**சமூக மட்டுப்பாடுகள்**

குடும்பங்களில், மத குழுக்களில் அல்லது பரந்தளவான சமுதாயத்திலும் உரிமைகள் மட்டுப்படுத்தப்படலாம். இது பெரும்பாலும் ஆண்கள் மற்றும் பெண்களை வேறுபட்ட முறைகளில் பாதிக்கின்றது. பெண்களுக்கு பெரும்பாலும் வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றன, உதாரணமாக, அவர்கள் இறையியல் படிக்க முடியாது. அத்துடன் பெண்களின் நடத்தை மற்றும் சமய அனுட்டானம் என்பன மத அடிப்படைகளிலான குடும்ப அல்லது சமுதாய கட்டுப்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்படுகின்றன.

பெரும்பான்மை சமூகங்கள் பெரும்பாலும் சிறுபான்மை பெண்களின் மத வெளிப்படுத்தலை மட்டுப்படுத்துகின்றன, உதாரணமாக, தொழிலைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு தங்களுடைய மத அடையாளத்தினை மறைக்குமாறு பெண்களுக்கு அழுத்தம் வழங்குவதனூடாக.



Maria எகிப்தில் வாழ்கின்ற இளம் கிறிஸ்தவர் ஆவார். அவள் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்தபின்னர், அவளுக்கு வங்கியொன்றில் வேலை கிடைத்தது, ஆனால் அவ் வேலையினை அவள் பெற்றுக்கொண்டால் அவள் ஹிஜாப் அணிய வேண்டுமென சொல்லப்பட்டது. வேறுபட்ட மத அடையாளமொன்றினைக் கொண்டிருப்பதாக பாசாங்கு செய்தல் நீதியானது என Maria கருதவில்லை, ஆகவே, அவள் அவ்வேலையைப் பெற்றுக்கொள்ளவில்லை.[12]

**வன்முறை தொடர்பான கதைகள்**



இனி நாம் வன்முறையைப் பற்றி சிந்திப்போம். **மிகப் பொதுவாக அனுபவிக்கப்பட்டுள்ள வன்முறை வடிவங்களாக வெறுப்புப் பேச்சு மற்றும் வெறுப்புக் குற்றங்கள் என்பன காணப்படுகின்றன. குறிப்பாக, மத வழிபாட்டிடங்கள் மற்றும் அவற்றுக்கு வருகை தருகின்ற நபர்கள் ஆகியோர் இலகுவில் வெறுப்புக் குற்றங்களினால் பாதிக்கப்படுபவர்களாய் உள்ளனர்.**

பிரேசிலில், பாரம்பரியமான Afro-Brazilian மதங்களைப் பின்பற்றுபவர்கள் அவர்களுடைய மதத்தினை தீய சக்தியாக கருதுகின்ற அயலவர்களான neo-Pentecostal Christian இனால் வன்முறைத் தாக்குதல்களை எதிர் கொண்டனர். Candomblé மத போதகரான அருட்திரு. Marcio தனது ஆலயம் மீது 20 இற்கும் மேற்பட்ட தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிட்டுள்ளார். பொலிஸ் எவ்வித

[9] BBC news, https://www.bbc.com/news/world-africa-55756834

[10] Local sources/உள்ளூர் தரவுகள்

[11] New York Times, https://www.nytimes.com/2019/04/14/technology/china-surveillance-artificial-intelligence-racial-profiling.html

[12] மூலம்: மரியா, பாதுகாப்பு காரணங்களுக்காக இவரது பெயர் மாற்றப்பட்டுள்ளது

நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.[13]



**மீண்டுமொருமுறை, பெண்கள் மற்றும் ஆண்கள் வேறுபட்ட முறையில் பாதிக்கப்படுகின்றனர்.**
சுவீடனில் உள்ள முஸ்லிம் பெண்கள், குறிப்பாக ஹிஜாப் போன்ற மதரீதியான ஆடைகளை அணிகின்ற பெண்கள் பொது இடங்களில் வைத்து அந்நிய நபர்களால் புரியப்படுகின்ற வெறுப்புக் குற்றங்களை அதிகமாக அனுபவிக்கின்ற அதேவேளை, முஸ்லிம் ஆண்கள் தங்களது அயலவர்கள் அல்லது உடன் பணிபுரிபவர்களாலேயே வெறுப்புக் குற்றங்களை அனுபவிக்கின்றனர்.[14]



**பல இடங்களில், கொரோனா வைரஸ் தொற்றானது நடைமுறையிலிருந்த பாரபட்சம் மற்றும் வெறுப்பு கட்டமைப்புக்களை பலப்படுத்தியுள்ளது.** முஸ்லிம் மத பண்டிகையொன்றினைத் தொடர்ந்து வைரஸ் தொற்று பரவல் ஏற்பட்டதும் இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் கொரோனா ஜிஹாத்தினை நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டனர். Ahmed Shaikh என்பவர் தன்னுடைய வாழ்க்கையினை கொண்டு நடத்த சிரமப்படும் ஒரு முஸ்லிம் வீதி வியாபாரி ஆவார். 2020 ஏப்ரல் இல், இந்து தேசியவாதக் குழுவொன்று, முஸ்லிம்கள் கொரோனாவினைப் பரப்புவதற்கு சதி செய்கின்றமையினால், அவருடைய கடையை காலி செய்துவிட்டு போகுமாறு அவருக்கு கூறினர். Ahmed Shaikh கெஞ்சியபோதும் அவர்கள் அவரை தடிகளினால் பாரதூரமாக அடித்தனர். அவர் பொலிஸில் முறைப்பாடு செய்ய முயற்சித்தார், ஆனால், வீதியில் விற்பனை செய்தல் சட்ட முரணானது என கூறி பொலிஸார் முறைப்பாட்டினைப் பதிவு செய்ய மறுத்தனர்.[15]



**சமுதாயத்திலுள்ள மிகத் தீவிரமான வன்முறை வடிவங்களாக வகுப்புவாத வன்முறை மற்றும் பயங்கரவாதத் தாக்குதல்கள் காணப்படுகின்றன.**
போதகர் Samuel வடக்கு Burkina Faso இலுள்ளவர் ஆவார். அந்நாடு மத சகிப்புத்தன்மைக்கான பாரம்பரியத்தினைக் கொண்டிருந்தது. இதனை பயங்கரவாதக் குழுக்கள் அழித்துக் கொண்டிருந்தன. 2019 இல், அவர்களின் உபாயத்தின் பகுதியொன்றாக தேவாலயங்கள் மீதானத் தாக்குதல்கள் அமைந்தது. போதகர் Samuel தற்போது உள்ளூரில் இடம்பெயர்ந்த நபர்களுக்கான முகாமொன்றில் வாழ்கின்றார்.

> “இத்தாக்குதல்கள் எங்களது மக்களின் வாழ்க்கையினை நொறுக்கி விட்டன. நாங்கள் வேதனையினால் நிரம்பியிருக்கின்றோம்” என அவர் கூறினார்.

2019 இலிருந்து பயங்கரவாதத் தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டன, இவை ஒவ்வொருவரையும் பாதிப்பதுடன், 1 மில்லியனிற்கும் அதிகமான நபர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.[16]



**உலக பள்ளிவிபரங்களில் இஸ்லாத்துடன் தொடர்புடைய பயங்கரவாதக் குழுக்கள் ஆதிக்கம் செலுத்துகின்றபோதிலும், வேறு குழுக்கள் உயரிய அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற பல தேசிய சூழமைவுகள் காணப்படுகின்றன.**
சில மேற்கத்தைய நாடுகளின் பாதுகாப்பு சேவைகள் தீவிர உரிமை மிதவாதிகளையே உள்நாட்டிலுள்ள மிகப்பாரிய பயங்கர அச்சுறுத்தலாகக் கருதுகின்றன.[17] இக்குழுக்கள் சிறுபான்மையினரை இலக்கு வைக்கின்றன. 2018 இல், ஐக்கிய அமெரிக்கா, Pittsburgh இலுள்ள் பள்ளிவாசலில் பதினொரு பேர் கொல்லப்பட்டனர் என்பதுடன் 2019 இல் நியூசிலாந்து, Christchurch இலுள்ள பள்ளிவாசலில் வைத்து 51 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

[13] RioOnWatch, https://rioonwatch.org/?p=40117

[14] The Swedish National Council for Crime Prevention, https://www.bra.se/om-bra/nytt-fran-bra/arkiv/press/2021-03-31-islamofobiska-hatbrott-yttrar-sig-i-manga-olika-former.html

[15] Sabrang India, https://sabrangindia.in/article/stop-targeting-discriminating-against-and-attacking-vendors-and-hawkers-national-hawker

[16] Open Doors UK, https://www.opendoorsuk.org/persecution/world-watch-list/burkina-faso

[17] United States Congress, https://www.congress.gov/116/bills/s894/BILLS-116s894is.xml



**பொலிஸ், பாதுகாப்பு சேவைகள் அல்லது இராணுவம் அல்லது அரசினால் அமர்த்தப்படுகின்ற குழுக்களினால் செய்யப்படுகின்ற வன்முறையினால் தனிநபர்களை அல்லது மொத்த சமுதாயங்களையும் இலக்கு வைக்க முடியும்.** மேற்கு சீனாவிலுள்ள Uighurs இன் சூழ்நிலையானது அரசாங்க வன்முறை எவ்வளவு தீவிரமாக செய்யப்படலாம் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. Uighur பெண்கள் கட்டாய மலட்டுத்தன்மை மற்றும் கர்ப்பத்தடை என்பவற்றுக்கு உட்படுத்தப்பட்டனர் என்பதுடன் இது பிறப்பு வீதங்களில் பாரிய வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. அத்துடன் சுமார் 1.8 மில்லியன் Uighur நபர்கள் ஹிஜாப் அணிந்தமை மற்றும் தாடி வைத்தமை போன்ற காரணங்களுக்காக மீள்கல்வி முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். இம் முகாம்களில், சித்திரவதை மற்றும் பாலியல் வன்புணர்வு இடம்பெற்றதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அத்துடன் முகாமில் அவர்களின் மொழி மற்றும் மதம் மறுக்கப்பட்டதுடன், அரச சித்தாந்தங்களை விமர்சனமின்றி ஏற்றுக்கொள்வதற்கு அவர்களுக்கு கற்பிக்கப்பட்டது. இம்முகாம்கள் தன்னார்வ கல்வி நிலையங்கள் என சீன அரசாங்கம் கூறுகின்றது.[18]

**அரசாங்கத்தின் பொறுப்புக்கள் மற்றும் அரசாங்கத்தின் தவறுகள்**



இறுதியாக, நாங்கள் மக்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் தவறுகின்றமை தொடர்பாக பார்ப்போம். **அரசாங்கங்களுக்கு மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு பொறுப்பு உண்டு. அதை அவை செய்யத்தவறுகின்றபோது, பாரபட்சம் மற்றும் வன்முறை என்பன அதிகரிக்க ஆரம்பிக்கின்றன, ஆனால், தனிநபர் தொடர்பான விடயங்களில் வினைத்திறனான பொலிஸ் நடவடிக்கை மீறல்களை நிறுத்துவதற்கு உதவ முடியும்.**



2017 இல், இஸ்லாமிலிருந்து கிறிஸ்தவத்திற்கு மாறிய ஒரு வயோதிப பெண் தெற்கு கிர்கிஸ்தானில் இறந்தார். அப்பெண்ணின் மகள் அவரை மாநகர மயானத்தில் அடக்கம் செய்ய முயற்சித்தபோது, உள்ளூர் இமாம் ஒருவரால் தலைமை தாங்கப்பட்ட ஒரு குழு வன்முறையானரீதியில் எதிர்த்தனர். மக்களுடைய கவனமானது அதிகாரிகளை எதிர்வினையாற்றச் செய்கின்றவரையில், அவ்வுடல் மீண்டும் மீண்டும் தோண்டப்பட்டுக் கொண்டிருந்தது. குற்றவாளிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டதுடன், அதன் பின்னர் மத மாற்றத்திற்கு எதிரான தீவிர குரல்கள் எழுவது குறைந்தது.[19]



**குடும்பங்களில் அல்லது மத சமுதாயங்களில் இடம்பெறுகின்ற மீறல்கள் தொடர்பாக தலையீடு செய்வதற்கு அதிகாரிகள் தவறுகின்றனர்.** ஜோர்தானில் வசிக்கும் Nadia என்கிற 22 வயதான கிறிஸ்தவ, பல்கலைக்கழக மாணவரொருவர் சக முஸ்லம் மாணவரொருவருடன் காதல் கொண்டார். இதனை அவளது குடும்பம் அறிந்தபோது, அவர்கள் அவளை வீட்டிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்காததுடன் சித்திரவதை செய்தனர். Nadia ஒருவாறாக தப்பித்து ஓடிவிட்டாள், ஆனால் இரண்டு மாதங்களுக்கு பிறகு அவளது தந்தை அவளைக் கண்டுபிடித்து கொலை செய்தார். நீதிமன்றமானது, அவரது 'கௌரவத்தினை' அடிப்படையாகக் கொண்ட நோக்கங்களை 'குற்றத்தினை தணிப்பதற்கான சந்தர்ப்பங்களாக' கருத வேண்டும் என கூறி அவரை சிறைக்கு அனுப்பவில்லை.[20]

**முடிவு**

[18] The Guardian, https://www.theguardian.com/world/2020/sep/04/muslim-minority-teacher-50-tells-of-forced-sterilisation-in-xinjiang-china

[19] Forum 18, https://www.forum18.org/archive.php?article_id=2248

[20] உள்ளூர் ஆதார மூலம்



இம்முன்வைப்பில், நாம் அரசாங்கங்களினால் மற்றும் சமுதாயத்திலுள்ள நபர்களினால் புரியப்படுகின்ற பாரபட்சம், மட்டுப்பாடுகள் மற்றும் வன்முறை பற்றிப் பார்த்தோம். அத்துடன், மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு தவறுகின்றமை தொடர்பிலும் பார்த்தோம்.


நாங்கள் கேட்ட கதைகளிலிருந்து, நாங்கள் பல முடிவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும்:

---



- மீறல்கள் அனைத்து வகையான நாடுகளிலும் இடம்பெறுகின்றன என்பதுடன் அவை அனைத்து மதங்கள் மற்றும் நம்பிக்கைகளைச் சேர்ந்த மக்களையும் பாதிக்கின்றது. சூழமைவுகளுக்கிடையில் வேறுபடுகின்றவை எவையெனில், யார் பாதிக்கப்பட்டுள்ளார், எவ்வளவு பரவலாக உள்ளது, அடிக்கடி நிகழும்தன்மை மற்றும் பாரதூரமானத் தன்மை மற்றும் அவற்றைப் புரிவதில் அரசாங்கம் எந்தளவிற்கு ஈடுபட்டுள்ளது போன்ற விடயங்களே ஆகும்.

---




- வேறுபட்ட வகையான பல சட்டங்கள் மற்றும் அரசாங்கக் கொள்கை என்பன மீறல்களுக்கு பங்களிக்க முடியும்.

---




- பொதுவாக, சிறுபான்மையினர் மற்றும் பெரும்பான்மையினருள் வித்தியாசமாக சிந்திக்கின்றவர்கள் ஆகியோர் பாரதூரமாகப் பாதிக்கப்படுகின்றனர். ஆனால், பெரும்பான்மை சமுதாயங்களும் மீறல்களினால் பாதிக்கப்படலாம்- குறிப்பாக பயங்கரவாத வன்முறையினால்.

---




- பல கதைகள் ஆண்கள் மற்றும் பெண்கள் எவ்வாறு வேறுபட்ட முறைகளில் பாதிக்கப்பட்டனர் என்பதனை எடுத்துக்காட்டுகின்றன- வெறுப்புக் குற்றங்களிலிருந்து பலவந்த திருமணங்கள், கௌரவக் கொலைகள், பலவந்த கர்ப்பத்தடை வரையில்.

---



- அத்துடன், நாங்கள் கேட்ட பல கதைகள் சமுதாயத்தில் உள்ள மீறல்கள், அரசாங்கத்தின் தவறுகைகள் மற்றும் அரசாங்க மீறல்கள் எவ்வாறு ஒன்றையொன்று மீள்வலியுறுத்தி, நச்சு வட்டமொன்றினை உருவாக்குகின்றன என்பதனை எடுத்துக் காட்டுகின்றன.



மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல்கள் சாதாரண மக்களுக்கு பாரிய தனிப்பட்ட வேதனையினை ஏற்படுத்துகின்றன. அவை சமூகத்தினையும் ஸ்திரமற்றதாக்குகின்றன. முடிவில், அனைவரும் பாதுகாப்பின்மை மற்றும் பொருளாதாரம் மற்றும் சமூக பாதிப்புக்களால் துன்புறுகின்றார்கள்.

நாங்கள் யாராயிருப்பினும், எம்மதச் சமுதாயத்திற்கு உரியவராயிருப்பினும், எமது நாட்டிலுள்ள அனைத்து நபர்கள் தொடர்பிலும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கப்படுவதிலிருந்து நாம் பெற்றுக் கொள்வதற்கு நிறைய இருக்கின்றன. அத்துடன், ஏனைய நாடுகளில் சிறுபான்மையினராக வாழ்கின்ற மற்றும் அங்கே சமமான உரிமைகளை காண விரும்புகின்ற சக விசுவாசிகள் எம் அனைவருக்கும் இருக்கின்றார்கள். எங்கும், அனைவருக்குமான சம உரிமைகள், எம் அனைவருக்குமான சந்தோசமான, பாதுகாப்பான உலகத்தை உருவாக்கும்.

# இரண்டு நிமிட குறு நாடகத்திற்கான சூழ்நிலைக்காட்சிகள்

## நெறியாளருக்கான சிறு குறிப்பு வடிவம்

இந்தப் பக்கங்களில் அமர்வு 4 இன் இரண்டு நிமிட ம. அ. ந. சு தொடர்பான சிறு நாடகங்கள்' பயிற்சிக்காக முன்மொழியப்பட்ட சூழ்நிலைக் காட்சிகளைக் காணலாம். ஒவ்வொரு சூழ்நிலைக்காட்சியும் ம. அ. ந. சு தொடர்பான மூன்று வன்முறைகளை உள்ளடக்கியிருக்கும் மேலும் அவ்வாறான ஐந்து சூழ்நிலைக்காட்சிகள் காணப்படும்.

### *சூழ்நிலைக்காட்சி: தெருவிலும் வேலையிலும்*

ஒரு பெண் வேலைக்குச் சென்றுக்கொண்டிருக்கிறாள். அவள் தனது சிறுபான்மை மதத்தின் அடையாளத்தை பிரதிபலிக்கக்கூடியவகையில் ஆடை அணிந்திருக்கிறாள். அவள் அணிந்திருக்கும் ஆடையின் காரணமாக ஒரு வழிப்போக்கன் அவளுக்கு தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தான். அவளுக்கு யாரும் உதவவில்லை. அவள் ஒரு பொலீஸ் அதிகாரியைக் கண்டு பின் அவரை உதவிக்காக அழைக்கிறாள் - அந்த தொந்தரவுக் கொடுத்தவன் ஓடிவிட்டான், ஆனால் அந்த பொலீஸ் அதிகாரி எந்தவகையிலும் அவளுக்கு உதவவில்லை. அவள் அவளது அலுவலகத்தை அடைந்ததும், தனது பதவியுயர்வை கொண்டாடும் கனிஷ்ட பணியாளர் ஒருவரை சந்தித்தாள். மீண்டுமொரு முறை அவள் பதவி உயர்விற்காக கருத்திற்கொள்ளப்படவில்லை.

***கதாப்பாத்திரங்கள்***

அத்தியாவசியமான கதாப்பாத்திரங்கள்: பெண், தொந்தரவு செய்பவர், பொலீஸ் அதிகாரி, வழிப்போக்கன், சக பணியாள்,
மேலதிக கதாப்பாத்திரங்கள்: மேலதிக சக உத்தியோகத்தர்கள் மற்றும் வழிப்போக்கர்கள்

*இந்த சூழ்நிலைக்காட்சியில் உள்ள மீறல்கள்*

இந்த சம்பவமானது, நபர்களுடைய மத அடையாளத்தை அடிப்படையாகக்கொண்ட தொந்தரவு மற்றும் பாரபட்சம் மற்றும் அதுதொடர்பில் எதுவும் செய்ய முடியாத அதிகாரிகளின் தவறுகை என்பன தொடர்பில் கவனம் செலுத்துகிறது.

- சமூக விரோதங்கள்: தொந்தரவு/வெறுப்புக் குற்றம்.
- பாதுகாப்பதற்கு அரசாங்கம் தவறுகின்றமை: பொலீஸ் அதிகாரி உதவவில்லை.
- சமூக விரோதங்கள்: பாரபட்சம் – சிறுபான்மையினருக்கு தொழிலில் காணப்படுகின்ற கட்புலனாகாத தடைகள்.

### *சூழ்நிலைக்காட்சி: வழிபாட்டிடங்கள்*

ஒரு சிறுபான்மை மத குழுவானது ஒரு இடத்தினை வாங்கியதுடன் வழிபாட்டிடமொன்றினைக் கட்டுவதற்குரிய அனுமதியினையும் அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொண்டது. அவர்கள் கட்டிடத்தினை கட்ட ஆரம்பித்தார்கள், ஆனால் அந்த கட்டிடம் தொடர்ச்சியாக சேதப்படுத்தப்பட்டது. அவர்கள் பொலீஸ் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் என்போரை தொடர்புகொண்டார்கள், ஆனால் அவர்களால் அது தொடர்பில் எதுவும் செய்ய முடியவில்லை என்று கூறினார்கள். இறுதியில் அவர்கள் அந்த இடத்தை கட்டிவிட்டார்கள். ஆனால், மக்கள் அங்கே சென்று வழிபடுகின்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர்கள் பெரும்பான்மை சமூகத்தினரால் தொந்தரவு மற்றும் நையாண்டி என்பவற்றிற்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

***கதாப்பாத்திரங்கள்***

அத்தியாவசியமான கதாப்பாத்திரங்கள்: இரு சிறுபான்மை குழு உறுப்பினர்கள், பொலீஸ் அதிகாரி, உள்ளூராட்சி அதிகாரசபை பிரதிநிதி, இரு பெரும்பான்மை குழு உறுப்பினர்கள்.
மேலதிக கதாப்பாத்திரங்கள்: மேலதிக சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை குழு உறுப்பினர்கள்.

*இந்த சூழ்நிலைக்காட்சியில் உள்ள மீறல்கள்*

இச்சம்பவமானது மதத்தினை அடிப்படையாகக் கொண்ட சமூக விரோதங்கள் மற்றும் அது தொடர்பில் எதுவும் செய்ய முடியாத அதிகாரிகளின் தோல்வி என்பன தொடர்பில் கவனம் செலுத்துகிறது.

- சமூக விரோதங்கள்: கட்டிட இடத்தினை அழித்தல்
- பாதுகாப்பதற்கு அரசாங்கம் தவறுதல்: அதிகாரிகள் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.
- சமூக விரோதங்கள்: வழிபாட்டிடத்திற்கு வெளியே தொந்தரவு செய்தல்.

### சூழ்நிலைக்காட்சி: பாடசாலையில் ம.அ.ந.சு

சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த, 12 வயது நிரம்பிய ஒரு ஆண் பிள்ளை ஒரு அரச ஆரம்பப் பிரிவுப் பாடசாலைக்கு செல்கின்றான், இன்று ஒரு வழக்கமான பாடசாலை நாள் ஆகும். அன்றைய நாள் பெரும்பான்மை மதத்தினரின் பிரார்த்தனையுடன் ஆரம்பமானது. அதில் அவனும் பங்கெடுக்க வேண்டும் என கேட்கப்பட்டான். பிரார்த்தனையின் பின்னர், அவன் வரலாறு பாடத்திற்குச் சென்றான். அதில், ஆசிரியர் அவனுடைய சிறுபான்மை மத சமுதாயத்தினைப் பற்றி இழிவான வார்த்தைகளினால் குறிப்பிடுகின்ற ஒரு பாடநூலிலிருந்து சிலவற்றை வாசித்துக் காட்டினார். பாடத்திற்கு பின்னரான இடைவேளையின்போது, அவனது மத அடையாளம் காரணமாக அவனது சக மாணவர்கள் அவனைக் கேலி செய்தார்கள் என்பதுடன் அவர்களின் விளையாட்டுக்களிலிருந்து அவனை விலக்கினார்கள்.

***கதாப்பாத்திரங்கள்***

அத்தியாவசியமான கதாப்பாத்திரங்கள்: ஒரு ஆண் பிள்ளை, பிரார்த்தனை நடத்துவதற்காக/வரலாறு பாடம் நடத்துவதற்காக ஒரு ஆசிரியர், இரு சகமாணவர்கள்.
மேலதிக கதாப்பாத்திரங்கள்: மேலதிக ஆசிரியர்கள் மற்றும் சகமாணவர்கள்.

*இந்த சூழ்நிலைக்காட்சியில் உள்ள மீறல்கள்*

இந்த சம்பவமானது மத மற்றும் நம்பிக்கைகான சுதந்திரத்திம் தொடர்பில் அரச அதிகாரிகளினால் செய்யப்படுகின்ற நிறுவனமயப்படுத்தப்பட்ட மீறல்கள் (பாடநூல்களுக்கு அனுமதியளிக்கின்ற கல்வி நிறுவனம், பாடசாலை, ஆசிரியர்) மற்றும் இது எவ்வாறு சமூக விரோதச் செயல்களுக்கு பங்களிப்புச் செய்கிறது என்பன தொடர்பில் கவனம் செலுத்துகின்றது.

- அரசாங்கத்தின் மீறல்கள்: பெரும்பான்மை மதத்தின் பிரார்த்தனையில் கட்டாயமாகப் பங்குபெறச் செய்தமை.
- அரசாங்கத்தின் மீறல்கள்: பாடசாலைப் பாடநூல்களில் பாரபட்சம்மிக்க உரைப்பகுதிகள்.
- சமூக விரோதங்கள்: சகமாணவர்களால் துன்புறுத்தலுக்குள்ளாதல்.

### சூழ்நிலைக்காட்சி: குடும்பத்தில் ம.அ.ந. சு

17 வயது நிரம்பிய ஒரு பெண்பிள்ளை ஆசிரியர் பயிற்சி பெறுவதற்காக பல்கலைக்கழகம் செல்ல விரும்பினாள். இதற்கு அவளது பெற்றோர்கள் மறுப்புத் தெரிவித்துவிட்டார்கள். பதிலாக, அவர்களது குடும்ப கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அவள் திருமணம் செய்துக்கொள்ள வேண்டும் என அவர்கள் விரும்பினார்கள். மனைவியரின் கடமை வீட்டில் இருக்க வேண்டும் என்பதால் அவர்களது மதம் பெண்களுக்கான கல்வியை ஊக்கப்படுத்தவில்லை என்று அவர்கள் வாதிட்டார்கள். அந்தப் பெண் இவ்வாறான நம்பிக்கைகளுடன் உடன்படவில்லை என்பதுடன் அவள் தனக்கான சொந்த முடிவைகளைத் தானே எடுக்க வேணடுமென விரும்பினாள். வலுக்கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்துவிடுவார்கள் எனப் பயந்த அவள், இன்னொரு நகரத்திலே வசிக்கின்ற வயதிலே மூத்த அவளின் நண்பியுடன் தங்குவதற்காக வீட்டிலிருந்து வெளியேறிவிட்டாள். அவளது குடும்பமானது அவளைக் காணவில்லை என பொலீஸில் முறைப்பாடு செய்தார்கள். அவர்கள் அவளைக் கண்டுபிடித்தபோது, பொலீஸார் அவளது விருப்பத்திற்கு எதிராக அவளை அவளது பெற்றோரிடம் ஒப்படைத்தார்கள். அடுத்த நாள், அவளுக்கு ,அவள் அதற்குமுன் அவள் சந்தித்திராத ஒரு ஆணை திருமணம் செய்து வைத்தார்கள் என்பதுடன் அதன் பின் அவள் வீட்டிலிருந்து வெளியேற அனுமதிக்கப்படவில்லை.

***கதாப்பாத்திரங்கள்***

அத்தியாவசியமான கதைப்பாத்திரங்கள்: பெண் பிள்ளை, அவளுடைய தாய், தகப்பன், நண்பி, பொலீஸ் அதிகாரி, பெண் பிள்ளையின் கணவன்
மேலதிகக் கதாப்பாத்திரங்கள்: மேலதிக குடும்ப உறுப்பினர்கள், திருமணத்திற்கு வருகைத் தந்த நபர்கள், மேலதிக பொலீஸ் உத்தியோகத்தர்கள்

*இந்த சூழ்நிலைக்காட்சியில் உள்ள மீறல்கள்*

இந்த சம்பவமானது பெண்கள் உரிமைகள் மற்றும் ம.அ. ந.சு. என்பவற்றுக்கிடையிலான ஊடறுப்பின்மீது கவனம் செலுத்துகிறது.

- சமூக விரோதங்கள் - குடும்பத்தில் இடம்பெறுகின்ற மீறல்கள்: மகளினுடைய கல்விக்கான அனுமதியினை மறுத்தல்.
  இது மகளின் கல்விக்கான உரிமையை மீறும் செயலாகும். அத்துடன் இது, அவளது நம்பிக்கையின் அடிப்படையில் (உதாரணமாக, பெண் பிள்ளைகளின் கல்வி தொடர்பான இறைவனின் கருத்து பற்றியது) அவளுக்கானத் தீர்மானங்களை மேற்கொள்ளும் அவளது உரிமையினையும், அதன்படி நடந்துகொள்வதற்கான உரிமையினையும் மீறுகின்றது. இதன் அடிப்படையில், இது அவளது கல்விக்கான மற்றும் ம.அ.ந.சு இற்கான உரிமை மீறலாகும்.

*இந்த சூழ்நிலைக்காட்சியில் உள்ள மீறல்கள்*

- அரசாங்கம் பாதுகாக்கத் தவறுதல்: கட்டாயத் திருமணத்தினால் அவள் பாதிக்கப்படக்கூடுமென்றபோதிலும், அதனைப் பொருட்படுத்தாது, பொலிஸார், அவளுடைய விருப்பத்திற்கு எதிராக அவளை பெற்றோர்களிடம் திருப்பி ஒப்படைத்தனர்.
- சமூக விரோதங்கள் - குடும்பத்தில் இடம்பெறுகின்ற மீறல்கள்: கட்டாயத் திருமணம் மற்றும் நடமாடுவதற்கான சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டமை.

*குறிப்பு*

சர்வதேச சட்டத்திற்கிணங்க, பெற்றோர்களுக்கு தமது நம்பிக்கைக்கிணங்க தங்களுடைய பிள்ளைகளை வளர்ப்பதற்கான உரிமையிருக்கிறது. ஆனால், பெற்றோர்கள், மதம் அல்லது நம்பிக்கை தொடர்பான (மற்றும் வாழ்வின் ஏனைய அம்சங்கள் தொடர்பான) தீர்மானங்களை எடுக்கக்கூடிய பிள்ளைகளின் வளர்ந்துவருகின்ற தகைமைக்கு மதிப்பளித்தலும் வேண்டும்.

## சூழ்நிலைக்காட்சி: குரலெழுப்புதல் – ஊழல் மற்றும் வன்முறை

அரசப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவியொருவர் பேராசிரியர் ஒருவரால் தான் பாலியல் தொந்தரவிற்கு ஆளாகின்றமை குறித்து மாணவர் பத்திரிகைக்கு அறிக்கையிட்டிருந்தார். மாணவ ஊடகவியலாளரொருவர் இச்சம்பவம் குறித்து பல்கலைக்கழக அதிபரை (துணை வேந்தரை) நேர்காணல் செய்கிறார். பல்கலைக்கழகமானது இந்த விடயத்தை மூடிமறைக்க வேண்டுமென நினைத்தது, ஆகவே, குறிப்பிட்ட மாணவ ஊடகவியலாளர் மத நம்பிக்கைகள் மற்றும் மதத் தலைவர்களை விமர்சித்தார் என்று வதந்தியொன்றை சமூக வலைத்தளங்களில் பரப்பினார்கள். குறிப்பிட்ட மாணவ ஊடகவியலாளர் மற்றும் செய்திப்பத்திரிகையினை இறைநிந்தனை செய்தனர் என குற்றம் சாட்டி அவர்களுக்கெதிராக ஒரு வன்முறைக் குழுவொன்று போராட்டத்திற்காக பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடியது. பல்கலைக்கழகமானது இதனை ஒரு காரணமாக எடுத்துக்கொண்டு அம்மாணவர் பத்திரிகையை நிறுத்தியது. இறைநிந்தனை செய்தார் என்ற சந்தேகத்தில் பொலீஸ் அம்மாணவ ஊடகவியலாளரை கைது செய்தது.

***கதாப்பாத்திரங்கள்***

அத்தியாவசியமான கதாப்பாத்திரங்கள்: மாணவி, ஊடகவியலாளர், பல்கலைக்கழக அதிபர் (துணைவேந்தர்) குழுவின் உறுப்பினர்கள் 2 பேர், பொலீஸ் அதிகாரி,
மேலதிகக் கதாபாத்திரங்கள்: கலககுழுவின் உறுப்பினர்கள்

*இந்த சூழ்நிலைக்காட்சியில் உள்ள மீறல்கள்*

இந்த உதாரணமானது வெளிப்படுத்துவதற்கான மற்றும் ஒருங்குசேர்வதற்கான உரிமை மற்றும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் என்பவற்றுக்கிடையிலான ஊடறுக்கின்ற தன்மைகளையும் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் ஊழலுக்கிடையிலான தொடர்பினையும் வலியுறுத்திக் காட்டுகின்றது.

- அரசாங்கத்தின் மீறல்கள்: ஒரு குற்றத்தை மூடி மறைப்பதற்காக பல்கலைக்கழகம் (அரசப் பல்கலைக்கழகம்) மதக் குற்றச்சாட்டுக்களைப் பயன்படுத்தியமை.
- சமூக விரோதச் செயல்கள்: வன்முறைக் குழு.
- அரசாங்கத்தின் மீறல்கள்: பொலீஸ் மாணவ ஊடகவியலாளரை கைது செய்தது.

மேலதிகமாக: ஒரு மாணவப் பத்திரிகையை நிறுத்துவதானது, ஒருங்குசேர்தல் மற்றும் வெளிப்படுத்தல் சுதந்திரத்திற்கான உரிமை மீறலொன்றாகும்.

# மாற்றமுண்டாக்குநர்களின் கதை

***கீழ்வரும் கதையானது அமர்வு 4 இன் நிறைவு செய்கின்ற கருத்துக்களின் ஒரு பகுதியாக வாசிக்கப்படுகின்றது. அமர்வின் பவர் பொயின்ட் இன் 41–44 வரையான ஸ்லைடுகளில் இது விளக்கப்பட்டுள்ளது.***

## போதகர் James மற்றும் இமாம் Ashafa இன் கதை

*கதை*

இது போதகர் James மற்றும் இமாம் Ashafa ஆவர். 1992 இல், அவர்களிருவரும் இளம்பராயத்திலிருந்தபோது, வட நைஜீரியாவில் இடம்பெற்ற மத மோதலொன்றின்போது ஒருவருக்கொருவர் கொடூரமாக சண்டையிட்ட இரண்டு போராளிகள் குழுக்களினைத் தலைமை தாங்கினர். போதகர் James வன்முறையில் தனது கையொன்றினை இழந்திருந்த அதேவேளை, இமாம் Ashafa தனது ஆன்மீக ஆலோசகரையும் நெருங்கிய உறவினர்கள் இருவரையும் இழந்திருந்தார். இவர்களிருவரும் வெறுப்பு மிகக் கொண்ட எதிரிகளானார்கள் என்பதுடன் பழிவாங்குவதாக சபதமிட்டுக் கொண்டார்கள்.

சில வருடங்களுக்கு பின்னர், ஒரு அதிஷ்ட சந்திப்பொன்று அனைத்தையும் மாற்றியது. போலியோவிற்கு எதிரான சிறுவர்களின் நோயெதிர்ப்பு சக்தி தொடர்பான சமுதாயத் தலைவர்களுக்கான சந்திப்பொன்றின்போது, இவ்விரு மதத் தலைவர்களும் இருவருக்கும் தெரிந்த ஒரு பொதுவான நண்பர் ஒருவரினால் ஒன்றாக அழைத்து வரப்பட்டனர். அந்நண்பர், இவ்விருவரினதும் கைகளையும் ஒன்று சேர்த்து, “இந்நாட்டினை அமைதியாக வைத்திருப்பதற்கான இயலுமை உங்களிடம் உண்டு என எனக்கு தெரியும். நீங்கள் பேசிக்கொள்ள வேண்டுமென நான் விரும்புகின்றேன்” என கூறினார்.

அவர்களுள் ஒருவரும் மற்றையவருடன் பேசுவதற்கு எண்ணவில்லையாயினும், நைஜீரியா மீதான அவர்களது நேசம் மற்றும் நாட்டின் முன்னேற்றம் தொடர்பான அவர்களின் அர்ப்பணிப்பு போன்ற விடயங்களில் பொதுத் தன்மை இருப்பதனை அவர்கள் அறிந்தனர்.

“அப்போது முஸ்லிம்கள் தொடர்பாக எனக்கிருந்த வெறுப்பிற்கு எல்லைகளே கிடையாது” என போதகர் James கூறினார். “ஒருவர் சொல்வதனை மற்றையவர் கேட்கின்ற இந்த இயலுமையினை நாம் கற்றுக் கொண்டமைக்காக மற்றும் கலந்துரையாடுவதற்கான பாதுகாப்பான தளமொன்றினை உருவாக்கிக் கொண்டமைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். இவை இல்லாவிடின், நாங்கள் தொலைவிலிருந்தே விடயங்களை ஊகித்துக் கொண்டிருப்போம்.” என அவர் தொடர்ந்து கூறினார். “நாங்கள் கசப்பான பாடமொன்றினைக் கற்றுக் கொண்டுள்ளோம்.”

இமாம் Ashafa, 1992 இல் Kaduna இல் இடம்பெற்ற வன்முறைக்கு பின்னர் அவரும் அவருடைய போராளிக்குழுவும் பழிதீர்க்க திட்டமிட்டிருந்ததனை நினைவுகூர்ந்தார். ஆனால், ஒரு நாள், பள்ளிவாசலில் அவருடைய தொழுகையின்போது, “கெட்டதை மாற்றுவதற்கும் நல்லதை பயன்படுத்துவதே சிறப்பானதாகும் என குர்ஆன் கற்பிக்கின்றது. ஆகவே, நீங்கள் ஒரு முஸ்லிமாக இருந்துகொண்டு, உங்களை காயப்படுத்தியவர்களை மன்னிப்பதற்கு மறுத்தால், நீங்கள் எவ்வாறு முஹம்மது அவர்களின் உண்மையான உருவகமாக இருக்க முடியும்?” என்பதனை உணர்ந்தார்.

இரு மதத்தலைவர்களும் பழிவாங்குவதற்கான மற்றும் எதிர்வினை செய்வதற்கான தங்களுடைய விருப்பத்துடன் தடுமாறினார்கள். ஆனால், தங்களுடைய இதயங்களில் வெறுப்பினைக் கொண்டிருந்தால் தாங்கள் உண்மையான மதத் தலைவர்களாக இருக்க முடியாதென்பதனையும் அவர்கள் புரிந்துக் கொண்டனர்.

இமாம் Ashafa மற்றும் போதகர் James இற்கிடையில் மெதுவான ஆனால் நிலையான நம்பிக்கை வளர்ந்தது. இவர்களுடைய உறவு நட்பாக மலர்ந்ததுடன், அது முஸ்லிம்-கிறிஸ்தவ மத நல்லிணக்க மத்தியஸ்த நிலையமொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு வழிவகுத்தது.

இந்நிலையமானது அமைதியான சகவாழ்விற்காக ஆதரித்துவாதாடுவதுடன், அப்பிராந்தியத்தில் வன்முறையான மத மோதல்கள் மீண்டும் இடம்பெறுவதனைத் தடுப்பதனை இலக்காகக் கொண்டுள்ளது. நைஜீரியா மற்றும் அதற்கப்பால் நிகழ்ந்த வன்முறையினைத் தொடர்ந்து சமாதான ஒப்பந்தங்களைக் கொண்டுவருவதற்கு அது உதவியிருந்ததுடன், அனைத்து மதங்களையும் சேர்ந்த நபர்களுக்கிடையில் அமைதியான சகவாழ்விற்காக ஆதரித்து வாதாடுகின்ற உள்ளூர் மட்ட மதம்சார்ந்த அமைப்புக்களுக்கு அது வழிகாட்டுதல்களை வழங்குகின்றது.

*மூலம்*

Tanenbaum. https://tanenbaum.org/peacemakers-in-action-network/meet-the-peacemakers/imam-muhammad-ashafa-pastor-james-wuye/

# அமர்வு 5

## எமது சமுதாயத்தில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம்

### அமர்வு பற்றிய கண்ணோட்டம்

முன்னைய மூன்று அமர்வுகளிலும் நாம், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்கான மனித உரிமை மற்றும் அவ் உரிமையின் மீறல்கள், உரிமை குறித்த எங்களது நடத்தைப் பாங்குகள் குறித்து சிந்தித்தல் மற்றும் அடையாளம், சாதக மற்றும் பாதகநிலைகள் குறித்த விடயங்கள் தொடர்பாக ஆராய்தல் போன்ற விடயங்களைக் கற்றுக்கொண்டோம். அவ் அமர்வுகளில் கற்றவற்றை அடிப்படையாகக் கொண்டு, அமர்வு 5 ஆனது, பங்குபற்றுநர்கள் தங்களது சொந்தப் பிரதேசம் அல்லது நாட்டிற்கான மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் சூழமைவின் பகுப்பாய்வொன்றினை விருத்தி செய்கின்ற ஊடாடுகைமிக்க செயன்முறையொன்றிற்கு பங்குபற்றுநர்களை இட்டுச் செல்கின்றது.

இது பயிற்சி நெறியின் பகுதி 1 இலுள்ள இறுதி அமர்வாகும். விருத்தி செய்யப்படவுள்ள சூழமைவுப் பகுப்பாய்வானது பயிற்சி நெறியின் பகுதி 2 முழுவதிலும் மேற்கோள் காட்டப்படுவதற்கு பயன்படுத்தப்படும்.

### *கற்றல் குறிக்கோள்கள்*

இவ் அமர்வானது சூழமைவுப் பகுப்பாய்விற்கானத் திறன்களைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துகின்றது.

இவ் அமர்வின் இறுதியில் பங்குபற்றுநர்கள் கீழ்வருவனவற்றைச் செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள்:

- தங்களுடைய சமுதாயங்களிலுள்ள வேறுபட்ட நபர்கள் மற்றும் குழுக்கள் எதிர்கொள்கின்ற ம. அ. ந. சு தொடர்புடைய பிரச்சினைகள்/மீறல்களை விவரிப்பார்கள்
- ம. அ. ந. சு மீறல்கள் சமுதாயத்திலுள்ள ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளைப் பாதிப்பதனைவிட, எவ்வாறு பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளை வேறுவிதமாகப் பாதிக்கின்றது என்பதனை அடையாளப்படுத்துவார்கள்
- ம. அ. ந. சு மீறல்களினால் பாதிக்கப்படுகின்ற வேறு சமுதாயங்களைச் சேர்ந்த நபர்களைப் புரிந்து கொள்வார்கள்.

### *அமர்வின் உள்ளடக்கங்கள் மற்றும் நேரவிபரங்கள்*

| | |
|---|---|
| ***வரவேற்பும் மற்றும் அறிமுகம்*** | 3 நிமி |
| ***ஆரம்பப் பயிற்சி: நல்லவற்றின் பின்னல்***<br>பங்குபற்றுநர்கள் எமது சமுதாயத்திலுள்ள நல்ல விடயங்களை அடையாளப்படுத்துவார்கள். | 12 நிமி |
| ***முன்வைப்பு: விடயங்கள் எவ்வாறு மோசமடைகின்றன (மற்றும் மேம்படுகின்றன).***<br>இது சூழமைவுப் பகுப்பாய்விற்கான துன்புறுத்தலின் 3 கட்டங்கள் எனும் ஒரு ஆவணக் கருவியினை அறிமுகப்படுத்துகின்றது. | 10 நிமி |
| ***வரைபடத்தினை ஆக்குகின்ற பயிற்சி: எமது நகரத்தின் ம. அ. ந. சு இன் வரைபடம், பகுதி 1***<br>ஊடாடுகைமிக்க பயிற்சியொன்றினூடாக, பங்குபற்றுநர்கள் ம. அ. ந. சு இன் சூழமைவுப் பகுப்பாய்விற்கான அடிப்படையினை விருத்தி செய்துக் கொள்வார்கள். | 60 நிமி |
| ***உற்சாகப்படுத்துவதற்கான செயற்பாடு: நடக்கவும் மற்றும் நிற்கவும்***<br>நபர்களுக்கு சொல்லப்படுகின்றவற்றுக்கு எதிர்மாறானவற்றை செய்ய வேண்டிய ஒரு வேடிக்கையான, உடற்சார் பயிற்சியொன்றாகும். | 5 நிமி |
| ***முழுக்குழுக் கலந்துரையாடல்: எமது நகரத்தின் ம. அ. ந. சு இன் வரைபடம், பகுதி 2***<br>பயிற்சியின் முதற்பகுதியில் தாங்கள் விருத்தி செய்தவற்றைப் பங்குபற்றுநர்கள் பகுப்பாய்வு செய்வார்கள். | 25 நிமி |
| ***நிறைவு செய்கின்ற கருத்துக்கள் மற்றும் மாற்றமுண்டாக்குநரின் கதை***<br>பிரச்சினைகளை மையப்படுத்திக்காட்டி, நம்பிக்கையளிக்கின்ற குறிப்பொன்றுடன் அமர்வினை நிறைவு செய்தல். | 5 நிமி |
| ***மொத்த நேரம்*** | ***2 மணி நேரம்*** |

***நீங்கள் அமர்வு 5 இனைத் தொடர்ந்து பயிற்சி நெறியினை நிறைவு செய்வீர்களாயின்***

நீங்கள் பகுதி 2: மாற்றத்தை நோக்கிய பயணம், இனை நடத்துவதற்கு உத்தேசித்திருக்கவில்லையாயின் அல்லது சில பங்குபற்றுநர்கள் பகுதி 2 இல் இணைந்துகொள்ள மாட்டார்களாயின், நீங்கள் கீழ்வரும் செயற்பாடுகளை அமர்வின் முடிவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். நல்லனவற்றின் பின்னல் என்ற பயிற்சியினை நீக்குவதனூடாக மற்றும் வரைபடத்தினை ஆக்குகின்ற பயிற்சியினை 10 நிமிடத்திற்கு சுருக்குவதனூடாக அல்லது நீளமான அமர்வொன்றினை நடத்துவதனூடாகத் தேவையான நேரத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| ***மதிப்பீட்டுப் பயிற்சி: தலை, இதயம், கைகள்***<br>பயிற்சி நெறியிலிருந்து பங்குபற்றுநர்கள் எவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பது தொடர்பாக சிந்திப்பதற்கு அவர்களுக்கு உதவி செய்தல். | 15 நிமி |
| ***பயிற்சி நெறியிலிருந்து பங்குபற்றுநர்கள் எவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பது தொடர்பாக சிந்திப்பதற்கு அவர்களுக்கு உதவி செய்தல்.***<br>கொண்டாடுவதற்கு மறக்க வேண்டாம்! | 5 நிமி |

# தயாராகுங்கள்

பக்கம் 15 இலுள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயாராவது' என்பதன்கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக அமர்விற்காக தயாராகுங்கள். நினைவிற் கொள்ளுங்கள் - உங்களுடைய குழுவைப் பற்றி உங்களுக்கு தெரியும். ஆகவே, உங்களுடைய குழுவின் தேவைகளுக்கு ஏற்றவகையில் அமர்வின் ஏதேனும் கூறுகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு மற்றும் மாற்றுவதற்கு உங்களால் முடியும்.

***சிறியளவான மேலதிக வாசிப்பு***

அமர்விற்கான ஆவணங்களை வாசிப்பதற்கு மேலதிகமாக, உங்களுடைய நாட்டிலுள்ள மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் நிலைப்பாடு பற்றி (அனைத்து மதங்களைச் சேர்ந்தோர் மற்றும் மத சார்பற்றோரினது) வாசித்தல் உங்களை தயார்படுத்த பயன் மிக்கதாக அமையும். பெரும்பாலும், நாம் எங்களுடைய சொந்தக் குழு அல்லது சமூகத்திலுள்ள பெரிய குழுக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் பற்றி மாத்திரமே தெரிந்திருப்போம். சிறியளவான மேலதிக வாசிப்பினைச் செய்தலானது நீங்கள் உங்கள் குழுவிற்கு அதிகளவில் உதவுவதனை சாத்தியமாக்கும்!

இத்தகவல்களை நீங்கள் எங்கு பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றிய ஆலோசனைக் குறிப்புக்களை பக்கம் 153-154 இல் காணலாம்.

***இவ் அமர்விற்கான வளங்கள்***

பக்கம் 16 இல் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு அமர்விற்குமான நியம வளங்களுக்கு மேலதிகமாக, அமர்வினை நடத்துவதற்கு உங்களுக்கு கீழ்வரும் துணை வளங்கள் தேவைப்படலாம்:

- 'நல்லனவற்றின் பின்னல்' பயிற்சிக்கான, நூலினாலான அல்லது கயிற்றினாலான மென் பந்தொன்று.
- எமது நகரத்தின் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் வரைபடம் பயிற்சிக்காக முன்கூட்டியே தயார்செய்யப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத்தாள் 'வரைபடம்'.
- தலை, இதயம், கைகள் மதிப்பீட்டுப் பயிற்சியினை நடத்துவீர்களாயின், ஒரு பங்குபற்றுநருக்கு ஒன்று என்றவீதத்தில் கையேட்டின் பிரதிகள் தேவைப்படும்.

இந்த அமர்வுக்கான ***துணைவளங்களை*** *இங்கே* காணலாம்.

***அறையினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்***

இவ் அமர்விற்காக, முன் பக்கத்தைப் பாரத்த வண்ணமாக மற்றும் நடுவிலே பெரிய இடம் இருக்கத்தக்கதாக கதிரைகளை அரை வட்ட வடிவில் வைத்து ஆரம்பித்தல் சிறந்த யோசனையாகும். குழு அங்குமிங்கும் இலகுவாக போய் வரக்கூடியதாக இருக்க வேண்டும். மேசைகள் இடப்படாத பெரிய அறை மிகப் பொருத்தமானதாக இருக்கும்!



‘எமது நகரத்தின் ம.அ.ந.சு இன் வரைபடம்’

“எங்கள் நகரத்தில் ம.அ.ந.சு பயிற்சியில் பங்கேற்பாளர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர் - அது சரியாக செயற்பட்டது. அன்றாட வாழ்க்கையில் அவர்கள் சந்திக்கும் மீறல்களைப் பற்றி சிந்திக்க இது அவர்களுக்கு வாய்ப்பளித்ததுமன்றி ஆழமான உரையாடல்களையும் தூண்டியது. படைப்பாற்றல், பகுப்பாய்வு, விமர்சன சிந்தனை மற்றும் குழுப்பணி திறன்களை வளர்ப்பதற்கு இது சிறந்தது.”
**HAMMAM HADDAD**, நெறியாளர், ஜோர்தான்

# விரிவான அமர்வுத் திட்டம்

## 1. *வரவேற்பு* 3 நிமி

குறும்பேச்சு

***என்ன சொல்ல வேண்டும்***

அனைவரையும் அமர்விற்கு வரவேற்றுக் கொள்ளுங்கள். கீழ்வருவனவற்றை விளக்குவதனூடாக அமர்வினை அறிமுகப்படுத்துங்கள்:

- இறுதி 3 அமர்வுகளிலும் நாம் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் உரிமைப் பற்றிப் பார்த்தோம். நாம் எமக்கு காணப்படுகின்ற உரிமைகள் மற்றும் ஏற்படக்கூடிய வேறுபட்ட வகையிலான மீறல்கள் பற்றிக் கற்றோம். அத்துடன், நாம் மனித உரிமைகள் எம்முடன் எவ்வகையில் தொடர்புறுகின்றன என்பது பற்றி சிந்தித்தோம் என்பதுடன் அடையாளம், சிறப்புரிமை மற்றும் பாதகநிலை போன்ற விடயங்கள் குறித்தும் ஆராய்ந்தோம்.
- இவ் அமர்வில், வேறுபட்ட நபர்கள் அல்லது குழுக்கள் எதிர்கொள்ளக்கூடிய பிர்சினைகளை அடையாளப்படுத்தும்பொருட்டு, நாம் எமது சொந்த சூழமைவினைப் பகுப்பாய்வு செய்வதில் கவனம் செலுத்தப்போகின்றோம். இதனை நாங்கள், கட்புலனாகக்கூடிய, எமது நகரத்தின் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் 'வரைபடமொன்றினை' ஒன்றிணைந்து உருவாக்குவதனூடாக செய்யப் போகின்றோம். ஆனால், பிரச்சினைகள் பற்றி நாங்கள் ஆராய முதல், நல்ல விடயங்களைப் பற்றி சிந்திப்போம்!

## 2. *ஆரம்பப் பயிற்சி: நல்லனவற்றின் பின்னல்* 12 நிமி

முழுக்குழுப் பயிற்சி

*குறிப்பு*

> இப்பயிற்சியானது வேடிக்கை மிக்கது என்பதுடன் செய்தியொன்றினையும் சொல்கின்றது. ஆனால், இது இவ் அமர்வின் செயன்முறைக்கு இன்றியமையாதது அல்ல. நேரங்கள் மிக இறுக்கமானவையாக உள்ள 'எமது நகரத்தின் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் வரைபடம்' தொடர்பான முழுக்குழு கலந்துரையாடலுக்கு மேலதிக நேரத்தினை ஒதுக்கிக் கொள்ளும்பொருட்டு நீங்கள் இப்பயிற்சியினை நீக்கலாம்.

***விவரணம் மற்றும் நோக்கம்***

இப்பயிற்சியானது, நாம் பிரச்சினைகளை ஆராய்வதற்கு முன்னர், எமது சமுதாயத்தில் நாங்கள் போற்றுகின்ற நல்ல விடயங்களின் கட்புலனாகின்ற ஒரு உருவமைப்பொன்றினை உருவாக்குவதற்கான வேடிக்கையான முறையொன்றாகும்.

*வளங்கள்*

- நூற்பந்து (அல்லது கயிற்றினாலான பந்து).

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது***

நபர்களை வட்டமொன்றினுள் நிற்குமாறு கூறுங்கள். (பங்குபற்றுநர்களால் நூற்பந்தினை ஒருவருக்கொருவர் வீசுவதற்கு இலகுவானதாக இருக்கும் வகையில் வட்டமானது குறிப்பிட்ட அளவில் காணப்பட வேண்டும்.)

கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:

- நாங்கள் நூற்பந்தினை வட்டத்தைச் சுற்றி ஒவ்வொருவருக்கும் வீசப் போகின்றோம்.
- பந்தினை வீசுவதற்கு முன்னர், ஒவ்வொரு நபரும் கீழ்வரும் வாக்கியத்தினை நிறைவு செய்ய வேண்டும், 'எனது நகரத்தில் வாழ்வதிலுள்ள நல்ல விடயமானது.....'. உதாரணமாக, 'எனது நகரத்தில் வாழ்வதிலுள்ள நல்ல விடயம் என்னால் என் குடும்பத்திற்கு அருகில் இருக்க முடிகின்றது' அல்லது 'உதைப்பந்தாட்டக் குழு அல்லது உள்ளூர் பாடசாலைக்கு அருகில் இருக்க முடிகின்றது'. மற்றுமொருவர் கூறிய விடயத்தை சொல்வதற்கு நீங்கள் அனுமதிக்கப்பட மாட்டீர்கள், ஆகவே, பந்தை ஒவ்வொருவருக்காய் வீச வீச இது கடினமானதாய் அமையும்.
- பந்தை வீசுவதற்கு முன்னர், நூலின் ஒரு முனையினைக் கையால் பிடித்துக்கொண்டு, மற்றைய கையினால் எஞ்சியுள்ள பந்தின் பகுதியினை வீசுங்கள். இது உங்களுக்கு முன்னுள்ள மற்றும் உங்களுக்கு பின்னுள்ள நபர்களுக்கு இடையில் ஒரு சிக்கலான இணைப்பினை உருவாக்கும். பயிற்சி முழுவதிலும் நூலை அல்லது கயிற்றைப் பிடித்திருங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது***

வாக்கியத்தினை நிறைவுசெய்து, வட்டத்தின் மற்றையப் பக்கத்தில் உள்ள ஒருவருக்கு பந்தை வீசுவதனூடாக இப்பயிற்சியினை நீங்களே ஆரம்பியுங்கள். நூலின் இறுதிப் பகுதியினைப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்பதனை நினைவிற் கொள்ளுங்கள்! பங்குபற்றுநர்களுக்கிடையில் 'பின்னலொன்று' கிரமமாக உருவாக்கப்படும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது***

ஒவ்வொருவரும் நூலைப் பிடித்த பின்னர் பயிற்சியினை நிறுத்துங்கள், ஆனால் நூலினைத் தொடர்ந்து பிடித்திருக்குமாறு பங்குபற்றுநர்களுக்கு கூறுங்கள்.

கீழ்வரும் சிந்தனைகளுடன் நிறைவு செய்யுங்கள்:

- எங்களுக்கிடையிலான இடைவெளி இப்போது எப்படித் தெரிகின்றது? சிலந்தியின் வலைபோல அல்லது வலையொன்றினைப் போலத் தெரிகிறதா?
- இவ் அமர்வானது எங்களது நாடு அல்லது சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றபோதும், இங்கு நல்ல நபர்களும் மற்றும் நல்ல விடயங்களும் இருக்கின்றன. நன்மையளிக்கக்கூடிய முறையில் இடம்பெறுகின்ற விடயங்களும் உள்ளன!
- பிரச்சினைகளை மாற்றுவதற்காக நாங்கள் செயலாற்றுகின்றபோது, இவ்விடயங்களை நினைவிற் கொள்ளுதல் முக்கியமாகும். ஏனெனில், ஒன்று அவை எமக்கு பலத்தையும் நம்பிக்கையையும் தருகின்றன. அத்துடன், இரண்டாவதாக, நல்ல நபர்கள் மற்றும் நல்ல விடயங்களின் வலையமைப்புக்கள் நாம் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு எமக்கு உதவக்கூடிய வளங்களாக அமையலாம்.

## 3. முன்வைப்பு: விடயங்கள் எவ்வாறு மோசமடைகின்றன (மற்றும் மேம்படுகின்றன) 10 நிமி



முன்வைப்பு

***விவரணம் மற்றும் நோக்கம்***

இச்சிறிய உள்ளீடானது, சமூகத்தில் மீறல்களை மோசமானதாக்குகின்ற செயன்முறைகள் தொடர்பான பங்குபற்றுநர்களின் அறிவினை உறுதியானதாக்குகின்றது. அத்துடன் இது சூழமைவுப் பகுப்பாய்விற்கான ஆவணக்கருவியொன்றினையும் வழங்குகின்றது. இது அடுத்து வருகின்ற, 'எமது நகரத்தின் ம.அ.ந.சு இன் வரைபடம்' என்ற பயிற்சியில் பயன்படுத்தப்படவுள்ளது.

***வளங்கள்***

- இவ்வழிகாட்டியின் பக்கம் 107 இல் முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதியினைப் பார்க்கலாம்.
- எழுத்துப்பிரதியானது அமர்விற்கான பவர்பொயின்டின் 3-13 வரையான ஸ்லைடுகளை ஒத்து அமைந்திருக்கும் என்பதுடன் அது இவ் ஸ்லைடுகளுக்கான வளவாளர் குறிப்புக்களுள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- அமர்விற்கான துணை வளங்களில் மாற்றங்களை செய்வதற்கேற்றவகையில், எழுத்துப்பிரதியின் Word வடிவம் இணைக்கப்பட்டுள்ளது.

*உங்களுடைய முன்வைப்பு முடிவு செய்யப்படுகின்றவரையில், வினாக்கள் /கருத்துக்களை பதிவு செய்து வைத்திருக்குமாறு நபர்களிடம் கூறுங்கள்*

***முன்னாயத்தம்***

பக்கம் 15 இல் வழங்கப்பட்டுள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயார்படுத்துவது' என்பதிலுள்ள வழிகாட்டல்களுக்கமைய தயாராகுங்கள். எழுத்துப்பிரதி மற்றும் பவர்பொயணின்ட் ஸ்லைடுகளை (அல்லது ஸ்லைடுகளின் பிரதான கருத்துக்களைக் கொண்டு நகர்வு விளக்கப்படத்தாள்களை ஆக்கிக் கொள்ளுங்கள்) வாசித்து உங்களுக்கேற்றவகையில் மாற்றியமைத்துக் கொள்ளுங்கள் மற்றும் ஸ்லைடுகள் நகர்வு விளக்கப்படத்தாள்களுடன் முன்வைப்பினை செய்வதற்கு பயிற்சி செய்து பாருங்கள்.

## 4. வரைபடத்தினை ஆக்குகின்ற பயிற்சி: 'எமது நகரத்தின் ம.அ.ந.சு இன் வரைபடம்' – பகுதி 1    60 நிமி

முழுக்குழுப் பயிற்சி

### விவரணம்

இப்பயிற்சியானது, பங்குபற்றுநர்கள் தங்களுடைய சூழமைவிலுள்ள ம.அ.ந.சு இன் மீறல்களை விவரணையாக்கம் செய்ய மற்றும் பகுப்பாய்வு செய்வதற்கு அவர்களுக்கு உதவும்பொருட்டு, நகர்வு விளக்கப்படத் தாளிலுள்ள நகரமொன்றின் 'வரைபடம்' மற்றும் கதாபாத்திர தொகுப்பு என்பனவற்றைப் பயன்படுத்துகின்றது. நெறியாளரென்றரீதியில் நீங்கள் கொண்டுள்ள ஏதேனும் மேலதிக அறிவுடன் சேர்த்து பங்குபற்றுநர்களின் சொந்த அனுபவங்கள் மற்றும் அறிவு பயன்படுத்தப்படவுள்ளது. இப்பயிற்சியானது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளதுடன், இடையில் உற்சாகப்படுத்துகின்ற செயற்பாடொன்றும் உள்ளது.

### நோக்கம்

ம.அ.ந.சு உடன் தொடர்புடைய பிரச்சினைகள் தங்களுடைய சூழமைவுகளிலுள்ள வேறுபட்ட நபர்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பது தொடர்பான அறிவினையும் புரிந்துணர்வினையும் விருத்தி செய்துக் கொள்வதற்கு மற்றும் எளிமையான, கற்புலனாகக்கூடிய முறையினைப் பயன்படுத்தி மனித உரிமை மீறல்களை விவரணையாக்கம் செய்வதற்கான திறன்களைக் கற்றுக் கொள்வதற்கும் உதவுகின்றது.

### வளங்கள்

- ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ள நகர்வு விளக்கபடத்தாள் 'வரைபடம்' (கீழுள்ள அறிவுறுத்தல்களைப் பார்க்கவும்)
- நகர்வு விளக்கபடத்தாள்களுக்குரிய பேனைகள்

### முன்னாயத்தம்

இவ் அமர்விற்கு தயார்ப்படுத்துகின்றபோது, உங்களுடைய நாட்டிலுள்ள ம.அ.ந.சு இன் நிலைப்பாடு தொடர்பில் வாசிப்பீர்களாயின், நீங்கள் இப்பயிற்சிக்கு முழுமையான பங்களிப்பினை செய்ய முடியும். வாசிப்பதற்கான துணை வளங்களுக்கான தொடுப்புக்களை பக்கம் 153-154 இல் பார்க்க.

கீழ்வரும் நடைமுறை ஆயத்தங்களை அமர்விற்கு முன்பதாக செய்யுங்கள்:

- ***உங்களுடைய நகரத்திற்கான ம.அ.ந.சு. இன் வரைபடத்தினை உருவாக்குங்கள்***
  கட்டமொன்றில் 4 நகர்வு விளக்கப்படத் தாள்களை ஒன்றாக வைத்து ஒட்டுங்கள். அத்தாள்களில், கிராமமொன்றின்/நகரமொன்றின் வரைபடத்தினை வரையுங்கள். மதம் அல்லது நம்பிக்கை தொடர்பான பிரச்சினைகளை நபர்கள் எதிர்கொள்கின்ற 10 வேறுபட்ட இடங்களை வரைந்துக் கொள்ளுங்கள் அல்லது பெயர்களை உள்ளடக்கிக் கொள்ளுங்கள். (பக்கம் 98 இலுள்ள விளக்கத்தினை பாருங்கள்.)
  உங்களுடைய 'வரைபடத்தில்' உள்ளடக்குவதற்கென பரிந்துரைக்கப்படக்கூடிய இடங்களின் பட்டியலொன்று கீழே தரப்பட்டுள்ளது. உங்களுடைய சூழமைவிற்கு பொருத்தமல்லாத எதனையும் சேர்த்துக்கொள்ள வேண்டாம், அவற்றுக்கு பதிலாக மிகப் பொருத்தமான ஏனையவற்றை சேர்த்துக் கொள்ளுங்கள். வீடுகள், வழிபாட்டிடங்கள், கடைகள் போன்ற பொது இடங்கள் மற்றும் பொலிஸ் நிலையம் போன்ற உத்தியோகபூர்வ இடங்களை நீங்கள் உள்ளடக்கிக் கொள்கின்றீர்கள் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
  வரைபடத்தினை வரைகின்றபோது, இடங்களுக்கிடையில் அதிகளவான இடத்தை விடுங்கள், ஆனால் ஒன்றுடனொன்று நெருக்கமாகத் தொடர்புறுகின்ற இடங்களை, உதாரணமாக வேறுபட்ட அரசாங்க அலுவலகங்கள் - ஒன்றாக்கிக் கொள்ளுங்கள். அனைத்தையும் ஒரே நகர்வு விளக்கப்படத் தாளில் உள்ளடக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டாம் - இச்செயற்பாட்டின் போது, நீங்கள் வரைந்தவற்றுக்கிடையில் எழுதுவதற்கு உங்களுக்கு இடம் தேவைப்படும்.
  உங்களுடைய வரைபடத்தில் உள்ளடக்கப்படுவதற்காகப் பரிந்துரைக்கப் படுகின்ற இடங்கள்: வீடுகள், பாடசாலை, வைத்தியசாலை, வழிபாட்டிடங்கள், சந்தை, தொழிற்சாலை, பண்ணை, பேருந்து, பொலிஸ் நிலையம் மற்றும் நீதிமன்றம், திட்டமிடல் அனுமதியினை அளிக்கின்ற அரசாங்க அலுவலகம், மத விவகாரங்களுக்கான அரசாங்க அலுவலகம், பிறப்புக்கள், இறப்புக்கள் மற்றும் திருமணங்களைப் பதிவு செய்வதற்கான அரசாங்க அலுவலகம்.

(மாற்றுமுறை: குழுக்களாக பிரிந்து ஒவ்வொரு குழுவும் தமது வரைபடத்தை தனியாக தயார்செய்யும்படி கேட்கவும். முழுமையான பின்னூட்டத்துடன் நிறைவு செய்யவும். 20 நிமிடங்கள் மேலதிகமாக.)

- ***கதாபாத்திரங்களுடனான நகர்வு விளக்கப்படத் தாள்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள்***
  கீழ்வரும் கதாபாத்திரங்கள் எழுதப்பட்டுள்ள 1-2 வரையான நகர்வு விளக்கப்படத் தாள்களைத் தயாரித்துக் கொள்ளுங்கள். அடிக்கோடிட்டுள்ள எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ள சொற்களை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாக உங்களுடைய நாட்டின் சூழமைவிற்கு பொருத்தமான மதங்களின் பெயர்களை சேர்த்துக் கொள்ளுங்கள். உதாரணமாக, 'சிறுபான்மை பெண்' என எழுதப்பட்டிருப்பதற்கு பதிலாக நீங்கள், Baha'i பெண் என எழுத முடியும். ஒவ்வொருவரும் சிறிது தொலைவிலிருந்து வாசிக்கக்கூடியவாறு எழுத்துக்களை பெரியதாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

***கதாபாத்திரங்கள்***

- ***பெரும்பான்மைக்குழுவின்*** ஆண் பிள்ளை/ஆண்
- ***பெரும்பான்மைக்குழுவின்*** பெண் பிள்ளை/பெண்
- ***பெரும்பான்மைக்குழுவின்*** மதத்தலைவர்
- அளவில் ***பெரிய சிறுபான்மைக்குழுவின்*** ஆண் பிள்ளை/ஆண்
- அளவில் ***பெரிய சிறுபான்மைக்குழுவின்*** பெண் பிள்ளை/பெண்
- அளவில் ***பெரிய சிறுபான்மைக்குழுவின்*** மதத்தலைவர்
- அளவில் ***சிறிய சிறுபான்மைக்குழுவின்*** ஆண் பிள்ளை/ஆண்
- அளவில் ***சிறிய சிறுபான்மைக்குழுவின்*** பெண் பிள்ளை/பெண்
- அளவில் ***சிறிய சிறுபான்மைக்குழுவின்*** மதத்தலைவர்
- ***பெரும்பான்மை மதத்திலிருந்து சிறுபான்மை மதத்திற்கு*** மாறுகின்ற பெண்
- ***சிறுபான்மை மதத்திலிருந்து பெரும்பான்மை மதத்திற்கு*** மாறுகின்ற ஆண்
- சமூக ஊடக பதிவொன்றினூடாகத் தனது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ள நாத்திக ஆண்
- வேறுபட்ட மதங்களுக்கிடையில் திருமணம் செய்துள்ள தம்பதிகள் (மதங்களைக் குறிப்பிடுக. அத்துடன் அவ் ஆண் மற்றும் பெண் தற்போது கொண்டிருக்கின்ற மதத்தினையும் குறிப்பிடுக)
- சவால் செய்பவர்: ***பெரும்பான்மை*** கலாசார நியமங்களுக்கெதிரான நடத்தை/ அப்பிராயங்களைக் கொண்டுள்ள ***பெரும்பான்மை*** பெண்
- விமர்சிப்பவர்: மத அபிப்பிராயங்கள் அல்லது நடைமுறைகள் அல்லது மத செயற்பாட்டாளரொருவரின் நடத்தை அல்லது அரசு மதத்தினை எவ்வாறு கையாள்கின்றது என்பது தொடர்பாக விமர்சிக்கின்ற ஒரு நபர்

அமர்விற்கு முன்னரே, வரைபடம் மற்றும் கதாபாத்திரங்கள் வரையப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாள்களை சுவரில் ஒட்டுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 10 நிமி

- ***நகர்வு விளக்கப்படத்தாளிலுள்ள 'வரைபடத்தினை' முன்வையுங்கள்***

  நகர்வு விளக்கப்படத் தாளிலுள்ள வரைபடத்தினைச் சுற்றி அரைவட்ட வடிவில் நிற்குமாறு குழுவிற்கு கூறுங்கள். கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:
  - நபர்கள் திட்டவட்டமான சந்தர்ப்பங்களில் மற்றும் இடங்களில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவர்கள் பேருந்து அல்லது சமூக ஊடகத்தில் வெறுப்புப் பேச்சினையும், தொழிலில் பாரபட்சத்தினையும், அரசுடனான - கொள்கைகள் மற்றும் சட்டங்கள், உள்ளூர் அதிகாரிகள் அல்லது பொலிஸ் படையினருடனான - ஊடாடலின்போது பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர்.
  - இத்தகைய சில இடங்கள் அல்லது சந்தர்ப்பங்களை இவ் 'வரைபடத்தில்' காணலாம். (நீங்கள் வரைபடத்தில் வரைந்துள்ள/எழுதியுள்ள இடங்களைப் பட்டியற்படுத்துங்கள்).
  - இவ்வரைபடமானது எங்களது நகரம் அல்லது பிரதேசத்தினை எடுத்துக்காட்டுகின்றது, ஆனால் நாங்கள் மிகவும் பரந்தளவில் எமது நாடு பற்றியும் சிந்திக்க முடியும். நாங்கள் சிந்தனைக்கான, மனசாட்சிக்கான மற்றும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான பிரச்சினைகளை இவ்வரைபடத்தில் விவரணையாக்கம் செய்யப்போகின்றோம்.

- ***கதாபாத்திரங்களை முன்வையுங்கள்***

  எங்களுடைய விவரணையாக்கமானது, எமது வரைபடத்திலுள்ள ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட இடங்களில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பானப் பிரச்சினைகளை எதிர்கொள்ளக்கூடிய கதாபாத்திரங்களிடமிருந்து ஆரம்பிக்குமென விளக்குங்கள்.

  நகர்வு விளக்கப்படத் தாளிலுள்ள கதாபாத்திரங்களின் பட்டியலை வாசியுங்கள். பிரச்சினைகளை எதிர்கொள்ளக்கூடிய ஏதேனும் கதாபாத்திரங்கள் தவறவிடப்பட்டுள்ளனவா எனக் கேட்டு, குழு பொருத்தமானதெனக் கருதுகின்ற கதாபாத்திரங்களை சேர்த்துக் கொள்ளுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 50 நிமி

- ***சிந்தியுங்கள்*** (5 நிமி)

  தங்களுடைய நாட்டில்/சமுதாயத்தில் சிந்தனைக்கான, மனசாட்சிக்கான மற்றும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்ளக்கூடியோரென பங்குபற்றுநர்கள் நினைக்கின்ற கதாபாத்திரமொன்றினை அமைதியாக எடுக்குமாறு அனைவருக்கும் கூறுங்கள்.

  பின்னர் 'வரைபடத்தினைப்' பார்த்து கீழ்வரும் வினாக்கள் தொடர்பாக 3 நிமிடங்கள் வரையில் சிந்திக்குமாறு கூறுங்கள்: நீங்கள் தெரிவு செய்துள்ள கதாபாத்திரம் தன்னுடைய அபிப்பிராயங்கள் அல்லது மத அடையாளம், நடைமுறைகள் அல்லது நம்பிக்கைகளின் காரணமாக வரைபடத்திலுள்ள எவ்விடங்களில் பிரச்சினைகளை எதிர்கொள்வார்கள்? அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் என்ன?

  குற்றவாளிகள் மீது கவனம் செலுத்துவதை விட, மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களின் அனுபவங்களை வரைபடமாக்குவதே பணி என்பதை தெளிவாக உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

- ***பகிர்ந்துக் கொள்ளுங்கள் மற்றும் ஆவணப்படுத்துங்கள்*** (45 நிமி)
  1. பங்குபற்றுநரொருவரிடம் அவர் தெரிவு செய்துள்ள கதாபாத்திரம் யார் மற்றும் அக் கதாபாத்திரம் வரைபடத்திலுள்ள எவ்விடங்களில் பிரச்சினைகளை எதிர்க்கொள்ளும் மற்றும் அவை எத்தகையப் பிரச்சினைகள் என மிகச் சுருக்கமாக கூறுமாறு சொல்லுங்கள்.
     நகர்வு விளக்கப்படத் தாள்களிலுள்ள இடங்களுக்கு அருகில் அக்கதாபாத்திரம் மற்றும் அக்கதாபாத்திரம் எதிர்க்கொள்கின்ற பிரச்சினைகளை சுருக்கமாக எழுதிக் கொள்ளுங்கள். உதாரணமாக, வேறுபட்ட மதங்களுக்கிடையில் திருமணம் செய்துள்ள தம்பதிகள்-பேருந்துக்கு அண்மித்த துன்புறுத்தல்கள்
     இரண்டு நிமிடங்களுக்கு மேலாக பகிருபவரை இடைநிறுத்துங்கள், அவர் எண்ணியிருந்தவற்றுள் ஒரு சில இடங்கள்/பிரச்சினைகளையே அவர் கூறியிருந்தபோதிலும், ஏனையவர்களும் பங்களிப்பதற்கு நேரம் வழங்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அவரை இடைநிறுத்துங்கள்!
  2. இக்கதாபாத்திரத்தினை வேறு யாராவது தெரிவு செய்துள்ளார்களா என்றும், அவ்வாறு தெரிவு செய்திருப்பின் இக்கதாபாத்திரம் தொடர்பாக சேர்க்கப்பட வேண்டிய மேலதிக விடயங்கள் ஏதேனும் உள்ளனவா என்றும் கேளுங்கள். இந்நேரத்தில், கலந்துரையாடல் மற்றும் கதைகூறல்கள் இருப்பின் அவற்றை ஊக்கப்படுத்துங்கள்.
  3. வேறு கதாபாத்திரங்கள் இதே இடங்களில் இதே பிரச்சினைகளை எதிர்கொள்வார்களா என கேளுங்கள். இக்கதாபாத்திரங்களையும் குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு அருகே குறித்துக் கொள்ளுங்கள்.

மற்றுமொரு நபர் தெரிவு செய்துள்ள கதாபாத்திரம் தொடர்பாக கேள்வி கேட்கும் மேலுள்ள 1-3 வரையான விடயங்களை மீளச் சொல்லுங்கள். ஒதுக்கப்பட்டுள்ள 45 நிமிடங்களில் 10 நிமிடங்கள் மீதமாகின்ற வரையில் கதாபாத்திரங்கள் தொடர்பாகக் கேட்பதனைத் தொடருங்கள். அந்நேரம் முடிந்ததும், இதுவரையில் கலந்துரையாடப்படாத, வரைபடத்தில் சேர்க்கவேண்டிய பிரச்சினையொன்று உள்ளதா என்றும், அவ்வாறு இருப்பின், அதனை வரைபடத்தின் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட கதாபாத்திரத்துடன் பதிவு செய்யுமாறும் கூறுங்கள். இறுதி சில நிமிடங்களை ஒவ்வொருவராலும் சேர்க்கப்பட்ட விடயங்களை வாசிப்பதற்கு செலவிடுங்கள்.

இப்பயிற்சியானது உற்சாகப்படுத்தும் உத்தியொன்றுக்கான முழுக்குழு கலந்துரையாடலுடன் தொடரும்.

## 5. *உற்சாகப்படுத்துவதற்கான செயற்பாடு: நடக்கவும் மற்றும் நிற்கவும்* 5 நிமி



*முழுக்குழுப் பயிற்சி*

***விவரணம்***

பங்குபற்றுநர்கள் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி சொல்லப்படுவனவற்றுக்கு எதிர்மறையான விடயங்களைச் செய்தல் வேண்டும்.

***நோக்கம்***

உற்சாகத்தின் அளவினை அதிகரிப்பதற்கு மற்றும் பிரச்சினைகளை மையப்படுத்துகின்ற அமர்வில் பங்குபற்றுநர்களின் பார உணர்வினை தளர்வாக்குவதற்கு.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது***

பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றுங்கள்:

- அறை முழுவதும் பரவியிருக்குமாறு உங்களது குழுவிற்கு சொல்லுங்கள்.
- நீங்கள் 'நடக்கவும்' என சொல்கின்றபோது நடக்கும்படியும், 'நில்லுங்கள்' என சொல்கின்றபோது நிற்கும்படியும் பங்குபற்றுநர்களை அறிவுறுத்துங்கள். 20 தொடக்கம் 30 செக்கன்களுக்கு, இக்கட்டளைகளை, ஏதேனுமொரு ஒழுங்கில் மாறி மாறிச் சொல்லுங்கள்.
- 'நடக்கவும்' என்பதன் பொருள் நிற்க வேண்டுமென்றும் 'நிற்கவும்' என்பதன் பொருள் நடக்க வேண்டுமென்றும் மாறியுள்ளதாக அறிவியுங்கள், ஆகவே, 'நடக்கவும்' என்பது நிற்றலாகும் என்பதுடன் 'நிற்கவும்' என்பது நடத்தலாகும். இன்னுமொரு 30 செக்கன்களுக்கு இக்கட்டளைகளைக் கூறுங்கள்.
- புதிய இரண்டு கட்டளைகளை அறிவியுங்கள்: 'பெயர்' என்பதனை அவர்கள் கேட்கின்றபோது, ஒவ்வொருவரும் தங்களது பெயர்களை உரத்துச் சொல்ல வேண்டும் என்பதுடன் 'கை தட்டுங்கள்' என்பதனை அவர்கள் கேட்கின்றபோது அனைவரும் ஒரு தடவை கைதட்ட வேண்டும். இதனை அவர்கள் செய்கின்றபோது, ஒன்றில் நடத்தலை அல்லது நிற்றலை அவர்கள் தொடர்ச்சியாக செய்து கொண்டே இருக்க வேண்டும்.
- இவ்விரண்டு கட்டளைகளையும் 'நடக்கவும்' மற்றும் 'நிற்கவும்' ஆகிய இரு கட்டளைகளுடன் (இவற்றின் பொருள் மாற்றப்பட்டவாறே உள்ளது) செய்யுங்கள்.
- இறுதியாக, கடைசியாக நீங்கள் சொன்ன இரு கட்டளைகளினதும் பொருள் மாற்றப்பட்டுள்ளதாக அறிவியுங்கள் - அதாவது, நீங்கள் 'பெயர்' என கூறுகின்றபோது கைதட்ட வேண்டுமென்பதுடன், 'கை தட்டுங்கள்' என கூறுகின்றபோது பெயரை உரத்துச் சொல்ல வேண்டும்.
- ஐந்து நிமிடங்கள் இருக்கின்றவரையில் தொடர்ச்சியாக விளையாடுங்கள்.

இந்தப் பயிற்சிக்கான ***காணொளி பயிற்சி பதிவினை*** இங்கே காணவும்.

## 6. பகுப்பாய்வு பயிற்சி: எமது நகரத்தின ம. அ. ந. சு இன் வரைபடம்: பகுதி – 2   25 நிமி

*முழுக்குழு கலந்துரையாடல்*

### விவரணம்

இது உற்சாகப்படுத்துகின்ற செயற்பாட்டிற்கு முன் இடம்பெற்ற பயிற்சியின் தொடர்ச்சியாகும். பயிற்சியின் இப்பகுதியில், விவரணையாக்கம் செய்கின்ற பயிற்சியின்போது பங்குபற்றுநர்கள் மேற்கொண்டிருந்த அவதானங்களை, முன்வைப்பின்போது அறிமுகப்படுத்தப்பட்ட 3-கட்டங்களையுடைய படிமமொன்றினைப் பயன்படுத்தி அவர்கள் பகுப்பாய்வு செய்வார்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 5 நிமி

வரைபடமுள்ள நகர்வு விளக்கப்படத் தாளுக்கு முன்பாக அரைவட்ட வடிவில் அமருமாறு அனைவருக்கும் கூறுங்கள்

- விவரணையாக்கத்தினூடாக கண்டறியப்பட்ட முடிவுகளை, முன்வைப்பின்போது கற்றுக்கொண்ட படிமத்தினைப் பயன்படுத்தி பங்குபற்றுநர்கள் பகுப்பாய்வு செய்யப் போகிறார்கள் என குழுவிற்கு கூறுங்கள்.
- அனைவருக்கும் மூன்று கட்டங்களும் நினைவிருக்கின்றதா என கேளுங்கள். அவர்கள் பதிலளித்தபின்னர், பவர்வொயின்ட் ஸ்லைட் 13 இனை அல்லது அச்சொற்கள் எழுதப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாளினை மீண்டும் காட்டுங்கள்.
- தவறானத் தகவல்கள் என்றால் என்ன என அவர்களுக்கு ஞாபகமிருக்கின்றதா என கேளுங்கள். அவசியமாயின், ஞாபகப்படுத்துங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 20 நிமி

கீழ்வரும் வினாக்களை கேளுங்கள். அத்துடன் கலந்துரையாடலின் பிரதானக் கருத்துக்களை வெறுமையான நகர்வு விளக்கப்படத் தாள்களில் எழுதிக்கொள்ளுங்கள். கலந்துரையாடலின்போது, மேலதிகமான பிரச்சினைகள் அல்லது கதாபாத்திரங்கள் கூறப்பட்டால், அவற்றை வரைபடத்தில் குறித்துக் கொள்ளுங்கள்.

- எங்களுடைய வரைபடத்தில் தவறானத் தகவல்கள், பாரபட்சம் மற்றும் வன்முறைக்கான உதாரணங்கள் உள்ளனவா?
- நாங்கள் அடையாளப்படுத்திய பிரச்சினைகளினால் யார் பாதிக்கப்படுகின்றார்கள்?
  - எமது சமுதாயத்தில் யார் குறிப்பாக பாதிப்பிற்குட்படக் கூடியவர்களாயுள்ளனர்?
  - ஆண்கள் மற்றும் ஆண் பிள்ளைகளைவிட பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் வேறுபட்ட பிரச்சினைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியத் தன்மைகளை எதிர்கொள்கின்றனரா?
- அடிக்கடி நிகழும் தன்மை, அளவு மற்றும் தாக்கத்தின் அடிப்படையில் இப்பிரச்சினைகள் எவ்வளவு பாரதூரமானவை?
  - அடிக்கடி நிகழும் தன்மை: நாங்கள் அடையாளப்படுத்தியுள்ள பிரச்சினைகள் அவ்வப்போது நிகழ்கின்றனவா அல்லது அடிக்கடி நிகழ்கின்றனவா? அவற்றுள் எவையேனும் திட்டவட்டமான ஒழுங்குமுறையினை உடையனவா - சமூகம் செயற்படுகின்ற முறையினுள் கட்டியெழுப்பப்பட்டுள்ளனவா?
  - அளவு: இப்பிரச்சினைகளினால் குறைவான மக்கள் பாதிக்கப்படுகின்றனரா அல்லது அதிகளவான மக்கள் பாதிக்கப்படுகின்றனரா? எந்தப் பிரச்சினைகள் அதிகளவான நபர்களைப் பாதிக்கின்றன?
  - தாக்கம்: எந்தப் பிரச்சினைகள் பாதிக்கப்பட்டவர்கள் மீது பாரதூரமானத் தாக்கத்தினைக் கொண்டுள்ளன? குறிப்பிட்ட பிரச்சினையினால் குறைவான நபர்கள் பாதிக்கப்படுகின்றபோதிலும், அம்மீறல் அவர்கள் மீது பேரழிவான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றபோது, அது உண்மையில் பாரதூரமான பிரச்சினையொன்றாகும் என்பதனை பங்குபற்றுநர்களுக்கு ஞாபகப்படுத்துங்கள்.
- யார் பிரச்சினைகளுக்கு பங்களிப்பு செய்கிறார்கள்?
  - அரசு இம்மீறல்களை முனைப்புடன் புரிகின்றதா, ஏனையோரால் உருவாக்கப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் செயலாற்றாது உள்ளதா அல்லது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை மேம்படுத்துவதற்காக முனைப்புடன் செயற்படுகின்றதா?
  - நாங்கள் வேண்டுமென்றே அல்லது எம்மையறியாமல் இப்பிரச்சினையில் பங்கு கொண்டுள்ளோமா?
- குறிப்பிட்ட கதாபாத்திரங்களில் - தனிநபர்கள் அல்லது மத சமுதாயங்கள் - யாருடைய பிரச்சினையினையேனும் நாங்கள் முறையாக அறிந்து கொள்ளாமல் அல்லது புரிந்துகொள்ளாமல் இருக்கின்றோமா? நாங்கள் அவர்களின் அனுபவங்களைக் கண்டுபிடித்து அவற்றை எமது வரைபடம் மற்றும் பகுப்பாய்வில் சேர்த்துக் கொள்ள முடியுமா?
- இப் பிரச்சினைகளை அடையாளப்படுத்துகின்றபோது நீங்கள் எவ்வாறு உணர்கின்றீர்கள்?

கலந்துரையாடலின் போது, பங்கேற்பாளர்களால் எழுப்பப்பட்ட எடுத்துக்காட்டுகள் ம. அ. ந. சு மீறல்கள் எவ்வாறு மற்ற உரிமைகளையும் மீறுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றன என்பதை முன்னிலைப்படுத்த முயற்சிக்கவும். உதாரணமாக பெண்களின் உரிமைகள், கல்வி அல்லது வேலைவாய்ப்புக்கான உரிமைகள். நமது மனித உரிமைகள் அனைத்தும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன என்பதை உணர்த்துங்கள். எமக்கு அவைகள் அனைத்தும் தேவை!

***குறிப்பு!*** முடியுமாயின், எமது நகரத்திற்கான ம. அ.ந.சு இன் வரைபடம் வரையப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாள்களை சுவரில் ஒட்டப்பட்டவாறே வைத்திருங்கள். இனிவருகின்ற அனைத்து அமர்வுகளிலும் அவை உங்களுக்கு தேவைப்படும்.

***குறிப்பு***

இதற்கு நீங்கள் மிக இலகுவாக 20 நிமிடத்தினை விட அதிகமான நேரத்தினைப் பயன்படுத்தலாம். பல வினாக்கள் தொடர்பில் கலந்துரையாடும்பொருட்டு, குறிப்பிட்ட ஒரு வினாவினைக் கலந்துரையாடுவதற்கு மிக நீண்ட நேரத்தினை செலவழிக்க வேண்டாம். ‘நல்லனவற்றின் பின்னல்’ என்ற பயிற்சியினை நீக்குவதனூடாக, நீங்கள் இக்கலந்துரையாடலுக்கு அதிகளவான நேரத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

### *7. நிறைவு செய்கின்ற கருத்துக்கள் மற்றும் மாற்றமுண்டாக்குநர்களின் கதை* 5 நிமி

குறும் பேச்சு

***விவரணம்***

இந்த சிறிய கலந்துரையாடலானது, தனது ம.அ.ந.சு இற்காக போராடிய ஒரு சாதாரண நபரினது கதையினைப் பயன்படுத்தி மாற்றமொன்றினை உருவாக்குவது பற்றி கூறுவதுடன், இனிவரும் அமர்வுகளில் பங்குபற்றுநர்கள் எவற்றை எதிர்பார்க்கமுடியும் என்பதனையும் கூறுகின்றது.

***என்ன சொல்ல வேண்டும்***

கீழ்வரும் விடயங்களைக் கூறுங்கள். சாத்தியமாயின், Emina இன் கதையினை எடுத்துக் காட்டுவதற்காக, பவர்பொயின்டின் 14-19 வரையான ஸ்லைடுகளை (அல்லது அவற்றின் அச்சுப் பிரதிகளை) பயன்படுத்துங்கள்.

- உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியின் பகுதி 1 இலுள்ள 5 அமர்வுகளினையும் நாம் இப்போது நிறைவு செய்து விட்டோம்.
- இவ் அமர்வுகளில், நாம், மனித உரிமைகள், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம், அடையாளம், சிறப்புரிமை மற்றும் பாதக நிலை மற்றும் எமது நாட்டில் அல்லது சமுதாயத்தில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் நிலைப்பாடு தொடர்பாகப் பார்த்தோம். குறிப்பாக, இன்றைய அமர்வில், நபர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தினோம்.
- பிரச்சினைகள் என்ன அல்லது எவை மாற்றப்பட வேண்டும் என்பது குறித்து நாங்கள் எப்போதும் உடன்படாதிருக்கலாம். ஆனால், நாங்கள் உடன்படக்கூடிய விடயங்கள் மற்றும் நாம் அனைவரும் காண விரும்புகின்ற மாற்றங்கள் உள்ளன.
- நாங்கள் அடையாளப்படுத்தியுள்ள பிரச்சினைகளையெல்லாம் கொண்டு பாரக்கின்றபோது, எங்களுக்கு இரண்டு தெரிவுகள் உள்ளன: சோர்வாக மற்றும் அதிகாரமற்று உணர்தல் அல்லது மாற்றத்தினை ஏற்படுத்த முயற்சிப்பதற்காக திட்டவட்டமான எதையேனும், அது சிறியதாக இருப்பினும், அடையாளப்படுத்தல். எங்களுடைய சொந்த சமுதாயங்களில் மாற்றமுண்டாக்குநர்களாக வருவதற்காக.
- பக்கம் 109 இலுள்ள Emina இன் கதையினை வாசியுங்கள். அத்துடன் 14-19 வரையான பவர்பொயின்ட் ஸ்லைடுகளை (அல்லது அவற்றின் அச்சுப் பிரதிகளை) காட்டுங்கள்.
- Emina இன் செயற்பாட்டிற்காக அவருக்கும், பயிற்சி நெறியின் பகுதி 1 இனை நிறைவு செய்தமைக்காக எங்களுக்கும் பலத்த கரகோஷங்களை எழுப்புவோம்! இப்பயிற்சி நெறியின் பகுதி 2 இல், நாம் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் - நாங்கள் பயன்படுத்தக்கூடிய முறைகள் யாவை மற்றும் அவற்றை செயற்திட்டங்களாக ஆக்குதல் என்பனவற்றில் கவனம் செலுத்துவோம்.

## பயிற்சி நெறியின் 1-5 வரையான அமர்வுகளை மாத்திரம் செய்கின்ற குழுக்களுக்கான மேலதிக உள்ளடக்கங்கள்

நீங்கள் இப்பயிற்சி நெறியின் பகுதி 1 இனை மாத்திரமே நடத்துவீர்களாயின், தயவுசெய்து, கீழ்வரும் ஆக்கக்கூறுகளை அமர்வு 5 இன் இறுதியில் உள்ளடக்கிக் கொள்ளுங்கள். இவ் அமர்வினை 20 நிமிடங்கள் நீடிப்பதற்கு திட்டமிடுங்கள் அல்லது பயிற்சி 1: நல்லனவற்றின் பின்னல் இனை நீக்குவதுடன் விவரணையாக்கப் பயிற்சியிலிருந்து 5 நிமிடங்களை குறைத்துக் கொள்ளுங்கள்.

### *8. மதிப்பீட்டு பயிற்சி: தலை, இதயம், கைகள* 15 நிமி

தனிப்பட்ட பயிற்சி

இவ் எளிய தனிப்பட்ட மதிப்பீட்டுப் பயிற்சியானது, பங்குபற்றுநர்கள் பயிற்சி நெறியிலிருந்து எவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பது தொடர்பில் சிந்திப்பதற்கு அவர்களுக்கு உதவும்.

***வளங்கள்***

- ஒரு பங்குபற்றுநருக்கு ஒன்று என்றரீதியில், 'தலை-இதயம்-கைகள்' பயிற்சிக்கான கையேடுகள்.
- ஒரு பங்குபற்றுநருக்கு ஒன்று என்றரீதியில் பேனைகள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 2 நிமி
ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் ஒரு கையேட்டினை வழங்குங்கள்.
பங்குபற்றுநர்கள் இப்பயிற்சி நெறியிலிருந்து எவ்விடயங்களை தம்முடன் வீட்டிற்கு எடுத்து செல்கின்றனர் என்பது தொடர்பாக சிந்திப்பதற்காக தனிப்பட்ட மதிப்பீட்டுப் பயிற்சியொன்றினை செய்யப் போகிறார்கள் என விளக்குங்கள். பயிற்சி நெறியினை மதிப்பீடு செய்வதற்கு உங்களுக்கு உதவக்கூடிய வகையில் இத்தாள்களை நீங்கள் சேகரித்துக் கொள்வீர்களா அல்லது பங்குபற்றுநர்கள் இதனை ஒரு ஞாபகமாக வீட்டிற்கு எடுத்துச் செல்வார்களா என்பது தொடர்பில் தெளிவாக இருங்கள். நீங்கள் இத்தாள்களைச் சேகரிக்கப் போகின்றீர்கள் என்றால், நபர்கள் தங்களுடைய தனிப்பட்ட சிந்தனைகளை எழுதுதலை தவிர்த்தல் முக்கியமானதாகும்!

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 13 நிமி
கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக சிந்திக்குமாறு பங்குபற்றுநர்களுக்கு கூறுங்கள்:

- அறிவு மற்றும் அபிப்பிராயங்கள் தொடர்பில் நீங்கள் பெற்றுக் கொண்டுள்ள விடயங்கள் தொடர்பாக சிந்தியுங்கள். உங்களுடைய சிந்தனைகளை தலையில் எழுதிக் கொள்ளுங்கள்.
- உங்களைப்பற்றிய உணர்வுகள், கண்டறியப்பட்டவைகள் அல்லது உங்களது புதிய நடத்தைகள் பற்றி சிந்தியுங்கள். இவற்றை இதயத்தில் எழுதிக் கொள்ளுங்கள்.
- நடவடிக்கையொன்றினை எடுப்பதற்கு அல்லது எதேயேனுமொன்றை மாற்றுவதற்கு நீங்கள் கொண்டுள்ள யோசனைகள் யாவை என சிந்தியுங்கள். இவற்றைக் கைகளில் எழுதிக் கொள்ளுங்கள்.
- முடியுமானளவு குறிப்பாக இருப்பதற்கு முயற்சியுங்கள். இதனை செய்வதற்கு அவர்களுக்கு 5 நிமிடங்களை வழங்குங்கள்.

உங்களுடைய குழுவின் அளவினைப் பொறுத்து, ஒன்றில் குழுவைச்சுற்றி வட்டமாகச் சென்று ஒவ்வொரு நபரிடமும் ஒரு விடயத்தினைப் பகிர்ந்து கொள்ளுமாறு கூறுங்கள் அல்லது பங்குபற்றுநர்களை சோடிகளாகி அவர்களுடைய பதில்களை பகிர்ந்து கொண்டு கலந்துரையாடுங்கள். (8 நிமி)

(மாற்றீடாக, மூன்று நகர்வு வரைபட தாள்களில் தனித்தனியாக தலை, இருதயம், மற்றும் கைகளை வரையுங்கள். பங்குபற்றுனர்களை ஒட்டக்கூடிய குறிப்பு எழுதும் தாளில் மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான விடைகளை எழுதி இந் நகர்வு வரைபட தாளில் ஒட்டும்படி கூறுக. பதில்களை முழுக்குழுவாக கலந்துரையாடுக.)

## 9. நன்றிகள், சென்றுவருக 5 நிமி

இப்பயிற்சி நெறியின்போது, பங்குபற்றுநர்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொண்டார்கள் என்பதுடன் இச்செயன்முறைக்காக அவர்களின் நேரம் மற்றும் சக்தியினை வழங்கியுள்ளனர். இது, அவர்களுக்கு நன்றி சொல்வதற்கான மற்றும் அவர்கள் பயிற்சி நெறியின்போது விருத்தி செய்து கொண்ட புதிய அபிப்பிராயங்கள், அறிவு, திறன்கள் மற்றும் உறவுகளைக் கொண்டாடுவதற்கான நேரம்!
நன்றாக செய்தீர்கள் என்று சொல்வதற்காகவும், நன்றி சொல்வதற்காகவும் சிறிய கொண்டாட்ட நிகழ்வொன்றினைத் திட்டமிடுங்கள். நீங்கள் பாடலொன்றினைப் பாடுவதற்கு, சில வார்த்தைகளைப் பகிர்ந்துக் கொள்வதற்கு, பிரார்த்தனை செய்வதற்கு, நடனமாடுவதற்கு விரும்பலாம். நீங்கள் விரும்பினால், பங்குபற்றுநர்களுக்கு வழங்குவதற்கான ஒரு சான்றிதழ் காணப்படுகின்றது. நீங்கள் அதனை அச்சுப்பிரதி செய்து பங்குபற்றுநர்களுக்கு வழங்க முடியும்.

***மூலம்***
நடக்கவும் மற்றும் நிற்கவும் Mark Collard, Playmeo. www.playmeo.com/activities/energizer-warm-up-games/walk-stop/

# விளக்கப்பட எழுத்துப்பிரதி

## விடயங்கள் எவ்வாறு மோசமடைகின்றன (மற்றும் மேம்படுகின்றன)


*அமர்வு 5 இற்கான எழுத்துப்பிரதி அமர்வின் பவர்பொயின்ட் இன் 3-13 வரையான ஸ்லைடுகளில் விளக்கப்பட்டுள்ளது.*

**அறிமுகம்**



இறுதி அமர்வில்:

- மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல்கள் எவ்வாறு காணப்படும் மற்றும் அவை எவ்வாறு மக்களின் வாழ்வினைப் பாதிக்கின்றன போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தோம்.
- யார் மீறல்களைப் புரிகின்றனர்- சட்டம் மற்றும் அதிகாரிகளின் செயல் அல்லாது செய்யாமையினூடாக அரசு அல்லது சமுதாயத்திலுள்ள நபர்கள்- என்பது பற்றி சிந்தித்திருந்தோம்,
- அத்துடன், இம்மீறல்கள் எவ்வாறு காணப்படும் என்பதனை ஆராய்வதற்கு மற்றும் அவற்றை அடையாளப்படுத்த பயிற்சி செய்வதற்காக நாடகத்தினை ஒரு கருவியாகப் பயன்படுத்தியிருந்தோம்.



இப்போது நாங்கள் மீறல்கள், மிதமான நிலையிலிருந்து எவ்வாறு கேடான நிலைக்கு மற்றும் மிக மோசமான நிலைக்கு – மற்றும் தனிநபர்களைப் பாதிக்கின்ற அவ்வப்போது நிகழ்கின்ற மீறல்கள் என்ற நிலையிலிருந்து நபர்களின் உரிமைகள் மீது திட்டவட்டமாக ஒழுங்குபடுத்தப்பட்ட, பரந்தளவான மற்றும் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற மீறல்கள் என்ற நிலைக்கு செல்கின்றன என்பது தொடர்பாக சிந்திக்கப்போகிறோம். விடயங்கள் எவ்வாறு மோசமடைகின்றன என்பதனை சிந்திப்பதற்கான ஒரு வழிமுறையானது, தவறானத் தகவல்கள், பாரபட்சம் மற்றும் வன்முறை ஆகிய மூன்று கட்டங்கள் குறித்து சிந்திப்பதாகும்.

**துன்புறுத்தலின் மூன்று கட்டங்கள்**





முதல் கட்டம் தவறானத் தகவல்கள். இக்கட்டத்தில், தனிநபர்கள் அல்லது குழுக்கள் - உதாரணமாக மத சிறுபான்மையினர் பற்றிய ஆதாரமற்ற விரோதங்கள், நிலையான உள எண்ணங்கள் மற்றும் பொய்கள் பரப்பப்படுகின்றன. இவ் ஆதாரமற்ற விரோதங்கள் பல வழிகளினூடாகப் பரப்பப்படுகின்றன- பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடநூல்கள் என்பன பிள்ளைகளுக்கு கற்பிப்பவற்றினூடாக, வானொலி அல்லது சமூக ஊடகங்களினூடாக அல்லது அரசியல்வாதிகளின் உரைகள் அல்லது மதத் தலைவர்களின் பிரசங்கங்களினூடாக.




ஆதாரமற்ற விரோதங்கள் காணப்படாத சமூகமொன்று இல்லை, ஆனால் இவ் ஆதாரமற்ற விரோதங்கள் மற்றும் நிலையான உள எண்ணங்கள் சவாலுக்குட்படுத்தப்படாதபோது, மற்றும் விசேடமாக அவை அரசியல் மற்றும் மதத் தலைவர்களினால் ஊக்குவிக்கப்படுகின்றபோது, அவை சகிப்புத்தன்மையற்ற கலாசாரமொன்றினை உருவாக்குகின்றன என்பதுடன் குழுக்களுக்கிடையிலான குழப்பங்கள் தோன்றுவதற்கு வழி வகுக்கின்றன.

இது இடம்பெறுகின்றபோது, சாதாரண மக்கள், உள்ளூர் அதிகாரிகள் மற்றும் அரசாங்கத்திற்குகூட, ஏனையோரை பாரபட்சத்திற்கு உள்ளாக்க நினைப்பது மற்றும் பேசுவது மாத்திரமல்ல, ஆனால் பாரபட்சம்மிக்க முறைகளில் நடந்துகொள்வது கூட இலகுவானதாகவும் சாதாரணமானதாகவும் மாறுகின்றது. தவறானத் தகவல்கள் பராபட்சத்தினை ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றாக பார்க்கச் செய்கின்றது. அதன் மிகத் தீவிரமான வடிவத்தில், தவறானத் தகவல்கள், பாரபட்சம் மட்டுமல்ல ஏனையோரை நோக்கிய வன்முறையும் ஏற்றுக்கொள்ளத்தக்கது மற்றும் சரியானதும் கூட ஏனைய நபர்களை நம்பச் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன.





பாரபட்சமானது நபர்களை வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் பாதிக்கின்றது. இறுதி அமர்வில், அரச பாரபட்சத்திற்கான உதாரணங்களை- பாரபட்சம்மிக்க குடும்ப மற்றும் தனிப்பட்ட அடையாள சட்டம், பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களினால் சட்டம் அமுல்படுத்தப்படுகின்ற முறையிலுள்ள பாரபட்சம் மற்றும் கல்வி போன்ற சேவை வழங்கலில் காணப்படுகின்ற பாரபட்சம் என்பனவற்றை நாம் பார்த்திருந்தோம். நபர்களின் தொழிலுக்கான அணுகுதலைப் பாதிக்கின்ற தனியார் துறையில் காணப்படுகின்ற பாரபட்சம் தொடர்பான உதாரணங்களையும் நாம் பார்த்திருந்தோம். எந்தவொரு சமூகத்திலும் பாரபட்சம் இல்லாமலில்லை, ஆனால் பரந்தளவான மற்றும் திட்டவட்டமாக ஒழுங்கமைக்கப்பட்ட பாரபட்சமானது அறியாமை மற்றும் சகிப்புத்தன்மையற்ற கலாசாரமொன்றினூடகக் கட்டியெழுப்பப்படுகின்றபோது மாத்திரம் தான் நிலைத்து நிற்கும். பெரும்பான்மை மக்கள் பாரபட்சத்தினை ஏற்றுக்கொள்ளாதபோது, அது தொடர்ச்சியாக இடம்பெறாது.





அத்துடன், தவறானத் தகவல்கள் பாரபட்சத்திற்கான அடித்தளத்தினை உருவாக்குவதனைப்போன்று, தவறானத் தகவல்கள் மற்றும் பாரபட்சம் என்பன இணைந்து வன்முறைக்கான அடித்தளமொன்றினை ஆக்குகின்றன. சமுதாயத்தில் வன்முறை - பொருட்களை சேதப்படுத்தும் கிளர்ச்சிகள் , தொந்தரவு , உடற்சார் வன்முறைக்கான அச்சுறுத்தல்கள் வரையில்- வேறுபட்ட வடிவங்களைக் கொண்டிருக்கலாம். அத்துடன், அரச வன்முறை, எதேச்சாதிகாரமான சிறைத்தண்டனை, சித்திரவதை மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை என்பவற்றினை உள்ளடக்கும்.

## அளவு தடவைகள் மற்றும் தாக்கம்




பிரச்சினையின் மூன்று வடிவங்களும் - தவறானத் தகவல்கள், பாரபட்சம் மற்றும் வன்முறை - பல்வேறுபட்ட அளவுகளிலும் தடவைகளிலும் இடம்பெறலாம், மற்றும் வேறுபட்ட அளவுகளிலானத் தாக்கங்களைக் கொண்டிருக்கலாம். ஒரு மீறலானது சில தனிநபர்களை அல்லது பாரியக் குழுக்களைப் பாதிக்க முடியும். அவை அவ்வப்போது இடம்பெறலாம், வழக்கமாக இடம்பெறலாம் அல்லது திட்டவட்டமாக ஒழுங்கமைக்கப்பட்டதாக இருக்கலாம்- அதாவது அது சமூக முறைமைகள் மற்றும் கட்டமைப்புக்களினுள் கட்டியெழுப்பப்பட்ட ஒன்றாக இருக்கலாம். அத்துடன், அது பாதிக்கப்படுகின்ற நபர்கள் மீது மட்டுப்படுத்தப்பட்டத் தாக்கங்களை அல்லது பேரழிவானத் தாக்கங்களைக் கொண்டிருக்கலாம்.



பல நாடுகளின் அனுபவங்களினடிப்படையில் மிகப் பரந்தளவான மற்றும் பாரதூரமான ஆதாரமற்ற விரோதங்கள் மற்றும் தவறானத் தகவல்கள் என்பன மிகப் பரந்தளவான மற்றும் பாரதூரமான பாரபட்சமாய் உருவாக வாய்ப்பளிப்பதாக எமக்கு சொல்கின்றன. மேலும் இவை இரண்டும் எவ்வளவு பரவலாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு பரவலானதும் கடுமையானதுமான வன்முறைக்கான வாய்ப்புகள் அதிகம். ஒன்று மற்றொன்றிற்கு வழிவகுக்கின்றது. இது எம்மை சோர்வாக உணரச் செய்தாலும், விடயங்கள் எவ்வாறு மோசமான நிலையினை அடைகின்றன என்பது பற்றிய புரிந்துணர்வு, அவை எவ்வாறு சரி செய்யப்படலாம் என்பது பற்றி நாம் சிந்திப்பதற்கு உதவும்.

## இறுதியாக




நாம் சிந்திக்கின்ற முறையிலும், ஒருவரைப்பற்றியொருவர் பேசிக்கொள்கின்ற மற்றும் நடத்துகின்ற முறையிலுமே அனைத்தும் ஆரம்பமாகின்றது. அத்துடன், இது எமது குடும்பங்களில் மற்றும் தனிப்பட்ட வலையமைப்புக்களில் இது குறித்து எம் ஒவ்வொருவராலும் செய்ய முடிந்த விடயமொன்றாக இருக்கின்றது. நாங்கள் இது தொடர்பாக சமுதாய மட்டத்தில் எதையேனும் செய்தலும் சாத்தியமானதே- உதாரணமாக, எங்களுடைய மத சமுதாயங்கள், பாடசாலைகள் மற்றும் தொழிலிடங்களில்.

ஆனால்,இது மட்டும் போதாது. நாம், நபர்களை பாரபட்சப்படுத்துகின்ற மற்றும் தீங்கு விளைவிக்கின்ற உத்தியோக முறைகளையும்- கேடான சட்டங்களிலிருந்து பாடசாலை ஆசிரியர்கள் அல்லது பொலிஸ் அதிகாரிகள் போன்ற அதிகாரிகளின் நடத்தை வரையில்- மாற்ற வேண்டும்.



அத்தகைய ஒரு மாற்றத்தினை சாத்தியமானதாக்குவதற்கு, தங்களுடைய உரிமைகள் பற்றி அறிந்துள்ள மற்றும் அவற்றுக்காக போராடக்கூடிய ஆற்றல்படைத்த சிறுபான்மையினர், மற்றும் மனித உரிமைகளை மதிப்பதற்கான, பாதுகாப்பதற்கான மற்றும் மேம்படுத்துவதற்கான தங்களது பொறுப்புக்களைப் புரிந்துகொண்டுள்ள அரசியல் மற்றும் மதத் தலைவர்கள் எமக்கு தேவை.




இதனை நடைமுறை சாத்தியமானதாக்கல் மெதுவான மற்றும் கடினமான செயன்முறை ஒன்றாகும். அச்செயன்முறையானது, எங்களது சூழமைவினை நாங்கள் பகுப்பாய்வு செய்கின்றபோது மற்றும் பிரச்சினைகளை அடையாளம் காண்கின்றபோது ஆரம்பிக்கின்றது. நாம் அதனை செய்வதற்கு எமக்கு உதவுவதற்காக நாம் இவ் தவறானத் தகவல்கள்- பாரபட்சம்- வன்முறை என்ற இம்மூன்று கட்ட படிமத்தினைப் பயன்படுத்த முடியும்.

**அங்கீகரிப்பு:**
இவ் எழுத்துப்பிரதியானது, Johan Candelin இனால் ஆக்கப்பட்டுள்ள துன்புறுத்தலின் மூன்று கட்டங்கள் படிமத்தினைத் தழுவியுள்ளது.

# மாற்றமுண்டாக்குநர்களின் கதை

***அமர்வு 5 இன் நிறைவு செய்கின்ற கருத்துக்களின் ஒரு பகுதியாக கீழ்வரும் கதை வாசிக்கப்படும். அமர்வின் பவர்பொயின்ட் ஸ்லைடுகளில் 14–19 வரையான ஸ்லைடுகளில் இது விளக்கப்பட்டுள்ளது.***

## Emina இன் கதை, பொஸ்னியா ஹெர்சிகோவினா

*கதை*

1995 இல் பொஸ்னியா யுத்தம் முடிவடைந்தபோது, நாட்டின் மதத் தோற்றம் வியத்தகு முறையில் மாற்றமடைந்திருந்தது. முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருந்த இடங்களில் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையினராகவும், அதேபோல் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையினராக இருந்த இடங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராகவும் மாறியிருந்தனர். இன மற்றும் மத குழப்பங்கள் தொடர்ந்தும் காணப்பட்டன என்பதுடன் தங்களுடைய சொந்த இடங்களுக்கு வந்த மக்கள் விசேடமாக பாதிப்புக்குள்ளாகின்ற அபாயத்தினைக் கொண்டிருந்தனர்.

இவர் Emina. இவர் ஒரு சாதகமான மாற்றத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும் என விரும்பினாள், ஆகவே, Nahla என்றழைக்கப்படும் பொஸ்னியன் அரச சார்பற்ற நிறுவனமொன்றால் நடத்தப்படும் சிறிய மனித உரிமைகள் பயிற்சி நெறி ஒன்றினை அவள் கற்றாள்.

“நான் அந்த பயிற்சி நெறியிலிருந்து அதிக விடயங்களைக் கற்றுக்கொண்டேன். நான் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் என்றால் என்ன என்பதனை புரிந்து கொண்டதுடன் எனது சொந்த சூழமைவில் இடம்பெற்ற மீறல்களை அடையாளங்காண ஆரம்பித்தேன். நான் சமூக ஊடகங்களில் வெறுப்புப் பேச்சு பற்றி அறிக்கையிட ஆரம்பித்தேன்.”

அப்பயிற்சி நெறிக்கு பின்னர், Nahla என்ற அவ் அமைப்பு Emina இற்கு, மதிப்புமிக்க மற்றும் நம்பத்தகு உள்ளூர் மற்றும் தேசிய ஊடகங்களின் அறிக்கைகளைப் பயன்படுத்தி, நாட்டில் ஒவ்வொரு வருடமும் இடம்பெறுகின்ற மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான மீறல் சம்பவங்கள் அனைத்தையும் பட்டியலொன்றாகத் தொகுத்து ஆவணப்படுத்துகின்ற ஒரு தன்னார்வ இளைஞர் குழுவினை அறிமுகம் செய்து வைத்தது.

“சம்பவங்களை வகைப்படுத்திக்கொள்வதற்காக நாம் எங்களிடமுள்ள ஒரு தொகுதி வினாக்களைப் பயன்படுத்துவோம் – உதாரணமாக, எந்த சமுதாயம் பாதிக்கப்பட்டுள்ளது மற்றும் மீறல்களின் வகை – அச்சுறுத்தல், ஆதனங்கள் மீதான தாக்குதல் அல்லது நபர்கள் மீதான தாக்குதல் அல்லது அதுபோன்றவை” என Emina கூறுகின்றார்.

குழுவானது அவர்களது அறிக்கைகளை பொஸ்னியாவிலுள்ள அதிகாரிகளுக்கும் ஊடகங்களுக்கும் மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பிற்கான அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகளுக்கும் அனுப்புகிறது. இது பெரும்பாலும், தன்னார்வளர்கள் தமது வருடாந்த அறிக்கையில் உள்ளடக்குகின்ற தகவல்களை உள்ளடக்கும்.

“நாம் செய்கின்ற செயற்பாடுகள் எவ்வளவு சிறிதாக இருந்தாலும் கூட அவை அனைத்தும் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றன என நான் நினைக்கிறேன். மீறல்களை ஆவணப்படுத்துவதும் அவை தொடர்பான சர்வதேச கவனத்தினை ஈர்த்துக் கொள்வதும், இவ்விடயங்களை தீவிரமானவையாக எடுக்க வேண்டும் என அதிகாரிகளை இணங்கச் செய்வதற்கு உதவும். மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் தொடர்பான விழிப்புணர்வை அதிகரித்தலானது எமது சொந்த பக்கச்சார்புகளைப் புரிந்துக்கொள்வதற்கும் உதவும்.” என Emina கூறுகின்றார்.

***மூலம்***
Emina Frljak, PRVI மற்றும் the Nahla Center for Education and Research

# அமர்வுகள் 6–9

## பகுதி 2: மாற்றத்தை நோக்கிய பயணம்

உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியானது பங்குபற்றுநர்கள் தங்களது சமுதாயங்களில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் (ம.அ.ந.சு) தொடர்பில் மாற்றமுண்டாக்குநர்களாக மாறுவதற்கு அவர்களைத் தயார்ப்படுத்துகின்றது. மாற்றத்தை ஏற்படுத்துகின்ற செயன்முறையானது நீண்டதும் சில சமயங்களில் கடினமானதுமான பயணமொன்றாகும். ஒரு வரைபடமொன்றினைக் கொண்டிருத்தல் மற்றும் நாங்கள் அ இலிருந்து ஆ இற்கு எவ்வாறு செல்லப் போகின்றோம் என்பதனை அறிந்திருத்தல் உதவியாய் அமையும்.

இப்பயிற்சி நெறியின் பகுதி 2 ஆனது பங்குபற்றுநர்கள் தமது 'மாற்றத்திற்கான பயணத்தினை' திட்டமிடுவதற்கு உதவுகின்றது. பங்குபற்றுநர்கள் ம.அ.ந.சு இனை மேம்படுத்தக்கூடிய பல்வேறுபட்ட உத்திகளைக் (அல்லது முறைகளை) கற்றுக் கொள்கின்றனர் என்பதுடன் அவர்கள் அடையாளப்படுத்துகின்ற ம.அ.ந.சு தொடர்பான பிரச்சினையொன்றுக்கான செயற்திட்டத்தினை ஆக்குகின்ற செயன்முறையினூடாக வழிநடத்தப்படுகின்றார்கள். பங்குபற்றுநர்கள் சொல்பவற்றை செய்யக்கூடியவகையில் அவர்களைத் தயார்படுத்தும்முகமாக இவ் அமர்வுகள் திறன்கள் மற்றும் செயலினை மையப்படுத்துகின்றன!

பகுதி 2 ஆனது இரண்டு சோடிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள நான்கு அமர்வுகளை உள்ளடக்குகின்றது. ஒவ்வொரு சோடியும் கற்றல் குறிக்கோள்களைப் பகிர்ந்து கொண்டுள்ளது என்பதுடன் தனியொரு கற்றல் செயன்முறையே இரு அமர்வுகளிலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

- அமர்வுகள் 6 மற்றும் 7 என்பன உத்திகள் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு பங்குபற்றுநர்கள் அவ் உத்திகளை எவ்வாறு பயன்படுத்தலாம் மற்றும் வித்தியாசமொன்றினை ஏற்படுத்துவதற்காக அவ் உத்திகளை பயன்படுத்தியுள்ள நபர்களின் கதைகளினால் ஈர்க்கப்படுதல் என்பனவற்றைக் கற்றுக் கொள்வதனை மையப்படுத்தியுள்ளன.
- அமர்வுகள் 8 மற்றும் 9 என்பன செயற்பாட்டுத் திட்டமிடலை - சமுதாயத்தில் மாற்றமொன்றினை ஏற்படுத்துவதற்கான திட்டவட்டமான யோசனைகளை விருத்தி செய்தலை முன்னிலைப்படுத்துகின்றன. பங்குபற்றுநர்கள் செயற்பாட்டுத் திட்டமிடல் திறன்களை விருத்தி செய்துக் கொள்கின்றனர் மற்றும் செயற்பாட்டுத் திட்டமிடல் கருவிகளைப் பயன்படுத்தி அவற்றை பயிற்சி செய்து பார்க்கின்றனர். உங்களுடைய குழுவின் தன்மையின் அடிப்படையில், செயற்பாட்டுத் திட்டங்கள் பயிற்சி நெறியின் பின்னர் அமுல்படுத்தப்பட வேண்டிய உண்மையானத் திட்டங்களாக அமையலாம் அல்லது 'பயிற்சித்' திட்டங்களாக அமையலாம்.

# அமர்வு 6

## கதைகளினால் ஈர்க்கப்படல் - உத்திகளினால் வலுப்பெறல்

### அமர்வு பற்றிய கண்ணோட்டம்

அமர்வுகள் 6 மற்றும் 7 என்பன - பகிரப்பட்ட கற்றல் குறிக்கோள்கள் மற்றும் தனியொரு கற்றல் செயன்முறையினூடாக சோடியாக்கப்பட்டுள்ளன.

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான பல வழிகள் உள்ளன என்பதுடன் இவற்றை 15 உத்திகளாக தொகுத்து கூறலாம். அமர்வுகள் 6 மற்றும் 7 என்பன இவ் உத்திகளை மிக எளிய மட்டத்தில் அறிமுகம் செய்கின்றன. அமர்வு 6 ஆனது நிகழ்த்துகையொன்றினை உள்ளடக்கியிருந்தபோதிலும், கருத்தேற்பினைக் காட்டிலும் கதைகள் மற்றும் பரஸ்பர பிரதிபலிப்பினூடாக கற்றல் மற்றும் ஈர்க்கப்படுதல் என்பனவே இவ் அமர்வில் முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

ஒன்று அல்லது இரண்டு உத்திகள் தொடர்பான ஆழமான அறிவினை வழங்குவதற்கு பதிலாக, இவ் அமர்வுகள் பங்குபற்றுநர்கள் மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய பல வேறுபட்ட வழிகளை அவர்கள் பார்ப்பதற்கு வழிவகுக்கின்றது. பக்கம் 155-158 இல், இச் சில உத்திகள் பற்றிய ஆழமான கற்றலை வழங்குகின்ற துணை வளங்களுக்கான ஆலோசனைக் குறிப்புக்களை காணலாம்.

***15 உத்திகள் பற்றிய கண்ணோட்டம்***

***அவசரகால உத்திகள்***: தடுத்தல் நிறுத்துதல் மற்றும் பாதுகாத்தல் உதவி கோருதல் மற்றும் எச்சரித்தல்.

***மாற்றத்திற்கான உத்திகள்***: பிரச்சாரம்; வாதாடல்; சலுகைகளை வழங்கல்; எதிர்த்து நிற்றல்.

***கட்டியெழுப்புகின்ற உத்திகள்***: விழிப்புணர்வைக் கட்டியெழுப்புதல்; ஈடுபாட்டினைக் கட்டியெழுப்புதல்; திறன்களைக் கட்டியெழுப்புதல்; உறவுநிலைகள் மற்றும் வலையமைப்புக்களைக் கட்டியெழுப்புதல்.

***தேற்றுகின்ற உத்திகள்***: பொருள் மற்றும் உளவியல் ஆதரவு; மீறல்களை ஆவணப்படுத்தல்; வலியுறுத்திக்காட்டல் மற்றும் நினைவுகூர்தல்; நீதி மற்றும் நஷ்ட ஈட்டினை நாடுதல்

> *குறிப்பு*
>
> 6-7 வரையான அமர்வுகளின் உள்ளடக்கங்கள் Center for Victims of Torture இனால் நடத்தப்படுகின்ற 'மனித உரிமைகளில் புதிய உத்திகள்' செயற்பாட்டுத் திட்டத்தினால் ஆக்கப்பட்டுள்ள உத்திகளின் முறையியல் கட்டமைப்பின் மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தினைப் பயன்படுத்தியுள்ளன. www.newtactics.org இவ்வலைத்தளம் உங்களை அதிகமாக ஊக்குவிக்கும்!

### ***கற்றல் குறிக்கோள்கள்***

அமர்வுகள் 6 மற்றும் 7 என்பன மனித உரிமைகளின் மேம்பாட்டிற்கான உத்திகள் தொடர்பான அறிவினை விருத்தி செய்வதனை மையப்படுத்துகின்றன.

இவ் அமர்வின் நிறைவில், பங்குபற்றுநர்கள்:

- மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தத்தக்க உத்திகளின் நான்கு வேறுபட்ட வகைப்பாடுகள் பற்றி எளிய வரைவிலக்கணங்களைக் கூறக்கூடியவர்களாய் மற்றும் ஒவ்வொரு வகைக்குமான செயற்பாடுகள் தொடர்பில் உதாரணங்களை முன்வைக்கக்கூடியவர்களாய் இருப்பார்கள்
- அவர்களுடைய சமுதாயங்களில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான விருப்பத்தினை வெளிப்படுத்தக்கூடியவர்களாய் இருப்பார்கள்
- தங்களுடைய சமுதாயங்களில் ம. அ. ந. சு இனை மேம்படுத்தும்பொருட்டு, தனிநபர்களாக அவர்கள் எடுக்கத்தக்க ஐந்து செயற்பாடுகள் மற்றும் அவர்கள் ஈடுபட்டுள்ள குழுக்கள்/அமைப்புக்கள் எடுக்கத்தக்க ஐந்து செயற்பாடுகளை ஒன்றிணைந்து அடையாளப்படுத்துவார்கள்.

**குறிப்பு**

இக்கற்றல் குறிக்கோள்களின் நடைமுறை சாத்தியமானது உங்களுடைய குழு இதனை எவ்வாறு ஆரம்பிக்கின்றது என்பதில் தங்கியுள்ளது. கற்றல் குறிக்கோள்களின் நோக்கமானது, செயற்பாடொன்றினை முன்னெடுப்பதற்கான பங்குபற்றுநர்களின் அறிவு, நடத்தைப் பாங்குகள் மற்றும் திறன்கள் தொடர்பில் சாத்தியமாக்குநர்கள் முன்னேற்றத்தினை பார்க்கக்கூடிய பகுதிகளை குறிப்பிடுகின்றது. ஒரே அமர்வில் அடைந்துகொள்வதனைக் காட்டிலும், முன்னேற்றமானது பயிற்சி நெறி முழுவதிலும் கிரமமாக இடம்பெறலாம்.

## அமர்வின் உள்ளடக்கங்கள் மற்றும் நேரவிபரங்கள்

| | |
|---|---|
| ***ஆரம்பப் பயிற்சி: மாற்றமுண்டாக்குநர்களின் கதைகள் – சிறு குழுக்கள்***<br>ஏனையோரிடமிருந்து கிடைக்கின்ற உத்வேகத்திலிருந்து அமர்வினை ஆரம்பியுங்கள். | 20 நிமி |
| ***முழுக்குழுப் பயிற்சி: பார்வையாளர்கள் மற்றும் தேற்றுநர்கள்***<br>நாங்கள் ஏன் அநீதிகளைக் காண்கின்றபோது சில சமயங்களில் செயற்படுகின்றோம் மற்றும் சில சமயங்களில் செயற்படுவதில்லை என்பது தொடர்பில் சிந்திக்கச் செய்தல். | 25 நிமி |
| ***தனிநபர் பயிற்சி: நான் யார்?***<br>நாங்கள் வேறுபாடொன்றினை ஏற்படுத்தக்கூடிய வேறுபட்ட சூழமைவுகள் தொடர்பாக சிந்திக்கச் செய்கின்ற வரைதல் பயிற்சியொன்று. | 15 நிமி |
| ***முன்வைப்பு: உத்திகளை அறிமுகப்படுத்தல்***<br>உரிமைகளை மேம்படுத்துவதற்கான நான்கு வகையான உத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு நெருப்பின் படத்தினைப் பயன்படுத்தி செய்யப்படுகின்ற பிரதான நிகழ்த்துகை. (அவசரகால, மாற்றத்திற்கான, கட்டியெழுப்புகின்ற மற்றும் தேற்றுகின்ற உத்திகள்). | 10 நிமி |
| ***முழுக்குழு பின்னூட்டலுடன்கூடிய குழுப் பயிற்சி: அவசரகால உத்திகள் பற்றி பேசுதல்***<br>பங்குபற்றுநர்கள் 'அவசரகால' உத்திகள் பற்றிக் கலந்துரையாடுவார்கள் மற்றும் அவற்றை பயன்படுத்துவதற்கான வழிகள் பற்றி சிந்திப்பார்கள். | 45 நிமி |
| ***நிறைவு செய்கின்ற கருத்துக்கள்***<br>அமர்வின் வேறுபட்ட பகுதிகளுக்கிடையில் காணப்படுகின்ற புள்ளிகளை இணைத்தல். | 5 நிமி |
| ***மொத்த நேரம்*** | ***2 மணி நேரம்*** |

## தயாராகுங்கள்

பக்கம் 15 இல் உள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயாராவது' என்பதில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய அமர்விற்கு தயாராகுங்கள். நினைவிற் கொள்ளுங்கள் - உங்கள் குழுவைப் பற்றி உங்களுக்கு தெரியும்! உங்களுடைய குழுவின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கேற்ப அமர்வின் எந்தவொரு கூறினையும் மாற்றுவதற்கு அல்லது நீக்குபோக்கு செய்து கொள்வதற்கு உங்களால் முடியும்.

***இவ் அமர்விற்கான வளங்கள்***

பக்கம் 16 இல் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு அமர்விற்குமான நியம துணை வளங்களுக்கு மேலதிகமாக, இவ் அமர்வினை நடத்துவதற்கு உங்களுக்கு கீழ்வரும் துணை வளங்கள் தேவைப்படும்:

- ஒவ்வொரு பங்குபற்றுநரும் ஒன்று வைத்திருக்கக்கூடிய அளவில் போதுமான நகர்வு விளக்கப்படத் தாள்கள் மற்றும் நிறப் பேனைகள்.
- முன்னைய அமர்வில் ஆக்கப்பட்ட 'எமது நகரத்தின் ம.அ.ந.சு இன் வரைபடம்' உள்ளடக்கப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாள்கள்.
- 'செயற்பாட்டிற்கான யோசனைகள்: அவசரகால உத்திகள்' எனத் தலைப்பிடப்பட்ட நகர்வு விளக்கப்படத் தாள் மற்றும் அதிகமான குறிப்பெழுதும் தாள்கள்.
- உத்திகளின் சுருக்கம் - சுவரொட்டி மற்றும் அனைத்து அவசரகால உத்திகள்/கதைகளுக்கான சுவரொட்டிகளின் அச்சுப்பிரதிகள்.
- (விருப்பத்தெரிவு) நீங்கள் பவர்பொயின்டினைப் பயன்படுத்தவில்லையாயின், 3-10 வரையான பவர்பொயின்ட் ஸ்லைடுகளில் உள்ள மாற்றமுண்டாக்குநர்கள் பற்றிய கதைகளின் புகைப்படங்களை அச்சுப்பிரதி செய்து கொள்ள நீங்கள் விரும்பலாம்.

இந்த அமர்வுக்கான ***துணைவளங்களை*** <u>இங்கே</u> காணலாம்.

***அறையினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்***

இவ் அமர்வினை, முன்நோக்கி பார்க்கின்றவாறு கதிரைகள் அரைவட்ட வடிவில் போடப்பட்டுள்ள முறையிலிருந்து ஆரம்பித்தல் நல்ல யோசனையாகும். அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர், 'ம.அ.ந.சு இற்கான வரைபடம்' மற்றும் 'செயற்பாட்டுக்கான யோசனைகள்: அவசரகால உத்திகள்' போன்ற தலைப்பிடப்பட்ட நகர்வு வரைப்படத்தாள்களை சுவர்களில் ஒட்டுங்கள்.



'நான் யார்?'

"பார்வையாளர்கள்-குணமாக்குபவர் மற்றும் நான் யார் போன்ற பயிற்சிகள் கலவையான உணர்வுகளை உருவாக்கியது. சமூக ஊடகங்கள் உட்பட, நாங்கள் எத்தனை முறை பார்வையாளர்களாக இருக்கிறோம் என்பதை உணர்ந்ததில் வருத்தம் இருந்தது. ஆனால் நாம் பயன்படுத்தக்கூடிய அனைத்து உறுதியான உத்திகளைப் பற்றி அறிந்துகொண்டமை, நாம் எவ்வாறு மாறலாம் மற்றும் செயலில் மாற்றத்தை ஏற்படுத்துபவர்களாக மாறலாம் என்ற நம்பிக்கையை அளித்தது. குழுவில் உத்திகளை பயன்படுத்துவதில் வலுவான அர்ப்பணிப்பு உணர்வு இருந்தது."

**UKOHA NGWOBIA**, நெறியாளர், நைஜீரியா

# விரிவான அமர்வுத் திட்டம்

## 1. ஆரம்பப் பயிற்சி: மாற்றமுண்டாக்குநர்களின் கதைகள் சிறிய குழுக்கள் 20 நிமி



*சிறு குழுப்பயிற்சி*

***விவரணம்***

இக்கதைகள் சிறு குழுக்களில் வாசிக்கப்பட்டு பின்பு கலந்துரையாடப்படும்.

***நோக்கம்***

இப்பயிற்சி நெறியின் பகுதி 2 இற்கான செயன்முறையினை அறிமுகப்படுத்தல், அமர்விற்கான நல்ல ஆரம்பமொன்றினை வழங்குதல், ஏனையோரால் செய்யப்பட்டுள்ள மாற்றத்தினை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகளிலிருந்து உத்வேகத்தினைப் பெற்றுக் கொள்தல்.

***வளங்கள்***

- பவர்பொயின்ட் ஸ்லைடுகள் 1-10 அல்லது அவற்றின் அச்சுப்பிரதிகள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 2 நிமி

அனைவரையும் அமர்விற்கு வரவேற்று கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:

- இதுவரை இடம்பெற்ற அமர்வுகளில், நாம் மனித உரிமைகள், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கற்றுள்ளோம். அத்துடன் எமது சமுதாயத்தில் ம.அ.ந.சு இன் மீறல்கள் எவ்வாறு காணப்படும் என்பது பற்றியும் பார்த்தோம்.
- தற்போது முதல் நாங்கள் செயற்பாட்டினை மையப்படுத்தப் போகின்றோம். இவ் அமர்விலும் அடுத்த அமர்விலும், மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தக்கூடிய வேறுபட்ட முறைகள் அல்லது உத்திகள் பற்றி கண்டறியப்போகின்றோம் என்பதுடன் அவ் உத்திகளை நாம் எவ்வாறு பயன்படுத்தப்போகின்றோம் என்பது குறித்தும் சிந்திக்கப் போகின்றோம். இறுதி இரு அமர்வுகளில் நாங்கள் செயற்திட்டங்களை ஆக்குவது தொடர்பில் மையப்படுத்தி பார்ப்போம்.
- தங்களுடைய சமுதாயங்களில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பில் மாற்றத்தினை ஏற்படுத்துகின்ற மூன்று நபர்களின் கதைகளைக் கேட்பதனூடாக நாம் இதனை ஆரம்பிக்கப் போகின்றோம்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 16 நிமி

- இவ் அமர்விற்கான பவர்பொயின்டின் 3-10 வரையான ஸ்லைடுகள் அல்லது அவ் ஸ்லைடுகளின் அச்சுப்பிரதிகள் என்பனவற்றைப் பயன்படுத்தி பக்கம் 124-125 இல் காணப்படுகின்ற மூன்று 'மாற்றமுண்டாக்குநர்களின்' கதைகளை வாசியுங்கள்.
- தமக்கு அருகில் அமர்ந்திருப்பவர்களுடன் இணைந்து மூன்று பேரைக் கொண்ட குழுக்களாக இதனைக் கலந்துரையாடுமாறு பங்குபற்றுநர்களுக்கு கூறுங்கள்: உங்களிடம் அதிகமாகப் பேசிய அல்லது உங்களை அதிகமாக ஈர்த்த கதை யாது மற்றும் ஏன்?

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது*** 2 நிமி

இக்கதையில் வருகின்ற சந்தர்ப்பங்கள் எங்களுடைய சந்தர்ப்பங்களைவிட மிகவும் வித்தியாசமானவையாக இருக்கின்றபோதிலும், இந்நபர்கள் மேற்கொண்ட செயற்பாடுகள் நாம் செய்வதற்கு பொருத்தமான செயற்பாடுகளாக இல்லாதிருக்கின்றபோதிலும், இப்புத்தாக்க சிந்தனைமிக்க மற்றும் தைரியமான மாற்றமுண்டாக்குநர்கள், 'மாற்றம் சாத்தியமானது மற்றும் அதற்காக போராடுதல் பெறுமதி மிக்கது' என்பதனை நாம் நம்புவதற்கு எமக்கு உத்வேகமளித்துள்ளார்கள். வித்தியாசமொன்றினை ஆக்குவதற்காக, சிறியதாக இருப்பினும், ஒவ்வொருவராலும் ஏதோ ஒன்றை செய்ய முடியுமென நம்ப வைத்துள்ளார்கள் என கூறி முடியுங்கள்.

## 2. சிந்தனை செய்யும் பயிற்சி: பார்வையாளர்கள் மற்றும் தேற்றுநர்கள் 25 நிமி



*முழுக்குழுப் பயிற்சி*

***விவரணம்***

அநீதிகளை தடுத்து நிறுத்துவதற்கு பங்குபற்றுநர்கள் தலையீடு செய்துள்ள (சிறியளவிலேனும்) சந்தர்ப்பங்கள் மற்றும் எதனையும் செய்யாது விட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பில் பங்குபற்றுநர்கள் சிந்திப்பார்கள், அவர்களை செயற்படவைத்த காரணிகள் தொடர்பாகக் கலந்துரையாடுவார்கள்.

***நோக்கம்***

இப்பயிற்சியானது கீழ்வருவனவற்றை இலக்காகக் கொண்டுள்ளது:

- ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் நாம் ஒவ்வொருவரும் 'பார்வையாளராக' (அநீதிகளைப் பார்க்கின்றபோது அமைதியாக இருந்துள்ளோம்) மற்றும் 'தேற்றுநராக' (எங்களது சொந்த அல்லது மற்றுமொருவரின் உரிமைகளுக்காக) சிறியளவிலேனும் செயற்பட்டுள்ளோம் என்பதனை பங்குபற்றுநர்கள் புரிந்துகொள்ள உதவுதல்.
- உரிமை மீறல்கள் தொடர்பாக முனைப்பான 'தேற்றுநர்களாக' வருவதற்கு பங்குபற்றுநர்கள் மேற்கொள்ளக்கூடிய விருப்பத் தெரிவுகள் மற்றும் படிமுறைகளை அடையாளம் காண்பதற்கு அவர்களுக்கு உதவுதல்.

***வளங்கள்***

- ஒரு பங்குபற்றுநருக்கு ஒரு A4 தாள்.
- ஒவ்வொரு பங்குபற்றுநரும் ஒன்று அல்லது இரண்டு வைத்திருக்கக்கூடியவாறு போதுமானளவில் பேனைகள் அல்லது பென்சில்கள்.
- நகர்வு விளக்கப்படத்தாள்/வெண்பலகை மற்றும் குறியீட்டு பேனைகள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 2 நிமி

ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் ஒரு தேற்றுநர்-பார்வையாளர் கையேட்டினை வழங்குங்கள்.

கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:

- மாற்றத்தினை ஏற்படுத்துவது தொடர்பிலான எமது அனுபவங்கள் பற்றி நாம் சிந்திப்பதற்கு உதவக்கூடிய ஒரு பயிற்சியொன்றினை நாம் செய்யப்போகின்றோம்.
- பார்வையாளர் என்பவர் அநீதியொன்று நடைபெறுவதனைக் காண்கின்றபோது எதனையும் செய்யாது அமைதியாக இருப்பவர் - உதாரணமாக கொடுமைகள் அல்லது பாரபட்சம்.
- தேற்றுநர் என்பவர் அநீதியினால் பாதிக்கப்பட்டுள்ள நபர் அல்லது நபர்களுக்கு ஆதரவளிப்பதற்காக கதைப்பவர் அல்லது எதையேனுமொன்றை செய்பவர் ஆவார்.
- நாம் அனைவரும் வேறுபட்ட நேரங்களில் இவ்விரண்டு வகிபாகங்களையும் ஆற்றியுள்ளோம் என்பதனை அழுத்தமாகக் கூறுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 20 நிமி

- ***எழுதுங்கள் மற்றும் வரையுங்கள்*** (5 நிமி)
  இத்தகைய வகிபாகங்களை பங்குபற்றுநர்கள் ஆற்றியுள்ள சந்தர்ப்பமொன்றினைக் கையேட்டில் எழுதுமாறு அல்லது வரையுமாறு பங்குபற்றுநர்களைக் கேட்டுக் கொள்ளுங்கள். இது நாளாந்தம் நடைபெறுகின்ற சந்தர்ப்பமொன்றாக இருக்கலாம், உதாரணமாக சகபாடியொருவர் வன்முறைக்கு உட்படுவதனைப் பார்த்துவிட்டு உதவிக்காக அழைப்பு விடுத்த சந்தர்ப்பமாக இருக்கலாம் அல்லது குடும்ப உறுப்பினர் அல்லது சக பணியாள் ஒருவர் தவறாக நடத்தப்பட்டபோது அதற்கெதிராக அவர்கள் பேசிய சந்தர்ப்பமாக இருக்கலாம். ஏதேனும் காரணங்களுக்காக அத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் பார்வையாளர்களாக இருந்து உதவிக்காக அழைப்பு விடுக்காத அல்லது எதிர்த்து பேசாத சந்தர்ப்பங்கள்.
- ***முழுக்குழுக் கலந்துரையாடல்*** (15 நிமி)
  ஒவ்வொருவரும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் இவ்விரண்டு வகிபாகங்களையும் வகித்துள்ளோம் என்பதனை வலியுறுத்தி ஆரம்பியுங்கள், பின்னர் 2 அல்லது 3 தன்னார்வாளர்களை அவர்கள் பார்வையாளராக அல்லது தேற்றுநராக செயற்பட்ட உதாரணமொன்றை குறிப்பிடுமாறு கூறுங்கள். குறிப்பான சம்பவங்கள் பற்றிக் கலந்துரையாட வேண்டாம்- ஏனெனில், அது இப்பயிற்சியின் நோக்கமொன்றல்ல. வெறுமனே, நபர்களின் அனுபவங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நபர்களின் அனுபவங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
  பின்னர் குழுக்களிடம் கீழ்வரும் வினாக்களைக் கேளுங்கள்:
  – இந்தப் பயிற்சியினை செய்தல் உங்களை எவ்வாறு உணரச் செய்தது?
  – ஏன் நீங்கள் சில சமயங்களில் நடவடிக்கை எடுக்கின்றீர்கள் மற்றும் சிலசமயங்களில் எடுப்பதில்லை? இந்த வித்தியாசத்தை ஏற்படுத்தியது எது?
  – இப்பிரச்சினைகள் தொடர்பாக, பார்வையாளராக இருப்பதிலிருந்து, எங்களுடைய உரிமைகள் மற்றும் ஏனையோருடைய உரிமைகள் தொடர்பாக செயற்படக்கூடிய ஒருவராக உங்களை நகர்த்துவதற்கு எவ்வெவ் விடயங்கள் உதவியிருக்கக்கூடும்?
  அவர்களுடைய பதில்களை நகர்வு விளக்கப்படத் தாள்/வெண்பலகையில் எழுதுங்கள்.

***முழுக்குழு கலந்துரையாடல்***

இறுதிக் கேள்விக்கான நபர்களின் பதில்களிலிருந்து கீழ்வரும் விடயங்களை உள்ளீர்த்துக் கொள்ளுங்கள் அல்லது இவ்விடயங்களுடன் தொடர்புடைய கேள்விகளைக் கேட்பதனூடாக நபர்கள் இத்தகைய பதில்களை சொல்வதற்கு அவர்களைத் தூண்டுங்கள்:

– பாதிக்கப்பட்டவருடன் எமக்கு உறவு நிலையொன்று உள்ளபோது அல்லது அவர் தொடர்பாக இரக்க மனப்பான்மை எழுகின்றபோது நாங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு தூண்டப்படுகின்றோம்.
– நாங்கள் தனியாக இல்லாதபோது, விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்றின் அங்கமொன்றாக உள்ளபோது எங்களுக்கு செயற்படுவதற்குரிய அதிக துணிவு கிடைக்கின்றது.
– குறிப்பிட்ட விடயப்பொருள் தொடர்பான மற்றும் முறைமை - விதிகள் யாவை, யாரிடம் முறைப்பாடு செய்வது அல்லது உதவி கேட்பது - தொடர்பான அறிவு காணப்படுகின்றபோது எங்களுக்கு செயற்படுவதற்குரிய அதிக துணிவு கிடைக்கின்றது.
– நாங்கள் தயார்நிலையில் இருப்பின் - குறிப்பிட்ட சந்தர்ப்பம் தொடர்பாக சிந்தித்து, நாங்கள் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது குறித்து முன்கூட்டியே திட்டமிட்டு வைத்திருப்பின் அல்லது அதற்கு முன் அதனை செய்திருப்பின் - எங்களுக்கு செயற்படுவதற்குரிய அதிக துணிவு கிடைக்கின்றது. இதனைப் பயிற்சி செய்வதற்கான சிறந்த முறை பாத்திரமேற்று நடித்தல் முறையாகும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது*** 3 நிமி

கீழ்வருவனவற்றை வலியுறுத்திக் காட்டி, பவர்பொயின்ட் இன் 11 வது ஸ்லைடினை காண்பித்து கலந்துரையாடலை நிறைவு செய்யுங்கள்:

- பார்வையாளர்களாக இருப்பதற்கு பதிலாக தேற்றுநராக மாறுவதற்கான உணர்வு விழிப்புடைய தீர்மானங்களை நாம் எடுக்க முடியும், உதாரணமாக உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டுள்ள நபர்களுடன் உறவுநிலையினைக் கட்டியெழுப்புவதனூடாக, குழுக்களாக ஒழுங்கமைக்கப்பட்டுக் கொள்வதனூடாக, எமக்கு தேவையானத் தகவல்களைத் தேடுவதனூடாக மற்றும் நாங்கள் எவ்வாறு ஒன்றிணைந்து செயற்படவேண்டுமென திட்டமிடுவதனூடாக.

- எங்களால் எப்போதும் செயல்பட முடியாது - அவ்வாறு செய்வது எப்போதும் பாதுகாப்பாகவோ, ஆக்கப்பூர்வமாகவோ இருக்காது! ஆனால் நாம் உறவுகளை கட்டியெழுப்புவது, ஒன்றாக வேலை செய்வது போன்றவற்றின் மூலம் செயல்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் மற்றும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

- எமது நகரத்தின் ம.அ.ந.சு இன் வரைபடத்தினைக் கொண்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாளைக் காட்டுங்கள். பங்குபற்றுநர்கள் அடையாளப்படுத்தியுள்ள பிரச்சினைகளில் எவை குறித்து அவர்கள் தேற்றுநர்களாக இருக்க விரும்புகிறார்கள் என அமைதியாக சிந்திக்குமாறு பங்குபற்றுநர்களைக் கேட்டுக் கொள்ளுங்கள். (நபர்கள் சிந்திப்பதற்கு சில நொடிகளை வழங்குங்கள், ஆனால் அவர்களின் பதில்களை கூறுமாறு கேட்க வேண்டாம்.)

- இனிவரும் அமர்வுகளில், இத்தகைய பிரச்சினைகள் தொடர்பாக பார்வையாளராக இருந்து ***எவ்வாறு*** தேற்றுநராவது என்பது குறித்து சிந்திக்கப் போகின்றோம்.

### ***3. வரைதல் பயிற்சி: நான் யார்?*** 15 நிமி

***தனிப்பட்ட பயிற்சி***

*குறிப்பு*

இப்பயிற்சி பொழுதுபோக்கிற்கானது என்பதுடன் கருத்துள்ளது. ஆனால், அமர்வின் செயன்முறைக்கு இது இன்றியமையாதது அல்ல. நீங்கள் இப்பயிற்சியினைத் தவிர்த்து ஏனைய பயிற்சிகளுக்கு மேலதிக நேரம் வழங்குவதற்கு விரும்பலாம்.

***விவரணம் மற்றும் நோக்கம்***

பங்குபற்றுநர்கள் தங்களுடைய தனிப்பட்ட மற்றும் தொழிற்சார் வலையமைப்புக்களை வரைவதனூடாக, அவர்களால் ‘எங்கு’ வித்தியாசமொன்றினை ஏற்படுத்த முடியுமென அடையாளப்படுத்துதல்.

*வளங்கள்*

- நகர்வு விளக்கப்படத் தாள்கள் மற்றும் பேனைகள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 1 நிமி
ஒவ்வொருவருக்கும் நகர்வு விளக்கப்படத் தாளொன்றினையும் நகர்வு விளக்கப்படத் தாளுக்காக பயன்படுத்துகின்ற பேனா/நிறப்பேனா ஒன்றினையும் வழங்குங்கள்.

கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:
எங்களுக்கு பல உறவுகள் காணப்படுகின்ற மற்றும் நாங்கள் வேறுபட்ட வகிபாகங்களை ஆற்றுகின்ற ஒரு சமுதாயத்தில் ஒரு அங்கமாக இருக்கின்றோம். - எமது குடும்பங்களில், தொழிலிடங்களில் அல்லது மத சமுதாயங்களில் அல்லது எங்கள் நட்பு அல்லது பரிச்சயமானவர்களின் வட்டாரங்களில்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 10 நிமி
கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:

இப்போது நாங்கள் எங்களது தனிப்பட்ட வலையமைப்புக்களை வரைய முயற்சிக்கப் போகின்றோம். தாளின் நடுவே உங்களை வரைந்துக் கொள்ளுங்கள், இப்போது தாளின் வேறுபட்ட பகுதிகளில் உங்களுடைய வலையமைப்புக்களை வரைந்துக் கொள்ளுங்கள். அவர்கள்:

- குடும்பம் மற்றும் நண்பர்களாக,
- உங்களுடைய தொழிலிடம் மற்றும் உடன் பணிபுரிபவர்கள்/பாடசாலை மற்றும் சகபாடிகளாக.
- உங்களுடைய மத சமுதாயம், மற்றும் உங்களுக்கு சொந்தமான வேறு ஏதேனும் சமுதாய குழுக்களாக, பெரும்பாலும் பொழுதுபோக்கிற்கான விளையாட்டு அணியாக அல்லது பெண்கள் குழுவாக இருக்கலாம். அவை முறையாகக் கட்டமைக்கப்பட்டுள்ள குழுக்களாக அல்லது முறையற்ற வலையமைப்புக்களாக இருக்கலாம்.
- சமூக ஊடகங்களிலுள்ள உங்களது வலையமைப்பு.

நீங்கள் அடையாளப்படுத்துகின்ற ஒவ்வொரு குழுக்கள் அல்லது வலையமைப்புக்கள் தொடர்பிலும் அல்லது அவ் அமைப்பினூடாக, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை மேம்படுத்துவதற்கு நீங்கள் ஆற்றக்கூடிய வகிபாகம் தொடர்பில் சிந்தியுங்கள். உங்களுக்கு 10 நிமிடங்கள் உண்டு.

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது*** 4 நிமி
ஒவ்வொருவரையும் வட்டமொன்றில் நின்று தத்தமது வரைதல்களைக் காட்டும்படி கூறுங்கள். அப்படங்கள் எவ்வளவு வளம் மிக்கவையாக மற்றும் சுவாஸ்யமானவையாக உள்ளன - மற்றும் எவ்வாறு அவை நாம் வாழ்க்கையில் வகிக்கின்ற வேறுபட்ட பல வகிபாகங்களை எடுத்துக் காட்டுகின்றன என்பது தொடர்பான கருத்துக்களைக் கூறுங்கள்.

கீழ்வரும் விடயங்களை கூறுங்கள்:

- நாங்கள் அடையாளப்படுத்திய ஒவ்வொரு வேறுபட்ட அமைப்பிலும், நாங்கள் 'பார்வையாளராக' அல்லது 'முனைப்பான தேற்றுநராக' வகிபாகமொன்றை வகிக்க முடியும். இவ்வலையமைப்புக்கள் மற்றும் குழுக்களில், மற்றும் அவற்றினூடாக, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை மேம்படுத்துவதற்கான வளமொன்றாக எம்மால் இருக்க முடியும்.
- பயிற்சி நெறியின் எஞ்சிய பகுதிகளில் நீங்கள் கேட்கின்ற மற்றும் செய்கின்ற சகல விடயங்கள் தொடர்பிலும், 3 வினாக்கள் பற்றி சிந்தியுங்கள். (12 ஆவது ஸ்லைடு அல்லது அதே கேள்விகளைக் கொண்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாளினைக் காட்டுங்கள்.)

  – நான் என்ன செய்ய முடியும்?
  பெற்றோராக, பிள்ளையாக, நண்பனாக அல்லது அயலவராக எனது வகிபாகத்தில், பணியில் எனது வகிபாகத்தினூடாக அல்லது என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் - என்னுடைய மத சமுதாயத்தில் நான் கொண்டுள்ள வகிபாகங்களினூடாக என்ன செய்ய முடியும்.
  – நாங்கள் என்ன செய்ய முடியும்?
  உதாரணமாக, நாங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு ஒன்றிணைந்து பணியாற்றுவோமாயின், என்னுடைய மத சமுதாயம், இளைஞர் குழு அல்லது தொழிலிடம் முன்னெடுப்பொன்றினை எடுக்க முடியுமா?
  – ஏனைய நபர்கள்/அமைப்புக்கள் செய்ய வேண்டுமென நாம் எவற்றை ஊக்கப்படுத்தலாம்?
  எம்மால் செய்ய முடியாத, ஆனால் ஏனையோரால் செய்யக்கூடிய விடயங்களுண்டு - பெரும்பாலும் மற்றுமொரு மத சமுதாயத்தினால் அல்லது உள்ளூர் பாடசாலையினால். செயற்படுவதற்காக நாம் யாரை ஊக்கப்படுத்த வேண்டும்?

## 4. முன்வைப்பு: உத்திகளுக்கான அறிமுகம் 10 நிமி



முன்வைப்பு

***விவரணம் மற்றும் நோக்கம்***

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக நபர்கள் பயன்படுத்தக்கூடிய 4 வகையான உத்திகளை அறிமுகப்படுத்துவதனூடாக, இம்முன்வைப்பானது, பங்குபற்றுநர்களிடையே மனித உரிமைகளை மேம்படுத்தக்கூடிய நடைமுறை வழிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதனை இலக்காகக் கொண்டுள்ளது.

*வளங்கள்*

- இவ்வழிகாட்டியின் பக்கம் 121 இல் முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதியினைப் பார்க்கலாம்.
- எழுத்துப்பிரதியானது அமர்விற்கான பவர்பொயின்டின் 13-24 வரையான ஸ்லைடுகளை ஒத்து அமைந்திருக்கும் என்பதுடன் அது இவ் ஸ்லைடுகளுக்கான வளவாளர் குறிப்புக்களுள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- அமர்விற்கான துணை வளங்களில் மாற்றங்களை செய்வதற்கேற்றவகையில், எழுத்துப்பிரதியின் Word வடிவம் இணைக்கப்பட்டுள்ளது.

***முன்னாயத்தம்***

பக்கம் 15 இல் வழங்கப்பட்டுள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயார்படுத்துவது' என்பதிலுள்ள வழிகாட்டல்களுக்கமைய தயாராகுங்கள். எழுத்துப்பிரதி மற்றும் பவர்பொயின்ட் ஸ்லைடுகளை (அல்லது ஸ்லைடுகளின் பிரதான கருத்துக்களைக் கொண்டு நகர்வு விளக்கப்படத் தாள்களை ஆக்கிக் கொள்ளுங்கள்) வாசித்து உங்களுக்கேற்றவகையில் மாற்றியமைத்துக் கொள்ளுங்கள் மற்றும் ஸ்லைடுகள்/ நகர்வு வரைபடத்தாள்களுடன் முன்வைப்பினை செய்வதற்கு பயிற்சி செய்து பாருங்கள்.

> ***ஆலோசனைக் குறிப்பு!*** உங்களுடைய முன்வைப்பு முடிவு செய்யப்படுகின்றவரையில், வினாக்கள்/கருத்துக்களை பதிவு செய்து வைத்திருக்குமாறு நபர்களிடம் கூறுங்கள்.

## 5. கலந்துரையாடல் பயிற்சி– அவசரகால உத்திகள் பற்றி பேசுதல் 45 நிமி



குழுப்பயிற்சி

***விவரணம் மற்றும் நோக்கம்***

நபர்கள் ம.அ.ந.சு உடன் தொடர்புடைய பிரச்சினைகளைக் கையாள்வதற்கு எவ்வாறு அவசரகால உத்திகளை பயன்படுத்துகின்றனர் என்ற நடைமுறை உதாரணங்களைப் பார்ப்பதனூடாக பங்குபற்றுநர்கள் இக்குழு கலந்துரையாடலில் அவசரகால உத்திகள் பற்றிக் கற்றுக்கொள்ளப் போகின்றனர். பங்குபற்றுநர்கள் உத்திகள் தொடர்பாக சிந்திப்பார்கள் என்பதுடன் அவற்றை தங்களுடைய சமுதாயங்களில் ம.அ.ந.சு இனை மேம்படுத்துவதற்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது தொடர்பாக சிந்திப்பார்கள், அவர்கள் அவ்வாறு செய்வதனூடாக அவர்களது அறிவு மற்றும் செயற்பாட்டுத் திறன்கள் விருத்தியடையும்.

*வளங்கள்*

- அவசரகால உத்திகள் எழுதப்பட்டுள்ள அனைத்து சுவரொட்டிகளினதும் அச்சுப்பிரதி.
- குறிப்பெழுதும் தாள்கள் மற்றும் பேனைகள்.
- 'செயற்பாட்டுக்கான யோசனைகள்: அவசரகால உத்திகள்' எனத் தலைப்பிடப்பட்ட நகர்வு வரைப்படத்தாள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 4 நிமி

கீழ்வரும் விடயங்களை சொல்லுங்கள்:

- இவ் அமர்வின் இனிவரும் பகுதிகளில், நாங்கள் அவசரகால உத்திகளை முன்னிலைப்படுத்திப் பார்க்கப் போகின்றோம் என்பதுடன் அவற்றை எங்களுடைய சமுதாயங்களிலுள்ள மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளைக் கையாள்வதற்கு பயன்படுத்தமுடியுமா என்பது பற்றி சிந்திக்கப்போகின்றோம். ஏனைய உத்திகள் பற்றி நாங்கள் அடுத்த அமர்வில் பார்ப்போம்.
- இப்பயிற்சியினூடாக, நாம் அவசரகால உத்திகள் பற்றி கற்க போகின்றோம் மற்றும் எமது சமுதாயத்தில் செயற்பாட்டுக்கான பல யோசனைகள் குறித்து சிந்திக்கப் போகின்றோம். சிந்தித்தல் - நான் என்ன செய்ய முடியும், நாங்கள் என்ன செய்ய முடியும் மற்றும் ஏனையோர் செய்யவேண்டுமென நாம் எவற்றை ஊக்கப்படுத்த வேண்டும்?
- ஆனால், நாங்கள் கற்பதற்கு ஆரம்பிக்க முன்னர், ம.அ.ந.சு தொடர்பான அவசர நிலைமை என்றால் என்ன என்பதனை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒரு நபருக்கு குறிப்பிட்ட ஒரு இடத்தில் குறிப்பிட்ட மனித உரிமை துஷ்பிரயோகம் இடம்பெறுகின்றபோது அல்லது இடம்பெறவுள்ளபோது அவசரகால உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, இவ் உத்திகளைக் கொண்டு நாங்கள் கையாள முயற்சிக்கின்ற மதம் அல்லது சுதந்திரத்திற்கான மீறல்கள் எத்தகையன?

பவர்பொயின்ட் ஸ்லைட் 24 இனைக் காட்டி கீழ்வரும் உதாரணங்களை வாசியுங்கள்:
– தொந்தரவு - உதாரணமாக சிறுபான்மைப் பெண்களை வீதித் தொந்தரவுக்கு ஆளாக்கல்
– வெறுப்புப் பேச்சு (இயங்கலையில் அல்லது நேரடியாக)
– சேதப்படுத்தல் அல்லது தாக்குதல் போன்ற வெறுப்புக் குற்றங்கள்
– வழிபாட்டுத் தலங்கள் மீதானத் தாக்குதல்கள்
– வகுப்பவாத வன்முறை அல்லது
– தன்னிச்சையான கைதுகள்

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 40 நிமி

- ***கலந்துரையாடல் குழுக்கள்*** (20 நிமி)
  – பங்குபற்றுநர்களை மூன்று குழுக்களாகப் பிரித்தல்.
  மூன்று அவசரகால உத்திகள் உள்ளன: தடுத்தல் நிறுத்துதல் மற்றும் பாதுகாத்தல் உதவி கோருதல் மற்றும் எச்சரித்தல். ஒவ்வொரு குழுவும் இவ் ஒவ்வொரு உத்தியினை மையப்படுத்த வேண்டுமென விளக்குங்கள்.
  – ஒவ்வொரு குழுவிற்கும் குறிப்பெழுதும் தாள்கள் மற்றும் பேனைகள், அக்குழுவிற்குரிய உத்திக்கான சுவரொட்டி மற்றும் அதனோடிணைந்துள்ள கதைச் சுவரொட்டிகள் மற்றும் அவர்களுடைய குழுவிற்கான உத்திக்குரிய கலந்துரையாடல் வினாக்கள் உள்ளடங்கிய கையேடு.
  – குழுக்களுக்கு பின்வரும் அறிவுறுத்தல்களை வழங்குங்கள்: சுவரொட்டிகளுள் உள்ள பிரதியினை வாசியுங்கள். பின்னர், கையேட்டிலுள்ள வினாக்களைக் கலந்துரையாடுங்கள். இதன் ஒரு பகுதியாக, உங்களுடைய உத்தியினைப் பயன்படுத்துவதற்கான முறைகள் குறித்து சிந்திப்பீர்கள் - செயற்பாட்டிற்கான உங்களது யோசனைகளை குறிப்பெழுதும் தாள்களில் எழுதுங்கள். கலந்துரையாடலுக்காக உங்களுக்கு 20 நிமிடங்கள் காணப்படுகின்றன.

- ***முழுக்குழு பின்னூட்டல்*** (20 நிமி)
  ஒவ்வொரு குழுவும் ஆராய்ந்த தமது உத்தி மற்றும் அவர்களின் செயற்பாட்டிற்கான யோசனைகளை முன்மொழிவதற்காக ஒவ்வொரு குழுவிற்கும் 5 நிமிடங்கள் வரையில் வழங்குங்கள். அவர்களுடைய செயற்பாட்டிற்கான யோசனைகள் எழுதப்பட்டுள்ள குறிப்பெழுதும் தாள்களை 'செயற்பாட்டிற்கான யோசனைகள்: அவசரகால உத்திகள்' என்ற நகர்வு விளக்கப்படத் தாள் மீது ஒட்டுங்கள்.
  குழுக்கள் முன்மொழிதலை நிறைவு செய்த பின்னர், கீழ்வரும் வினாக்களைக் கலந்துரையாடுங்கள்.
  – ஏனைய குழுக்கள் கூறிய விடயங்களை செவிமடுத்தபிறகு, அவசரகால நிலைமைகளைக் கையாள்வது தொடர்பில் யாருக்கேனும் வேறு மேலதிக யோசனைகள் தோன்றியதா?
  – இவற்றை சிந்திப்பது கடினமானதாக உள்ளதா?
  – உங்களுக்கு பிடித்த சிறந்த யோசனைகள் யாவை?

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது*** 1 நிமி
குழு முன்வைத்த யோசனைகளைப் பாராட்டுவதனூடாக மற்றும் விசேடமாக, மேற்கொள்கின்ற நடவடிக்கை அபாயங்களை உள்ளடக்கியதாக மற்றும் ஆபத்தானதாக அமையக்கூடிய இவ் அவசரகால உத்திகள் தொடர்பில், இவற்றை சிந்திப்பது இலகுவான விடயமல்ல என்பதனை அங்கீகரிப்பதனூடாக குழுவினை ஊக்கப்படுத்துங்கள்.

## 6. நிறைவு செய்வதற்கானக் கருத்துக்கள்: 5 நிமி

***குறும்பேச்சு***

26-28 வரையான ஸ்லைடுகளைக் காண்பித்து கீழ்வரும் கருத்துக்களைப் பகிர்ந்துக் கொள்வதனூடாக அமர்வினை நிறைவு செய்யுங்கள்:

- இவ் அமர்வின் ஆரம்பத்தில், நாம் பார்வையாளராக இருந்து தேற்றுநராக மாறுவதற்கான வழிகள் தொடர்பில் பேசியிருந்தோம். உறவுகளைக் கட்டியெழுப்புதல், ஒன்றிணைந்து பணியாற்றல், தகவல்களை நாடுதல், திட்டமிடல் மற்றும் தயார்ப்படுத்தல் ஆகியன பற்றி பேசியிருந்தோம்.
- அவசரகால உத்திகள் தொடர்பாக பாரக்கின்றபோது, இது நாங்கள் இப்போது கலந்துரையாடிய வினாக்களைக் கேட்டலை உள்ளடக்குகின்றது, உதாரணமாக:
  – யார், எங்கே மற்றும் எப்போது ம.அ.ந.சு இற்கான அவசரநிலைமைகளினால் பாதிக்கப்படக்கூடும் என்பதனை அடையாளப்படுத்தல்.
  – இவ் அவசர நிலைமைகள் இடம்பெறுவதற்கு முன்னரே அவற்றுக்கு எவ்வாறு துலங்கல்களைச் செய்வதென சிந்தித்தல். உதாரணமாக: நான் சமூக ஊடகத்தில் வெறுப்புப் பேச்சொன்றினை காண்கின்றபோது அல்லது வீதியில் தொந்தரவு சம்பவமொன்றைக் காண்கின்றபோது தனிப்பட்ட முறையில் நான் எவ்வாறு செயற்பட வேண்டும்?

– அல்லது, ஒன்றிணைந்து திட்டமிட்டு, தயாராகி, செயற்படுகின்ற குழுவொன்றின் அங்கமென்ற வகையில் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முனைப்பான துலங்கலொன்றை நாம் செய்ய வேண்டுமா?
– துலங்கல்களைச் செய்வதற்கு எமக்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தொடர்புகள் எம்மிடம் உள்ளனவா என பரிசோதித்தல்? மற்றும், நாங்கள் பாதுகாப்பாக இருக்கின்றோம் மற்றும் விடயங்கள் இன்னும் மோசமான நிலையினை அடையவில்லை என்பதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அபாய நேர்வுகளை மதிப்பிடுதல்.

- நாங்கள் பயன்படுத்த விரும்புகின்ற உத்திகளாக அவசரகால உத்திகள் இல்லாது போகலாம். உதாரணமாக, நாங்கள் விழிப்புணர்வினைக் கட்டியெழுப்புதல் அல்லது மாற்றத்திற்காக பிரச்சாரம் செய்வது போன்ற பணிகளை சிறப்பாக செய்யலாம். எந்தவொரு நபராலும் எல்லாவற்றையும் செய்ய முயற்சிக்க கூடாது!

- அடுத்த அமர்வில், நாங்கள் கட்டியெழுப்புவதற்கான உத்திகள், மாற்றத்திற்கான உத்திகள் மற்றும் தேற்றுகின்ற உத்திகள் பற்றி கற்கப் போகின்றோம் மற்றும் அவற்றை செயற்படுத்துவதற்கான யோசனைகளை சிந்திக்கப் போகின்றோம். சாத்தியமானளவு அதிகமான செயற்பாட்டுக்கான யோசனைகளை சேர்த்துக் கொள்வதனை நாம் இலக்காகக் கொண்டுள்ளோம்!

- பின்னர், அமர்வின் இறுதி இரு அமர்வுகளிலும் நாங்கள் விடயங்களை குறுகலாக்கிப் பார்க்கப்போகின்றோம் - அதாவது நாங்கள் உண்மையில் கையாளப்போகின்ற பிரச்சினைகள் தொடர்பில் சிந்திக்கப் போகின்றோம், மற்றும் நாம் அடையாளப்படுத்தியுள்ள செயற்பாடுகளுள் எவை வினைத்திறன் மிக்கவையாக மற்றும் யதார்த்தபூர்வமானதாக இருக்குமென்றும் சிந்திக்கப் போகின்றோம்.

- ஒவ்வொருவரதும் முனைப்பான பங்குபற்றுகைக்காக நன்றிகூறி அமர்வினை நிறைவு செய்யுங்கள்.

***மூலம்***

பார்வையாளர்கள் மற்றும் தேற்றுநர்கள்: மனித உரிமைகள் கல்விக் கைநூல், , Kristi Rudelius-Palmer, University of epkpnesota Human Rights Resource Center. இலிருந்து தழுவிக்கொள்ளப்பட்டது. http://www1.umn.edu/humanrts/edumat/hreduseries/hrhandbook/activities/17.htm;)

உத்திகளைகளை அறிமுகப்படுத்துதல்/அவசரகால உத்திகள் பற்றி பேசுதல்: மூல முன்வைப்பு மற்றும் பயிற்சிகள் New Tactics in Human Rights Project. இன் உத்திகளின் மாதிரியிலிருந்து தழுவப்பட்டது.
www.newtactics.org

# முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதி

## மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான உத்திகள்


*அமர்வு 6 இற்கான நிகழ்த்துகையின் எழுத்துப்பிரதி அமர்விற்கான பவர்பொய்ன்ட் இன் 13 - 24 வரையான ஸ்லைடுகளில் விளக்கப்பட்டுள்ளது.*

### அறிமுகம்



இவ் அமர்வில் மற்றும் முன்னைய அமர்வுகளில், தங்களுடைய சமுதாயங்களில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்கான சூழலை சிறப்பானதாக்குவதற்காக மற்றும் சிறப்பாக்க முயற்சிப்பதற்காக வேறுபட்ட விடயங்களைச் செய்துள்ள வேறுபட்ட நபர்களின் கதைகளைக் கேட்டிருந்தோம். அத்துடன், நாம் எமது சமுதாயங்களில் உள்ள மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளையும் நினைவுபடுத்திக் கொண்டோம் (எமது நகரத்தின் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் வரைபடமுள்ள நகர்வு விளக்கப்படத் தாள்களை சுட்டிக் காட்டுங்கள்).

நாங்கள் இப்போது சமுதாய மட்டத்தில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக மற்றும் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தப்படக்கூடிய வேறுபட்ட உத்திகளைப் பற்றிக் கற்கப் போகின்றோம். அத்துடன் எமது சமுதாயத்தில் உள்ளதாக நாம் அடையாளம் கண்டுள்ள பிரச்சினைகளைக் கையாள்வதற்கு இவ் உத்திகளை நாம் எவ்வாறு பயன்படுத்த முடியுமென்பது பற்றி சிந்திக்கப் போகிறோம்.




ஆகவே, உத்திகள் என்பதன் மூலம் நாங்கள் எதை குறிப்பிடுகின்றோம்? உத்திகள் என்பன, ‘இலக்கொன்றினை அடைவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் தொகுதியொன்றாகும்’ என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றன.



மனித உரிமைகள் செயற்பாடு தொடர்பில் நான்கு வகையான உத்திகள் காணப்படுகின்றன. இந்நான்கு வகையான உத்திகளையும் இலகுவாக விளக்குவதற்காக, மனித உரிமை மீறல்களுக்கான உருவகமாக தீயினைக் கொண்டு சிந்திந்துப் பார்க்க முடியும். இங்கு தீ எனும்போது, அது எமது உடலை சூடாக்கிக் கொள்வதற்காக நாம் சுற்றி அமர்ந்து கொண்டு மூட்டுகின்ற தீயல்ல, மாறாக, ஆபத்தான, கட்டுப்பாடுகளைத் தாண்டியுள்ள தீ. மனித உரிமை மீறல்களைப் போலவே, தீயும் மக்களை ஊறுபடுத்துகின்றது, மன உளைச்சலுக்கு ஆளாக்குகின்றது, காயப்படுத்துகின்றது, கொல்கின்றது மற்றும் ஆதனம் மற்றும் நிலங்களை அழிக்கின்றது.

ஆகவே, நாங்கள் எவ்வாறு தீயினை அணைக்கின்றோம்? நாங்கள் நான்கு வகையான விடயங்களைச் செய்கின்றோம்:

### அ. அவசரகால உத்திகள்




அவசரகால உத்திகள் என்பன தீ பற்ற ஆரம்பிப்பதற்கு முன்னரே அதனை அணைத்தல், மற்றும் மக்களை காப்பாற்றுதல் பற்றியதாகும்.

பிள்ளையொன்று தீக்குச்சிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் அவற்றை ஊதி அணைத்துவிட்டு தீக்குச்சிகளை பிள்ளையிடமிருந்து எடுத்துக் கொள்வீர்கள்! நீங்கள் தீப்பற்ற ஆரம்பிப்பதனைத் தடுப்பதற்கு முயற்சி செய்வீர்கள்.

நீங்கள் தாமதமாக சென்று, ஏற்கனவே சிறியளவில் தீப்பற்ற ஆரம்பித்திருப்பின், அதனை தீயணைப்பான் அல்லது ஒரு வாளித் தண்ணீரினூடாக நீங்களாகவே அணைக்க முயற்சி செய்வீர்கள். தீயை அணைப்பதனூடாக நீங்கள் ஆபத்திலுள்ள நபர்கள் மற்றும் ஆதனத்தினைப் பாதுகாப்பதற்கு முயற்சி செய்வீர்கள். தீ பெரிய அளவில் பரவியிருந்தால், நீங்கள் தீயணைப்பு படையிடமிருந்து உதவி கோருவீர்கள் மற்றும் நபர்களை வெளியேறும்படி எச்சரிப்பீர்கள்.

மனித உரிமைகளுக்கான அவசரகால உத்திகள் இவை போன்றனவே! குறிப்பிட்ட நபர்களுக்கு குறிப்பிட்ட இடங்களில் இடம்பெறுகின்ற அல்லது இடம்பெறவுள்ள மனித உரிமைத் துஷ்பிரயோகங்களைக் கையாள்வதற்காக நாம் அவசரகால உத்திகளைப் பயன்படுத்துகின்றோம். அது துஷ்பிரயோகத்தினைத் தடுப்பதற்காக அல்லது நிறுத்துவதற்காக மற்றும் நபர்களை காப்பாற்றுவதற்காக நேரடியாக தலையிடுதலை குறிக்கும் அல்லது அது உதவி கோருதலை மற்றும் ஆபத்திலுள்ள நபர்களை எச்சரித்தலைக் குறிக்கும்.




ஆகவே, எவ்வகையான மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல்கள் தொடர்பில் அவசரகால உத்திகளைப் பயன்படுத்தலாம்? தொந்தரவு, வெறுப்பு பேச்சு, தாக்குதல்கள், ஆதனத்தினை சேதப்படுத்தல், வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல், வகுப்புவாத வன்முறை மற்றும் தன்னிச்சையான கைது என்பன குறிப்பிட்ட நபர்களுக்கு அல்லது குழுக்களுக்கு, குறிப்பிட்ட இடங்களில், குறிப்பிட்ட நேரங்களில் நடக்கக்கூடிய மீறல்களுக்கான உதாரணங்களாகும்.

அவசரகால உத்திகள் இதுபோன்ற உடனடியான நிகழ்வுகளுக்கான துலங்கல்களை செய்கின்றபோதும், அவற்றுக்காக நாம் தயாராயிருக்க வேண்டியதும் அவசியமாகும். என்ன செய்ய வேண்டுமென தெரிந்திருக்க வேண்டும். தீயணைப்பு படையின் தொலைபேசி இலக்கத்தை தெரிந்து வைத்திருத்தல், தீயணைப்பானை எவ்வாறு பயன்படுத்துவதென தெரிந்து வைத்திருத்தல் போலவே, மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றபோது, அவற்றைத் தடுப்பதற்கான, நிறுத்துவதற்கான, உதவி கோருவதற்கான வழிமுறைகளைத் தெரிந்து வைத்திருக்க முடியும்.

## ஆ. மாற்றத்திற்கான உத்திகள்



சில காரணங்களினால்தான் தீ பற்றும் மற்றும் பரவும் - உதாரணமாக, ஆபத்தான மின்விநியோக சுற்றினால். மாற்றத்திற்கான உத்திகள் என்பன தீ பற்றுவதற்கு காரணமாய் அமைகின்ற சந்தர்ப்பங்களை மாற்றுவது தொடர்பானதாகும் - உதாரணமாக, மின்விநியோக சுற்று பாதுகாப்பானது என்பதனை உறுதிப்படுத்துவதற்கான கட்டிட ஒழுங்குவிதிகள் காணப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல்.

மனித உரிமை மீறல்களும் சில காரணங்களினால்தான் இடம்பெறுகின்றன- உதாரணமாக, நபர்களை பாதுகாப்பதற்கு தேவையான விதிகளை சமூகம் கொண்டிருக்காமையினால் அல்லது அவ்விதிகள் பின்பற்றப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்தவேண்டிய நபர்கள் அதனை செய்யத் தவறுகின்றமையினால். ஏனெனில், சமூகம் தவறான முறையில் பிணைக்கப்பட்டுள்ளது.

---




விதிகளை அல்லது விடயங்கள் செய்யப்படுகின்ற வழிமுறைகளை மாற்றுவது குறித்து நபர்களை இணங்கச்செய்வதனூடாக மட்டுமே பல மனித உரிமை மீறல்களைத் தீர்க்க முடியும். நாங்கள் அதனை 4 வேறுபட்ட வழிகளில் செய்ய முடியும்:

- பிரச்சினையினை அடிக்கோடிட்டுக் காட்டுவதற்காக பிரச்சாரம் மற்றும் ஆர்ப்பாட்டம் செய்வதனூடாக
- இப்பிரச்சினை தொடர்பாக எதையேனும் செய்யக்கூடிய விடயங்களை மாற்றுவது தொடர்பில் அதிகாரத்தினைக் கொண்டுள்ள நபர்களை இணங்க வைப்பதனூடாக- நாங்கள் இதனை ஆதரித்து வாதாடல் என அழைப்போம்.
- நபர்கள் வித்தியாசமாக நடந்துகொள்வதற்காக அவர்களுக்கு சலுகைகளை அளிப்பதனூடாக
- அல்லது தீய சட்டங்கள் அல்லது சமூக நியமங்களை நாம் ஏற்றுக் கொள்வதில்லை என காண்பிப்பதற்காக அவற்றை அமைதியானமுறையில் எதிர்ப்பதனூடாக.

இவையே மாற்றத்திற்கான உத்திகளாகும். இவை பல இடங்களில் அதிகமான நபர்களைப் பாதிக்கின்ற நீண்ட - கால, திட்டவட்டமாகக் கட்டமைக்கப்பட்டுள்ள பிரச்சினைகளை மையப்படுத்துகின்றன.

## இ. கட்டியெழுப்புகின்ற உத்திகள்



தீ பரவலை நிறுத்துவதற்காக நாம் செய்யக்கூடிய வேறு வழிமுறையொன்று யாதெனில், பொது மக்கள் விழிப்புணர்வினை ஏற்படுத்தல் மற்றும் நடத்தைப்பாங்குகளை மாற்றுதலாகும், உதாரணமாக, காய்ந்த தரையில் சிகரெட் தீக்கந்தலை வீசுவதனால் ஏற்படும் ஆபத்து குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தல். நாங்கள் பொது மக்களின் ஈடுபாட்டினையும் கட்டியெழுப்ப முடியும்- தீயினைத் தடுப்பதற்கான திறன்களை கட்டியெழுப்புவதில் அதிகமான நபர்களை தன்னார்வ அடிப்படையில் இணைத்துக் கொள்ளல்- உதாரணமாக நபர்களுக்கு தீயணைப்பானை பயன்படுத்தும் முறை தெரிந்திருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்தல்.

மனித உரிமைகள் தொடர்பில், கட்டியெழுப்புகின்ற உத்திகளானவை, மனித உரிமைகள் கலாசரமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால பணியாகும். சமூகத்திலுள்ள அனைவரும் தங்களது மற்றும் ஏனையோரின் உரிமைகளை புரிந்துகொளகின்ற, மனித உரிமைகளுக்கான மதிப்பினை சாதாரணமானதொன்றாக மற்றும் உரிமையொன்றாக பார்க்கின்ற, ஏனைய நபர்களுடைய உரிமைகளை எப்படி மதிப்பது மற்றும் அவற்றுக்காக எப்படி போராடுவது மற்றும் உரிமைகள் மீறப்பட்டால் என்ன செய்வது என்பதனை அறிந்திருக்கின்ற சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்காக பணியாற்றுதலையே இது குறிக்கின்றது.




இத்தகைய சமூகமொன்றினைக் கட்டியெழுப்புதலானது 4 விடயங்கள் செய்யப்படுவதனை உள்ளடக்குகின்றது:

- மனித உரிமைகளின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அவை ஏற்படுத்துகின்ற சேதங்கள் தொடர்பான விழிப்புணர்வினைக் கட்டியெழுப்பல்.
- ஈடுபாட்டினைக் கட்டியெழுப்பல்- மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய அர்ப்பணிப்பினைக் கொண்டிருக்கக்கூடிய அதிகளவான நபர்களை உருவாக்கல்.
- திறன்களைக் கட்டியெழுப்புதல்- ஆகவே, நபர்களுக்கு மனித உரிமைகளை எவ்வாறு மேம்படுத்துவதென்பது தெரியும்.
- மற்றும் வேறுபட்ட இடங்களில் வேறுபட்ட விடயங்களைச் செய்கின்ற, ஆனால் பொதுவான இலக்குகளுக்காக ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் செயற்படுகின்ற நபர்கள் மற்றும் அமைப்புக்களின் வலையமைப்புக்களைக் கட்டியெழுப்பல்.

இவை மாற்றத்திற்கான முன்-நிபந்தனைகளை உருவாக்குகின்ற நீண்ட-கால உத்திகளாகும். நாங்கள் ஏனைய உத்திகளைப் பயன்படுத்துகின்றபோது நிற்பதற்கான ஒரு அடித்தளத்தினை இவ் உத்திகள் கட்டியெழுப்புகின்றன.

**ஈ. இறுதியாக, எங்களிடம் தேற்றுகின்ற உத்திகள் இருக்கின்றன.**



தீயைப் போலவே, மனித உரிமை மீறல்களும் மக்கள், ஆதனம் மற்றும் சமுதாயங்களை சேதப்படுத்துகின்றது. தேற்றுகின்ற உத்திகளானவை, மனித உரிமை மீறல்கள் இடம்பெற்ற பின்னர் அவற்றால் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிப்பதற்கு நாம் என்ன செய்கின்றோம் என்பது தொடர்பானது.

---




இது பகுதியளவில், நபர்கள் மீண்டு வருவதற்கு தேவையான மருத்துவ, மூலப்பொருள் மற்றும் உளவள ஆதரவினைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதனை உறுதிப்படுத்துவது தொடர்பானதாகும். ஆனால், இது கௌரவம் மற்றும் நீதி தொடர்பானதும் ஆகும்.

- நடந்தவற்றை மூடி மறைக்க முடியாது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அவற்றை ஆவணப்படுத்துவது தொடர்பானது
- என்ன நடந்தது என்பதனைப் பற்றி பேசவும் அவற்றை நினைவு கூரவும் நபர்களுக்கு வாய்ப்பினை வழங்குவது தொடர்பானது
- நபர்கள் நீதி மற்றும் நஷ்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்துவது தொடர்பானது.

**முடிவு**



செயலாற்றுவதற்கான இவ்வேறுபட்ட வழிகளனைத்தும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு முக்கியமானவையாகும். அவை ஒன்றையொன்று குறை முழுமையாக்குகின்றன, ஒன்றுடனொன்று பொருந்துகின்றன என்பதுடன் அவற்றை ஒரே நேரத்தில் பயன்படுத்தவும் முடியும்.

எந்தவொரு நபரோ அல்லது ஒரு அமைப்போ, இவ் அனைத்து உத்திகளையும் பயன்படுத்த முடியாது- எமக்கு காணப்படுகின்ற வேறுபட்ட வகிபாகங்கள், திறன்கள் மற்றும் வாய்ப்புக்கள் என்பன எவ் உத்தியினைப் பயன்படுத்துவது என்ற எமது தெரிவில் சரியான முறையில் தாக்கம் செலுத்துகின்றன. முக்கியமான விடயம் யாதெனில் ஒவ்வொருவரும் ஏதேனுமொன்றை செய்ய முடியும் என்பதுடன் எங்களுக்கிடையில் ஒரே திசையை நோக்கி இழுக்கப்படுகின்ற நபர்கள் மற்றும் அமைப்புக்களின் வலையமைப்புக்களினூடாக நாங்கள் மாற்றத்தினை ஏற்படுத்த முடியும்.

நாம் அனைவரும் தீ போன்ற மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதனை நிறுத்துவதற்கு மற்றும் எங்களுடைய வீடுகளில் மற்றும் சமுதாயங்களில் மற்றும் எங்களுடைய அரசாங்கங்களால் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுகின்ற சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிக்க முடியும்.

**அங்கீகரிப்பு:**
இம்முன்வைப்பானது, Center for Victims of Torture இனால் நடத்தப்படுகின்ற மனித உரிமைகளில் புதிய உத்திகள் என்ற செயற்திட்டத்தினால் ஆக்கப்பட்டுள்ள உத்திகளுக்கான முறையியல் கட்டமைப்பின் மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தினால் ஈர்க்கப்பட்டுள்ளது மற்றும் அதனை பயன்படுத்தியுள்ளது. www.newtactics.org

# மாற்றமுண்டாக்குநர்களின் கதைகள்

***அமர்வுத் திட்டம் 6 இல் காணப்படும் மாற்றமுண்டாக்குநர் கதைகளுக்கான சிறிய குழுக்களின் பயிற்சியினை அறிமுகம் செய்யும் வேளை பின்வரும் கதைகள் வாசிக்கப்படும் அமர்வுக்கான பவர்பொயின்ட் இன் 3–10 வரையான ஸ்லைடுகளின் மூலம் விளக்கப்பட்டுள்ளது***

## ராகுலின் கதை, இந்தியா

ராகுல் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள பாகல்பூரில் வசித்து வருகிறார். நகரத்தின் மக்கள்தொகையில் சுமார் 80% இந்துக்கள் மற்றும் 18% முஸ்லீம்கள், மேலும் நகரம் வன்முறை வரலாற்றைக் கொண்டுள்ளது. 1989 இல், 50,000 மக்களை இடம்பெயர்ந்த கலவரத்தில் 1000க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

நகரில் உள்ள மதநல்லிணக்க அமைதி மையத்தில் இந்து மதத்தைச் சேர்ந்த ராகுல் ஈடுபட்டுள்ளார். பிளவுகளுக்கு அப்பால் உறவுகளையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்ப அவர்கள் வேலை செய்கிறார்கள், உதாரணமாக சமாதானக் குழுக்கள் மூலம், வருடாந்திர கலாச்சார விழாவை ஏற்பாடு செய்வதன் மூலமும் மற்றும் மதத் தலைவர்களை இணைப்பதன் மூலமும். இந்த நீண்ட கால அமைதிப் பணியானது, நிகழ்வுகள் கட்டுப்பாட்டை மீறிச் செல்லத் தொடங்கும் போது, அவசர நடவடிக்கை எடுக்கக்கூடிய அடித்தளமாக அமைகிறது. இது அடிக்கடி தேவைப்படுகின்ற ஒரு விடயமாகக் காணப்பட்டது.

குறிப்பாக தேர்தல் பிரசாரங்களின் போது வன்முறைகள் ஏற்படுவது சாதாரணமான ஒரு விடயமாக காணப்பட்டது. 2019 இல், இந்து தேசியவாத தேர்தல் வேட்பாளர் ஒருவர் ஒரு முஸ்லீம் பகுதி வழியாக அணிவகுப்பினை நடத்தி கலவரத்தைத் தூண்டுவதற்காக வெறுப்பூட்டும் பேச்சுக்களைப் பயன்படுத்தினார். சில முஸ்லிம் இளைஞர்கள் கோபத்துடன் பதிலாக சத்தமிட்டபோது, வேட்பாளர் வன்முறையைத் தொடங்கினார், இதனால் கடைகள் மற்றும் வீடுகள் சேதமடைந்தன. கலவரம் மற்ற பகுதிகளுக்கும் பரவி வன்முறையாக மாறும் அபாயம் இருந்தது. இது எவ்வளவு ஆபத்தானது என்பதை ராகுலுக்கும் அவரது சகாக்களுக்கும் தெரிந்திருந்தது.

அடுத்த சில நாட்களில், ராகுலும் அவரது சகாக்களும் வன்முறை அபாயத்தில் உள்ள முஸ்லிம் மற்றும் இந்து சுற்றுப்புறங்களில் சமூகக் கூட்டங்களை நடத்தினர். அதில் அமைதித் தொண்டர்களின் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவர்கள் தங்கள் சொந்தப் பகுதிகளில் வீடு வீடாகச் சென்றனர்.

"ஆணும் பெண்ணுமாக சேர்ந்து செல்வது முக்கியம், ஏனெனில் கதவை யார் திறந்தாலும் அவர்களுடன் சுதந்திரமாகப் பேசக்கூடிய ஒருவர் இருப்பார்" என்று ராகுல் கூறுகிறார்.

தன்னார்வலர்கள் துண்டுப் பிரசுரங்களை வழங்கி, கலவரம் என்பது மத வேறுபாடின்றி அனைவருக்கும் எவ்வாறு மோசமாகிவிடும் என்பதை வலியுறுத்தி தங்கள் அயலவர்களிடம் பேசியும் அவர்களது பேச்சையும் செவிமடுத்தனர். அதிர்ஷ்டவசமாக இவ் அயலவர்களுடனான கூட்டங்கள் மற்றும் தன்னார்வலர்கள் நகரத்தின் நிலைமையை அமைதிப்படுத்த உதவினார்கள்

*கதை*

*மூலம்*
Centre for the Study of Society and Secularism, India

## ஒரு புத்தகத்தை அதன் அட்டையை வைத்து மதிப்பிடாதீர்கள் - மனித நூலகம்™, டென்மார்க்

*கதை*

1990 களின் நடுப்பகுதியில் நான்கு நண்பர்கள் நகர்ப்புற வன்முறைக்கு எதிராக பிரச்சாரம் செய்ய ஒரு இளைஞர் அமைப்பைத் தொடங்கினர். அதன் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்ததோடு டேனி' இசை விழாவின் அமைப்பாளர், விழா பார்வையாளர்களிடையே உரையாடலை வளர்ப்பதற்கான ஒரு நிகழ்விற்கான யோசனையைக் கொண்டு வருமாறு அவர்களிடம் கேட்டார். ஒரு “மனித நூலகம்” எனும் யோசனையை அவர்கள் கொண்டு வந்தனர், அதில் இருந்து பார்வையாளர்கள் மனித “புத்தகங்களை” கடன் வாங்கலாம் - தங்கள் அடையாளம் மற்றும் வாழ்க்கை அனுபவங்களைப் பற்றி மரியாதைக்குரிய உரையாடல்களில் ஈடுபட விரும்பும் நபர்கள்.

பொதுவாக மனித புத்தகங்கள் உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர், தங்கள் ‘கதையை’ மற்றவர்களுக்கு ஒரு கற்றல் அனுபவமாக அனுமதிக்க முன்வருகிறார்கள். தன்னார்வலர்கள் என்போர் பொதுவாக தங்கள் அடையாளத்தின் ஒரு பகுதியாக தவறான அபிப்பிராயம் அல்லது எண்ணத்துடன் தொடர்புடையவர்கள் - உதாரணமாக அவர்களின் மதம், நம்பிக்கை, இனம், பாலியல் நோக்குநிலை, இயலாமை அல்லது எச்.ஐ.வி.தொற்று போன்றவை. இது தவறான தகவலை அறிந்து அதன்மீது காட்டப்படும் எண்ணப்போக்கை குறைக்க உதவுகிறது. மனித நூலகம்™ அமைப்பு இப்போது 85 க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பாடுகளைக் கொண்டுள்ளது.

*மூலம்*
மனித நூலக நிறுவனம் www.humanlibrary.org

## செயல்பட தூண்டும் சக்தி, கிர்கிஸ்தான்

*கதை*

2010 புரட்சியைத் தொடர்ந்து, சகிப்புத்தன்மையற்ற நாசகாரரர்களின் ஒரு சிறிய கும்பல் புராட்டஸ்டன்ட் மற்றும் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ பிரிவுகளைச் சேர்ந்த வழிபாட்டுத் தலங்களை சூறையாடத் தொடங்கியது. தாக்குதல்கள் சுமார் ஆறு மாதங்கள் தொடர்ந்தன. பல புகார்கள் இருந்தபோதிலும், அரசு வழக்கறிஞர் அலுவலகம், மத விவகாரங்களுக்கான மாநில ஆணையம் அல்லது உள்துறை அமைச்சகம் ஆகியவற்றிலிருந்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்பிரச்னையை தாங்களாகவே கையாளும்படி, அதிகாரிகள் சமூகங்களுக்கு அறிவுறுத்தினர்.

விரக்தியடைந்த மதத் தலைவர்கள் ஒன்றுகூடி, சம்பவங்களையும் அதிகாரிகளின் செயலற்ற தன்மையையும் வெளிச்சம் போட்டுக் காட்ட தேசிய செய்தித்தாள் ஒன்றைத் தொடர்பு கொண்டனர். தகவலறிந்த ஜனாதிபதி இவ்விடயத்தை அவரது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததுடன் நான்கு நாட்களில் அனைத்து கும்பலைச் சேர்ந்தவர்களும் பிடிபட்டனர்.

*மூலம்*
Nellya Shakirova, Pastor, United Methodist Church in Bishkek.

# அமர்வு 7

## உத்திகள் பற்றி பேசுதல்

### அமர்வு பற்றிய கண்ணோட்டம்

மனித உரிமைகளின் மேம்பாட்டிற்கான உத்திகளைப் பற்றி ஆராய்தலானது அமர்வு 6 இல் ஆரம்பித்து அமர்வு 7 இலும் தொடர்கின்றது. கூட்டு கற்றல் குறிக்கோள்கள் மற்றும் ஒரே கற்றல் செயன்முறை என்பவற்றினூடாக அமர்வு 6 மற்றும் 7 என்பன "இணைக்கப்பட்டுள்ளன" - இவ் அமர்வின் கற்றல் குறிக்கோள்களுக்காக தயவுசெய்து அமர்வு 6 இற்கான அமர்வுத் திட்டத்தினைப் பார்க்கவும். உங்கள் குழுவின் உரையாடும் தன்மையைப் பொறுத்து இவ்வமர்வு திட்டமிட்ட இரண்டு மணி நேரத்தினை விட குறைவான நேரத்தினை எடுக்கலாம்.

***அமர்வின் உள்ளடக்கங்கள் மற்றும் நேரவிபரங்கள்***

| | |
|---|---|
| முன்னைய அமர்வில் முன்வைக்கப்பட்ட 4 வகையான உத்திகள் தொடர்பில் நபர்களுக்கு ஞாபகப்படுத்துங்கள். | 5 நிமி |
| ***குழுக் கலந்துரையாடல்: உத்திகள் பற்றி பேசுதல், பகுதி 1***<br>பங்குபற்றுநர்கள் மாற்றத்திற்கான, கட்டியெழுப்புகின்ற மற்றும் தேற்றுகின்ற உத்திகளைப் பற்றி கலந்துரையாடுகின்றனர் மற்றும் அவற்றை அவர்களுடைய சூழமைவில் பயன்படுத்துவதற்கான வழிகளைப் பற்றி சிந்திக்கின்றனர். | 50-65 நிமி |
| ***உற்சாகப்படுத்துகின்ற செயற்பாடு: தலை முதல் கால் விரல் வரை***<br>இவ் உடற்சார் பயிற்சியில் பங்குபற்றுநர்கள் நெறியாளரின் அசைவுகளை பிரதி செய்வார்கள். | 5 நிமி |
| ***முழுக்குழு கலந்துரையாடல்: உத்திகளைப் பற்றி பேசுதல், பகுதி 2***<br>குழு வேலையிலிருந்து தோன்றிய செயற்பாட்டிற்கான யோசனைகளைப் பற்றிய பிரதான கலந்துரையாடல். | 20-40 நிமி |
| ***நிறைவு செய்கின்ற பயிற்சி: உணர்ச்சிக் குறியீடுகள்***<br>பங்குபற்றுநர்கள் அவர்கள் கற்றுக்கொண்ட விடயங்கள் தொடர்பாக என்ன உணர்கின்றார்கள் என்பதனை மனித சிற்பங்களைப் மூலம் காட்டுவார்கள். | 5 நிமி |
| ***மொத்த நேரம்*** | ***2 மணி நேரம் வரை*** |

***தயாராகுங்கள்***

பக்கம் 15 இல் உள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயாராவது' என்பதில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய அமர்விற்கு தயாராகுங்கள். நினைவிற் கொள்ளுங்கள் – உங்கள் குழுவைப் பற்றி உங்களுக்கு தெரியும்! உங்களுடைய குழுவின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கேற்ப அமர்வின் எந்தவொரு கூறினையும் ஏற்பதற்கு மாற்றுவதற்கு அல்லது நீக்குபோக்கு செய்து கொள்வதற்கு உங்களால் முடியும்.

***இவ் அமர்விற்கான வளங்கள்***

பக்கம் 16 இல் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு அமர்விற்குமான நியம வளங்களுக்கு மேலதிகமாக, இவ் அமர்வினை நடத்துவதற்கு உங்களுக்கு கீழ்வரும் வளங்கள் தேவைப்படும்:

- 'மாற்றத்திற்கான', 'கட்டியெழுப்புகின்ற' மற்றும் 'தேற்றுகின்ற' உத்திகள் மற்றும் கதை சுவரொட்டிகளின் அச்சுப் பிரதிகள்.
- மாற்றத்திற்கான, கட்டியெழுப்புகின்ற மற்றும் தேற்றுகின்ற உத்திகள் ஒவ்வொன்றுக்குமான 'செயற்பாட்டிற்கான யோசனைகள்: உத்தியின் பெயர்' – எனத˙ தலைப்பிடப்பட்ட முன் தயாரிக்கப்பட்டுள்ள மூன்று நகர்வு விளக்கப்படத் தாள்கள்.
- 'செயற்பாட்டிற்கான யோசனைகள்: அவசரகால உத்திகள்' எனத் தலைப்பிடப்பட்ட நகர்வு விளக்கப்படத் தாள் அமர்வு 6 இலிருந்து.
- 'எமது நகரத்தின் ம.அ.ந.சு இன் வரைபடம்' உள்ளடக்கப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாள் அமர்வு 5 இலிருந்து.
- அதிகமான ஒட்டும் குறிப்பெழுதும் தாள்கள் மற்றும் பேனைகள்.

இந்த அமர்வுக்கான ***துணைவளங்களை*** இங்கே காணலாம்.

***அறையினைத் தயார்ப்படுத்துங்கள்***

அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர, கதிரைகளை முன்னோக்கிப்பார்த்தவாறு வட்ட வடிவில் ஒழுங்கு செய்யுங்கள்.

மாற்றத்திற்கான, கட்டியெழுப்புகின்ற மற்றும் தேற்றுகின்ற உத்திகள் மற்றும் கதை சுவரொட்டிகளை, பங்குபற்றுநர்கள் சுற்றி அமரக்கூடிய மூன்று தனியான மேசைகளில் (ஒரு மேசையில் ஒரு வகை)வையுங்கள். அதனுடன் இணைகின்ற 'செயற்பாட்டிற்கான யோசனைகள்' நகர்வு விளக்கப்படத்தாளினை சுவரொட்டிகள், மற்றும் குறிப்பெழுதும் தாள்கள் மற்றும் பேனைகளுடன் மேசை மீது வையுங்கள்.

'ம.அ.ந.சு' இன் வரைபடம் வரையப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாள்கள் (அமர்வு 5 இலிருந்து), அவசரகால உத்திகளுக்கான சுவரொட்டிகள் மற்றும் 'செயற்பாட்டிற்கான யோசனைகள்: அவசரகால உத்திகள்' நகர்வு விளக்கப்படத் தாள் (அமர்வு 6 இலிருந்து) என்பனவற்றை சுவர்களில் ஒட்டிக் கொள்ளுங்கள்.



'உத்திகள் பற்றி பேசுதல்'

"இது ஒரு அற்புதமான அமர்வு. மனித உரிமை மீறல்களுக்கு பதிலளிப்பதற்கான முழு அளவிலான வழிகளைக் கண்டறிய இந்த நடவடிக்கைகள் பங்கேற்பாளர்களுக்கு உதவியது. சுவரொட்டிகள் உத்திகளின் யோசனையைப் புரிந்துகொள்ளவும், சமூகத்தில் மனித உரிமைகளை மேம்படுத்துவதில் அவர்கள் ஆற்றக்கூடிய பாத்திரங்களைப் பற்றி சிந்திக்கவும் உதவியது. வெவ்வேறு பங்கேற்பாளர்கள் வெவ்வேறு உத்திகளை பயன்படுத்துவதைக் காணலாம்."

**HAMMAM HADDAD**, நெறியாளர், ஜோர்தான்

# விரிவான அமர்வுத் திட்டம்

## 1.வரவேற்பு மற்றும் அறிமுகம் 5 நிமி

குறும்பேச்சு

***நோக்கம்***

முன்னைய அமர்வில் முன்வைக்கப்பட்ட, மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கான 4 வகையான உத்திகள் தொடர்பில் நபர்களுக்கு ஞாபகப்படுத்துதல்.

*வளங்கள்*

அமர்விற்கான பவர்பொயின்ட் அல்லது உத்திகளின் சுருக்கமடங்கிய சுவரொட்டி (உத்திகள் சுவரொட்டி ஆவணத்தில் பக்கம் 2 இல் காணப்பட்டது).

***என்ன சொல்ல வேண்டும்***

அனைவரையும் அமர்விற்கு வரவேற்றுக் கொள்ளுங்கள். பவர்பொயின்ட் ஸ்லைட் 3 இனை அல்லது உத்திகளின் சுருக்கமடங்கிய சுவரொட்டியினைக் காட்டி கீழ்வரும் விடயங்களைக் கூறுங்கள்.

இறுதி அமர்வில், நாம் மனித உரிமை மீறல்களைக் கையாள்வதற்கு பயன்படுத்தக்கூடிய உத்திகள் பற்றிப் பார்த்தோம். நாம் மனித உரிமைகளை பிரதிபலிப்பதற்காக தீயின் படத்தைப் பயன்படுத்தியதுடன், நாம் தீயினைக் கையாள்கின்ற வழிமுறைகள் குறித்து பேசியிருந்தது உங்களுக்கு நினைவிருக்கிறதா?

- நாங்கள் தீ பரவுவதனைத் தடுத்தோம் என்பதுடன் தீயினை நிறுத்தினோம், உதவி கோரினோம் மற்றும் நபர்களை எச்சரித்தோம். இவை அவசரகால உத்திகளாகும்.
- சிறப்பான தீ பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் மற்றும் ஆபத்தான பொருட்கள் மீதானத் தடைகளுக்காக போராட்டம் மற்றும் இணங்கவைத்தல் அல்லது ஆதரித்துவாதாடல் செயன்முறையினூடாக பிரச்சாரம் செய்கின்றோம். இவை மாற்றத்திற்கான உத்திகள்.
- நாங்கள் பொது மக்களின் விழிப்புணர்வு, ஈடுபாடு மற்றும் திறன்களைக் கட்டியெழுப்புகின்றோம். ஆகவே, அவர்களுக்கு தீயினை எவ்வாறு தடுப்பது மற்றும் நிறுத்துவது என்பது பற்றித் தெரியும். இவை கட்டியெழுப்புகின்ற உத்திகளாகும்.
- அத்துடன், நாம் தீயினால் பாதிக்கப்பட்டவர்களையும் பராமரிக்கிறோம், மரணித்தவர்களை நினைவுகூருகின்றோம் என்பதுடன் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு நீதி மற்றும் நஷ்ட ஈட்டினை நாடுகின்றோம். இவை அனைத்தும் தேற்றுகின்ற உத்திகளாகும்.

அவசரகால, மாற்றத்திற்கான, கட்டியெழுப்புகின்ற மற்றும் தேற்றுகின்ற உத்திகள் என்பன மனித உரிமை மீறல்களைக் கையாள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய நான்கு வகையான உத்திகளாகும்.

இறுதி அமர்வில், நாம் அவசரகால உத்திகளைப் பற்றி கலந்துரையாடினோம் என்பதுடன், எமது சமுதாயத்தில் இடம்பெறுகின்ற வெறுப்புப் பேச்சு அல்லது தொந்தரவு போன்ற பிரச்சினைகளை அவசரகால உத்திகளைப் பயன்படுத்தி கையாள்வதற்கான செயற்பாட்டு யோசனைகள் தொடர்பிலும் சிந்தித்திருந்தோம்.

இவ் அமர்வில், நாங்கள் ஏனைய மூன்று வகையான உத்திகள் தொடர்பில், அதாவது, மாற்றத்திற்கான உத்திகள், கட்டியெழுப்புகின்ற உத்திகள் மற்றும் தேற்றுகின்ற உத்திகள் தொடர்பில ்சிந்தனை. செய்யப் போகின்றோம்.

## 2. குழுக் கலந்துரையாடல்: உத்திகளைப் பற்றி பேசுதல் 50-65 நிமி



குழுப்பயிற்சி

***விவரணம்***

குழுக்கள் உத்திகளின் 3 வகைகளை ஒவ்வொன்றாகப் பார்த்தபடி மேசைகளை சுற்றி வருவார்கள். அவர்கள் அவ் உத்திகளைப் பயன்படுத்துகின்ற நபர்களின் கதைகளை வாசிப்பதுடன் செயற்பாட்டிற்கான யோசனைகளை சிந்திப்பார்கள்.

***நோக்கம்***

செயற்பாட்டிற்கான திட்டவட்டமான யோசனைகளை சிந்திப்பதனூடாக பங்குபற்றுநர்கள் தங்களது சூழமைவில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக இக்கற்றலைப் பிரயோகிப்பதற்கு ஏற்றவகையில் உத்திகள் பற்றியக் கற்றலை மீள வலியுறுத்தல் மற்றும் ஆழமானதாக்கல்.

***வளங்கள்***

- பவர்பொயின்ட் ஸ்லைட் 4 (குழு கலந்துரையாடல் அறிவுறுத்தல்கள்) அல்லது அவ் அறிவுறுத்தல்கள் எழுதப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாள்.
- மாற்றத்திற்கான, கட்டியெழுப்புகின்ற மற்றும் தேற்றுகின்ற உத்திகள்/ கதைகளுக்கான சுவரொட்டிகள் அனைத்தினதும் அச்சுப்பிரதி.
- 'செயற்பாட்டிற்கான யோசனைகள்: உத்தியின் பெயர்' எனத் தலைப்பிடப்பட்ட நகர்வு விளக்கப்படத் தாள்கள் (ஒவ்வொரு வகை உத்திக்கும் ஒன்று என்ற வகையில் மூன்று வகையான உத்திகளுக்குமானது).
- குறிப்பெழுதும் ஒட்டுத்தாள்களும் பேனைகளும்.

***முன்னாயத்தம்***

மேலே 'அறையினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்' என்பதன்கீழே விபரிக்கப்பட்டுள்ள முறைக்கமைய, உத்திகள்/கதைகளுக்கான சுவரொட்டிகள் மற்றும் செயற்பாட்டிற்கான யோசனைகளின் நகர்வு விளக்கப்படத் தாள்களை மூன்று மேசைகளில் வைக்கவும் (ஒரு மேசையில் ஒரு வகை உத்தி, உதாரணமாக, கட்டியெழுப்புகின்ற உத்தி).

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 5 நிமி

பயிற்சியின்போது, பவர்பொயின்ட் ஸ்லைட் 4 இனை கலந்துரையாடல் வழிமுறைகள் உள்ள நகர்வு விளக்கப்படத் தாளினைக் காட்டுங்கள்.

கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:

- நாங்கள் குழுவாக சிந்திக்கின்ற பயிற்சியொன்றினை செய்யப் போகிறோம். நாங்கள் மூன்று குழுக்களில் மூன்று வகையான உத்திகள் பற்றி – மாற்றத்திற்கான உத்திகள், கட்டியெழுப்புகின்ற உத்திகள் மற்றும் தேற்றுகின்ற உத்திகள் – கலந்துரையாடப் போகின்றோம். ஒவ்வொரு குழுவும் சுவரொட்டிகளை வாசிப்பதற்கும் ஒரு வகை உத்தி தொடர்பிலான யோசனைகளை சிந்திப்பதற்கும் 20 நிமிடங்களைக் கொண்டிருக்கும். அதற்கு பின்னர், குழு அடுத்த உத்தியினைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு அடுத்த 20 நிமிடங்களை செலவழிக்கும். அதன்பின்னர் மீண்டும் கலந்துரையாடும்.

- வாசியுங்கள் மற்றும் சிந்தியுங்கள்: நீங்கள் உங்களுடைய சுவரொட்டிகளுக்கு அருகில் வருகின்றபோது, முதலில் அவற்றை வாசிப்பதற்கும் அவற்றைப் பற்றியும் மற்றும் முன்னைய குழுக்களினால் விட்டுச் செல்லப்பட்டுள்ள குறிப்பெழுதும் தாள்களில் எழுதப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாட்டிற்கான யோசனைகள் தொடர்பில் சிந்திப்பதற்கும் சில நிமிடங்களை செலவழியுங்கள்.

- சிந்தியுங்கள்: பின்னர், நாங்கள் ம.அ.ந.சு இற்கான வரைப்படத்தில் (இவ்வரைரைபடமுள்ள நகர்வு விளக்கப்படத் தாள்களை சுட்டிக்காட்டுங்கள்) அடையாளப்படுத்திய பிரச்சினைகள் தொடர்பில் சிந்தித்து, அப்பிரச்சினைகளைக் கையாள்வதற்கு இவ் உத்திகளைப் பயன்படுத்தக்கூடிய பல வழிமுறைகளை சிந்தியுங்கள்.

- உங்களுடைய யோசனைகளை குறிப்பெழுதும் ஒட்டுத்தாள்களில் எழுதி, அவற்றை சுவரொட்டிகளுக்கு அருகிலுள்ள 'செயற்பாட்டிற்கான யோசனைகள்' தாளில் ஒட்டுங்கள். குறிப்பெழுதும் தாள்களில் தெளிவாக எழுதுங்கள், அப்போதுதான் ஏனைய நபர்களால் அவற்றை வாசிக்க முடியும். இக்கட்டத்தில், அவ் யோசனைகள் நடைமுறை சாத்தியமுள்ளனவா என நீங்கள் சிந்தித்திருக்க வேண்டியது அவசியமில்லை – எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஆக்கத்திறனுடன் சிந்தியுங்கள்!

- எங்களுடைய நாளாந்த வாழ்க்கையில் தனிநபர்களாக நாங்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் குழுக்களாக - பெரும்பாலும் எமது மத சமுதாயங்கள், தொழிலிடங்கள் அல்லது இளைஞர் குழுக்களினூடாக அல்லது செயற்படுகின்ற நோக்கத்திற்காக நாம் புதிதாக குழுவொன்றினை இணைத்து அக்குழுவினூடாக - நாம் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றி சிந்தியுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 45-60 நிமி
பங்குபற்றுநர்களை மூன்று குழுக்களாக பிரியுங்கள். ஒவ்வொரு குழுவும் எந்த வகை சுவரொட்டிகளுடன் தங்களது செயற்பாட்டினை ஆரம்பிக்க வேண்டுமென கூறி அச்சுவரொட்டிகளை நோக்கி அவர்களை அனுப்புங்கள். நேரம் நிறைவு பெற்றதும் அவர்கள் அடுத்த வகை சுவரொட்டிகளை நோக்கி செல்ல வேண்டுமென பங்குபற்றுநர்களுக்கு கூறுங்கள் – ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கு ஒருமுறை. குழு வேலையின்போது அவர்கள் அதனை எவ்வாறு செய்கிறார்கள் என்பதனைப் பார்ப்பதற்காக குழுக்களுக்கிடையில் செல்லுங்கள்.

(இப்பயிற்சியானது உற்சாகப்படுத்துகின்ற செயற்பாட்டிற்கு பின்னரான முழுக்குழு கலந்துரையாடலுடன் தொடரும்.)

### ***3. உற்சாகப்படுத்துகின்ற செயற்பாடு: தலை முதல் கால் விரல்கள் வரை*** 5 நிமி


***முழுக்குழுப் பயிற்சி***

***விவரணம்***
நெறியாளர் சொல்கின்ற மற்றும் செய்கின்ற விடயங்களைப் பங்குபற்றுநர்கள் பிரதி செய்கின்ற உடற்சார் செயற்பாடு. இதனை பல வழிகளில் மாற்றியமைத்துக் கொள்ள முடியும்.

***நோக்கம்***
உற்சாக அளவினை அதிகரித்தல்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது***
இது எங்களுடைய உற்சாக மட்டத்தினை அதிகரித்துக் கொள்வதற்கான நேரமெனப் பங்குபற்றுநர்களுக்கு கூறுங்கள், ஆகவே நாங்கள் தொடர்ந்தும் ஆக்கத்திறனுடன் செயற்பட முடியும். ஒவ்வொருவரையும் அருகிலுள்ள நபருடன் சிறிது இடைவெளிவிட்டு எழுந்து நிற்குமாறு கூறுங்கள். அடுத்த சில நிமிடங்களுக்கு நீங்கள் சொல்பவற்றையும் செய்பவற்றையும் பங்குபற்றுநர்கள் பிரதி செய்ய வேண்டுமென அவர்களுக்கு கூறுங்கள் – நீங்கள் சொல்பவற்றையும் செய்பவற்றையும் பங்குபற்றுநர்கள் திரும்பச் செய்தல் வேண்டும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது***
இது எங்களுடைய உற்சாக மட்டத்தினை அதிகரித்துக் கொள்வதற்கான நேரமெனப் பங்குபற்றுநர்களுக்கு கூறுங்கள், ஆகவே நாங்கள் தொடர்ந்தும் ஆக்கத்திறனுடன் செயற்பட முடியும். ஒவ்வொருவரையும் அருகிலுள்ள நபருடன் சிறிது இடைவெளிவிட்டு எழுந்து நிற்குமாறு கூறுங்கள். அடுத்த சில நிமிடங்களுக்கு நீங்கள் சொல்பவற்றையும் செய்பவற்றையும் பங்குபற்றுநர்கள் பிரதி செய்ய வேண்டுமென அவர்களுக்கு கூறுங்கள் – நீங்கள் சொல்பவற்றையும் செய்பவற்றையும் பங்குபற்றுநர்கள் திரும்பச் செய்தல் வேண்டும்.

### ***4. முழுக்குழு பின்னூட்டல்: உத்திகளைப் பற்றி பேசுதல்*** 20-40 நிமி

இது, 'உத்திகளைப் பற்றி பேசுதல்' குழுக் கலந்துரையாடல் பயிற்சியின் தொடர்ச்சியாகும்.


***முழுக்குழு கலந்துரையாடல்***

***இப்பயிற்சியினை எவ்வாறு தொடர்வது***
மேசைகளிலுள்ள மூன்று 'செயற்பாட்டிற்கான யோசனைகள்' நகர்வு விளக்கப்படத் தாள்களையும், முன்னைய அமர்விலிருந்து அவசரகால உத்திகளுக்கான செயற்பாட்டு யோசனைகள் எழுதப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாளினையும் எடுத்துக் கொள்ளுங்கள். நான்கு தாள்களையும், இடைவெளிவிட்டு சுவரில் மாட்டுங்கள்.

தாள்களிலுள்ள செயற்பாட்டிற்கான யோசனைகளை வாசிக்கும்பொருட்டு, அத்தாள்களைச் சுற்றியிருக்குமாறு பங்குபற்றுநர்களிடம் கூறுங்கள். சில நிமிடங்களுக்கு பின்னர், பங்குபற்றுநர்கள் தங்களுடைய சூழமைவில் பிரயோகிப்பதற்கான சிறந்த யோசனை எனக் கருதுகின்ற ஒரு யோசனையினைத் தெரிவு செய்யுமாறு கூறுங்கள். அவர்கள் நகர்வு விளக்கப்படத் தாளிலிருந்து அக் குறிப்பெழுதும் தாளை எடுத்துக் கொண்டு பின்னால் உட்கார வேண்டும் (பிரதான அமர்வு).

பங்குபற்றுநர்கள் தெரிவு செய்துள்ள யோசனை மற்றும் அதனை ஏன் தெரிவு செய்தார்கள் என்பதனை ஒவ்வொருவராக வரிசையாகக் கூறுமாறு சொல்லுங்கள். அவ் யோசனை சிறந்ததென வேறு யாரும் கருதினால் கைகளைத் தூக்கச் சொல்லுங்கள். கைதூக்கிய நபர்களுள் ஒருவரை அல்லது இருவரை, அவர்கள் ஏன் அதனை நல்ல யோசனை என நினைக்கிறார்கள் என கூறுமாறு சொல்லுங்கள்.

பகிர்ந்துக்கொள்வதற்கான வாய்ப்பு அனைவருக்கும் அளிக்கப்பட்ட பின்னர் நேரம் எஞ்சியிருப்பின், தங்களுக்கு மிகவும் பிடித்த, ஆனால் யாராலும் தெரிவு செய்யப்படாத வேறு ஏதேனும் செயற்பாட்டிற்கான யோசனைகள் உள்ளனவா என பங்குபற்றுநர்களிடம் கேளுங்கள்.

பங்குபற்றுநர்களால் தெரிவு செய்யப்பட்ட அனைத்து குறிப்பெழுதும் தாள்களையும் ஒன்றாக எடுத்து புதியதொரு நகர்வு விளக்கப்படத் தாளில் ஒட்டுங்கள் - அத்தாளிற்கு 'எங்களுக்கு பிடித்த செயற்பாட்டு யோசனைகள்' எனத் தலைப்பிடுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது***
பங்குபற்றுநர்கள் வழங்கிய அவர்களது யோசனைகள் தொடர்பில் அவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுங்கள். அத்துடன் அவர்களது முனைப்பான பங்குபற்றுகைக்காக அவர்களுக்கு நன்றி கூறுங்கள். நாங்கள் உத்திகள் மற்றும் செயற்பாட்டு யோசனைகள் பற்றிக் கற்ற விடயங்களை, செயற்பாட்டுத் திட்டங்களை ஆக்கவிருக்கின்ற இறுதி இரண்டு அமர்வுகளுக்கு எடுத்துச் செல்லப் போகின்றோம் என கூறி நிறைவு செய்யுங்கள்.

## 5. *நிறைவுப் பயிற்சி: உணர்ச்சிக் குறியீடுகள்* 5 நிமி

முழுக்குழுப் பயிற்சி

***விவரணம் மற்றும் நோக்கம்***
பங்குபற்றுநர்கள் தங்களது முகங்கள் மற்றும் உடல்களைக் கொண்டு, அவர்கள் உத்திகள் தொடர்பான அமர்வுகளில் என்ன கற்றுக் கொண்டார்கள் என்பதனைப் பிரதிபலிப்பதற்கான உணர்ச்சிக் குறியீடுகள்/சிற்பங்களை ஆக்குவார்கள். உங்களுக்கு நேரமில்லையாயின், நீங்கள் இப்பயிற்சியினைத் தவிர்க்க முடியும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது***
அனைவரையும் எழுந்து நிற்க சொல்லுங்கள். அவர்கள் உத்திகள் தொடர்பான அமர்வுகளில் கற்றுக் கொண்ட விடயங்கள் தொடர்பாக எவ்வாறு உணர்கின்றார்கள் என்பதனை விபரிக்கின்ற ஒரு சொல்லினை சிந்திக்குமாறு கூறுங்கள். அவ் உணர்வினை பிரதிபலிக்கக்கூடிய உணர்ச்சிக் குறியீடு அல்லது சிற்பத்தினை தங்களுடைய முகங்கள் மற்றும் உடலினைக் கொண்டு வெளிப்படுத்திக் காட்டுமாறு கூறுங்கள்.

ஒவ்வொருவரும் தங்களது உணர்வினை வெளிப்படுத்திக்காட்டிய பின்னர், வட்டத்தினூடாகச் சென்று அவர்கள் நினைத்த சொல் யாதென ஒவ்வொருவரிடமும் கேளுங்கள்.

***இப்பயிற்சி மற்றும் அமர்வினை எவ்வாறு நிறைவு செய்வது***
ஒவ்வொருவரும் கூறி முடித்ததும், சாதகமான மற்றும் எதிர்மறையான உணர்வுகள் இருந்தமையினை - உதாரணமாக, புதிய தகவல்களால் திகைப்படைந்துள்ளமை அல்லது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை மேம்படுத்துகின்ற பணியினை எண்ணி பயமடைந்துள்ளமை - உறுதிப்படுத்துங்கள்.

அமர்வானது பல தகவல்களை உள்ளடக்கியிருந்தது என்பதுடன் நாம் பல உத்திகள் பற்றிப் பார்த்தோம் என்பதனை கூறுங்கள். ஒரு நபர் அல்லது ஒரு அமைப்பு அனைத்தையும் செய்தலானது உபாயம் மிக்கதல்ல என்பதுடன் நடைமுறை சாத்தியமானதுமல்ல. இங்கு தேவைப்படுவது யாதெனில், வேறுபட்ட செயற்பாட்டாளர்கள் ஒன்றையொன்று நிறைவாக்குகின்ற விடயங்களை செய்தலாகும்.

இவ் அனைத்து உத்திகள் தொடர்பாகவும் நாம் ஆராய்வதன் நோக்கம், நாங்கள் யார் மற்றும் எமது சூழமைவு எத்தகையது என்பதனை அடிப்படையாகக் கொண்டு நாம் செய்வதற்கு சாத்தியமான மற்றும் உபாயம்மிக்க விடயங்களைக் கண்டறிவதே ஆகும். இறுதி இரண்டு அமர்வுகளில், நாங்கள் செயற்திட்டங்களை ஆக்குகின்றபோது, நாங்கள் பிரச்சினைகள் மற்றும் செயற்பாட்டு யோசனைகளைத் தெரிவு செய்வோம்.

எந்தவொரு நபராலும் அனைத்தையும் செய்ய முடியாது – ஆனால் நாம் அனைவரும் ஏதோ ஒன்றை செய்ய முடியுமென்பதுடன், நாங்கள் செய்கின்ற சிறிய சிறிய விடயங்கள் ஒன்றிணைந்து மாற்றமொன்றினை ஏற்படுத்தும்.

***மூலம்***
பேசும் உத்திகள்: மனித உரிமைகள் திட்டத்தில் புதிய உத்திகளை உருவாக்கிய உத்திகளின் மாதிரியின் தழுவலின் அடிப்படையில் அசல் பயிற்சி. www.newtactics.org

# அமர்வு 8

## மாற்றத்திற்கான எமது பயணம்

### ஆமர்வு பற்றிய கண்ணோட்டம்

கூட்டு கற்றல் குறிக்கோள்கள் மற்றும் ஒரே கற்றல் செயன்முறை என்பவற்றினூடாக அமர்வு 8 மற்றும் 9 என்பன ‘இணைக்கப்பட்டுள்ளன’. இவ் அமர்வுகளில், மாற்றத்தை நோக்கிய கட்புலனாகின்ற பயணமொன்று என்ற வடிவத்தில் செயற்திட்டமொன்றினை ஆக்குவதற்காக, பங்குபற்றுநர்கள் முன்னைய இரு அமர்வுகளில் விருத்தி செய்த அறிவு மற்றும் செயற்பாட்டிற்கான யோசனைகளைகளைப் பயன்படுத்துவார்கள்.

பங்குபற்றுநர்கள் தாம் செயலாற்ற விரும்புகின்ற பிரச்சினைகளை அடையாளம் காண்பார்கள் என்பதுடன் அவர்கள் இலக்குகளை ஆக்குதல், ஈடுபட்டுள்ள ஏனைய செயற்பாட்டாளர்களை அடையாளப்படுத்தல் மற்றும் எவ்வாறு அவர்களுடன் தொடர்புபடுத்துதல், உத்திகள் மற்றும் செயற்பாடுகளைத் தெரிவு செய்தல், செய்திகளை ஆக்குதல் மற்றும் அபாய நேர்வுகளை மதிப்பிடுதல் என்பவற்றினூடாக அப்பிரச்சினைகளை திட்டவட்டமானதாக்குகின்ற செயன்முறையினூடாக வழிநடத்தப்படுவார்கள்.

நேரத்தினைக் கருத்திற்கொண்டு, முழுமையாக விருத்தி செய்யப்பட்ட செயற்திட்டமொன்றினை உருவாக்குவதற்கு பதிலாக செயற்திட்டமொன்றினை ஆக்குவதற்கான திறன்களைக் கற்றுக் கொள்ளல் மற்றும் அவற்றைப் பயிற்சி செய்து பார்த்தலே இலக்காகக் கொள்ளப்படுகின்றது. ஆக்கப்படுகின்ற இச்செயற்திட்டங்கள் பங்குபற்றுநர்கள் பயன்படுத்துவதற்கு எண்ணியிருக்கின்ற உண்மையான திட்டங்களாக இருக்கலாம் அல்லது அவர்கள் ஈடுபடக்கூடிய மாற்றத்திற்கான எந்தவொரு செயன்முறையிலும் பிரயோகிக்கக்கூடிய திறன்களை அவர்களுக்கு வழங்குகின்ற பணியினைப் பூர்த்தி செய்கின்ற ‘பயிற்சிக்கான’ திட்டங்களாகவும் இருக்கலாம்.

### *கற்றல் குறிக்கோள்கள்*

இவ் அமர்வானது, செயற்திட்டங்களை ஆக்குகின்ற திறன்களை விருத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்துகின்றது.

அமர்வு 8 மற்றும் 9 இன் இறுதியில் பங்குபற்றுநர்கள் கீழ்வருவனவற்றை செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள்:

- சமுதாயத்தில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை மேம்படுத்தக்கூடிய எளிமையான செயற்திட்டங்களை ஆக்குதல்.
- சமுதாயத்தில் மதம் அல்லது நம்பிக்கைக்கான மேம்படுத்துவதற்கு சுதந்திரம் மற்றும் ஏனைய உரிமைகளை அவர்கள் தனிப்பட்டரீதியில் மேற்கொள்ளக்கூடிய திட்டவ்டமான நடவடிக்கைகளைப் பெயரிடுவார்கள்.
- சமுதாயத்தில் ம.அ.ந.சு மற்றும் ஏனைய உரிமைகளை மேம்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அர்ப்பணிப்பினை வெளிப்படுத்துவார்கள்.

பொருத்தமானவிடத்து பங்குபற்றுநர்கள்:

- பயிற்சியின் பின்னர் தங்களது செயற்திட்டங்களை அமுல்படுத்துவார்கள்.

*குறிப்பு*

நமது மனித உரிமைகள் அனைத்தும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவை. பொதுவாக, ம.அ.ந.சு இன் மீறல்கள் மற்ற உரிமைகளை மீறுவதை உள்ளடக்கியது – உதாரணமாக, பெண்களின் உரிமைகள், கல்விக்கான உரிமைகள், வேலைவாய்ப்பு அல்லது கருத்துச் சுதந்திரம். இதன் பொருள், ம.அ.ந.சு இற்கான சுதந்திரத்தை விளம்பரப்படுத்த, நாம் மற்றொரு உரிமையில் (கூட) கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

இந்த மற்றும் அடுத்த அமர்வின் போது பங்கேற்பாளர்கள் சிக்கல்களைத் தேர்ந்தெடுத்து செயல் திட்டங்களை உருவாக்குதில் இதை முன்னிலைப்படுத்த முயற்சிக்கவும்.

## அமர்வின் உள்ளடக்கங்கள் மற்றும் நேரவிபரங்கள்

| | |
|---|---|
| ***ஆரம்பப் பயிற்சி: என்னை முழுமையாக்குங்கள்***<br>குழுவிற்கு மற்றும் மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு ஒவ்வொருவரினதும் முழுமையாக்குகின்ற பங்களிப்புக்களின் முக்கியத்துவத்தினை பங்குபற்றுநர்களுக்கு ஞாபகப்படுத்துங்கள். | 5 நிமி |
| ***முழுக்குழு பயிற்சி: பிரச்சினை என்ன?***<br>பங்குபற்றுநர்கள் செயற்பாட்டுத் திட்டங்களை ஆக்குவதற்கான சிறிய எண்ணிக்கையிலான பிரச்சினைகளை அடையாளப்படுத்துவார்கள். | 52 நிமி |
| ***உற்சாகப்படுத்துகின்ற செயற்பாடு: மாற்றமொன்றினை ஏற்படுத்துங்கள்***<br>இது வேகமான, வேடிக்கையான மற்றும் உடற்சார் செயற்பாடொன்றாகும் - பங்குபற்றுநர்கள் குனிந்தவாறு 'மாற்றமொன்றினை ஏற்படுத்துங்கள்' என மிக மெதுவாக சொல்லிக் கொண்டு போவதிலிருந்து, அவர்கள் குதித்துக் கொண்டு 'மாற்றமொன்றினை ஏற்படுத்துங்கள்' என உரத்து சொல்லிக் கொண்டு போவது வரையான செயற்பாடு. | 5 நிமி |
| ***முன்வைப்பு: மாற்றத்திற்கான எமது பயணம்***<br>பயணமொன்றின் படத்தினைப் பயன்படுத்தி செயற்திட்டத்தினை ஆக்குகின்ற செயன்முறையினை விபரிக்கின்ற பிரதான செய்தி. | 10 நிமி |
| ***குழு பயிற்சி: மாற்றத்திற்கான எமது பயணம்***<br>பங்குபற்றுநர்கள் தாம் கற்றுக் கொண்டுள்ள செயன்முறையினைப் பயன்படுத்தி கட்புலனாகின்ற செயற்திட்டமொன்றினை ஆக்குவார்கள். | 45 நிமி |
| ***நிறைவு செய்கின்ற கருத்து*** | 3 நிமி |
| ***மொத்த நேரம்*** | ***2 மணி நேரம்*** |

## தயாராகுங்கள்

பக்கம் 15 இல் உள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயாராவது' என்பதில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய அமர்விற்கு தயாராகுங்கள். நினைவிற் கொள்ளுங்கள் – உங்கள் குழுவைப் பற்றி உங்களுக்கு தெரியும்! உங்களுடைய குழுவின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கேற்ப அமர்வின் எந்தவொரு கூறினையும் மாற்றுவதற்கு அல்லது நீக்குபோக்கு செய்து கொள்வதற்கு உங்களால் முடியும்.

***இவ் அமர்விற்கான வளங்கள்***

பக்கம் 16 இல் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு அமர்விற்குமான நியம வளங்களுக்கு மேலதிகமாக, இவ் அமர்வினை நடத்துவதற்கு உங்களுக்கு கீழ்வரும் வளங்கள் தேவைப்படும்:


- 'மாற்றத்திற்கான எமது பயணம்' கையேடு - ஒரு பங்குபற்றுநருக்கு ஒன்று.
- அமர்வு 5 இல் ஆக்ககப்பட்ட 'எமது நகரத்திற்கான மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் வரைபடம்' நகர்வு விளக்கப்படத் தாள்கள்.
- அமர்வுகள் 6-7 களிலிருந்து, 'செயற்பாட்டிற்கான யோசனைகள்' நகர்வு விளக்கப்படத் தாள்கள் ஐந்து.
- உத்திகளுக்கான சுவரொட்டிகள் அனைத்தும்.

இந்த அமர்வுக்கான ***துணைவளங்களை*** *இங்கே* காணலாம்.

***அறையினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்***

இவ் அமர்விற்கு, கதிரைகளை வட்டமாக வைத்து ஆரம்பித்தல் சிறந்த யோசனையாகும். 'மாற்றத்திற்கான எமது பயணம்' குழு வேலை பயிற்சிக்காக, ஒவ்வொரு குழுவிற்கும் பெரிய மேசை ஒன்று மற்றும் கதிரைகளைக் கொண்டிருத்தல் சிறந்ததாகும். அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னரே, வெறுமையான நகர்வு விளக்கப்படத் தாள்கள், பேனைகள் மற்றும் 'மாற்றத்திற்கான எமது பயணம்' கையேடுகள் என்பனவற்றை மேசையில் வையுங்கள்.

உசாத்துணை ஆவணங்களாக, 'ம.அ.ந.சு இன் வரைபடம்' மற்றும் 'செயற்பாட்டிற்கான யோசனைகள்' எழுதப்பட்டுள்ள அனைத்து நகர்வு விளக்கப்படத் தாள்கள், அதேபோல உத்திகளுக்கான சுவரொட்டிகளை சுவர்களில் ஒட்டுங்கள்.



‘மாற்றத்திற்கான எமது பயணம்’

“விநோதங்கள் நிறைந்த அமர்வு! பங்கேற்பாளர்கள் தங்கள் மாற்றத்திற்கான பயண வரைபடத்தை உருவாக்குவதில் மகிழ்ச்சி அடைந்தனர். பாடநெறியை முடித்த பிறகு அவர்கள் என்ன மாற்றங்களைச் செய்ய விரும்புகிறார்கள் என்பது பற்றி அவர்கள் அனைவருக்கும் உறுதியான யோசனைகள்.” இருந்தன.
**HIDAYA DUDE,** நெறியாளர், தன்சானியா

“செயல் திட்டமிடல் அமர்வுகளில் உள்ள செயல்பாடுகள் பங்கேற்பாளர்கள் தங்கள் திறன்களைக் கூர்மைப்படுத்த உதவுகின்றன - இதன் விளைவாக அவர்கள் மிகவும் பயனுள்ளதாக மாற்றம் ஏற்படுத்துபவர்களாக இருப்பார்கள்.”
**HAMMAM HADDAD,** நெறியாளர், ஜோர்தான

“பங்கேற்பாளர்கள் வாதமுன்வைப்பு, விழிப்புணர்வு மற்றும் அணிதிரட்டல் மூலம் நகரத்தில் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தை ஊக்குவிப்பதற்காக தொடர்ந்து இணைந்து செயல்படும் ஒரு குழுவை உருவாக்க முடிவு செய்தனர்.”
**UKOHA NGWOBIA,** நெறியாளர், நைஜீரியா

# விரிவான அமர்வுத் திட்டம்

## 1. ஆரம்பப் பயிற்சி: என்னை முழுமையாக்குங்கள் 5 நிமி

*முழுக்குழுப் பயிற்சி*

***விவரணம்***

பங்குபற்றுநர்கள் தமது இடதுபுறமிருக்கின்ற நபருக்கு அவரது முழுமையாக்குகின்ற பண்பொன்றினைக் கூறியவாறு வட்டத்தினைச் சுற்றிச் செல்வார்கள்.

***நோக்கம்***

ஒவ்வொரு நபரும் குழுவிற்கு கொண்டு வருகின்ற தனித்துவமான பண்புகள் மற்றும் திறன்களை வலியுறுத்திக் காட்டுதல் மற்றும் செயற்திட்டங்களை ஆக்குகின்ற செயன்முறையில் ஒவ்வொருவரினதும் பங்களிப்புக்கள் முக்கியமானவையாகக் காணப்படும் என்பதனை வலியுறுத்திக் காட்டுதல்.

***பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது***

வட்டமாக அமர்ந்துக் கொள்ளுங்கள். அனைவரையும் அமர்விற்கு வரவேற்றுக் கொள்ளுங்கள். அத்துடன், நாம் ஒவ்வொருவரிற்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதனூடாக இவ் அமர்வினை ஆரம்பிக்கப் போகின்றோம் என கூறுங்கள்!

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது***

ஒவ்வொருவரும் தங்களது இடதுபுறமிருக்கின்ற நபரைப் பார்த்து அவர் குழுவிற்கு கொண்டு வரக்கூடிய சிறந்த விடயம் யாதென சிந்திக்க வேண்டும் – உதாரணமாக நல்ல யோசனைகள், அனுபவம் அல்லது நகைச்சுவை உணர்வு.

ஒவ்வொரு நபரும் தங்களது இடதுபுறமிருக்கின்ற நபரை நோக்கித் திரும்பி, அந்நபர் குழுவிற்கு கொண்டு வரக்கூடிய விடயங்களை வெளிப்படுத்துகின்ற ஒன்று அல்லது இரண்டு சொற்களைக் கூற வேண்டும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது***

சிறப்பாகச் செயற்பட்டமைக்காக தங்களுக்கான கரகோஷங்களை எழுப்பிக் கொள்ளுமாறு குழுவிற்கு சொல்லுங்கள்! கீழ்வரும் விடயங்களை சொல்லுங்கள்:

- எங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்துவமான பண்புகள் காணப்படுகின்றன - நாங்கள் ஒருவரையொருவர் முழுமையாக்குகிறோம் என்பதுடன் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு இன்றியமையாதது ஆகும்.
- மனித உரிமைகளிற்கு மதிப்பளிக்கப்படுகின்ற சமுதாயங்களைக் கட்டியெழுப்புதலும் இதனைப் போன்றதே - நாங்கள் ஒன்றிணைந்து பணியாற்றுகின்றபோது வினைத்திறன் மிக்கவர்களாய் இருப்போம். சிறியதாக இருப்பினும்கூட, ஒவ்வொருவரினதும் பங்களிப்பு முக்கியமானது, ஏனெனில், எங்களுடைய சிறிய பங்களிப்புக்கள் ஒன்றிணைந்து மாற்றத்தை நோக்கிய இயக்க ஆற்றலினைக் கட்டியெழுப்பும்.
- இவ் அமர்விலும், அடுத்த அமர்விலும் நாம் செயற்திட்டங்களை ஆக்கப் போகின்றோம் – ஒவ்வொருவரும் தங்களது தனித்துவமானப் பங்களிப்புக்களைப் பகிர்ந்துக் கொள்வதற்கு இயலுமானவர்களாய் உள்ளோம் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வோம்!

## 2. கலந்துரையாடல் பயிற்சி: பிரச்சினை என்ன 52 நிமி

*முழுக்குழுப் பயிற்சி*

***விவரணம் மற்றும் நோக்கம்***

இப்பயிற்சியில் பங்குபற்றுநர்கள், செயற்திட்டங்களை ஆக்க விரும்புகின்ற திட்டவட்டமான பிரச்சினைகளைத் தெரிவு செய்வார்கள். பயன்படுத்தப்பட்டுள்ள முறையியலானது ஒவ்வொருவரும் செயன்முறைக்கு பங்களிக்கின்றனர் என்பதனை உறுதி செய்யும்.

***வளங்கள்***

- முன்னைய அமர்விலிருந்து, 'செயற்பாட்டிற்கான யோசனைகள்' நகர்வு விளக்கப்படத் தாள்கள் ஐந்து.
- 'எமது நகரத்தின் ம.அ.ந.சு இற்கான சுதந்திரத்தின் வரைபடம்' நகர்வு விளக்கப்படத் தாள்கள்.
- நகர்வு விளக்கப்படத் தாள் மற்றும் பேனைகள்.

***முன்னாயத்தம்***
"மாற்றத்திற்கான எமது பயணம்" பயிற்சியில் நீங்கள் எத்தனை செயல் திட்டமிடல் குழுக்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கவும். (பக்கம் 137ஐ பார்க்க). ஒரு குழுவில் 4-8 வரையான பங்குபற்றுநர்கள் இருக்க வேண்டும். மீண்டும் அறிக்கையிடுவதற்காக உள்ள நேரத்தினைக் கருத்திற்கொண்டு (அடுத்த அமர்வில்) குழுக்களின் எண்ணிக்கையினை மூன்று இற்கு மேற்படாதவாறு மட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 2 நிமி
ம.அ.ந.சு இன் வரைபடம்/செயற்பாட்டிற்கான ஆலோசனைகள் எழுதப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாள்களைச் சுற்றி அனைவரையும் ஒன்று சேருமாறு கூறுங்கள். அத்துடன் பின்வருவனவற்றை விளக்குங்கள்:

இப்பயிற்சி நெறியின் இலக்கானது எமது உள்ளூர் சமுதாயங்களில் மாற்றமுண்டாக்குநர்களாக வருவதற்கு எமக்கு உதவி செய்வதே ஆகும். எமது இறுதி இரண்டு அமர்வுகளில், நாம், எமது சமுதாயத்திலுள்ள பிரச்சினையொன்றினைக் கையாள்வதற்கு குழுக்கள் பயன்படுத்தக்கூடிய செய்றபாட்டுத்திட்டங்களை ஆக்கப்போகின்றோம். அப்பிரச்சினைகள் யாவை என்பதே கேள்வியாகும்?

நாங்கள் 'எமது நகரத்திற்கான ம.அ.ந.சு இன் வரைபடம்' பயிற்சியில் பிரச்சினைகளை அடையாளப்படுத்தியிருந்தோம். அத்துடன், அதனை அடிப்படையாகக்கொண்டு, நாங்கள் செயற்பாட்டிற்கான யோசனைகளை சிந்தித்திருந்தோம் என்பதுடன் அவற்றிலிருந்து எமக்கு பிடித்த செயற்பாட்டிற்கான யோசனைகளைத் தெரிவு செய்திருந்தோம். இவ் ஒவ்வொரு யோசனையும் நாங்கள் பிரச்சினையொன்றாகக் கருதுகின்ற ஏதோ ஒன்றுடன் தொடர்புறுகின்றது.

இப்பயிற்சியில், நாங்கள் செயற்பாட்டுத் திட்டங்களை ஆக்க விரும்புகின்ற ஒரு பிரச்சினை அல்லது பிரச்சினைகளைத் தெரிவு செய்யப்போகின்றோம். இந்தப் பயிற்சியில், ம.அ.ந.சு இன் சிக்கல்களைத் தேர்வுசெய்து அதற்கான செயல்திட்டங்களை உருவாக்குகிறோம், நாங்கள் கண்டறிந்த சிக்கல்களில் இருந்து தேர்ந்தெடுக்கிறோம். நிச்சயமாக, சமாளிக்க வேண்டிய முக்கியமான பல மனித உரிமைகள் பிரச்சினைகள் உள்ளன. நாங்கள் இன்று மதம் அல்லது நம்பிக்கையின் சுதந்திரத்தில் கவனம் செலுத்துகிறோம், ஆனால் நீங்கள் கற்றுக் கொள்ளும் திறன்கள் சமூகத்தில் ஏற்படும் எந்தவொரு பிரச்சனைக்கும் செயல் திட்டத்தை உருவாக்க பயன்படும்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 50 நிமி

- ***சிந்தியுங்கள்*** (5 நிமி)
  'செயற்பாட்டிற்கான யோசனைகள்' எழுதப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாள்களை, விசேடமாக, 'எமக்கு பிடித்த செயற்பாட்டிற்கான யோசனைகள்' எழுதப்பட்டுள்ள நகர்வு விளக்கப்படத் தாளினைப் பார்த்து, கீழ்வரும் வினாக்கள் தொடர்பாக அமைதியாக சிந்திக்குமாறு பங்குபற்றுநர்களுக்கு சொல்லுங்கள்:
  – எம்முடைய செயற்பாட்டிற்கான யோசனைகள் கையாள நினைக்கின்ற பிரச்சினைகள் யாவை?
  – இவற்றுள் எப்பிரச்சினைகளைக் கையாள்வது மிக முக்கியமானதாக உள்ளது?
  – எப்பிரச்சினைகள் தொடர்பில் நாம் மாற்றமொன்றினை ஏற்படுத்த முடியும்?

- ***சோடியாகுங்கள்*** (10 நிமி)
  கீழ்வரும் செயற்பாட்டினை பங்குபற்றுநர்களை சோடிகளாகி விளங்கப்படுத்த சொல்லுங்கள்:
  உங்களது சோடிகளில் எது முக்கியமானது மற்றும் எவை தொடர்பில் நாங்கள் மாற்றமொன்றினை ஏற்படுத்தலாம் என்ற உங்களின் சிந்தனைகளின் அடிப்படையில், இன்று செயற்பாட்டுத் திட்டமொன்றினை ஆக்குவதற்காக ஒரு பிரச்சினையினைத் தெரிவு செய்து கொள்ளுங்கள். பிரச்சினையை வரையறுப்பதில் முடியுமானளவு திட்டவட்டமாகவும் குறிப்பாகவும் இருக்கும்படி கூறுங்கள்.
  உதாரணமாக, 'சகிப்புத்தன்மையின்மை' என்பதனை பிரச்சினையொன்றாக சொல்வதற்கு பதிலாக, நீங்கள்:
  – சிறுபான்மை சிறுவர்கள் உள்ளூர் பாடசாலைகளில் துன்புறுத்தப்படுகின்றனர் அல்லது
  – உள்ளூர் மத அல்லது அரசியல் தலைவர்கள் அல்லது உள்ளூர் ஊடகங்கள் வெறுப்புப் பேச்சினைப் பயன்படுத்துகின்றன, என கூறலாம்.
  சிறுபான்மை (அல்லது அனைத்து) பெண்களும் இலகுவில் பாதிக்கப்படக்கூடியவர்களாக உள்ளனர் என கூறுவதற்கு பதிலாக, நீங்கள் கீழ்வருமாறு சொல்ல வேண்டும்:
  – உயர் அளவிலான பெண் பிள்ளைகளின் (சிறுபான்மைப் பெண் பிள்ளைகளின்) பாடசாலை இடைவிலகல்,
  – வீதி தொந்தரவு, குறிப்பாக சிறுபான்மை பெண்கள் தொடர்பில் செய்யப்படுகின்றது
  – அல்லது இளவயது மற்றும் கட்டாயப்படுத்தப்பட்ட திருமணம்.
  அத்துடன் அரசாங்க பாரபட்சம் என கூறுவதற்கு பதிலாக நீங்கள் கீழ்வருமாறு சொல்ல வேண்டும்:

– உள்ளூர் பொலிஸ் சிறுபான்மையினருக்கு எதிரானக் குற்றங்களை முறையாக விசாரிப்பதில்லை அல்லது
– X சமுதாயத்திற்கு வழிபாட்டிடமொன்றினைக் கட்டுவதற்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

> *ஆலோசனைக் குறிப்பு!*
> *இவ் உதாரணங்களை உங்களுடைய சூழமைவிற்கேற்றவகையில் மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்!*

- ***வாக்களியுங்கள் மற்றும் தெரிவு செய்யுங்கள்*** (20 நிமி)
  ஒவ்வொருவரும் குழுவினால் இவை குறித்து செயற்திட்டங்கள் ஆக்கப்பட வேண்டுமென்று தாங்கள் தனிப்பட்டரீதியில் சிந்திக்கின்ற இரண்டு பிரச்சினைகளுக்கு அடுத்து புள்ளடி இட வேண்டும். பெறுபேறுகளை குழுவில் கலந்துரையாடி, செயற்திட்டங்களை ஆக்க வேண்டிய மூன்று பிரச்சினைகளைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள், (அதிகபட்சமாக மூன்று பிரச்சினைகள், ஒரு பிரச்சினைக்கு குறைந்தது நான்கு பங்குபற்றுநர்கள் தேவை என்பதனால் உங்களுடைய குழுவில் 12 இற்கும் குறைவான பங்குபற்றுநர்கள் காணப்படின் மூன்று இற்கும் குறைவான பிரச்சினைகள்).
  நீங்கள் புள்ளடியிட்ட பிரச்சினை தெரிவு செய்யப்படாவிடினும்கூட, பின்னொருநாளில் நீங்கள் தெரிவுசெய்த பிரச்சினை தொடர்பாக செயற்திட்டமொன்றினை ஆக்குவதற்கு, இன்று நாங்கள் கற்றுக்கொள்ளப்போகின்ற செயற்திட்டத்தினை ஆக்குவதற்கான திறன்களைப் பயன்படுத்தலாம் என்பதனை வலியுறுத்திக் கூறுங்கள்.
- ***குழுக்களாக பிரிந்து கொள்ளுங்கள்*** (5 நிமி)
  குழுவினை வட்டமாக நிற்கச் சொல்லுங்கள். வட்டத்தினை சுற்றிச் சென்று, முதலாவது முதல் நீங்கள் கொண்டிருக்கக்கூடிய செயற்பாட்டுத் திட்டமிடல் குழுக்களின் எண்ணிக்கை வரையில் ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் ஒரு இலக்கத்தினை வழங்குங்கள், (உதாரணமாக, உங்களுக்கு மூன்று குழுக்கள் காணப்படின், ஒன்றிலிருந்து இலிருந்து மூன்று வரை).
  ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பிரச்சினையொன்றினை ஒதுக்கிக் கொடுங்கள், அத்துடன் அமர்வின் பிற்பகுதியில் அவர்களது குழு இப்பிரச்சினை தொடர்பாக செயற்திட்டமொன்றினை ஆக்கும் என கூறுங்கள்.
  எவரேனுமொரு பங்குபற்றுநர் தன்னுடைய குழுவிற்கு பதிலாக வேறொரு குழுவிற்கு செல்ல வேண்டுமென உறுதியாக விரும்பினால், (பெரும்பாலும், அவர்களுக்கு குறித்த குழுவின் பிரச்சினை தொடர்பாக குறிப்பான அறிவு இருக்கின்றது என்ற காரணத்தினால்) எவரேனுமொரு நபர் குழு மாறிக்கொள்ள விரும்புகின்றரா என பாருங்கள்.

## 3. *உற்சாகப்படுத்துகின்ற செயற்பாடு: மாற்றத்தினை ஏற்படுத்துங்கள்* 5 நிமி


*முழுக்குழுப் பயிற்சி*

***விவரணம் மற்றும் நோக்கம்***
உற்சாக அளவினை அதிகரித்துக் கொள்வதற்கான உடற்சார் பயிற்சி.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது***
வட்டமாக நின்று கொண்டு அவர்களால் முடியுமானளவு (தனிப்பட்ட இயலுமைகளுக்கு அமைய) மெதுவாக குனியுமாறு குழுவிற்கு சொல்லுங்கள். “மாற்றத்தினை ஏற்படுத்துங்கள்: மா-ற்-ற-ம்!” என்ற சொற்களை அனைவரையும் ஒரே நேரத்தில் மிக மெதுவாக சொல்ல சொல்லுங்கள். இச்சொற்களை மீண்டும் மீண்டும் சொல்ல சொல்லுங்கள், ஒவ்வொரு தடவை கூறுகின்றபோதும் தொனியை சற்று அதிகரிக்க வேண்டுமென்பதுடன், குனிந்த நிலையிலிருந்து சற்று மேலெழும்ப வேண்டும். முடிவில் ஒவ்வொருவரும் அவர்களால் இயலுமானளவு உயரமாகக் குதிக்கின்றவரையில் மற்றும் “மாற்றத்தினை ஏற்படுத்துங்கள்: மா-ற்-ற-ம்!” என உரத்து சத்தமிடுகின்றவரையில், குழு தனது தொனியினை படிப்படியாக அதிகரிக்க வேண்டுமென்பதுடன் மெதுவாக எழுந்து நிற்க வேண்டும்.

> *ஆலோசனைக் குறிப்பு!*
> *உதாரணத்தினூடாக வழிநடத்துங்கள் – விளையாட்டு முன்னேறிச் செல்கின்றபோது அதிகளவான சத்தத்துடன் மற்றும் உற்சாகத்துடன் செயற்படுவதனூடாக.*

## 4. *முன்வைப்பு: மாற்றத்திற்கான எமது பயணம்* 10 நிமி


*முன்வைப்பு*

***விவரணம் மற்றும் நோக்கம்***
இம்முன்வைப்பானது, செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கானத் திறன்களைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துகின்றது. இது செயற்பாட்டுத் திட்டமிடலுக்கான செயன்முறையினை அறிமுகப்படுத்துவதற்காக பயணமொன்றினைத் திட்டமிடுகின்றப் படமொன்றினையும், இதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள பயிற்சியில் பங்குபற்றுநர்கள் பயன்படுத்தவுள்ள செயற்பாட்டுத் திட்டமிடல் கருவியொன்றினையும் பயன்படுத்துகின்றது.

***வளங்கள்***

- இவ்வழிகாட்டியின் பக்கம் 140 இல் முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதியினைப் பார்க்கலாம்.
- எழுத்துப்பிரதியானது அமர்விற்கான பவர்பொயின்டின் 3-24 வரையான ஸ்லைடுகளை ஒத்து அமைந்திருக்கும் என்பதுடன் அது இவ் ஸ்லைடுகளுக்கான வளவாளர் குறிப்புக்களுள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- அமர்விற்கான துணை வளங்களில் மாற்றங்களை சய்வதற்கேற்றவகையில், எழுத்துப்பிரதியின் Word வடிவம் இணைக்கப்பட்டுள்ளது.

***முன்னாயத்தம்***

பக்கம் 15 இல் வழங்கப்பட்டுள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயார்படுத்துவது' என்பதிலுள்ள வழிகாட்டல்களுக்கமைய தயாராகுங்கள். எழுத்துப்பிரதி மற்றும் பவர்பொயின்ட் ஸ்லைடுகளை (அல்லது ஸ்லைடுகளின் பிரதான கருத்துக்களைக் கொண்டு நகர்வு விளக்கப்படத்தாள்களை ஆக்கிக் கொள்ளுங்கள்) வாசித்து உங்களுக்கேற்றவகையில் மாற்றியமைத்துக் கொள்ளுங்கள் மற்றும் ஸ்லைடுகள்/நகர்வு விளக்கப்படத் தாள்களுடன் முன்வைப்பினை செய்வதற்கு பயிற்சி செய்து பாருங்கள்.

***ஆலோசனைக் குறிப்பு!***
உங்களுடைய முன்வைப்பு முடிவு செய்யப்படுகின்றவரையில், வினாக்கள்/கருத்துக்களை பதிவு செய்து வைத்திருக்குமாறு நபர்களிடம் கூறுங்கள்.

## 5. *குழு வேலை: மாற்றத்திற்கான எமது பயணம்* 45 நிமி

***குழுப்பயிற்சி***

***விவரணம் மற்றும் நோக்கம்***

இப்பயிற்சியானது இவ் அமர்வின் எஞ்சிய பகுதி முழுவதும் மற்றும் அடுத்த அமர்வின் ஆரம்பப் பகுதி வரையில் நீட்டிக்கப்படும். இதில், முன்செய்யப்பட்ட முன்வைப்பில் கூறப்பட்ட செயற்பாட்டுத் திட்டமிடல் கருவியினைப் பயன்படுத்தி குழுக்கள் செயற்திட்டங்களை ஆக்குவார்கள். உங்களுடைய குழுவின் தன்மையினைப் பொறுத்து, இச்செயற்திட்டங்கள் குழு அமுல்படுத்த விரும்புகின்ற உண்மையானத் திட்டங்களாக இருக்கலாம் அல்லது செயற்பாட்டுத் திட்டமிடல் திறன்களைக் கற்றுக் கொள்வதற்கான வழிமுறையாக அவர்கள் ஆக்குகின்ற மாதரித் திட்டங்களாக இருக்கலாம்.

குழுக்கள் தங்கள் செயற்திட்டங்களை நகர்வு விளக்கப்படத் தாளில் காட்சிப்புலனாகின ்ற 'பயணமொன்றாக' வரைவார்கள் அல்லது எழுதுவார்கள்.

***வளங்கள்***

- ஒரு நபருக்கு ஒரு 'மாற்றத்திற்கான எமது பயணம்' கையேடு.
- நகர்வு விளக்கப்படத் தாள், நகர்வு விளக்கப்படத் தாளுக்கான பேனைகள், சாதாரண பேனைகள்.

***முன்னாயத்தம்***

இரண்டு நகர்வு விளக்கப்படத் தாள்களின் சிறிய பக்கங்களை ஒன்றாக ஒட்டுவதனூடாக, நீண்ட தாளொன்றினை உருவாக்கிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தாளினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 5 நிமி

ஸ்லைடு 24 ன்கை காண்பித்து கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:

இவ் அமர்வின் ஆரம்பத்தில் நாங்கள் பிரச்சினைகளைத் தெரிவு செய்திருந்ததுடன் குழுக்களாகப் பிரிக்கப்பட்டோம். இப்போது, ஒவ்வொரு குழுவும், நாம் நிகழ்த்துகையினூடாக அறிந்துகொண்ட 'மாற்றத்திற்கான எமது பயணம்' என்ற படிமத்தினைப் பயன்படுத்தி தங்களுடைய பிரச்சினையினைக் கையாள்வதற்கான செயற்திட்டமொன்றினை ஆக்குவதற்கு முயற்சிக்கும்.

இச்செயற்திட்டங்கள், நாம் பயிற்சிக்கு பின்னர் அமுல்படுத்த விரும்புகின்ற உண்மையானத் திட்டங்களாக இருக்கலாம் அல்லது நாங்கள் பிறகு பிரயோகிக்கக்கூடிய செயற்பாட்டுத் திட்டமிடல் திறன்களைக் கற்றுக் கொள்வதற்கு உதவுகின்ற பயிற்சிக்கான செயற்திட்டங்களாகவும் இருக்கலாம்.

குழுக்களுக்காக போடப்பட்டுள்ள மேசைகளில், நீங்கள் நீளமான ஒரு நகர்வு விளக்கப்படத் தாளினைப் பார்க்கலாம். இத்தாளிலேயே நீங்கள் உங்களுடைய மாற்றத்திற்கானப் பயணத்தினை வரையப் போகின்றீர்கள் அல்லது எழுதப் போகின்றீர்கள். அத்துடன், 'மாற்றத்திற்கான எமது பயணம்' என்ற படிமத்தின் பிரதிகள் சிலவற்றையும் நீங்கள் மேசைமீது பார்க்கலாம். இவை செயற்திட்டத்தினை ஆக்க உங்களுக்கு உதவுவதுடன் நீங்கள் இவற்றைக் கையேடொன்றாக வீட்டிற்கு எடுத்து செல்லலாம்.

நீங்கள் செய்ய வேண்டியது யாதெனில், மாற்றத்திற்கான பயணமென்ற படிமத்திலுள்ள வேறுபட்ட ஆக்கக்கூறுகளைப் பயன்படுத்தி, உங்களுடைய குழுவின் பிரச்சினையினைக் கையாள்வதற்கான செயற்திட்டமொன்றினை உங்களுடைய நகர்வு விளக்கப்படத் தாள்களில் ஆக்குவதே ஆகும். இதனை நீங்கள் இவ் அமர்வில் எஞ்சியுள்ள நேரத்திலும், அடுத்த அமர்வின் ஆரம்பப் பகுதியிலும் செய்யலாம் - இது மொத்தமாக சுமார் 1 மணித்தியாலத்திவிட சற்று அதிகமான நேரத்தினை உள்ளடக்குகின்றது.

ஸ்லைடு 25 காண்பித்து கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:

உங்களுடையத் திட்டத்தினை ஆக்கிக் கொள்வதற்கான புடிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன:

- மாற்றமுண்டாக்குநர்கள் யார் என்பதனைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்: திட்டத்தினை அமுல்படுத்தப்போகின்ற நபர்கள் அல்லது அமைப்பு எது?
- உங்களுடைய குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள பிரதான பிரச்சினையினை எழுதுங்கள்.
- நீங்கள் மாற்ற விரும்புகின்ற திட்டவட்டமான நடத்தைப் பாங்குகள், நடத்தைகள் அல்லது விதிகளை இணங்காணுங்கள்.
- உங்களுடைய பிரச்சினையினை பிரதிபலிக்கின்ற இலக்கொன்றினை உருவாக்குங்கள்.

- உங்களுடைய பிரச்சினையினை பிரதிபலிக்கின்ற விரும்பப்படுகின்ற மனப்பாங்கு நடத்தைகள் அல்லது விதிகள் என்பனவற்றை அடையாளப்படுத்துங்கள்.
- சம்பந்தப்பட்ட மற்ற "மக்கள்" – பாதிக்கப்பட்ட மக்கள், மக்கள் அமைப்புகள் அல்லது பிரச்சனையின் ஒரு பகுதியாக இருக்கும் அதிகாரிகள் அல்லது மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியைச் சேர்த்து கொள்ளவும்.
- இலக்கினை அடைந்து கொள்ளும் பொருட்டு, நீங்கள் பயன்படுத்தவுள்ள உங்களுக்கான உத்திகள் மற்றும் பிரதான செயற்பாடுகளைத் தெரிவு செய்து சேர்த்துக் கொள்ளுங்கள்.
- இச்செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு செய்யவேண்டிய நடைமுறைரீதியான செயற்பாடுகள் சிலவற்றை அடையானப்படுத்துங்கள்.
- இப்பிரச்சினையில் ஈடுபட்டுள்ள வேறுபட்ட நபர்களுக்கு நீங்கள் கூறப்போகின்ற செய்திகள் யாவை என்பதனை அடையாளப்படுத்துங்கள். அவர்களை இணங்கவைக்கக்கூடிய வாதங்கள் எவை?
- அத்துடன், இறுதியாக நீங்கள் இப்பயணத்தின்போது எதிர்கொள்ளக்கூடிய அபாயங்கள் குறித்து சிந்தியுங்கள்.

நீங்கள் இவ்விடயங்களை இவ் ஒழுங்கில் செய்யத் தேவையில்லை, ஆனால் அவ்வாறு செய்தல் பெரும்பாலும் உதவியானதாக அமையும்!

கீழ்வருவனவற்றை வலியுறுத்துங்கள்:
ஒவ்வொரு வினா தொடர்பிலும் சிந்திப்பதற்கு நீண்ட நேரத்தினை செலவிடுவது சாத்தியமானதே, ஆனால் இப்பயிற்சியின் இலக்கு, திட்டத்தின் ஒரு முழுமையான உருவப்படமொன்றினை ஆக்கிக் கொள்வதே ஆகும – இதனை அமுல்படுத்த வேண்டும் என நாம் தீர்மானிப்போமாயின் இது தொடர்பாக சிந்தித்து இதனை மேலும் விருத்தி செய்ய முடியும்.

ஒவ்வொரு பகுதி குறித்தும் 8 நிமிடங்களை செலவிடுவதற்கு உத்தேசியுங்கள்! இது ஒரு தோராயமானத் திட்டத்திற்கான சிந்தனைச் செயற்பாடு என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்! உங்களது உள்ளார்ந்த சிந்தனைகள் மற்றும் அபிப்பிராயங்களை அவ்வாறே எழுதுங்கள் - விடயங்களை மிகக் கவனமாகக் கட்டமைத்துக் கொள்வதற்கு நேரத்தை செலவிட வேண்டாம் – தோராயமாகக் கட்டமைக்கப்பட்டுள்ள தனி வாக்கியம் அல்லது புள்ளிகளின் (புல்லட் புள்ளிகள்) கீழ் சொல்லப்படுகின்ற ஒரு சில விடயங்கள் போதுமானது.

அத்துடன், நாங்கள் நகர்வு விளக்கப்படத் தாள்களில் எழுதியுள்ள செயற்பாட்டிற்கான யோசனைகளை மறந்துவிட வேண்டாம்! பெரும்பாலும், நீங்கள் அவற்றுள் ஒன்று அல்லது இரண்டினை உங்களுடையத் திட்டத்தில் பயன்படுத்தலாம்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 40 நிமி
வேலையைத் தொடங்குவதற்காக அனைவரையும் அவரவர் குழுக்களுக்கு அனுப்புங்கள். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்த சரியான புரிதலைக் கொண்டுள்ளனரா என்பதனைப் பார்ப்பதற்காக ஒவ்வொரு குழுவாக செல்லுங்கள்.

நேரத்தினை சரியாகப் பயன்படுத்துங்கள்! 10 நிமிடங்களுக்கு பின்னர் அடுத்த கேள்விக்கு போகுமாறு பங்குபற்றுநர்களுக்கு ஞாபகப்படுத்துங்கள், அத்துடன் கிரமமான இடைவேளைக்கு பின்னர் மீண்டும் அதனை ஞாபகப்படுத்துங்கள்.

குழு குறிப்பிட்ட தலைப்பிலிருந்து பிறழ்வடையாமல் சரியான முறையில் செயலாற்றுகின்றார்கள் என்பதனைப் பார்ப்பதற்காக, உங்களால் முடியுமானளவு அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக மற்றும் ஆலோசனைக் குறிப்புக்களை வழங்குவதற்காக, எப்போதும் குழுக்களைக் கண்காணித்துக் கொள்ளுங்கள். குழு ஒரு வினா தொடர்பில் இடறுருகின்றபோது, மற்றும் உங்களால் அது குறித்து உதவமுடியாதுள்ளபோது, அடுத்த படிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும், சிறிது நேரத்திற்கு பின் குறிப்பிட்ட வினா தொடர்பில் மீண்டும் கவனம் செலுத்துமாறும் அக்குழுவிற்கு சொல்லுங்கள்.

***குறும்பேச்சு***

## ***6. நிறைவு செய்கின்ற கருத்துக்கள்*** 3 நிமி

அமர்வு நிறைவு பெறுவதற்கான நேரத்தினை அண்மித்ததும், குழுக்களுடைய கடுமையான உழைப்பிற்காக அவர்களுக்கு நன்றி கூறுங்கள். அத்துடன், அவர்கள் அடுத்த அமர்வில் மாற்றத்திற்கான பயணத்திற்குரிய செயற்திட்டத்தினைத் தொடர்ந்து செய்வார்கள் எனக் கூறுங்கள். அதுவரையில், அவர்களது செயற்திட்டம் தொடர்பாக சிந்திப்பதற்கும், அடுத்த அமர்விற்கு அவர்கள் கொண்டுவரவேண்டிய ஏதேனும் யோசனைகளை எழுதி வைப்பதற்கும் அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

# முன்வைப்பிற்கான எழுத்துப்பிரதி

## மாற்றத்திற்கான எமது பயணம்- செயற்பாட்டுத் திட்டமிடலுக்கான கட்புலானகின்ற ஓர் கருவி

*அமர்வு 8 நிகழ்த்துகைக்கான எழுத்துப்பிரதி அமர்வின் பவர்பாயிண்ட் இன் 3-24 ஸ்லைடுகளால் விளக்கப்பட்டுள்ளது.*

**செயற்திட்டம் என்றால் என்ன மற்றும் அது ஏன் முக்கியமானது?**




செயற்திட்டம் என்றால் என்ன மற்றும் அது ஏன் முக்கியமானது? நாங்கள் இருக்கின்ற இடத்திலிருந்து நாங்கள் இருக்க விரும்புகின்ற இடத்திற்கு நாங்கள் எவ்வாறு செல்ல வேண்டுமென்பதற்கான திட்டமொன்றே செயற்திட்டம் எனப்படுகின்றது.

நாங்கள் நீண்ட பயணமொன்று செல்கிறோமாயின், நாங்கள் எவ்வாறு பிரயாணிக்கப் போகின்றோம் என்பதற்கான ஒரு வரைபடம் மற்றும் ஒரு திட்டத்தினைக் கொண்டிருப்பது சிறந்ததாகும். பெரும்பாலும் நாங்கள் பேருந்து தரிப்பிடத்திற்கு நடந்து சென்று, பின் பேருந்தில் சென்று, பின் புகையிரதத்தில் சென்று, பின்னர் நாங்கள் இறுதியாக சேர வேண்டிய இடத்திற்கு செல்வதற்காக கார் ஒன்றினை வாடகைக்கு எடுப்போம்! வரைபடம் மற்றும் திட்டமொன்றின்றி, நாங்கள் எங்களது சேருமிடத்தினை அடைய முடியாது அல்லது அங்கு சென்றடைவதற்கு மிக நீண்ட நேரம் எடுக்கும்.



செயற்பாட்டுத்திட்டமும் வரைபடம் அல்லது பயணத் திட்டத்தினைப் போன்றதே - அது நாங்கள் எமது இலக்கினை அடைவதற்கு செய்யத் திட்டமிடுகின்ற படிமுறைகளை விவரணையாக்கம் செய்வதுடன், அது நாம் உபாயமுள்ளவர்களாக மற்றும் திட்டநோக்குடையவர்களாக இருப்பதற்கு எமக்கு உதவி செய்கின்றது.

நாங்கள் அனைவரும் செயற்திட்டங்களை ஆக்குகின்றோம். சிலநேரங்களில், அவை மிகவும் எளிமையானவையாக, பெரும்பாலும் உள்ளார்ந்ததாகக் காணப்படும் என்பதுடன் அவற்றை நாம் நினைவில் வைத்திருக்கின்றோம். ஆனால், சிக்கலான பிரச்சினைகளுக்கான, நாங்கள் இதற்கு முன் செய்திராத விடயங்கள் மற்றும் நாம் குழுக்களாக செய்கின்ற விடயங்கள் தொடர்பில், நாம் மிகக் கவனமாகத் திட்டமிட வேண்டியதும், அனைவரும் ஞாபகம் வைத்திருக்கக்கூடிய வகையில் அவற்றை எழுதி வைத்திருப்பதும் மிக முக்கியமாகும்.




இம்முன்வைப்பின் எஞ்சியுள்ள பகுதியில், செய்திட்டமொன்றினை உருவாக்கும்பொருட்டு, ‘மாற்றத்திற்கான எமது பயணம்’ என அழைக்கப்படுகின்ற எளிமையான, கட்புலனாகின்ற கருவியொன்றினைப் பயன்படுத்துவதற்கு கற்றுக் கொள்ளப் போகின்றோம்.

**பயணிகள்**




நாம் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பயணத்திற்கான செயற்திட்டமொன்றினை ஆக்குகின்றபோது, முதலாவதாக எழுகின்ற கேள்வி நாங்கள் யார் என்பதாகும்.

மாற்றத்தினை ஏற்படுத்துகின்ற பயணமொன்றில் பயணிப்பவர்கள் யார்? சில பயணிகள் வாகனங்களை ஓட்டிக்கொண்டும், சில பயணிகள் விமானத்திலும் செல்கின்ற அதேவேளை, சில பயணிகள் நடந்து செல்ல வேண்டியேற்படுவதனைப் போன்றே, நாங்கள் தனிநபர்களாக, குழுக்களாக அல்லது அமைப்புக்களாக, வேறுபட்ட வாய்ப்புக்கள், பலங்கள் மற்றும் பலவீனங்களைக் கொண்டிருக்கின்றோம் என்பதுடன் வேறுபட்ட அபாயநேர்வுகளுக்கு முகங்கொடுக்கின்றோம். ‘நாங்கள் யார்’ எனக் கேட்பதனூடாக ஆரம்பித்தல் இதனை நினைவில் வைத்திருப்பதற்கு எமக்கு உதவும்.





நாங்கள் கற்பனையான மாற்றத்திற்கான பயணமொன்றினை உருவாக்கிக் கொள்வோம். நாம் எமது நகரத்திலுள்ள வேறுபட்ட மத சமுதாயங்களிலுள்ள இளம் நண்பர்கள் எனக் கொள்வோம்.


**எங்களுடைய ஆரம்பப் புள்ளி**




நாங்கள் பயணமொன்றினைத் திட்டமிடுகின்றபோது நாம் முதலாவது அறிந்து கொள்ள வேண்டிய விடயம் எமது ஆரம்பப் புள்ளி எது என்பதாகும். மாற்றத்திற்கான பயணமானது பிரச்சினையொன்றுடனும் நாம் அதனை வரையறுக்க ஆரம்பிப்பதுடனும் தொடங்குகின்றது. எங்களுடைய பிரச்சினையினை வரையறுப்பதில் நாம் எந்தளவு திட்டவட்டமாக இருக்கிறோமோ, அந்தளவிற்கு மாற்றத்தினை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதனை அடையாளம் காணுதல் இலகுவானதாய் அமையும்.



ஆகவே, ''சகிப்புத்தன்மையின்மை'' தான் பிரச்சினையென சொல்வதற்கு பதிலாக, ''பிள்ளைகளுக்கு வேறு மத சமுதாயங்களில் நண்பர்கள் இல்லை'' என சொல்ல வேண்டும். இது தொடர்ச்சியான சகிப்புத்தன்மையின்மையின் விளைவொன்றாகவும் மற்றும் காரணமொன்றாகவும் அமைகின்றது.



இதுபோன்ற பிரச்சினைகள் அவற்றுக்கு பங்களிக்கின்ற பல்வேறு அடிப்படை காரணிகளைக் கொண்டிருக்கும். இவ் அடிப்படைக் காரணிகளாக பின்வருவன அமையலாம்:

- நபர்கள் கொண்டுள்ள பிரச்சினைக்குரிய மனப்பாங்குகள்
- பிரச்சினைக்குரிய நடத்தைகள்- நபர்கள் செய்கின்ற விடயங்கள்
- அல்லது பிரச்சினைக்குரிய சட்டங்கள், விதிகள் அல்லது கொள்கைகள்.

மனப்பாங்குகள், நடத்தைகள் மற்றும் விதிகள் ஒன்றிணைந்து பிரச்சினையினை உருவாக்குகின்றன. ஆகவே, நாங்கள் அடையாளப்படுத்தியுள்ள பிரச்சினை தொடர்பாக, நாங்கள் மாற்ற விரும்புகின்ற குறிப்பான நடத்தைப் பாங்குகள், நடத்தைகள் மற்றும் விதிகள் யாவை?




எங்களுடைய உதாரணத்தை குறித்து பார்க்கின்றபோது, 'பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு வேறு சமுதாயங்களில் நண்பர்கள் உள்ளமை தொடர்பாக எதிர்மறையான மனப்பாங்குகள் கொண்டுள்ளனர்' அல்லது 'வேறுபட்ட மத சமுதாயங்களுக்கிடையிலுள்ள மாணவர்களுக்கிடையில் துன்புறுத்தல் இடம்பெறுவதனை பாடசாலை சகித்துக் கொள்கின்றது' அல்லது 'வேறுபட்ட சமுதாயங்களிலுள்ள பிள்ளைகளுக்கிடையிலான நட்பு அனுமதிக்கப்படக்கூடாது என உள்ளூர் மதத் தலைவர் ஒருவர் சொல்கிறார்' என குறிப்பிட வேண்டும். எங்களுடைய பிரச்சினைக்கு பங்களிப்பு செய்கின்ற மனப்பாங்குகள் நடத்தைகள் மற்றும் விதிகள் இவையே.

**<u>எங்களது சேருமிடம்</u>**



நாங்கள் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற பயணமொன்றினை மேற்கொள்கின்றபோது, நாங்கள் எங்கு செல்ல வேண்டும் என்பதனை அறிந்திருத்தல் முக்கியமானதாகும்! எமது சேருமிடத்தினை வரையறுத்தல் தந்திரம் மிக்கதாகும். எம் அனைவருக்கும் சமாதானம், நீதி மற்றும் பாரபட்சமின்மை என்பனவற்றை அடைந்துக் கொள்ள வேண்டும்! ஆனால், குறிப்பிட்ட கால வரையறைக்குள் எம்மால் எதனை அடைந்துக் கொள்ள முடியும் என்பது தொடர்பாக நாம் திட்டவட்டமாகவும் யதார்த்தபூர்வமாகவும் இருக்க வேண்டும்.




உதாரணமாக, 'பிள்ளைகளுக்கு வேறு மத சமுதாயங்களில் நண்பர்கள் உள்ளனர்' என்பது எமக்கு இலக்காக இருக்கலாம். அத்துடன், அவ் இலக்கிற்காக, பழைய, கேடான நடத்தைப் பாங்குகள், நடத்தைகள் அல்லது விதிகள் காணப்பட்ட இடத்தில் நாம் காண விரும்புகின்ற குறிப்பான மனப்பாங்குகள் நடத்தைகள் அல்லது விதிகள் யாவை என்பது பற்றி நாம் சிந்திக்க முடியும். உதாரணமாக: ''பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வேறு மத சமுதாயங்களில் நண்பர்கள் இருக்கின்றமையினை'' அல்லது ''பாடசாலை துன்புறுத்தலை முனைப்புடன் கையாள்கின்றது'' அல்லது ''சமுதாயங்களுக்கிடையிலான நட்பினை மதத் தலைவர்கள் ஊக்குவிக்கின்றனர்''.



நீங்கள் பார்க்கின்றதற்கமைய, எங்களுடைய பிரச்சினைகள் மற்றும் இலக்குகள் என்பன ஒவ்வொன்றினதும் கண்ணாடிப் பிரதிபலிப்புக்கள் போன்றனவாகும். பிரச்சினை மற்றும் இலக்கு என்பன மாற்றத்திற்கான எமது பயணத்தின் கட்டமைப்பினை வரையறுக்கின்றன. மாற்றத்திற்கான செயன்முறை எங்கு ஆரம்பமாகின்றது மற்றும் அது எங்கு செல்ல வேண்டுமென நாம் விரும்புகின்றோம்?

**<u>எங்களுடைய வழியில் நாம் சந்திக்கும் நபர்கள்</u>**




நீண்டதொரு பயணத்தில் நாம் பல நபர்களை சந்திக்க நேரிடும் - அதே திசையில் பயணிக்கின்ற சக பயணிகள், எங்களை சோதனை செய்கின்ற டிக்கெட் அதிகாரிகள் அல்லது எங்களை நிறுத்துகின்ற அல்லது வேறு திசைக்கு மாற்றுகின்ற வீதித் தடைகளை உருவாக்குகின்ற நபர்கள். ஆகவே, எங்களது பயணத்தில் நாம் யாரை சந்திக்கப் போகின்றோம்?




அங்கு:

- பிரச்சினையினால் பாதிக்கப்பட்ட நபர்கள், (எமது உதாரணத்தின்படி, பிள்ளைகள்)
- பிரச்சினை தொடர்பாக எதையேனும் செய்யக்கூடிய அதிகாரம் உள்ள நபர்கள் (உதாரணமாக, பாடசாலை சபை மற்றும் பணியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் மதத் தலைவர்கள்) ஆகியோர் இருப்பார்கள்.



அத்துடன் அங்கு:


- எங்களுடைய இலக்கினைப் பகிர்ந்துக் கொள்கின்ற மற்றும் எங்களுக்கு பாதையில் உதவத்தக்க சக பயணிகள் இருப்பார்கள். எங்களது உதாரணத்தில், உள்ளூர் மத நல்லிணக்க குழு எமது கூட்டணியாக இருக்கலாம்.
- அல்லது எம்முடைய இலக்கினை எதிர்க்கின்ற மற்றும் எங்களுடைய பாதையினை இடைமறிக்க முயற்சிக்கின்ற நபர்கள் இருக்கலாம். பெரும்பாலும், எமது சமுதாயத்திலுள்ள சகிப்புத்தன்மையற்ற, சமூக ஊடக செல்வாக்கு மிக்க ஒரு நபர்.



நாங்கள் செயற்திட்டமொன்றினை எழுதுகின்றபோது, இத்தகைய நபர்கள், அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களை யாவையென சிந்தித்தல் சிறந்ததாகும், ஆகவே, நாங்கள் உத்திகளைத் தெரிவு செய்கின்றபோது மற்றும் எங்களுடைய செயற்பாடுகளைத் திட்டமிடுகின்றபோது அவர்களையும் கருத்திற் கொள்ளலாம்.


மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எங்களுடன் இணைந்து உதவி செய்யக் கூடியவர்கள் யார்? இணங்கவைப்பதற்கு எமக்கு யார் தேவை மற்றும் எதைக் குறித்து இணங்கவைக்க வேண்டும்? அத்துடன், மாற்றத்திற்கான எமது வழியினை இடைமறிக்கக் கூடியவர்கள் யார்?

## பாதையினைத் தெரிவு செய்தல்




அ இலிருந்து ஆ இற்கு செல்வதற்கு பொதுவாக அதிகளவான வழிகள் காணப்படும்- வேறுபட்ட பாதைகள் மற்றும் போக்குவரத்து முறைகள். ஆகவே, நாங்கள் செல்லப் போகின்ற பாதை எது?

நாங்கள் பயன்படுத்துகின்ற உத்திகளினால் எங்களது பாதை தீர்மானிக்கப்படுகின்றது. விழிப்புணர்வினைக் கட்டியெழுப்புதலிலிருந்து, ஆதரித்துவாதாடல் மற்றும் மீறல்களை ஆவணப்படுத்தல் வரை, நாங்கள் தெரிவு செய்வதற்கு 15 வேறுபட்ட உத்திகள் உண்டென்பதனை நினைவிற் கொள்ளுங்கள். இவ் உத்திகளைப் பயன்படுத்துவதற்கான பல செயற்பாட்டு யோசனைகள் தொடர்பாக நாம் ஏற்கனவே பார்த்திருக்கின்றோம்! நீங்கள் இவற்றைப் பயன்படுத்தக்கூடிய இடம் இதுவே!




எங்களுடைய உதாரணத்தினை எடுத்துக் கொண்டோமானால்: மத நல்லிணக்க உதைப்பந்தாட்டக் குழுவொன்றினை அமைப்பதனூடாக நாம் பிள்ளைகளின் எண்ணத்தினை மாற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தப் போகின்றோமா அல்லது துன்புறுத்தல் சம்பவங்களை ஆவணப்படுத்தி, அது தொடர்பாக பாடசாலை சபையை நடவடிக்கை எடுக்கச் செய்வதற்காக அவ் ஆவணப்படுத்தலை பாவித்து ஆதரித்து வாதாட போகின்றோமா அல்லது நல்ல உறவுநிலைகளை மேம்படுத்துவதற்காக வகுப்பறையில் பன்மைத்தன்மையினை சிறப்பாக மேம்படுத்தி, மதிப்பளித்தலை உறுதிப்படுத்துகின்ற ஆசிரியருக்கான விருதொன்றினை உருவாக்குவதனூடாக ஆசிரியர்களுக்கு சலுகையளிக்கப் போகின்றோமா அல்லது மதங்களுக்கிடையிலான நட்பினை ஊக்குவிப்பதற்கு மதத் தலைவர்களை இணங்கச் செய்யப் போகின்றோமா அல்லது இவை அனைத்தினதும் தொகுப்பினைச் செய்யப் போகின்றோமா?

நாங்கள் செய்யக்கூடிய வேறுபட்ட விடயங்கள் பல காணப்படுகின்றன. எம்மால் அவை அனைத்தையும் செய்ய முடியாது, ஆனால், நாங்கள் வெற்றி பெற வேண்டுமாயின், ஒன்றிற்கு மேற்பட்ட விடயங்களைச் செய்தல் வேண்டும். உதாரணமாக, பிரதான மதங்களின் தலைவர்கள் எதிர்க்கின்றபோது மற்றும் யாரும் இணைந்துக் கொள்வதற்கு விருப்பம் காட்டாதபோது, உதைப்பந்தாட்டக் குழுவொன்றினை ஆரம்பித்தலில் எவ்வித பயனும் இல்லை. வெற்றிகரமான செயற்திட்டங்கள் பொதுவாக வேறுபட்ட சில உத்திகளைக் கொண்டிருக்கும், ஆனால் அவ் உத்திகள் ஒன்றையொன்று குறை நிரப்புவனவாக.்.முழுமையாக்குகின்றனவாகக் காணப்படும்.

## பயணத்தின் படிமுறைகள்




எவ் உத்திகளை நாம் பயன்படுத்தப்போகின்றோம் என்பதனை நாம் தீர்மானித்தவுடன், அவற்றை எவ்வாறு பயன்படுத்தப்போகின்றோம் என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டும். நாங்கள் மேற்கொள்ள வேண்டிய திட்டவட்டமான படிமுறைகள் என்ன மற்றும் அவற்றை எவ் ஒழுங்கில் மேற்கொள்ள வேண்டும். நாங்கள் தெரிவு செய்துள்ள ஒவ்வொரு உத்தி தொடர்பாகவும், யார், எப்போது, என்ன செய்ய வேண்டும்? நடைமுறையில், உதைப்பந்தாட்டக் குழுவொன்றினை ஒழுங்கமைப்பதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு அல்லது ஆய்வொன்றினை முன்னெடுப்பதற்கு நாம் எவ்வாறு செயற்பட வேண்டும்? யார், எந்த மதத் தலைவர்களுடன் பேசுவார்கள்?

## செய்தி





நாங்கள் நபர்களுடன் பேசுகின்றபோது, நாங்கள் என்ன சொல்லப் போகின்றோம் என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டும். எவ்வகையானத் தகவல்கள் அல்லது வாதங்கள், எங்களுடன் இணைவதற்கான சாத்தியப்பாட்டினையுடைய கூட்டணிகள் எம்முடன் இணைவது குறித்து அவர்களை இணங்க வைக்கும் அல்லது தங்களுடைய மனப்பாங்குகள் அல்லது நடத்தையினை மாற்றுவது குறித்து நபர்களை இணங்க வைக்கும்? அதிகாரத்தினைக் கொண்டுள்ளவர்களை என்ன விடயங்களைக் கூறி செயற்பட வைக்கலாம்? அத்துடன், எதிர்ப்பினைத் தவிர்க்கக்கூடிய வகையில் நாங்கள் கூற வருகின்ற விடயத்தினைக் கட்டமைத்துக் கொள்வதற்கு ஏதேனும் வழிமுறைகள் உள்ளனவா?

உதாரணமாக: சமுதாயங்களுக்கிடையிலான உறவினைக் கட்டியெழுப்புவதனால் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் பற்றிய தகவல்கள் மற்றும் உதைப்பந்தாட்டக்குழுவில் பிள்ளைகள் பாதுகாப்பாக இருப்பார்கள் மற்றும் நன்றாகப் பராமரித்துக் கொள்ளப்படுவார்கள் போன்ற விடயங்களை பெற்றோர்கள் கேட்க வேண்டும்.

அத்துடன், உதைப்பந்தாட்டக் குழுவினை வழிநடத்துவதில் வேறுபட்ட சமுதாயங்களைச் சேர்ந்த வயது வந்தவர்களை நாம் எவ்வாறு உள்வாங்கிக் கொள்ளப் போகின்றோம் என்பது பற்றி தெரிந்துக் கொள்வதற்கு உள்ளூர் மத நல்லிணக்க சபை ஆர்வமாக இருக்கலாம்.

மேலும் தொந்தரவு கொடுத்தலின் -எதிர்ப்புக் கொள்கையை செயற்படுத்துவதனால் எவ்வாறு பள்ளியின் சுயவிவரத்தை அதிகரித்து கொள்ளலாம் என்பதைக் அறிந்துகொள்ள பாடசாலை நிர்வாகம் ஊக்குவிக்கப்படலாம்.

## தடைகள் மற்றும் அபாய நேர்வுகள்





நீண்டதும் சிக்கலானதுமான ஒரு பயணத்தில், பயணிகள் தடைகள், ஆபத்துக்கள் மற்றும் புயல்களை சந்திக்க நேரிடும். அவர்களுடைய சேருமிடத்தினை அடைந்துக் கொள்ளும்பொருட்டு அவர்கள் இவற்றைத் தவிர்க்க வேண்டும் அல்லது வெற்றிக் கொள்ள வேண்டும். மாற்றத்திற்கான அனைத்து செயன்முறைகளிலும் தடைகளும் அபாயநேர்வுகளும் உள்ளன. நாங்கள் முன்னோக்கி சிந்தித்தல், சாத்தியமானளவு பாதுகாப்பான பாதையினைத் தெரிவு செய்தல் மற்றும் தோன்றக்கூடிய சிக்கலான சூழ்நிலைகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான திட்டமொன்றினைக் கொண்டிருத்தல் என்பன உதவியாக அமையும்.

ஆகவே, நாங்கள் கற்பனை செய்துள்ள செயற்பாடுகளை முன்னெடுக்கின்றபோது நாங்கள் எதிர்கொள்ளக்கூடிய தடைகள் மற்றும் அபாய நேர்வுகள் எவை? அச்செயற்பாடுகளுள் எவையேனும் அபாயம் மிக்கதாக உள்ளதா மற்றும் அபாயங்களைக் குறைத்துக் கொள்வதற்கான ஏதேனும் வழிகள் உள்ளனவா?

உதாரணமாக: சில சூழமைவுகளில், உள்ளூர் வானொலி அலைவரிசையொன்றினூடாகஈ மத நல்லிணக்க உதைப்பந்தாட்டக்குழு பற்றி விளம்பரம் செய்தல் சகிப்புத்தன்மையற்ற குழுக்களின் கவனத்தினை அவசியமற்றமுறையில் ஈர்க்கும் என்பதுடன் இவர்கள் எதிர்ப்பினைத் திரட்டக்கூடும். நாங்கள் அதனை அமைதியாக ஆரம்பித்துவிட்டு, அதற்கான சமுதாய ஆதரவினைக் கட்டியெழுப்ப வேண்டும்.

## முடிவு




செயற்திட்டமொன்றினை ஆக்குகின்ற செயன்முறையினை நாம் இப்போது செய்துள்ளோம். மாற்றத்திற்கான எமது பயணத்திற்காக நாம் கீழ்வருவனவற்றை அடையாளப்படுத்தியுள்ளோம்:

- எமது ஆரம்பப் புள்ளி- பிரச்சினை
- எமது சேருமிடம்- இலக்கு
- நாம் எமது வழியில் சந்திக்கின்ற நபர்கள்- நண்பர்கள், எதிரிகள், ஏதோ ஒரு வழியில் நாம் செல்வாக்கு செலுத்த விரும்புகின்ற நபர்கள்.
- பாதை- நாங்கள் பயன்படுத்தவிருக்கின்ற உத்திகள் மற்றும் நாங்கள் முன்னோக்கி செல்வதற்கு மேற்கொள்ளவேண்டிய திட்டவட்டமான படிமுறைகள்.

அத்துடன் நாங்கள் எமது செய்தி மற்றும் எமது வழியில் நாம் எதிர்கொள்ளக்கூடிய அபாய நேர்வுகள் பற்றியும் சிந்தித்துள்ளோம். நீங்கள் பயன்படுத்த விரும்புகின்ற எந்தவொரு உத்தி தொடர்பாகவும் எளிமையான அல்லது ஆழமான செயற்திட்டமொன்றினை உருவாக்கிக் கொள்வதற்கு இச்செயன்முறையினை பயன்படுத்த முடியும்.

ஆகவே, இது நீங்கள் கையாள விரும்புகின்ற பிரச்சினையொன்று தொடர்பாக, உங்களுடைய மாற்றத்திற்கான பயணத்திற்குரிய செயற்திட்டமொன்றினை ஆக்கிக்கொள்வதற்கு நீங்களே முயற்சிக்க வேண்டிய நேரமாகும்!

# அமர்வு 9

## மாற்றத்திற்கான எமது பயணம் (தொடர்ச்சி)

### அமர்வு பற்றிய கண்ணோட்டம்

செயற்திட்டத்தினை ஆக்குகின்ற செயன்முறையானது அமர்வு 8 இல் ஆரம்பித்து அமர்வு 9 இலும் தொடர்கின்றது. இது இப்பயிற்சி நெறியின் இறுதி அமர்வாகும் என்பதுடன், மதிப்பீட்டுப் பயிற்சியொன்றுடனும் கொண்டாட்டத்துடனும் இது நிறைவு பெறுகின்றது.

கூட்டு கற்றல் குறிக்கோள்கள் மற்றும் ஒரே கற்றல் செயன்முறை என்பவற்றினூடாக அமர்வு 8 மற்றும் 9 என்பன இணைக்கப்பட்டுள்ளன – இவ் அமர்வின் கற்றல் குறிக்கோள்களுக்காக தயவுசெய்து அமர்வு 8 இற்கான அமர்வுத் திட்டத்தினைப் பார்க்கவும்.

#### *அமர்வின் உள்ளடக்கங்கள் மற்றும் நேரவிபரங்கள்*

அமர்வு 9 ஆனது அண்ணளவாக 2 மணித்தியாலங்கள் மற்றும் 30 நிமிடங்களைக் கொண்ட நீளமான அமர்வொன்றாகத் திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், அமர்வின் நீளம் மற்றும் அதன் வேறுபட்ட கூறுகளுக்கு கிடைக்கக்கூடியதாக உள்ள நேரம் என்பன முழுக்குழுவிற்கு மீண்டும் அறிக்கையிடவிருக்கின்ற குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் தங்கியுள்ளது. உங்களிடம் மூன்று இற்கு மேற்பட்ட குழுக்கள் காணப்படுமாயின், உங்களுக்கு நீளமான அமர்வொன்று தேவைப்படும். உங்களிடம் மூன்று இற்கும் குறைவான குழுக்கள் காணப்படுமாயின், நீங்கள் 2 மணித்தியாலங்கள் மற்றும் 30 நிமிடங்களை விடக் குறைவான நேரத்தினைப் பயன்படுத்தலாம்.

இறுதி 30 நிமிடங்கள் மதிப்பீட்டுப் பயிற்சியொன்றினையும் கொண்டாட்டத்தினையும் உள்ளடக்கியுள்ளது.

| | |
|---|---|
| ***குழு வேலை: மாற்றத்திற்கான எமது பயணம் (தொடர்ச்சி)***<br>பங்குபற்றுநர்கள் அமர்வு 8 இல் உருவாக்க ஆரம்பித்த செயற்திட்டங்களைத் தொடர்ச்சியாக உருவாக்குவார்கள். | 30 நிமி குறைந்தது |
| ***முழுக்குழு கலந்துரையாடல்: மாற்றத்திற்கான எமது பயணங்கள் – முன்வைப்பு மற்றும் பின்னூட்டம்***<br>குழுக்கள் தங்களுடைய செயற்திட்டங்களை முன்வைத்து கலந்துரையாடுவார்கள். | 10-20 நிமி குழு |
| ***உற்சாகப்படுத்துகின்ற செயற்பாடு: மாற்றமுண்டாக்குநர் சிற்பங்கள்***<br>குழுக்கள் தங்களது உடல்களைப் பயன்படுத்தி தங்களது செயற்திட்டத்தினைப் பிரதிபலித்துக் காட்டக்கூடிய மனித சிற்பமொன்றினை உருவாக்குவார்கள். | 5 நிமி |
| ***முழுக்குழு கலந்துரையாடல்: நாம் இங்கிருந்து எங்கு செல்ல வேண்டும்?***<br>பயிற்சி நெறியின் பின்னர், பங்குபற்றுநர்கள் தனிப்பட்டரீதியில் மற்றும் கூட்டாக முன்னெடுக்கவேண்டிய செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடுவார்கள். | 25 நிமி குறைந்தது |
| ***மதிப்பீட்டு செயற்பாடு: தலை, இதயம், கைகள்***<br>பங்குபற்றுநர்கள் தாம் பயிற்சி நெறியிலிருந்து எவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளோம் என்பது தொடர்பாக சிந்திப்பார்கள். | 20 நிமி |
| ***கொண்டாட்டம்***<br>பயிற்சி நெறியின்போது விருத்தி செய்யப்பட்ட அறிவு, மனப்பாங்குகள் திறன்கள் மற்றும் உறவுகளைக் கொண்டாடுதல். | 10 நிமி |
| ***மொத்த நேரம்*** | ***2 மணி நேரம் 30 நிமி*** |

## தயாராகுங்கள்

பக்கம் 15 இலுள்ள 'ஒவ்வொரு அமர்விற்கும் எவ்வாறு தயாராவது' என்பதன்கீழ் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக அமர்விற்காக தயாராகுங்கள். நினைவிற் கொள்ளுங்கள் – உங்களுடைய குழுவைப் பற்றி உங்களுக்கு தெரியும்! ஆகவே, உங்களுடைய குழுவின் தேவைகளுக்கு ஏற்றவகையில் அமர்வின் ஏதேனும் கூறுகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு மற்றும் மாற்றுவதற்கு உங்களால் முடியும்.

### அமர்வின் நேரம் குறித்து தீர்மானியுங்கள்

இவ் அமர்விற்காக, நீங்கள் குழு வேலை மற்றும் முழுக்குழு கலந்துரையாடல் என்பனவற்றுக்கு ஒதுக்கிக் கொள்ளக்கூடிய நேரத்தினை தீர்மானியுங்கள். இதற்கு தேவைப்படும் நேரமானது எத்தனைக் குழுக்கள் தமது வேலைத்திட்டத்தை முன்வைக்க உள்ளன என்பதில் தங்கியுள்ளது இவ் அமர்விற்கான வளங்கள்.

**இவ் அமர்விற்கான வளங்கள்**

பக்கம் 16 இல் பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு அமர்விற்குமான நியம வளங்களுக்கு மேலதிகமாக, அமர்வுத் திட்டத்திற்கு அமைய அமர்வினை நடத்துவதற்கு உங்களுக்கு கீழ்வரும் வளங்கள் தேவைப்படலாம்:

- ஒவ்வொரு குழுவினதும், 'மாற்றத்திற்கான எமது பயணம்' நகர்வு விளக்கப்படத் தாள்கள் அமர்வு 8 இலிருந்து.
- அமர்வு 5 இல் விருத்தி செய்யப்பட்ட 'எமது நகரத்திற்கான ம. அ. ந. சு இன் வரைபடம்' உள்ள நகர்வு விளக்கப்படத் தாள்.
- அமர்வுகள் 6 மற்றும் 7 இலிருந்து, 'செயற்பாட்டிற்கான யோசனைகள்' எழுதப்பட்டுள்ள ஐந்து நகர்வு விளக்கப்படத் தாள்கள்.
- உத்திகளுக்கான சுவரொட்டிகள் அனைத்தும்.

இந்த அமர்வுக்கான ***துணைவளங்களை*** *இங்கே* காணலாம்.

### அறையினைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்

இவ் அமர்வானது, அமர்வு 8 இன் இறுதியில் செய்யப்பட்ட அதே குழு வேலையுடன் ஆரம்பமாகின்றது. ஆகவே, அதற்கமைய மேசைகள் மற்றும் கதிரைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள்.

முன்னைய அமர்வில், 'மாற்றத்திற்கான எமது பயணம்' பயிற்சியின்போது ஒவ்வொரு குழுவினாலும் செய்யப்பட்ட நகர்வு விளக்கப்படத் தாளினை, சில பேனைகள் மற்றும் குறிப்பெழுதும் தாள்களுடன் மேசைகளில் வையுங்கள்.

உசாத்துணை ஆவணங்களாக, 'ம. அ. ந. சு இன் வரைபடம்' மற்றும் 'செயற்பாட்டிற்கான யோசனைகள்' எழுதப்பட்டுள்ள அனைத்து நகர்வு விளக்கப்படத் தாள்கள், அதேபோல உத்திகளுக்கான சுவரொட்டிகளை சுவர்களில் ஒட்டுங்கள்.



'தலை, கைகள், இதயம்'

# விரிவான அமர்வுத் திட்டம்

***நினைவிற் கொள்ளுங்கள்:***
நீங்கள் குழு வேலை மற்றும் முழுக்குழு கலந்துரையாடல் என்பனவற்றுக்கு ஒதுக்கிக் கொள்ளக்கூடிய நேரம் என்பனவற்றை தீர்மானிக்க வேண்டும்.

## 1. *குழு வேலை: மாற்றத்திற்கான எமது பயணம் (தொடர்ச்சி)* குறைந்தபட்சம் 30 நிமி

குழுப்பயிற்சி

*வளங்கள்*

முன்னைய அமர்வில் குழுக்களினால் ஆக்கப்பட்ட 'மாற்றத்திற்கான எமது பயணம்' நகர்வு விளக்கப்படத் தாள்கள், நகர்வு விளக்கப்படத் தாள்களுக்கான பேனைகள் மற்றும் சாதாரண பேனைகள் மற்றும் குறிப்பெழுதும் ஒட்டுத்தாள்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது***
பாடத்தின் இறுதி அமர்வுக்கு அனைவரையும் மீண்டும் வரவேற்கிறோம். அவர்கள் எவ்வளவு முக்கிய வேலை செய்கிறார்கள் என்று சொல்லி அவர்களை ஊக்குவிக்கவும். 'மாற்றத்திற்கான பயணம்' தொடர்பாக தொடர்ந்து செயற்படுவதற்காக முன்னைய அமர்விலிருந்த செயற்பாட்டுத் திட்டமிடல் குழுக்களுக்கு செல்லுமாறு அவர்களுக்கு கூறுங்கள். குழுக்கள் இதுவரையில் உத்திகள் மற்றும் செயற்பாட்டு படிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்காவிடின், இப்போது அவை தொடர்பில் கவனம் செலுத்துமாறு கூறுங்கள். குழுக்களுக்கு எவ்வளவு நேரம் காணப்படுகின்றது என்பதனைக் கூறுங்கள்.

## 2. *முழுக்குழு கலந்துரையாடல்: மாற்றத்திற்கான எமது பயணங்கள் – முன்வைப்புகள் மற்றும் பின்னூட்டல்* 15 – 20 நிமி/குழு

முழுக்குழு
கலந்துரையாடல்

***விவரணம்***
இது 'மாற்றத்திற்கான எமது பயணம்' பயிற்சியின் இறுதிக் கட்டமாகும். இதில் குழுக்கள் தங்களுடைய செயற்திட்டங்களை முன்வைத்து அதற்கான பின்னூட்டல்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

*குறிப்பு*

உங்களுக்கு மிகச் சிறிய குழுவொன்று காணப்பட்டு, அனைவரும் இணைந்து ஒரே திட்டத்தினைத் தயாரித்திருப்பீர்களாயின், நீங்கள் முன்வைப்பினைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்பதுடன் 'இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது' என்பதன்கீழ் பட்டியலிடப்பட்டுள்ள வினாக்களைப் பயன்படுத்தி நிறைவு செய்கின்ற கலந்துரையாடலொன்றினை செய்யுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 1 நிமி
ஒவ்வொரு குழுவிற்கும் தங்களது 'மாற்றத்திற்கான பயணத்தினை' ஏனையக் குழுக்களுக்கு முன்வைப்பதற்கு 5 நிமிடங்கள் வழங்கப்படும் என்றும், அதனைத் தொடர்ந்து அவர்களது திட்டம் தொடர்பானக் கலந்துரையாடல் இடம்பெறும் என்றும் விளக்குங்கள்.
இக்கலந்துரையாடலின் இலக்கு, ஒருவருக்கொருவர் ஆதரவளித்து, உதவி செய்து மற்றும் ஒருவரையொருவர் ஊக்கப்படுத்தி, எங்களது யோசனைகளை ஒன்றிணைந்து விருத்தி செய்துக் கொள்வதாகும் என்பதனைத் தெளிவு படுத்துங்கள். இது, யார் சிறந்த செயற்திட்டமொன்றினை ஆக்கியிருக்கின்றனர் எனப் பார்க்கின்ற போட்டியொன்றல்ல – எம்முள் யாருக்கும் முழுமையானத் திட்டமொன்றினை ஆக்குவதற்கான நேரம் இருக்கவில்லை!

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது***
ஒவ்வொரு குழுவினையும் முன்வைப்பதற்காகவும் (5 நிமிடங்கள்) மற்றும் பின்னூட்டல்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் (15 நிமி) அழையுங்கள். பின்னூட்டல் கலந்துரையாடலை வழிநடத்துவதற்கு கீழ்வரும் வினாக்களைப் பயன்படுத்துங்கள்:

- இச்செயற்திட்டத்தில் உங்களுக்கு பிடித்த விடயம் என்ன?
- இத்திட்டத்தினை எவ்வாறு இன்னும் சிறப்பானதாக ஆக்குவதற்கான ஏதேனும் ஆலோசனைகள் உங்களிடம் உண்டா? உதாரணமாக, நாங்கள் ஒன்றிணைந்து பணியாற்றக்கூடிய மேலதிக நபர்கள் அல்லது பயன்படுத்தக்கூடிய ஏனைய உத்திகள்.
- ஏதேனும் உத்திகள்/செயற்பாடுகள் வினைத்திறனற்றவையாக, நடைமுறை சாத்தியமற்றனவாக அல்லது அபாயம் நிறைந்ததாகக் காணப்படுகின்றனவா?
- உங்களுடைய அபிப்பிராயத்தின்படி, திட்டமிடப்பட்டுள்ள உத்திகள்/ செயற்பாடுகள் மாற்றப்பட்ட நடத்தைப் பாங்குகள், நடத்தைகள் மற்றும் விதிகள் ஆகிய இலக்குகளை அடையுமா அல்லது அவ் இலக்கினை நோக்கிய முன்னேற்றமொன்றினை விளைவாக்குமா?

ஒவ்வொரு குழுவும் முன்வைப்பதற்கான மற்றும் பின்னூட்டல்களைப் பெற்றுக் கொள்வதற்கான நியாயமான வாய்ப்பொன்றினைப் பெற்றுக் கொள்கின்றன என்பதனை உறுதிப்படுத்தும்பொருட்டு, நேரத்தை கடுமையாக கைக்கொள்ளுங்கள்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நிறைவு செய்வது*** 2 நிமி
பங்குபற்றுநர்களுடைய சிறந்த செயற்பாடு மற்றும் அவர்களது ஈடுபாட்டிற்காக அவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுங்கள். அவர்கள் இச்செயற்திட்டத்தினை பாவிப்பதற்கு உத்தேசித்திருப்பினும் அல்லது இல்லாவிடினும், அவர்கள் எதிர்காலத்தில் ஈடுபடக்கூடிய அனைத்து வகையான மாற்றத்திற்கான செயன்முறைகளிலும் பிரயோகிக்கக்கூடிய செயற்பாட்டுத் திட்டமிடல் திறன்கள் பலவற்றை அவர்கள் கற்றுக் கொண்டார்கள் என்பதனை வலியுறுத்துங்கள்.

> ***ஆலோசனைக் குறிப்பு!***
> குழுவானது முன் செய்யப்பட்ட பயிற்சியினால் களைப்படைந்து காணப்படுமாயின், இவ் உற்சாகப்படுத்துகின்ற செயற்பாட்டினை முன்னதாகவே – குழு முன்வைப்புகளுக்கிடையே செய்யுங்கள்.

### 3. ***உற்சாகப்படுத்துகின்ற செயற்பாடு – மாற்றமுண்டாக்குநர்களின் சிற்பங்கள்*** 5 நிமி

***நோக்கம்***
சிறிதளவு கடுமையான இவ் அமர்வில் உற்சாக அளவினை அதிகரித்துக் கொள்ளுதல்.

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது***
பங்குபற்றுநர்களுக்கு கீழ்வரும் அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் கீழ்வரும் செயன்முறையினைப் பின்பற்றுங்கள்:
உங்களுடைய செயற்பாட்டுத் திட்டமிடல் குழுவில், உங்களுடைய செயற்திட்டத்தினைப் பிரதிபலிக்கின்ற ஒரு மனித சிற்பமொன்றை உங்களது உடல்களைப் பயன்படுத்தி ஆக்க வேண்டும். உங்களுக்கு 4 நிமிடங்கள் உள்ளன. நேரம் முடிவடைகின்றபோது, நான் என்னுடைய கைகளைத் தட்டுவேன் – அப்போது அனைவரும் நீங்கள் நிற்கின்ற நிலைகளிலேயே உறைந்து நிற்க வேண்டும். அப்போது நாங்கள் ஒவ்வொருவரினதும் சிற்பங்களைப் பார்த்து அவர்களுக்காக கரகோஷங்களை எழுப்புவோம்!

### 4. ***பிரதான அமர்வின் கலந்துரையாடல்: நாங்கள் இங்கிருந்து எங்கு செல்ல வேண்டும்?*** குறைந்தது 25 நிமி


***முழுக்குழு கலந்துரையாடல்***

***விவரணம்***
முழுக்குழு கலந்துரையாடலானது இப்பயிற்சி நெறியினை முடிவிற்கு கொண்டு வருகின்றது. இது, இப்பயிற்சி நெறி நிறைவு பெற்றதும், பங்குபற்றுநர்கள் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை மேம்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் கவனம் செலுத்துகின்றது.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது***
கீழ்வருவனவற்றை விளக்குங்கள்:
நாங்கள் அனைவரும் இப்பயிற்சி நெறியின் முடிவிற்கு வந்துள்ளோம். இப்பயிற்சி நெறியானது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய மனித உரிமை தொடர்பில் கவனம் செலுத்தியது.

நாங்கள் எமது அடையாளங்கள், சிறப்புரிமை மற்றும் பாதகநிலைகள் தொடர்பாக சிந்தித்திருந்தோம். நாங்கள் மனித உரிமைகள் பற்றி, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் பற்றி, உரிமையின் மீறல்கள் பற்றிக் கற்றுக் கொண்டோம். மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படக்கூடிய வேறுபட்ட பல உத்திகள் பற்றி நாம் கற்றோம். அத்துடன், 'மாற்றத்திற்கான பயணங்களை' – எங்களுடைய செயற்திட்டங்களை உருவாக்குவதற்கு நாங்கள் பயிற்சி செய்தோம்.

ஆகவே, தனிநபர்களாக மற்றும் குழுக்களாக நாங்கள் இங்கிருந்து எங்கு செல்ல வேண்டும்? மாற்றமுண்டாக்குநர்களாக வருவதற்கு நாங்கள் எவ்வாறு முன்னோக்கி செல்ல வேண்டும்?

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது***
பகிர்வதற்கான மற்றும் கலந்துரையாடுவதற்கான நேரத்தின்போது கீழ்வரும் வினாக்கள் தொடர்பாக சிந்திக்குமாறு பங்குபற்றுநர்களிடம் கூறுங்கள்.

- நாங்கள் கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில், தனிநபர்களென்றவகையில் நாங்கள் எமது அன்றாட வாழ்வில் செய்கின்ற எவையேனும் விடயங்களை வித்தியாசமாக செய்ய வேண்டுமா?
- ஒரு குழுவென்ற வகையில் நாங்கள் ஒன்றிணைந்து எங்களது ஏதேனும் செயற்பாட்டிற்கான யோசனைகள்/திட்டங்கள் தொடர்பாகத் தொடர்ந்து செயலாற்ற வேண்டுமா மற்றும் அவற்றை அமுல்படுத்த வேண்டுமா? எத்திட்டங்களை/எவ் யோசனைகளை? யார் இணைந்துக் கொள்ள விரும்புகின்றீர்கள்? அப்படியாயின், எங்களுடைய அடுத்த படிமுறை என்னவாக இருக்க வேண்டும்?
- இச் செயற்பாட்டிற்கான யோசனைகளில் எவற்றையேனும், நாங்கள் நேரடியாக உள்வாங்கப்பட்டுள்ள, – எங்களது மத சமுதாயங்கள், தொழிலிடங்கள் அல்லது பெண்கள் குழுக்கள் போன்ற ஏனைய வழிகளினூடாக முன்னெடுத்து செல்ல முடியுமா?
- நாங்கள் ஈடுபடாத அமைப்புகள் அல்லது குழுக்கள் உள்ளன, ஆனால் யாரிடம் பேசி நடவடிக்கை எடுக்க ஊக்குவிக்கலாம்? யார் மற்றும் என்ன?

ஒவ்வொரு வினாவின் கீழும் கலந்துரையாடப்படுகின்ற விடயங்களை கீழ்வருமாறு தலைப்பிடப்பட்டுள்ள 4 நகர்வு விளக்கப்படத் தாள்களில் எழுதுவதனூடாக ஆவணப்படுத்துங்கள்.

- நான் செய்ய வேண்டிய விடயங்கள்.
- நாங்கள் இக்குழுவில் செய்ய வேண்டிய விடயங்கள்.
- வேறு குழுக்கள்/அமைப்புக்களினூடாக நாங்கள் செய்ய வேண்டிய விடயங்கள்.
- ஏனையோர் செய்ய வேண்டுமென நாங்கள் ஊக்கப்படுத்துகின்ற விடயங்கள்.

சில விடயங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட நகர்வு விளக்கப்படத் தாள்களில் எழுதப்பட்டிருப்பின் அது குறித்து கவலைப்பட வேண்டாம் – இங்கு விடயங்களை வகைப்படுத்துவது எமது நோக்கமல்ல, ஆனால் நாங்கள் அடுத்த படிமுறைகளை முன்னெடுக்கக்கூடிய வேறுபட்ட வழிகள் பற்றி சிந்திப்பதே இதன் நோக்கமாகும்.

கலந்துரையாடலில், ஒரே இலக்கை நோக்கிப் பாடுபடும் தனிநபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் பரந்த வலையமைப்பினால் மாற்றத்தை மிக எளிதாக அடைய முடியும் என்று ஆராய்ச்சி காட்டுகிறது என்பதைக் குறிப்பிடவும், ஒருங்கிணைக்கப்பட்ட விதத்தில் வெவ்வேறு, நிரப்பு வகை நடவடிக்கைகளை மேற்கொள்வது.

## 5. *மதிப்பீட்டு பயிற்சி: தலை, இதயம், கைகள்* 20 நிமி

இவ் எளிய தனிப்பட்ட மதிப்பீட்டுப் பயிற்சியானது, பங்குபற்றுநர்கள் பயிற்சி நெறியிலிருந்து எவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பது தொடர்பில் சிந்திப்பதற்கு அவர்களுக்கு உதவும்.

*தனிப்பட்ட பயிற்சி*

*வளங்கள்*

- ஒரு பங்கேற்பாளருக்கு ஒரு ‘தலை-இதயம்-கைகள்’ கையேட்டின் பிரதி.
- ஒரு பங்கேற்பாளருக்கு ஒரு பேனா.

***இப்பயிற்சியினை எவ்வாறு அறிமுகப்படுத்துவது*** 2 நிமி

ஒவ்வொரு பங்குபற்றுநர்களுக்கும் ஒரு கைப்பிரதியினை வழங்குங்கள்.

அவர்கள் தனிப்பட்ட முறையில், படிப்பில் இருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்வதைப் பற்றி சிந்திக்க ஒரு மதிப்பீட்டுப் பயிற்சியைச் செய்யப் போகிறார்கள் என்பதை விளக்குங்கள். பாடத்திட்டத்தை மதிப்பிடுவதற்குத் தாள்கள் சேகரிக்கப்படுமா அல்லது நினைவூட்டலாக தாளை வீட்டிற்கு எடுத்துச் செல்ல முடியுமா என்பதில் தெளிவாக இருங்கள். நீங்கள் தாள்களை சேகரிக்கும் போது தனிப்பட்ட பிரதிபலிப்புகள் எழுதுவதைத் தவிர்ப்பது முக்கியம்!

***இப்பயிற்சியினை எவ்வாறு நடத்துவது*** 18 நிமி

கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக அமைதியாக சிந்திக்குமாறு பங்குபற்றுநர்களுக்கு கூறுங்கள்:

- அறிவு மற்றும் அபிப்பிராயங்கள் தொடர்பில் நீங்கள் பெற்றுக் கொண்டுள்ள விடயங்கள் தொடர்பாக சிந்தியுங்கள். உங்கள் எண்ணங்களை தலையில் எழுதுங்கள்.
- உங்களைப்பற்றிய உணர்வுகள், கண்டறியப்பட்டவைகள் அல்லது உங்களது புதிய நடத்தைகள் பற்றி சிந்தியுங்கள். இவற்றை இதயத்தில் எழுதிக் கொள்ளுங்கள்.
- நடவடிக்கையொன்றினை எடுப்பதற்கு அல்லது எதேயேனுமொன்றை மாற்றுவதற்கு நீங்கள் கொண்டுள்ள யோசனைகள் யாவை என சிந்தியுங்கள். இவற்றைக் கைகளில் எழுதிக் கொள்ளுங்கள்.
- முடியுமானளவு குறிப்பாக இருப்பதற்கு முயற்சியுங்கள். இதனை செய்வதற்கு அவர்களுக்கு 8 நிமிடங்களை வழங்குங்கள்.

உங்கள் குழுவின் அளவைப் பொறுத்து, ஒவ்வொரு நபரும் ஒரு விடயத்தைப பகிர்ந்து கொள்ளும்படி வளையத்தைச் சுற்றிச் செல்லுங்கள் அல்லது பங்கேற்பாளர்களை ஜோடிகளாகப் பகிர்ந்துகொண்டு பிரதிபலிக்கச் சொல்லுங்கள். (10 நிமி)

(மாற்று பதிப்பு: மூன்று தனித்தனி நகர்வு விளக்கப்படத் தாள்களில் ஒரு தலை, இதயம் மற்றும் கையை வரையவும். பிந்தைய குறிப்புகளில் மேலே உள்ள கேள்விகளுக்கு பதிலளிக்க பங்கேற்பாளர்களைக் கேளுங்கள் மற்றும் அப்பதில்களை குறிப்பு தாளில் எழுதி அவற்றை நகர்வு விளக்கப்படத் தாள்களில் ஒட்டவும். முழுக்குழுவில் முடிவுகளைப் பற்றி விவாதிக்கவும்.)

### 6. கொண்டாட்டம்! 10 நிமி

இப்பயிற்சி நெறியின்போது, பங்குபற்றுநர்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொண்டார்கள் என்பதுடன் இச்செயன்முறைக்காக அவர்களின் நேரம் மற்றும் சக்தியினை வழங்கியுள்ளனர். இது, அவர்களுக்கு நன்றி சொல்வதற்கான மற்றும் அவர்கள் பயிற்சி நெறியின்போது விருத்தி செய்து கொண்ட புதிய அபிப்பிராயங்கள், அறிவு, திறன்கள் மற்றும் உறவுகளைக் கொண்டாடுவதற்கான நேரம்!

நன்றாக செய்தீர்கள் என்று சொல்வதற்காகவும், நன்றி சொல்வதற்காகவும் சிறிய கொண்டாட்ட நிகழ்வொன்றினைத் திட்டமிடுங்கள். நீங்கள் பாடலொன்றினைப் பாடுவதற்கு, சில வார்த்தைகளைப் பகிர்ந்துக் கொள்வதற்கு, பிரார்த்தனை செய்வதற்கு, ஒன்றிணைந்து சில உணவு பண்டங்களை உண்பதற்கு அல்லது நடனமாடுவதற்கு விரும்பலாம்.

நீங்கள் விரும்பினால், பங்குபற்றுநர்களுக்கு வழங்குவதற்கான ஒரு சான்றிதழ் காணப்படுகின்றது. நீங்கள் அதனை அச்சுப்பிரதி செய்து கொள்ள முடியும்.



'உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்கள்'

"மாற்றம் செய்பவராக மாறுவது என்பது ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய ஒரு பயணமாகும்."
**UKOHA NGWOBIA**, நெறியாளர், நைஜீரியா

# பகுதி C

## மேற்கோள் குறிப்பு

## ம.அ.ந.சு தொடர்பான பிரதான மனித உரிமைகள் உடன்பாடுகள்

### *அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்,* (UDHR) *உறுப்புரை 18*

சிந்தனைச் சுதந்திரம், மனசாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இவ்வுரிமையினுள் ஒருவர் தனது மதத்தை அல்லது நம்பிக்கையை மாற்றுவதற்கான சுதந்திரமும், போதனை, பயில்நெறி, வழிபாடு, அனுட்டானம் என்பன மூலம் தனது மதத்தை அல்லது நம்பிக்கையைத் தனியாகவும், வேறொருவருடன் கூடியும், பகிரங்கமாகவும், தனிப்பட்ட முறையிலும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரமும் அடங்கும்.

### *குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம்,* (ICCPR) *உறுப்புரை 18*

1. ஒவ்வொருவருக்கும் சிந்தனைச் சுதந்திரம், மனசாட்சிச் சுதந்திரம் மற்றும் மதச் சுதந்திரம் என்பவற்றுக்கான உரிமையைக் கொண்டவராவார். இந்த உரிமை ஒருவர் தான் விரும்பும் ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கான அல்லது மாற்றிக்கொள்வதற்கான சுதந்திரம், தனித்தோ பிறருடன் கூட்டாகவோ பகிரங்கமான இடங்களிலோ அன்றேல் தனிப்பட்ட இடங்களிலோ தனது சமயத்தை அல்லது நம்பிக்கையை வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், வழக்கத்திலும் கற்பித்தலிலும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் என்பவற்றை உள்ளடக்கும்.
2. எவரும் தான் தெரிவு செய்யும் ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கும் ஏற்றுக்கொள்வதற்குமான சுதந்திரத்திற்கு கேடு விளைவிக்கும் வலுக்கட்டாயத்திற்கு உட்படுத்தப்படலாகாது.
3. ஒருவர் தனது மதத்தை அல்லது நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம், சட்டத்தினால் விதிக்கப்பட்டவையும் பொது மக்கள் பாதுகாப்பு, ஒழுங்கு, உடனலம், ஒழுக்கம் அல்லது பிறரது அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் என்பவற்றின் ஏற்பாட்டுக்கு அவசியமானவையுமான வரையறைப்படுத்தல்களுக்கு மட்டும் உட்படும்.
4. இந்த உடன்பாட்டு ஒப்பந்தத்திற்கான அரச தரப்பும் பெற்றோரும் பொருத்தமானவிடத்து சட்டமுறையான பாதுகாவலர்களும் தமது சொந்தப் பற்றுறுதிக்கு இசைவாகத் தமது பிள்ளைகளின் சமய, ஒழுக்கக் கல்வியை உறுதிப்படுத்துவதற்கான சுதந்திரத்துக்கு மதிப்பினை அளிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளன.

### *சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்,* (CRC) *உறுப்புரை 14*

1. பங்குகொள்ளும் அரச தரப்பினர் பிள்ளைகளுக்குள்ள பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், மனசாட்சிச் சுதந்திரம் மற்றும் மதச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.
2. பங்கு கொள்ளும் தரப்பினர் பெற்றோர்களின் உரிமைகளையும் கடமைகளையும் மதித்தல் வேண்டும், அத்துடன் ஏற்புடையதாகுமிடத்து சட்டரீதியான பாதுகாவலர்கள் பிள்ளைகளின் பரிணாமத் திறன்களுக்கு இசைவான விதத்தில் தனது உரிமையைப் பிரயோகிக்கையில் அதற்கு உரிய பணிப்புரைகளை வழங்குதல் வேண்டும்.
3. ஒருவருடைய மதத்தை அல்லது நம்பிக்கைகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான சுதந்திரமானது சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்துடன் பொது மக்கள் பாதுகாப்பை, சட்ட ஒழுங்கை, சுகாதாரத்தை அல்லது நற்பண்புகளை பாதுகாப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு மட்டும் அமைவாக இருக்கலாம்.

*குறிப்பு*

சர்வதேச சட்டத்தின் கீழ் மனித உரிமைகள் பிரகடனங்கள் அரசியல்ரீதியாகப் பிணைக்கின்ற சர்வதேச உடன்பாடுகளாக உள்ள அதேவேளை, ஒப்பந்தங்கள், சமவாயங்கள் மற்றும் உடன்பாடுகள் என்பன சட்டரீதியாகப் பிணைக்கின்ற உடன்பாடுகளாயுள்ளன. எவ்வாறெனினும், அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனமானது மிகப் பரந்தளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால், தற்போது அது சர்வதேச வழக்காற்றுச் சட்டமாகக் கருதப்படுகின்றது.

### *கீழ்வருவனவற்றையும் பார்க்க*

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 18 இன் பொருட்கோடலுக்கான நிபுணத்துவ வழிகாட்டலை வழங்குகின்ற மனித உரிமைகள் குழுவின் பொதுக் கருத்துரை 22.
https://www.equalrightstrust.org/ertdocumentbank/general%20comment%2022.pdf

அனைத்து வடிவங்களிலுமான சகிப்புத்தன்மையின்மை மற்றும் மதம் அல்லது நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சம் என்பனவற்றை இல்லாதொழிப்பதற்கான ஐக்கிய நாடுகள் பிரகடனம்.
https://www.ohchr.org/en/professionalinterest/pages/religionorbelief.aspx

பாரபட்சம், விரோதம் அல்லது வன்முறைக்கானத் தூண்டுதலை உள்ளடக்குகின்ற தேசிய, இன அல்லது மத வெறுப்பிற்கான ஆதரித்து வாதாடுதலைத் தடுப்பதற்கான றாபட் செயற்திட்டம்.
https://www.ohchr.org/en/instruments-mechanisms/instruments/declaration-elimination-all-forms-intolerance-and-discrimination

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் தொடர்புடைய சர்வதேச மனித உரிமை நியமங்கள் தொடர்பான முழுமையான ஒரு தொகுப்பினை கீழே தரப்பட்டுள்ள மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையாளரின் அலுவலகத்திற்கான இணைப்பில் பார்க்கலாம்:
https://www.ohchr.org/EN/Issues/FreedomReligion/Pages/Standards.aspx

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையிடுனரின் பணிகள் பற்றிய தகவல்களை நீங்கள் இங்கே பார்க்கலாம்:
https://www.ohchr.org/EN/Issues/FreedomReligion/Pages/FreedomReligionIndex.aspx

### *மேலதிகமாகக் கற்றுக்கொள்ளுங்கள்*

ம.அ.ந.சு என்றால் என்ன மற்றும் அது எப்போது மட்டுப்படுத்தப்படலாம் என்பது தொடர்பாக மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினைக் கற்றுக்கொள்வதற்கான தளத்தின் எட்டு குறுந் திரைப்படங்களை இங்கு பார்க்கவும்.
www.forb-learning.org/film-resources

*திரைப்படங்கள்*

# உங்களுடைய நாட்டில் ம.அ.ந.சு பற்றியத் தகவல்களை அறிந்து கொள்ளுதல்

## *தகவல் மூலங்களைத் தெரிவு செய்வது தொடர்பான பொதுவான ஆலோசனை*

உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியினை வழிநடத்துவதற்கு முன்னர், உங்களுடைய நாட்டில் ம.அ.ந.சு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சூழ்நிலையினைப் பரந்தளவில் அறிந்து கொள்வதற்காக சில விடயங்களை வாசிக்க வேண்டுமென ஆலோசனை வழங்கப்படுகின்றது. இது, தேசிய மட்ட சட்டப் பிரச்சினைகள் மற்றும் உங்களுடைய நாட்டிலுள்ள பல்வேறுபட்ட குழுக்களின் அனுபவங்கள் என்பன கற்றலில் மற்றும் கலந்துரையாடல்களில் தொடர்புபடுத்தப் படுகின்றன என்பதனை உறுதி செய்வதற்கு உங்களுக்கு உதவும்.

தகவலுக்கான தேசிய மூலங்களை இனங்காண்பதற்கு முயற்சி செய்யுங்கள், உதாரணமாக, சுயாதீனமான அரச சார்பற்ற அமைப்புக்களிடமிருந்து தகவல்களைப் பெறுதல் மற்றும் அத்தகவல்களை நம்பத்தகுந்த சர்வதேச மூலங்களைக் கொண்டு சரிபார்த்துக் கொள்ளல்.

நீங்கள் தகவலைப் பெற எத்தனிக்கின்றபோது, ஏனைய நம்பிக்கைகளைக் கொண்டுள்ள குழுக்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது உள்ளடங்கலாக ஒரு குழுவின் பரந்தளவான பின்னணியினை புரிந்து கொள்ளாமல் அக்குழுவின் சூழ்நிலையினை விளங்கிக் கொள்ள இயலாது. ஒரு நம்பிக்கை குழுவின் உரிமைகள் மாத்திரம் மீறப்படுகின்ற நாடென்று எதுவும் இல்லை. எல்லா சந்தர்ப்பங்களிலும், பல குழுக்கள் வேறுபட்ட வழிகளில் மற்றும் வேறுபட்ட மட்டங்களில் பாதிக்கப்படுகின்றன. இதன் பொருள், ஒரு குழுவினை மாத்திரம் மையப்படுத்தியுள்ள நம்பத்தகுந்தத் தகவல் மூலங்களை பொருட்படுத்தாதிருக்க வேண்டும் என்பதல்ல ஆனால் ஒன்றிற்கு மேற்பட்ட குழுக்கள் பற்றிய ஒன்றிற்கும் மேற்பட்ட தகவல் மூலங்களை நீங்கள் வாசிக்க வேண்டும் என்பதாகும்.

***விமர்சனரீதியாக சிந்தியுங்கள்!***

தகவல்களை வாசிக்கின்றபோது, பரப்புரைகள் மற்றும் பக்கச்சார்பு குறித்து விழிப்பாயிருங்கள். சில அரசாங்கங்கள் பொய்யானத் தகவல்கள், அச்சுறுத்தல் மற்றும் வற்புறுத்தல் ஆகியவற்றைப் பயன்படுத்தி மனித உரிமைகள் கண்காணிக்கப்படுவதனையும் அறிக்கையிடப்படுவதனையும் தடுக்கின்றன. ஆகவே, தங்களுடைய சொந்த நாட்டு சூழ்நிலை தொடர்பான தேசிய அரசாங்கங்களின் தகவல்கள் நம்பத்தக்கன அல்ல. சில சமயங்களில் வெளிநாட்டு அரசாங்கங்கள் அல்லது மத மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களினால் வழங்கப்படுகின்ற தகவல்கள் பக்கச்சார்பானவையாகவும் அல்லது தவறாக வழிநடத்துகின்றனவாகவும் அமையலாம். சிலநேரங்களில் வேண்டுமென்ற எண்ணத்துடனான அரசியல் பக்கச்சார்பு காணப்படலாம். ஒரு சூழ்நிலை தொடர்பாக தவறாக வழிநடத்தக்கூடிய கருத்துப் பதிவு பெரும்பாலும், ஒரு குழுவினை மாத்திரம் மையப்படுத்துகின்றமையினால் பெறப்படுகின்ற தற்செயலான விளைவாகவே அமைகின்றது. வேறுபட்ட மூலங்களைப் பயன்படுத்துங்கள், நீங்கள் பெற்றுக் கொண்ட நிகழ்வுகளை சரிபார்த்துக் கொள்ளுங்கள் மற்றும் விமர்சன ரீதியாக சிந்தியுங்கள்!

(துரதிஷ்டவசமாக, பட்டியற்படுத்தப்படுகின்ற பல மூலங்கள் ஆங்கிலத்தில் மாத்திரமே கிடைக்கப்படக்கூடியதாக உள்ளன.)

## *தகவல்களுக்கான சர்வதேச மூலங்கள்*

இங்கே சில பெறுமதிமிக்க தகவல் மூலங்கள் தரப்பட்டுள்ளன. உங்களுடைய நாட்டிற்கு பொருத்தமானப் பகுதிகளைக் கண்டறியும் பொருட்டு அவற்றை வாசித்து பாருங்கள்.

ஐக்கிய அமெரிக்க அரச திணைக்களம் – பெரும்பாலும் உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் நிலவுகின்ற மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் நிலைப்பாடு தொடர்பான வருடாந்த அறிக்கை.
www.state.gov/international-religious-freedom-reports

சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான ஐக்கிய அமெரிக்க ஆணைக்குழு (USCIRF) – இவ் உரிமை தொடர்பிலான பாரதூரமான மீறல்கள் இடம்பெறுகின்ற நாடுகளில் நிலவுகின்ற மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் நிலைப்பாடு தொடர்பான வருடாந்த அறிக்கை
www.uscirf.gov/annual-reports

சிறுபான்மையினர் உரிமைகளுக்கான சர்வதேச குழு - சிறுபான்மையினர் மற்றும் சுதேசிய சமுதாயங்கள் தொடர்பான நாடுகளின் தகவல்களைக் கொண்டுள்ள பதிவேடு.
https://minorityrights.org/directory

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்கான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையிடுநர் - ஆய்வறிக்கைகள் மற்றும் நாடுகளுக்கான விஜயங்களைத் தொடர்ந்து வெளியிடப்படுகின்ற அறிக்கைகள்.
https://www.ohchr.org/en/issues/freedomreligion/pages/freedomreligionindex.aspx

தேவாலய ஆய்வு நிலையம் (Pew Research Centre) – உலகெங்கிலும் மதத்துடன் தொடர்புடையதாக இடம்பெறுகின்ற மட்டுப்பாடுகள் மற்றும் சமூக விரோதங்கள் தொடர்பான தரவுகள்.
https://www.pewresearch.org/topic/religion/religious-freedom-restrictions/

அரங்கு 18 – மத்திய ஆசியா, தென் கௌகாசஸ், ரஷ்யா, பெலாரஸ், கிரிமியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில் இடம்பெறுகின்ற மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மீறல்களைக் கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.
www.forum18.org

OSCE பிராந்தியத்தில் (ஐரோப்பா, கௌகாஸ், மத்திய ஆசியா, வட அமெரிக்கா) இடம்பெறுகின்ற மத அடையாளங்களை அடிப்படையாகக் கொண்ட வெறுப்புக் குற்றங்கள் உள்ளடங்கலாக வெறுப்புக் குற்றங்கள் தொடர்பாக அறிக்கையிடுதல்
OSCE - ODIHR | Hate Crime Reporting

Aid to the Church in Need – தேவையுள்ள சபைகளுக்கான உதவி - உலகில் மத சுதந்திரம் தொடர்பான 2021 ஆம் ஆண்டு அறிக்கை
https://acnuk.org/our-campaigns/religious-freedom-in-the-world-report-2021/

***குறிப்பிட்ட நம்பிக்கை குழுக்களை மட்டும் மையப்படுத்துகின்ற அறிக்கைகள்***

Anti-Semitism Worldwide – Kantor Center இனால் வெளியிடப்படுகின்ற வருடாந்த அறிக்கைகள்
https://en-humanities.tau.ac.il/kantor/rerearch/annual_reports

மதம் அல்லது நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சம் மற்றும் சகிப்புத்தன்மையின்மை என்பனவற்றை இல்லாதொழிப்பதற்காக இஸ்லாமியர்களுக்கு எதிரான பாகுபாடு/முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்பினை எதிர்த்தல்: மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையிடுநரின் அறிக்கை, 2021
https://www.ohchr.org/EN/Issues/FreedomReligion/Pages/HatredAndDiscrimination.aspx

சிந்தனைச் சுதந்திரம் தொடர்பான அறிக்கை – Humanists International இன் வருடாந்த அறிக்கை.
https://fot.humanists.international/

Persecution of Ahmadis Worldwide – அஹ்மதி உரிமைகளுக்காக பணியாற்றுகின்ற அரச சார்பற்ற அமைப்பொன்றான சர்வதேச மனித உரிமைகள் குழுவினால் ஐக்கிய நாடுகளுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை.
http://hrcommittee.org/wp-content/uploads/2021/06/Persecution-of-Ahmadis-worldwide.pdf

The Global Persecution of Jehovah's Witnesses – USCIRF இலிருந்து அறிக்கைகளை வெளியிடுதல்.
https://www.uscirf.gov/sites/default/files/2020%20Issue%20Update%20-%20Jehovahs%20Witnesses.pdf

World Watch List – மட்டுப்பாடுகளற்ற வழிமுறைகளில் கிறிஸ்தவர்கள் வன்முறைக்குள்ளாக்கப்படுகின்றமை தொடர்பான வருடாந்த அறிக்கை.
https://www.opendoorsuk.org/persecution/world-watch-list/

***ம.அ.ந.சு இனை வேறுபட்ட மட்டங்களில் ஆராய்வது உள்ளடங்கலாக ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை பரந்தளவாக ஆராய்கின்ற வளங்கள்***

IDEA International ஆனது உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் மத அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் உள்ளடங்கலாக ஜனநாயக நிலைப்பாடு எவ்வாறு உள்ளது என்பதனைக் கண்காணிக்கின்றது. வலைத்தளத்திலுள்ள ஊடாடும் வரைபடத்தில் உங்களுடைய நாட்டில் கிளிக் செய்யுங்கள் மற்றும் தரவுகளை ஆராய்வதற்கு இடது-கைப்பக்கமுள்ள தெரிவுகளைப் பயன்படுத்துங்கள்.
https://www.idea.int/gsod-indices/#/indices/world-map

CIVICUS, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்துடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ள வெளிப்படுத்தலுக்கான சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான மற்றும் ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம் உள்ளடங்கலாக சிவில் சமூக செயற்பாட்டிற்கான இடைவெளிமீது விதிக்கப்படுகின்ற மட்டுப்பாடுகளை பின்தொடர்கின்றது.
https://monitor.civicus.org/

Freedom House – 210 நாடுகள் மற்றும் வரையரையுள்ள பிரதேசங்களில் அரசியல் மற்றும் குடியியல் சுதந்திரங்களுக்கான பொது மக்களின் அனுகுதல் தொடர்பாக மதிப்பிட்டு அறிக்கையிடுகின்றது. உங்களுடைய நாட்டிற்குரிய தரவுகளை அறிந்து கொள்ள உங்களது நாட்டின்மீது கிளிக் செய்யுங்கள்.
https://freedomhouse.org/explore-the-map

Human Rights Watch ஆனது 100 இற்கும் மேற்பட்ட நாடுகளின் மனித உரிமைகள் நிலைப்பாடு தொடர்பாக வருடாந்த அறிக்கையினை வெளியிடுகின்றது. (அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையினைப் பார்ப்பதற்கு, கீழுள்ள தொடுப்பில் காணப்படுகின்ற 2021 இற்கு பதிலாக உங்களுக்கு பார்ப்பதற்கு அவசியமான வருடத்தைப் பதிலீடு செய்யவும்.)
https://www.hrw.org/world-report/2021

Amnesty International இன் நாடுகளுக்கான விபரக் குறிப்புக்கள், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை வேறுபடுகின்ற விஸ்தீரணங்களுக்கு உள்ளடக்குகின்றன.
www.amnesty.org/en/countries/

# கற்றுக் கொண்டேயிருங்கள்: மேலதிக துணை வளங்கள் மற்றும் இயங்கலை பயிற்சி நெறிகள்

ம.அ.ந.சு
கற்றலுக்கான தளம்
forb-learning.org/ta/

FORB Learning Platform

### ம.அ.ந.சு பற்றிக் கற்றுக் கொள்ளுங்கள்

ம.அ.ந.சு. இனைக் கற்றுக்கொள்வதற்கான தளமானது உங்களுடைய கற்றலை ஆழப்படுத்திக் கொள்வதற்கு உதவி செய்கின்ற பல்வேறுபட்ட துணை வளங்கள் மற்றும் பயிற்சி நெறிகளை வழங்குகின்றன.
forb-learning.org/ta/

இத்துணை வளங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- ம.அ.ந.சு, நீதிக்கான அணுகுதல், மத அறிவு மற்றும் சூழமைவுப் பகுப்பாய்விற்கான கருவிகள் என்பனவற்றை அறிமுகப்படுத்துகின்ற பல்வேறுபட்ட திரைப்படங்கள்
- கோரிக்கையின்பேரில் வழங்கப்படுகின்ற ம.அ.ந.சு தொடர்பான இயங்கலை பயிற்சி நெறி ம.அ.ந.சு
- கோரிக்கையின்பேரில் வழங்கப்படுகின்ற ம.அ.ந.சு மற்றும் பால்நிலை தொடர்பான இயங்கலை பயிற்சி நெறி. ம.அ.ந.சு மற்றும் பால்நிலை
- ம.அ.ந.சு மற்றும் பால்நிலை மற்றும் சிவில் சமூகங்களின் செயற்பாட்டு பரப்பு குறைக்கப்படுதல் தொடர்பான அறிக்கைகள். கருப்பொருள் சார் பிரச்சினைகள்

### ம.அ.ந.சு இனை நெறியாள்வதற்கான உங்களது திறன்களை விருத்தி செய்துக் கொள்ளுங்கள்

உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியிற்கு மேலதிகமாக ம.அ.ந.சு இணைக் கற்றுக்கொள்வதற்கான தளமானது கீழ்வருவனவற்றை வழங்குகின்றது:

- ம.அ.ந.சு இணை நெறியாள்வதற்கான கருவித்தொகுதி - ம.அ.ந.சு தொடர்பான மனித உரிமைகள் கல்வியை வழங்குவதில் ஈடுபட்டுள்ள எவரும் பயன்படுத்துவதற்கான பயிற்சிகளை உள்ளடக்கிய ஒரு கருவித்தொகுப்பு (2023 இன் வசந்த காலப்பகுதியில் வெளியிடப்படவுள்ளது).
- ம.அ.ந.சு இணை பயிற்றுவிப்பவர்களுக்கான/நெறியாள்வதற்கான 10 வார காலப்குதியினைக் கொண்ட அண்ணளவாக ஒரு வாரத்திற்கு 6 மணி நேரம் கொண்ட இயங்கலை வழியான பயிற்சி நெறியொன்று, (அனுமதிக்கான இடங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாக உள்ளன).
- வலையமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்புக்கள் - புதிய துணை வளங்கள் மற்றும் பயிற்சி நெறிகள் தொடர்பான புதிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளும்பொருட்டும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான நிகழ்வுகளில் பற்கேற்கும்பொருட்டும், ம.அ.ந.சு இணை நெறியாள்பவர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கான எமது வலையமைப்புடன் இணைந்து கொள்ளுங்கள்.

### உத்திகள் பற்றியும் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது பற்றியும் மேலும் கற்றுக் கொள்ளுங்கள்

இங்கு நீங்கள் ஏனைய வழங்குனர்களினால் வழங்கப்படுகின்ற இலவசமான கற்றல் ஆவணங்கள் மற்றும் பயிற்சி நெறிகளின் தெரிவிற்கானத் இணைப்பினைப் பார்க்கலாம். (துரதிஷ்டவசமாக, இத்தகைய பல வளங்கள்/பயிற்சிநெறிகள் ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கக்கூடியதாக உள்ளன.)

#### அவசரகால உத்திகள்: தடுத்தல், நிறுத்துதல், உதவி கோருதல் மற்றும் எச்சரித்தல்

அவசரகால உத்திகள் மனித உரிமைகளுக்கு ஏற்படுகின்ற உடனடியான அச்சுறுத்தல்களைக் கையாள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இவ் உத்திகளை நீங்கள் பயன்படுத்துவதற்கு கீழுள்ள வளங்கள் உதவி செய்யும்.

**இயங்கலை பயிற்சி நெறிகள்**

இயங்கலையில் இடம்பெறுகின்ற வெறுப்புப் பேச்சு பற்றி புரிந்து கொள்ளுதலும் அதனை எதிர்த்தலும்
ஐரோப்பாவில் வெறுப்புக் குற்றங்கள் மற்றும் வெறுப்புப் பேச்சினைக் கையாள்வதனை இலக்காகக் கொண்டுள்ள FacingFacts என்ற கல்வி முன்னெடுப்பொன்றினால் வ ழங்கப்படுகின்ற, கோரிக்கையின்பேரில் கிடைக்கக்கூடியதாக உள்ள பயிற்சி நெறி. அதிகளவான கற்றல்கள் பல்வேறுபட்ட பரந்தளவான சூழமைவுகளுக்கு ஏற்றதாக உள்ளன. வழங்கப்படுகின்ற ஏனைய பயிற்சி நெறிகளையும் பார்க்க. உதாரணமாக, 'யூதர்களுக்கு எதிரான வெறுப்புக் குற்றங்களை புரிந்து கொள்ளுதல் மற்றும் அடையாளம் காணுதல்'.
சமாதான செயன்முறைக்கான ஆதரவு மற்றும் தேர்தல் வன்முறைகளைத் தடுத்தல் (மனிதப் பாதுகாப்பு)
ஐக்கிய அமெரிக்காவின் சமாதானத்திற்கான நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற இயங்கலை பயிற்சி நெறிகள்.

*வளங்கள்*

[வீதித் தொந்தரவுகள்]
வீதித் தொந்தரவுகள் அனைத்து பெண்களையும் பாதிக்கின்றது. குறிப்பாக சிறுபான்மையின பெண்கள் வெறுப்பினால் தூண்டப்படுகின்ற தொந்தரவு மற்றும்/ அல்லது பாலியல் தொந்தரவினால் இலகுவாகப் பாதிக்கப்படக்கூடியவர்களாக உள்ளனர். பாதிக்கப்பட்டவராக அல்லது பார்வையாளராக எவ்வாறான பிரதியுத்தரம் வழங்கப்படலாம் என்பது தொடர்பான ஆலோசனைகள் மற்றும் உபாயங்களை இங்கே அறிந்து கொள்ளலாம்:

***மாற்றத்திற்கான உத்திகள்: பிரச்சாரம் செய்தல், ஆதரித்து வாதாடுதல், சலுகையளித்தல் மற்றும் எதிர்த்து நிற்றல்***

ஆதரித்து வாதாடுதல் மற்றும் பிரச்சாரம் செய்தல் ஆகியன குறிப்பாக மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான பிரதான உத்திகளாகும். கீழ்வரும் வளங்கள் மற்றும் பயிற்சி நெறிகளினூடாக இத்தகைய உத்திகளை பயன்படுத்துவது தொடர்பான வழிகாட்டலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

*இயங்கலை பயிற்சி நெறிகள்*

ஆதரித்து வாதாடுதலுக்கு அத்தியாவசியமானவைகள்
Tearfund. இனால் வழங்கப்படுகின்ற, கோரிக்கையின்பேரில் கிடைக்கக்கூடிய இயங்கலை பயிற்சி நெறி. கீழுள்ள இணைப்பினூடாக உங்களைப் பற்றிய விபரக் குறிப்பொன்றை (Profile) உருவாக்கி பின், பயிற்சி நெறிக்கான பட்டியல் குறிப்பேட்டில் 'Advocacy Essentials' இணை காணுங்கள்.

ACT Advocacy Academy, ACT வாதாடுதலுக்கான கூடம்
ACT Alliance இனால் வழங்கப்படுகின்ற கோரிக்கையின்பேரில் கிடைக்கக்கூடிய இயங்கலை பயிற்சி நெறி. பயிற்சி நெறியினை அணுகுவதற்கு Fobo.org இல் உங்களைப் பற்றிய விபரக் குறிப்பொன்றை உருவாக்குங்கள்.

வன்முறையற்ற செயல் மற்றும் குடியியல் எதிர்ப்பு
ஐக்கிய அமெரிக்காவின் சமாதானத்திற்கான நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற இயங்கலை பயிற்சி நெறிகள்.

*வளங்கள்*

ஆதரித்து வாதாடுதலுக்கான ஆவணத்தொகுதிகள்- நீங்கள் காண விரும்பும் மாற்றமாக நீங்களே மாறுங்கள்
சமூக பாதுகாப்பு மற்றும் பொதுநலவாய ஸ்தாபகத்திற்கான ஆபிரிக்க தளத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆதரித்து வாதாடுதலுக்கான ஆவணத்தொகுதிகள் – A Roots Guide மூலங்களுக்கான வழிகாட்டி
Tearfund இனால் தயாரிக்கப்பட்டது.

ஆதரித்து வாதாடுதல்: சிறிய மற்றும் புலம்பெயர் அமைப்புக்களுக்கான வழிகாட்டி
INTRAC இனால் தயாரிக்கப்பட்டது.

**Game on –** பிரச்சாரத்திற்கான ஒரு நடைமுறை
Wigwam and finep இனால் தயாரிக்கப்பட்டது.

***கட்டியெழுப்புகின்ற உத்திகள்: விழிப்புணர்வு, ஈடுபாடு, திறன்கள் மற்றும் வலையமைப்புக்கள்***

கட்டியெழுப்புகின்ற உத்திகள் மாற்றத்திற்கான நீண்டகால அடித்தளமொன்றினை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இது பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் அனைத்து வகையான உத்திகளையும் பணயன்படுத்துவதற்கு தேவையான திறன்களினால் வலுவூட்டப்பட்டுள்ள, ஈடுபாடுள்ள நபர்களின் வலையமைப்பினால் முன்னெடுக்கப்படும்.

***இயங்கலை பயிற்சி நெறிகள்***

வலையொலிகள (PODCASTS), காணொளிகளைப் பயன்படுத்தல் மற்றும் இயங்கலையில் பாதுகாப்பாக இருத்தல்

Advocacy Assembly இன் வலைத்தளத்திற்கு செல்வதனூடாக நீங்கள் கீழ்வரும் திறன்கள் உள்ளிட்ட திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு உதவும் பல்வேறுபட்ட இலவசமான சிறிய இயங்கலை பயிற்சி நெறிகளைக் காண முடியும்.

மத நல்லிணக்கக் கலந்துரையாடல்

மத நல்லிணக்கக் கலந்துரையாடலுக்கான முறைமைகளைக் கூறுகின்ற பல இயங்கலை பயிற்சி நெறிகளை KAIICID வழங்குகின்றது.

சமாதானத்தைக் கட்டியெழுப்புதலும் அதற்கு அப்பாலும்

ஐக்கிய அமெரிக்காவின் சமாதானத்திற்கான நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற பல்வேறுபட்ட இயங்கலை பயிற்சி நெறிகள்.

https://www.usip.org/academy/catalog/religious-engagement-peacebuilding-common-ground-approach

https://www.usip.org/academy/catalog/introduction-religion-and-peacebuilding

நீங்கள் நம்புவதை விரும்புங்கள்

தங்கள் பணியிடங்கள் மற்றும் சமூகங்களில் உள்வாங்குதல், பன்முகத்தன்மை மற்றும் நம்பிக்கையின் சுதந்திரத்தை எவ்வாறு மேம்படுத்துவது என்பதை அறிய விரும்பும் தலைவர்கள் மற்றும் செல்வாக்கு செலுத்துபவர்களுக்கான ஒரு பயிற்சிப் பட்டறை.

***வளங்கள்***

மத நல்லிணக்க வாரத்திற்கான ஆவணத்தொகுதி

ஐக்கிய இராச்சியத்திற்கான மத நல்லிணக்க வலையமைப்பினால் வெளியிடப்பட்ட, சமுதாயம்சார்ந்த மத நல்லிணக்க செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான ஒரு நடைமுறை வழிகாட்டி.

உரிமைகளுக்கான பற்றுறுதி தொடர்பான ஆவணத்தொகுதி

மதங்கள், நம்பிக்கைகள் மற்றும் உரிமைகளுக்கான பற்றுறுதிக் கட்டமைப்பின் 18 உடன்பாடுகளுடன் தொடர்புறுகின்ற மனித உரிமைகள் மற்றும் மதங்கள், நம்பிக்கைகள் என்பவற்றுக்கிடையிலான உறவுநிலையினை ஆராய்கின்ற மனித உரிமை கல்விக்கான கையேடுகளின் தொகுதியொன்று.

ஆசிரியர்கள் மற்றும் இளம் பணியாளர்களுக்கான இயங்கலை வெறுப்புப் பேச்சு தொடர்பான ஆவணத்தொகுதி

Selma இயங்கலை ஆவணத்தொகுதியானது இயங்கலை வெறுப்புப் பேச்சு என்ற விடயம் தொடர்பான, தனிநபர் தேவைக்கேற்ப மாற்றியமைத்து பயன்படுத்தப்படக்கூடிய துணை வளங்களை ஆசிரியர்கள் மற்றும் சிறுவர்களுடன் பணிபுரிகின்ற ஏனையோர் மற்றும் இளைஞர்களுக்காக வழங்குகின்றது.

பன்மைத்துவத்தை மேம்படுத்துவதற்கான இணையவழி ஆசிரியர் பயிற்சி வகுப்பு

வகுப்பறை அமைப்பில் பன்மைத்துவம் மற்றும் உள்ளடக்கிய சமூகங்களை ஊக்குவிக்கதக்க ஒரு கலப்பு கற்றல் பாடநெறி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கிறது. இது Hardwired Global மூலம் ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளில் வழங்கப்படுகிறது.

Email: info@hardwiredglobal.org

இறையியல் வளங்கள்

குடியுரிமைக்கான யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம் மதங்களின் ஒத்துழைப்பு சிந்தனை, மனசாட்சி, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் மற்றும் ஊறுபடத்தக்க சமுதாயங்களின் பாதுகாப்பு.

***தேற்றுகின்ற உத்திகள்: ஆவணப்படுத்தல், நினைவு கூர்தல், நீதி மற்றும் நகஷ்ட ஈட்டினை நாடுதல், பொருள்சார் மற்றும் உளவியல் ஆதரவினை வழங்குதல்***

தேற்றுகின்ற உத்திகள் மீறல்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மற்றும் சமுதாயங்கள் என்பனவற்றைப் பராமரிக்கவும் அவர்கள் நீதியை நாடவும் பயன்படுத்தப்படுகின்றன.

***இயங்கலை பயிற்சி நெறிகள்***

மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தல்

உங்களுடைய ஆவணப்படுத்தல் திறன்களை விருத்தி செய்துக் கொள்ள உதவக்கூடிய பல்வகைப்பட்ட இலவசமான சிறிய பயிற்சி நெறிகளை அறிந்து கொள்ளும் பொருட்டு Advocacy Assembly இன் வலைத்தளத்திற்குள் நுழைதல:

- அளிக்கப்பட்டுள்ள சான்றளிப்புக்களை பயன்படுத்தி மனித உரிமை துஷ்பிரயோகங்களை ஆவணப்படுத்தல் மற்றும் அறிக்கையிடல்.
- காணொளி ஆதாரங்களை பதிவு செய்தல், சேகரித்து வைத்தல் மற்றும் பகிர்தல்.

சமுதாயம் சார்ந்த உளவியல் ஆதரவு (Community Based Psychosocial Support) (CBPS)

CBPS இல் கோரிக்கையின்பேரில் கிடைக்கக்கூடியதாக உள்ள மூன்று கையேடுகளைக் கொண்டுள்ள பயிற்சி நெறியானது நீங்கள் அடிப்படைகளைக் கற்றுக் கொள்வதற்கு உங்களுக்கு உதவி செய்யும். இது Church of Sweden (for Act Alliance) மற்றும் Fabo இனால் தயாரிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிகளின் அட்டவணை

***பொது பயிற்சிகள்***


| ***பயிற்சி*** | ***நோக்கம்*** | ***பக்கம்*** |
|---|---|---|
| வாக்கியத்தினை நிறைவு செய்க | பங்குபற்றுநர் அறிமுகங்கள் - பங்குபற்றுநர்களின் பங்குபற்றுவதற்கான உந்துதல்களை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது | 35 |
| உங்கள் சிந்தனைகளுக்கு ஒரு நாணயம் | பங்குபற்றுநர் அறிமுகங்கள் – பங்குபற்றுநர்களிடம் பொதுவாக உள்ளவற்றை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது | 36 |
| கூடையினை கைமாற்றுவோம் | கள விதிகளுக்கான பயிற்சி | 36 |
| என்னை பாராட்டுங்கள் | பங்குபற்றுநர்கள் குழுவிற்கு ஆற்றியுள்ள பாராட்டுதற்குறிய பங்களிப்புக்களை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது | 135 |
| அனைவரும் சொல்லுங்கள் | முன்னைய அமர்வுகளில் கற்றவற்றை பங்குபற்றுநர்களுக்கு நினைவூட்டுவதற்கான ஆரம்பப் பயிற்சி | 49 |
| நல்லனவற்றின் பின்னல் | எமது சமுதாயங்கள் பற்றிய நல்ல விடயங்களை அடிக்கோடிட்டுக்காட்டுங்கள் | 99 |
| அனைவரும் கதிரைகளை இடம் மாற்றிக் கொள்ளுங்கள் | பொதுத்தன்மைகளை அடிக்கோடிட்டுக் காட்டுகின்ற உற்சாகப்படுத்துகின்ற செயற்பாடு | 71 |
| நடக்கவும் மற்றும் நிற்கவும் | உற்சாகப்படுத்துவதற்கான செயற்பாடு | 103 |
| தலை முதல் கால்விரல் வரை | உற்சாகப்படுத்துவதற்கான செயற்பாடு | 130 |
| மாற்றமொன்றினை ஏற்படுத்துங்கள் | உற்சாகப்படுத்துவதற்கான செயற்பாடு | 137 |
| மாற்றமுண்டாக்குனர்களின் சிற்பங்கள் | உற்சாகப்படுத்துவதற்கான செயற்பாடு | 147 |
| உணர்ச்சிக் குறியீடுகள் | பங்குபற்றுநர்கள் என்ன கற்றுள்ளனர் என்பது பற்றிய அவர்களுடைய உணர்வுகளை மையப்படுத்துகின்ற நிறைவு செய்யும் பயிற்சி | 131 |
| தலை, இதயம், கைகள் | மதிப்பீட்டுப் பயிற்சி | 148 |


***மனித உரிமைகள், பாரபட்சம் மற்றும் சமூக அடையாளங்களை பரந்தளவில் ஆராய்கின்ற பயிற்சிகள்***


| ***பயிற்சி*** | ***நோக்கம்*** | ***பக்கம்*** |
|---|---|---|
| வாழ்க்கை எனும் இரசம் மற்றும் மனித உரிமைகள் காட்சியகம் | பங்குபற்றுநர்கள் தாங்கள் எதிர்கொண்டிருக்கின்றத் தேவைகளை அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்துடன் தொடர்புபடுத்துவதற்கு உதவக்கூடிய ஒரு சோடி பயிற்சிகள் | 37, 38 |
| பானைக்கான அதிஷ்டம் | சிறப்புரிமைகள் மற்றும் பாதக நிலைகள், மற்றும் ஒருமைப்பாட்டின் பயன்கள் என்பவற்றை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது | 68 |
| முன்னோக்கி ஒரு அடி | தங்களுடைய சூழமைவுகளிலுள்ள சமூக-பொருளாதார பாதகங்கள் மற்றும் பிரிவுகளுக்கிடையிலான பாரபட்சங்கள் என்பவற்றை அடையாளங் காண்பதற்கு பங்குபற்றுநர்களுக்கு உதவுகின்றது | 69 |
| எமது சமூக அடையாளங்கள் | ஏனைய மதங்கள்/நம்பிக்கை அடையாளங்களைக் கொண்டுள்ள மக்களிடம் பொதுத் தன்மைகளைக் காண்பதற்கு பங்குபற்றுநர்களுக்கு உதவுகின்றது | 72 |

*ம.அ.ந.சு இனை குறிப்பாக ஆராய்கின்ற பயிற்சிகள்*

| *பயிற்சி* | *நோக்கம்* | *பக்கம்* |
|---|---|---|
| முன்னொரு காலத்தில் | ம.அ.ந.சு. இனை பாதுகாக்கின்ற விடயங்களை பங்குபற்றுநர்கள் பெறுமதி மிக்கனவாக எண்ணுகின்றார்களா என சிந்திப்பதற்கு உதவுகின்றது | 50 |
| எனது நாளில் ம.அ.ந.சு | பங்குபற்றுநர்கள் தங்களது நாளாந்த வாழ்வில் ம.அ.ந.சு இற்கான உரிமையினை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பது தொடர்பாக சிந்திப்பதற்கு உதவுகின்றது | 52 |
| ம.அ.ந.சு தொடர்பான இரண்டு நிமிட குறு நாடகங்கள் | ம.அ.ந.சு இற்கான மீறல்களை அடையாளம் காண்பதற்கான திறன்களை விருத்தி செய்கின்றது | 82 |
| எமது நகரத்தின் ம.அ.ந.சு இற்கான வரைபடம் | பங்குபற்றுநர்கள் ம.அ.ந.சு இன் சூழமைவு பகுப்பாய்வு ஒன்றை உருவாக்க உதவும் இரு பகுதி கொண்ட ஒரு பயிற்சி | 101, 104 |

*மனித உரிமைகள் மற்றும் செயற்திட்டமிடலை ஊக்குவிப்பதற்கான முறைகளை மையப்படுத்திய பயிற்சிகள்*

| *பயிற்சி* | *நோக்கம்* | *பக்கம்* |
|---|---|---|
| மாற்றமுண்டாக்குநர் கதைகளுக்கான சிறிய குழுக்கள் | செயற்படுதல் குறித்த கலந்துரையாடல்களுக்கு உத்வேகமளித்து அதற்கான களத்தினை அமைக்கின்றது | 114 |
| பார்வையாளர்கள் மற்றும் தேற்றுநர்கள் | செயற்படாதிருக்கின்ற பார்வையாளர்களாக இருப்பதற்கு பதிலாக தம்மை செயற்பட வைத்த காரணிகளை அடையாளம் காண்பதற்கு பங்குபற்றுநர்களுக்கு உதவுகின்றது | 114 |
| நான் யார்? | பங்குபற்றுநர்கள் தாம் நடவடிக்கை எடுக்கக்கூடிய பகுதிகளை அடையாளம் காண்பதற்கு அவர்களுக்கு உதவுகின்றது | 116 |
| அவசரகால உத்திகள் பற்றிப் பேசுதல் | உத்திகள் பற்றிய அமர்வு 6 இன் முன்வைப்புடன் தொடர்புறுகின்ற குழுக் கலந்துரையாடல் பயிற்சி | 118 |
| உத்திகள் பற்றிப் பேசுதல் | மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான உத்திகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பாட்டிற்கான யோசனைகள் தொடர்பில் சிந்தித்தல் | 129 |
| பிரச்சினை என்ன? | எந்தப் பிரச்சினைகள் தொடர்பில் செயற்திட்டங்களைத் தயாரிக்க வேண்டுமென பங்குபற்றுநர்கள் தெரிவு செய்வதற்கு உதவுகின்றது | 135 |
| மாற்றத்திற்கான எமது பயணம் | கட்புலனாகின்ற செயற்திட்டமிடல் பயிற்சி | 138, 146 |
| இங்கிருந்து நாம் எங்கு செல்கிறோம்? | அடுத்த படிமுறைகளை அடையாளம் காண்பதற்கு பங்குபற்றுநர்களுக்கு உதவுகின்றது | 147 |

உலகெங்கிலும், அனைத்து மதங்கள் மற்றும் நம்பிக்கைகளை சேர்ந்த மக்களும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய உரிமை மீறப்படுகின்றமையினாலும் சமுதாய மட்டத்தில் மதங்களுக்கிடையேயான பதட்ட நிலமை என்பனவற்றாலும் கவலையடைந்துள்ளனர். இருப்பினும் எவ்வாறு மாற்றத்தினை உருவாக்குது என்று அறியாதுள்ளனர்.

உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர்களுக்கான பயிற்சி நெறியானது,அடிமட்ட நிலையிலுள்ள வயது வந்தவர்களின் குழுக்கள் மற்றும் இளைஞர்கள் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் பற்றி கற்று அதனை தங்களுடைய சமுதாயங்களில் உள்ள அனைவருக்குமாக மேம்படுத்தும் பொருட்டு, வினைத்திறனாக செயற்படுவதற்கு அவர்களை வலுவூட்டுகிற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இரண்டு மணித்தியாலங்களிலாலான ஒன்பது பயிலமர்வுகளின் தொகுதியொன்றாகும்.

இச் நெறியாளருக்கான வழிகாட்டி மற்றும் அதனோடிணைந்துள்ள துணை வளங்களில், நீங்கள் அமர்வுத் திட்டங்கள், எழுத்துப்பிரதிகள் மற்றும் முன்வைப்புக்களுக்கான பவர்பொயின்ட்கள், சுவரொட்டிகள் மற்றும் விளையாட்டு அட்டைகள் - மற்றும் நீங்கள் பயிற்சி நெறியினை நடத்துவதற்கு தேவையான அனைத்தையும் காணலாம். நீங்கள் இருக்குமிடத்திலிருந்து மாற்றமுண்டாக்குகின்ற செயன்முறையினை ஆரம்பிப்பதற்கு இவ் வளங்கள் உதவுமென நாம் நம்புகின்றோம்.

forb-learning.org

THE LOCAL
CHANGEMAKERS
COURSE

Nordic Ecumenical Network on Freedom of Religion or Belief
NORFORB

FORB Learning Platform

NORFORB செயற்திட்டத்தினால், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தினைக் (FORB) கற்றுக்கொள்வதற்கான தளத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.
© SMC Faith in Development 2022, NORFORB வலையமைப்பு www.smc.global
ஆசிரியர: Katherine Cash | வரைபட வடிவமைப்பு மற்றும் சின்னங்கள்: KSB Design/Kristina Schollin-Borg & Eva-Marie Wadman
விளக்கப்படங்கள்: Toby Newsome | பவர்பொயின்ற் விளக்கப்படங்கள: Gry Zierau
தமிழ் மொழிபெயர்ப்பு: Krijah Sivakumar | தமிழ் சரிபார்ப்பு: Priscilla Balachandran
ISBN: 978-91-519-6194-1 | தொடர்பு கொள்ள: info@forb-learning.org | வலைத்தளம: www.forb-learning.org